கி.பி. 988...

சோழப் பெருவேந்தராக முதலாம் இராஜராஜ சோழர் முடிசூடி மூன்றாண்டுகளே முடிவடைந்துள்ள நிலை. அதற்குள் சில அரசியல் சக்திகள் அணிதிரண்டு அவரை எதிர்க்க ஆயத்தமாகி வருகின்றன.

அந்தச் சக்திகளின் ஆணிவேர்.. காந்தளூர்ச்சாலை எனும் கல்வி நிறுவனம். சாத்திரங்கள் நுண்கலைகள் தவிரத் தற்காப்புப் பயிற்சி முறைகளையும் பயிற்றுவித்த பண்டைய பல்கலைக்கழகம்.

சோழநாட்டு வேந்தருக்கும் சேரநாட்டில் எங்கோ ஒரு மூலையில் அமைந்துள்ள காந்தளூருக்கும் என்ன தொடர்பு? சாலையின் ஆச்சாரியாருக்கு இராஜராஜர் மேல் அப்படியென்ன பகை? இந்த இருவரின் விரோதத்தையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் அரசியல் சக்திகள் யார் யார்?

எண்ணற்ற கேள்விகளை எழுப்பும் சரித்திரக் களத்தின் வழி நம்மைக் கைப்பிடித்து ஒரு வசீகர உலகிற்குள் அழைத்துச் செல்கிறார் கதாசிரியர். சோழர்கள், பாண்டியர்கள், வேளிர், சேரமான்கள், கோளத்து நாடுவாழிகள் என்று அந்நாளைய அரசியல் சக்திகள் அனைவரும் முட்டி மோதும் இந்த விறுவிறுப்பான புதினத்தில் இதுவரை கண்டிராத வகையில் சேரதேசத்தின் பண்டைய களரிக் கலையும் பண்பாட்டுக் கூறுகளும் பாங்குற வெளிப்படுகின்றன.

பல்வேறு சரித்திரக் குறிப்புகள், கல்வெட்டுச் சான்றுகள், விளக்கப் படங்கள் மற்றும் வரைபடங்கள் இப்படைப்பை வேறொரு தளத்தில் நிறுத்துகின்றன. இளமை துள்ளும் நடையில் கற்பனைச் செறிவுடன் படைக்கப்பட்டுள்ள இப்புதினம் தமிழுலகம் தவறவிடக் கூடாத [illegible] தரமான ஆக்கம்.



கோகுல் சேஷாத்ரி [http://www.gokulseshadri.in]

பொறியியல் மற்றும் மேலாண்மையில் பட்டம் பெற்று [illegible] துறையில் பணியாற்றி வரும் இந்த இளைஞர், [illegible] முதுகலை மற்றும் முதுமுனைவர் பட்டப் படிப்பை [illegible] வரலாற்றுப் புதினங்கள் (இராஜகேசரி, பைராகம்), ஒரு [illegible] தொகுப்பு (மதுரகவி), எண்ணற்ற கட்டுரைகள் என்று [illegible] படைப்புலகம் பரவலானதோர் வாசிப்புத் தளத்தை உருவாக்கித் தந்துள்ளது.

சேரர் கோட்டை ❖ பாகம்-1 ❖ கோகுல் சேஷாத்ரி ❖ பழனியப்பா



சேரர் கோட்டை

பாகம்-1

கோகுல் சேஷாத்ரி

சேரர் கோட்டை


பாகம்-1

கோகுல் சேஷாத்ரி

சேரர் கோட்டை

முதல் பாகம்

கோகுல் சேஷாத்ரி



கமலம் புக்ஸ்
2108–3, ஆற்றங்கரைச் சாலை, கோடையன் தோட்டம்
உள்ளூர், கும்பகோணம், தமிழ்நாடு – 612 001. இந்தியா.
Phone: 9443324665 / Email : kamalambooks@yahoo.com

Title	:	Serar Kottai (Volume-1)
Subject	:	Historic Fiction
Author	:	Gokul Seshadri
Publisher	:	Kamalam Books 2108-3, Atrangarai Salai Kodayan Thottam, Ullur, Kumbakonam, TamilNadu – 612001. India.
First Edition	:	June 2012
Copyright	:	Gokul Seshadri
Language	:	Tamil
Size of the book	:	Demmy
Paper	:	18.6Kg Natural Shade Paper
Font size	:	11 Pt.
No of Pages	:	555 (Excluding Cover)
Price	:	Rs. 375/=
Printers	:	Udayam Offset Printers, Sivakasi.

Correspondence : kamalambooks@yahoo.com

காணிக்கை

அன்புக்குரிய பாட்டனார்– பாட்டியார்

திரு. பி.கே. ரெங்கய்யங்கார்

திருமதி. கமலம்மாள் ரெங்கய்யங்கார்

இருவரின் நினைவாக.

கதாசிரியரின் படைப்புலகம்

வரலாற்றுப் புதினங்கள்

- இராஜகேசரி *(பழனியப்பா பிரதர்ஸ், சென்னை)* [2008]
- பைசாசம் *(பழனியப்பா பிரதர்ஸ், சென்னை)* [2009]
- சேரர் கோட்டை *(கமலம் புக்ஸ், கும்பகோணம்)* [2012]

சிறுகதைத் தொகுதிகள்

- மதுரகவி *(பழனியப்பா பிரதர்ஸ், சென்னை)* [2010]

ஆய்வுக் கட்டுரைகள் – பொழிவுகள்

- தொல்லோவியங்கள் மீட்டுருவாக்கம் சிக்கல்களும் தீர்வுகளும் *(முனைவர் மா. இராசமாணிக்கனார் வரலாற்று மையப் பொழிவு, தஞ்சை)* [2005]
- New Perspectives on Nagappattinam [Nagappattinam to Suvarnadwipa: Reflections on Chola Navel Expetitioins to Southeast Asia, Institute of Southeast Asian Studies, Singapore] [2007]
- முதலாம் பராந்தகர் காலம் காட்டும் சோழர் சிற்பக்கலைக் கூறுகள் *(செம்மொழி மாநாடு, கோவை)* [2010]
- Narrative Ramayana Panels from Early Chola Temples : A Comparitive Study (under publication)
- Narrative Ramayana Panels at Tirumangalam Samavediswara Temple: A Study (Arpitam: Recent Studies in South Asian Archaeology, British Archaeological Review) [2012]

தொழில்நுட்ப நூல்கள்

- Multimedia Magic [BPB Publications, New Delhi] [2003]

விருதுகள்

- *திருப்பூர் தமிழ்ச்சங்க இலக்கிய விருது-2010* [2012]

தொடர்புக்கு

Website: http://www.gokulseshadri.in
Email: gokul.seshadri@yahoo.com

என்னுரை

வாசகர்களுக்கு வணக்கம். மீண்டும் ஒரு வரலாற்றுப் புதினத்தின் வழி உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

தமிழக வரலாற்றை, குறிப்பாகச் சோழர் வரலாற்றைப் படிப்பவர்கள் முதலாம் இராஜராஜ சோழரின் (கி.பி. 985-1012) மெய்க்கீர்த்தியில்[1] இடம்பெறும் காந்தளூர்ச் சாலை எனும் முக்கியமான இடத்தை மறக்கவே மாட்டார்கள்.

> திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
> தனக்கேயுரிமை பூண்டமை மனங்கொளக் கருதிக்
> காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி...

என்று துவங்கும் அந்த மெய்க்கீர்த்தியில் இடம் பெற்றுள்ள காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி எனும் இரண்டு சொற்களே இந்த வரலாற்றுப் புதினமாக வடிவம் பெற்றுள்ளன.

காந்தளூரையும் அதில் அமைந்துள்ள சாலையையும் தனது மெய்க்கீர்த்தியில் குறிப்பிட்டு அதனை மிகவும் பிரபலப்படுத்தியவர் முதலாம் இராஜராஜரே. அவருக்குப் பின்வந்த பல மன்னர்களும் தத்தம் மெய்க்கீர்த்திகளில் காந்தளூரை இடம்பெறச் செய்துள்ளனர். இவ்வாறு ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளுக்கு வரலாற்று வெளிச்சத்தை வாங்கி நிற்கும் இவ்விடம் காலப்போக்கில் கண்களிலிருந்து மாயமாய் மறைந்து விடுகிறது!

இராஜராஜரின் மெய்க்கீர்த்தி கண்டறியப்பட்ட நாளிலிருந்து இந்நாள் வரை இந்த இரு சொற்களைப் பற்றியும் கருத்துரைக்காத தமிழக வரலாற்று அறிஞர்களே பெரும்பாலும் கிடையாது என்று சொல்லும்படி ஏராளமானோரின் கவனத்தைக் காந்தளூர்ச் சாலையும் கலமறுத்த சம்பவமும் பெற்றுள்ளன. குறிப்பாகக் கலமறுத்தல் என்றால் என்ன, அது எதனைக் குறிக்கிறது என்பதை ஆராய முயலும் கட்டுரைகள் மட்டும் பல உண்டு.

---

[1] குறிப்பிட்ட அரசரின் போர் வெற்றிகளை அகவற்பா வடிவில் வரிசைப் படுத்தி எழுதும் முறை. இதனை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் முதலாம் இராஜராஜரே.

இவற்றுள் குறிப்பிடத்தக்கவை சில.

- கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் காந்தளூர் பற்றிய கட்டுரை. மிக நேர்த்தியான முதல் முயற்சி.
- அறிஞர் டி.ஏ. கோபிநாதராவ் அவர்கள் பதிப்பித்த திருவிதாங்கூர் சமஸ்தானக் கல்வெட்டுக்கள் எனும் கல்வெட்டுத் தொகுப்பின் இரண்டாம் பாகத்திற்கான முன்னுரையில் காந்தளூரைப் பற்றியும் சாலை பற்றியும் ஆழமாக விவாதித்திருக்கிறார் திரு. இராவ்.
- அறிஞர் டி.என். சுப்பிரமணியம் அவர்கள் பதிப்பித்த தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் எனும் கல்வெட்டுத் தொகுப்பின் மூன்றாம் பாகத்தில் காந்தளூரைப் பற்றிய விவாதங்கள் விரிவாகக் காணக் கிடைக்கின்றன.
- கேரள வரலாற்றறிஞர் எம்.ஜி.எஸ்.நாராயணன் அவர்கள் எழுதியுள்ள **Bachelors of science** எனும் கட்டுரையில் கேரளத்தின் சாலை நிறுவனங்கள் பற்றியும் காந்தளூரில் அமைந்திருந்த சாலை பற்றியும் பல முக்கியமான தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தால் பதிப்பிக்கப் பட்டுள்ள பாண்டியச் செப்பேடுகள் பத்து எனும் நூலில் பார்த்திவசேகரபுரச் செப்பேடுகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இது காந்தளூரையொத்த செயல்பாடுகளைக் கொண்டிருந்த வேறொரு சாலை பற்றி விவரிக்கும் மிக முக்கிய ஆவணமாகும்.
- அருள்மொழி எனும் தொகுப்பில் திரு. நடன காசிநாதன் அவர்கள் எழுதிய கலமறுத்தல் பற்றிய கட்டுரை. இதில் கலமறுத்தல் பற்றிய ஏனைய அறிஞர்கள் அனைவரின் கருத்தையும் தமது கருத்தையும் ஒருங்கே தொகுத்தளித்திருக்கறார் திரு. காசிநாதன்.
- சோழர்காலச் சமயம் என்கிற தமது நூலில் முனைவர் ஆ. பத்மாவதி அவர்கள் காந்தளூர் பற்றிக் கூறியுள்ள சில கருத்துக்கள் மிகவும் சிந்திக்கத் தக்கவை.
- புதிய பனுவல் ஆய்விதழில் செங்கம் ஏரிக்கரையில் தம்மால் கண்டுபிடிக்கப்பட்ட நடுகல் கல்வெட்டின்

பின்னணியில் காந்தளூர் வெற்றியை ஆராயும் முனைவர் சி. இளங்கோ அவர்களின் கட்டுரை.

உரிய தரவுகள் அதிகம் இல்லாததால் இராஜராஜர் முதன் முதலில் ஏன் காந்தளூருக்குப் படையெடுத்துச் சென்றார்? அதற்கான அவசியம் என்ன? அங்கு அவரை எதிர்த்தவர்கள் யார் யார்? இந்தப் போர் எந்த வருடத்தில் நடந்தது? எப்போது முடிந்தது? என்பன போன்ற அடிப் படைக் கேள்விகளுக்குக் கூட ஆய்வாளர்களால் உறுதியான விடைகளை அளிக்க முடியவில்லை. கலமறுத்தல் என்பது உண்மையில் என்ன? அது ஒரு போர் வெற்றிதானா? அல்லது வேறு ஏதாவது ஒன்றா? என்பதிலும் கருத்தொற்றுமையில்லை.

ஆக, இவ்வாசகங்களின் பொருளை அறிய முற்படும் ஒருவர் முதலில் காந்தளூர் என்றழைக்கப்படும் ஊர் எங்கிருக்கிறது? அதில் சாலை என்பது எம்மாதிரியான இடம்? அதில் யார் யார் இருந்தார்கள்? அங்கு என்ன விதமாக செயல்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன? என்பன போன்ற அடிப்படைக் கேள்விகளுடன்தான் தமது பயணத்தைத் துவக்கியாக வேண்டும். காந்தளூரைப் பற்றிய அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் இது வரை பதிவாகியுள்ள கல்வெட்டுக்களிலிருந்தே நமது தேடலைத் துவக்க வேண்டியிருக்கிறது.

தமிழகக் கல்வெட்டுக்களில் காந்தளூர் எனும் ஊர்ப் பகுதி முதன் முதலில் முத்தரையர் கல்வெட்டொன்றில் இடம் பெறுகிறது. இதற்கடுத்ததாகத் திருவண்ணாமலை திருக்கோயிலில் காணப்படும் முதலாம் பராந்தகர் காலக் கல்வெட்டொன்று காந்தளூர் எனும் நாட்டுப் பகுதியைக் குறிப்பிடுகிறது. "ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கோப்பர கேசரி பன்மர்க்கு யாண்டு 15வது வாணகோப்பாடி பெண்ணை வடகரைக் காந்தளூர் நாட்டு விச்சூர்... ".

இவ்விரு கல்வெட்டுக்களிலும் இடம்பெறும் காந்தளூரும் இராஜராஜர் மெய்க்கீர்த்தியில் குறிப்பிடப்படும் காந்தளூரும் ஒன்றல்ல என்கிற முடிவுக்குப் பல காரணங்களால் வர நேர்கிறது.

இன்றைய மாநில வரைபடங்களில் காந்தளூரைத் தேடினால் என்ன என்று உட்கார்ந்தால் பலப்பல ஊர்கள் அதே பெயரில் வந்து நிற்கின்றன. செங்கல்பட்டிற்கு அருகில் ஒன்று, திருச்சிக்கு அருகில் ஒன்று, கேரளா இரிஞ்ஞாலக்

குடைக்கருகில் ஒன்று என்று ஏராளமான காந்தளூர்கள்! விழிஞத்திற்கருகிலும் காந்தளூர் என்றொரு சிற்றூர் அமைந்துள்ளது. இவற்றுள் இராஜராஜர் குறிப்பிடும் காந்தளூர் எது?

நாம் தேடும் காந்தளூரில் சாலை எனும் நிறுவனம் அமைந்திருப்பது முக்கியமாகின்றது. சாலைகள் சம்ஸ்க்ருதத்தில் சாலா என்றழைக்கப்பட்டன. இந்தியா வெங்கிலும் அக்காலத்தில் நிறுவப்பட்ட கடிகா அல்லது கடிகை எனும் நிறுவனங்களையொட்டியே இவற்றின் செயல்பாடுகள் அமைந்திருக்க வேண்டும் என்று யூகிக்கத் தோன்றுகிறது. இரண்டுமே அடிப்படையில் கல்வி நிறுவனங்கள். பல்லவர் காலத்துக் காஞ்சியில் பல கடிகைகள் செயல்பட்டதற்கு ஆதாரங்களுண்டு. சோழர் காலத்திலும் கடிகைகள் நாட்டின் பல இடங்களில் தொடர்ந்து இயங்கி வந்ததைக் கல்வெட்டுக்கள் கொண்டு தெளியலாம்.

கடிகைகளும் சாலைகளும் ஏதாவது ஒரு திருக்கோயிலோடு தம்மை இணைத்துக் கொள்கின்ற நிறுவனங்களாய்க் காட்சி அளிக்கின்றன[2]. இதற்கான மிக முக்கிய ஆதாரம் ஆய்வேள் மன்னர் கோக்கருந்தடக்கரின் செப்பேட்டில் காணப்படுகிறது. இதில் பார்த்திவசேகர புரத்து விஷ்ணு பட்டாரகர் திருக்கோயிலையொட்டித் தாம் அமைக்கப்போகும் சாலையைப் பற்றிய பல முக்கியத் தகவல்களை மன்னர் பகிர்ந்துகொள்கிறார். ஆகக் காந்தளூரில் அமைந்திருந்த சாலையும் ஏதோ ஒரு திருக்கோயிலுடன் சம்மந்தப்பட்டிருக்க வேண்டும். அந்தக் கோயில் இப்போது எங்கு சென்று விட்டது?

காந்தளூரோடும் அதன் சாலைப்பாரம்பரியத்தோடும் ஓரளவிற்குத் தொடர்புடைய ஒரே கோயிலாக நமக்குக் காணக் கிடைப்பது இன்றைய திருவனந்தபுரத்தின் நெரிசல் மிக்க வலியசாலை பகுதியில் அமைந்திருக்கும் ஜ்வாலா மகாதேவர் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலை காந்தளூருடன் நேரடியாகத் தொடர்புபடுத்தும் ஒரே

---

[2] சென்னைக்கு அருகில் நரசிம்மசுவாமி திருக்கோயில் அமைந்துள்ள கடிகாசலம் (சோளிங்கர்) மலையில் அக்காலத்தில் ஒரு கடிகை திருக் கோயிலையொட்டி அமைந்திருந்தது. அதனால் தான் அம்மலைக்கே கடிகாசலம் எனும் பெயர் வந்தது என்கிற கருத்து குறிப்பிடத்தக்கது.

ஆதாரம் திருவனந்தபுரம் அனந்தபத்மநாபஸ்வாமி ஆலயத்தில் பாதுகாக்கப்படும் மதிலகம் ஆவணங்களாகும். நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த ஆவணங்களில் இக்கோயில் 'காந்தளூர் மகாதேவர் கோயில்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டும் திரு. இராவ், இத்திருக்கோயிலுடன்தான் காந்தளூர்ச் சாலை சம்மந்தப்பட்டிருக்க வேண்டும் என்கிறார். மேலும் இக்கோயில் இறைவனின் பெயரான 'ஜ்வாலா மஹாதேவர்' என்பதும் 'சாலா மகாதேவர்' என்பதன் திரிபே. ஏனெனில் அறிஞர் நீலகண்ட சாஸ்திரியாரின் கூற்றுப்படி சாலா எனும் சொல் வடமொழியில் ஜ்வாலா என்று குறிப்பிடப்பட்டது.

இவையெல்லாவற்றையும் தவிர இத்திருக்கோயில் கருவறையின் மேற்குச்சுவரில் காணப்படும் முதலாம் இராஜேந்திரரின் சிதைந்த மெய்க்கீர்த்தி இக்கோயிலின் காலத்தைப் பதினொன்றாம் நூற்றாண்டிற்கு உறுதியாகக் கொண்டு செல்கிறது.

காந்தளூர் மகாதேவர் திருக்கோயில் இதுதான் என்று வைத்துக்கொண்டால் அதனையொட்டிக் காந்தளூர் எனும் ஊர்ப் பகுதி காணப்பட வேண்டுமே? கிடையாது. சொல்லப் போனால் ஆய்வேள் மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட காந்தளூர்ச் சாலை, அவர்களின் மிக முக்கியமான கோட்டையான விழிஞத்திற்கருகில் காந்தளூர் கிராமத்தில் தான் அமைந்திருக்க வேண்டும். அதனை விட்டுவிட்டுப் பல மைல்கள் தள்ளியிருக்கும் திருவனந்தபுரத்திற்கு இத்திருக் கோயில் மட்டும் இடம் பெயர்ந்திருப்பதை என்னவென்று சொல்வது?

இதனைத் தவிர பரதப்புழா நதி தீரத்தில் வேறொரு காந்தளூர் திருக்கோயிலையும் வில்லியம் லோகனின் மிகவும் புகழ்பெற்ற நூலான மலபார் மேனுவல் அறிமுகம் செய்கின்றது (தகவல் உதவி ஆய்வாளர் எஸ். இராமச்சந்திரன்). இக்காந்தளூர் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையில் அனந்தபுரத்துக் காந்தளூர் மகாதேவரை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை.

ஆகக் காந்தளூர் பற்றி மட்டும் இத்தனை குழப்பங்கள்.

அடுத்து சாலை. காந்தளூரில் அமைந்திருந்த சாலை பற்றி ஓரளவிற்கு விரிவாக விவாதிக்கும் ஒரே கட்டுரை நாராயணன் அவர்களின் கட்டுரைதான். இதில் சாலைப் பாரம்பரியம் பற்றியும் அங்கு கொடுக்கப்பட்ட பல்வேறு

விதமான பயிற்சிகள் பற்றியும் அலசுகிறார் அவர். 'சட்டர்கள்' என்றழைக்கப்பட்ட அந்நாளைய நம்புதிரி அந்தணர்களுக்கு வேதம், வேதாந்தம், வியாகர்ணம் (இலக்கணம்), அரசியல் மற்றும் போர்ப் பயிற்சி முறைகளைக் கற்றுத் தந்த இடம்தான் சாலை.

கேரளத்தில் காந்தளூரையும் சேர்த்து குறைந்தபட்சம் நான்கு சாலைகளாவது அமைந்திருந்தன. இவையனைத்துமே பன்னிரண்டு அல்லது பதிமூன்றாம் நூற்றாண்டில் மறைந்து விடுகின்றன. சாலை மறைந்த பிறகுதான் கேரளத்தில் களரி எனும் பாரம்பரியமே உருவாகத் தொடங்குகிறது. இன்றும் கூடப் பலப்பல களரியாசான்கள் தங்களின் ஆதி குருக்களாக நம்பூதிரி அந்தணர்களையே குறிப்பிடுகின்றனர். இந்தச் சட்டர்கள் பிற்காலத்தில் தங்களது சூழலிலிருந்து விலக்கப்பட்டவர்களாக அடையாளம் இழந்தவர்களாக அல்லுறுவதைப் பலப்பல இலக்கியச் சான்றுகளின் மூலம் நிறுவியுள்ளார் நாராயணன். இன்றும் சாலைப் பாரம் பரியத்தின் எச்சங்களாகச் சங்ககளி, பனயங்களி முதலான நடனங்களும் களரிப் பயிற்சிகளும் மிச்சமிருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஆகக் காந்தளூர்ச்சாலை என்பது அந்நாளைய கேரளத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய ஒரு கல்வி நிறுவனம். தற்போதைக்குக் கிடைக்கும் ஆதாரங்களைக் கொண்டு அதனை திருவனந்தபுரத்திற்கு அருகில்தான் அடையாளம் காண வேண்டியுள்ளது. அங்கு சட்டர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இனி இராஜராஜருக்கு வருவோம். அவருடைய வெற்றி களைப் பதிவு செய்யும் திருவாலங்காட்டுச் செப்பேடு அவர் மதுரையிலிருந்து தன்னுடைய திக்விஜயத்தைத் தொடங்கினார் என்றும் அமரபுஜங்கன் நெடுஞ்செழியனை வென்றார் என்றும் குறிப்பிடுகிறது. இந்த மதுரை வெற்றியையும் அமரபுஜங்கனையும் இராஜராஜர் ஏனோ தமது மெய்க்கீர்த்திகளில்[3] அவ்வளவாகக் குறிப்பிட்டுக்

[3] முதலாம் இராஜராஜர் மொத்தம் மூன்று வகையான மெய்க்கீர்த்திகளைக் கொண்டிருந்தார் என்பது கல்வெட்டுக்களின் மூலம் தெரிய வருகிறது. இதில் 'திருமகள் போல' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியே மிகப் பிரபலமானது. இது மதுரை வெற்றியைக் குறிப்பிடாமல் காந்தளூர்ச் சாலையை மட்டும் முன்னிலைப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

கொள்வதேயில்லை. பாண்டியரையே பொதுவாகச் "செழியரைத் தேசு கொள்" என்று கூறிச் சென்றுவிடுகிறார். ஆனால் காந்தளூர் அவருக்கு மிக முக்கியமானது. தமக்கென்று முறையான மெய்க்கீர்த்தி உருவாக்கப்படும் காலம் வரை அவர் தன்னைக் காந்தளூர்ச்சாலை கலமறுத் தருளிய கோ இராசகேசரி வர்மர் என்றுதான் குறிப்பிட்டுக் கொள்கிறார்.

அப்படியென்ன இராஜராஜருக்குக் காந்தளூர் மேல் பகை? அப்போது அங்கே யார் அவரை எதிர்த்தார்கள்? சாலையோ ஒரு கல்வி நிறுவனம். அதனை அவர் தாக்க வேண்டிய அவசிய மென்ன? அது என்ன விதமான தாக்குதல்? அது நிச்சயம் காந்தளூரை ஒட்டுமொத்தமாக அழித்தொழித்த தாக்குதல் அல்ல. ஏனெனில் அதற்குப் பிறகு மீண்டும் மீண்டும் பலப்பல மன்னர்கள் முனைந்து முனைந்து கலமறுக்கின்றனர். வேடிக்கை என்ன வென்றால் மூன்று கை மாசேனை எனும் சோழ சைனியம் கூடக் கலமறுத்ததாக ஒரு கல்வெட்டில் அறிவித்துக் கொள்கிறது என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கூறுகிறார்! அதே போல "வேலை அழித்ததும் சாலை கொண்டதும் தண்டு கொண்டு அல்லவோ?" என்கிற கலிங்கத்துப் பரணியின் கேள்வியிலும் அழித்தொழிப்பது என்பது வேறு சாலை கொள்வது வேறு என்கிற அர்த்தம் வருகிறதல்லவா? சாலை கொள்வதற்கும் சாலை கலமறுப்பதற்கும் என்ன தொடர்பு?

இத்தனை கேள்விகளை உள்ளடக்கிய விரிவான வரலாற்றுப் பின்புலம் வாய்ந்த காந்தளூர்ச் சாலை பற்றியும் அங்கு முதலாம் இராஜராஜர் நிகழ்த்திய கலமறுத்தல் பற்றியும் ஒரு புதினம் எழுத வேண்டுமென்கிற எண்ணம் நீண்ட காலமாகவே மனதில் இருந்து வந்தது. இராஜகேசரி வரலாற்றுப் புதினத்தை எழுதி முடித்தபின் அதனை ஒட்டிய தனிக்கதையாக இதனை எழுதலாம் எனும் எண்ணம் வலுப்பெற்றது. 'சேரர் கோட்டை' எனும் தலைப்பில் இப் புதினத்தை வரலாறு டாட் காம் திங்களிதழில் ஜூன் 2007 (இதழ் 35) முதல் தொடராக எழுத ஆரம்பித்தேன்.

நாவல் எழுதுவதற்காகத் தரவுகள் திரட்டத் துவங்கும் போது தான் காந்தளூர் பற்றியும் கலமறுத்தல் பற்றியும் முன் குறிப்பிட்ட அத்தனை குழப்பங்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. இக்கால கட்டத்தில் என்னை விரிவான விவாதத்திற்கு உட்படுத்திக் காந்தளூர் பற்றி ஆழமாகச்

சிந்திக்கச் செய்தவர் தென்னிந்திய சமூக வரலாற்றாய்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர் திரு. எஸ். இராமச் சந்திரன் ஆவார். மணிக்கணக்கில் சிறிதும் தொய்வுறாது அவர் நடத்திய விவாதம் என்னில் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. அவருடைய அரிய கண்ணோட்டங்களுக்கும் அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்த தோழி திருமதி. சீதாலஷ்மி அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

காந்தளூர் கேரளத்தில் அமைந்திருந்த இடமாகையால் காந்தளூர் பற்றிக் கேரளத்து வரலாற்றறிஞர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அறிவது முக்கியமானதாகத் தெரிந்தது. இதற்காகக் கல்வெட்டறிஞர் முனைவர் எஸ். இராஜவேலுவைத் தொடர்பு கொள்ள, அவர் அறிமுகப் படுத்திய ஆய்வாளர்தான் அருமை நண்பர் முனைவர் வீ. செல்வகுமார். தற்போது தஞ்சைத் தமிழ்ப் பல்கலையில் பணியாற்றும் இவர் அப்போது கேரளத்தில் பணியில் இருந்தார். திரு. செல்வகுமார் அனுப்பிவைத்த கேரள நம்பூதிரி அந்தணர்களைப் பற்றிய முதற் புத்தகம்தான் பல கதவுகளைத் திறந்து வைத்தது. அதன் வழிதான் எம்.ஜி.எஸ். நாராயணன் காந்தளூர் பற்றி ஒரு முக்கியமான கட்டுரை எழுதியிருப்பதை அறிந்தேன். அந்தக் காந்தளூர்க் கட்டுரையையும் அதனுடன் தொடர்புடைய வேறு சில வரலாற்று நூல்களையும் தேடிப்பிடிக்க இந்தியாவிலும் சிங்கப்பூரிலும் நியூயார்க்கிலுமாக நான் அலைந்த அலைச்சலை மட்டும் பிரத்யேக நாவலாகவே எழுதலாம். அத்தனை திருப்பங்கள்.

மேலும் இந்நாவல் வளர்ந்து வரும் காலத்தில் காந்தளூர் பற்றிய முக்கியத் தகவலுடன் முதலாம் இராஜராஜர் காலத்து நடுகல் கல்வெட்டு செங்கம் ஏரிக்கரையில் முனைவர் சி. இளங்கோ அவர்களால் கண்டறியப்பட்டது (பார்க்க நவம்பர் 27-2009 தேதியிட்ட இந்து நாளிதழ்). இக்கண்டுபிடிப்பின் காரணமாக நாவலின் இறுதியில் சிற்சில மாற்றங்களைச் செய்ய நேர்ந்தது.

புதினத்தில் முக்கிய இடம்பெறும் சோழர் துறைமுகப் பட்டினமான நாகப்பட்டினத்தைப் பற்றிய செய்திகள் சேகரிக்கப் போய் கடைசியில் அது ஒரு தனி ஆய்வாகவே வளர்ந்து விட்டது. அந்த ஆய்வின் ஒரு பகுதியாக இது நாள்வரை வெளிப்படாதிருந்த நாகை சூளாமணிபத்ம விஹாரையின் முழுத்தோற்றத்தையும் காட்டும் மிக அரிய

ஓவியத்தைக் கண்டுபிடிக்க நேர்ந்தது புத்த பிரானின் திருவருளே.

வரலாற்றியலில் அடியெடுத்து வைத்த நாள் முதல் இந்நாள் வரை உரியமுறையில் வழிகாட்டி நெறிப்படுத்தி வரும் முனைவர் இரா. கலைக்கோவன் மற்றும் மு. நளினி ஆகிய இருவருக்கும் இவ்விருவரின் வழிகாட்டலில் வளர்ந்துவரும் வரலாறு டாட் காம் குழுவினருக்கும் இத்தருணத்தில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான்கு வருடங்களுக்கும் மேலாகத் தொடர்ந்த சீரான உழைப்பின் பலனாக விளைந்த இப்புதினத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் உடன் நின்று தட்டிக்கொடுத்து உற்சாக மூட்டிய எண்ணற்ற வாசக வாசகியர்களின் அன்பிற்கு நன்றி கூறுவது கடினம். அவர்களின் அன்பும் அக்கறையுமே இப்படைப்பை முடிக்கும் வலிமையை எனக்களித்தன.

சோழர்கள் பற்றிய ஆய்வில் தனது வாழ்நாளின் பெரும் பகுதியைச் சந்தோஷமாகச் செலவிட்டுவரும் ஆய்வறிஞர் குடவாயில் பாலசுப்பிரமணியன் முதலாம் இராஜராஜரைப் பற்றிய பல அரிய தகவல்களை என்னுடன் பலமுறை பகிர்ந்து கொண்டுள்ளார். அவரளித்த தகவல்கள் அம் மாபெரும் ஆளுமையை புரிந்து கொள்ளவும் புதின உலகில் சித்தரிக்கவும் உதவியாக இருந்தன.

சென்னையின் கட்டுமானத் தொழில் நிபுணரும் பொன்னியின் செல்வன் யாஹூ வரலாற்றுக் குழுமத்தின் நடத்துனருமான அருமை நண்பர் திரு. சுந்தர் பரத்வாஜ் சோழர் அரசியல் பற்றியும் காந்தளூர் பற்றியும் என்னுடன் பலமுறை விவாதித்திருக்கிறார். அந்த உரையாடல்களின் தாக்கத்தை கதை நெடுகிலும் உணர்கிறேன்.

என் சக வரலாற்றாய்வு மாணவரும் கட்டுமானத்துறைத் தொழில்நிபுணருமான கும்பகோணம் திரு சுசீதாராமன் 'கொடுத்தும் கொள்ள வேண்டிய நட்பு' என்று வள்ளுவர் பெருமைப்படுத்தும் வகை நட்புக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்பவர். அவரும் நண்பர் திரு. கி. சாமிராஜ் அவர்களும் எடுத்த பெருமுயற்சியினாலேயே அளவில் பெரிய இப் புதினத்தின் பதிப்பு சாத்தியமானது.

காஞ்சிப் பல்கலையில் பணியாற்றும் தம்பி முனைவர் ஜி. சங்கரநாராயணன் என் மீது பேரன்பு கொண்டவர்.

அவரது சம்ஸ்கிருதப் புலமை இந்நாவலில் பெரியதொரு பங்காற்றியிருக்கிறது. அவருக்கும் இந்நாவலுக்காக நான் மேற்கொண்ட களப் பயணங்கள் பலவற்றிலும் துணைநின்ற வருவாய்த்துறை அலுவலர் திரு. பாலபத்மநாபனுக்கும் பிரத்யேக நன்றிகள் பல.

என் எழுத்துப் பணிகள் அனைத்திற்கும் துணை நின்று எப்போதும் உற்சாகப்படுத்தும் பெற்றோருக்கும் வரலாற்று நேயத்தை புரிந்துகொண்டு மதிக்கும் மனைவிக்கும் அன்றாடம் கதை கேட்டு என் கற்பனைகளை உயிர்ப்புடன் வைத்திருக்கும் செல்வனுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

முழங்கால் மடக்கி அர்த்தபத்மாசனத்தில் அமர்ந்து அரைக் கண் மூடி ஆழ்ந்த மோனத்தில் வீற்றிருந்தபடி உலகனைத்தையும் உணர்ந்து உய்விக்கும் பிள்ளையார்ப் பட்டிக் கற்பகத்தின் பொற்பதத்தைக் கைப்பிடிக்கிறேன்.

அதன் மென்மையான வலம்புரித் துதிக்கையின் அருகில் இப்படைப்பைக் காணிக்கையாய்ப் படைத்து வணங்கி நிற்கிறேன்.

அன்புடன்

கோகுல் சேஷாத்ரி.

மின்னஞ்சல்: gokul.seshadri@yahoo.com

பொருளடக்கம்


1. மணியிலங்கு நெடுமாட மதில் விழிஞம் 3
2. கோட்டையில் கூட்டம் 12
3. விபரீத விவாதங்கள் 20
4. பௌத்தப் பெருநகர் 30
5. ஆச்சாரியர் ஆலோசனை 40
6. கதைக்களம் ஒரு அறிமுகம் 51
7. நந்தவனத்தில் ஓர் ஆண்டி 71
8. மூன்று வரிகளும் முழுப்பொருளும் 80
9. போர்த் தளபதி 90
10. புத்தியினால் ஒரு யுக்தி 99
11. அக்கசாலைப் பெரும்பள்ளி 109
12. வீரத்தின் விளைநிலம் 119
13. பள்ளிப்படை சுந்தரபாண்டிய ஈச்சுரம் 126
14. நடக்காத காரியம்! 132
15. நானாதேசிகள் காவற்படை 140
16. வளங்கெழு தொண்டி 150
17. ஆபத்து! ஆபத்து! 156
18. பார்க்கவ க்ஷேத்திரம் 163
19. தாக்குதல் தொடருமா? 171
20. அன்பில் திருமாளிகை 177
21. திண்ணைப் பேச்சு 184

22. தேவநாக பண்டிதர் 192
23. பண்டிதர் வரலாறு 200
24. மதுர கீதம் 209
25. செண்டு வாயில் சித்திரக்கூடம் 217
26. தக்கோல வீரர் 227
27. ஐங்கரன் தகவல்கள் 234
28. உறங்காப் புளி 242
29. சங்கிராம விஹாரை 250
30. மோசம் போனோம்! 257
31. மாயை தெளிந்தது 263
32. இனி உங்கள் பணி 269
33. காந்தளூர்க் களரி 275
34. மரணப்படுக்கை 283
35. இதுதான் வாழ்க்கை! 292
36 வாளேந்திய வெள்ளாட்டி 296
37 விதியின் விளையாட்டு 304
38 மாளிகைப்புரத்து வீடு 309
39 ஆதித்தர் படுகொலை 316
40 [illegible] செய்தி முறைமை 324
41 [illegible] 331
42 [illegible] 338
43 [illegible] 345

44. தொடர்ந்தான் ஐங்கரன் 351
45. இரவில் இருவர் 359
46. கடற்கரைக் கோயில் 365
47. தேவி தரிசனம் 372
48. மருந்துவாழ் மலை 379
49. பொறுமைக்கும் எல்லையுண்டு 387
50. ஸ்ரீ வல்லபப் பெருஞ்சாலை 393
51. விதி வலிது 400
52. பூர்வானுபவப் படி 409
53. வலியசாலைக் குடும்பம் 415
54. பிரம்மாஸ்திரம் 421
55. பொழுது விடிந்தது 426
56. பேரங்காடியில் பைராகி 435
57 துறைமுக விஜயம் 444
58. சீனத்து ஆணவம் 450
59 குரு தாரை 458
60. உள்விழிப் பார்வை 466
61 மெய்ப்பயற்று 475
62 சுந்தரபாண்டியபுரம் 483
63 வழுதிகுல வாழ்த்து 493
64 கள்வன்! பிடியுங்கள் 503
65 [illegible] 511

66. கோட்டை வாயில் 518
67. மாராயர் குழப்பம் 527
படித்து விட்டீர்களா? 534

கதைக்களம்



காலக்களம்

கி.பி.		சோழ மனனாகள்	சேரமான் பெருமாள்	பாணடிய மனனாகள்
890				
		முதலாம் ஆதித்த சோழா	ஸதாணு இரவிப பெருமாள்	இரணடாம் வரகுண பாணடியா
900				இராஜசிமம பாணடியா
	◆ மதுரைப போா	முதலாம பராநதக சோழா		
910	◆ திருவலலம போா			
920			விஜய இராகவப பெருமாள	
930			கோதா இரவிவாமா	
940			இநது கோதவாமா	
950	◆ தககோலப போா	கணடராதிததா–அரிஞசய சோழா		சோழனை தலைகொணட வீரபாணடியா
960		இரணடாம பராநதகா (எ) சுநதரச சோழா		
970	◆ சேவூரப போா	மதுராநதக உததமச சோழா	மனுகுலாதிததா (எ) பாஸகர இரவிவாமன திருவடி	
980				
988	◆ காநதளூாச சாலை	அருளமொழி வாமா (எ) முதலாம இராஜராஜசோழா		அமரபுஜஙகன நெடுஞசெழிய பாணடியா
990				

1. மணியிலங்கு நெடுமாட மதில் விழிஞம்



அந்தக் கார்த்திகை மாதத்தின் கிருஷ்ண பட்சத்துத் திரையோதசியானது அஞ்ஞானமாகிய மௌன இருளில் ஆழ்ந்து கிடந்தது. இன்னும் இரண்டு நாட்களில் அமாவாசை என்பதாலோ என்னவோ நிலவு பெரிதும் தேய்ந்து போய் ஏதோ பெயருக்கு மேகக் கூட்டங்களிலிருந்து தலையைக் காண்பிப்பதும், அடுத்த கணம் கடல் நீரில் தெரிந்த தன்னுடைய இளைத்த பிம்பத்தைக் கண்டு தானே வெட்கி ஒளிவதுமாய் கண்ணாமூச்சியாட்டம் காட்டிக் கொண்டிருந்தது.

கடலின் மேற்பரப்பிலும் வழக்கமான பௌர்ணமி ஆரவாரங்களைக் காணோம். கரைக்கருகில் உருவாகியிருந்த இளம் அலைகள் மெல்ல மெல்ல எம்பி எழுந்து மடங்கிக் கொண்டிருக்க ஆழ்கடலில் உருவாகியிருந்த ஒரு சில கிழட்டு அலைகள் மட்டும் தட்டுத் தடுமாறிக் கரைசேர்ந்து கொண்டிருந்தன.

கடலும் கரையும் சந்திக்கும் இடத்தில் நூற்றுக் கணக்கான படகுகள் தென்பட்டன. அவற்றில் பல படகுத் துறையில் அமைந்திருந்த மரக்கால்களுடன் நீளமான கயிறுகளால் பிணைக்கப்பட்டிருந்தன. அடடா! அந்தப் படகுகளில்தான் எத்தனை வகை.. கட்டுமரப் படகுகள், கொதும்பு வள்ளம்[4] என்று மலைநாட்டு மொழியில் அழைக்கப்பட்ட அகழ்மரப் படகுகள், நீள்கட்டைப் படகுகள், நீண்ட சட்டங்களால் பிணைக்கப்பட்ட பிணைப் படகுகள்.. அவற்றுக்குக் குறுக்கே நீள அகலங்களில் செல்லும் தாம்புக் கயிறுகள்..

ஓ! இப்போது புரிகிறது. இவையெல்லாம் சற்று தூரத்தே கடலில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் பெரும் வணிகக்கலங்களிலிருந்து சரக்குகளை ஏற்றி இறக்கப் பயன்படும் சரக்குப் படகுகள் போலும்.

---

[4] இவ்வகைப் படகுகள் பெருத்த அடிமரங்களைக் குடைந்து செய்விக்கப் [illegible]

பல்வேறு தேசங்களிலிருந்து நெஞ்சு நிமிர்த்திக் கிளம்பி பாய்மரத்தை விரித்தபடி தைரியமாகக் கடலில் நூறு நூறு காதங்களைக் கடந்து வந்திருக்கும் அந்த மாபெரும் கலங்களை சற்று மரியாதையுடனே நோக்குகிறோம். சூழ்ந்திருக்கும் இருளில் அக்கலங்களை நம்மால் சரிவரப் பார்க்க முடியாதது நமது துரதிருஷ்டம்தான். என்றாலும் ஒரு சில கலங்களில் எரிந்து கொண்டிருந்த கலவிளக்குகளின் வெளிச்சத்திலிருந்து அவற்றின் பிரம்மாண்டத்தை ஓரளவிற்கு யூகிக்க முடிகிறது.

இயற்கையாகவே சந்திரப் பிறை போன்ற அமைப்பைப் பெற்றிருந்த அந்த அழகிய கடற்கரையில் அந்தப் பின்னிரவு நேரத்திலும் ஆட்களின் நடமாட்டம் கணிசமான அளவிற்கு இருந்தது. மணலில் ஆங்காங்கே வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த வணிகச்சாத்துச் சரக்குகளும்[5] அவற்றுக் கப்பால் அமைந்திருந்த சுங்கச் சாவடியும் கலங்கரை விளக்கமும் அந்தக் கடற்கரைப் பகுதி ஒரு துறைமுகப் பட்டினம்தான் என்பதைச் சந்தேகமற நமக்கு உணர்த்துகின்றன.

ஆழி முந்நீர் அகழ் ஆக
அகழ் வானத் தகடுறிஞ்சும்
பாழி நீள் மதில் பரந்தோங்கிப்
பகலவனும் அகல ஓடும்
அணியிலங்கையின் அரணிதாகிய
மணியிலங்கு நெடுமாட மதில் விழிஞம்..

என்று பாண்டியப் பேரரசர் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபரின் சிவரமங்கலத்துச் செப்பேடுகள் புகழ்ந்தேத்தும் கேரள நாட்டின் விழிஞம் துறைமுகம் இதுதானா! என்று ஒரு கணம் வியந்து போகிறோம்.

நூறாண்டுகளுக்கு முன்னால் இந்த இடத்தில் எத்தனை போக்குவரத்து நிலவி வந்தது என்பதை நினைத்தால் இப்போதும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அந்த நாட்களிலெல்லாம் மத்தியத் தரைகடல் பகுதியிலிருந்து

[5] வணிகக் குழுக்கள் சாத்துக்கள் என்றழைக்கப்பட்டன.

புரவிகளோடும் இதர ஐஸ்வரியங்களோடும் வந்திறங்கும் அராபியக் கப்பல்களே நூற்றுக்கணக்கில் குவிந்திருக்கும்.



விழிஞம் கடற்கரைப் பகுதிகளும் துறைமுகமும்.

அடடா.. அந்தக் கலங்களிலிருந்தெல்லாம் எத்தனை [illegible] பொருட்கள் வந்திறங்கும்! அவற்றைக் [illegible] பணியில் எத்தனையெத்தனை ஊழியர்கள் [illegible] முன்னிரவு-பின்னிரவு காலை-மாலை [illegible] பொழுதுகளிலும் ஒரே கூட்டமும்

கூச்சலுமாகவல்லவா இந்த இடம் காட்சியளித்துக் கொண்டிருக்கும்? இந்தத் துறைமுகத்தின் சுங்கச் சாவடியில் எத்தனையெத்தனை அரசாங்க ஊழியர்கள் இரவு பகலாகப் பணியில் ஈடுபட்டிருப்பார்கள்! அவர்களின் அருட் கருணையாகிய செஞ்சாந்து முத்திரைக்காக நாட்கணக்கில் தவமிருக்கும் சரக்கு மூட்டைகள்தான் எத்தனையெத்தனை!

இன்று நிலைமை சற்று மாறித்தான் போய்விட்டது. முன்பு நூற்றுக்கணக்கான கலங்கள் நின்ற இடத்தில் இன்று இருபது முப்பது கலங்களைத்தான் காணமுடிகிறது. பாவம், அவையும் பழைய வாசனையை விட்டுவிடாமல் பிடிவாதமாகப் பாரசீகத்திலிருந்து உயர்ஜாதிப் புரவிகளை ஏற்றிக்கொண்டு வந்திருக்கும் அராபியக் கப்பல்கள்தான். கீழ்த்திசை வாணிபத்தை ஒரேயடியாக நாகைப்பட்டினமும் மாமல்லையும் காயல்பட்டினமுமல்லவா விழுங்கிவிட்டன? முத்து வாணிபத்தைப் புகார் தத்தெடுத்துக் கொண்டு விட்டது. இன்றுவரை விழிஞத்தில் தாக்குப்பிடித்து நின்று கொண்டிருப்பவர்கள் மலைநாட்டின் குதிரைச் செட்டிகள்[6] மட்டும்தான். மற்ற வகையான வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வணிகர்கள் பலரும் நஷ்டம் தாங்க முடியாமல் வேறு வேறு பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து விட்டார்கள். எதைச் சொல்வது? எதை விடுவது? எல்லாம் தலைவிதி.

அந்தத் துறைமுகத்தின் ஒரு ஓரத்தில் அமைந்திருந்த இயற்கையான மண்மேட்டில் கம்பீரமாய் ஓங்கியெழுந்து நின்றது அந்த கோட்டை [7]. வானம் தீட்டியிருந்த கருநீலப் பின்னணியில் அக்கோட்டையின் சாளர வாயில்களும் திட்டிவாசல் மதில்களும் வில்லம்பு மாடங்களும் ஒரு நிழலோவியமாய் விரிந்திருந்தன. சொல்லப்போனால் அந்தத் துறைமுகப் பகுதியிலேயே பழம் பெருமை சிறிதும்

[6] குதிரை வணிகர்கள் குதிரைச் செட்டிகள் என்றே அழைக்கப்பட்டார்கள். குறிப்பாக மலைநாட்டின் குதிரைச் செட்டிகளைக் குறிப்பிடும் கலவெட்டுககள் உள்ளன.

[7] அககாலக் கோட்டைகள் பல இயற்கையாகவே பாதுகாப்பு நிறைந்த இடஙகளில் தான் கட்டப்பெற்றன. நிலவரண், நீர் அரண், மலை அரண், காட்டரண எனறு பலவகை அரணகளைப் பற்றிய குறிப்புக்களை இலககியஙகளில காணலாம்.

குன்றாமல் தலைநிமிர்ந்து நின்றது அந்தப் பழங்காலக் கோட்டை மட்டும்தான்[8].

“பழங்காலக் கோட்டை” என்று காரணத்தோடுதான் குறிப்பிடுகிறோம். ஏறக்குறைய நூறு நூற்றியிருபது வருடங்களுக்கு முன்னால் விழிஞம் கொட்டிக் கொழித்த காலத்தில் இக்கோட்டை ஆய்வேள்கள்[9] என்றழைக்கப்பட்ட அரச வம்சத்தாரிடம் இருந்து வந்தது. சங்ககாலம் முதற்கொண்டு வழிவழியாகத் தென்னகத்தை ஆண்டு கொண்டிருந்த அத்தொல்பழங்குடியினர் கட்டியதாலோ என்னவோ அந்தக் கோட்டையை சற்று செருக்குடன் நிமிர்ந்து நிற்பதுபோல்தான் பார்ப்பவர் எவருக்குமே தோன்றும். அரசாங்கம் வலிமையுடையதாக இருந்ததால் வியாபாரம் செழித்தது. மலைநாட்டில் விளைந்த மிளகும் தேனும் மான் கொம்புகளும் இதரப் பொருட்களும் விறுவிறுப்பாக வேற்று நாட்டுச் சந்தைகளில் விலைபோயின. விழிஞத்தின் தேசிகப் பாடியில்[10] அந்த நாட்களிலெல்லாம் இரவு பகலென்கிற வித்தியாசமே தெரியாமல் ஒரே போக்குவரத்தாயிருக்கும்.

யாருடைய கண்பட்டதோ.. “மணியிலங்கு நெடுமாட மதில் விழிஞம்” ஸ்ரீமாற ஸ்ரீவல்லபரின் படைகள் தொடுத்த கடும்தாக்குதலுக்குத்[11] தாக்குப்பிடிக்க முடியாமல் பணிந்தது. அதற்குப் பிறகு எத்தனையோ ஏற்ற இறக்கங்கள்... என்றாலும் பழைய நிலையை விழிஞத்தால் அடையவே முடியவில்லை.

அதற்குப் பின்வந்த ஆண்டுகளில் ஆய்வேள் வம்சத்தினர் படிப்படியாக ஏறக்குறைய அழிந்தொழிந்த பிறகு விழிஞம் கோட்டையையோ துறைமுகத்தையோ சரிவர ஆதரிப்பார் யாருமில்லை. இன்றைய தேதியில் பெயருக்கு இது வேணாட்டரசரின் ஆதிக்கத்தில் உள்ளதாகவும் அவரால் நிர்வகிக்கப்படுவதாகவும் சொல்லிக் கொள்பவர்கள் உண்டு.

[8] இப்பழஙகோட்டையின் எச்சங்கள் 2006ல் கேரளப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரால் கண்டறியப்பட்டுள்ளன.

[9] கடையெழு வள்ளல்களுள் ஒருவராக ஒரு ஆய்வேள் தமிழிலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறார்.

[10] பன்னாட்டு மொழிபேசும் பல தேசத்து வணிகர்கள் புழங்கிய பகுதி தேசிகப்பாடி என்று குறிப்பிடப்பட்டது.

[11] இத்தாக்குதல் கி.பி. 788ல் நடந்ததாக வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

பழம்பெருமை மிக்க அக்கோட்டையின் பெருங் கதவுகளில் அமைக்கப்பட்டிருந்த திட்டிவாயிற்கதவம் வழியாக உள்ளே நோக்குகிறோம். அடடா! என்ன ஆச்சரியம்? வழக்கமாக ஆள் அரவம் சிறிதுமற்ற அந்தக் கோட்டையில் பேச்சுக் குரல்கள் லேசாகக் கேட்பது போலில்லை? ஆங்காங்கே மெல்லிய நடமாட்டங்கள் கூடத் தென்படுகின்றனவே? எதற்கும் சற்று எச்சரிக்கையாகவே அணுகுவோம்.

கோட்டை வாயிலையொட்டி அமைந்திருந்த நெடு வீதியைக் கடந்ததும் நம் கண்களுக்குத் தட்டுப்படுவது ஒரு பெரிய மாட மாளிகை. முற்காலத்தில் ஆய்வேளரசர்களின் திருமாமணியம்பலமாகத்[12] திகழ்ந்தது இந்த மாளிகைதான் போலும். இருளில் அதன் நீள அகலங்களை நம்மால் சரிவர அனுமானிக்க முடியவில்லை. என்றாலும் அந்த மாளிகையின் முன் மண்டபமும் அதனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த தூண்களும் மண்டபத்தின் முன்றிலையொட்டி அமைக்கப்பட்டிருந்த நீண்ட மூங்கிற் பந்தலும் நன்றாகவே தெரிந்தன.

அந்தப் பந்தலின் கீழ் விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தில் இருபது அல்லது முப்பது மனிதர்கள் அமர்ந்து தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். கம்பீரமாக அவர்கள் அமர்ந்திருந்த தோரணையும் அந்த இருளிலும் அவர்களின் அங்கங்களில் பளபளத்துக் கொண்டிருந்த அணிமணிகளும் அவர்கள் சாதாரண மனிதர்களல்ல என்பதைச் சொல்லாமல் சொல்லின. ஒரு சிலர் நீண்ட தலைப்பாகை கூடத் தரித்திருந்தார்கள். அவர்களின் கண்கள் அடிக்கடி மாளிகையின் உட்பகுதியை ஆவலுடன் நோக்குவதைக் கொண்டு எவருடைய வருகையையோ அவர்கள் எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள் என்பதாக யூகிக்கிறோம்.

* * * * * * * *

கூட்டத்தின் முன்னால் அமர்ந்திருந்தவர் சங்கடமாகக் கையைப் பிசைந்துகொண்டார். "என்ன, தலைவர்

12 விருந்தினர்களை அரசர்கள் வரவேற்று உபசரிக்கும் மாளிகை.

வருவதற்கு இத்தனை தாமதமாகின்றதே? அப்போதே மாளிகைக்கு வந்து சேர்ந்து விட்டதாகத் தகவல் வந்ததே?"

"வேணாடுடையவரே! உமது அவசரம் எனக்கும் புரிகிறது. அவர் காரணமில்லாமல் தாமசிக்கமாட்டார்.. "

"காரணமில்லாமல் தாமசம் செய்கிறார் என்று நான் சொல்லவில்லை. உள்ளே என்னதான் நடக்கிறதென்று தெரியவில்லை. கூட்டத்தை முடித்துக்கொண்ட கையோடு நான் பனங்கனாவில்[13] அரண்மனைக்குப் புறப்பட்டாக வேண்டும். சில அவசர வேலைகள் வந்துவிட்டன.."

"கவலைப்படாதீர்கள். இன்னும் சிறிது நேரத்தில்... அதோ! அவரே வந்துவிட்டார். வள்ளுவ நாடுவாழியாருக்கு நூறு வயது."

இருளடைந்திருந்த மாளிகையின் உட்பகுதியிலிருந்து பெரிய மனிதர் ஒருவரும் அவரது உதவியாளனைப்போல் காணப்பட்ட இன்னொருவனும் மண்டபத்தை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார்கள். வள்ளுவ நாடுவாழியார் என்றழைக்கப்பட்ட அந்தப் பெரியவர் சற்றே வயது முதிர்ந்தவராகத் தெரிந்தார். என்றாலும் நடையிலும் தோரணையிலும் ஒரு தனி மிடுக்குத் தெரிந்தது. அவருடைய வலது தோளிலிருந்து சரேலென்று கீழிறங்கிய நீண்ட அங்க வஸ்திரமானது அவருடைய கம்பீர நடைக்கு ஏற்றாற்போல் ஆடி அசைந்து கொண்டிருந்தது. அவரது கண்கள் மிகக் கூர்மையாக அடர்ந்த இருளைக் கிழித்துவிடும் வீரியத்துடன் அங்குமிங்கும் அலைபாய்ந்து கொண்டிருந்தன.

மெதுவாக நடந்து வந்து பந்தலை அடைந்த நாடுவாழியார், கீழே விரிக்கப்பட்டிருந்த திண்டில் கம்பீரமாக கால் மடக்கி அமர்ந்து அனைவரையும் ஒரு முறை நிமிர்ந்து ஏற இறங்கப் பார்த்தார்.

"நண்பர்களே! தாமதத்திற்கு மன்னிக்க வேண்டும். ஒரு முக்கியமான விவகாரத்தில் கவனம் செலுத்த வேண்டியதாகி விட்டது. கூட்டத்தைத் துவங்கலாமா?"

"உங்களுக்காகத்தான் இத்தனை நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். உடனடியாகத் துவங்கிவிடலாம்."

13 இந்த அரண்மனை கொல்லத்தில் அமைந்திருந்தது.

உதவியாளன் வெற்றிலையைப் பக்குவமாக மடித்துக் கொடுக்க அதனை வாயில் ஒரு ஓரத்தில் அதக்கிக்கொண்டு பேசத் துவங்கினார் வள்ளுவனார்.

"நண்பர்களே! என்னுடைய பிரத்யேக அழைப்பை மதித்து இத்தனை தூரம் கிளம்பி வந்தமைக்கு மிகுந்த வந்தனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களில் ஒரு சிலர் பல நாட்கள் பயணப்பட்டு விழிஞத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள் என்பதையறிவேன். உங்களை இத்தகைய சிரமங்களுக்குள்ளாக்குவது எனது நோக்கமல்ல. என்றாலும் இது போன்ற அந்தரங்கக் கூட்டங்களை நடத்த இந்தக் கோட்டையைவிடச் சிறந்த பாதுகாப்பான இடம் கிடையாது என்பதால்தான் இங்கே கூடியிருக்கிறோம்.

கொளத்து நாடுடையவரும் மூஷிக வம்ச மரபில் வந்தவரும் நம்மில் மிக மூத்தவருமான கண்டன் காரியார் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதாக இருந்தது. துரதிருஷ்டவசமாக கடைசி நேரத்தில் அவருக்குச் சில சிக்கல்கள் வந்து சேரவே என்னைத் தலைமையேற்கச் சொல்லி முறியனுப்பி விட்டார். அழைப்பிதழ் இல்லாமல் இந்தக் கூட்டத்தில் ஒருவருமில்லையே? அப்படி எவராவது இருந்தால் உடனடியாக எழுந்து நிற்க வேண்டும். இல்லையேல் விளைவுகள் மிகக் கடுமையாக இருக்கும்!"

கூட்டத்தில் சற்றே இளவயதினனாகக் காணப்பட்டவன் ஒருவன் எழுந்தான்.

"ஐயா[14]! அழைப்பிதழ் எனக்கு அனுப்பப்படவில்லை. என் தந்தையாருக்குத்தான் அனுப்பப்பட்டது..."

"யாரது? வீரக்குறும்பொறையர் மகன்தானே? குடும்பத்தின் முதுக்குறுவல்லவா[15] நீ? எனக்கு முன்பே தகவல் வந்துவிட்டதப்பா. தந்தை நன்றாக உள்ளார் இல்லையா?"

[14] ஐயா என்பது பழஞ்சொல். "உள்ளத்தே ஓங்காரமாய் நின்ற ஐயா" என்கிறார் மாணிக்கவாசகர்.
[15] மூத்த மகன்.

"அஞ்சைக்களத்து[16] ஐயன் அருளால் சுகமாக இருக்கிறார். சில காரணங்களால் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வியலவில்லை..."

"அறிவேன். ஓலையில் விபரமாக எனக்கு எழுதியுள்ளார். அவரை மிகவும் விசாரித்ததாகத் தெரியப்படுத்துங்கள். நண்பர்களே! மிக மிக முக்கியமான அந்தரங்கமான சில விஷயங்களைப் பற்றி நேரில் மனம் விட்டுப் பேசுவதற்காகத்தான் உங்களை இத்தனை தூரம் வரச்சொன்னேன். நான் முக்கிய விஷயங்களைப் பேசத் துவங்குமுன் உங்களில் யாருக்காவது ஏதேனும் கேள்விகள் உள்ளனவா?"

"நாலுதளிக்காரர்களுக்கு இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பிதழ் அனுப்பப்படவில்லையா?"

"இல்லை. அவர்கள் நமக்கு ஓலையனுப்பாமல் பெருஞ் செல்லூரிலும்[17] தளிப்பரம்பரையிலும் இரண்டு இரகசியக் கூட்டங்கள் நடத்திவிட்டார்கள் என்கிற செய்தி எனக்கு வந்து சேர்ந்தது. நமக்கும் அவர்களுக்கும் உள்ள சிறிய விரோதங்களைப் பாராட்டுவதற்கான நேரம் இதுவல்ல. என்றாலும் இந்தக் கூட்டத்திற்கு அவர்களை அழைப்பதைக் காரியார் விரும்பவில்லை. நாம் இன்றைக்கு எடுக்கப்போகும் சில முக்கிய முடிவுகளைப் பொறுத்தே அவர்களிடம் நாம் இனிக் கொள்ளப்போகும் உறவு அமையும்."

கூட்டத்தின் பின்னால் சில பேச்சுக்குரல்கள் மெதுவாக எழுந்தன.

"யாரது பின்னால் பேசுவது? எதுவாக இருந்தாலும் கூட்டத்திற்கு முன்வந்து தைரியமாகப் பேசலாம்!" என்று முழங்கினார் வள்ளுவ நாடாழ்வார்.

"ஒன்றுமில்லை ஐயா. இருள் மிகவும் கவிந்துள்ளதே? ஒரு தீப்பந்தத்தை வேண்டுமானால் கொண்டு வரலாமா? என்று இவர் கேட்டுக்கொண்டிருந்தார்..."

"நண்பர்களே! மிக முக்கியமான ஒரு காரணத்தின் பாற்பட்டுத்தான் இக்கூட்டத்தை இத்தனை இருட்டில்

[16] சேரநாட்டின் புகழ்பெற்ற சைவத்தலமான திருவஞ்சிக்களம். "அஞ்சைக் களத்துள்ளார் ஐயாறுள்ளார்..." என்பது அப்பர் பெருமான் பதிகம்.
[17] சங்க காலந்தொட்டுப் புகழ்பெற்றிருந்த மலைநாட்டுக் கோநகர்.

நடத்துகிறோம். வழக்கமாக அழகிய தோப்புத் துரவரங்களில் அகிற்புகையும் சந்தனமும் நெருப்பில் கமழக் கமழ நடைபெறும் நமது கூட்டங்கள் இந்தப் பாழடைந்த கோட்டையில் மிக மிக இரகசியமாக நடத்தப்பெறுவதே நமது நிலைமையை ஓரளவிற்கு உங்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கும். என்றாலும் முழுச் செய்தியையும் நான் கூறும் வரை பொறுப்பீர்களாக. வேறு யாராவது ஏதாவது கேட்கவேண்டியுள்ளதா?"

"ஒரு சில கேள்விகள் உள்ளன. என்றாலும் முதலில் நீங்கள் பேசிவிடுங்கள். பின்னர் கேள்விமுறைகளை வைத்துக் கொள்ளலாம்." - வேணாட்டுடையவர் என்றழைக்கப்பட்ட கோவர்தன மார்த்தாண்டர் சட்டென்று அவருக்கு பதிலளித்தார்.

"அப்படியானால் சரி. நான் சொல்ல வந்ததைச் சொல்லத் துவங்குகிறேன்."

2. கோட்டையில் கூட்டம்



வள்ளுவ நாடாழ்வார் தன் திண்டிலிருந்து எழுந்து நின்று கொண்டார். அவருடைய முகத்தில் மனக்கிலேசம், உறுதி, எச்சரிக்கை என்று பலவித பாவங்கள் வந்து போயின. தொண்டையை ஒருமுறை செருமிக் கொண்டு பேசத் துவங்கினார் அவர்.

"நண்பர்களே! நாடுடையவர்களே! பழம் பெருமை மிக்க மலைநாட்டின் பல்வேறு பகுதிகளையும் பரம்பரை பரம்பரையாகப் பரிபாலம் செய்யும் வம்சத்தில் வந்த வீராதி வீரர்களே! நமது முன்னோரும் மூத்தோரும் அவதரித்த புண்ணிய பூமியான இந்த பிரம்ம ஷேத்திரத்தை பல்வேறு சிக்கல்களும் கஷ்டகாலங்களும் சூழ்ந்துள்ள நேரமிது. இத்தனை துராக்கிருகமான வேளையில் அஞ்சா நெஞ்சர்களான நீங்கள் அனைவரும் நாடுவாழிகளாக அமைந்திருப்பது தேவி பகவதியின் கருணையினால்தான் என்று சொன்னால் அது மிகையில்லை.

நண்பர்களே! கடந்த மூன்று வருடங்களாகவே சோழ மண்டலத்தில் உருவாகி வரும் அரசியல் சூழல் மெல்ல மெல்ல நமக்குப் பாதகமாக மாறிவருகிறது என்று நான் எச்சரித்து வந்திருக்கிறேன். உங்களில் சிலர் அதனை ஏற்றுக் கொண்டீர்கள். வேறு சிலர் அதனை மறுத்தீர்கள். வாழையடி வாழையாகச் சோழர்கள் நம்முடன் உறவு பூண்டவர்கள். ஆதித்த சோழர் காலத்திலிருந்து தொடரும் உறவு இது. சட்டென்று பட்டுப்போய்விடாது. கவலைப்பட வேண்டாம் என்றெல்லாம் கூறினீர்கள்.

நான்கு மாதங்களுக்கு முன் நமக்கெல்லாம் ஒரு முன்னெச்சரிக்கை கொடுப்பதுபோல் அந்தத் திமிர் பிடித்த அருள்மொழிச் சோழன் பாண்டி மண்டலத்தின் மேல் படையெடுத்தான். சோழனை நம்புவதைக் காட்டிலும் பாண்டியனை நம்புவதே மேல் என்று நான் எத்தனையோ எடுத்துக் கூறியும் நமது பெருமாள்[18] அதனை ஏற்கவில்லை. முட்டாள்தனமாக அந்தப் போரில் நாம் கலந்து கொள்ளாமல் போனோம். கடைசியில் நான் எதிர்பார்த்த படி தன்னுடைய கூலிப்படைகளைக் கொண்டு வீராதி வீரர்களான பாண்டி மண்டலத்தவரைச் சோழன் தோற்கடித்தான். நாம் உரியமுறையில் ஆதரிக்காவிட்டாலும் பழைய உறவுகளை மனதில் கொண்டு பாண்டிமண்டலாதி பதியான அமரபுஜங்க தேவர் இப்போது மலைநாட்டில் அடைக்கலம் புகுந்துள்ளார்...."

"என்ன? பாண்டித்தேவர் இப்போது நமது நாட்டில் இருக்கிறாரா?"

"ஆம். அது சில காலம் வரை இரகசியமாக வைக்கப் பட்ட செய்தி. இப்போதும் அதனை வெளியில் சொல்வதற்கில்லை. உங்களின் மனத்தோடு வைத்துக் கொள்ளுங்கள்."

"எந்தக் கோட்டையில் தற்போது பாண்டியர் தங்கியிருக்கிறார்?"

"அது பரம இரகசியமாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது. தற்சமயம் சொல்வதற்கில்லை. என்னை முழுவதும் பேச விடுங்கள். பின்னர் உங்கள் கேள்விகளை வைத்துக் கொள்ளலாம்..."

---

[18] சேரநாட்டுப் பேரரசர்களை பெருமாள் என்றும் சேரமான் பெருமாள் என்றும் குறிப்பிடுவார்கள்.

"ஆமாம். சற்று நேரத்திற்கு நாடாழ்வாரின் பேச்சில் எவரும் குறுக்கிட வேண்டாமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.." - வேணாட்டவரின் குரலில் சற்று கவலை தொனித்தது.

"பாண்டிமண்டலம் தோற்றபோது நான் நமது பெருமாளைக் கடுமையாக எச்சரித்தேன். மகோதகைப் பட்டினக் கோட்டையில்[19] கிட்டத்தட்ட ஒரு ஜாம நேரத்திற்குமேல் அவருடன் தனிமையில் பேசி அவருக்கு நிலைமையைப் புரிய வைத்தேன். முடிந்தால் தஞ்சையை நோக்கி ஒரு படையெடுப்பைக் கூட நடத்தலாம் என்கிற எனது யோசனையைத் தெரிவித்தேன். அப்போது பெருமாள் என்னிடம் கேட்ட ஒரு கேள்வி இப்போதும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.."

"அப்படியென்ன கேள்வி அது?"

"இப்படியெல்லாம் நீங்கள் சொல்லிக்கொண்டே போகிறீர்களே.. இது உங்களின் தனிப்பட்ட எண்ணமா? அல்லது கேரள தேசத்தின் அத்தனை நாடுவாழிகளும் இவ்வாறே அபிப்பிராயப்படுகிறார்களா? என்று கேட்டார். அப்போது என் முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக் கொள்வது என்று எனக்கே தெரியவில்லை. நண்பர்களே! நம்மிடையே பல்வேறு அபிப்பிராய பேதங்கள் நிலவுவது உண்மைதான். அது ஒரு வகையில் ஆராக்கியமான விஷயமும் கூட. ஆனால் வேற்று மனிதர்கள் அதனை ஒற்றுமையின்மையாகக் காண்கிறார்கள். பெருமாளே நம்மை இவ்வாறுதான் புரிந்து வைத்துள்ளார். இந்த ஒற்றுமை யின்மையினால்தான் நாலுதளிக்காரர்களும் நம்மைச் சரிவர மதிப்பதில்லை. ஆயிரத்தவர் மத்தியில் நம்மைப் பற்றிய நகைச்சுவைச் செய்திகள்கூட அடிபடுவதாகக் கேள்விப் படுகிறேன். அதனால் உங்களை மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இனி வெளியிடங்களில் பேசும்போது நாடு வாழிகளில் இன்னார் இவ்வாறு அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் அதில் எனக்குக் கருத்தொற்றுமையில்லை என்பது

[19] மகோதயபுரம், மகோதகை, உதகை என்று பல்வேறு பெயர்களாலும் இந்நகர் அறியப்பட்டது. சேரமான் பெருமாள் அரசர்களின் தலைநகரான இவ்வூர், கொடுங்கோளூருக்கு அருகில் அமைந்திருந்தது. சேரமான் அரண்மனை இருந்ததாகக் கருதப்படும் இடம் சேரமான் பறம்பு என்று இன்றளவும் அறியப்படுகிறது. இங்கு ஒரு சில அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

போல் பேசவே பேசாதீர்கள். நாவில் சிறிது எச்சரிக்கை இருக்கட்டும். தனிப்பட்ட அபிப்பிராயங்களைப் புறந்தள்ளி விட்டு நமது குழுவின் முடிவுகளை உங்கள் முடிவுகளாக ஏற்கவேண்டிய நேரமிது. நான் மேற்கொண்டு சொல்லத் தேவையில்லை. நீங்களாகப் புரிந்து கொள்வீர்களென்று நம்புகிறேன்."

சபையில் ஓரிரு கணங்கள் அமைதி நிலவின. கடற்காற்று விர்ரென்று ஒரு முறை சுழன்றடித்து அந்தப் பந்தலின் மேல் மணற்புழுதியை வாரியிறைத்துவிட்டுப் போனது.

"பழையதை மறந்து விடுங்கள். இனியாவது நாடுவாழி களின் ஒற்றுமையை தேசத்தவர் உணரட்டும்!" - சற்றே உரத்த குரலில் முழங்கினார் கோவர்தனர்.

"நீங்கள் அத்தனை சொல்லியும் பெருமாள் படையெடுப்பிற்கு ஒப்புக்கொள்ளவில்லையா?"

"நான் காலையில் ஒரு ஜாம நேரம் ஓதிவிட்டு வந்தேன் மாலையில் நாலுதளிக்காரர்கள் வந்து குட்டையைக் குழப்பி விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நாம் அனைவருமாவது ஒன்றாகச் சேர்ந்து பெருமாளைச் சந்தித்து படையெடுப்பைப் பற்றி உறுதிபடச் சொல்லியிருக்க வேண்டும். செய்தோமா? கிடையாது."

"எதற்காகத் திரும்பத் திரும்பச் சோழநாட்டைப் படையெடுப்பதைப் பற்றி வற்புறுத்திச் சொல்கிறீர்கள்? முதலாம் பராந்தக சோழருக்குப் பிறகு சேர - சோழ உறவில் முறிந்து தேக்க நிலை ஏற்பட்டது உண்மைதான். ஆனால் இதற்கு பதிலாகத்தான் பழுவேட்டரையர் - சோழர் உறவு செழித்தோங்கிவிட்டதே! பழுவூர் அரசர்கள் நமது மண்ணின் மக்கள் அல்லவா? அவர்களுடன் உத்தமச் சோழரும் சரி, அருள்மொழித்தேவரும் சரி மிகுந்த ஆரோக்கியமான உறவல்லவா பூண்டுள்ளார்கள்?"

"நீங்களெல்லோரும் அருள்மொழித்தேவனை மிகவும் தவறாகப் புரிந்து வைத்திருக்கிறீர்கள். உத்தமச் சோழனை வைத்து அவனை எடைபோடுவது மிகவும் தவறு. அவன் பட்டமேற்ற போது பூண்ட அபிஷேக நாமமே அவனது சாம்ராஜ்ஜியப் பேராசையை தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. இராஜ...இராஜ... சோழன்! ஹ! நண்பர்களே.. இதன் அர்த்தம் என்ன தெரியுமா? அரசர்களுக்கெல்லாம்

அரசன்! அதாவது இவன் ஒருவன்தான் அரசன் மற்றவர்களெல்லாம் இவனது அடிமைகள். இந்த தட்ஷிண தேசமானது எத்தனையெத்தனையோ வீராதி வீரர்களைக் கண்டிருக்கிறது. அவர்களில் யாராவது இத்தனை திமிர் பிடித்த பட்டப்பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார்களா? கிடையாது..."

"வள்ளுவனாரே! மன்னிக்க வேண்டும். எனக்கு ஒன்றும் புரியவில்லை. பாண்டி மண்டலத்திற்கும் சோழருக்கும் கால காலமாகவே பகை நிலவி வருகிறது. அதனால் சோழர்கள் அவர்களின் மேல் படையெடுத்துச் சென்றிருக்கின்றனர். பாண்டியர் தோற்றுவிட்டனர். சிறிது காலத்தில் மீண்டும் மதுரை பாண்டியரால் கைப்பற்றப்படும். இத்தகைய நிகழ்வுகளில் கேரளம் எவ்வாறு சம்மந்தப்படுகிறது? இது சோழருக்கும் பாண்டியருக்கும் இடையில் காலகாலமாக நடைபெற்றுவரும் போராட்டமல்லவா?"

"உண்மைதான். நாமெல்லோரும் இவ்வாறு நம்பி நாசமாய்ப் போகவேண்டுமென்றுதான் அக்கனும்[10] தம்பியும் நினைக்கிறார்கள். அவ்வாறே நீங்களும் ஏமாறுகிறீர்கள் வேறு என்னத்தைச் சொல்வது?" - விரக்தியின் விளிம்பைத் தொட்டு விட்ட வள்ளுவ நாடாழ்வார் தூரத்தே தெரிந்த கடலை வெறித்தார். மிகச் சங்கடமானதொரு மௌனம் அங்கு கவிந்தது.

"வள்ளுவனார் எங்களைக் கோபித்துக்கொள்ளக் கூடாது. கோவர்தனர் அப்படியொன்றும் தவறாகச் சொல்லி விடவில்லையே? சொல்லப்போனால் எங்களில் பலருக்கும் இதே கருத்துத்தான் உள்ளது!"

"நண்பர்களே! இந்த நிலைமை மிகவும் துரதிருஷ்ட வசமானது. நமது நாட்டைப் பீடிக்கப்போகும் கேடு காலத்தைத் தவிர்க்க முடியாதென்று தோன்றுகிறது. உங்களில் பலருக்கும் சில காலமாகவே துர்நிமித்தங்கள் தோன்றி வருவதை அறிவேன். இரண்டு நாட்களுக்குமுன் திருவல்லவாயிலிருந்து[11] பிரபலமானதொரு ஜோஸியரைக் கூப்பிட்டனுப்பிச் சோழி போட்டுப் பார்க்கச் சொன்னதில்

---

[10] அக்கா என்பதை அக்கன் என்று அந்நாளில் அழைத்தார்கள். இங்கு குறிப்பிடப்படுவது இராஜராஜரின் மூத்த தமக்கையார் பராந்தகன் குந்தவையாழ்வார்.

[11] இங்கு ஒரு பழமையான திருமால் கோயில் அமைந்துள்ளது.

என்னுடைய சந்தேகங்கள் உறுதிப்பட்டுவிட்டன. மிகச் சிரமமானதொரு திசையில் நாடு சிக்கப் போகிறதென்று அவர் கடுமையாக எச்சரித்தார். துரதிருஷ்டவசமாக நமது பேரரசர் கேரளாதிநாதர் மனுகுலாதித்தரின் ஜாதக பலனும் மிகப் பலகீனமானதாகவே உள்ளது. இத்தகைய சிரம திசைகளே உங்கள் மனதையும் பலவீனப்படுத்திவிட்டன என்று நினைக்கிறேன்...."

"தாங்கள் இவ்வாறெல்லாம் விரக்தியாகப் பேசக் கூடாது. சொல்ல வந்த விபரங்களை விளக்கமாகச் சொல்ல வேண்டும். பாண்டியர் சோழர் போரில் நாம் எவ்வாறு சம்மந்தப்படுகிறோம் என்பதைப் புரியும்படி விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும்."

"நாடுவாழிகளே! கிட்டத்தட்ட இதே போன்றதொரு நிலைமை பன்னெடுங்காலத்திற்கு முன்னால் ஏற்பட்டது. மதுரையிலிருந்த இராஜசிம்ம பாண்டியனை பராந்தகச் சோழன் அநியாயமாய் விரட்டியடித்தான். பாண்டிய குல தனமான இரத்தினஹாரத்தைக் கைப்பற்ற என்னென்னவோ தகிடுதத்தங்களெல்லாம் செய்தான். அதற்காக இலங்கை மீதும் படையெடுத்துச் சென்றான்.

அன்று இராஜசிம்மனையும் ஹாரத்தையும் நாம் காத்தோம். தாய்வழி உறவில் கேரள வம்சத்தைச் சார்ந்திருந்தவன் என்பதால் தைரியமாய் இராஜசிம்மனுக்கு அடைக்கலம் கொடுத்தோம்.

அதே சமயத்தில் பராந்தகனோடும் நமக்கு நெருக்கமான உறவிருந்தது. அவனை நம்முடைய இளவரசியார் கோக்கிழானடிகள் கைப்பிடித்திருந்தார். அது மட்டுமா? ஏராளமான மலைநாட்டு வீரர்கள் சோழர் சேனையில் இருந்தார்கள். என்னுடைய வம்சத்து மூத்தோர் ஒருவர் இளவரசன் இராஜாதித்தனின் உடன்கூட்டத்திலேயே இருந்தார்! ஆனால் நன்றி கெட்ட பராந்தகன் என்ன செய்தான் தெரியுமா? இராஜாதித்தனுக்கு அடைக்கலம் கொடுத்த ஒரே காரணத்திற்காக நம்மைத் தாக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டான். அப்போது ஏற்பட்ட இராஷ்டிரகூடச் சிக்கல்களால்தான் அந்தப் படையெடுப்பு நிகழவில்லை

இந்த வரலாற்றிலிருந்து நாம் பாடம் கற்றுக் கொண்டோமா? இல்லை இல்லவேயில்லை நண்பர்களே!

நமது மெத்தனத்தினால் நாம் நமது தாய்நாட்டையே இழந்து விடுவோமோவென்று பயமாக இருக்கிறது.

கேளுங்கள். சென்ற வருடம் ஒரு முக்கியமான சம்பவம் உடையார்குடியில் அரங்கேறியது உங்களெல்லோருக்கும் நினைவிருக்கலாம். சோழ சாம்ராஜ்ஜியத்தில் முக்கியப் பணியிலிருந்த சில மலைநாட்டு அமைச்சர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். துரோகிகள் என்கிற பட்டத்துடன் அவர்களையும் அவர்களுக்குப் பெண் கொடுத்தவர்களையும் பெண்ணெடுத்தவர்களையும் ஒரேயடியாக நாட்டை விட்டு விரட்டினான் அருள்மொழி. அவர்களது நிலபுலன்களும் மாடு மனைகளும் பிடுங்கப்பட்டன. அப்போதும் நான் எச்சரித்தேன். யாரும் என்னைச் செவிமடுக்கவில்லை. அதனுடைய பலனை நாம் அனைவரும் அனுபவிக்கும் நேரம் வந்துவிட்டது. நண்பர்களே! உங்கள் மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள். நமது தானைத் தலைவரிடமிருந்து வந்திருக்கிறது இந்த அதி முக்கியமான படுபயங்கரமான இரகசியச் செய்தி. அருள்மொழித் தேவன் அனந்தபுரத்தின்[22] காந்தளூர்ச் சாலையைத் தாக்குவதற்குத் திட்டமிட்டு வருகிறான்!"

"அக்கிரமம்! அநியாயம்!"

"இந்தச் செய்தி உறுதியானதுதானா? ஒரு பாடசாலையையா அவன் தாக்கப்போகிறான்?"

"காந்தளூர் மேல் அவனுக்கென்ன அத்தனை வெறுப்பு?"

"சோழரைக் கேரளம் புகவிடமாட்டோம்! அவர்களை வேராடு அழிப்போம்!"

தலைக்குத் தலை கோபாவேசமாகப் பேசத் தலைப்பட்டவர்களை வேணாட்டு வேந்தர் தடுத்தாட்கொண்டார். "அமைதி! அமைதி! வள்ளுவனார் சொல்வதைப் பொறுமையாகக் கேட்போம். பின்னர் ஒவ்வொருவராகப் பேசுவோம். அமைதி!!! நாடாழ்வார் தொடர்ந்து பேசட்டும்..."

வள்ளுவனாரின் முகத்தில் மெல்லிய முறுவல் தோன்றியது. நாடுவாழிகளின் முகத்தில் ஒருவழியாகத்

---

[22] இன்றைய திருவனந்தபுரம்.

தோன்றிவிட்ட கோபக்களை அவருக்குத் திருப்தியை அளித்தது போலும்.

"இடி போன்ற இரண்டு செய்திகள் தானைத் தலைவரிடமிருந்து ஏறக்குறைய ஒரு பட்சத்துக்கு முன்னால் வந்து சேர்ந்தன. உடனே இந்தக் கூட்டத்தைக் கூட்ட முடிவு செய்து உங்களுக்கெல்லாம் ஓலையனுப்பினேன்."

"தானைத் தலைவர் தானைத்தலைவரென்று அடிக்கடி குறிப்பிடுகிறீர்கள். ஆனால் அவர் யாரென்பதைச் சொல்ல மறுக்கிறீர்கள்!"

"நண்பர்களே! அது பரம இரகசியம். அது தெரியாத வரையில்தான் நமக்கு நல்லது. அவருக்கும் நல்லது. கடந்த மூன்று வருடங்களாக அவர் அனுப்பிவரும் செய்திகள் ஒன்றுகூடப் பொய்த்ததில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். அருள்மொழி ஆட்சியைக் கைப்பற்றப்போவதை நாம் முன்பே அறிந்தோம். உடையார்குடிச் சம்பவத்தை பூடகமாக அவர் தெரிவித்திருந்தது உங்களில் பலருக்கும் நினைவிருக்கலாம். செம்பியன் மாதேவியார் விவகாரம், இருக்கு வேளிர் நிலை.. ஏன் பாண்டியப் படையெடுப்பைப் பற்றிக்கூட நமக்கு அவரிடமிருந்து செய்தி வந்தது.

இவையெல்லாவற்றையும் நான் உங்கள் அனைவரோடும் பகிர்ந்துகொள்ள முடியவில்லையென்பது உண்மைதான். அவருடைய ஆணைகள் என் நாவைக் கட்டிப்போட்டு விட்டன. இன்ன செய்தியை இன்னாருடன் பகிர்ந்து கொள்ளலாம் என்பதை அவர்தான் தீர்மானிக்கிறார். அவருடைய உத்தரவின்பேரில்தான் இந்தக் காந்தளூர்ச் சாலை விவகாரம் உங்களின் முன் வைக்கப்படுகிறது..."

நாடுவாழிகளின் முகத்தில் அதிருப்தி தெரிந்தது. கண்ணுக்குத் தெரியாத எவனோ ஒருவனுக்கு வள்ளுவனார் கட்டுப்படுவதையும் தங்களைக் கட்டுப்படுத்த முயல்வதையும் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. ஓரிரு நொடிகள் கவிந்த அமைதியில் நாடாழ்வார் அதனை இனங்கண்டு கொண்டார்.

"உங்களின் மனோநிலை எனக்குப் புரிகிறது. ஒன்றை மட்டும் கூறிக்கொள்கிறேன். சேரமான் பெருமாளான இரவிவர்மன் திருவடியே அவரது கட்டளைகளை சிரமேற் கொண்டு நடக்கிறார் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். தகுந்த நேரத்தில் அவராகத் தன்னை

வெளிப்படுத்திக் கொள்வார். அதுவரை நீங்கள் பொறுமை காக்க வேண்டும். இந்த தேசத்தின் நலனில் அவரைவிட அக்கறை கொண்டவர்களைக் காண்பது கடினம். அவர் யாரென்பதைப் பற்றி சிந்திப்பதை விடுத்து அவர் அனுப்பியிருக்கும் செய்தியில் கவனத்தைச் செலுத்துங்கள்.

காந்தளூர் தாக்கப்படப் போகிறது நண்பர்களே! மிக விரைவில் நாம் ஒருவரும் எதிர்பாராத சமயத்தில் மலைநாட்டின் மிகமிகப் பழமையான கல்வி கேந்திரம் தாக்கப்படப் போகிறது…"

"திடீரென்று அருள்மொழிக்குச் சாலைமேல் என்ன பகை? அவர்களும் பகுதி பகுதியாகச் சாலைகளும் கடிகைகளும் நடத்திக் கொண்டுதானே இருக்கிறார்கள்?"

"ம்… சரியான கேள்வி மார்த்தாண்டரே! இத்தகைய புத்திசாலித்தனமான கேள்விகள்தான் இப்போது நமக்குத் தேவை. இதற்கு நான் பதில் சொல்வதைவிட நீங்களே பதில் சொல்லுங்கள். கேரளத்தின் மகத்தான கல்வி கேந்திரமான காந்தளூர்ச் சாலை ஏன் தாக்கப்பட வேண்டும்? சாலைமேல் அவனுக்கு அப்படியென்ன கோபம்? இத்தனை நாட்களாக அந்தக் கோபம் எங்கே போயிற்று? இந்தக் கேள்விகளுக்குப் பின்னால்தான் படுபயங்கரமான பல சதித்திட்டங்கள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. அவற்றை நாம் இனம் கண்டுகொண்டாக வேண்டும். சொல்லுங்கள் நண்பர்களே! சாலைக்கும் அருள்மொழிவர்மனுக்கும் என்ன பகையென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"

3. விபரீத விவாதங்கள்



இராமவளநாட்டின் நாடுவாழியும் வயதில் மூத்தவருமான இராமச் செல்லர் எழுந்து நின்றார்.

"ஏன் எழுந்திருக்கிறீர்கள்? அமர்ந்தபடி பேசலாமே?"

"ஒன்றுமில்லை. வயதாகின்றதல்லவா? நீண்ட நேரமாகத் தரையில் அமர்ந்திருந்ததினால் கால்கள் மரத்துப்போய் விட்டன. அதனால் சிறிது நேரம் நின்றுகொண்டே பேசுகிறேன். காந்தளூரோடு பல்வேறு விவகாரங்களிலும் சம்மந்தப்பட்டவன் என்கிற

முறையில் சோழர்களின் இந்த அநியாயமான திட்டம் எனக்கு மிகுந்த கவலையளிக்கிறது. நூறாண்டுகளுக்கு முற்பட்ட நிறுவனம் அது. அதனையா தாக்கப் போகிறார்கள்? சிவ சிவா! சோழர்களின் கோபத்திற்கான முறையான காரணத்தை என்னால் சரிவர அனுமானிக்க முடியவில்லை. என்றாலும் இதன் பின்னணியில் இருக்கும் சில முக்கிய தகவல்களை என்னால் பகிர்ந்துகொள்ள முடியும். வள்ளுவனார் அனுமதித்தால்…"

"அனுமதி என்றெல்லாம் பெரிய வார்த்தைகளாகப் பேசுகிறீர்களே? தாராளமாகச் சொல்லுங்கள்…"

"நண்பர்களே! அனந்தபுரத்தில் இன்று இயங்கி வரும் காந்தளூர்ச் சாலையானது பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஒரு நிறுவனம். இதனைப் பரசுராமனே தமது திருக்கரங்களால் ஸ்தாபிதம் செய்ததாக ஒரு ஐதீகம் உண்டு. காந்தளூர்ச் சாலை செயல்படத் துவங்கிப் பல வருடங்களுக்குப் பின்னர்தான் மூழிக்குளத்திலும் பழூரிலும் திருவல்லவாயிலும் கடைசியாகப் பார்த்திவ சேகரபுரத்திலும் சாலைகள் துவங்கப்பட்டன. இவை நான்குமே காந்தளூர் மரியாதையைத்தான்[23] தங்கள் முன் மாதிரியாகக் கொண்டு இயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது

பரம்பரை பரம்பரையாக இப்பகுதிகளை ஆண்டு வந்த ஆய்வேள் குலத்து மன்னர்களால் காந்தளூர்ச் சாலை ஆதரிக்கப்பட்டு வந்தது எத்தனையோ வீராதி வீரர்கள் அதில் பயின்று வந்திருக்கிறார்கள். தென்னகம் அதுவரை கண்டிராத பல புதுப்புது தனுர்வேத வித்தைகள் அங்கே கண்டறியப்பட்டுள்ளன. கேரளாதிநாதர்களாக விளங்கும் பெருமாள் வம்சத்தாருக்கு வழிவழியாக சேனாதிபதிகளாக இருந்து வருபவர்கள் காந்தளூரிலும் பார்த்திவசேகர புரத்திலும் பயிற்றுவிக்கப்பட்டவர்கள்தான்…"

"கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நமது நாடுவாழிப் படைகளை பயிற்றுவிக்க அவர்கள் நீண்ட காலமாக ஒப்புக்கொள்ளவில்லையென்பதை இந்தச் சபைக்கு

---

[23] முனமாதிரி என்பதை "மரியாதை" என்றும் சொல்லால் குறிப்பிட்டார்கள். காந்தளூர் மரியாதை என்கிற சொற்றொடர் ஆய்வேள் மன்னர் கோக்கருநந்தடக்கனின் பார்த்திவசேகரபுரச் செப்பேடுகளில் காணப்படுகிறது.

நினைவூட்டுகிறேன். பன்னெடுங்காலமாகச் சாலைகளின் வித்தைகள் சட்டப் பெருமக்களுக்கு மட்டுமே உரியனவாக இருந்தன. கடந்த பத்திருபது வருடங்களில்தான் நிலைமை ஓரளவிற்கு மாறியிருக்கிறது."

"ஒரு சில நேரங்களில் பழையவற்றைக் கிளறாதது நல்லது. அவர்கள் அவ்வாறு மறுத்ததற்கும் தகுந்த காரணங்கள் இருந்தன.

சாலாபோக நிலங்கள் சம்மந்தமாக அவர்களுக்கும் நமக்கும் நீண்டநாள் பிரச்சனை இருந்து வருகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். பேருண்ணாவின் அட்டிக்கோல்[24] பிரச்சனையிலும் நாம் அவர்களுக்கு எதிராகத்தான் நின்றோம். அவற்றையெல்லாம் மறந்துவிட்டு நமது வீரர்களைப் பயிற்றுவிக்க அவர்கள் ஒப்புக்கொண்டதே ஒரு நல்ல முன்னேற்றம்தான். உங்கள் மனதைத் தொட்டுச் சொல்லுங்கள். சட்டர்கள் கற்றுக் கொடுத்தபின் நமது வீரர்களின் வாள்வீச்சும் வில்வித்தையும் பன்மடங்கு முன்னேறியிருக்கின்றனவா இல்லையா?"

"இராமவாழி சொல்வது உண்மைதான். இன்றைய நிலையில் அத்தகைய பயிற்சி மட்டும் இல்லையென்றால் நமது ஆட்கள் உண்டு உறங்கி உடம்பு கொழுத்துக் கொண்டிருப்பார்கள்..."

வள்ளுவனார் சட்டென்று குறுக்கிட்டார். "சாலைக்கும் நமக்கும் இருக்கும் உறவு பற்றிய விவாதங்களை அப்புறம் வைத்துக் கொள்ளலாம். இராமவாழியாரே! சோழனின் தாக்குதல் திட்டத்திற்குப் பின்னாலிருக்கும் தகவல்களை..."

"சொல்கிறேன்.. சொல்கிறேன். அதற்கு முன்னால் சில விஷயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இச்சாலைகளை ஆதரித்த ஆய்வேள் மன்னர்கள் அவற்றை மலைநாட்டு மக்களுக்கு மட்டும் உரியனவாக நினைக்கவில்லை. மாறாக, தென்னகத்தின் இராஜ்ஜியங்கள் அனைத்திற்கும் தேவையான மாராயர்களையும் பிரம்மாதிராஜர்களையும் உருவாக்குவதுதான் அவற்றின் பணி என்று அவர்கள் நினைத்தார்கள். சாலை மாணாக்கர்கள்

[24] வருடாந்திர வரி.

திரைராஜ்ஜிய விவகாரங்களையும்[25] கையாளும் தேர்ச்சி பெற்றிருந்ததால் மலைநாட்டில் மட்டுமல்லாது சோழ நாட்டிலும் பாண்டி நாட்டிலும்கூட அவர்களின் புகழ் பரவியிருந்தது.

நமது இளவரசியார் பராந்தகச் சோழரைக் கைப்பிடித்த காலத்தில் தில்லைக்கு மேற்கே வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம்[26] என்றொரு ஊர்ப்பகுதி உருவாக்கப்பட்டது. முப்போகம் கொழிக்கும் வளமான பூமியாதலால் பல்வேறு மலைநாட்டுக் குடும்பங்களும் அப்போது அங்கு சென்று குடியேறின. தில்லை மற்றும் பழுவூர் என்று தமிழகத்தின் இரண்டு இடங்களில் மட்டும் வேரூன்றியிருந்த மலை நாட்டவரை மூன்றாவது கேந்திரத்திலும் வேரூன்றச் செய்தது நமது இளவரசியாரின் இணையில்லாத இராஜதந்திரம்

அது மட்டுமல்ல. கடலையொத்த பிரம்மாண்டமான வீரநாராயண ஏரியை இளவரசர் இராஜாதித்தர் தோண்டுவித்தபோது அதில் தோள்கொடுத்து நின்றது நமது நாட்டின் வீரர்கள்தான். இராஜாதித்தரின் படையில் மலையாளச் சேனை என்று ஒரு தனி சேனையே இருந்தது. அதன் சேனானி நாயகமாக இருந்தவர், இதோ! இங்கு அமர்ந்திருக்கும் கீழ்மலை நாடுவாழியின் முப்பாட்டனார் மழுவக்கோனார் அடங்கன் சாத்தனார். ஒட்டுமொத்தப் படைகளுக்கும் சேனாதிபதியாக இருந்தவரும் நமது வள்ளுவ நாடாழ்வாரின் பெரிய பாட்டனார்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்..."

இந்தத் தகவல்களெல்லாம் அங்கிருந்த பலருக்கும் முன்பே தெரிந்திருந்தன என்பது அவர்களுடைய முக பாவங்களிலிருந்து வெளிப்பட்டது. என்றாலும் பெரியவரான இராமவாழியாரை மதித்து அவரது பேச்சை அவர்கள் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"பழுவூர்க் குடும்பத்தின் செல்வாக்கு பராந்தகர் காலத்திற்குப் பின் அதிகரித்ததே தவிரக் குறையவில்லை பழுவூர் அரசர்களும் நன்றி மறவாமல் ஒவ்வொரு போரிலும்

[25] [illegible]

[26] [illegible] காட்டுமன்னார் கோயில் என்ற பெயரில் [illegible]

தமது வீரசைனியங்களுடன் கலந்துகொண்டார்கள். குறிப்பாக இரண்டாம் பராந்தகரான சுந்தரச் சோழர் காலத்தில் பழுவூர்க் குடும்பம் மிகுந்த செல்வாக்குடன் விளங்கி வந்தது. உத்தமச் சோழர் காலத்திலும் மரியாதைக்குக் குறைவில்லை..."

பழுவூரைப் பற்றிப் பெரியவர் இராமவாழியார் மெய் மறந்து பேசிக்கொண்டிருக்கும்போது வள்ளுவனாரின் கண்களிலில் ஒரு ஒளி மின்னி மறைந்தது.

"...என்றாலும் உத்தமச் சோழரின் காலத்தில் பழுவூரைவிட அதிகப் புகழ்பெற்ற அரசியல் கேந்திரமாக வீரநாராயணபுரம் மாறிவிட்டது. அதற்கு முக்கியக் காரணம் ஆச்சாரியார் இரவிநீலி பட்டதிரியின் குடும்பம்தான்.

நமது இளவரசியார் வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்தை உருவாக்கியபோது அனந்தபுரத்திலிருந்து கிளம்பிச் சென்ற பல குடும்பங்களுள் நீலியார் குடும்பமும் ஒன்று. காந்தளூர்ச் சாலையைத் துவக்கிய ஆச்சாரியர்களுள் ஒருவராக அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த நம்பூதிரியொருவரைக் குறிப்பிடுவது மரபு.

பாண்டியர் சபையிலும் சோழர் சபையிலும் நீலி வம்சத்துப் பிள்ளைகள் அமைச்சர்களாகவும் பிரம்மாதிராஜர்களாகவும் இருந்திருக்கிறார்கள். காந்தளூர் மரியாதையை முன்மாதிரியாகக் கொண்டு தில்லைக்கருகில் கீழ்ச்சாலை என்கிற பெயரில் ஒரு சாலையும் துவங்கப் பட்டது. சிக்கல் எங்கு ஆரம்பித்த தென்றால்..."

தற்செயலாக வள்ளுவனாரின் முகத்தை நோக்கிய இராமவாழியாரின் முகம் கறுத்தது. அந்த முகத்தின் பல்வேறு உணர்வுகளும் அவருக்கு அத்துப்படி. தாம் தற்சமயம் பிரஸ்தாபித்துக்கொண்டிருக்கும் விஷயம் பெரியவருக்கு அத்தனை பிடித்தமானதாக இல்லை என்பது இராமவாழிக்குப் புரிந்தது.

குறிப்பாக நீலி குடும்பத்தார் பற்றிய தகவல்கள். அனாவசியமாக இவர்களிடம் வீரநாராயணபுர விவகாரங்களைப் பகிரங்கமாக்க வேண்டாம். அதனால் பல்வேறு தொல்லைகள் வந்து சேரும் என்கிற எச்சரிக்கையை வள்ளுவனாரின் முகபாவம் அவருக்கு எடுத்துக் கூறியது. பேச்சை மாற்றுவதற்கு சிறிது அவகாசம்

தேவை என்பதால் தொண்டையைச் செருமிக் கொண்டு "தண்ணீர் உள்ளதா?" என்று கேட்டார் இராமவாழியார்.

அதற்குள் கூட்டத்தில் சலசலப்புத் தோன்றிவிட்டது.

"இந்தச் சிக்கல்களுக்கெல்லாம் காரணம் நீலியார் குடும்பம்தான்! வீரநாராயணபுரத்தில் என்ன இராஜபோக வாழ்க்கை வாழ்ந்தார்கள்?"

"அதுதான் அவர்களைத் தண்டித்தாயிற்றே? ஒட்டு மொத்தக் குடும்பத்தாரிடமிருந்து பொன் விளையும் பூமியைப் பிடுங்கிக் கொண்டு நாடு கடத்தியாயிற்றே? அதற்குப்பிறகு என்ன படையெடுப்பு வேலை வேண்டிக் கிடக்கிறது?"

"அடடா, வீராணத்து ஏரி நீர் பாயும் அந்த நிலங்களைப் பார்க்க வேண்டுமே! நீலியாரின் வீட்டில் நித்தம் நித்தம் அரிசிச் சோறுதான்..."

"ஒரு வேளை நீலிக் குடும்பத்தார் காந்தளூர்ச் சாலையில் இரகசியமாக வந்து அடைக்கலம் புகுந்துள்ளார்களா என்ன? அவர்கள் கொல்லநாடு சென்று விட்டதாகவல்லவா கேள்விப்பட்டேன்?"

"அவர்கள் எங்கிருந்தால் என்ன? அவர்களின் வேலையைத் தீர்க்க வேண்டுமென்றால் சோழநாட்டிலேயே தீர்த்திருக்கலாமே? இத்தனை தூரம் விட்டுப் பிடிப்பானேன்...?" என்றெல்லாம் பேச்சுக்கள் கூட்டத்தாரிடையே எழுந்தன.

இத்தகைய பேச்சுக்கள் வள்ளுவ நாடுவாழிக்கு அறவே பிடிக்கவில்லையென்பது அவரது முகத்தில் தெரிந்தது. தேவையில்லாமல் தேனிக்கூட்டைக் கலைத்ததுபோன்ற வேலையை இராமவாழியார் செய்துவிட்டார்!

"நண்பர்களே! அமைதி! நமக்கு அதிக அவகாசமில்லை... பழைய விவகாரங்களைப் பேசிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு சாலைத் தாக்குதலைச் சமாளிக்க நாம் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி விபரமாகப் பேசியாக வேண்டும்..."

அதற்கு ஒருவரும் பதில் சொல்லவில்லை. ஒருவரையொருவர் மௌனமாகப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்

புரைக்கிழ நாடாழ்வாரான அடிகள் புரைக்கிழார் அடுத்ததாகப் பேச எழுந்தார். அவருக்கும் வள்ளுவ நாடுவாழிக்கும் என்றைக்குமே ஒத்துக் கொண்டதில்லை. ஒருவர் கிழக்கு என்றால் மற்றவர் மேற்கு என்பார். அவர் பேச எழுந்ததைப் பார்த்ததுமே வள்ளுவனாரின் முகம் கருத்தது.

"அதெப்படி? சோழன் எதற்காகச் சாலையைத் தாக்குகிறான் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ளாமல் நமது வீரர்களை களத்தில் நிறுத்தச் சொல்கிறீர்களா? நாடுவாழிகளே! இந்த விவகாரத்தின் அடி முடி இரண்டையும் புரிந்து கொள்ளாமல் இதனைப் பற்றி மேற்கொண்டு பேசுவது சிரமமானது..."

வள்ளுவனார் மிகுந்த சிரமத்தின் பேரில் தன்னுடைய மனதில் பொங்கி வந்த கோபத்தை அடக்கிக்கொண்டார். அவருடைய வன்மமெல்லாம் பெரியவர் இராமவாழியின் மீது திரும்பியது. அவரை முதலில் பேசவிட்டதே தவறு என்கிற எண்ணம் தோன்றியது.

"இதைத் தெரிந்துகொள்வது கடினமா என்ன? நண்பர்களே! காந்தளூரைக் தாக்கித் தரைமட்டமாக்கி விட்டால் அங்கிருக்கும் சட்டப் பெருமக்கள் வேறு பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து விடுவார்கள். அவர்களது மனோநிலையும் பெரிதும் பாதிக்கப்படும். அதன் பிறகு கேரளத்தின் வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதை அவர்கள் முழுவதுமாக நிறுத்திவிடுவார்கள் என்பது திண்ணம்.

படிப்படியாக மூழிக்குளத்துச் சாலை, பரலூர்ச் சாலை என்று அழித்துவிட்டு இறுதியில் பார்த்திவசேகரபுரத்தையும் தரைமட்டமாக்கிவிட்டால் இந்த மலைநாட்டில் அதற்குப் பிறகு எந்தப் போர்ப்பயிற்சி கேந்திரங்களும் தோன்றாது. வீரர்களைப் பயிற்றுவிக்க எந்தச் சட்டனும் முன்வர மாட்டான். பெருமாளின் சேனானி நாயகங்களாக விளங்கும் பலரின் தைரியமும்கூட பாதிக்கப்படும். அதன் பிறகு அருள்மொழித்தேவனும் அவனது வம்சத்தவர்களும் கேரள சிங்காதனத்தில் சிரமமில்லாமல் அமர்ந்து விடலாம். இதுதான் அவன் திட்டம்!"

"சோழர்கள் தம் படைகளுடன் நமது பூமியில் கால் பதிக்கும் போது நமது வீரர்களின் கரங்கள் பூப்பறித்துக் கொண்டிருக்குமா என்ன?"

"ஆஹா! அப்படிச் சொல்லுங்கள் கோவர்தன மார்த்தாண்டரே!"

"வலுச்சண்டைக்கு வந்தால் சோழன் குலத்தை வேருடன் அழிப்போம்! நமது நாட்டின் பழம் பெரும் சாலையைக் காப்போம்!"

"நன்றாகச் சொன்னீர்கள் கீழ்மலையாரே. நண்பர்களே! நம் நாட்டை நெருங்கிக்கொண்டிருக்கும் பகைவனை அழிக்கும் நேரம் நெருங்கிவிட்டது. தினவெடுத்த தோள்களுக்கும் துருப்பிடித்த வாள்களுக்கும் வேலை வந்து விட்டது..."

"வள்ளுவ நாடுவாழியார் சற்று பொறுக்க வேண்டும். முதலில் இது கேரள தேசத்தை - அதாவது மலைநாட்டை - கைப்பற்ற நடைபெறப்போகும் தாக்குதலா? அல்லது தனிப்பட்ட முறையில் சாலையை மட்டும் குறிவைத்து நடைபெறப்போகும் சண்டையா? என்பதில் எனக்குத் தெளிவேற்படவில்லை. கேரளத்தை ஒட்டு மொத்தமாகக் கைப்பற்றுவது அவர்களின் திட்டமெனில் நாம் அனைவரும் கூடி அவர்களை அழித்தொழித்தாகவேண்டும். அதில் சந்தேகமில்லை.

ஆனால் சாலை மட்டுமே தாக்கப்படப்போகிறதெனில் அதன் முழுப்பின்னணியையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் மலைநாட்டின் புகழ்பெற்றதொரு கல்வி கேந்திரம் தாக்குதலுக்குள்ளாகும்போது அதனைக் காக்க வேண்டிய பொறுப்பு நம்மினும் ஒன்றுகுறை ஆயிரத்தவர் படைகளுக்குத்தான் அதிகம் என்பது என்னுடைய எண்ணம். நாம் நமது ஒட்டுமொத்தப் படைகளையும் இங்கு வந்து குவிக்குமுன் நிலைமையைச் சீராக அலசி ஆராய வேண்டியிருக்கிறது. சொல்லப் போனால் தனிப் பட்ட முறையில் நாம் - அதாவது நாடு வாழிகள் மட்டும் கூடிப் பேசி முடிவெடுக்கக்கூடிய விஷயமே அல்ல இது!"

புரைக்கிழார் பேசிக்கொண்டே போக, வள்ளுவ நாடு வாழியின் முகம் அஷ்ட கோணல்களையும் அடைந்தது. மற்ற நாடுவாழிகள் மட்டும் அங்கில்லாமல் இருந்திருந்தால் அந்தக் கணமே புரைக்கிழாரின் கழுத்தை நெறித்துப் போட்டிருப்பார் அவர். நிலைமை கட்டுக்கு மீறிச் சென்று கொண்டிருந்தது.

"...ஆக நான் சொல்ல வருவது என்னவென்றால்..."

"சொல்லுங்கள்..." என்று சொல்ல வாயெடுத்த வள்ளுவனாரின் முகம் சட்டென்று மாறிற்று. புரைக்கிழார் மேற்கொண்டு பேசப்போக, வள்ளுவ நாடாழ்வார் தன்னுடைய உதட்டில் வேகவேகமாகக் கையை வைத்து "உஸ்..." என்றார். பின்னர் மெதுவான குரலில் "எவரும் சப்தம் செய்யாதீர்கள்! அதோ அந்த மாளிகையின் மகாமண்டபத்திற்குப் பின்னால் ஏதோ நிழல் அசைவதைப் போலில்லை?"

"என்ன சொல்கிறீர்கள்? இந்தப் பாழடைந்த கோட்டைக்கு இந்த விடியல் நேரத்தில் எவராவது..." - அவர் வாக்கியத்தை முடிக்கவேயில்லை. ஏனெனில் வள்ளுவர் கைகாட்டிய திசையில் ஏதோ ஒரு கல் புரளும் சப்தம் அனைவருக்குமே தெளிவாகக் கேட்டது.

"நண்பர்களே! இதுதான்... இதுதான் நமது தானைத் தலைவர் எழுதியிருக்கும் இரண்டாவது பயங்கரச் செய்தி! நாம் ஒற்றறியப்படுகிறோம் நாடுவாழிகளே... இரவு பகலாக - ஒவ்வொரு நாளும் - நமது ஒவ்வொரு அசைவுகளும் மிகத் துல்லியமாக வேவு பார்க்கப்படுகின்றன. ஆனால் இத்தனை இரகசியமாகக் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு அந்த ஒற்றன் வருவானென்பதை நானே எதிர்பார்க்கவில்லை...

நண்பர்களே! உங்கள் குறுவாள்களையும் வேல்களையும் உருவிக் கொள்ளுங்கள்! வாயிற் காவலர்களுக்கு அதிகம் சப்தம் செய்யாமல் எச்சரிக்கை செய்யுங்கள். அவனை இன்றிரவிற்குள் நாம் பிடித்தேயாக வேண்டும்..."

நாடுவாழிகளின் முகத்தில் சட்டென்று ஒரு பரபரப்பு பரவியது. அனைவரும் தத்தம் ஆயுதங்களை உருவிக் கொண்டார்கள். அதிலொருவர் தன்னுடைய இடையில் கட்டியிருந்த நீண்ட வாளை உருவப்போக, மற்றவர் "வேண்டாம். சப்தம் அதிகமாக வரும்!" என்று அவருடைய கையை மறித்தார்.

அனைவரும் மகாமண்டபத்தின் பின்புறத்தை மெல்ல நெருங்கினார்கள். வள்ளுவனார் கை நீட்டி சைகை செய்ய, அதில் ஒரு குழு வடக்கிலும் மற்றது தெற்கிலும் பிரிந்து மண்டபத்தை அணுகியது. அவர்கள் நெருங்க நெருங்க "ஹூம்...ம்..." என்ற மெல்லிய முனகல்கள் கேட்கத் துவங்கின.

வள்ளுவ நாடாழ்வாரின் முகம் லேசாக மாறிற்று. மகா மண்டபத்தை வேகவேகமாக நெருங்கலானார் அவர். "ஏன் நீங்கள் மட்டும் செல்கிறீர்கள்?" என்று எவரோ கேட்டு முடிப்பதற்குள் நாடுவாழியார் மண்டபத்தின் பின்கட்டை அடைந்துவிட்டார் அவரைப் பின்பற்றி அனைவரும் அவசர அவசரமாக அந்தப் பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள்.

"...ஏதோ ஒரு உருவம் போலில்லை? அடே, யாரது மரியாதையாக வெளியே வா!"

"ம்...ம்..."

"அடேய், வாயைத் திறந்து பதில் சொல்ல மாட்டாயா... கொஞ்சம் இருங்கள்..." - அவர் சட்டென்று அந்த இருட்டுக்குள் நுழைந்து விட்டார்.

"அட, யாரப்பா நீ? உன்னை இப்படிக் கட்டிப் போட்டது யார்? ஓ! வாயில் துணி அடைக்கப்பட்டுள்ளதா... இதோ! அவிழத்து விடுகிறேன்..."

"பிரபுவே! என்னை மன்னிக்க வேண்டும்!" என்று அலறினான் அவன். "ஐயா! நான் கோட்டையின் தெற்கு வாயிற் காப்போன். சற்றும் எதிர்பாராத நேரத்தில்... அவன் வந்து..."

"உஸ்... சிறிது நேரம் சப்தம் செய்யாதே! நண்பர்களே! தூரத்தில் குதிரை பிளிறும் சப்தம் கேட்கவில்லை...?"

கேட்டது. அதனைத் தொடர்ந்து புரவியின் குளம்படி சப்தங்களும் கோட்டைக்குப் பின்னால் அமைந்திருந்த தெற்கு வாயில் பகுதியிலிருந்து தெளிவாகக் கேட்டன.

"தப்பிவிட்டான் நண்பர்களே! அந்த ஒற்றன் தப்பி விட்டான்...!" புருவங்கள் நெரிபடப் பற்களைக் கரகரவென்று கடித்தார் வள்ளுவனார்.

4. பௌத்தப் பெருநகர்



இளங்காலை நேரத்தில் வெண்புரவிகள் இரண்டு வல்கித நடை போட்டபடி நீண்ட இராஜபாட்டையில் இணையாக நடை பயின்று கொண்டிருந்தன. இரண்டிலும் அரசாங்க அலுவலர்களைப் போலத் தெரிந்த பெரிய மனிதர்கள் இருவர் ஆரோகணித்திருந்தார்கள். அவர்களுடைய ஆடை அணிமணிகள் எளிமையாகத் தெரிந்தாலும் தோற்றத்தில் ஒரு மறைக்க முடியாத வீரப் பொலிவு திகழ்ந்தது.

வலப்புறப் புரவியில் அமர்ந்திருந்தவர் இருவரில் மிக மூத்தவராகக் காணப்பட்டார். அவருடைய தலையை ஒரு பெரிய பட்டுத் தலைப்பாகை அணி செய்தது. அவரது அடர்ந்த புருவங்களின் கீழ் அமைந்திருந்த மிகச் சிறிய ஆனால் மிகக் கூர்மையான கண்கள் அவரைச் சுற்றி விரிந்த காட்சிகளை கவனமாக உள்வாங்கிக்கொண்டன. தீர்க்கமான நாசிகள் சீராக விடைத்து அடங்கின. அவரது முகத்தை அலங்கரித்த பெரிய மீசை காதுகள் வரை நீண்டிருந்தாலும் அதனால் அவருடைய தோற்றப்பொலிவு சிறிதும் பாதிக்கப் படாதது ஆச்சரியம்தான். கருமை பொங்கிய மீசையில் ஆங்காங்கே வெண்ணிற நரைமயிர்கள் பூத்துக் குலுங்கின.

அவர் தனக்கு முன்னால் மாட்டுவண்டியில் சென்று கொண்டிருந்த ஒரு சிறுவனின் சேட்டைகளை இரசித்தபடி பயணப்பட்டுக் கொண்டிருந்தார். மிகவும் சுறுசுறுப்பான பையனாகத் தெரிந்தான் அவன். ஒரு மாட்டு வண்டியில் ஓரிடத்தில் அமர்ந்து பயணிப்பதென்பது அவனுக்கு இயலாத காரியமாக இருந்தது. வண்டியில் அமர்ந்திருந்த அனைவரின் தொடைகளையும் மிதித்தபடி அவன் முன்னும் பின்னும் அலைந்துகொண்டிருந்தான். ஒரு கட்டத்தில் இம்சை தாங்க முடியாமல் அவனுடைய தகப்பனார் 'உட்காரப் போகிறாயா இல்லையா?" என்று ஒரு அதட்டல் போட்டார். அவ்வளவுதான்! நிலைமை முன்னிலும் மோசமாகிவிட்டது. "கோ!" வென்று பெருங்குரலெடுத்து அழத்துவங்கிவிட்டான் அந்தச் சிறுவன். அமைதியான காலை வேளையை அந்த வரட்டு அழுகைச் சத்தப்

நாராசமாகக் கலைத்தது. அவர் மெல்ல சிரித்துக்கொண்டே புரவியின் பிடறியைத் தடவிவிட்டார்.

"என்ன ஐயா, சிரிக்கிறீர்கள்?"

பக்கத்திலிருந்தவர் மெல்ல அவரை வினவினார். இப்போதுதான் இடப்புறத்தில் வந்து கொண்டிருப்பவரைக் கவனிக்கிறோம். இவருக்கும் தலையில் தலைப்பாகை, மீசை நல்லவேளை! இவரது மீசை அத்தனை பயமுறுத்தவில்லை. பார்ப்பதற்கு இவரும் வீரராகத்தான் தெரிகிறார். ஆனால் கூடவே சற்று அடக்கமும் கட்டுப்பாடும் தெரிகின்றன. பிராயத்தில் இளையவராகவும் காணப்படுகிறார். ஒரு சௌகரியத்திற்காக இவரை 'இளையவர்' என்று இப்போதைக்கு அழைப்போம்.

"ஒன்றுமில்லை... முன்னால் நடந்துகொண்டிருக்கும் கூத்தை நீங்கள் கவனிக்கவில்லையா?"

"இல்லை ஐயா! ஏதோ நினைப்பில்..."

"ஆஹா! அதுதான்... அதுதான் வாழ்வின் மிகப்பெரிய விசித்திரம். பிரச்சனை என்றுகூடச் சொல்லலாம். மணியனாரே! வாழ்க்கை நம் கண்களின் முன்னர் இந்தக் கணத்தில் இந்த இடத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அது இறந்த காலத்திலோ எதிர்காலத்திலோ இல்லை. நிகழ் காலத்தில் இருக்கிறது. அதனால்தான் மனத்தை எப்போதும் கூர்மையாக கவனம் பிசகாமல் வைத்துக்கொள்ள வேண்டுமென்று பெரியவர்கள் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்."

இளையவர் பதில் பேசவில்லை. மெல்லத் தலையைக் குனிந்து கொண்டார்

"மனிதன் எதை எதையோ தேடி வாழ்க்கை முழுவதும் அலைந்து கொண்டிருக்கிறான். ஆனால் வாழ்வானது அவனுடன் எந்நேரமும் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டேயிருக்கிறது. அது எங்கோ தொலைவில் இருக்கிறதென்று நினைத்துக்கொண்டு அன்றாடம் அவன் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறான். அந்தோ! அந்தப் பயணம்தான் வாழ்க்கை என்பதை அவன் அறிவதேயில்லை இதோ! இந்த இராஜபாட்டைதான் வாழ்க்கை இங்கே நடந்தும், அமர்ந்தும், கிடந்தும் சென்று கொண்டிருக்கும் சக மனிதர்களும் மிருகங்களும்தான் இந்தக் கணத்தில் நமது வாழ்வின் அங்கங்கள்

இதோ! நம்மைச் சுமந்து கொண்டு செல்கிறதே.. இந்தப் புரவி மட்டும்தான் இந்தக் கணத்தில் நம்முடைய பந்தம். இந்தக் கணத்தில் நமது மூச்சுக் குழல்களை நிரப்பிக் கொண்டிருக்கிறதே காற்று.. இதுதான் இறைவனின் இந்தக் கணத்திற்குரிய அருள். வாப்பிரசாதம். அற்புதமான இந்தக் காலைக்காற்றை அனுபவியுங்கள். அதனை அனுபவித்தபடி சுறுசுறுப்புடன் நாகையை நெருங்கிக் கொண்டிருக்கும் பல்வேறு வகையான இந்த மனிதர்களைக் கவனியுங்கள்.

அதோ! தனது வணிகச் சரக்குகளைக் கப்பலில் ஏற்றிவிடும் முனைப்புடன் சென்று கொண்டிருக்கும் நானா தேசி வணிகர்களைக் கவனியுங்கள். அவர்களுக்கு அடுத்த படியாக வாழ்வின் அநித்தியங்களிலிருந்து ஒதுங்கி புத்தர் பெருமானின் சரணகமலாலயங்களில் மனதைச் செலுத்தி வாழ்வின் பற்றுதல்களை நீக்கிய புத்த பிக்ஷுக்களைக் கவனியுங்கள் அந்தப் பிக்ஷுக்குகளின் கூட்டத்தில் சப்பை மூக்குடனும் சிறிய கண்களுடனும் காணப்படும் சீனத் துறவிகளைக் கவனியுங்கள். பௌத்தமானது எத்தனை தூர தூர தேசங்களிலெல்லாம் பரவி நிற்கிறது என்றெண்ணி வியப்பெய்துங்கள். அவர்களுக்குப் பின்னால் நாகைக் காரோணம் திருக்கோயிலைக் குறிவைத்து நடந்து கொண்டிருக்கும் பாசுபத மஹாவிரதிகளின் கூட்டத்தைக் கவனியுங்கள். வாழ்க்கைதான் எத்தனை பெரியது! எத்தனை வகைகளை உள்ளடக்கியது! மணியரே.. நம் கண்ணெதிரே விரியும் அற்புதமான இந்த வாழ்க்கையை விட்டுவிட்டா எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

ஓரிரு நிமிடங்கள் மௌனமாகக் கழிந்தன. மணியனார் என்றழைக்கப்பட்ட அந்த இளையவர் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவருடைய கண்கள் புரவியின் கடிவாளத்திற்குக் கீழே அவர்கள் கடந்து கொண்டிருந்த நிலத்தை வெற்றுப்பார்வை பார்த்துக் கொண்டிருந்தன.

"என்ன யோசனை?"

"ஒன்றுமில்லை. தாங்கள் சொன்னதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். மனமானது சதா சர்வகாலமும் குரங்கைப்போல் பல்வேறு இடங்களுக்கும் தாவிக் கொண்டிருக்கிறது. சிறிது நேரம் தஞ்சையிலிருக்கும் என் குடும்பத்தாரிடம் இருந்தது. பின் என் பாட்டனார் இருக்கும் திருமறைக்காட்டிற்குச் சம்மந்தமில்லாமல்

சென்றது. அப்புறம் பழையாறை.. காஞ்சி.. ஏதேதோ நினைவுகள்.."

"ஆஹா! இந்த மனம் இருக்கிறதே.. அதனைக் கட்டுப் படுத்துவது மிக மிகக் கடினமான செயல் அதனால்தான் எல்லா மதங்களிலும் விதவிதமான தியானப் பயிற்சிகளை சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக பௌத்த மதத்தில் இதற்கென்று..."

"ஏதேது.. பல்லவராயரே! விட்டால் அரசாங்கம் குடும்பம் எல்லாவற்றையும் துறந்து புத்த சங்கத்தில் சேர்ந்து சந்நியாசியாகி விடுவீர்கள் போலிருக்கிறதே?"

'பல்லவராயர்' எனும் பெயரைக் கேட்டதும் சிறிது அதிர்ந்துதான் போகிறோம். மதுராந்தகரான உத்தமச் சோழர் காலந்தொட்டுச் சோழசாம்ராஜ்ஜியத்தின் மேன்மைக்காகப் பாடுபட்டவரும் இளவரசர் அருள்மொழி வர்மர் சோழ சிங்காதனமேறிய சில நாட்களிலேயே சைனியத்தின் மகாசேனாபதியாய்ப் பொறுப்பேற்றுக் கொண்டவரும் சோழராஜ்ஜியத்தை நிலை நிறுத்தும் மூத்த தூண்களில் ஒன்றாகக் கருதப்படுபவருமான அம்பலவாணன் பழுவூர் நக்கனான இராஜராஜப் பல்லவராயரா இவர்?

"அதுதான் முடிகிற காரியமாக இல்லை. துறவு என்பது அத்தனை எளிதான செயல் அல்ல மணியனாரே. அதிலும் என்னைப் போன்று கடுமையான அரசாங்கச் சுழல்களிலும் குடும்ப சாகரத்திலும் சிக்கித் தவித்தபடி வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழித்து விட்ட பலருக்கும் துறவு என்பது எட்டாக் கனிதான். ஆனால் நல்லவேளையாக புத்தர் பெருமான் அதற்கும் ஒரு வழி சொல்லியிருக்கிறார்..."

"அடடா.. எதற்கெடுத்தாலும் புத்தர் பெருமான்தானா?"

"என்ன செய்வது? நாம் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்நகரின் பெருமை அப்படி! இந்த நாகநகரமானது தொன்று தொட்டே பௌத்தர்களின் முக்கியப் பகுதிகளுள் ஒன்றாக இருப்பதை அறிவீர்களல்லவா?"

"புத்தரும் பௌத்தர்களும் அவர்தம் உபதேசங்களும் [illegible] பக்கம் இருக்கட்டும். நாகையில் குறிப்பாக எந்த [illegible]திற்குச் சென்று கொண்டிருக்கிறோமென்பதை [illegible]தாவது நான் தெரிந்து கொள்ளலாமா?"

“துரதிருஷ்டவசமாக அதிலும் கருணாமூர்த்தியான புத்தர் பெருமான் சம்மந்தப்பட்டிருக்கிறார்!”

“என்ன சொல்கிறீர்கள்?”

“நாம் ஒரு பண்டைய புத்த விஹாரைக்குச் சென்று கொண்டிருக்கிறோம் நண்பரே! அசோகச் சக்ரவர்த்தியின் காலந்தொட்டுப் பெருமையுடன் விளங்கும் பரததிட்ட விஹாரைக்குச் சென்று கொண்டிருக்கிறோம்.”

“என்ன? அந்தச் சீன விஹாரைக்கும் கடற் கரைக்குமிடையில் பாழடைந்து கிடக்குமே. அந்தப் புத்த விஹாரையையா குறிப்பிடுகிறீர்கள்?”

“பாழடைந்து கிடந்த விஹாரைக்கு மறுவாழ்வு வந்தாயிற்று. பழுது பார்க்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விஹாரையின் சேதியம் முழு வடிவம் பெற்றுவிட்டது. என்றாலும் பேரரசருக்கு இன்னும் முழுத்திருப்தியேற்படவில்லை. அந்த விஹாரையின் ஆச்சாரியரும் மிகப் பெரிய ஞானியுமான மஹாகாசியப தேரருக்காகவாவது[27] ஒரு புதிய விஹாரை கட்டிக்கொடுக்க வேண்டும் என்று என்னிடம் பல முறை சொல்லிவிட்டார்...”

“ஏதேது, உங்களுக்கு முற்றியிருக்கும் பௌத்தப் பைத்தியத்தை சக்ரவர்த்தியவர்களுக்கும் பரப்பி விட்டு விட்டீர்கள் போலிருக்கிறதே! பல்லவராயரே- தயவு செய்து வேறு எதைப் பற்றியாவது பேசுவோமா?”

“ஆஹா! தாராளமாகப் பேசலாம். பௌத்தத்தைப் பற்றிப் பேசினால்தான் உங்களுக்குப் பிடிக்கவில்லை. காயா ரோஹணத்தில் எழுந்தருளியிருக்கும் மகாதேவரைப் பற்றி வேண்டுமானால் கூறுகிறேன், கேளுங்கள். காயா ரோஹணம் என்பதை ‘ஆரோகணிக்கும் காயம்’ என்று புரிந்து கொள்ள வேண்டும். காயம் என்றால் உடம்பு. ஆரோகணித்தல் என்றால் மேலேறுதல். இந்தக் காயத்தோடு அதாவது பூத உடலோடு - கைலாசபதியை அடையும் பாசுபத மார்க்கத்தைத்தான் இங்கு குடி கொண்டிருக்கும்

---

[27] புத்தபகவானின் நேரடிச் சீடர்களுள் ஒருவராக மஹாகாசியபர் அறியப்படுகிறார். ஜென் என்கிற பெயரில் பின்னாளில் சீனத்திலும் ஜப்பானிலும் புகழ்பெறப்போகும் பௌத்தப் பிரிவின் முக்கிய குருவானவர் இவரே. நமது கதையில் குறிப்பிடப்படும் ஆச்சாரியார் அவருடைய பெயரைத் தரித்திருந்ததாகக் கொள்க.

இறைவன் தத்துவார்த்தமாக உபதேசிக்கிறார். மூத்த திருப்பதிகம் பாடிய காரைக்காலம்மை தன்னுடலுடனே கைலாயமடைந்தார். அவ்வளவு ஏன்? இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நம்பியாரூரரான சுந்தரரும் சேரமான் பெருமாளும் கூடத் தத்தம் காயங்களுடன் கயிலயங்கிரியை அடைந்தனர். கழற்றறிவாரான சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானஉலாவில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்...”

“சிவ சிவா! ஆனாலும் உங்களுக்கு பக்தி முற்றி விட்டதென்று நினைக்கிறேன். பேசாமல் அரசாங்கப் பணியிலிருந்து விடுப்பு எடுத்துக்கொண்டு...”

“நேராகக் குவளாலபுரத்திற்குச் சென்று அன்னையின் பாதங்களைச் சரணடைந்துவிடுவேன். அருள்மொழி விட்டால்தானே!”

“வேடிக்கைப் பேச்செல்லாம் கிடக்கட்டும். யாரைப் பார்ப்பதற்காக இத்தனை தூரம் வந்து கொண்டிருக்கிறோம்? என்னதான் நடந்து கொண்டிருக்கிறது நாட்டில்?”

“அதனை விரைவில் புரிந்துகொள்வீர்கள் மணியனாரே! வெகு விரைவில் அதனைப் புரிந்து கொள்வீர்கள். அதோ! வானவன் மாதேவிச் சத்திரம் வந்துவிட்டது. புரவியைச் சத்திரத்தின் வாயிலில் கட்டிவைத்துவிட்டு ஸ்நான பானங்களை விரைவில் முடித்துக் கொள்ளுங்கள். ஏறக்குறைய இரண்டு நாழிகை நேரத்தில் விஹாரைக்குக் கிளம்பச் சொல்லி உத்தரவு!”

“யாருடைய உத்தரவு?”

“அதனைத் தெரிவிக்கும்படி உத்தரவாகவில்லை!”

பொய்க்கோபத்துடன் முகத்தை சட்டென்று திருப்பிக் கொண்டார் இளையவர்.

* * * * * * * *

நாகதேசமென்று நாகநாடென்றும் தொல்பழங்காலந் தொட்டு நாகை புகழ்பெற்றிருந்தது. அதன் அழகான துறைமுகத்தில் தூரதூர தேசங்களிலிருந்தெல்லாம் பற்பல கலங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன. கீழ்த்திசை நாடுகளிலிருந்து கிளம்பும் வாணிகக் கப்பல்கள் வாரக் கணக்கில் கடலில் பிரயாணம் செய்து நைந்து போய் ஒரு

வழியாக நக்காவரத்தை[28] அடையும். அங்கே ஓரிரு நாட்கள் தங்கிச் சிரமபரிகாரங்களையெல்லாம் முடித்துக்கொண்டு பாய்மரத்தை விரித்துக் கிளம்பினால் ஒரு பகலில் நாகையை அடைந்து விடலாம்.

உற்றவர்க் குறுப்பறுத் தெரியின் கணுய்த்தலை யன்ன
தீமை செய்வோர்க்கு மொத்த மனத்ததாய்
நற்றவர்க் கிடமாகின்றது நாகையே..

எனும் மொழிக்கேற்ப நற்றவத்தில் சிறந்த பௌத்தர்களின் புண்ணிய பூமியாகவே அக்கோநகர் அறியப்பட்டது.



பண்டைய பிரிட்டிஷ் ஆவணங்களிலிருந்து
இந்நூலாசிரியரால் முதன் முதலில் அடையாளப்படுததப் பட்ட
18ம் நூற்றாண்டு ஓவியத்தில் நாகப்பட்டினத்தின் சீனப்பகோடா[29].

---

[28] இன்றைய அந்தமான் நிக்கோபார் தீவுகள்.
[29] கதாசிரியரின் நாகப்பட்டினம் ஆய்வின் ஒரு பகுதியாக இநத ஓவியம வெளிபபடுததபபடடது. பாாகக Nagappattinam to Swarnadweepa புததகததில New Perspectives on Nagappattinam எனும் தலைப்பில் அமைந்த நூலாசிரியரின் கட்டுரை. இதே வளாகததிறகுளதான முதலாம் இராஜராஜா காலததைய துளாமணி பத்ம விஹாரை அமைக்கப்பட்டிருக்க

அசோகச் சக்ரவர்த்தியின் புத்திரர் இந்நகரில் கட்டிய பரத திட்ட விஹாரையே நாகையின் பௌத்த விஹாரைகளுள் மிகப் பழமையானது எனலாம். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் பௌத்தத்தின் சிறந்த ஆச்சாரியர்களுள் ஒருவராகக் கருதப்படும் தருமபால தேரர் இங்கு தங்கியிருந்து நெட்டி பகரண அட்டகதா என்னும் நூலைப் பாலிமொழியில் எழுதினார்.

பின்வந்த காலகட்டங்களில் பல்வேறு விஹாரைகளும் நகரில் எழுந்தன. நாகநன விஹாரை அதில் புகழ் பெற்றது இரண்டாம் நரசிம்மவர்மரான இராஜசிம்ம பல்லவர் காலத்தில் சீன வணிக யாத்ரீகர்களுக்காக மற்றுமொரு விஹாரை கட்டப்பட்டது. இதன் இயற்பெயர் மறைந்து போய் நம் கதை நடக்கும் காலத்தில் சீனர்[30] கோயில் என்றே அழைக்கப்பட்டது.

பின்னாளில் சைலேந்திர அரசர்கள் இந்நகரில் "ஸ்ரீ சைலேந்திர சூளாமணிபத்ம விஹாரை" என்றொரு புகழ் பெற்ற புத்தத் திருக்கோயிலை எழுப்ப, அதற்கு முதலாம் இராஜராஜசோழர் பள்ளிச்சந்தமாக ஆனைமங்கலம் என்ற கிராமத்தில் சில நிலங்களை நிவந்தமாக அளித்தார். அதன் பெரிய அளவின் காரணமாக 'இராஜராஜப் பெரும்பள்ளி' என்று பெயர்பெற்றது. அவருடைய மைந்தர் வீராதி வீரர் இராஜேந்திரர் காலத்தில் 'இராஜேந்திரப் பெரும்பள்ளி' என்கிற பெயரில் மற்றொரு திருக்கோயிலும் எழுப்பப் பட்டது. இராஜராஜர் சூளாமணி பத்ம விஹாரைக்குக் கொடுத்த நிவந்தங்கள் அவரது காலத்திற்குப் பின் தாமிரப் பட்டயங்களில் பொறிக்கப்பட்டு காலகாலங்களைக் கடந்து "லெயிடன் சாசனங்கங்கள்" (Larger Leyden Grants) எனும் பெயரில் சரித்திரத்தில் சாகாவரம் பெற்றுவிட்டன.

இவ்வாறாக பல்வேறு விதங்களிலும் பௌத்தத்துடன் நெருக்கமான பிணைப்பைப் பெற்றிருக்கும் இந்நகரைப்

...ண்டும என்பதை முதலாம குலோத்துஙகா காலததுச சிறிய லெயிடன செபபேடுகள் உறுதி செய்கின்றன.
[30] நாகைக்கும் சீனத்துக்குமான வணிகத் தொடர்பு பின்னர் பன்னெடுங் காலத்திற்கும் தொடர்ந்தது. கிட்டத்தட்ட 14ம் நூற்றாண்டு வரைகூட ...து வணிகாகள் நாகைக்குப் போக்குவரத்து வைத்துக்கொண்டதாகத் ...கிறது.

'பௌத்தப் பெருநகர்'[31] என்று நாம் அழைத்ததில் பிழையில்லையே?

* * * * * * * *

இத்தகைய புகழ்மிக்க நாகை நகரில் கோவேந்தன் பேரங்காடியின் இரைச்சல்களைக் கடந்து கடற்கரையையும் பராந்தகப் பெருவீதியையும் இணைக்கும் சந்திப்பில் அமைந்திருந்த பரததிட்ட விஹாரையை நமது நண்பர்கள் வந்து சேருமுன் அடைகிறோம். அடடா! இந்த விஹாரைதான் என்ன அழகு! ஏறக்குறையப் பத்து நூற்றாண்டுகளைக் கண்டுவிட்டாலும் அதன் கம்பீரம் சிறிதும் குறையவில்லையே?

பழுதுபார்க்கும் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாக முன்னர் பல்லவராயர் குறிப்பிட்டார் அல்லவா? அவற்றைக் கண்முன்னர் காண்கிறோம். விகாரையின் ஒரு சில பகுதிகளில் மூங்கில் கழிகளிட்டுப் பிணைக்கப்பட்ட சட்டங்களில் நின்றபடி ஆட்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். வெண்சுண்ணத்தைக் குழைத்துக் குழைத்துச் சிலர் சுவற்றில் தீட்டிக் கொண்டிருக்க வேறு சிலரோ செங்கல் திருப்பணிகளில் மும்முரமாக இருந்தனர். அவர்களது பணிகளை மேற்பார்வை பார்க்கும் அதிகாரிகள் பரபரப்புடன் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்கள்.

விஹாரைக்கு வெளியே புத்தபகவானின் தரிசனத்துக்காகப் பெருங்கூட்டம் கூடியிருந்தது. அக்கூட்டத்தை வரிசைப்படுத்தி விஹாரைக்குள் அனுப்பும் பணியை சில இளம் பிக்ஷுக்கள் ஏற்றிருந்தனர். பக்தர்களில் பலர் கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்திருந்த வணிகர்கள் என்பதை அவர்களது தோற்றத்தால் புரிந்து கொள்கிறோம். வணிகர்களைத் தவிர காவியுடை யுடுத்திய வெளிநாட்டு பிக்ஷுக்களின் கூட்டங்களையும் அந்தக் கூட்டத்தில் பார்க்க முடிந்தது. அவர்களின் கைகளில் தாமரை மலர்களையும் [illegible] வத்திகளையும் கூடக் காணலாம். நமது இளம் பிக்ஷுக்கள் சிலர் அந்த வெளிநாட்டுத் துறவிகளுடன்

[illegible] நூற்றுக்கும் [illegible]

அவர்களின் மொழியிலேயே அளவளாவுவதைக் கண்டு பூரித்துப் போகிறோம்.



1846ல் சர் வால்டர் எலியட் அவர்களால் பதிவு செய்யப்பட்டு இண்டியன் ஆண்டிகுவரியில் வெளியான சீனப் பகோடாவின் முன் கோபுரப் பகுதி[32].

நல்லவேளையாக விஹாரையின் வெளிச்சுற்றில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் மத்தியில் அமைந்திருந்த சேதியத்தில் பணிகள் முற்றுப்பெற்றுள்ளன. அதனால்தான் விகாரையின் முக்கிய தெய்வமான 'உய்யக்

[illegible]தைய ஓவியத்தில் வளாகத்தின் முன் காணப்படும் கோபுரத்தையும் [illegible]யும் ஒப்பிட்டுப் பார்க்கவும். 1867ல் செயின்ட் ஜோசப் கல்லூரி [illegible]ரிமார்களின் வேண்டுகோளுக்கிணங்க 'புதுவெளிக்கோபுரம்' [illegible]ழைக்கப் பட்ட இவ்வரிய வரலாற்றுப் பொக்கிஷம் இடித்தழிக்கப் [illegible]து. இதனைக் காக்க சர் வால்டர் எலியட் மேற்கொண்ட முயற்சிகள் [illegible]யில் முடிந்தன. இன்றைய தேதியில் நாகையின் வெளிப் [illegible]ளையம் பேருந்து நிலையத்திற்கு எதிரே அமைந்துள்ள இந்த [illegible]ளாகத்தில் மாவட்ட நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

கொண்ட நாயகர்[33] என்ற பெயரால் அழைக்கப்பட்ட வெண்கல புத்தர் பெருமான் திருவுருவத்தை பக்தர்களால் சிரமமின்றி தரிசனம் செய்ய முடிகிறது.

இந்தக் காவியுடை உடுத்திய பக்தர் கூட்டத்தினோடு நாமும் சப்தம் செய்யாமல் நுழைவோம். சமபாதத்தில் நின்றபடி அரைக்கண்கள் மூடி ஒரு தெய்வீகப் புன்னகையுடன் ஆழ்ந்த தியானத்தில் காட்சியளித்துக் கொண்டிருக்கும் உய்யக்கொண்ட நாயகரை அவசரமாக வணங்கிவிட்டு சேதியத்தின் வடவாயிலுக்கு அருகில் அமைந்திருக்கும் சிறிய அறைக்குள் சப்தம் செய்யாமல் நுழைவோம்.

அது பரத திட்ட விஹாரையின் தலைமை ஆச்சாரியரான பிக்ஷு மஹாகாசியப தேரரின் அந்தரங்க அறை

5. ஆச்சாரியர் ஆலோசனை



ஆதவன் கிழக்கில் எழுந்து ஒரு முகூர்த்த நேரம் கழிந்துவிட்ட அந்தப் பொழுதிலும் ஆச்சாரியரின் அறையில் வெளிச்சம் அதிகமாகப் பரவியிருக்கவில்லை. அந்த அறையில் அமைக்கப்பட்டிருந்த ஒரே சாரளமானது வடபுறச் சுவற்றில் சற்று உயரமான இடத்தில் அமைந்திருந்ததே அதற்குக் காரணமாக இருக்க வேண்டும். அது மிக எளிமையான அறை. அதன் மேற்குப் பகுதியில் புத்த பகவானின் சிறிய திருவுருவமொன்று ஒரு மேடையில் எழுந்தருளியிருந்தது. அத்திருவுருவுக்கருகில் ஏற்றிவைக்கப் பட்டிருந்த குத்துவிளக்கு சிறிதும் சலனமில்லாமல் சுடர் விட்டுப் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. 'மனதின் சலனங்களை அகற்றி விட்டால் வாழ்வில் அமைதி கிட்டும்' என்னும் பகவானின் போதனையை அது தன்னால் முடிந்த வரையில் உபதேசிக்கிறது போலும்.

[33] நாகை அகழ்வாராய்ச்சியில் கிடைத்த ஒரு புத்தப் படிமத்தில் இப்பெயர் பொறிக்கப்பட்டிருந்தது தெரியவருகிறது.

அந்த விளக்கின் ஒளியில் புத்த விக்கிரகம் சொல்ல முடியாததொரு சோபையில் ஒளிர்ந்தது. பகவானின் புன்னகை அந்த அறை முழுவதுமே பரவியிருப்பதைப் போன்றதொரு பிரமை ஏற்பட்டது. மேடையில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த நறுமண வத்தி மெல்லப் புகைந்து அறையின் இருளாகிய திரையில் வளைந்து நெளியும் வெண்புகைக் கோலங்களை அனாயசமாகத் தீட்டிக் கொண்டிருந்தது.

வத்தியின் சாம்பல் மேடையில் கொட்டி அந்த இடம் அசுத்தமாகிவிடக்கூடாது என்பதற்காக சந்தனக் கட்டையால் செய்யப்பட்டிருந்த சிறிய பெட்டிக்குள் அந்த வத்தி புகைந்துகொண்டிருந்தது[34]. ஒரு சில நறுமணங்கள் நுகர்ந்த உடனேயே நாசியைத் தாக்கி மனதை கிறுகிறுக்க வைத்துக் காமாந்தகாரத்தைக் கிளம்பும். ஆனால் அந்த வத்தியின் சுகந்தமோ மனதைத் தெளியவைத்து சித்தத்தை திடமாக்கும் ஆற்றல் பெற்றிருந்தது.

மேற்கண்டவாறெல்லாம் வர்ணித்தும் நம்மால் அந்த அறையில் குடிகொண்டிருந்த ஆன்மீகச் சூழலை முழுமையாக விவரிக்க முடியவில்லை என்றுதான் கூற வேண்டும். ஏனெனில் அங்கே புறப்பொருட்களைத் தவிர கண்ணுக்குத் தெரியாமல் வேறொரு சக்தி ஆக்கிரமித்திருந்தது. நூற்றாண்டுகளாக அங்கே மகாதபஸ்விகளான மௌனத்த குருக்கள் அல்லும் பகலும் தியானம் செய்து அந்த அறைக்குள் ஏதோ ஒருவிதமான மோனச்சூழலை உருவாக்கியிருந்தார்கள். கள்ள மனதுடன் உள்ளே நுழைபவனைக் கூடக் கனியவைத்து பகவானின் திருப் பாதங்களில் பணிய வைத்துவிடும் அற்புதமான ஆற்றல் அந்த அறைக்கு இருந்ததுபோல் தோன்றியது.

அறையின் மத்தியில் புத்த பகவான் படிமத்திற்கு நேர் எதிரே இரண்டு பலாமர ஆசனங்கள் போடப் பட்டிருந்தன. அந்த ஆசனங்களில் வயதான பிக்ஷு ஒருவரும் தாடி மீசை வைத்துக் கொண்டு கொண்டையைப் பின்னால் முடிந்திருந்த இளமத்திய பிராயத்திலிருந்த மற்றொருவரும் எதிரும் புதிருமாய் அமர்ந்திருந்தார்கள்.

[34] இன்றும் பல்வேறு பௌத்தர் வீடுகளில் இவ்வாறு பெட்டிக்குள் [illegible] ஏற்றி வைக்கும் வழக்கம் தொடர்கிறது.

காவியுடை தரித்துப் பத்மாசனத்தில் அமர்ந்தபடி கரங்களை குறுக்கே படியவிட்டிருந்த வயதான பிக்ஷுவின் முகத்தில் உறுதியும் அன்பும் கனிந்து முகிழ்த்திருந்தன. அடிக்கடி அவரது முகத்திலில் மெல்லிய புன்னகை பூத்து மடங்கியது. முதுமை அவரது முகத்தில் கோடுகள் வரைந்திருந்தாலும் அவை ஒரு தேர்ந்த ஓவியனின் தூரிகைத் திற்றல்களைப்போல் அளவாகப் படிந்திருந்தன.

சற்றே உற்று நோக்கினால் அவருடைய கண்கள் அரைகுறையாக மூடியிருக்க கவனம் முழுவதும் மூக்கு நுனியில் குவித்து வைக்கப்பட்டிருப்பதை உணரலாம். காற்று அவருடைய நாசியின் ஒரு துவாரத்தில் மட்டும் நுழைந்தது. சிறிது நேரம் அடி வயிற்றில் தங்கியது. பின்னர் மற்றொரு துவாரம் வழியாகச் சீராகப் பிரிந்து வெளியேறியது. நாசியின் துவாரங்களை விரல்களால் மூடாமலே அவரால் கட்டுப்படுத்த முடிந்தது[35]. யோகத்தில் ஆழ்ந்து கனிந்திருக்கும் இந்த முதிய துறவியே விஹாரையின் தலைமை ஆச்சாரியரான மஹாகாசியப தேரராக இருக்க வேண்டுமென்று யூகிக்கிறோம்.

கிட்டத்தட்ட இதே ஆழ்ந்த தியான நிலையில்தான் எதிரே அமர்ந்திருந்த அந்தச் சீடரும் தெரிந்தார். ஆனால் அவரது முகத்தில் அன்பையும் கருணையையும் தவிர ஒரு அசாத்தியமான வீரக்களையும் பொங்கியது. வீரம் மட்டுமா? தைரியம், மனவுறுதி, மனத்திண்மை என்று எல்லையில்லாத ஆண்மையின் பல்வேறு உணர்வுகளும் மாறி மாறி அந்த முகத்திலிருந்து சுடர் விட்டன. அடடா. இவரது திருமுகத்தை இன்று முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலல்லவா இருக்கிறது? தேஜஸ், ஓஜஸ் என்றெல்லாம் சொல்கிறார்களே. அது இவரது முகத்தில் பொலிந்து கொண்டிருப்பதுதானோ?

கூர்மையான நாசிக்குக் கீழ் நன்கு முறுக்கிய மீசை. கருத்த புருவங்கள். அவை அவ்வப்போது மெல்ல நெறிபட்டன. பின்னர் விலகின. வாய் எதையோ தொடர்ந்து உச்சரித்துக் கொண்டிருந்தது.

---

[35] பார்க்க – இராஜயோகம், சுவாமி விவேகானந்தர், இராமகிருஷ்ண மடம வெளியீடு.



நாகையில் கண்டெடுக்கப்பட்ட புத்தர்பிரான் படிமம்[36], சோழர் காலம்.

---

[36] அமெரிக்காவில் சிகாகோ நகரின் அருங்காட்சியகததில் உள்ளது.

சற்று நெருங்கிக் கேட்டோமானால் அது சிவபெருமானின் பஞ்சாட்சர மந்திரம் என்பதை உணரலாம். பௌத்த விஹாரையில் அமர்ந்துகொண்டு சிவநாமத்தை ஜெபம் செய்து கொண்டிருக்கும் இவர் மிக வித்தியாசமான மனிதர்தான்!

ஒரு மெல்லிய தாடி அவரது தாடையிலிருந்து கிளம்பிக் காதுகளை வந்தடைந்தது. நீண்ட தலைமயிர் வாரிச் சுருட்டப்பட்டு கொண்டையாகப் பின்தலையில் முடியப் பட்டிருந்தது. காதுகளில் மிகப் பெரிய முத்துத் தோடுகள். பாண்டி முத்துக்கள் போலும். இப்படிப்பட்ட அரிய முத்துக்களைக் காதணிகளாக அணிந்துள்ள இவர் நிச்சயம் பெரிய மனிதராகத்தான் இருக்க வேண்டும்.

யுகயுகாந்திரங்கள் என்று சொல்லத்தக்க ஒரு நாழிகை நேரம் கழிந்தது. ஆச்சாரியர் மெல்லக் கண்களைத் திறந்து தனது சீடரின் முகவதனத்தை நோக்கினார். சீடரின் புருவங்கள் மெல்ல நெறிபடுவதை அவரது கண்கள் மங்கிய ஒளியிலும் கண்டுபிடித்து விட்டன. அழகிய புன்னகை யொன்று அந்த வயதான முகத்தில் முகிழ்த்தது.

தன்னருகே வைக்கப்பட்டிருந்த வெண்கல மணியில் ஒரு குச்சியினால் அடித்து "டிங்..." என்றொரு மெல்லிய ஓசை எழுப்பினார் ஆச்சாரியர். ஆழ்ந்த தியானப் பயிற்சிகளில் ஈடுபடும் பிக்ஷுக்களின் பயிற்சி நேரம் முடிந்துவிட்டது என்பதைத் தெரிவிக்க அவர் பயன்படுத்தும் மணி அது. அந்தச் சிறிய ஓங்கார சப்தமானது மனதிற்கு அதிக அதிர்ச்சி தராமல் தியானத்தில் ஈடுபட்டிருப்பவர்களை சுயநினைவுக்கு மெல்லக் கொண்டு வரும்[37].

சீடரின் கண்கள் மிக மெதுவாகப் பிரிந்தன. எதிரே புன்னகையுடன் அமர்ந்திருக்கும் ஆச்சாரியாரைக் கண்டதும் அவரது வதனத்திலும் முறுவல் பூத்தது.

"குருதேவா..."

"சக்ரவர்த்திகளே..."

"அடடா.. நீங்கள் ஒருவராவது என்னைப் பழைய பெயரிட்டு உரிமையுடன் அழைக்கக்கூடாதா?"

---

[37] பௌத்தத் தியான முகாம்களில் இந்த வழிமுறை இன்றளவும் பின்பற்றப்படுகிறது.

அதற்கு பதில் சொல்லாமல் ஆச்சாரியார் மெல்லத் தலையைக் குனிந்து கொண்டார்.

"ஏன் குருதேவா? என்ன தயக்கம்? அதில் ஏதாவது சிரமம் உள்ளதா என்ன?"

"பழைய பெயரிட்டு உன்னை அழைப்பதில் எனக்குச் சிரமம் ஒன்றுமில்லை. ஆனால் தயக்கங்கள் இருக்கின்றன உன்னைச் சுற்றி ஒரு கூட்டம் வந்துவிட்டதையா! அந்தக் கூட்டம் உன்னைச் சுற்றிலும் ஒரு வேலியை உருவாக்கி விட்டது. அது ஒரு வகையில் தேவைதான் என்பதை நான் பரிபூரணமாக உணர்கிறேன். என்றாலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இன்று காலையில் திருமெய்க்காப்பு வீரர்கள் விஜயம் செய்து விஹாரையின் பல்வேறு பகுதிகளையும் சோதித்தார்கள். என்னுடைய முழுச்சம்மதத்தையும் பெற்றுக் கொண்டுதான் செய்தார்கள். என்றாலும் பிக்ஷுக்களுக்கு அது சிரமமானதாகவே இருந்தது. நீ வருவதற்கு இரண்டு நாழிகைகள் முன்புகூட உடன்கூட்டத்தார் தனியாக வந்து என் அறை முழுவதையும் சோதித்தார்கள்."

"என்ன? உங்கள் அறையிலா சோதனையிட்டார்கள்?"

"ஆமாம். சோதனை முடிந்தபின் ஒருவன் வாயிலில் காவலுக்கு நின்றுவிட்டான். நீ உள்ளே நுழைவதற்கு இரண்டு வினாடிகளுக்கு முன்புதான் மாயமாக மறைந்தான்."

"அடடா! தங்களை முன்புபோல விஹாரையில் சந்திக்க வேண்டும் என்கிற ஆசையில் வந்து உங்களுக்கெல்லாம் வீண்சிரமம் கொடுத்துவிட்டேன்."

"அருள்மொழி!" - ஆச்சாரியார் சற்று நிதானித்தார்.

அருள்மொழி! அருள்மொழி! அந்த ஒற்றை வார்த்தை நமது காதுகளில் ரோமாஞ்சனத்தை உண்டாக்குகிறது. அருள்மொழி! சோழநாட்டின் குஞ்சு குளுவானிலிருந்து வயதான கிழவர்கள்வரை கேட்டவுடன் சிலிர்த்துப் போகும் பெயர் அது. சோழ சைனியத்தின் வீரர்கள் தத்தம் வாயில் உச்சரித்தபடி காடு மேடுகளையும் நாடு நதிகளையும் உற்சாகமாகக் கடக்கும் பெயர் அது. ஒரு மிகப் பெரிய பேரலைபோல சோழநாட்டை உய்விக்கச் சில காலத்திற்கு முன்பு உருக்கொண்ட மகாசக்தியின் பெயர் அது...

இவரா? இவர்தானா சோழநாட்டின் மகத்தான கதாநாயகராக விளங்கும் அருள்மொழித் தேவர்? ஆஹா! ஆச்சாரியாரைப் பின்பற்றி நாமும் இவரை 'அருள்மொழி' என்றே அழைக்கிறோமே? தில்லையின் மூவாயிரவர் இவருடைய திருமுடியில் வழிவழியாக வந்த சோழ மகுடத்தை ஏற்றி வைத்துப் புனித நீர் சொரிந்து இவரது காதுகளில் புதிய அபிஷேக நாமத்தை ஓதினார்களே.. அது என்ன? இராஜராஜ சோழ தேவர்! உடையார் ஸ்ரீ இராஜராஜ சோழ தேவர்!

சில காலத்திற்கு முன் உற்சாகம் மிகுந்த வாலிபராய் இளவரசராய் இவரைச் சோழநாட்டிலும் இலங்கையிலும் சந்தித்திருக்கிறோம். அப்போது அவரது தோள்களில் சாம்ராஜ்ஜிய பாரங்களில்லை. சுற்றிக் காவல் கொள்ள உடன் கூட்டத்தாரும் திருமெய்க்காப்பும் இல்லை. அதனால் தானோ என்னவோ ஒரு பறவையைப்போல அவரும் நாமும் விட்டு விடுதலையாகி வானில் சிட்டுக்குருவிகளாய்ச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தோம்.

அப்பப்பா! அந்த இளைஞருக்கும் இன்று நாம் காணும் மனிதருக்கும் எத்தனை வித்தியாசங்கள்! சோணாட்டின் காடுமேடுகளிலும் வயல்வெளிகளிலும் வாஞ்சையோடு துள்ளித் திரிந்து கொண்டிருந்த ஒரு உற்சாக வாய்க்கால் மகாநதியாகி விட்டது. நதி என்றவுடன் அதன் ஆழம், அகலம், நீளம், கரைகள் என்று எல்லாம்தான் உண்டு. ஆனால் அந்த நதியின் நீரை ஒரு வாய் அள்ளிச் சுவைப்பவர்கள் பழைய வாய்க்காலின் சுவை இன்னும் மாறாமல் அதில் ஒளிந்துகொண்டிருப்பதைத் தெளிவாக உணர்வார்கள்.

இவரைக் கண்டவுடன் ஏன் மனது இத்தனை பிசைந்து போகிறது? கண்களில் ஏன் நீர் கட்டிக்கொள்கிறது? ஆரத்தழுவி "ஐயா.. நலமா?" என்று கேட்க ஏன் இதயத்திற்கு இத்தனை ஏக்கமுண்டாகிறது? இது என்ன மாய மந்திரம்? ஏறக்குறைய நமது நிலையில்தான் அந்த ஆச்சாரியாரையும் காண்கிறோம். உலக பந்தங்களையெல்லாம் துறந்து நிற்கும் அந்தத் துறவிக்கே அப்படிப்பட்ட நிலையென்றால் நாமெல்லோரும் எம்மாத்திரம்?

"அருள்மொழி! நீ இங்கு முன்புபோல் வந்ததில் பிக்ஷுக்கள் அத்தனை பேருக்கும் மெத்த மகிழச்சி. அந்த

மகிழ்ச்சிக்கு முன் மற்ற சிரமங்களெல்லாம் காற்றில் பறக்கும் தூசாகி விட்டன..."

"நீங்கள் அருள்மொழி என்று வாய் நிறைய அழைக்கும் போது என் தந்தையாரின் ஞாபகம் வந்துவிடுகிறது. நீங்களும் அக்கனுமாவது பழையபடியே என்னை அழைக்க வேண்டும். விஹாரயைப் புதுப்பிக்கும் திருப்பணிகள் உங்களுக்குத் திருப்தி தரும் வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா?"

"புத்த பகவானின் பெருங்கருணையினால் பணிகள் நாம் எதிர்பார்த்ததைவிடப் பன்மடங்கு சிறப்பாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. மாராயர் பக்கத்திலேயே இருந்து வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். பல்லவராயர் முடிகிறபோதெல்லாம் வந்து விசாரித்து விட்டுப் போகிறார். தஞ்சைக் கோயிலின் பிரதான சைத்ரிகரைக் கொண்டு சேதியத்தின் உத்திரத்தில் வரையப்பட்டிருக்கும் பழைய சித்திரங்களைக்கூடப் புதுப்பித்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார். இதைவிட வேறு என்ன வேண்டும் எங்களுக்கு?"

"என்ன இருந்தாலும் இந்த விஹாரையை ஓரளவிற்கு மேல் சரி செய்ய முடியாது ஆச்சாரியரே. கட்டடத்தின் பல பகுதிகள் சீர் செய்யவியலாத அளவிற்குப் பழமையடைந்து விட்டன. மேலும் கடலன்னை என்றாவது நம் மீது கோபம் கொண்டு அன்றொருநாள் நாகநன விகாரையை விழுங்கியதைப்போல் இதையும் விழுங்கிவிடுவாளோ என்று பயமாக இருக்கிறது. சிறிது காலம் செல்லட்டும். நாகையில் வானை முட்டும் கோபுரத்துடன் ஒரு புதிய விகாரை கட்டித் தருகிறேன். நீங்கள் உங்கள் சீடர்களுடன் அங்கு ...ம் பெயர்ந்து விடலாம்..."

"பகவானின் அருளால் அந்தத் திருப்பணியை நிறைவேற்றும் வலிமை உனது கரங்களுக்கு உண்டாகட்டும். ...ு. உன்னுடன் இத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்து ...டு உன் வீட்டாரின் நலனை இன்னமும் நான் விசாரிக்க ... தஞ்சை மற்றும் பழையாறையில் எல்லோரும் ...தானே?"

"எல்லோரும் சுகம்தான். கங்கமாதேவி உங்களை ...யும் விசாரித்தாள். என்னுடன் தானும் வருவதாக மிகவும் ...வாதம் பிடித்தாள். அவளை சமாதானப்படுத்திவிட்டுக் ...வதற்குள் உன்பாடு என்பாடு என்றாகிவிட்டது. சிறிய

குந்தவைக்கு வழக்கம்போல விளையாட்டுபுத்தி. நான் கிளம்புவதைக்கூடக் கவனிக்க நேரமில்லை அவளுக்கு..."

"அந்த முரட்டுப் பயல் என்ன செய்து கொண்டிருக்கிறான்?" ஆச்சாரியாரின் முகத்திலிருந்த முறுவல் சற்று பெரிதாக விரிந்தது.

"அவன் இப்போது நன்றாக வளர்ந்துவிட்டான். இளம் கன்றல்லவா? பயமறியாமல் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறது. அவனுடைய முரட்டுத்தனத்தை வீர விளையாட்டுக்களில் திருப்பி விட்டுவிட்டேன். எந்நேரமும் வாள் பயிற்சி, வில்வித்தை, சிலம்பம் என்று கடகத்திலேயே காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறான். சிறிது காலம் கழித்து அவனை உங்களிடம் விட்டுவிடலாமென்று உத்தேசம். அவனுக்கு நுண் கலைகளையும் தியானத்தையும் தாங்கள் போதிக்க வேண்டும். தமிழ், பாலி மற்றும் சம்ஸ்கிருதத்தில் அமைந்துள்ள இலக்கியங்களை எனக்குக் கற்றுக் கொடுத்ததுபோல் அவனுக்கும் கற்றுத்தர வேண்டும் அவனுக்குக் கலை மற்றும் ஆடல் பாடல் விஷயங்களில் என்னளவிற்குப் பித்துப் பிடிக்காவிட்டாலும் ஓரளவிற்கு நாட்டமிருக்கிறது. அதனை சீரமைக்க உங்களால்தான் முடியும். உங்களுக்குத்தான் அந்தப் பொறுமை உண்டு அடடா! அந்த நாட்கள் மீண்டும் திரும்பக் கூடாதா? இந்த இராஜ்ஜிய விவகாரங்களையெல்லாம் ஒழித்துக் கட்டிவிட்டு உங்களின் திருவடி நிழலில் அமர்ந்து பகவானின் உபதேசங்களைக் கேட்கும் நாள் மீண்டும் வாராதா?"

"அருள்மொழி! உனக்கென்று சில கடமைகள் உள்ளன சில என்று குறிப்பிடுகிறேன் உண்மையில் பல கடமைகள் உள்ளன உன்னைப் போன்றவர்களால் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும் வண்ணம் அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும். அதனால்தான் புத்த பகவான் உன் மேல் கருணை கொண்டு துறவறத்தில் ஈடுபடுத்தவில்லை. சாம்ராஜ்ஜிய ஆசையே இல்லாமல் பறந்து கொண்டிருந்த உன்னை இராஜ்ஜியபாரம் ஏற்கும்படி செய்ய வைத்ததும் அவருடைய பெருங்கருணைதான்..."

"பகவானின் கருணை கடந்த மூன்று வருடங்களாக என் தலையை எந்நேரமும் அழுத்திக்கொண்டிருக்கிறது!" - அவர் தலைக்கு மேல் ஒரு பாறாங்கல் வைக்கப்பட்டிருப்பது போல் பாவனை செய்தார்

"அந்த பாரத்தை யாராவது ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் அருள்மொழி. நல்லவர்கள் அதனை ஏற்கத் தவறினால் அது பொல்லாதவர்களிடம் போய்ச்சேர்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருந்துன்பங்களை விளைவிக்கும் மன்னனாகிய அசோகச் சக்ரவர்த்தி அதனால்தான் கடைசிக் காலம்வரை இராஜ்ஜிய பாரத்தை ஏற்றார். துறவறம் பூண்டு நாட்டைச் சுற்றிவரவேண்டும் என்று மிக ஆழமாக ஆசைப்பட்டாலும் தன்னுடைய கடமையை மனதில் நிறுத்திக் கடைசிவரை நாட்டையாண்டார். அறச் செயல்கள் பலவும் புரிந்தார். நீ அவருக்குச் சிறிதும் இளைத்தவனல்ல..."

"ஐயா! கடல் போல சாம்ராஜ்ஜியம் விரிந்திருந்தும் கலிங்கப் போரின் கடுமையைக் காணச் சகிக்காமல் இனிப் போரே வேண்டாம் என்று புத்தபகவானின் சரண கமலாலயங்களை உறுதியாகப் பற்றிய அந்த இராஜ ரிஷி எங்கே? கையகல சோழ சாம்ராஜ்ஜியத்தை வைத்துக் கொண்டு அல்லாடும் நான் எங்கே?"

"போர் என்பது ஷத்திரிய தர்மம் அருள்மொழி! [illegible]லிக்குக் துறவு சுதர்மமாவதைப்போல் வீரனுக்கு வீரமே தர்மம். அதனைத் தடுக்க முடியாது முடிந்தவரை தவிர்க்கப் பார்க்கலாம். அவ்வளவுதான். ஆனால் போர்களில் அறத்தைக் கடைபிடிக்க வேண்டும். அது மிகவும் முக்கியம். குறிப்பாகப் போரில் சம்மந்தப்படாத பெண்டுகளுக்கும் குழந்தைகளுக்கும் மத ஸ்தாபனங்களுக்கும் ஒரு போதும் துன்பங்கள் விளைவிக்கக் கூடாது..."

அருள்மொழிவர்மர் தலையைக் குனிந்துகொண்டார் அவருடைய கண்கள் மிக நீண்ட நேரம் மூடிப் பின் திறந்தன.

"ஆச்சாரிய! உங்களிடம் ஒரு முக்கிய ஆலோசனை பெறவே இங்கு வந்தேன். துரதிருஷ்டவசமாக அதுவும் ஒரு போர் சம்மந்தப்பட்டதுதான். இராஜ்ஜியம் இருக்கும் நிலைமை நீங்கள் அறியாததல்ல. வேறு வழியில்லை என்கிற கட்டத்தை அடைந்ததும்தான் நான் இந்த இராஜ்ஜிய பாரத்தையே ஏற்பதற்கு முன்வந்தேன். மகாவீரர்களான விஜயாலயரும் ஆதித்தரும் பராந்தகரும் இராஜாதித்தரும் தங்கள் உதிரத்தைச் சிந்தி ஸ்தாபிதம் செய்த இந்தப் பொன்னாடு என் கண்களின் முன்னால் கூறுபட்டுச் சிதைவதைக் காணச்சகிக்காமல்தான் இராஜ்ஜியபாரம் என்னும் மிகப் பெரிய சுமையை தாங்குவதற்கு ஒப்புக்

கொண்டேன். எனக்கு இறைவன் வைத்த முதல் சோதனை மதுரைப் போரின் வடிவில் வந்தது. அதிலிருந்து மீண்டு வருவதற்குள் மற்றுமொரு பெருஞ்சோதனையை வைத்து விட்டான் இறைவன்...."

வாயிற் கதவம் மென்மையாகத் தட்டப்பட்டது.

"யாரது?" என்றார் ஆச்சாரியார்.

ஒரு பிஷு மௌனமாக உள்ளே நுழைந்தார். குனிந்த தலை நிமிராமல் "பௌர்ணமி பூஜைக்கு நேரமாகி விட்டது.." என்றார்.

"இதோ வந்துவிடுகிறேன். அருள்மொழி! மன்னிக்க வேண்டும். இந்த மண்டல பூஜையை என்னால் தவற விட முடியாது. மிக முக்கியமான முகூர்த்தம் இது. அதனால்.."

"அடடா.. மன்னிப்பு என்றெல்லாம் பெரிய வார்த்தை பேசுகிறீர்களே? நான் என்றைக்கும் உங்களின் சீடன்தான் இன்று மாலை உங்களை சந்திக்கவியலுமா? இன்னும் இரண்டு நாட்களில் காம்போஜம் கிளம்பப்போவதாக நீங்கள் அனுப்பிய முறியைப் படித்துவிட்டுத்தான் அவசர அவசரமாக உங்களை சந்திக்க வந்தேன்."

"ஓ! அப்படியா? சரி. இன்று மாலை ஆதவன் மறைந்து ஒரு ஜாம நேரம் கழிந்ததும் நீ நேராக இதே அறைக்கு வந்துவிடு.."

"என்னுடன் பல்லவராயரையும் சேனாபதியாரையும் கூட்டிக் கொண்டுவர அனுமதிக்க வேண்டும் சுவாமி!"

"தாராளமாக! பூசனையில் நீயும் கலந்து கொள்கிறாயா?"

"இல்லை சுவாமி! பகவானை வணங்கிவிட்டுக் கிளம்பி விடுகிறேன். நண்பர்கள் எனக்காகக் காத்திருக்கிறார்கள்.."

"சென்று வா! மாலையில் சந்திப்போம்."

எழுந்திருப்பதற்குமுன் குனிந்து ஆச்சாரியாரின் திருவடி அட்டித் தொழப் போனவரைத்[38] தடுத்து அப்படியே

---

[38] திருவடி அட்டித் தொழுவது என்பது சோழர்காலச் சொற் பிரயோகம். தஞ்சை இராஜராஜேஸ்வரத்தின் முதலாம் இராஜராஜா கல்வெட்டு

கட்டியணைத்துக் கொண்டார் ஆச்சாரியாரான மஹா காசியப தேரர்.

6. கதைக்களம் ஒரு அறிமுகம்



இந்தக் கதையில் இதுவரை நடந்து முடிந்துள்ள சம்பவங்களையும் இனி நடக்கப் போகும் நிகழ்வுகளையும் சரிவரப் புரிந்து கொள்ள அந்நாளைய அரசியல் பின்னணியை வாசகர்கள் சற்று விரிவாகவே விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

தென்னாட்டின் அந்நாளைய அரசியல் ...வாம் சேரர், சோழர், பாண்டியயர் என்றறியப்பட்ட ...பெரும் சக்திகளாலும் அவர்களுக்குக்கீழ் தத்தம் ...பகுதிகளை ஆண்டு கொண்டிருந்த குறுநில ...னர்களாலுமே வரையறுக்கப்பட்டது. இவர்களுக்குள் ...ந்தா நட்போ பகையோ என்றுமே இருந்ததில்லை ...வரும் சூழலுக்கேற்ப இவர்கள் தங்களுக்குள் கூட்டுச் ...ந்து கொண்டார்கள். அல்லது சண்டையிட்டார்கள். ஒரு ...நடைய வலிமை கூடும்போது மற்றவர்கள் இணைந்து ...ண்டு அவர்களை எதிர்த்தார்கள். நிலைமை மாறியதும் இணைந்து கொண்டவர்கள் விலகினார்கள்.

தமிழகத்திற்கு வடக்கே அமைந்திருந்த தேசங்கள் ...மூன்று மண்டலங்களையும் வளைக்கத் தருணம் ...த்துக் காத்திருந்தன. பலகீனமான சமயங்களில் ஆதாயம் ...ன ஏதாவது ஒரு சக்தியுடன் இணைந்து கொண்டு ...தை எதிர்த்தால் தமது இராஜ்ஜியத்தைப் பெரிதாக்கிக் ...ள்ள முடியுமா என்று சதா சர்வகாலமும் சிந்தித்தன. ஈழ ...லம் தமிழகத்தின் அரசியலில் ஏதோ ஒரு வகையில் ...ர்ந்து சம்மந்தப்பட்டு வந்தது. ஈழ மண்டலத்து ...கள் பெரும்பாலும் பாண்டியர்களுடன் இணைந்து ...ண்டு மற்ற இருவரையும் எதிர்த்தார்கள். இந்த அலகிலா ...யாட்டினால் மண்டலங்களின் எல்லையில் அமைந்திருந்த மக்கள் எத்தனை அவதிக்கு உள்ளாகி இருப்பார்கள் என்பதை வாசகர்களே ஊகித்தறிந்துகொள்ள வேண்டியதுதான்.

நமது கதை நடக்கும் காலத்தில் சோழரும் சேரரும் ஈழத்தவரும் ஓரளவிற்கு வலிமையோடு திகழ்ந்தார்கள். தெற்கே பாண்டியர்களும் வடக்கே இராஷ்டிரகூடர்களும் பலம் குன்றிப் போயிருக்க, மேலைச்சளுக்கர்களின் பலம் வளர்ந்துகொண்டிருந்தது.

இவர்களைத் தவிர கங்கர்கள், பாணர்கள், வைதும்பர்கள், நுளம்பர்கள், இலாடர்கள் என்று எண்ணிலடங்காத குறுநிலச் சக்திகள் வேறு களத்தில் விளையாடிக் கொண்டிருந்தன.

* * * * * * * *

அடுத்ததாக இந்தக் கதையின் முக்கியக் களமாகத் திகழப்போகும் சேரநாட்டின் அரசியல் மற்றும் சமுதாய அமைப்பைப் பற்றிப் பேசுவோம்.

சங்ககாலமென்று அறியப்படும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை தமிழகத்தின் ஒரு பகுதியாகவே அறியப்பட்டிருந்த சேரநாடானது, அதற்குப் பின்வந்த காலகட்டங்களில் மெல்ல மெல்ல தனக்கென்று தனியானதொரு அரசியல் மற்றும் கலாச்சாரப் பின்னணியை உருவாக்கிக் கொண்டது.


களப்பிரர் ஆட்சி கேரளத்தில் பரவியதாகத் தெரியவில்லை. களப்பிரருக்குப் பின் தமிழகத்தில் பல்லவர் ஆதிக்கம் மலர்ந்த அதே கால கட்டத்தில் மலைநாடான கேரளத்தில் பெருமாள் வம்சத்தினரின் ஆட்சி உருவாகியது. இக்குலத்தின் மிக மூத்த மன்னராக அறியப்படும் குலசேகரப் பெருமாள் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராவார். திராவிட வேதமான நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இவருடைய பக்திப் பனுவல்கள் "பெருமாள் திருமொழி" என்றே அறியப்படுகின்றன.

குலசேகரப் பெருமாளுக்குப் பின் சேர வம்சத்தில் குறிப்பிடத்தக்க மன்னராக விளங்கியவர் அறுபத்து நான்கு நாயன்மார்களுள் ஒருவரான கழற்றறிவார் ஆவார். இவருடைய இயற்பெயர் மறைந்துபோய் சேரமான் பெருமாள் என்றே பக்தி இலக்கியங்களில் பொதுவாகக் குறிப்பிடப்படுகிறார். உண்மையில் 'சேரமான் பெருமாள்' எனும் பெயர் பெருமாள் வம்சத்து மன்னர்கள் அனைவருமே தெரிந்திருந்த பட்டப்பெயராகும்



ஸ்ரீ குலசேகரப் பெருமாள்,
மதுராந்தகம் ஏரிகாத்த இராமன் திருக்கோயில்.

சேரமான் பெருமாள் தேவார மூவரில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாரின் காலத்தைச் சேர்ந்தவர். இருவரும் நெருங்கிய நண்பர்களாக விளங்கினர். இந்தக் கால கட்டத்தில்தான் கேரளத்தின் தலைநகராக விளங்கிய மகோதயபுரத்திற்கு அருகில் அமைந்திருந்த திருவஞ்சைக் களம் என்னும் சைவத்தலம் புகழ்பெற்றது. அப்பர் பெருமானால் வைப்புத்தலமாகப் பாடப்பெற்ற அஞ்சைக் களம் சுந்தரரால் முறைப்படி பாடல்பெற்ற தலமாகியது.




திருவஞ்சைக்களம் திருக்கோயில், கேரளம்.

நம்பியாரூரரான சுந்தரர் தனது பூத உடலுடன் தேவ கஜமான அயிரவாரணத்தில் கையிலைக்குப் புறப்பட, அவரது பிரிவைத் தாங்கமுடியாத சேரமான் பெருமாள் தனது அசுவத்தின் காதுகளில் பஞ்சாட்சர மந்திரத்தை ஜெபித்துப் பறக்க வைத்தார் என்பது பெரிய புராணம் சுட்டும் செய்தி[39] தமது அரசர் திடீரென்று மண்ணிலிருந்து மறைந்து போய் விட்டதை அறிந்த சேரமன்னரின் உடன் நின்ற படைவீரர், தாம் தம் கடமையிலிருந்து வழுவியதாகக் கருதி தற்கொலை செய்து கொண்டார்களாம்! சேக்கிழார் பெருமான் சொல்கிறார்.

கயிலையை அடைந்ததும் சுந்தரர் திருநொடித்தான் மலைத் திருப்பதிகத்தையும் பெருமாள் திருக்கயிலாய ஞான உலாவையும் அரங்கேற்றம் செய்து பெம்மானை மகிழ்விக்கின்றனர்.

[39] இந்த வரலாறு முதலாம் இராஜராஜரின் காலகட்டத்தில் மிகவும் புகழ் பெற்று விளங்கியது என்பது தஞ்சை பெரிய கோயிலின் [illegible] சோழர் கால ஓவியத்தாலும் திருவலஞ்சுழி க்ஷேத்திர [illegible] குறுஞ்சிற்பத்தாலும் உறுதியாகின்றது.




[illegible]யின் மீது கயிலைக்குப் பயணிக்கும் சேரமான் பெருமாள், தஞ்சை இராஜராஜேஸ்வரம் சாந்தாரச் திருச்சுற்று ஓவியம், சோழர் காலம்.

மேற்கூறிய இரண்டு சேர அரசர்களையும் அவர்தம் [illegible]யையும் பக்தி இலக்கியங்கள் பாங்குறப் பதிவு [illegible]ருந்த போதிலும் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் [illegible] மூல வரலாற்றுச் சான்றுகள் இவர்தம் கால[illegible]ங்களில் கிடைக்காததால் இராம இராஜசேகரர்[40] (கி.பி [illegible] 844) என்னும் அரசரையே முதல் பெருமாள் அரசராக [illegible] வரலாற்றாசிரியர்கள் முன் வைக்கின்றனர். இவரைத் [illegible] ஆட்சிக்கு வந்தவர் புகழ் பெற்ற மன்னரான [illegible] இரவி என்பவராவார். இவரது காலத்தில் சேரநாடு [illegible] பொருந்திய நாடாக விளங்கிற்று இவர் சோழ [illegible] அந்நாளில் எழுச்சியுற்று விளங்கிய முதலாம் [illegible] சோழருடன் நெருக்கமான உறவு பூண்டிருந்தார்.

[40] [illegible] மிகப் பழமையானதாக அறியப்படும் [illegible] 12ம் ஆட்சியாண்டில [illegible]

ஸ்தாணு இரவியின் அவையை அலங்கரித்த சங்கர நாராயணர் என்னும் வானவியல் வல்லுனர் எழுதிய 'சங்கர நாராயணீயம்' என்னும் வானவியல் நூல் அந்நாளைய சேரர் தலைநகரின் அமைப்பையும் செயல்பாடுகளையும் புரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகிறது.



சேரமன்னர் பாஸ்கர இரவிவர்மன் திருவடியால் வெளியிடப்பட்ட திருக்கோடித்தானம் கல்வெட்டு.
நன்றி – இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை.

ஸ்தாணு இரவியைத் தொடர்ந்து விஜயராகவர், கோதா இரவி வர்மர் (கி. பி. 883 - 913) இந்து கோத வர்மர் (கி. பி. 944 - 962) எனத் தொடர்ந்த சேர அரச வம்சத்தில் நம் கதை நடக்கும் காலமான கி. பி. 988ல் மன்னராக விளங்கியவர் மனுகுலாதித்தரான பாஸ்கர இரவிவர்மன் திருவடியாவார்.

இளம் பருவத்திலேயே மணிமகுடம் தரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் பாஸ்கரர் முறையாகத் தன்னை மன்னராக அறிவித்துக் கொண்டது கி. பி. 979ல்தான். இவருடைய ஆட்சியாண்டு இரண்டு கட்டங்களில் அதாவது இருபத்தைந்து வயதிற்கு முன் / இருபத்தைந்து வயதிற்குப் பின் என்று பதிவாக்கப்பட்டுள்ளதால் குழப்ப மடைந்த ஆய்வாளர்கள் இரண்டு பாஸ்கரர்களை முன்னிறுத்துவது பிழையானது என்பது தற்போது நிரூபிக்கப்பட்டு விட்டது.

* * * * * * * *

பெருமாள் அரசர்களின் வலிமை வாய்ந்த சேனையாகத் திகழ்ந்தது ஒன்றுகுறை ஆயிரத்தவர் படையாகும். இப் பெரும்படையின் தலைவர் 'படைமேல் நாயர்' என்றறியப் [illegible] எல்லோப்பள்ளி, தையப்பள்ளி, கிளிக்கொத்தா [illegible] என்னும் நான்கு படை வீடுகளும் [illegible] கொற்றவையைக்

குலதெய்வமாகக் கொள்ளும் அந்நாளைய படைவீரர் [illegible]யின்படி இவர்கள் கொடுங்கோளூரான மகோதயபுரத்தில் அருள்பாலித்து வந்த[41] பகவதி தேவியைத் தம் தெய்வமாகக் கொண்டாடினார்கள். மீனமாதத்தில் இன்றுவரை கொண்டாடப்பட்டு வரும் கொடுங்கோளூர்ப் பரணி எனும் திருவிழா இவர்களுக்குரியதே.

ஒன்றுகுறை ஆயிரத்தவர் படைகளைத் தவிர சேரமானின் அணுக்கமான திருமெய்க்காப்புப் படையாகத் திகழ்ந்தது 'உடன் நின்ற பரிவாரத்தார்' என்றும் 'சேவகர்' என்றும் 'சாவீர்' என்றும் அழைக்கப்பட்ட தற்கொலைப் படையாகும்[42]. இப்படையின் நோக்கங்கள் ஏறக்குறைய சோழரின் உடன்கூட்டத்துப் படைகளையும் பாண்டியரின் தென்னவன் ஆபத்துதவிகளையும் ஒக்கும் இவர்களுடைய அதிகாரங்களையும் கடமைகளையும் செயல்பாடுகளையும் வெளிநாட்டுப் பயணிகள் பலரும் வியந்து துல்லியமாகப் பதிவு செய்திருக்கின்றனர்.

அரசன் காலையில் துயிலெழுவது முதல் இரவு பள்ளியறைக்குச் செல்வது வரை அவரது ஒவ்வொரு செயல்பாட்டிலும் இப்படையினரின் தலையீடு இருந்தது. கண்காணிப்பு இருந்தது பாதுகாப்பு இருந்தது. உயிரைக் கொடுத்தாவது அரசரைக் காப்பது. ஒருவேளை சக்தி [illegible]போய் அரசனைப் பறிகொடுக்க நேர்ந்தால் அவருடன் [illegible]ம் பிராணத் தியாகம் செய்வது என்னும் பயங்கரமான [illegible]த்தை இப்படையினர் ஏற்றிருந்தனர் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அரசனுக்காக தமது உயிரையும் கொடுக்க முன் வருபவர்களுக்குப் பிரத்யேக அதிகாரங்கள் இருந்ததில் வியப்பில்லை அல்லவா?

* * * * * * * *

[41] இன்றளவிற்கும் இக்கோயில் கேரளத்தின் புகழ்பெற்ற [illegible]கோயில்களுள் ஒன்றாக விளங்குகிறது.
[42] [illegible] படையினரைப் பற்றிய குறிப்புக்கள் தொன்றுதொட்டு [illegible]வருவதை வரலாற்று வல்லுனர்கள் குறிப்பிட்டுள்ளனர். [illegible]டில்யரின் அர்த்தசாஸ்திரம் இவர்களை ஆசன்னர் என்றும் [illegible]ஸாவகர் என்றும் குறிப்பிடும்.



கேரளத்தின் அந்நாளைய நாட்டுப் பிரிவுகளைக் கோடிட்டுக் காடடும் பணடைய படம். நன்றி – திரு. தே. சேஷாத்ரி.

பெருமாள் வம்சத்து அரசர்கள் தங்களைக் 'கேரளாதி நாதர்', 'சக்ரவர்த்திகள்' 'கோனேரின்மை கொண்டான் கோ' என்று பற்பல பெயர்களிட்டு அழைத்துக் கொண்டாலும் அவர்களது அரசியல் பலமும் அதிகாரமும் குறுகியதொரு எல்லைக்குள்தான் படர்ந்து கிடந்தது என்பதாகக் கேரள வரலாற்றாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உண்மையில் மலைநாட்டின் அரசியல் பலத்தை பிணயித்தது அதன் பல்வேறு கூறுகளாக அமைந்திருந்த நாடுகளும் அந்தந்த நாடுகளில் தத்தம் அதிகாரத்தைச் செலுத்திய நாடுவாழிகளுமேயாவர். இவர்களைக் கிட்டத் தட்டத் தமிழகத்தின் குறுநில மன்னர்களுக்கு ஒப்பிடலாம். கேரளத்தின் வடக்கே அமைந்திருந்த கொளத்துநாட்டில் தொடங்கி புரைக்கிழநாடு, குறும்பொறை நாடு, இராம வளநாடு, குட்டநாடு என்று விரிந்து தெற்கில் வேணாடு, வள்ளுவநாடு, குறுநாடு, படப்பாநாடு, முடாலநாடு மற்றும் நாஞ்சில் நாட்டில் முடியும் இந்தப் பண்ணைய நிலப் பரப்புகள் கிட்டத்தட்ட பதினெட்டாம் நூற்றாண்டு வரை கூட வழக்கில் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றை இன்றைய வட்ட மாவட்டப் பகுதிகளோடு ஒப்பிடலாம்.

'நாடுவாழிகள்' என்றும் 'நாடுடையவர்கள்' என்றும் அழைக்கப்பட்ட இம்மரபினர் வம்சாவழியாகத் தத்தம் பகுதிகளில் ஆட்சி செலுத்தினர். மகோதயபுரத்தின் சேரமான் பெருமாளின் ஆதிக்கத்திற்கு இவர்கள் உட்பட்டவர்களாகக் காட்டிக் கொண்டாலும் இவர்களுக்கென்று ஆள், அம்பு, படைபலம், அதிகாரம், வருமானம் என்று எல்லாம் இருந்தன. போர்க் காலங்களில் பெருமாளுக்குத் தோள்கொடுத்துத் தத்தம் படைகளை அனுப்பும் கடமை அவர்களுக்குண்டு. பல்வேறு நாட்டுப் பகுதிகளைக் கொண்டிருந்த இந்தக் கூட்டத்தில் வள்ளுவ நாடாழ்வார் கணிசமான அதிகாரங்களைப் பெற்றிருந்தார்.

* * * * * * * *

இவ்வாறாகக் கேரளத்தின் முக்கிய அரசியல் மற்றும் சமுதாய சக்தியாக நாடுவாழிகள் விளங்கினார்களெனில் அவர்களை ஈடுகட்டும் மற்றொரு வலிமை வாய்ந்த பிரிவினராக நம்பூதிரி அந்தணர்கள் வளர்ந்திருந்தார்கள். ...ஷுபர்யனான[43] பார்க்கவ இராமன் தன்னுடைய வலிமை வாய்ந்த கோடாரியைக் கொண்டு ஸ்தாபிதம் செய்த பிரம்ம க்ஷேத்திரமாக கேரள அந்தணர்கள் மலைநாட்டைக் கொண்டாடினார்கள் இவர்களின் மூத்த குடியிருப்புக்கள்

[43] பரசுராமரைக் குறிக்கும் மலையாள சொற்பிரயோகம்.

கேரளமெங்கிலும் முப்பத்தியிரண்டு கிராமங்களில்[44] வேரூன்றியிருந்தன இவற்றுள் பெருஞ்செல்லூர் முதலான கிராமங்கள் சங்ககாலம் தொட்டு அறியப்பட்டிருந்தவை.

கேரள அந்தணர்கள் தத்தம் கிராமங்களின் பண்டைய ஆகம நூல்களையொட்டிக் கோயில்கள் அமைத்தார்கள். ஊருக்கு மேற்கே விஷ்ணு பட்டாரகருக்கான மேற்றளியும் கிழக்கே சிவபெருமானுக்குரிய கீழ்த்தளியும் தோன்றின கோயில்களுக்கு நிலங்கள் நிவந்தங்களாகக் கொடுக்கப் பட்டன. கோயிலின் வழிபாடுகளைக் கண்காணிக்கவும் ஊரை நிர்வகிக்கவும் மகாசபை என்னும் அமைப்புக்கள் தோன்றின. இவற்றுள் அரசியல் வலிமை வாய்ந்த அமைப்பாக உருவானது மகோதயபுரத்தின் 'நாலுதளிச் சபை' என்றழைக்கப்பட்ட அமைப்பாகும்.

மகோதகையின் நான்கு திக்குகளிலும் அமைந்திருந்த மூழிக்குளம், ஐராணிக்குளம், பரவூர் மற்றும் இரிஞ்ஞாலக் குடை என்னும் அந்தணக் கிராமங்களில் அமைந்திருந்த கீழ்த்தளி[45], மேற்றளி, நெடியதளி, சிங்கபுரத்தளி என்றழைக்கப்பட்ட நான்கு திருக்கோயில்களின் தளியதி காரிகளைக் கொண்டிருந்ததொரு அமைப்பாகும் இது. ஒவ்வொரு கோயிலிலிருந்தும் இரண்டு தளியதிகாரிகள் இந்த அமைப்பில் செயல்பட்டார்கள். நாலுதளிச் சபை சேரமான் பெருமாளின் அந்தரங்க ஆலோசனைக்குழுவாக விளங்கியது மிகவும் குறிப்பிடத்தக்கது. நாலுதளிச்சபைக் கூட்டங்கள் அனைத்திலும் அரசரின் பிரதிநிதியாகக் 'கோயிலதிகாரிகள்' என்றழைக்கப்பட்டவர் கலந்து கொள்வது வழக்கம்.

மேற்குறிப்பிட்ட நான்கு கிராமங்களும் கேரள மெங்கிலும் அமைந்திருந்த முப்பத்தியிரண்டு கிராமங் களுக்கும் தலைமைச் செயலகங்களாக விளங்கியதால் நாலு தளிச்சபை கேரளத்தின் வலிமை வாய்ந்ததொரு பிரிவினரின் ஒருமித்த குரலாகவே ஒலித்தது. தமிழகம் முழுவதும் அக்காலத்தில் பல்லாயிரக்கணக்கான கோயில்கள் இருந்தும் கேரளத்தின் நாலு தளிச்சபைக்கு இணையான அரசியல் -

---

[44] இந்த 32 கிராமங்களும் வரலாற்றாசிரியர்களால் இன்றைய தேதியில் அடையாளம் காணப்பட்டு விட்டன என்பது குறிபபிடததககது.
[45] இது திருவஞ்சைக்களக் கோயிலாகக் கொள்ளப்படுகிறது.

சமுதாய அமைப்பு இங்கு தோன்றவேயில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இவ்வாறாக நாடுவாழிகள் ஒரு புறம், ஆயிரத்தவர் மற்றொரு புறம், நாலுதளிச்சபை வேறொரு புறம், இதர சக்திகள் இன்னொரு புறம் என்று பெருமாள் அரசர்கள் பல்வேறு சக்திகளால் சூழப்பட்டிருந்தனர். இவர்களை அனுசரித்துக் கொண்டுதான் முக்கிய தீர்மானங்களை எடுக்கவேண்டி வந்தது.

இந்தப் பின்புலத்தை வாசகர்கள் ஆழமாக மனதில் நிறுத்திக் கொள்ளும்படி கோருகிறோம்.

*   *   *   *   *   *   *   *

கேரள அந்தணர்கள் சாலை அல்லது சாலா (வடமொழியில் ஜ்வாலா) என்றழைக்கப்பட்ட உயர்கல்வி அமைப்பை உருவாக்கியிருந்தார்கள். இது கிட்டத்தட்ட பல்லவர்களின் 'கடிகா' அல்லது 'கடிகை' என்கிற கல்வியமைப்பை ஒத்திருந்தாலும் கேரளத்தின் கலாச்சாரப் பின்புலத்தையொட்டி பல்வேறு அம்சங்களில் வேறுபட்டும் நிகழ்ந்தது. இந்த வேறுபாடுகளுள் குறிப்பிடத்தக்கது சாலைகளில் பயிற்றுவிக்கப்பட்ட ஆயுதப்பயிற்சிகள் மற்றும் தற்காப்புப் பயிற்சி முறைகளாகும்.

அந்நாளில் தென்னகத்தின் பல்வேறு பகுதிகளிலும் விதவிதமான சண்டைப் பயிற்சி முறைகள் பயிற்றுவிக்கப் பட்டன. பொதுப் பயிற்சிகளான வாள் வித்தை, வில்வித்தை, மல்யுத்தம், சிலம்பம் முதலானவை தவிரப் பிராந்தியக் குழுக்களுக்கென்றமைந்த பிரத்யேக ஆயுதப் பயிற்சிகளும் சொல்லிக் கொடுக்கப்பட்டன. உதாரணமாக பாண்டியரின் தென்னவன் ஆபத்துதவிகளுக்கென்று தனித்ததொரு பயிற்சிக்கூடம் செயல்பட்டதாக மூத்த வரலாற்றாசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் தெரிவிக்கிறார்[46].

கேரளத்தின் சாலை மையங்களில் கருக்கொண்ட உள்ளிதத் தற்காப்புப் பயிற்சி முறைகள் முதுபெரும் ஆசான்களால் உருவாக்கப்பட்டு நுட்பமான முறையில் பயிற்றுவிக்கப்பட்டன. இச்சாலைப் பயிற்சிகளே பின்னாளில்

---

[46] The Pandyan Kingdom, K.A.Nilakanda Sastri, Madras University Publication.

கேரளத்தின் புகழ் பெற்ற களரிக் கலையாகப் பரிமளித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

உடல் - உடலின் பலம் மனம் - மனதின் பலம் - உடல் மற்றும் மனதிற்கு அப்பாற்பட்ட பிராணசக்தி எனும் ஐந்தின் துணை கொண்டு[47] அற்புதமான முறையில் உருவாக்கப்பட்டிருந்த ஆயுதப் பயிற்சியானது சாலைகளில் பயின்ற அந்தண இளைஞர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டது. இம்மாணவர்கள் 'சட்டர்கள்' அல்லது 'சாத்திரர்கள்' என்றழைக்கப்பட்டனர்கள் பின்னாளில் உருவான சட்டாம் பிள்ளை என்னும் வார்த்தைக்குச் 'சட்டன்' என்பதே வேர்ச் சொல்லாகும்.

மாணவர்களிடையே 'கலங்கள்' என்றழைக்கப்படும் பிரிவுகள் இருந்தன பவிஷிய சரணத்தார் கலம், தைத்திரிய சரணத்தார் கலம். தலவகார சரணத்தார் கலம் என்று ஒவ்வொரு கலத்திற்கும் வேதாகமங்களையொட்டி ஒரு பெயர். வேதம், வேதாந்தம், வியாகர்ணம், பண்டைய சாத்திரங்கள், அரசியல் விவகாரங்கள், மருத்துவம், விஞ்ஞானம், மாந்திரீகம், வர்மம், நுண்கலைகள் என்று பல்வேறு பாடங்களும் சாலைகளில் பயிற்றுவிக்கப்பட்டன[48]

அரசர்கள் சாலைகளுக்கு நிலங்களை நிவந்தங்களாகக் கொடுத்து ஆதரித்தார்கள் இவற்றுக்குச் சாலாபோகம் என்று பெயர் இதற்குப் பிரதியுபகாரமாகச் சாலையின் சட்டர்கள் போர் வீரர்களைப் பயிற்றுவித்திருக்க வேண்டும் என்று யூகிக்க வேண்டியிருக்கிறது. வேணாட்டின் பார்த்திவசேகரபுரத்தில்[49] ஆய்வேளரசர் கோக்கருந்தடக்கன் ஒரு புதிய சாலை அமைத்ததையும் அதற்குச் சாலா போகமாக நிவந்தங்கள் கொடுக்கப்பட்டதையும் பதிவு செய்யும் முக்கிய வரலாற்று ஆவணமே பார்த்திவசேகரபுரச்

---

[47] களரியைப் பற்றி பிலிப் ஸர்ரிலி என்னும் வெளிநாட்டுப் பேராசிரியர் ஒருவர் பலகாலம் ஆராய்ந்து "When body becomes all eyes" ("உடல் முழுவதும் கண்களானால்...") என்றொரு புத்தகம் வெளியிட்டுள்ளார். இப்புத்தகத்தின் பெயரே இக்கலையையின் இயல்பை மிகச் சிறப்பாக அறிமுகப்படுத்துகிறது.

[48] இராஜஸ்தானக் கவிஞரான உத்யோதனசூரி என்பவர் எழுதிய குவலயமாலா எனும் ஜைனகாவியத்தில் அந்நாளைய சாலா நிறுவனங்களைப் பற்றிய துல்லியமான சித்திரம் கிடைக்கிறது.

[49] இன்றைய நாகர்கோயிலுக்கருகில் முன்சிறை என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

செப்பேடுகளாகும். அந்நாளைய சாலைகளின் இயக்கத்தைப் புரிந்து கொள்ள இந்த ஆவணம் பெரிதும் பயன்படுகிறது. காந்தளூர்ச் சாலையின் செயல்பாடுகளை முன்மாதிரியாகக் கொண்டே இச்சாலையின் செயல்பாடுகள் வரையறுக்கப் பட்டன என்பது கவனிக்கத்தக்கது.

பார்த்திவசேகரபுரச் சாலையைத் தவிர தெற்கே புறத்தாய நாட்டில் கன்னியாகுமரியில் ஸ்ரீவல்லபப் பெருஞ் சாலை என்றழைக்கப்பட்ட மற்றொரு சாலையும் செயல் பட்டது சோழர்காலக் கல்வெட்டுக்களால் தெரியவருகிறது

இதுவரை கேரளத்தின் இடைக்கால சமூக அரசியல் பின்னணி விவரிக்கப்பட்டது. இனிக் கேரள அரசர்களுக்கும் தமிழக அரசர்களுக்கும் நிலவி வந்த அரசியல் உறவுகளை ஒரு பறவைப் பார்வை பார்த்துவிட்டு மேலே நகர்ந்து விடுவோம்.

* * * * * * * *

பன்னெடுங்காலமாகக் கேரளம் தமிழகத்தோடு கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகளால் கேரளத்தின் குறுநில மன்னர்களும் இதர பிரிவினரும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் குடிபெயர்ந்தனர் இக்குடியினருள் மிகத் தொன்மையானவர்கள் "தில்லை மூவாயிரவர்" என்று சுந்தரமூர்த்திப் பெருமானால் குறிக்கப்படும் சிதம்பரத்தின் தில்லைவாழ் அந்தணர்களாவர் இவர்கள் அறுபத்து நான்கு நாயன்மார்களுள் ஒருவராகத் திருத்தொண்டர் தொகையில் குறிக்கப்படுவர்.


சோழ அரசர்கள் தில்லையம்பதியின் பெருமானைத் தங்கள் குலநாயகம் (குலதெய்வம்) என்று குறித்தனர். சோழ வம்சத்தவர் சக்ரவர்த்தியாக முடிசூடும்போது மணிமுடியை மன்னரின் முடியில் இருத்தும் உரிமை தில்லைவாழ் அந்தணர்களுக்கே உரியது. ஆகவே சோழர்களின் பட்டமேற்பு வைபவம் தில்லையம்பதியின் நடராஜப் பெருமான் முன்னிலையில்தான் நடந்திருக்க வேண்டும் என்று யூகிக்க முடிகிறது.

சிதம்பரத்தைத் தவிர திருச்சிக்கருகில் அமைந்துள்ள பழுவூரிலும்[50] பலகாலமாகவே கேரள மரபினர் வாழ்ந்து வந்தனர் என்பது திருஞானசம்மந்தரின் பழுவூர்ப் பதிகத்தால் தெளிவாகும். பழுவூரை 'மன்னுபெரும் பழுவூர்' என்றே கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. சோழர் காலத்தில் இப்பகுதி கேரள மரபைச் சார்ந்த பழுவேட்டரையர்கள் என்னும் குறுநில மன்னர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டு விளங்கியது. சோழவம்சத்து அரசர்களுக்கும் பழுவூர் வம்சத்தாருக்கும் நெருங்கிய அரசியல் உறவு அமைந்திருந்தது என்பதை அவர்களது மணவினைத் தொடர்புகளால் உறுதி செய்யலாம்.

பிற்காலச் சோழர்களுள் பெருவீரராக விளங்கிய முதலாம் ஆதித்தசோழர் காலத்தில் சோழ - கேரள உறவு மிக நெருக்கமாக மலர்ந்தது. அவருடைய காலத்தில் சேர நாட்டை ஆண்ட ஸ்தாணு இரவிப் பெருமாளுடன் ஆதித்தர் நெருங்கிய நட்புப் பூண்டிருந்தார் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். இந்த நட்புக்கு அந்நாளைய அரசியல் சூழல்களும் ஒரு காரணம் என்று குறிப்பிடுவதில் தவறில்லை.

தில்லைஸ்தானத்தில் கிடைத்ததொரு கல்வெட்டில் ஸ்தாணு இரவியும் ஆதித்த சோழரும் இணைந்து கங்க ராஜவம்சத்தைச் சேர்ந்த விக்கியண்ணனுக்குப் போரில் அவர் புனைந்த வீரச்செயல்களைப் பாராட்டும் விதமாகச் 'செம்பியன் தமிழ்வேள்' என்னும் பட்டமும் பல உரிமைகளும் கொடுத்துச் சிறப்பிக்கும் முக்கியச் செய்தி காணக் கிடைக்கிறது.

[50] பழுவூர் இன்று திருச்சியிலிருந்து அரியலூருக்குச் செல்லும் சாலையில் மேலைப் பழுவூர் கீழைப்பழுவூர் என்று இரண்டு ஊர்களாகக் காட்சியளிக்கிறது. இவ்வூர்களில் அமைந்துள்ள அவனி கந்தர்ப்ப ஈசுவரகிருஹம், தென் வாயில் ஸ்ரீ கோயில், ஆலந்துறையார் கோயில் முதலானவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.



சோழ இராஜ குடும்பம்



வீரநாராயணபுரம் (காட்டுமன்னார் கோயில்) விண்ணகரம்.
வைணவ ஆச்சாரியர் ஸ்ரீ நாதமுனிகள் அவதரித்த தலம்.

இவ்வாறு ஆதித்தர் காலத்தில் மலர்ந்த சேர-சோழ உறவு அவரது மகனான முதலாம் பராந்தகர் காலத்தில் மேலும் செழித்தோங்கியது கிபி 907ல் பட்டமேற்ற பராந்தகர் ஸ்தாணு இரவியின் பெயர்த்தியும் சேர இளவரசியுமான கோக்கிழானடிகளைக் கைப்பிடித்தார். பராந்தகருக்கும் சேர இளவரசியாருக்கும் பிறந்தவரே வம்சத் தலைமகனும் சோழ இளவரசருமான இராஜாதித்தராவார்.

சேர இராஜ குலத்தினர் தமது வம்சத்திலிருந்து பிறந்த கொழுந்து என்பதால் இராஜாதித்தரிடம் சிறப்பான பற்றுதல் கொண்டிருந்தனர். சோழ சைனியத்தின் வடதிசை மாதண்ட நாயகராக விளங்கிய இராஜாதித்தரின் படை யமைப்பில் கேரள வீரர்களைக் கொண்டதொரு தனிப்படை இயங்கி வந்தது. இராஜாதித்தரின் அந்தரங்க

[illegible]ய்க்காப்பாளராகவும் சேனாநிநாயகமாக விளங்கியவரும் [illegible]லைநாட்டின் வள்ளுவ நாடுவாழிகள் குடும்பத்தைச் [illegible]ர்ந்த மகாவீரர் நந்திக்கரைப்புத்தூர் வெள்ளங்குமரன்[51] [illegible]வார்.

பராந்தகர் காலத்தில் உடையார்குடிக்கருகில்[52] வீர [illegible]ராயணபுரம்[53] என்னும் சதுர்வேதி மங்கலக் குடியேற்றமும் அதனையொட்டி அனந்தீசுவரம் என்னும் திருக்கற்றளியும் [illegible]ருவாக்கப்பட்டன. இப்பகுதியில் பல காலமாகவே புகழ் [illegible]ற்றதொரு திருமால் கோயில் இருந்து வந்தது குறிப்பிடத் [illegible]க்கது. வைணவ ஆழ்வார்கள் இத்தலத்தின் வீரநாராயணப் [illegible]ருமாளைப் பாடியுள்ளனர். இவ்வாறு கீழ்த்தளியான [illegible]னந்தீசுவரம் மேற்றளியான விண்ணகரக் கோயில் என்று [illegible]விதமான இலக்கணங்களுடனும் உருவான வீர [illegible]ராயணச் சதுர்வேதி மங்கலத்தில் மிகக் கணிசமான [illegible]ளவில் கேரள அந்தணர்கள் குடியேறினார்கள்.

[illegible]டலையொத்த எழுபத்து நான்கு கணவாய்களுடன் [illegible] வீரநாராயண ஏரியை இப்பகுதியில் வெட்டுவித்தவர் [illegible]வரசர் இராஜாதித்தராவார். ஏரியின் கட்டுமானம் [illegible]குதியின் விவசாய நிலவரத்தை மேலும் வளமாக்க [illegible]ட்டத்திற்கு முப்போகம் காணக்கூடிய நிலையை வீர [illegible]ராயணபுரம் விரைவில் எய்திற்று.

இவ்வாறு நாளொரு மேனியும் பொழுதொரு [illegible]முமாக சேர சோழர் உறவில் முதற்பெரும் விரிசலை [illegible]த்தியது தக்கோலப் பெரும்போர் ஆகும் முதலாம் [illegible] சோழர் இராஷ்டிரகூடத்து இளவரசியை மணந்து [illegible] மூலம் கன்னரதேவன் என்றொரு மகனைப் [illegible]ருந்தார் கன்னரத் தேவன் பட்டமேற்காமல் பராந்தகர் [illegible] சிம்மாசனம் ஏறியது இராஷ்டிரகூடர்களுக்குப் [illegible]வில்லை. பகை முற்றியது. இராஷ்டிரகூடத்து மன்னர் [illegible] கிருஷ்ணன் சோழராஜ்ஜியத்தின் மீது பெரும்

[illegible]ore Archaeological Series Vol I Page 291. நந்திக்கரைப்புத்தூர் என்பது [illegible]கரையைக குறிக்கும்.

[illegible] தேதியில் இப்பதி காட்டு மன்னார் கோயில் என்றழைக்கப் [illegible].

[illegible]ணன் என்பது பராந்தகரின் பட்டப் பெயராகும். காலின் [illegible] காலதது ஓலைச்சுவடி நூலான கொங்கு தேச இராஜாக்கள் [illegible]தகம இவரை வீரசோழநாராயணன என்று குறிப்பிடுவது [illegible] கருததககது.

படையுடன் போர்தொடுத்தார். தொண்டை மண்டலத்தில் தக்கோலம் எனுமிடத்தில் இரண்டு படைகளும் மிகக் கடுமையாக மோதிக்கொண்டன. இப்பெரும்போரில் கங்க அரசன் பூதுகன் யானை மீதிருந்த இளவரசர் இராஜாதித்தரைத் தாக்கிக் கொல்ல 'ஆனைமேற் துஞ்சிய தேவர்' என்ற பெயரில் பூவுலகம் விட்டுப் புகழுலகம் எய்தினார் இளவரசர். தமது வம்சத்து இளவல் சோழ சிங்காதனமேறப் போகிறான் என்கிற களிப்பில் நின்ற சேரரை இது கடுமையாகப் பாதித்தது.



கடல் போன்று பரந்து விரிந்த வீராணம் ஏரிக்கரையில் கதாசிரியர்.

சோழநாட்டின் அரசியல் நிலவரம் இதற்குப்பின் படிப்படியாக பலம் குன்றியே காணப்பட்டது வடக்கே இராஷ்டிரகூடர்கள் நாளுக்கு நாள் பலம்பெற்று வளர்ந்து கொண்டிருந்தார்கள். தெற்கிலோ பாண்டியர் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பல்வேறு தொல்லைகளைக் கொடுத்து வந்தார்கள். பராந்தகர் மிகவும் மெனக்கெட்டு இலங்கைவரை படையெடுத்துச் சென்றும் பாண்டிய குல தனமான "சுந்தர முடியையும் இந்திர ஹாரத்தையும்" கைப்பற்ற முடியவில்லை

இதற்கிடையில் கேரளத்துடன் தாய்வழியில் உறவு பூண்டிருந்த பாண்டிய அரசர் இராஜசிம்மர் மலைநாட்டில் அடைக்கலம் புகுந்து அங்கேயே காலமானார். பராந்தகருக்குப் பின்வந்த கண்டராதித்தர், அரிஞ்சய சோழர், அரிஞ்சயரின் புதல்வரான இரண்டாம் பராந்தகர் (சுந்தரச் சோழர்) என்று தொடர்ந்த சோழ இராஜ வம்சத்தில் சேர குலத்துடனான உறவு முன்புபோல் சொல்லிக்கொள்ளும் படியாக இல்லையென்றாலும் அதிகம் க்ஷீணித்துவிடவும் இல்லை. இதற்குக் காரணம் கேரள வம்சத்தைச் சேர்ந்த பழுவேட்டரையர்களுடன் சோழர்கள் தொடர்ந்து நெருக்கமான உறவு பூண்டு வந்ததேயாகும்.

இரண்டாம் பராந்தகர் தமது காலத்தில் உரிய பிராயத்தை எட்டியிருந்த கண்டராதித்தரின் புதல்வர் மதுராந்தகரை அடுத்த இளவரசராக அறிவிக்காமல் தனது தலைமகனான இரண்டாம் ஆதித்தரை இளவரசராகப் பட்டம் கட்டியது பல்வேறு மட்டங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்குமென்று தோன்றுகிறது. இதில் ஏதோ ஒரு வகையில் கடுமையான பாதிப்பையடைந்த உடையார் குடியின் கேரளத்து அந்தணர்கள் சில குறுநில மன்னர்களுடன் சேர்ந்து கொண்டு இரண்டாம் ஆதித்தரைப் படுகொலை செய்துவிட்டு மதுராந்தகரைச் சோழ சிம்மாசனத்தில் அமர்த்தி அழகு பார்த்தார்கள்.

இரண்டாம் ஆதித்தரின் தம்பியான இளைஞர் அருள்மொழிவர்மர் தனது சிற்றப்பா மதுராந்தகர் சோழ சிம்மாசனத்தின் மீது ஈடுபாடு கொண்டிருக்கும் வரை அதனைத் தனது மனதினாலும் தீண்டுவதில்லையென்று திட்டவட்டமாக அறிவித்ததைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் அழுத்தந்திருத்தமாகப் பதிவு செய்துள்ளன[54]

படிப்படியாக பலவீனமடைந்து கொண்டிருந்த சோழ சாம்ராஜ்ஜியத்தை மேலைச்சாளுக்கிய மன்னரான சத்யாச்ரயர் கி.பி. 980ல் தாக்கியபோது[55] உத்தமச் சோழரால் அவரை வெற்றி கொள்ள இயலவில்லை.

[54] இருந்தத தகவலிலிருந்து நேரிடையாகப பெறப்படும் செய்தி என்னவெனில மதுராநதகருககுப பட்டமேறபதில் மிகுநத ஈடுபாடு இருந்தது என்பதே.

[55] பார்க்க நீலகண்ட சாஸ்திரியாரின் "History of South India", சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பு.

இத்தோல்வியின் முடிவில் பல்வேறு அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தபின் வேறு வழியின்றி உத்தமச் சோழர் விலகிக் கொள்ள கி.பி. 985ல் "இராஜராஜன்" என்னும் அபிஷேக நாமத்துடன் அருள்மொழிவர்மர் சோழசிங்காதனத்தில் அமர வழியேற்பட்டது.

பட்டமேற்ற கையோடு அருள்மொழி செய்த முதல் காரியம் தனது தமையனார் ஆதித்த கரிகாலர் கொலையில் ஈடுபட்டிருந்த உடையார்குடிக் கூட்டத்தைக் கண்டுபிடித்து தண்டித்ததே ஆகும். உடையார்குடி அனந்தீஸ்வரம் திருக்கோயிலின் விமான மேற்குச் சுவரில் பொறிக்கப் பட்டுள்ள அவரது இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[56] இதற்குத் தெளிவான சான்று[57] பகர்கிறது.

இது ஏற்கனவே அவருக்கெதிராகச் செயல்பட்டுக் கொண்டிருந்த அரசியல் சக்திகளை மேலும் கோபப் படுத்தியது. அவர்கள் அமரபுஜங்கப் பாண்டியரைப் புரட்சி செய்யத் தூண்டினார்கள். மதுரையில் மீண்டும் மீன்கொடி பறந்தது.

இராஜராஜர் சிறியதொரு மதுரைக்குப் படையெடுத்தார். அவர் மதுரையின் எல்லையில் கால் பதிக்கும் முன்னரே பாண்டியர் சேரநாட்டிற்குத் தப்பியோடி விட்டதாகச் செய்தி கிடைத்தது. சரி, பாண்டியரைத்தான் பிடிக்க முடியவில்லை. அவரைத் தூண்டி விட்ட சக்திகளை யாவது ஒரு கை பார்த்து விடுவோம் என்று களமிறங்கிய வேளையில்தான் அந்தச் செய்தி அவருக்குக் கிடைத்தது.

ஓ! எத்தனை பயங்கரமான செய்தி அது...

[56] Epigraphia Indica, Vol.21, No. 27.

[57] இக்கல்வெட்டு ஒரு நில விற்பனைச் சாசனமேயன்றிக் கொலைக்கான தண்டனையை அளித்ததற்கான நேரடி அரச ஆணை அல்ல. என்றாலும் இப்புதினத்தைப் பொறுத்தவரையில் கொலையாளிகள் முதலாம் இராஜ ராஜரின் காலத்தில்தான் தண்டனைக்குட்படுத்தப்பட்டார்கள் என்கிற கருத்தாக்கம் எடுத்தாளப்பட்டுள்ளது.

7. நந்தவனத்தில் ஓர் ஆண்டி



இளையவர் என்று நாம் அன்புடன் அழைக்கும் கம்பன் மணியனார், பல்லவ ராயர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே சத்திரத்தின் வாசலுக்கு வந்து வீதியில் நிலவிய போக்குவரத்தைப் பார்வை யிட்டார். அவர்கள் தங்கியிருந்த வானவன் மாதேவிச் சத்திரமானது நகரின் நெரிசல் மிகுந்த மையப்பகுதியில் அமைந்திருந்ததால் அந்தக் காலை நேரத்திலும் சுறுசுறுப்புடன் காணப்பட்டது.

சத்திரத்தின் வாயிலில் அமைந்திருந்த அப்பக் கடையில்[58] ஒரே கூட்டம். உணவை இரசித்துச் சுவை பார்க்க நேரமில்லாத வணிகர்கள் வியாபார அவசரத்தில் கிடைத்ததை வாயில் போட்டுக்கொண்டு கிளம்ப எத்தனித்தார்கள். ஒரு சில இளைஞர்கள் அப்பத்தின் சூடு தணியும்வரை பொறுத்திருக்க முடியாமல் சூடான பதார்த்தங்களை அப்படியே அள்ளி வாயில் போட்டுக் கொண்டு விட்டு நாக்கு பொரிந்துபோய் அவஸ்தைப் பட்டார்கள். கடையில் அப்பங்களை விநியோகித்துக் கொண்டிருந்த கிழவி "ஏனப்பா, அப்படியென்ன அவசரம்? கொஞ்சம் நிதானமாய்த்தான் சாப்பிட்டுவிட்டுப் போயேன்... நிம்மதியாக அமர்ந்து சாப்பிடக்கூட முடியாமல் அப்படி என்ன பிழைப்போ!" என்று அலுத்துக் கொண்டாள். "ஐயோ, எங்களது அவசரம் உனக்கெங்கே புரியப்போகிறது பாட்டி? இன்னும் ஒரு நாழிகை நேரத்தில் கிளம்பும் கடாரத்துக் கப்பலைப் பிடித்தாக வேண்டும்!" என்று அத்தனை அவசரத்திலும் ஓரிருவர் அவளுக்குப் பதில் சொல்லிவிட்டுப் போனார்கள்.

பக்தியுடன் உடலெங்கிலும் திருநீறு பூசிக் காரோணர் திருக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் கூட்டம் வீதியில் சற்று அதிகமாகவே தெரிந்தது. இந்த பக்தர்களில்தான் எத்தனை வகையினர்! முகத்தில் கருஞ்சந்தனம் பூசிப் பார்ப்பதற்கு மிகப் பயங்கரமாகக் காட்சியளித்த

[58] பண்டைய தமிழரின் உணவு வகைகளில் அப்பம் முக்கியமான இடத்தைப் பிடித்திருந்தது கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகிறது.

காலாமுகர்கள்[59]... அவர்களைவிடப் பயங்கரம் ததும்பும் விதமாக மண்டையோட்டைக் கையிலேந்தி அதனை அனைவருக்கும் காட்டியபடி நடந்து சென்ற காபாலிகர்கள்... தாடி மீசை துலங்க சாந்தமாகச் செல்லும் பாசுபத மஹா விரதிகள்... நாகையின் பல்வேறு சைவ மடங்களைச் சார்ந்த சிவயோகிகள்... தபஸ்விகள்... இல்லறத்தார்... முதியவர்கள்... சிறுவர்கள்.... இவர் இன்னார் என்று பக்தர்களைப் பாகுபடுத்தாது அத்தனை பேரையும் ஒருசேர ஆட்கொள்ளும் காரோணத்துப் பெருமான்...

நாகை கொடுத்து வைத்த பதிதான்! என்று இளையவருக்குத் தோன்றியது. அப்பர் பெருமானின் காரோணத்துப் பதிகமொன்றினை அவரது அன்னையார் அடிக்கடி பாடுவதும் உடனே நினைவுக்கு வந்தது.

நிருத்தனை நிமலன் தன்னை
நீள் நிலம் விண்ணின் மிக்க
விருத்தனை வேத வித்தை
விளை பொருள் மூலம் ஆன
கருத்தனை கடல்சூழ் நாகைக்
காரோணம் கோயில் கொண்ட
ஒருத்தனை உணர்தலால் நாம்
உய்யவா! நெஞ்சினீரே!

தமிழ் எப்படியெல்லாம் அந்தக் கிழவரிடம் துள்ளித் துள்ளி நடம் பயின்றிருக்கிறது என்று வியப்பேற்பட்டது. நிருத்தனை, விருத்தனை, கருத்தனை, ஒருத்தனை! ஐயா, உமது புகழ் வானுள்ளவரை வாழும்.

"என்ன பலத்த யோசனை போலிருக்கிறது?" என்றபடி பக்கத்தில் வந்து நின்ற பல்லவராயரின் மேல் பார்வையைத் திருப்பிய இளையவரின் முகம் வியப்பால் சற்று விரிந்தது. உடல் முழுவதும் திருநீறு பூசிக் காவியுடை உடுத்தி தலையில் முக்காடிட்டுக் கொண்டு...

"இது என்ன சன்னியாசிக் கோலம்?"

---

[59] காலா முகம் என்றால் கரிய முகம் என்று பொருள்படும். இவர்கள் பண்டைய சைவ மரபில் ஒரு பிரிவினர்.

"போகுமிடத்திற்குத் தக்கவாறுதான் நானும் ஆயத்தமாகியிருக்கிறேன். கடல்சூழ் நாகையில் 'கற்றவர் பாடும் காரோணத்தான்' திருக்கோயிலுக்குச் செல்லும் முறை இதுதானே...?"



காரோணம் திருக்கோயில் கோபுரம், நாகப்பட்டினம்.

"ஐயா பல்லவராயரே! சற்று நேரத்திற்கு முன்புதான் ...நாதிட்ட விஹாரைக்குச் செல்லப் போவதாகக் கூறினீர்களே? அது என்ன ஆயிற்று?"

"ஓ! அதுவா? திட்டம் மாறிவிட்டது. காரோணப் பதிக்குச் செல்லும்படி தற்போது உத்தரவு."

"இரண்டு நாழிகைகளில் திட்டம் மாறிவிட்டதா என்ன?"

"சோழராஜாங்கப் பணியில் இரண்டு நிமிடங்களுக்குள்ளாகக் கூடத் திட்டங்கள் மாறுவதுண்டு!"

ஒன்றும் பேசத் தோன்றாமல் விரிந்த விழிகளுடன் தன்னைப் பார்க்கும் இளையவரைக் கருணையுடன் நோக்கினார் பல்லவராயர்.

"ஏனடா இந்தக் கிழவனிடம் வந்து வலுவில் மாட்டிக் கொண்டோம்? பேசாமல் தொண்டை மண்டலத்திலேயே

நிம்மதியாகக் காலத்தைக் கழித்திருக்கலாம் என்று தோன்றுகிறதாக்கும்?"

'இல்லை' என்றுதான் சொல்ல நினைத்தார் இளையவர். ஆனால் வியப்பில் வார்த்தைகள் நாவில் எழவில்லை. உள்ளதை அப்படியே சொல்லிவிட்டாரே பல்லவராயர்?

"இந்தக் கேள்வியை நான் கேட்டேயிருக்க வேண்டாம்!" என்று அலுத்துக்கொண்ட பல்லவராயர் "வாருங்கள், சிவனடியார்களோடு அடியார்களாக நாமும் செல்வோம்" என்றபடித் தெருவில் இறங்கிக் கூட்டத்தில் கலந்தார். அவருடைய தோற்றம் இதர சிவயோகிகளின் தோற்றத்தோடு பெரிதும் பொருந்தியிருக்க இளையவர் மட்டும் பட்டு மெய்ப்பை தலைப்பாகை சகிதம் அந்தக் குழுமத்தில் மிக வித்தியாசமானவராகத் தெரிந்தார்.

இருவரும் சிறிது நேரம் மௌனமாக நடந்தார்கள். எங்கே தப்பித்தவறிப் பேச்சுக்கொடுத்தால் காயாரோகணப் பெருமானின் கருணாவிலாசத்தைப் பல்லவராயர் விளக்க ஆரம்பித்து விடுவாரோ என்கிற பயம் போலும் இளையவருக்கு. நல்லவேளையாகப் பல்லவராயரே வேறு விஷயங்களைப் பற்றிப் பேச்சுக் கொடுக்கத் தலைப்பட்டார்.

"நாகையில் சோழ இராஜாங்கத்தின் அக்கசாலை இயங்கி வருவது உமக்குத் தெரியுமா?"

"என்ன? சோழரின் புலி இலச்சினை பதித்த தங்க நாணயங்கள் அனைத்தையும் இங்கா உருவாக்குகிறார்கள்?"

"இல்லை. பெரும்பாலான நாணயங்கள் பழையாறைக்கருகில் அமைந்திருக்கும் கம்பட்டத்தில்தான் உருவாக்கப்படுகின்றன. அதுதான் அளவில் பெரியது. இங்கு அமைந்திருக்கும் அக்கசாலை வணிகர்களின் வசதிக்காக ஏற்படுத்தப்பட்டது. பழையாறை கம்பட்டத்தைவிட அளவில் மிகச் சிறியது."

"ஓ!"

"அக்கசாலையைப் பற்றி எதற்காகக் குறிப்பிட்டேன் என்றால் இன்று மாலை நீர்..."

அவர்களுக்குப் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்த காவியுடை சன்னியாசிக்கு ஏதோ வேகம் பிறந்து விட்டது போலும். சடாரென்று இளையவரின் தோள்களின் மீது பலமாக மோதிவிட்டு ஒன்றும் கூறாமல் மேலே நடக்கத்

துவங்கினார். பேச்சில் மூழ்கியிருந்த இளையவர் இந்த எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போக, பல்லவராயர் சட்டென்று அவரது தோள்களை உறுதியாகப் பற்றி நாகையின் புனித மண்ணைக் கவ்வும் அபாயத்திலிருந்து அவரைக் காப்பாற்றினார்.

"சே! என்ன மனிதர்களோ! இப்படி இடித்துவிட்டுத் திரும்பிக் கூடப் பார்க்காமல் போய்க்கொண்டிருக்கிறாரே!" என்று அலுத்துக் கொண்டார் மணியர்.

"அந்த தாடி மீசைக் கிழவனுக்குத் திமிர் அதிகம்தான் உடனடியாக அவனுக்குப் பாடம் புகட்டியாக வேண்டும்!"

"அடடா, எதற்கு வீண் வம்பு பல்லவராயரே? பாவம்! பார்த்தால் சிவயோகியாகத் தெரிகிறார். போனால் போகிற தென்று விட்டு விடுவோம்..."

"போகிறதாவது.. விடுவதாவது? கபட சன்னியாசி அவன். உடனடியாக அவனைப் பிடித்து..." - மணியர் தடுத்தும் கேளாமல் கூட்டத்தை விலக்கிக்கொண்டு பல்லவராயர் அந்த சன்னியாசியைப் பிடிக்க முற்பட்டார். தெருவை அடைத்துக் கொண்டிருந்த கூட்டத்தில் அந்தக் கிழவரைப் பிடிப்பது முடிகிற காரியமாக இல்லை. என்றாலும் பல்லவராயர் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்தார். வேறு வழியின்றி இளையவரும் கூட்டத்தைப் பலவந்தமாக விலக்கியபடி முன்னேற வேண்டியிருந்தது.

சிறிது தூரத்திலேயே காரோணர் திருக்கோயிலின் கோபுரம் கண்களுக்குப் புலப்பட்டது. கோபுரத்திற்கு முன்னதாகப் பெருங்கூட்டம் கூடியிருந்தது. அந்தக் கூட்டத்தில் கலந்துவிட்டால் யானையைக்கூடக் கண்டு பிடிக்க முடியாது. எள் விழுந்தால் எண்ணை பிதுங்கி விடும்படியாக அப்படியொரு கூட்டம்!

"கோபுரத்தை நெருங்குவதற்குள் அவனைப் பிடிக்காமல் விடுவதில்லை!" என்று முணுமுணுத்தபடி ஆவேசத்துடன் பின்தொடர்ந்து கொண்டிருந்தார் பல்லவராயர்.

அந்த சன்னியாசி சட்டென்று திரும்பி தன்னைப் பின் தொடரும் இருவரையும் பார்த்தார். அடுத்த கணம் "ஹா! ஹா! ஹா!" வென்று பெருங்குரலுடன் கூடிய சிரிப்பொன்று அடிவயிற்றிலிருந்து எழுந்தது. இளையவருக்குத் தான் சிறுவயதில் படித்திருந்த அத்தனை நாயன்மார் கதைகளும் ஞாபகம் வந்தன. ஆஹா! கருணைக் கடலாகிய காயா

ரோஹணத்தாரா தங்கள் இருவரையும் ஆட்கொள்ள வந்திருக்கிறார்? என்னே அவர் உள்ளம்..! அடடா, இதனை புரிந்து கொள்ளாமல் இந்தப் பல்லவராயர் அவரைத் துரத்துகிறாரே? நமது கண்களின் முன் அந்த சந்நியாசி மறைந்து விடப்போகிறார் போலும். ஆஹா.. அற்புதம்!

இளையவரின் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. கோயிலின் திருமதில் விளாகம்[60] தொடங்கு முன்பாக அந்த சன்னியாசி சட்டென்று மறைந்துதான் போனார்!

* * * * * * * *

"எதற்காகக் கோயிலின் நந்தவனப் பாதையில் இப்படி என்னைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு செல்கிறீர்கள்?"

"கிழவன் இந்தப் பாதையில்தானே சென்றிருக்க வேண்டும்? வேறு பாதையே கிடையாதே! சட்டென்று எப்படி மறைந்தான்?"

"அடடா... சிவபெருமானின் கருணையை ஒரு ஜாம நோத்திற்கு முன் விளக்கமாக ஓதினீர்களே! இன்னுமா உங்களுக்குப் புரியவில்லை? அந்தக் கருணாமூர்த்தியான சிவபெருமான்தான் அந்த யோகியின் வடிவில் நமக்குக் காட்சி கொடுத்திருக்கிறார் வாருங்கள், நேராகக் கோயிலுக்குச் செல்வோம்."

"இத்தனை தூரம் வந்துவிட்டுப் பெருமானின் கருணைக்கு ஆளாகாமல் போய்விடுவோமா என்ன? அதோ பாருங்கள்!"

மலர்வனங்கள் பூத்துக் குலுங்கும் காரோணர் திருக் கோயிலின் நந்தவனம் அவர்களின் கண்களுக்கு முன் விரிந்தது. மல்லி, இருவாட்சி, சண்பகம், செம்பருத்தி, சம்பங்கி, அடுக்கு மல்லி, பாரிஜாதம் என்று பெம்மானின் பூசனைக்காக வளர்க்கப்படும் பல்வேறு மலரினங்கள் தனித்தனியாக பாத்தி கட்டி விடப்பட்டு தத்தம் பகுதிகளில் செழித்து வளர்ந்திருந்தன. நந்தவனத்தைச் சுற்றிலும் மெல்லிய மூங்கில் வேலி இடப்பட்டிருந்தது.

---

[60] விளாகம் என்பதற்கு சுற்றுச்சுவர் என்பதாகப் பொருள் கொள்க. பார்க்க – விளாகம், மு.நளினி, காவிரி (ஆய்வுக் கட்டுரைகள் தொகுதி).

இவையெல்லாவற்றையும் விடக் கம்பன் மணியனாரின் பார்வையைக் கவர்ந்தது யாதெனில் நந்தவனத்திற்கு மத்தியில் அமைந்திருந்த சிறு மண்டபம்தான். கூரை எதுவுமில்லாத அந்த அமைப்பை மண்டபம் என்று அழைப்பது கூடப் பொருத்தமாக இல்லை நாற்புறங்களிலும் தூண்கள் அமைந்திருக்க, அந்தத் தூண்களை ஜாதி மல்லிக் கொடிகள் இணைக்கும் விதமாக ஒரு வித்தியாசமான வடிவத்தில் அந்த இடம் மிக அழகாக அமைக்கப் பெற்றிருந்தது. நமது வசதிக்காக அதனை 'மலர் மண்டபம்' என்றழைப்போம்.

மலர் மண்டபத்திற்கு மத்தியில் இளையவரை இடித்துவிட்டு ஓடிய சிவயோகியார் தியானத்தில் காணப்பட்டார். அவரைச் சுற்றிலும் சம்மந்தமில்லாமல் சில அரசாங்க ஊழியர்கள் தெரிந்தார்கள் பல்லவராயர் சொன்னது போல் இவன் கபட சன்னியாசிதான் போலும் வலுக்கட்டாயமாகத் தங்கள் இருவரையும் இங்கு வரவழைப்பதற்காகத்தான் தன்னை இடித்துவிட்டு ஓடி வந்திருக்கிறான். அவனுடைய சதிவலையில் நாமும் நன்றாக மாட்டிக் கொண்டு விட்டோம் என்று இளையவருக்கு அச்சமேற்பட்டது. அதற்குள் பல்லவராயர் வேலியைக் கடந்து மலர் மண்டபத்தை அணுக முற்பட்டிருந்தார்.

"ஐயா.. வேண்டாம்! மண்டபத்தை நெருங்க வேண்டாம்...!"

"இன்று இரண்டில் ஒரு கை பார்த்து விடுவது வாளை உருவிக்கொண்டு வாருங்கள்! தினவெடுத்த தோள்களுக்குத் தீனி காத்திருக்கிறது. தொண்டை மண்டலத்தை நடுநடுங்க வைத்த வண்டலே! வருக. உமது வாளுக்கு வேலை வந்து விட்டது..."

"அடடா! வீணாக வலுச்சண்டை வளர்க்கிறீர்களே?" - வேறு வழியின்றி இளையவரும் பல்லவராயரைப் பின் தொடர்ந்தார்.

நாலே எட்டில் மண்டபத்தை அடைந்துவிட்ட பல்லவராயர் "ஓ! கபட சன்னியாசியே! வெளியே வாரும் இதோ சோழ சைனியத்தின் வீராதி வீரர் கம்பன் மணியனார் உமக்குத் தகுந்த பாடம் கற்பிக்க இருக்கிறார். அவரை வேண்டுமென்றே தள்ளிவிட்டுவிட்டு ஓடிவந்து மறைந்தவர்களல்லவா? அதற்கு பதில் சொல்லிவிட்டு வேறு வேலையைப் பாரும்!" என்று முழங்கினார். ஐயோ! என்ன

இது? எதற்காக நம்மை வலுவில் மாட்டிவிடுகிறார் பல்லவ ராயர்?

சன்னியாசிக்கும் ஒருவழியாகக் கோபம் பிறந்துவிட்டது. சட்டென்று பத்மாசனத்திலிருந்து எழுந்தவர் வேக வேகமாக இளையவரை நெருங்கினார். பல்லவராயரைத் தாண்டும் போது ஷண வேகத்தில் அவருடைய கரங்கள் எப்படியோ உறைக்குள் இருந்த ராயரின் வாளை உருவிக் கொண்டு விட்டன. வேறு வழியில்லை. இவன் யாரோ, எவரா? சண்டையிட்டுத்தான் ஆகவேண்டும். பல்லவராயரே! உம்மைப் பிறகு கவனித்துக் கொள்கிறேன்.

சன்னியாசி தாக்குவதற்குமுன் ஒரு கணம் நிதானிப்பார் என்று எதிர்பார்த்த கம்பன் மணியனாரின் எதிர்பார்ப்பு வீணாயிற்று. நொடியில் அவரது வாள் காற்றில் பறந்தது! அடுத்த கணம் அவரை சன்னியாசி ஆரத்தழுவிக் கொண்டார்.

"வீரரே! நலமா? உம்மைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டதுண்டு. தற்போது சந்திப்பதில் மகிழ்ச்சி!" - இந்தக் குரல்....?

"ஐயா... தாங்கள்....."

அந்தக் கபட சன்னியாசி தனது தாடி மீசையை பிடித்திழுக்க, அங்கே அருள்மொழிவர்மரின் திருமுகம் காட்சியளித்தது!

"ஐயா! தாங்களா? தங்களைப்போய் நான்...." - கரங்கள் நடுங்கக் கைகூப்பினார் இளையவர். கண்கள் கலங்கி விட்டன.

"இதெல்லாம் அவ்வப்போது நான் செய்யும் வேடிக்கை. பயந்து விடாதீர்கள்! பேரரசன்.. இராஜராஜன்.. சக்ரவர்த்தி.. என்று தஞ்சையிலும் பழையாறையிலும் மாற்றி மாற்றி அழைத்து என்னைச் சுற்றிலும் ஒரு எல்லையை உருவாக்கி விட்டார்கள். அங்கெல்லாம் முன்புபோல் இப்படி விளையாட முடியவில்லை. நாகை நான் கல்வி கற்ற மண் ஆதலால் அதனைத் தீண்டியதும் பழைய குறும்புத் தனங்களெல்லாம் வந்து சேர்ந்துவிட்டன. தொண்டை மண்டலத்தைக் கவசம் போல் காக்கும் வீராதி வீரரே! வருக.. வருக.. வானமே கூரையாக வையமே விரிப்பாக நாம் கூட்டியுள்ள சபைக்கு வருக!"

அருள்மொழிவர்மர் நடுநாயகமாக அந்த மலர் மண்டபத்தின் கீழ் விரிக்கப்பட்டிருந்த விரிப்பில் அமர்ந்தார். அவரைச் சுற்றி மற்றவர்கள் மெல்ல அமர்ந்து கொண்டார்கள். வானில் சூரியன் நன்றாக மேலெழும்பி யிருந்தான். நந்தவனத்தின் பின்புறத்தில் அமைந்திருந்த மாந்தோப்பின் கிளைகள் வழியாகப் புகுந்து புறப்பட்ட அவனது கிரணங்கள் மண்டபத்தில் கூடியிருந்த பெரு மக்களின் மீது மெல்லப் படிந்தன.

"இன்னும் சிறிது நேரத்தில் வெய்யில் ஏறிவிடும் சக்ரவர்த்தியவர்களே. வேண்டுமானால் தோப்பிற்குச் சென்று விடுவோமா?" - அரசருக்கு அண்மையில் நின்ற திருமெய்க்காப்பு வீரன் பணிவாய்க் கைகட்டி வாய்பொத்தி அவரது காதுகளில் புகன்றான்.

"ஒன்று அல்லது ஒன்றரை நாழிகை கழியட்டும் செல்வோம்!" என்று அதற்கு பதில் புகன்ற மன்னவர் தன்னைச் சுற்றிலும் கூடியிருப்பவர்களை ஆழமாக ஒரு பார்வை பார்த்தார். தொண்டையை லேசாகக் கனைத்துக் கொண்டார். அவருடைய மெல்லிய கையசைப்பில் திருமெய்க்காப்பு வீரர்கள் அனைவரும் சொல்லி வைத்தாற்போல் பத்திருபது தப்படிகள் விலகி நின்று கொண்டார்கள்.

அருள்மொழிக்கு வலதுபுறம் பல்லவராயர் அமர்ந்திருக்க, இடப்புறம் அமர்ந்திருப்பவரை இப்போதுதான் கவனிக்கிறோம். இவர்தான் குரவன் இராஜராஜ மாராயர். பின்னாளில் சோழநாட்டின் நீள ...கலங்களை அளந்து "உலகளந்தான்" என்னும் பெருமை ...ந்த பட்டத்திற்கு உள்ளாகப்போகும் மாராயர். ...நவென்று இருபுறங்களிலும் படர்ந்து நிற்கும் மீசையை ...சனையோடு மெல்லத் தடவிக்கொள்ளும் சோழ சாம்ராஜ்ஜியத்தின் தளபதியான மாராயர்.

பல்லவராயரும் மாராயரும் அருள்மொழிவர்மரின் இரு பக்கங்களிலும் அமந்திருந்தது 'நாங்கள்தான் இவரது இரு கரங்கள்' என்று சொல்லாமல் சொல்வதுபோல் இருந்தது.

நாம் தற்போது மாராயரை மறந்துவிடுவோம் பல்லவ ராயரையும் இளையவரையும் மறந்துவிடுவோம். ஏன், இராஜராஜரான அருள்மொழிவர்மரைக்கூட மறந்துவிட்டு அந்தக் கூட்டத்தில் ஐந்தாவது மனிதராக நெற்றியில்

திருநீரும் சந்தனப்பொட்டும் துலங்க பக்தி சாகரத்தில் மூழ்கியபடி அமர்ந்திருக்கிறாரே? அவரைக் கவனிப்போம்.

அந்த மனிதர் பல்லவராயரையும் மாராயரையும் விட இளையவராகத்தான் தெரிந்தார். அவரது கண்களில் அசாத்தியமானதொரு தீட்ஷிண்யம் சுடர்விட்டது. எவரையும் ஏற இறங்கப் பார்த்த மட்டில் எடைபோட்டு விடும் சாதுரியம் தெரிந்தது. கைவிரல்கள் மெல்லியதாய் செவ்வரியோடி நீண்டிருந்தன. இடது கை மோதிர விரலில் செம்பவழ மோதிரம் பிதுங்கி நின்றது. உடலைச் சுற்றி நிவிதமாய் ஓடும் பட்டுப் பீதாம்பரம். கழுத்தில் வெள்ளிக் கம்பியினால் இணைக்கப்பட்ட ருத்திராட்ச மாலை. கைகளில் கங்கணங்கள். முகத்தில் அற்புதமான மேதாவிலாசம். ஆனால்.. இவரது புருவங்கள் ஏன் இப்படி நெறிபடுகின்றன? ஏன் நெற்றியில் கோடுகள் சுருங்கிச் சுருங்கி விரிகின்றன? முதலில்... யாரிவர்?

"என்ன அமண்குடியாரே! கூட்டத்தைத் துவக்காமல் அப்படியென்ன பலத்த யோசனை?" என்று அவரை விளித்தார் அருள்மொழிவர்மர்.

"ஒன்றுமில்லை!" - அவர் தன்னுடைய சிந்தனைகளைக் கலைத்துக் கொண்டார். அனைவரையும் நோக்கிக் கை கூப்பினார். "நான் அமண்குடியான். பாரத்துவாஜ கோத்திரன். கிருஷ்ணன் இராமன் என்பது என் பெயர்!" என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

'கிருஷ்ணன் இராமன்' என்கிற பெயரைக் கேட்டதும் பல்லவராயரும் மாராயரும் சட்டென்று துள்ளி உட்கார்ந்தார்கள். அருள்மொழி மெல்லச் சிரித்துக் கொண்டார்.

8. மூன்று வரிகளும் முழுப்பொருளும்



"ஆஹா! அமண்குடியார் தாங்கள்தானா? பேரரசர் தங்களைப் பற்றி நிறையச் சொன்னதுண்டு. நேரில் சந்திப்பதில் மகிழ்ச்சி.." என்றபடி மாராயர் அந்த இளைஞருக்கு முகமன் கூறி வணங்கினார்.

"ஐயா! சக்ரவர்த்திகளும் நானும் ஒரு காலத்தில் இதே நாகையில் சேர்ந்தே கல்வி

கற்றோம். எங்களுக்கு ஆரம்பகாலப் போர்ப் பயிற்சிகளை அளித்ததும் இந்த மண்தான். சுந்தரச் சோழரின் காலத்தில் சோழர்களின் மீது பேரன்பு கொண்டிருந்த கொடும்பாளூர் சிற்றரசர் பராந்தகர் சிறிய வேளார் இலங்கைக்குச் செல்லும் முன்பாக தன்னுடைய வாளை எடுத்து அருள்மொழியின் கையில் கொடுத்து சுழற்ற வைத்தது இன்னும் கண்களில் நிற்கிறது. அவர்தான் எத்தனை பெரிய மாவீரர்?

ஆரம்பக்கல்வி முடிந்ததும் அருள்மொழிவர்மர் தஞ்சை, பழையாறை, திருவல்லம் என்று பயணப்படவேண்டியதாகி அடுத்து நான் காஞ்சிக்குச் சென்றேன். அங்கிருந்து வாரணாசி செல்ல வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது. பின் கலிங்க தேசத்திலும் சில காலம் தங்கினேன். ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு முன்புதான் தட்சிண தேசத்திற்குத் திரும்பவே முடிந்தது. சோழதேசத்தில் நான் பல காலமாக இல்லையென்றாலும் நாட்டு நடப்பை ஓரளவிற்கு அறிந்துதான் இருந்தேன். நான் கலிங்கத்திலிருந்து திரும்பியதற்கு இங்கே உருவாகியிருந்த அரசியல் சூழ்நிலைகளும் ஒரு காரணம்...."

"புரிகிறது."

"வந்த கையோடு அருள்மொழியை.. மன்னிக்கவும். சக்ரவர்த்திகளைச் சந்தித்தேன்."

"அறிவோம். அதனைத் தொடர்ந்து தாங்கள் உடையார்குடி விவகாரத்திலும் ஈடுபட்டதை விளக்கமாக அவர்களிடம் கூறியுள்ளார்."

இளையவரான கம்பன் மணியனாருக்குப் அவர்கள் பேசிக் கொண்டிருந்ததில் பாதி புரிந்தது. பாதி புரிபடாமல் இருந்தது. கிருஷ்ணன் இராமனின் பெயர் சமீப காலமாகத் தஞ்சையில் அடிக்கடி அடிபடுவதை அவர் கேள்விப் பட்டிருந்தார். பல்லவராயருக்குப் பிறகு அவருடைய பொறுப்பில் அமரக்கூடிய தகுதியுடையவர் என்பதாகப் பேசிக்கொண்டார்கள்.

ஆனால் அவருடைய பின்புலங்களையோ 'உடையார்குடி விவகாரம்' என்று குறிப்பிடப்படும் விவரங்களையோ இளையவர் விபரமாக அறிந்திருக்க வில்லை. தொண்டை மண்டலத்திலேயே காலத்தைக் கழித்து வந்த அவருக்குத் தஞ்சை அரசியலின் நெளிவு சுளிவுகள் புரியவில்லை என்றாலும் தன்னுடைய குழப்பங்களை வெளிப்படை

யாகச் சபையில் காட்டிக்கொள்ளவேண்டாம் எனும் முடிவுடன் தொடர்ந்து பேச்சில் கவனம் செலுத்தலானார்.

"மதுரைப் படையெடுப்பின்போது சக்ரவர்த்திகள் எனக்கொரு முக்கிய அலுவலைக் கொடுத்திருந்தார். அது என்னவெனில் உடையார்குடி வகைச் சக்திகளின் மதுரை மையத்தைக் கண்டறிவது. அவர்கள் குழுவின் மூத்த அங்கத்தினர்களாக விளங்கும் சிலரை முடிந்தால் பிடித்து அவர்களின் முழுத் திட்டங்களையும் புரிந்துகொள்வது."

"மிகச் சிக்கலான பணி..."

"உண்மைதான். நாம் செல்லுமுன் அத்தனை தடயங்களும் ஏறக்குறைய அழிக்கப்பட்டுவிட்டன. கூட்டத்தின் முக்கிய உறுப்பினர்கள் அமரபுஜங்க தேவருடன் சேரநாட்டுக்கு தப்பியோடி விட்டார்கள்..."

"ஏறக்குறைய என்று ஏன் சொல்கிறீர்கள்? அப்படியானால்.. ஏதோ ஒரு தடயமாவது கிடைத்துள்ளதா?"

கிருஷ்ணன் இராமன் தன்னுடைய இடைக்கச்சை தளர்த்தி அதிலிருந்து பாதி எரிந்துபோயிருந்த முறி ஓலை ஒன்றைக் கையிலெடுத்தார். "மல்லிகார்ஜுன மடத்தின் உக்கிராண அறையில் ஏறக்குறைய எல்லா ஓலைகளையும் முறிகளையும் அக்கினி பகவான் விழுங்கிவிட்ட நிலையில் இந்த ஓலைத்துணுக்கு மட்டும் ஒரு ஓரத்தில் கிடந்தது. வாயு பகவானின் உபயம்..."

அந்த ஓலைத்துணுக்கை இராஜராஜ மாராயர் பார்வையிட்டார். ஓலையின் இடப்புறப்பகுதி பெரும்பாலும் எரிந்துபோய் விட்டிருக்க வலப்புறத்து வாசகங்கள் மட்டும் தெளிவாகத் தெரிந்தன. வேகவேகமாக அதனைப் படித்து முடித்த மாராயர் கடுகடுத்த முகத்துடன் ஒன்றும் கூறாமல் பல்லவராயரிடம் ஓலையைக் கொடுத்தார். ஓலையின் வாசகங்களில் கண்களை ஓட்டிய பல்லவராயரின் முகமும் சிவந்தது.

"கம்பன் மணியனாரே! இந்த ஓலையின் வாசகங்களை உரத்துப் படியுங்கள்."

அருள்மொழிவர்மருக்குப் பின்னால் ஒண்டிக் கொண்டிருந்த இளையவன் முன்னால் வந்து ஓலையை

வாங்கிக் கொண்டார். எதற்காக நம்மைப் படிக்கச் சொல்கிறார் பல்லவராயர்?

"ஓலையில் மொத்தம் மூன்று வரிகள் தெரிகின்றன. [illegible]று வரிகளிலுமே முதல் பகுதி அழிந்துவிட்டிருக்கிறது. [illegible]மிருக்கும் பகுதிகளைப் படிக்கிறேன்

முதல் வரி... மூன்று முடி மண்டலங்களிலும் தற்போது [illegible]மக்கு நல்ல பலமிருக்கிறது. அதனை மனதில கொணடு...

அடுத்த வரி... இனி இதனை வைத்துக்கொண்டு எவ்வாறு [illegible]னேறுவது என்பதை அடுதத பூரணையில உததிரட்டாதி [illegible]க்குமபோது ....

மூன்றாவது வரி.... நமது தலைவரின் விருப்பம் அதுவானால் [illegible]னைப் புரிந்துகொண்டு நடப்பதே சிலாக்கியம். சுபமஸது. திரு.

திரு என்னும் சொல்லுக்கருகில் ஒரு சிறிய வில் மற்றும் [illegible]க் குறி காணப்படுகிறது. இது பிரத்யேகக் குறிபோன்று [illegible]கிறது. சேரநாட்டின் இராஜ இலச்சினை அன்று. [illegible]வளவுதான் பல்லவராயரே!"

"என்ன திமிர்? என்னவொரு ஆணவம்?" - ராயரின் [illegible] எலும்புகள் நொறுங்கிக்கொண்டிருந்தன.

"ஓலையின் முழுப்பொருளையும் விளங்கிக்கொள்ள [illegible]வில்லையே...?" என்றபடி கம்பன் மணியனார் [illegible]வரையும் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். [illegible] அனுபவஸ்தர்கள் இருக்கும் சபையில் ஒரு [illegible]ற்பாடும் இல்லாமல் தன்னை இழுத்துக்கொண்டு [illegible] மாட்டி விட்டுவிட்டாரே பல்லவராயர்? என்கிற [illegible]தான் அவருக்கு மிஞ்சியது.

"[illegible]லைப்படாதீர்கள். அந்த வாக்கியங்களின் முழுப் [illegible] எனக்கும்கூட இன்னமும் விளங்கவில்லை" என்று [illegible] கண்களைச் சிமிட்டிய அருள்மொழிவர்மர் [illegible]ராயர் மீது கண்களைப் பதித்தார்.

"[illegible]லவராயரே! இந்த இளைஞர் கம்பன் மணியனார் [illegible]சிக்கொண்டிருக்கும் விவகாரத்தின் அடி - முடி [illegible]யும் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டுமென்று [illegible]கிறேன். ஆதலின் இந்த ஓலையின் பின்னணித் [illegible]களை அனைவருக்கும் உரைப்பீர்களாக!"

[illegible] எதற்காக இந்த விவகாரத்தின் அடி [illegible]யெல்லாம் புரிய வேண்டும்? என்று குழம்பினார்

மணியர். ஏதோ பெரியதொரு சிக்கலில் தன்னை மாட்டி விடுவதற்கான சதி வேலை பல்லவராயரின் தலைமையில் கனஜோராக அரங்கேறிக் கொண்டிருக்கிறது என்பது மட்டும் அவருக்குத் தெளிவாகப் புரிந்தது. நீண்ட நேரம் பேசப்போவதற்கான முன்னெச்சரிக்கையுடன் பல்லவராயர் தொண்டையை சற்று கனைத்துக் கொண்டார்.

"தனிப்பட்ட முறையில் இந்த வாசகங்களை மட்டும் நோக்கினால் பொருள்கொள்ள முடியாதுதான். இது யாரால் எவருக்கு எப்போது எழுதப்பட்டது என்பதையும் அவர்களைப் பற்றிய வேறு சில பின்னணித் தகவல்களையும் அறிந்து கொண்டால்தான் ஓலையின் தகவல் எத்தனை பயங்கரமானது என்பது தெரியும்.

கடிகா அல்லது கடிகை என்கிற பெயரில் பல்லவ மன்னர்கள் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் தொண்டை மண்டலத்தில் கல்விக்கூடங்களை நிறுவிய அதே கால கட்டத்தில்தான் மலைநாட்டில் நம்பூதிரி அந்தணர்கள் சாலைகளை நிறுவினார்கள். துவக்கத்தில் இந்தக் கல்விக் கூடங்களின் செயல்பாடுகள் ஏறக்குறைய ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. இரண்டிலும் வேதங்களும் ஆகமங்களும் பயிற்றுவிக்கப்பட்டன. அரசியலில் சிறப்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. கடிகாஸ்தானத்திலிருந்து பயிற்சி பெற்று வருவோர் முதலமைச்சர் பதவிவரை செல்வதற்கு அருகதையுடையவர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டார்கள். கடிகையில் பயின்று பின்னாளில் அரசியல் புலத்தில் ஈடுபட்டோர் தங்களைக் கடிகை மாராயன் என்று பெருமையுடன் அழைத்துக் கொள்வதை இன்றுகூட நாம் காண்கிறோம். நானே தொண்டை மண்டலத்தின் கடிகாசலத்தில்[61] அமைந்துள்ள கடிகையில் ஒரு காலத்தில் பயின்றவன்தான்.

மலைநாட்டின் சாலைகள் காலப்போக்கில் தமக்கென்று தனி அடையாளங்களை உருவாக்கிக்கொண்டன. குறிப்பாக தனுர் வேதத்தில் அவர்கள் புகுத்தியுள்ள புதுமைகள் ஈடு

---

[61] இன்றைய சோளிங்கபுரம். சென்னைக்கருகில் அமைந்துள்ளது. ஆழ்வார்களால் பாடப் பெற்ற இத்தலத்தில் சிங்கமுகப் பெருமானும் அனுமனும் இருவேறு மலைகளில் அமர்ந்து அருள்பாலிக்கின்றனர். இதன் தொல்பெயரான கடிகாசலமே இங்கு ஒரு கடிகை அமைந்திருந்ததை புலப்படுத்தும்.

இணையற்றவை. இதனால் சாலைகளில் படிக்கும் சட்டர்கள் இராஜ்ஜிய விவகாரங்களில் இணையற்று விளங்கியதோடு ஆயுதப்பயிற்சி முறைகளிலும் மிகச்சிறப்பான நிலையை [illegible]தியிருந்தார்கள். சொல்லப்போனால் இன்று வரை கூட அந்த வித்தையில் அவர்களை விஞ்சுவதற்கு ஆளில்லை என்றுதான் கூறவேண்டும்..."

மாறாத முறுவலுடன் திகழ்ந்த அருள்மொழிவர்மரின் முகத்தில் ஒரு கணம் இருட்டு படிந்தது. அடுத்த கணமே அந்த இருள் விலகிப் பழைய மந்தகாசம் குடிகொண்டது.

"ஆதித்தர் - பராந்தகர் காலத்தில் ஏற்பட்ட சோழ-சேர மணவினை உறவுகளால் சாலைகளின் சட்டர்கள் இங்கு குடியேறியதும் பிரம்மாதிராயர்களாக பதவியில் அமர்ந்ததும் [illegible] அறிந்ததே. பராந்தகர் காலத்தில் மதுரையிலும் ஒரு [illegible] சாலைக் குடும்பங்கள் குடியேறின. முதலில் அது [illegible]தென்று நமக்குப் புரியவில்லை. இத்தனை ஆண்டுகள் கழிந்தபின் மெல்ல மெல்லத்தான் என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பது புரியத் துவங்கியுள்ளது..."

சங்கடமானதொரு மௌனம் அங்கு ஓரிரு கணங்களுக்கு நிலவியது. அருள்மொழிவர்மர் தன் காலடியில் கிடந்த ஒரு மாந்தளிரின் இலைகளைப் பொறுக்கி மெல்ல வருடத் துவங்கினார்.

"என்ன புரியத்துவங்கியுள்ளது?"

"மிகப் பயங்கரமான அரசியல் திட்டமொன்று புரியத் துவங்கியுள்ளது. இதுவரை மங்கலாகத் தெரிந்த பல விஷயங்கள் தெளிவாகிக் கொண்டிருக்கின்றன..."

"சற்றே விளங்கச் சொல்லுங்களேன்?"

"சொல்கிறேன். பராந்தகச் சோழர் ஸ்தாபித்த [illegible]ராயணபுரத்தில் அவருடைய காலத்திலேயே வலிமை வாய்ந்த குடும்பமொன்று குடியேறியது. இவர்களை '[illegible]நீலி பட்டதிரி குடும்பத்தார்' என்று பொதுவாக அழைப்பது வழக்கம். இந்தக் குடும்பம் வழிவழியாக [illegible]புரத்தின் காந்தளூர்ச் சாலையுடன் தொடர்பு [illegible]து என்பது குறிப்பிடத்தக்கது. நீலி குடும்பத்துப் பிள்ளைகள் இராஜாதித்தரின் மலைநாட்டு சேனையில் பங்கேற்றார்கள்.

கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில்தான் சோழ சாம்ராஜ்ஜியத்தில் மலைநாட்டுடன் தொடர்புடைய பழுவூர் வம்சத்தாரின் அதிகாரமும் மேலோங்கியது. மன்னுபெரும் பழுவூரை உறைவிடமாகக் கொண்ட பழுவேட்டரையர்கள் பராந்தகரின் அந்தரங்க ஆலோசகர்களாகத் திகழ்ந்தார்கள். ஏனோ பழுவேட்டரையர்களுக்கும் நீலி குடும்பத்தாருக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. சிறியதும் பெரியதுமாக பல பிரச்சனைகள் தலைதூக்கின. பராந்தர் பலமுறை நேரிடையாகத் தலையிட்டு இரு சாராருக்கும் சமாதானம் செய்யவேண்டி வந்தது.



சோமன், இரவிதாஸன் பஞ்சவன் பிரம்மாதிராஜன் முதலியோரை ஆதித்த கரிகாலரைக் கொன்ற துரோகிகளாக அடையாளப்படுத்தும் முதலாம் இராஜராஜர் கல்வெட்டு, திருவனந்தீஸ்வரம் திருக்கோயில், உடையார்குடி.

பராந்தகரைவிட இளவரசர் இராஜாதித்தரிடம் நீலி குடும்பத்தாருக்கு அதிகச் செல்வாக்கு இருந்தது. இராஜாதித்தருக்கு இராஜ்ஜிய அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்து தன்னுடன் ஆட்சியில் பராந்தகர் பங்கேற்கச் செய்ததைக் கண்டு குதூகலித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். இராஜாதித்தர் பழுவூர் கிளை அரசரான கோதண்டன் தப்பிலிதர்மனை உடையார்குடிக் கோயிலில் தானதர்மங்களெல்லாம் செய்யத் தூண்டி இரு சாராருக்கும் இணைப்பு ஏற்படுத்த முயன்றார். நடக்கவில்லை.

எவரும் எதிர்பாராத விதமாக தக்கோலப் பெரும்போர் வந்து மாவீரர் இராஜாதித்தரின் உயிரைப் பறித்துக் கொண்டது. நீலி குடும்பத்தார் பெரிதும் துவண்டுபோய் விட்டாலும் அடுத்ததாகப் பட்டமேறிய கண்டராதித்தர் அளவிற்கு அவர்களை அரவணைத்துக் கொண்டுதான் போனார். இராஜ்ஜிய பாரத்தில் அவ்வளவாகப் பற்றுதல் இல்லாத கண்டராதித்தரைவிட அவரது மகனான மதுராந்தகன் மீது அதிக நம்பிக்கை வைத்தார்கள் அவர்கள் சிறு வயது முதலே தங்கள் குடும்பத்துப் பிள்ளைகள் அவரிடம் நெருக்கமாக இருக்கும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மதுராந்தகரின் பெயரில் பல காணிகள் வீரநாராயணபுரத்தில் . வாங்கப்பட்டு[62] நீலியாரால் விவசாயம் செய்யப்பட்டன. கண்டராதித்தரின் பிராட்டியும் சமய நெறியில் செல்வாக்கு மிக்கவராகவும் விளங்கிய செம்பியன் மாதேவியாரிடமும் அவர்களுக்கு நெருக்கம் இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் நீலி குடும்பத்தாருக்கு வேண்டப் பட்ட பல்வேறு குடும்பங்களும் மலைநாட்டிலிருந்து வந்து வளப்பம் மிகுந்த வீரநாராயணபுரத்தில் குடியேறின பண்டிதவத்சலச் சேரி, புவனசூளாமணிச் சேரி[63] என்று ஒவ்வொரு சேரியிலும் கிரம வித்தர்களும், சட்டர்களும் பட்டர்களும்[64] குடியேறினார்கள். தூரதூரத்துச் சொந்தங்களுடன் பெண் கொடுத்தும் பெண் எடுத்தும் தங்களின் நிலையை நீலியார் பலப்படுத்திக் கொண்டார்கள்

கண்டராதித்தர் பட்டத்தைத் துறந்ததும் அரிஞ்சயர் பட்டத்திற்கு வந்ததும் நீலியாருக்குப் பெரும் அதிர்ச்சி ஏனெனில் அரிஞ்சயர் இவர்களைவிடப் பழுவூர் அரசர்களான பழுவேட்டரையர்களிடம்தான் அதிக நம்பிக்கை வைத்திருந்தார். அரிஞ்சயர், அவரைத் தொடர்ந்து பட்டத்திற்கு வந்த இரண்டாம் பராந்தகரான சுந்தரச் சோழர் என்று அடுத்து வந்த பல ஆண்டுகளுக்கு அவர்கள் பொறுமையாக அடங்கி வாழ வேண்டி வந்தது. அதற்கு

---

[62] கல்வெட்டு எண் A.R. No. 614 of 1920.
[63] உடையார்குடிக் கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ள சேரிகள்.
[64] பார்க்க கல்வெட்டுக்கள் A.R. No. 543 of 1920, A.R. No. 560 of 1920, A.R. No 600 of 1920, A.R. No. 551 of 1920 & A.R. No. 599 of 1920. வழக்கத்திற்கு மாறாக மிக அதிகமான அளவில் உடையார்குடிக் கல்வெட்டுக்கள் சட்டர்களையும் பட்டர்களையும் சுட்டுகின்றன.

மாறாகப் பழுவேட்டரையர்களின் அதிகாரமோ நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது.

சுந்தரச் சோழர் மதுராந்தகரை விட்டுவிட்டு ஆதித்த கரிகாலருக்குப் பட்டம் கட்டியதை தங்களுக்கு அளிக்கப் பட்ட கடைசி எச்சரிக்கையாகவே நீலி குடும்பத்தார் கண்டார்கள். ஏனெனில் சிறு வயது முதலே ஆதித்த கரிகாலரை ஒதுக்கி வைத்துவிட்டு மதுராந்தகரிடம் அன்பு பாராட்டியவர்கள் அல்லவா அவர்கள்? ஆதித்தரும் அவர்களிடம் பாராமுகமாகவே நடந்து வந்திருந்தார். முரட்டுத்தனமும் மூர்க்கமும் நிறைந்த அவர் பதவிக்கு வந்தால் ஒட்டுமொத்தக் குடும்பமும் நாட்டை விட்டே வெளியில் கிளம்பியாக வேண்டும் எனும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்ப்பது. பலனில்லை யென்றால் குடும்பத்தாருடன் மலைநாட்டுக்குக் குடி பெயர்ந்து விடுவது என்னும் எண்ணத்துடன் பயங்கரமான சதித்திட்டமொன்று உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கான ஆதரவு பல்வேறு அரசியல் மட்டங் களிலும் திரட்டப்பட்டது. திட்டத்தின் உச்சக் கட்டமாக ஆதித்த கரிகாலர் நயவஞ்சகமான முறையில் கொலை செய்யப்பட்டார்.

அவர்கள் எதிர்பார்த்ததைப் போலவே இளவரசரின் கொலையால் பேரரசர் சுந்தரச் சோழர் துவண்டுதான் போனார். அடுத்ததாக மதுராந்தகர்தான் பதவிக்கு வர வேண்டும்! என்று அவர்கள் திரட்டியிருந்த அரசியல் சக்திகள் கூக்குரல் எழுப்பின. அப்போதிருந்த குழப்பமான நிலைமையில் இதோ, இங்கு நம்முடன் வீற்றிருக்கும் அருள்மொழிவர்மரும் சோழ சிங்காதனமேறுவதற்குப் போட்டியிட்டிருந்தால் நாடே பல கூறுகளாகச் சிதறிப் போயிருக்கும்! நல்லவேளையாக அன்னை நிசும்பசூதனியின் அருளால் அந்த விபத்து நேரவில்லை.

சோழ சிங்காதனத்திற்கு மதுராந்தகர் ஆசைப்படும் வரை தாம் அதனை மனதினாலும் தீண்டுவதில்லை என்று சூளுரைத்துவிட்டு அருள்மொழிவர்மர் தொண்டை மண்டலத்திற்குக் கிளம்பிச் சென்றுவிட்டார். மதுராந்தகர் 'உத்தமச் சோழர்' என்கிற பெயருடன் சிங்காதனம் ஏறினார். தன்னுடைய வீரமகன் போர்க்களத்தில் வீரமரணம் எய்தாமல் சதிகாரர்களின் கரங்களுக்கு இரையாகிவிட்ட

கொடுமையை ஜீரணிக்க முடியாமல் அடுத்த இரண்டு வருடங்களிலேயே சுந்தரச் சோழர் பொன் மாளிகையில் வானுலகம் எய்தினார்.

இந்தக் கூத்துக்களெல்லாம் நடந்து முடிந்த சில வருடங்களுக்குப் பின்தான் நான் குவளாலபுரத்திலிருந்து[65] வந்து பணியில் சேர்ந்தேன். இன்றைக்குக் கம்பன் மணியனாருக்கும் அமண்குடியாருக்கும் இருக்கும் பிராயம்தான் அன்று எனக்கு.

முதலில் எனக்கு என்ன நடந்துகொண்டிருக்கிற தென்பதே விளங்கவில்லை. மெல்ல மெல்லத்தான் உத்தமச் சோழரைச் சுற்றிப் படர்ந்திருந்த இருள் எனக்குப் புரிபட்டது. என்றாலும் அப்போதைய சூழ்நிலையில் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தஞ்சைக்கு வந்து சேர்ந்த சில வருடங்களில் பழுவூர் அவனி கந்தர்ப்ப ஈசுவர கிருஹத்து தேவனாருக்கு நான் அடியானாகி 'பழுவூர் நக்கன்' என்று பட்டம் பூண்டு விட்டதால் என் பெயரில் சந்தேகம் அதிகமாகிவிட்டது. சொல்லப்போனால் அருள் மொழிவர்மரிடம் கூட அந்தக் கால கட்டத்தில் நான் நினைத்த அளவிற்கு நெருக்கமாகப் பழக முடியவில்லை ஏனெனில் அருள்மொழியின் உள்சுற்றம் மிகக் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டது. அவருடன் அணுக்கமாக இருந்தவர்கள் அரசாங்கத்தால் எச்சரிக்கையுடன் அணுகப் பட்டார்கள். ஒரு கட்டத்தில் வெறுப்படைந்து அருள் மொழி நாடு கடந்து மாதக் கணக்கில் கடற்பயணங்களை மேற்கொள்ளத் துவங்கினார்.

உத்தமச் சோழரின் அரசவையில் மிகுந்த செல்வாக்குடன் அமர்ந்துவிட்ட நீலியார் குடும்பம் மீண்டும் தங்கள் குடும்பத்தாருக்குப் பழைய தாழ்நிலை ஒருபோதும் உண்டாகி விடக்கூடாது என்பதைப் பற்றி யோசிக்கத்

---

[65] உத்தமச் சோழர் காலத்தில் பல்லவராயரின் பெயர் 'குவளாலயத்தான் அம்பலவாணன் பழுவூர் நக்கனான விக்கிரமச் சோழ மாராயன்' என்பதாகும். இவர் மலைநாட்டை தாய்நாடாகக் கொண்ட பழுவூர் அரச மரபைதைச் சேர்ந்தவர் இல்லை என்பது தெளிவு (பார்க்க பழுவூர்ப் புதையல்கள், இரா.கலைக்கோவன்). குவளாலபுரத்திலிருந்து (இன்றைய கோலார்) வந்திருப்பவர் 'பழுவூர் நக்கன்' என்று தம்மை அழைத்துக் கொள்வதால் இப்புதினத்தில் இவர் பழுவூர் திருக்கோயில் இறைவனின் அடியாராகக் கற்பனை செய்யப்படுகிறார். பார்க்க – நக்கன், ஒரு மீளாய்வு, ஐராவதம் மகாதேவன் கட்டுரை, வரலாறு ஆய்விதழ்.

தலைப்பட்டனர். இந்த செல்வாக்கு நிரந்தரமாகத் தொடர வேண்டுமானால் சோழ நாட்டின் அரசியல் அமைப்பு மாறியாக வேண்டும் எனும் எண்ணம் வலுப்பட்டது. இந்தப் புதிய திட்டத்தின் சூத்திரதாரி காந்தளூர்ச் சாலையின் இந்நாளைய மூத்த ஆச்சாரியர்..."

"திருநாராயண பட்டதிரி!" - என்று முடித்தார் அமண்குடியாரான கிருஷ்ணன் இராமன்.

'திரு' என்று ஓலையில் வில் அம்புடன் காணப்பட்ட முத்திரைக்கான பொருள் கம்பன் மணியனாருக்குத் தெளிவாக விளங்கியது. அவர் கையில் இருக்கும் எரிந்த ஓலை பட்டதிரி எழுதிய ஓலை!

9. போர்த் தளபதி



விடாமல் பேசிக்கொண்டிருந்ததால் பல்லவ ராயருக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

"நீங்கள் எழுந்து நின்று சற்று நேரம் ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். உச்சி வெய்யில் ஏறிவிட்டது. தோப்பிற்குச் சென்றுவிட வேண்டியதுதான்!"

அருள்மொழிவர்மர் சைகை காட்ட, திருமெய்க்காப்பு வீரர்கள் அவர்களின் உடைமைகளை எடுத்துக்கொண்டு தென்னந்தோப்பை நோக்கி நடக்கத் துவங்கினார்கள். பேரரசரும் மற்றவரும் அமர்ந்திருந்த தரை விரிப்பை ஒரு ஊழியன் மடித்துத் தோப்பிற்குக் கொண்டு சென்றான். அடுத்த சில நிமிடங்களில் சபை மீண்டும் தோப்பில் கூடிவிட்டது.

"தோப்பிற்குள் இளநீர் கிடைத்தால் எடுத்து வாருங்கள்!" என்று ஆணையிட்டார் அருள்மொழி. உடனே நான்கு வீரர்கள் வணங்கிவிட்டுத் தோப்பிற்குள் நுழைந்தார்கள்.

"மேற்கொண்டு தொடருங்கள் பல்லவராயரே!" என்றார் இளையவர் அந்த சில நிமிட இடைவெளியைக் கூடப் பொறுக்க மாட்டாமல்.

"சொல்கிறேன். பட்டதிரியின் திட்டம் என்னவெனில் சேர நாட்டின் அரசியல் அமைப்பை ஒத்த ஒரு நிலையை

தென்னகத்தின் மூன்று இராஜ்ஜியங்களிலும் உருவாக்குவது!"

"என்ன சொல்கிறீர்கள்?"

"சேரநாட்டை வெளிப்படையாகப் பெருமாள் அரசர்கள் ஆள்வதுபோல் தெரிந்தாலும் உண்மையில் அங்கு வலிமை வாய்ந்த அரசியல் சக்திகளாகத் திகழ்வது நாலு தளிக்காரர்களும் நாடுவாழிகளும்தாம். இவர்கள் ஆட்டி வைத்தபடிதான் பெருமாள் அரசர் இயங்கியாக வேண்டும். தளியதிகாரிகள் எனும் பெயரில் அரசரின் பிரதிநிதி நாலு தளிக்காரர்களின் கூட்டங்களில் கலந்து கொண்டேயாக வேண்டும். அவர்கள் சொல்வதைக் கேட்டுத்தான் நடந்தாக வேண்டும். அதேபோல் நாடுவாழிகளுள் பலமுள்ளவர்களாக விளங்கும் வள்ளுவ நாடாழ்வார், இராம நாடாழ்வார், வேணாடாழ்வார் முதலானோரும் பெருமாள் அரசரை ஆட்டிப்படைக்கக்கூடியவர்களே. இது சோழ, பாண்டி மண்டலங்களின் அரசியல் நிலைக்கு முற்றிலும் மாறானது. இங்கு காலங்காலமாக மணிமுடி தரித்துச் சிங்காதனத்தில் அமரும் அரசருக்கே முழு அதிகாரமும் உண்டு. நாடுவாழிகளுக்கு இணையாக இங்குள்ள சிற்றரசர்கள் மன்னருக்கு வருடாந்திரக் கப்பம் செலுத்தியாக வேண்டும். சேரநாட்டின் நாலுதளிக்காரர்களுக்கு இணையான சக்தி தமிழகத்தில் ஒரு போதும் இருந்ததில்லை!"

"பின் எவ்வாறுதான் சேர நாட்டின் அரசியல் நிலையை இங்கு உருவாக்க முயன்றார்கள்?"

"இங்குதான் பட்டதிரியின் மூளை அளவிற்கதிகமாக வேலை செய்திருக்க வேண்டும். ஆதித்தர் கொலையாவதற்கு முன்பே ஒரு சில சிற்றரசர்கள் இவர்களுக்கு மறைமுக ஆதரவு தருவதற்கு ஒப்புக்கொண்டு விட்டார்கள். இது சற்றே அவல நிலைதான். ஆனால் உண்மை. அவர்கள் சொன்னது போலவே ஆதித்தர் கொலையாகி மதுராந்தகர் பட்டத்திற்கு வரவே மேலும் பலருக்கு நீலி கூட்டத்தாரின் வலிமையில் நம்பிக்கை பிறந்தது. என்றாலும் எல்லோரும் சோரம் போய்விடவில்லை! வழிவழியாக ஒரு சில சிறுநாடுகள் சோழ மன்னருக்கு மட்டும்தான் விசுவாசமாக இருப்போம் என்று பிடிவாதமாக இருந்துவிட்டன. அவர்களுக்குப் பல்வேறு வழிகளிலும் இவர்கள் நெருக்கடிகளை உண்டாக்கினார்கள்.

நாலுதளிக்காரர்களுக்கு இணையாக யாரை நிறுத்துவது? என்று யோசித்த போதுதான் தில்லை மூவாயிரவர் இவர்கள் எண்ணத்தில் உதித்தார்கள். நாலு தளிக்காரர்களுக்கு இணையாக மலைநாட்டுப் பின்புலம் கொண்ட தில்லையின் மூவாயிரவரை முன்னிறுத்தி விட்டால்? பின் அத்தனை திருக்கோயில்களும் ஏறக்குறைய அவர்களின் கட்டுப்பாட்டில் வந்துவிடும். தில்லை சோழ மண்டலத்தின் சைவத் திருத்தளிகளுள் தலையாய திருக்கோயிலாக விளங்குவதால் இது சாத்தியப்படலாம் என்று நினைத்தார்கள். இதனால்தான் தில்லைக்கருகில் கிழச்சாலை என்று ஒரு சாலையே ஸ்தாபிதம் செய்யப் பட்டது! தில்லையில் இவர்களுக்கு ஆதரவும் இருந்தது. எதிர்ப்பும் இருந்தது. அதனால் தங்களின் திட்டங்களை இவர்களால் மெல்ல மெல்லத்தான் செயல்படுத்த முடிந்தது.

கிட்டத்தட்ட இதற்கு இணையான நிலை பாண்டி தேசத்திலும் உருவாக்கப்பட்டது. அதற்குச் சக்தி வாய்ந்த அமைப்பாக விளங்கிய மல்லிகார்ஜுனர் மடத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இது மடத்தை ஆதரித்து வந்த கொடும்பாளூர் இருக்குவேளிர் அரசர்களுக்குக் கடும் அதிருப்தியை விளைவித்தாலும் மடத்தில் உள்ளவர்கள் கேட்கவில்லை. நிலைமை கட்டுக் கடங்காமல் சென்று கொண்டிருந்த நேரத்தில்தான் சளுக்கப் படையெடுப்பு நிகழ்ந்தது. அதற்குப்பின் நிகழ்ந்தவைதான் உங்களுக்குத் தெரியுமே?"


அருள்மொழி புன்சிரிப்புடன் கிருஷ்ணன் இராமனை நோக்கினார். "அமண்குடியாரே! இங்கு நம்முடன் ஒன்றுமறியாதவர்போல் அமர்ந்திருக்கும் கம்பர் சளுக்கப் போரில்தான் எனக்கு அறிமுகமானார். போரில் நான் கலந்து கொள்ளவியலாவிட்டாலும் இவருடைய வீரத்தைப் பற்றிப் பெரிதும் கேள்விப்பட்டேன். என்றாவது ஒருநாள் இவருடைய வாளுக்கும் தினவெடுத்த தோள்களுக்கும் நல்லதொரு வேலைகொடுக்க வேண்டுமென்று நினைத்தேன். இத்தனை காலம் கழித்து இப்போதுதான் அதற்கு நேரம் வந்திருக்கிறது..."

என்ன சொல்கிறீர்கள்? என்பதுபோல் இளையவர் அருள்மொழிவர்மரைக் குழப்பத்துடன் நோக்க..

பல்லவராயர் அவருடைய தோள்களில் கை வைத்து அழுத்தி "சேரநாட்டுப் படையெடுப்பை முன்னின்று

நடத்தப்போகும் வீரத்தளபதி இவர்தான்!" என்றார் கிருஷ்ணன் இராமனைப் பார்த்து.

* * * * * * * *



நாகப்பட்டினம் கடற்கரை – 18ம் நூற்றாண்டு ஓவியத்தில்.

அந்த நண்பகல் நேரத்தில் 'கறைமலி கடல்சூழ் நாகை' என்று அப்பர் பெருமான் வர்ணிக்கும் நாகைத் துறைமுகம் மிகுந்த சுறுசுறுப்புடன் காணப்பட்டது. கீழத்திசை நாடுகளிலிருந்து கிளம்பி வந்திருந்த நூற்றுக்கணக்கான கலங்கள் கரையிலிருந்து சில காத தூரத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தன. கலங்களுக்கும் கரைக்கும் இடையில் அமைந்திருந்த தண்ணீர் பிரதேசத்தில் சிறியதும் பெரியதுமாய்ப் பல்வேறு படகுகள் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தன. அச் சிறுபடகுகளில் துடுப்பு வலித்துக் கொண்டிருந்த படகோட்டிகள் அத்தனை அவசரத்திலும் அடுத்தவர் படகுகளின் மேல் மோதிவிடாமல் கிடைத்த இடைவெளிகளில் சாதுரியமாகத் தத்தம் ஓடங்களைச் செலுத்திக் கொண்டிருந்தனர். இந்த அபரிமிதமான போக்குவரத்தின் காரணமாக கடல்நீர் அப்பகுதிகளில் பெரிதும் கலங்கிக் காணப்பட்டது.

கடலுக்கருகில் அமைந்திருந்த உப்பங்கழிகளில்[66] பணி துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. உப்பைத் தூர்க்கும் பணியில் தன்னை மறந்து ஈடுபட்டிருந்த சிறுவன் தற்செயலாகக் கடலை நோக்கினான். நோக்கியவன் வாயைப் பிளந்து நோக்கியபடி அசையாமல் நின்றான். அவன் அப்படி எந்தக் காட்சியைக் கண்டு தன்னை மறந்து நிற்கிறான்? என்பதை அறிய விரும்பி நாமும் அவன் கண்களின் வழி அவன் வெறிக்கும் திசையை நோக்குகிறோம். ஆஹா! நாம் காண்பதென்ன?

நாகைக்கரையிலிருந்து வெகுதூரத்திற்கு விரிந்த கருங்கடலில் ஏறக்குறையப் பத்துகாத தூரத்தில் தன்னுடைய பிரம்மாண்டமான பாய்மரங்களை விரித்தபடி இராட்சதக் கலமொன்று துறைமுகத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அதுவரை அங்கே நின்றிருந்த கலங்களெல்லாம் அந்தக் கலத்தின் பிரம்மாண்டத்திற்கு முன் சிறு பொம்மைகளெனக் காட்சியளித்தன. அத்தனை பெரிய கலத்தை கரைக்கருகில் செலுத்திக்கொண்டு வரமுடியாதாகையால் மாலுமிகள் வெகுதூரத்திலேயே அதனை நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி விட்டார்கள். கலம் நிறுத்தப்பட்டுவிட்டதன் அறிகுறியாகப் பாய்மரங்கள் இறக்கப்பட்டுப் பாய்மரத் தண்டின் மீது கலத்தின் கொடி விறுவிறுவென்று ஏற்றப்பட்டது. இடைவிடாமல் அடித்துக்கொண்டிருந்த காற்றில் படபட வென்று அடித்துக்கொண்டபடி உச்சியைத் தொட்ட அக்கொடியில் காணப்படும் இராஜ இலச்சினையிலிருந்து அது காம்போஜ நாட்டிலிருந்து வந்திருக்கும் கலம் என்பது தெளிவானது.

அப்பெருங்கலம் நின்று நிதானித்து பாய் மரங்களை இறக்க ஆரம்பித்த அடுத்த நொடியே மலரை மொய்க்கத் தேனீக்கள் விரைவதுபோல் நாகைத் துறைமுகத்தில் நின்றிருந்த பல்வேறு படகுகளும் அந்தக் கலத்தை நோக்கி உற்சாகமாக விரையலாயின. சரக்குகளைக் கரையேற்றும் சிறு படகுகளுக்காகக் காலையிலிருந்தே காத்து நின்ற மற்ற கலங்களின் கலபதிகள் "அடடா! சைலேந்திர விஜயம் வழக்கமாக வரும் நேரத்தைவிட சற்று விரைவில் வந்து சேர்ந்து விட்டது போலிருக்கிறதே? சரியாய்ப் போயிற்று இனி நமக்கு சரக்குப் படகுகள் கிடைத்த மாதிரிதான்!"

---

[66] நாகையின் உப்பங்கழிகள் தேவாரத்தில் குறிக்கப்பட்டுளளன.

என்று நொந்துகொண்டார்கள். இவ்வாறாக, வந்து சேர்ந்த சில நிமிடங்களுக்குள் அந்தத் துறைமுகத்தில் இருந்த அத்தனை மனிதர்களின் கவனத்தையும் 'சைலேந்திர விஜயம்' எனும் அப்பெருங்கலம் கவர்ந்து விட்டது.

அப்பெருங்கலத்தின் நாற்புறங்களிலும் ஊழியர்கள் நின்று கொண்டு மிகப்பெரிய வெண்சங்குகளைக் குவித்த வாய்க்குள் பொருத்தி "பூம்!" என்று சப்தமெழுப்பினார்கள். அது கலத்தின் பல தளங்களிலும் 'நின்றும், இருந்தும், கிடந்தும்' பொருந்தியிருந்த பயணிகளைத் தட்டி எழுப்புவதற்கான ஓசை போலும். சங்கொலியைத் தொடர்ந்து தளங்களின் நாற்புறங்களிலும் துரிதமான நடமாட்டங்கள் தென்பட்டன. பயணிகள் தத்தம் பொருட்களை வாரிச் சுருட்டிக்கொண்டு கரையிறங்க ஆயத்தமானார்கள்.

துறைமுகத்தின் சிறு படகுகளெல்லாம் மற்ற சரக்குக் கலங்களைப் புறக்கணித்துவிட்டு அப்பெருங்கலத்தை ஆவலுடன் நெருங்கியதற்கு ஒரு முக்கியக் காரணம் இருந்தது. தமது கப்பலில் உள்ள அத்தனை சரக்குகளையும் மொத்தமாக இறக்கி வைப்பதற்கென்று ஒரு குறிப்பிட்ட தொகையைப் படகுக்காரர்களுடன் கலபதிகள் பேசிவைத்து விடுவார்கள். இதில் படகோட்டிகளுக்கு அதிக லாபம் கிடைக்குமென்று கூறுவதற்கில்லை. ஆனால் காம்போஜத்திலிந்து வந்திருந்த அந்தப் பெருங்கலமோ நூற்றுக்கணக்கான மனிதர்களைச் சுமந்து வந்திருந்திருந்த பயணிகள் கலமாதலால் ஒவ்வொரு பயணியையும் கரை சேர்க்கச் சிறு தொகையை படகுக்காரர்கள் பெறுவதற்கு வாய்ப்பு இருந்தது. நான்கு நான்கு பயணிகளாகக் கரை சேர்த்தால்கூட ஓரிரு நாழிகைகளில் எட்டு அல்லது பத்து கழஞ்சுகள் சேர்த்து விடலாமே?

சைலேந்திர விஜயத்தின் நாற்புறங்களிலும் கயிற்று ஏணிகள் மெல்லக் இறக்கிக் கடலில் விடப்பட்டன. அவற்றைப் பிடித்துக்கொண்டு இறங்கினால் நேராகக் கீழே காத்திருக்கும் படகுகளில் கால்பதித்து விடலாம். முதியோர், குழந்தைகள் மற்றும் பெண்டுகளுக்காகத் தனித்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவர்களால் கயிற்று ஏணியைப் பிடித்துக் கொண்டு கீழிறங்க முடியாதாகையால் கலத்திலேயே இருக்கும் சிறு படகுகளில் இருத்தி மெல்லக் கடலில் இறக்கிவிட வேண்டும்.

ஏறக்குறைய ஒரு நாழிகை நேரத்தில் துறைமுகத்தின் பல்வேறு படகுகளும் சைலேந்திர விஜயத்தை நெருங்கி விட்டிருந்தன. படகுகள் நெருங்கும் நேரத்தில் கலத்தின் பல்வேறு தளங்களிலும் அமைந்திருந்த கதவங்கள் திறக்கப்பட, பயணிகள் குபுகுபுவென்று ஈக்களைப்போல் அவசர அவசரமாக வெளியில் வந்து கலத்தின் மேல்தளத்தில் நின்று கொண்டார்கள். "அமைதி! அமைதி! மெதுவாகச் செல்லுங்கள்!" என்று மாலுமிகள் நாற் புறங்களிலும் நின்றுகொண்டு தொண்டை வறளக் கதறினாலும் அவர்களின் வார்த்தைகளை செவிமடுப் பாரில்லை. பலப்பல நாட்கள் கடலில் பிரயாணம் செய்து அலுத்திருந்தவர்களுக்கு நிலத்தை துரிதமாகத் தொட்டுவிடும் பேராவல் எழுந்தது இயல்பே அல்லவா?

படகுகளில் இறங்குவதற்காகத் தளத்தில் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தில் ஒரு குழு அனைவரின் கவனத்தைக் கவர்ந்தது. மழித்த தலைகளுடனும் காவியுடையுடனும் காணப்பட்ட அக்குழு காம்போஜத்திலிருந்து தமிழகத்திற்குக் கிளம்பி வந்திருந்த பௌத்த பிஷுக்களைக் கொண்ட குழுவாகும். மற்ற பயணிகளைப் போல் படகுகளில் இறங்க அதிக அவசரம் காண்பிக்காமல் நின்று நிதானமாக நாற்புறங்களிலும் பார்வையைச் செலுத்தினார்கள் அந்த பிஷுக்கள். அவர்களது வதனத்தில் மெல்லிய புன்னகை படிந்திருந்தது. தங்களைச் சுற்றி நிற்கும் மக்களின் பரபரப்பே அவர்களின் புன்னகைக்குக் காரணம் போலும்.

"மிக அவசரமாகச் செல்ல வேண்டியிருப்பின், மெதுவாகச் செல்லவும். மிக மிக அவசரமாகச் செல்ல வேண்டியிருப்பின் மிக மிக மெதுவாகச் செல்லவும்" என்னும் பண்டைய பௌத்த மொழிக்கேற்ப அவர்களின் அங்க அசைவுகளில் அவசரம் சிறிதும் படியவில்லை. அவர்களின் நிதானமே மற்ற மக்களிடமிருந்து அவர்களைப் வேறுபடுத்திக் காட்டப் போதுமானதாக இருந்தது.

நாகையின் பதரதிட்ட விஹாரையில் நாம் முன்பு கண்ட பிஷுக்களுக்கும் இவர்களுக்கும் உடையலங்காரங்களில் பல்வேறு மாறுபாடுகள் தெரிகின்றனதான். என்றாலும்.. இவர்கள் அந்நியர்களாகத் தோன்றவில்லையே? இந்த முகங்கள் மிகவும் பழகிய முகங்களாகத் தெரிகின்றனவே? இதென்ன அதிசயம்? குறிப்பாக அந்தக் குழுவில் சற்றே இளைய பிராயத்தினராகத் தோன்றும் ஒரு பிஷுவின் முகம் நமக்கு மிகவும் பழக்கமான எவருடைய முகத்தையோ

ஞாபகப்படுத்துவதைப் போலில்லை? ஆனால் அது இன்னாரின் முகம் என்று குறிப்பாக அடையாளம் காண்பதுதான் இயலாததாக இருக்கிறது!

அந்த இளைய பிஷு தன்னருகில் நின்றவரிடம் தலையைக் குனிந்து மெல்ல ஏதோ வினவ, அவர் "விஹாரை நடை தூரத்தில்தான் அமைந்துள்ளது. எளிதில் அடைந்து விடலாம்" என்று விடை பகன்றார். அடடா.. இந்த பிஷுக்கள் இருவரும் தமிழில் அளவளாவிக் கொள்கிறார்களே? இதென்ன அதிசயம்?

அவசரத்தில் இருந்த பயணிகள் முதலில் வந்த இருபது முப்பது படகுகளில் ஏறிப் புறப்பட்டுவிட, அதற்குப் பின் வந்த படகுகளில் பிஷுக்கள் ஏறிக்கொண்டார்கள். முதல் படகில் மூத்த பிஷுக்கள் ஏறிக்கொள்ள அதற்கடுத்த படகில் இளையவர்கள் ஏறிக்கொண்டார்கள். சிறிய தள்ளாட்டத்துடன் கிளம்பிய அந்தப் படகுகள் மெல்ல மெல்லக் கரையை நோக்கிச் செலுத்தப்பட்டன. காற்று எதிர் திசையில் அடித்துக் கொண்டிருந்ததால் கடலலைகள் அவர்களை மீண்டும் மீண்டும் சைலேந்திர விஜயத்தின் பக்கமே ஒதுக்கப் பார்க்க, அவற்றின் பிடிவாதத்தை சரிக் கட்டியபடிதான் படகோட்டிகள் தங்கள் படகுகளைச் செலுத்த முடிந்தது.

தாம் அமர்ந்திருந்த படகு கடலில் நகரத்துவங்கிய சில நொடிகளிலேயே அந்த இளைய பிஷு நேராக நிமிர்ந்து கைகளைக் கட்டியபடி நின்று கொண்டார். அவரது பாதங்கள் படகின் இரு பக்கங்களிலும் அமைந்திருந்த மரச்சட்டங்களில் உறுதியாக ஊன்றப்பட்டன. அவர் எழுந்து நிற்பதைக் கண்ட படகுக்காரன் "வேண்டாம் சாமி! காற்று பலமாக எதிர்த்திசையில் அடிக்கிறது. படகின் ஆட்டத்தில் தவறிப்போய்க் கடலில் விழுந்து விடுவீர்கள்" என்று எச்சரித்தான். அவனுடைய எச்சரிக்கைக்கு பதிலாக ஒரு மௌனப் புன்னகை மட்டும் வழங்கப்பட்டது. தான் அத்தனை தூரம் எச்சரித்தும் பிடிவாதமாக நிற்கிறாரே இந்தத் துறவி? என்று நினைத்துக்கொண்டே படகுக்காரன் துடுப்பு வலிப்பதில் கவனம் செலுத்தத் துவங்கினான்.

படகு சிறிது தூரம் சென்ற பின்தான் அந்தத் துறவி நிற்பதன் காரணம் அவனுக்குப் புரிபட்டது. "விர்...விர்..." என்று விடாமல் சுழன்றடித்துக்கொண்டிருந்த மேல்காற்றில் மற்ற படகுகளெல்லாம் அப்புறமும் இப்புறமும் ஏகத்துக்கு

அலைக்கழிக்கப்பட, அவர்களுடைய படகு மட்டும் அதிக ஆட்டங்களுக்கு உட்படாமல் சென்றது. காற்றின் திசைக்கும் கடலலைகளின் சுழற்சிக்கும் ஏற்றவாறு தனது உறுதியான பாதங்களில் தகுந்த எதிர் அழுத்தங்கள் கொடுத்து அந்தப் படகின் அல்லாட்டங்களை முடிந்தவரையில் சீராக்கிக்கொண்டிருந்தார் அந்த பிக்ஷு! அவருடைய உதவியினால் மற்ற படகுகளைவிட எளிதாகவும் விரைவாகவும் அந்தப் படகு கரையை நெருங்கிவிட்டது. படகோட்டி நன்றி பொங்கும் விழிகளால் அவரைப் பார்த்தான். அதற்கும் அதே பழைய மௌனப் புன்னகைதான் பதில்!

அந்நிய நாட்டிலிருந்து அன்று காலை வந்திறங்கியிருந்த பல்வேறு சரக்குகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஓரிடத்தில் அவர்கள் கரையிறங்கினார்கள்.

படகோட்டி அந்த இளம் பிக்ஷுவை ஆவலுடன் நெருங்கி வந்தான்.

"சிறு வயது முதல் இங்கே படகோட்டிக் கொண்டிருக்கிறேன். நாகையின் கடலும் காற்றும் எனக்கு மிகவும் பழக்கமானவை. இருந்தாலும் இத்தனை எதிர்க் காற்றில் என்னால் நிச்சயம் உங்களைப்போல் தாக்குக் கொடுத்து நின்றிருக்க முடியாது. எவ்வாறு இந்த வித்தையைச் செய்தீர்கள்?"

பிக்ஷு அவனுடைய தோளைப் பிரியத்துடன் தொட்டு அழுத்தினார்.

"காற்று வேறு நான் வேறு அல்ல அப்பனே! படகின் மீது நின்ற அந்தக் கணங்களில் நான் காற்றாகவே நின்றேன். எதிர்த்து நிற்கவில்லை. புரிகிறதா?"

'புரியவில்லை' என்பதாக உதட்டைப் பிதுக்கித் தலையை ஆட்டினான் அந்தப் படகோட்டி.

அவர் சிரித்தார்.

மௌனமாகத் திரும்பி கடற்கரைக்கு அருகில் அமைந்திருந்த பதரதிட்ட விஹாரையை நோக்கி மற்ற பிக்ஷுக்களுடன் நடக்க ஆரம்பித்தார்.

10. புத்தியினால் ஒரு யுக்தி



ஆதவன் மறைந்தபின் மெல்லப் படரத் துவங்கியிருந்த இருளால் நாகை நகரெங்கிலும் வெளிச்சப் பொட்டுக்கள் ஆங்காங்கே தோன்ற ஆரம்பித்தன. தத்தம் வீட்டு வாயிலில் அமைந்திருந்த மாடப் பிறைகளில் விளக்கேற்றி வைப்பதற்காக வெளியில் வந்த பெண்டிர் விளக்கேற்றி வைத்த கையோடு வீட்டிற்குள் செல்லாமல் அக்கம்பக்கத்தவரிம் பேச்சுக்கொடுக்கத் தலைப்பட்டார்கள்

கடைகளும் சந்தைகளும் அமைந்திருந்த தெருவீதிகளில் வெளிச்சத்திற்குக் குறைவில்லை. இரவு நேர வாடிக்கையாளர்களைக் கவனிப்பதற்காகத் தத்தம் பகுதிகளில் பெரும் தீபங்களை கடைக்காரர்கள் ஏற்றி வைத்திருந்தார்கள். ஒரு சிலர் தீபங்களைத் தவிர சாம்பிராணி முதலான தூபப்புகைகளையும் திருஷ்டி கழிக்கும் பொருட்டு ஏற்றியிருந்தார்கள். அந்த நறுமணப் பொருட்களிலிருந்து கிளம்பிய இனிய சுகந்தமானது வீதியைக் கடந்து செல்வோரின் நாசிகளை செல்லமாகத் தூக்கியது.

வானில் நட்சத்திரச் சிதறல்கள் தோன்றத் துவங்கிவிட்ட அந்தக் கருநீலப் பின்மாலை நேரத்தின் பின்னணியில் பதரதிட்ட விஹாரை அந்நாளைய அசோகர் காலத்து ஸ்தூபங்களையும் சேதியங்களையும் போல அமைதி பொங்கும் பொலிவுடன் விளங்கியது. காலை நேரத்தில் காணப்பட்ட சந்தடிகள் எதுவுமின்றி அமைதியுடன் காட்சியளித்த அந்த விஹாரையை நெருங்கும்போது நம் மனதிலும் அமைதியும் மோனமும் படர்வதை வியப்புடன் கவனிக்கிறோம். விஹாரையின் முக்கியப் பகுதிகளில் அமைந்திருந்த வெண்கல விளக்குகளில் பிக்ஷு ஒருவர் எண்ணை விட்டு தீபமேற்றிக்கொண்டிருந்தார். நாம் அருகில் வந்து நிற்பதைக் கூடக் கவனிக்காமல் எண்ணம், பார்வை, செயல், மூச்சு என்று அவருடைய எல்லா இயக்கங்களுமே ஒருமனதாகத் தீபமேற்றிக் கொண்டிருந்தன. வருடக் கணக்கான பௌத்தபோதனை அந்த மனிதரை ஒரு புனிதராக்கி விட்டதைப் புரிந்துகொண்டு விஹாரைக்குள் நுழைகிறோம்.

ஆஹா! விஹாரையின் முக்கிய சேதியத்தில் நாம் காணும் காட்சியை வர்ணிக்க வார்த்தைகள் ஏது?

சேதியத்தின் மத்தியில் அமைந்திருந்த உய்யக்கொண்ட நாயகரின் இருபுறங்களிலும் வரிசையாக தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தன. பீடத்திற்கு அருகில் சிறு வத்திகளில் தூபங்களும் கமழ்ந்து கொண்டிருந்தன. நாயகரின் திருவடியில் அழகான தாமரை மலரொன்று படர்ந்திருந்தது. தாமரை மலர்ப் பாதங்களின் மேல் மற்றொரு தாமரையா?

நாயகர் திருவுருவத்தைச் சுற்றிலும் அரை வட்ட வரிசைகளில் காவியுடை தரித்த பிக்ஷுக்கள் பத்மாசனமிட்டு அமர்ந்திருந்தார்கள். தீபங்களின் செந்நிற வெளிச்சம் அவர்களுடைய காவியுடைகளில் பட்டு அவ்வாடைகளை மேலும் செக்கர் நிறமாக்கிக் காட்டியது. ஆழ்ந்த தியானத்தில் கண்மூடி நிற்கும் அந்தத் தவத்தில் கனிந்த திருமுகங்களை நோக்கி மெய்மறந்து நிற்கிறோம். சொர்க்கம் என்பது இதுதான் போலும். அவர்களுடைய திருவாயிலிருந்து சீராகக் கீழ்க்கண்ட வார்த்தைகள் எழுகின்றன.

"புத்தம் சரணம் கச்சாமி....
தர்மம் சரணம் கச்சாமி...
சங்கம் சரணம் கச்சாமி....."

'நான் பகவான் புத்தரைச் சரணடைகிறேன். அவர் போதித்த பௌத்த தர்மத்தைச் சரணடைகிறேன். அவர் ஸ்தாபிதம் செய்த சங்கத்தைச் சரணடைகிறேன்' எனும் பொருள் பொதிந்த வார்த்தைகளைச் சாதாரணமாக ஒருவர் சொல்லிக் கேட்பதற்கும் அந்த விஹாரையில் படர்ந்திருந்த ஆன்மீகச் சூழலில் தவமுனிவர்களின் வாக்கில் கேட்பதற்கும் எத்தனை பெரிய வித்தியாசம்? 'மந்திரம் என்பது மறை மொழி மாந்தர்களின் வாயிலிருந்து வரும் மொழி' என்று தொல்காப்பியர் இலக்கணம் உரைத்தது இந்தக் காரணம் கருதித்தான் போலும்.

பதர திட்ட விஹாரையின் முழுவதும் படர்ந்திருந்த ஆன்மீகச் சூழலானது ஆச்சாரியார் மஹா காசியப தேரரின் அறையில் கூடிநின்ற நால்வரின் மனநிலையையும் கூட பாதித்திருந்தது. வழக்கமாக ஒரு வகையான பரபரப்பில் எப்போதும் திகழும் மாராயரே அமைதியடைந்து விட்டாரென்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்?

நால்வரும் சேதியத்தில் இதர பிக்ஷுக்களுடன் தியானத்திலிருந்த ஆச்சாரியாரின் வருகைக்காக மௌனமாகக் காத்துக் கொண்டிருந்தார்கள். சேதியத்திலிருந்து தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கும் "புத்தம் சரணம் கச்சாமி.." என்னும் மந்திர வார்த்தைகள் அவர்களின் மனதைப் பூரணமாகக் கட்டிப் போட்டு விட்டிருந்தன.

சிறிது நேரத்தில் ஆச்சாரியார் அந்த அறைக் கதவை அதிக சப்தம் செய்யாமல் விலக்கிக்கொண்டு உள்ளே நுழைய, நால்வரும் அவருக்கு முகமன் தெரிவிக்கும் விதமாய் எழுந்து நின்றார்கள். தன்னைத் பின்தொடரும்படி சைகை செய்த ஆச்சாரியார் சேதியத்தைச் சுற்றிக்கொண்டு முன் வாயிலுக்கருகிலிருந்த படிகளில் ஏறத்துவங்கினார். அது விஹாரையின் மேல் தளத்திற்குச் செல்லும் பாதை. அவர் சென்ற வழியில் மெல்லிய விளக்கு வெளிச்சத்தின் துணையுடன் நால்வரும் படிகளில் ஏறி மேல் தளத்தை அடைந்தார்கள்.

வானம் துல்லிய நீல நிறத்தில் காட்சியளித்துக் கொண்டிருக்க, தென்மேற்கு வானில் ஒரே ஒரு நட்சத்திரம் மட்டும் பளிச் பளிச்சென்று பெரிதாக வெளிச்சம் எடுத்துக் கொண்டிருந்தது. அருள்மொழிவர்மர் தன்னை மறந்து சிறிது கணங்கள் நிதானித்து அந்தத் தாரகையை வியப்புடன் நோக்கினார். அந்த விண்மீன் அவருடைய குல முன்னோரான கரிகால் வளவரை அந்த நேரத்தில் அவருக்கு ஞாபகப்படுத்திற்று.

"ஓ கரிகாலச் சோழச் சக்ரவர்த்திகளே! நீங்கள்தான் எத்தனை பெரியவர்? நீர் தோன்றிய சூரிய குலத்தில் உதிக்க நான் எத்தனை பேறு பெற்றவனாயிருக்க வேண்டும்? உமது வீரவாளுக்குப் பணியாத தேசமில்லை.. உமது பண்பைப் பாடாத புலவரில்லை.. கடியலூர் உருத்திரங்கண்ணனாரில் தொடங்கி கழத்தலையார், வெண்ணிக்குயத்தியார், முடத்தாமக் கண்ணியார் என்று சங்ககாலப் புலவர்கள் வரிசையில் நின்று உம்மைப் பாடினர். கால காலம் கடந்து உன் புகழ் நிலைத்து நிற்கிறது பட்டினப்பாலை பாடிய புலவனுக்கு நீர் பரிசளித்த மண்டபம்[67] இன்றும் உருகழியாமல் நிற்கிறது. உமது அளவிற்கு உயர முடியா

[67] திருவெள்ளரைக் கல்வெட்டு.

விட்டாலும் உம் குடியில் வந்தவன், நீர் அமர்ந்த சோழ சிங்காதனத்தில் இன்று ஏறி அமர்ந்திருப்பவன் என்கிற அளவில் அருஞ்செயல்கள் சில ஆற்றவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். என்னை ஆசீர்வதிப்பீரா? எனது வேண்டுகோளைச் செவிமடுப்பீரா?"

தாரைகை பதில் பேசாமல் மௌனமாக அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றது.

"அருள்மொழி..."

ஆச்சாரியாரின் அன்பு மிகுந்த குரல் அருள்மொழி வர்மரை மீண்டும் பூமிக்கு அழைத்து வந்தது.

"இப்படி அரைவட்ட வடிவமாக எல்லோரும் அமர்ந்து கொள்வோம். உக்கிராண அறையில் உங்களுக்கெல்லாம் உணவு தயாரிக்கச் சொல்லியிருக்கிறேன். சைவ உணவு சம்மதம்தானே?"

"அது பிரசாதம் குருதேவா! பூரண திருப்தியுடன் உண்போம்."

நால்வரும் ஆச்சாரியாரைச் சுற்றி அமர்ந்து கொண்டார்கள்.

"பல்லவராயரையும் மாராயரையும் நான் நன்கு அறிவேன். இந்த மூன்றாமவர் யார்? பிராயத்தில் உங்கள் அனைவரையும்விட இளையவராகத் தெரிகிறார்?"

"இவர்தான் அமண்குடியாரான கிருஷ்ணன் இராமன்!"

பெருமை பொங்கத் தான் அறிமுகம் செய்யப்படுவதை ஒரு வெட்கத்துடன் எதிர்கொண்டார் அமண்குடியார்.

"நல்லது. அருள்மொழி! நீ வந்த காரியத்தைக் கூறு.."

அடுத்த அரை நாழிகை நேரத்தில் அருள்மொழிவர்மர் அன்று காலையில் காரோணர் திருக்கோயிலுக்கருகில் நிகழ்ந்த உரையாடலின் செய்திகளைச் சுருக்கமாக அவருக்கு எடுத்துரைத்தார்

"அப்போது சேரநாட்டையும் காந்தளூர்ச்சாலையையும் தாக்குவதென்று முடிவுசெய்து விட்டாயென்று சொல்."

"முழுச் சேரநாட்டையும் தாக்கும் எண்ணமில்லை. சூழ்நிலை இன்னமும் அத்தனை மோசமாகிவிடவில்லை. நாஞ்சில் நாட்டிலும்[68] அனந்தபுரம் மற்றும் விழிஞம் பகுதிகளிலும்தான் கணிசமான குடிப்படைகள் இரகசியமாக வள்ளுவ நாடுவாழியின் தலைமையில் அணிதிரளத் தொடங்கியுள்ளதாகக் கேள்வி..."

"அத்தனை நாடுவாழிகளும் வள்ளுவனாரின் பின் திரண்டிருக்கிறார்களா என்ன?"

"இல்லை. நாடுவாழிகளுக்குள் இந்த விஷயத்தில் கருத்தொற்றுமையில்லை. இரண்டு அல்லது மூன்று அணிகளாக அவர்கள் பிரிந்து நிற்கிறார்கள். சொல்லப் போனால் வள்ளுவனார் இரகசியமாகப் படைதிரட்டி வைத்திருப்பதையே பல நாடுவாழிகள் இன்னமும் அறியவில்லை."

"அவர்கள் சோழநாட்டிற்கெதிராகப் படைதிரட்டக் காரணம்?"

"அவர்கள் சோழநாட்டிற்கெதிராகப் படை திரட்டவில்லை. எனக்கெதிராகத் திரட்டுகிறார்கள். என்னை அரியணையிலிருந்து அகற்றி வைத்துவிட்டு மதுராந்தகன் கண்டராதித்தனை[69] சோழ நாட்டு அரியணையில் அமர்த்த வேண்டுமாம். அதுதான் அரசியல் தர்மமாம். காந்தளூர்ச் சாலையின் ஆச்சாரியார் இவ்வாறு அபிப்பிராயப்படுகிறார். வள்ளுவனார் அதனை வழி மொழிகிறார்!"

"பாண்டிநாட்டு வேந்தரும் தற்போது சேரநாட்டில்தான் இருக்கிறாரோ?"

"ஆமாம். ஆனால் எங்கு இருக்கிறார் என்பது பரம இரகசியமாகக் காக்கப்படுகிறது. வள்ளுவ நாடுவாழி தனித்துச் செயல்படுவதுபோல் தெரிந்தாலும் பின்னணியில் இருந்து இயக்குவது அமரபுஜங்கப் பாண்டியர்தான் என்று ஒற்று வாக்கில் செய்தி கிடைத்தது. நமது ஒற்றர்களால் இன்னமும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை..."

"காந்தளூர்ச் சாலையின் ஆசானாகத் தற்போது விளங்குபவர்?"

[68] நாகர்கோயில் – கன்னியாகுமரி – ஆரல்வாய்மொழிப் பகுதிகள்.
[69] உத்தமச் சோழரின் மகன்.

"தங்களுக்குத் தெரிந்தவர்தான். திருநாராயண பட்டதிரி!"

"பட்டதிரியா இன்னமும் ஆச்சாரியாராக இருக்கிறார்? ஆச்சரியம்தான். அவர் உன்னை எதிர்க்கக் காரணம்?"

"இரவிநீலி குடும்பத்தாரை நாடு கடத்தியதிலிருந்து எனக்கெதிராகச் செயல்படுவது ஒன்றையே தனது நோக்கமாகக் கொண்டிருக்கிறார் பட்டதிரி."

"அந்தக் குடும்பத்தார் செய்தது படு பாதகமான துரோகமில்லையா? அதற்கான தண்டனைதானே நீ அளித்தது?"

"அவர்களைப் பொறுத்தவரை அது அரசியல் தர்மத்தைக் காக்கும் செயலாம்! நான் தர்மத்துக்கு விரோதமாகப் பதவிக்கு வந்தவனாம். கண்டராதித்தரின் கொழுந்துகள் மட்டும்தான் பட்டத்திற்கு உரியவர்களாம். அதுதான் இராஜ தர்மமாம்..."

"நல்ல இராஜ்ஜியம்! நல்ல தர்மம்! ஒருவன் பிறப்பினால் மட்டும் நாட்டை ஆளும் உரிமையை அடைந்துவிட முடியாது என்று எல்லா அரசியல் சாஸ்திரங்களும் போதிக்கின்றன. அது அவனுக்குக் கொடுக்கப்படும் ஒரு வாய்ப்பு. அவ்வளவுதான். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டை ஆளக்கூடிய வலிமையையும் தகுதியையும் ஒருவன் வளர்த்துக்கொள்ள வேண்டும். அதில் தவறினால் அவன் நாடாளும் உரிமையை இழக்கிறான்.

ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? ஒரு காலத்தில் மலை நாட்டில் ஒரு பழக்கம் இருந்தது. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை அரசர் பல நிலைகளில் போட்டி வைத்துத் தேர்ந்தெடுக்கப்படுவார்[70]. பிறப்பினால் உரிமை கிடைத்தாலும் இந்தப் போட்டியில் அவர் தமது தகுதியை நிரூபித்தாக வேண்டும். இந்தப் பழக்கம் இப்போது வழக்கொழிந்து விட்டது. கிடக்கட்டும். அவர்களின் திட்டம்தான் என்ன?"

"நாடுவாழிப் படைகளுடன் விரைவில் பாண்டிப் படைகளும் சேர்ந்துகொண்டு விடும். இரண்டு படைகளும்

[70] கேரளத்தின் பண்டைய வரலாற்றைக் குறிப்பிடும் கேரளோப்பத்தி (கேரள உறபததி) என்னும் நூலில் இந்தச் செய்தி காணக்கிடைக்கிறது.

சேர்ந்துவிட்டால் கேட்கவா வேண்டும்? மீண்டும் மதுரையில் மீன்கொடி. எனக்கெதிரான கலகங்கள். பழைய வாழ்க்கை..."

"மக்கள் இந்தச் சேர-சோழப்-பாண்டியப் போர்களால் கடந்த ஐம்பது வருடங்களில் பெருந்தொல்லைகள் அனுபவித்து விட்டார்கள் அருள்மொழி. இனி அவர்களுக்குத் தேவை அமைதியான வாழ்வு மட்டுமே!"

"அவர்கள் தங்களது பலத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்புக் கொடுக்காமல் இந்தப் பிரச்சனையை முளையிலேயே கிள்ளி எறிவதென்று தீர்மானித்துத்தான் படையெடுப்பு நடத்தத் திட்டமிட்டிருக்கிறேன்."

"சேரமான் பெருமாளின் நிலைபாடு இந்த விஷயத்தில் என்னவென்று தெரியுமா?"

"முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. என்ன இருந்தாலும் சோழ நாட்டுப் படைகள் ஆய்வேள் நாட்டுப் பகுதிகளில் பிரவேசிப்பதை அவர் இரசிப்பார் என்று தோன்றவில்லை. அதே சமயம் வள்ளுவ நாடுவாழியின் திட்டங்களை முழுமையாக ஆதரிப்பார் என்றும் சொல்வதற்கில்லை."

"காந்தளூர்ச் சாலையை நீ தொடாதவரை சேரமான் பெருமாள் இந்தப் பிரச்சனையில் இருதலைக் கொள்ளி எறும்பாகத்தான் இருப்பார். ஆனால் சாலை விவகாரத்தில் நீ தலையிடுவதாகச் செய்தி கிட்டினால் அவருக்கு உன்னை எதிர்த்து நிற்பதைத் தவிர வேறு வழி கிடையாது. சொல்லப்போனால் பழம்பெரும் கல்வி கேந்திரமான காந்தளூர்ச் சாலை இந்த விவகாரத்தில் நேரடியாகச் சம்மந்தப்பட்டிருப்பது உன்னுடைய படையெடுப்புத் திட்டங்களை மிகுந்த சிக்கலுக்குள் ஆழ்த்தப் போகிறது..."

"குருதேவா! என்னுடைய பிரச்சனையை நான் சொல்லிவிட்டுக் கூறுவதற்கு முன்பாக நீங்களாகவே ஊகித்தறிந்து விட்டீர்கள். வள்ளுவ நாடாழ்வார் திரட்டும் படைகளை எதிர்த்துப் போரிடுகிறேன் என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாலும் என்னுடைய உண்மையான எதிரிகள் காந்தளூரும் பட்டதிரியும் மட்டுமே..."

"நாடுவாழிகளையும் பாண்டியர்களையும் தாண்டிக் காந்தளூர் மீது மட்டும் உனக்கேன் இத்தனை கோபம்? பட்டதிரி உனக்கெதிராகச் செயல்படுகிறார் என்பதாலா?"

அருள்மொழிவர்மரின் முகம் மிகுந்த இறுக்கமடைந்தது. ஆச்சாரியரை நெருங்கிவந்து அவரது காதுகளில் ஏதோ புகன்றவர் தனது இடுப்பில் முடித்து வைக்கப்பட்டிருந்த எரிந்துபோன ஓலைத்துணுக்கையும் காட்டினார்.

அவர் அப்படி என்ன கூறினார் என்பதை நாமறியோம். ஆனால் அடுத்த கணமே ஆச்சாரியாரின் முகம் சொல்ல முடியாத விகாரத்தை அடைந்தது. "நிஜமாகவா? நிஜமாகவா கூறுகிறாய் அருள்மொழி? புத்த பெருமானே!" என்று தலையின் மீது கையை வைத்துக்கொண்டார் அவர்.

"மகா வீரரான எனது தமையனார் வீழ்ந்து கிடந்த கோலம் என் நெஞ்சில் என்றும் அகலாமல் நிற்கிறது குருதேவா! எளிதில் உணர்ச்சி வசப்படாத என்னையே அந்த ஒரு நினைப்பு உடனடியாகக் கோபப்படுத்திவிடுகிறது. மன்னிக்கவும்..."

"இப்போதுதான் எனக்குப் பல விஷயங்கள் தெளிவாகின்றன. காந்தளூரின் மீது நீ இத்தனை ஆவேசப்படுவதன் காரணத்தையும் புரிந்து கொள்ள முடிகிறது..."

"காந்தளூர்ச் சாலையின் ஒவ்வொரு பட்டனும் சட்டனும் என் தலைமையில் இயக்கும் சோழ நாட்டை எவ்வாறு ஒழித்துக் கட்டுவது? எங்கெங்கு கலகங்கள் உருவாக்குவது? எனக்கெதிராக யார் யாரைத் திரட்டுவது? எப்போது ஏவிவிடுவது? என்று சதா சர்வகாலமும் ஒருமித்த யோசனையில் இருக்கிறார்கள். அவர்களின் மூளையில் அத்தனை தூரம் விஷத்தைப் பாய்ச்சி இருக்கிறார் பட்டதிரி. தங்களுடைய வித்தையில் இறுமாப்புக் கொண்டு திரிகிறார்கள் அவர்கள்.

என்னுடைய சிறிய தந்தையாரான உத்தமச் சோழர் ஒரு முறை என்னைத் தனிமையில் அழைத்துச் சென்று என்ன சொன்னார் தெரியுமா? அவர்களை வெல்லவே முடியாது அருள்மொழி! வெல்லவே முடியாது. ஒவ்வொரு சட்டனும் நாற்பது சோழ நாட்டு வீரர்களுக்கு இணையானவர்கள். ஒவ்வொரு பட்டனும் இருபது சோழ நாட்டு தண்ட நாயக்கர்களை வெல்லக் கூடியவர்கள். அவர்களுடைய மர்ம வித்தை நம்முடைய சிலம்பத்தையும் வாள்வீச்சையும் நொடியில் தூக்கிச் சாப்பிட்டுவிடும். அவர்களை எதிர்ப்பதை விட அரவணைத்துக் கொண்டு செல்வதுதான் நல்லது."

ஆவேசத்துடன் பேசிக்கொண்டே சென்ற அருள்மொழி வர்மரின் திருமுகம் செக்கர் நிறத்தில் சிவந்து போயிற்று. அவருடைய கண்கள் அந்தக் கணங்களில் வேதங்கள் வர்ணிக்கும் அக்னி ருத்திரனின் கண்களை ஒத்திருந்தன.

"அருள்மொழி..." - ஆச்சாரியர் அவரது தோளில் வாஞ்சையுடன் கரங்களைப் பதித்தார்.

"உன் உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டேன். ஆனால் நீ மகத்தான காரியங்களைச் சாதிக்கப் பிறந்தவன் என்பதை மறந்துவிடாதே. கோபம் உன் கண்களை மறைத்து விடக்கூடாது. காந்தளூர்ச் சாலை ஒரு கல்வி கேந்திரம். அதனைத் தாக்கினால் மலைநாட்டு மக்களின் ஒட்டுமொத்த மதிப்பை நீ இழக்கவேண்டி வரும்."

"எல்லோரும் இதையேதான் சொல்கிறார்கள்!"

"உன் நலனில் அக்கறை கொண்ட எவரும் இந்த விஷயத்தில் எச்சரிக்கை செய்யத்தான் செய்வார்கள்."

"அப்படியெனில் அவர்களுடைய அக்கிரமங்களுக்கு ஒரு முடிவே கிடையாதா?"

"உண்டு. முடிவு உண்டு..." என்று நிறுத்திய ஆச்சாரியர் அமைதியாக ஒரு கணம் தனது கண்களை மூடினார். "அதனைப் புரிந்துகொள்ளுமுன் மலை நாட்டைப் பற்றியும் காந்தளூர் பற்றிய சில பழைய விவகாரங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். இது கத்தியால் மட்டுமே தீர்க்கப்பட வேண்டிய விவகாரம் அல்ல. புத்தியால் தீர்க்கப்பட வேண்டிய ஒரு கணக்கு. ஒரு வகையில் மிகப் பழைய கணக்கு..."

பழுத்த அரசியலறிவும் நுண்ணறிவும் மலைநாட்டு மரபுகள் பற்றிய ஆழமான அனுபவ அறிவும் ஒருங்கே வாய்த்திருந்த பதரதிட்ட விஹாரையின் ஆச்சாரியரான மஹாகாசியபர், தமது எண்ணங்களை மெல்ல மெல்ல விளக்கிக் கொண்டு போக, கூடியிருந்த பெருமக்கள் வியப்பின் உச்சிக்கே சென்றார்கள். அந்த வயதான புத்த சன்யாசியிடம் அருள்மொழிவர்மர் அத்தனை தூரம் ஆலோசனை கேட்க வந்தது எதற்காக என்பதே அவர்களுக்கு அப்போதுதான் புரிந்தது!

ஏறக்குறைய மூன்று நாழிகை நேரம் ஆச்சாரியர் இடைவெளியின்றிப் பேசி முடித்ததும் மாராயர்

தழுதழுத்துப் போய் ஆச்சாரியரின் கரங்களைப் பற்றிக் கொண்டார்.

"தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். பேரரசர் சேரநாட்டுப் படையெடுப்பைப் பற்றித் தங்களிடம் ஆலோசனை கேட்கலாமென்று கூறியபோது அதனைப் புறக்கணித்தவர்களுள் நானும் ஒருவன். தங்களின் ஆழமான அரசியலறிவு இப்போதுதான் எனக்குப் புரிகிறது. தங்களின் பின்புலம் தெரியாமல் மிகவும் குறைவாக மதிப்பிட்டு விட்டேன். என்னைப் பொறுத்தருள வேண்டும் சுவாமி!"

அதற்கு பதிலாக அமைதியான முறுவலொன்று ஆச்சாரியரின் முகத்தில் முகிழ்த்தது. வாழ்வின் சகலவிதமான பரிணாமங்களையும் கண்டு கேட்டு உய்த்துணர்ந்த ஒரு பக்குவமான ஆன்மாவுடன் தாம் உரையாடிக் கொண்டிருக்கிறோம் எனும் உண்மையை மாறாயர் அந்தக் கணத்தில் உணர்ந்தார்.

"ஆச்சாரியரின் ஆலோசனைகள் கேட்பதற்கென்னவோ நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் நடைமுறையில் இது சாத்தியமாகுமா?" - சந்தேகம் மிகுந்த ஒரு கேள்வி பல்லவராயரிடமிருந்து எழுந்தது.

"சாத்தியப்படும். உரிய மனிதர்கள் உடன் இருந்தால் நிச்சயம் இது சாத்தியப்படும்!"

"என்ன சொல்ல வருகிறீர்கள் குருதேவா ?"

ஆச்சாரியார் அருள்மொழிவர்மரின் பக்கம் திரும்பினார்.

"அருள்மொழி! இந்த சிக்கல் மிகுந்த பிரச்சனையில் உனக்கு உதவக் கூடிய ஒருவர் இன்று காலை காம்போஜத்திலிருந்து வந்திருக்கும் சைலேந்திர விஜயம் என்னும் பெருங்கலத்தில் வந்து இறங்கியிருக்கிறார். உனக்கு மிகவும் நெருக்கமாகத் தெரிந்த நண்பர்தான்..."

அருள்மொழிவர்மரின் முகத்தில் உடனடியாகப் பெரியதொரு வியப்பு படர்ந்தது. "என்ன சொல்கிறீர்கள் குருதேவா? காம்போஜமென்றால்... அவரா? அவரா வந்திருக்கிறார்?" என்று வினவினார் பரபரப்புடன்.

"ஆம்!" என்று அதற்கு மறுமொழி தரும் விதமாக ஆச்சாரியாரின் சிரம் தாழ்ந்தது.

"சோழ நாட்டிற்கு நல்ல காலம் பிறந்து விட்டது சுவாமி!" என்றபடி அருள்மொழிவர்மர் வானிலிருந்த விண்மீனை மீண்டும் நோக்கினார். அவரது கரங்கள் நன்றிப் பெருக்கில் இயல்பாகக் குவிந்தன.

11. அக்கசாலைப் பெரும்பள்ளி



நாகை நகரில் சோழ இராஜாங்கத்தின் புலி முத்திரை பொறித்த நாணயங்களை[1] உருவாக்கும் அக்கசாலையொன்று நகருக்கு மத்தியில் அமைந்திருந்தது என்பதைப் பல்லவராயர் முன்னர் குறிப்பிட்டார் அல்லவா? அந்தச் சாலையை உரிய முறையில் பாதுகாக்கும் பொருட்டு அதன் நாற்புறங்களிலும் போர்வீரர்களைப் பயிற்றுவிக்கும் கடகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆதவன் உதிக்கும் முன்னரே துயில் கலைந்து எழுந்து விடும் வீரர்கள் கடகங்களின் வாயிற்புறங்களில் அமைந்துள்ள பெரும் மைதானங்களில் அதிகாலை வேளையில் பல்வேறு பயிற்சிகளிலும் ஈடுபடுவது வழக்கம். "டாங்" "டாங்" என்று நீண்ட பிடி கொண்ட வாட்கள் உறுதியான கேடயங்களில் மோதுவதினால் ஏற்படும் ஒலி அந்தப் பகுதிகளில் பலமணி நேரங்களுக்கு ஒலிப்பதுண்டு "சடார்" "சடா"ரென்று சிலம்புக் கம்புகள் ஒன்றொடொன்று மோதும் ஓசையும் "விர்..விர்"ரென்று காற்றைக் கிழித்துக் கொண்டு செல்லும் அம்புகளும் அவற்றைத் தடுக்கும் மரக்கேடயங்களும் அந்தச் சூழலை ஏறக்குறைய ஒரு போர்க்களமாகவே மாற்றி விடுவதை அந்தப் பகுதியைக் கடக்கும் பொதுமக்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள்.

இந்தப் போர்ச்சூழலுக்கு சற்றும் பொருந்தாமல் அந்த அக்கசாலை வளாகத்திற்குள் அமைந்திருந்த பௌத்தப்

---

[1] நாகையில் இன்றும் 'நாணயக்காரத் தெரு' என்கிற பெயரில் தெருவொன்று அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இங்குதான் [illegible]றுக்கும் மேற்பட்ட பௌத்தப் படிமங்கள் ஆங்கிலேயர் காலத்தில் [illegible]ப்பட்டன.

பள்ளியிலிருந்து[72] "புத்தம் சரணம் கச்சாமி..." என்னும் தர்மோபதேசமும் அதிகாலை வேளைகளில் பூஜா நேரத்தில் ஒலிப்பதுண்டு. அங்கே அக்கசாலைப் பெரும்பள்ளி ஆழ்வாராக எழுந்தருளியிருந்த புத்தபகவான் தம் கருணை மேலீட்டாலும் போர் செய்வது ஷத்ரிய தர்மம் என்னும் கர்மயோக சிந்தனையாலும் அந்தக் கடகங்களிலிருந்து எழுந்த சப்தங்களையும் வீரர்களின் "ஆஹா"காரங்களையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்தார் என்றுதான் கூறவேண்டும்.

வழக்கம்போல அன்றும் கார்த்திகை மாதத்தின் அதிகாலைக் குளிரைப் பொருட்படுத்தாது வீரர்கள் பலரும் துயிலெழுந்து ஆலங்குச்சிகளில் பல் துலக்கிவிட்டுத் தத்தம் கடகங்களின் வாயிலில் அமர்ந்து சூடான பாலை அருந்திக் கொண்டிருந்தனர். முதல் நாள் பயிற்சியில் சக வீரர்களிடம் தோற்றுப்போய் விட்டிருந்த ஒரு சில வீரர்கள் "இன்று எப்படியும் அவனைப் பழிதீர்த்து விடுகிறேன் பார்!" என்று தனக்குத்தானே மொழிந்து கொண்டிருந்தனர். வேறு சிலரோ ஆயுதங்களைச் சாணைக்கல் கொண்டு கூராக்குவதிலும் அவற்றின் பல்வேறு பாகங்களிலும் பளபளப்பாக எண்ணை தடவித் துருப்பிடித்துவிடாமல் உருவேற்றுவதிலும் சிரத்தையாக ஈடுபட்டிருந்தனர். ஒரு ஓரத்தில் சில வீரர்கள் குழுவாக யோகாசனம் முதலான உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதையும் காணமுடிகிறது. அவர்களில் ஒரு சிலர் உடலை வில் போன்று வளைத்து சக்ராசனம், மயூராசனம் முதலான சிரமமான ஆசனங்களையும் அனாயாசமாகச் செய்து கொண்டிருந்தார்கள்.

கார் காலமாதலால் நீண்ட நேரமாகத் தலையை வெளிக்காட்டாத ஆதவன் ஒரு வழியாகத் தனது சோதனைகளை முடித்துக்கொண்டு கிழக்கை வெளுக்க ஆயத்தமானான். இந்தத் தருணத்திற்காகவே காத்திருந்த வீரர்கள் தம்முடைய இடைக் கச்சுகளை அழுந்த முடிந்து கொண்டு மைதானத்திற்கு விரைந்தார்கள். அவர்கள் வரும் முன்னரே மைதானங்களை அடைந்துவிட்ட கடகங்களின் குழுத்தலைவர்கள், யார் யார் எந்தெந்தப் பயிற்சிகளில் ஈடுபடுவது என்று கலந்தாலோசித்து முடிவு செய்து அவ்வப்

[72] நாகையில் கண்டெடுக்கப்பட்டதொரு பௌத்தப் படிமத்தின் கீழ 'அக்கசாலைப் பெரும்பள்ளி ஆழ்வார்' என்று பொறிக்கப்பட்டுள்ளது.

பகுதிகளுக்குத் தத்தம் வீரர்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

கடகங்களுக்குள் பல்வேறு வீரக்குழுக்கள் அமைந்திருந்தன. ஒரு குழு மதுராந்தகத் தெரிஞ்ச கைக்கோளப் படையின் வீரர்களைக் கொண்டிருந்தது மற்றொரு குழு இரணமுக இராமன் படையைச் சேர்ந்திருந்தது. வேறொரு குழுவோ உத்தமசீலி மங்கலத்துப் படை வீரர்களைக் கொண்டதாக அமைந்திருந்தது இவ்வாறு குஞ்சரமல்லப் பெரும்படைக் குழு, நானாதேசிப் படைக்குழு, கோதண்ட இராமன் தெரிஞ்ச கைக்கோளப் படைக்குழு, மூன்று கை மாசேனைக்குழு என்று பலப்பல படைகளின் வீரர்களை நாகையின் அக்கசாலைக் கடகங்கள் பாரபட்சமின்றி பயிற்றுவித்துக் கொண்டிருந்தன. ஓராண்டுப் பயிற்சிக்குப்பின் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கால்லூன்றியிருந்த எல்லைப் பாதுகாவல் படைகளில் அந்த வீரர்கள் சேர்ந்து கொள்வார்கள்.

ஆதவன் ஒளி கிழக்கில் பரவத் துவங்கிய ஓரிரு நாழிகைகளில் ஏறக்குறைய எல்லா வீரர்களும் மைதானத்தை அடைந்து விட்டார்கள். ஓரிடத்தில் இரு குழுக்களைச் சேர்ந்த வீரர்களுக்கிடையே கடுமையான மல்யுத்தம் துவங்கியது. மற்றோரிடத்தில் இரண்டு குழுக்கள் சிலம்பங்களால் ஒன்றையொன்று தாக்கிக் கொள்ளத் துவங்கின. சிறிது நேரத்திற்குமுன் எந்தச் சந்தடியுமின்றிக் காணப்பட்ட அந்த இடத்தின் அமைதி முற்றிலும் குலைந்துபோய் ஆயுதங்களின் ஒலியும் வீரர்களின் பெருமூச்சுகளும் ஹுங்காரங்களும் அந்தப் பகுதியை ஆக்கிரமித்து விட்டன.

கடகங்கள் அமைந்திருந்த வாயிலுக்குத் தெற்கே மைதானத்தையொட்டி ஐந்தாறு பிஷுக்களைக் கொண்ட சிறு குழுவொன்று அக்கசாலைப் பெரும்பள்ளியை நோக்கி அமைதியாக வந்து கொண்டிருந்தது. அந்தக் குழு முதல் நாள் சைலேந்திர விஜயத்திலிருந்து இறங்கிய பிஷுக்களைக் கொண்ட குழு என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

குழுவில் நடுநாயகமாக நடந்து வந்து கொண்டிருந்த இளம் பிஷுவானவர் கடக மைதானத்தையும் அதில் நடைபெற்றுக் கொண்டிருந்த பயிற்சிகளையும் ஆர்வத்துடன் கவனித்தபடி முன்னேறிக் கொண்டிருந்தார். வீரர்கள் பல்வேறு விதங்களிலும் வாளையும் கேடயங்களையும்

சுழற்றும் விதமும் அவசியமில்லாமல் ஆரவாரிப்பதும் அவருடைய வதனத்தில் ஒரு மெல்லிய முறுவலைத் தோற்றுவித்தன.

அதிகாலை நேரங்களில் அக்கசாலைப் பெரும்பள்ளிக்கு பல்வேறு பௌத்தர்களும் விஜயம் செய்வது வழக்க மாதலால் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பெரும்பாலான வீரர்கள் அந்தக் குழுவைக் கண்டுகொள்ளவில்லை என்றாலும் கூப்பிய கரங்களுடன் கைகளில் தாமரை மலர்கள் ஏந்தியபடி தாம் வைக்கும் ஒவ்வொரு அடியும் பூமித்தாய்க்குக்கூட வலியை ஏற்படுத்திவிடக்கூடாது எனும் முனைப்புடன் மென்மையாக நடந்தபடி தங்களைக் கடக்கும் பிஷுக்களை ஓரிரு வீரர்கள் நோட்டமிடத்தான் செய்தார்கள். குறிப்பாக மைதானத்தின் வட கிழக்கு எல்லையில் வாள் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஒரு வீரனின் கவனம் பிஷுக்களின் வருகையால் பெரிதும் பாதிக்கப்பட, இதுதான் சரியான தருணமென்று நினைத்த அவனது போட்டியாளன் சரேலென்று தனது நீண்ட பிடியுள்ள வாளை அவனுடைய வாளில் மோதினான். "டணார்!" என்று பெரியதொரு சப்தத்துடன் தீப்பொறி பறக்க... முதல் வீரனின் வாள் ஆகாயத்தில் பறந்தது!

வீரர்கள் அனைவரும் அதனைப் பாராட்டும் விதமாக ஆஹாகாரம் செய்தார்கள். அந்தோ! அடுத்த கணமே அவர்களின் முகம் பேயறைந்தவர்களைப்போல் மாறி விட்டது. குறிப்பாகக் கடகக் குழுத்தலைவர்களின் முகம் சொல்லவொண்ணா பீதியில் உறைந்து போய்விட்டது ஏனெனில் வானில் பறந்த அந்த வாளானது நேராகப் பௌத்தக் குழுவின் தலைக்கு மேல் வேகமாக பூமியை நோக்கிப் பாய்ந்து வந்து கொண்டிருந்தது! இன்னும் ஓரிரு நொடிகளில்.. ஐயோ! அந்த பயங்கரம் கண்ணெதிரே நிகழ்ந்துவிடும் போலிருக்கிறதே?

தன்னைச் சுற்றிலும் நடைபெற்றுக்கொண்டிருந்த அத்தனை இயக்கங்களையும் கவனமாக உள்வாங்கியபடி ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்து முன்னேறிக் கொண்டிருந்த இளம் பிஷு மைதானத்தின் சப்தங்கள் சட்டென்று நின்றுவிட்டதைக் கவனித்து இயல்பாகத் திரும்பினார். திரும்பியவர் கண்களில் திசையோடி விரிந்திருந்த செவ்வானமும் வானத்திற்கு நடுவே அவர்களை நோக்கி வேகமாகப் பறந்து வந்துகொண்டிருந்த வாளும் கண்களில் பட்டன.

அடுத்த கணம் வாளில் மட்டும் கவனம் குவிக்கப் [illegible]து. வானம் மறக்கப்பட்டது. அதற்கும் அடுத்த கணம் [illegible]ளும் மறக்கப்பட்டு அதன் பிடி மட்டும் கவனத்தில் [illegible]ள்ளப்பட்டது. அந்தப் பிடி காற்றில் பறந்து வரும் [illegible]ம் கணிக்கப்பட்டது.

அவ்வளவுதான்

ஒரு ஹூங்காரத்துடன் சற்றே உடலை [illegible]க்கி [illegible]ந்த [illegible]" அடுத்த நொடியில் சரேலென்று ஆகாயத்தில் பாய்ந்து [illegible]டார்! வாள் அவர்களை நெருங்குவதற்கும் அவர் [illegible]லில் எழும்புவதற்குமான நேரம் துல்லியமாகப் பொருந்த, [illegible]க வாளின் பிடியில் அவரது கரங்கள் உறுதியாகப் [illegible]ந்தன. அடுத்த கணம் ஒரு சுழற்சியோடு பூமிக்கு இறங்கி [illegible]ார் பிஷு.

ஒரு சில நொடிகளில் நிகழ்ந்துவிட்ட இந்த [illegible]த்தினால் உறைந்து போயிருந்த வீரர் கூட்டம் அடுத்த [illegible]யே மகிழ்ச்சி ஆரவாரத்தில் மூழ்கியது. நன்றிப் [illegible]க்கில் கரங்கள் குவிய, கடகத்தின் குழுத்தலைவர்கள் [illegible] நோக்கி வேகவேகமாக நடந்து வந்து [illegible]ண்டிருந்தார்கள். பிஷுவோ ஏதுமறியாதவர் போல் [illegible] கள்ளமில்லாத குழந்தைச் சிரிப்புடன் வாளேந்தி [illegible] கொண்டிருந்தார்

"ஆஹா! என்னவொரு ஆச்சரியம்? தேரரே! உங்களுக்கு [illegible]று நன்றி சொல்வது என்று தெரியவில்லை [illegible]த்தைகள் நாவில் எழ மறுக்கின்றன. அடடா, பெருத்த [illegible]ாவிதம் நேராமல் அவலோகிதேஸ்வரரே[73] தங்களின் [illegible]வில் வந்து எங்களைக் காப்பாற்றிவிட்டார்! அந்த வாள் [illegible] தங்கள் குழுவைத் தாக்கியிருந்தால்... தீராப் [illegible]ல்லவா எங்களுக்கு வந்து சேர்ந்திருக்கும்? தேரரே! [illegible]கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? தங்களுடன் [illegible]ருக்கும் பிஷுக்களைப் பார்த்தால் வெளிநாட்டவர்கள் [illegible]ல் தோன்றுகிறதே? ஆனால் தாங்கள் மட்டும் இந்த [illegible]ின் மைந்தரைப்போல் காணப்படுகிறீர்களே?"

[illegible] பௌத்தப் படிமங்களில் அவலோகிதேஸ்வரர் உருவமும் [illegible]கிறது. இந்தப் படிமம் சைவப் படிமங்களின் சாயலைக் [illegible] விளங்குகிறது.

புன்னகை மாறாமல் வாளை குழுத்தலைவரிடம் கொடுத்த பிஷு அனைவரையும் வணங்கினார்.

"என்னுடைய பெயர் ஆனந்தன்[74]. காம்போஜ தேசத்திலிருந்து நாங்கள் எல்லோரும் பௌத்த புண்ணிய ஷேத்திரங்களை தரிசிப்பதற்காக இந்த தட்சிண தேசத்திற்கு வந்திருக்கிறோம். நேற்றுதான் நாகை மண்ணில் கால் பதித்தோம்."

"ஆஹா! தங்களின் வரவு நல்வரவாகட்டும். சோழ தேசத்தின் பிரஜைகள் சார்பிலும் பௌத்தர்கள் சார்பிலும் தங்களை வரவேற்கிறேன். தாங்கள் தவறாக நினைத்துக் கொள்ளவில்லை என்றால் ஒரு கேள்வி கேட்கலாமா?"

அவர் புன்னகையுடன் தலையசைத்தார்.

"தேரரே! தாங்கள் இன்று செய்த சாகசம் அசாத்திய மானது. ஆச்சரியமானது. வானிலிருந்து பெருவேகத்தில் இறங்கிக் கொண்டிருக்கும் வாளை. வாளின் பிடியை. அத்தனை இலாவகமாக எப்படி உங்களால் பற்ற முடிந்தது? இது என்ன காம்போஜ தேசத்திற்கே உரிய சிறப்புப் பயிற்சியா? அங்கு இம்மாதிரியான பயிற்சிகளை பிஷுக்களுக்கும் கற்றுக் கொடுக்கிறார்களா? சீன தேசத்தில் பௌத்த பிஷுக்கள் பல்வேறு புதிய சங்கிராமப் பயிற்சி முறைகளைக் கற்றுக் கொடுப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறோம். அதனைத் தாங்கள் பயின்றிருக்கிறீர்களா? எங்களுக்கும் அதனைக் கற்றுக் கொடுக்க முடியுமா?"

"தாங்கள் ஒரு கேள்வி கேட்பதாகச் சொல்லிவிட்டு பல கேள்விகளை அடுக்குகிறீர்களே? பூஜைக்கு நேரமாகி விட்டது. எங்கள் குழுவினர் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். அக்கசாலைப் பெரும்பள்ளியில் காலை மலரஞ்சலிகளை போதிசத்துவருக்குச் செலுத்தி விட்டு உங்களுடன் சிறிது நேரம் உரையாடலாமா?"

"தாராளமாக! தங்களுக்காக நாங்களனைவரும் இங்கேயே காத்திருக்கிறோம்."

அவர் மீண்டும் அவர்கள் அனைவரையும் வணங்கினார். ஒன்றும் அறியாதவர்போல் மீண்டும் அடிமேல் அடிவைத்து

---

[74] புததரின் நேரடிச் சீடர்களுள ஒருவராக ஆனநதர் என்பவர் அறியபபடுகிறார.

தம் குழுவுடன் பெரும்பள்ளியை நோக்கி நடக்கத் துவங்கினார். "புத்தம் சரணம் கச்சாமி..." என்னும் மந்திர வார்த்தைகள் விலகிச் செல்லும் அந்தக் குழுவிடமிருந்து மெல்ல எழுந்தன.

கடகக் குழுத்தலைவர் அந்த பிஷு ஏற்படுத்திய தாக்கத்திலிருந்து மீளமுடியாதவராய் அவர் செல்லும் திசையையே நோக்கியவாறு நெடுநேரம் நின்றிருந்தார்.

* * * * * * * *

அடுத்த இரண்டு நாழிகை நேரத்தில் அக்கசாலையின் வடக்கே அமைந்திருந்த கடகத்தின் வாயிலில் பெருங் கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் நடுநாயகமாக ஆனந்தர் என்னும் திருநாமம் பெற்ற அந்த இளம் பௌத்தரும் அவரது சங்கத் தோழர்களும் காணப்பட்டார்கள் அவர்களுக்கு அடுத்ததாக நின்றிருந்த கடகக் குழுத் தலைவர்கள் ஆர்வத்துடன் பிஷு சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"வீரர் குழுத் தலைவர்களே! நீங்கள் கூறியது உண்மைதான். சீன தேசத்திலும் சாவகம் கடாரம் ஜம்புத் வீபம் காம்போஜம் முதலான தேசங்களிலும் பௌத்த சங்கங்களில் சேரும் பிஷுக்களுக்குப் பல்வேறு வகைகளில் சிறப்பு மிக்க தற்காப்புப் பயிற்சிமுறை சொல்லிக் கொடுக்கப் படுகிறது. உலகைத் துறந்து துறவியாகி விட்டவர்களுக்கு இத்தகைய பயிற்சி முறைகள் எதற்காக? என்று நீங்கள் வினவலாம். இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

முதற்காரணம், முக்கியக் காரணம் தற்காப்பு. இந்தப் பகுதிகளில் அரசியல் மாற்றங்களால் எங்களது மடங்களுக்கு அவ்வப்போது ஆபத்துக்கள் நேர்கின்றன. அவற்றிலிருந்து பிஷுக்களையும் ஒப்புயர்வற்ற பௌத்த நூல்களையும் இதரப் பொக்கிஷங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்குண்டு. அதனால் இத்தகைய பயிற்சிகள் அவசியமாகின்றன.

இரண்டாவது காரணம், இவற்றையும் பௌத்த தியானத்தின் ஒரு பகுதியாகவே நாங்கள் காண்கிறோம். உடற்பயிற்சியாக மட்டும் கருதப்படாமல் மனப்பயிற்சி யாகவும் கருதப்படுவதால் தியான முறைகளில் இதுவும் ஒன்றாக இடம்பெற்று விட்டது. நாள் முழுவதும் ஒரே

இடத்தில் அமர்ந்து புத்த பகவான் உபதேசித்த அனபானசதி சூத்திரம்[75] முதலான மூச்சுப் பயிற்சிகளில் ஈடுபடுவதென்பது அத்தனை எளிதான செயலல்ல. அதனால் அவ்வப்போது இத்தகைய உடல் மற்றும் மனப்பயிற்சிகளில் ஈடுபட்டு புத்துணர்ச்சி உண்டாக்கிக் கொள்கிறோம்.

மூன்றாவது காரணம், எங்கள் சங்கங்களில் மிக இளம் வயதிலேயே பாலகர்களை துறவறத்தில் ஈடுபடுத்தி விடுகிறோம். இதனால் மனம் எளிதில் தியானத்திற்குப் படிகிறது. என்றாலும் உடலில் பொங்கி வழியும் இளமையின் சக்தியை சரியான வகையில் திசைதிருப்ப இத்தகைய தற்காப்புப் பயிற்சி முறைகள் உதவுகின்றன. இவை இல்லாவிடில் மனம் காமாந்தகாரத்தில் திரும்புவதை தவிர்க்கவே முடியாது..."

தாம் மேம்போக்காகக் கேட்ட கேள்விகளுக்குக்கூட நீண்ட தெளிவான பதிலை அளித்த அந்த பிக்ஷுவின் மீது கடகக் குழுத் தலைவர்களுக்கு மரியாதை பொங்கியது.

"ஆஹா! இத்தகைய அரும்பெரும் பயிற்சிகளால்தான் உங்களால் அந்தரத்தில் எழும்பித் துல்லியமாக வாளின் பிடியைப் பிடிக்க முடிந்தது போலும். எங்களுக்கும் அந்தப் பயிற்சிகளை சொல்லிக்கொடுக்க முடியுமா?"

"வீரரே! எங்களுக்குப் பயிற்சியளிக்கும் பௌத்த குருமார்கள் முதலில் ஒரு சத்தியத்தை வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். அது என்னவெனில், எக்காரணம் கொண்டும் இந்த வித்தைகளை துறவறம் ஏற்காத ஒருவருக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடாது. அப்படி இந்த வித்தைகள் பொதுமக்களுக்கு குறிப்பாக உங்களைப் போன்ற போர் வீரர்களுக்குப் போய்ச் சேர்ந்தால் அதனால் பல தொல்லைகள் நேரும் என்கிற பொதுவான எண்ணம் எங்களுக்கு உண்டு. அதனால் என்னை மன்னித்துவிட வேண்டும்."

[75] புத்த பிரானின் நேரடி உபதேசமாகக் கருதப்படும் அனபான சதி பௌத்தப் பிராணாயாமப் பயிற்சிகளில் முக்கியமானது.

"புரிகிறது. நாங்களும் இங்கே சீனப் பள்ளிக்கு[76] வந்து போகும் அத்தனை சீனத் துறவிகளிடமும் இதே கோரிக்கையை முன் வைக்கிறோம். சீராக ஒரே பதில்தான் வருகிறது. உங்கள் கொள்கையை நாங்கள் மதிக்கிறோம். என்றாலும் தங்களை சந்தித்த இந்த நல்லோரையில் தங்களின் வித்தையில் ஒரு கூற்றையாவது எம் வீரர்களுக்கு செய்து காண்பிக்க வேண்டும். தயவுசெய்து இதனை எங்களின் வேண்டுகோளாக ஏற்றுக் கொள்ளுங்கள்."

ஆனந்தர் சிறிது நேரம் யோசித்தார். தன்னுடைய சங்க பிக்ஷுக்களை ஒரு கணம் நோக்கினார். பின் ஒரு முடிவுக்கு வந்தவராக "சரி. ஓரிரு வாள் பயிற்சிகள் மட்டும் செய்து காட்டுகிறேன். எங்கே, ஒரு நல்ல வாளை என்னிடம் கொடுங்கள் பார்க்கலாம்?"

அத்தனை வாள் வீரர்களும் தத்தம் வாட்களை அவர் முன் நீட்டினார்கள். அவர் ஒவ்வொன்றாக அவற்றை சோதித்தார். "ம்ஹூம்... சரியில்லை. இது எளிதில் உடைந்து விடும். இது சரியான இடத்தில் பற்றவில்லை..." என்று ஒவ்வொன்றாக தட்டிக்கழித்து வந்தவர் ஓரிடத்தில் நின்றார். நின்றவர் அசையாமல் அந்த வாளை உற்று நோக்கினார். அவருடைய முகம் ஆச்சரியத்தில் மலர்ந்தது.

"இது எந்த வாள் வீரரே? எப்படி உமக்குக் கிடைத்தது?"

இப்போது அந்த வீரனின் திருமுகத்தை ஆனந்தரைப் போலவே நாமும் நோக்குகிறோம். அடடா, மிகவும் பழகிய முகமாகத் தெரிகிறதே இது? என்றாலும் சட்டென்று இன்னாரென்று பிடிபடவில்லை. நன்கு முறுக்கப்பட்ட இளமையான மீசை. கருகருவென்று விழிகள். உறுதியான தாடைகள். அதில் மெல்லிய இளந்தாடி. வீரம் பொங்கும் முகம். நிச்சயம் இவரை முன்பு சந்தித்திருக்கிறோம். ஆனால் எங்கே? எப்போது?

"தேரரே! இது பராந்தகச் சோழர் காலத்தில் சோழ சாம்ராஜ்ஜியப் பணியில் ஈடுபட்டு உயிரை விட்ட என்னுடைய பாட்டனார் குருகாடி செல்லக்கிழாருடையது.

[76] நாகையில் பல்லவப் பேரரசர் இராஜசிம்மரால் கட்டப்பட்ட சீன பௌத்தப் பள்ளியொன்று பன்னெடுங்காலமாகவே இருந்து வந்தது. சீனப் பகோடா என்று இது அழைக்கப்பட்டது.

பயிற்சிக்கு கிளம்பும் சமயத்தில் என்னுடைய தாயார் இதனை எடுத்துக் கொடுத்து ஆசீர்வதித்தார்."

பிஷு சட்டென நிமிர்ந்து அந்த வாலிபரை மெல்லிய அதிர்ச்சியுடன் நோக்கினார். ஆனால் அடுத்த கணமே தம்மைச் சமாளித்துக் கொண்டவராக அந்த இளைஞனின் தோளில் அன்புடன் தமது கரத்தைப் பதித்தார். "வீரரே! மிகவும் அற்புதமான முறையில் செய்யப்பட்ட சுத்தமான வாள் இது. இதோ! இதன் பக்கங்களைத் தொட்டுப் பாருங்கள் எத்தனை உறுதி? இதனை ஸ்பரிசிக்கையில் உமது பரம்பரையினரின் ஜீவசக்தி இதில் பாய்ந்துள்ளதை நன்றாக உணர்கிறேன். இந்த வாள் உமது கைகளில் இருக்கும் வரை உம்மை யாரும் வெல்லவே முடியாது!"

சட்டென்று அந்த இளைஞன் அவர்முன் மண்டியிட்டு அவரது பாதங்களைத் தொட்டான். "தேரரே! என்னை ஆசீர்வதிக்க வேண்டும்!"

பிஷு பதறிப் போனார். "நான் மிகச் சிறியவன் வீரரே. மிக மிகச் சிறியவன். உங்களுக்கு ஆசி கூறும் தகுதி எனக்குக் கிடையாது. எழுந்திருங்கள்! புத்த பகவானின் பூரண அருளால் உங்களுக்கு ஒரு குறைவும் வாராது. சோழ இராஜாங்க சேவையில் தாங்கள் மென்மேலும் சிறப்பீர்களாக. தயவு செய்து எழுந்திருங்கள்! தங்களின் பெயர்?"

அந்த வீரன் பிஷுவின் கேள்விக்கு பதில் சொல்லுமுன் கூட்டத்தின் பின் பக்கத்திலிருந்து யாரோ முந்திக் கொண்டார்கள்.

"குருகாடியூர்ப் பரமன் மழபாடி!"

பிஷுவின் முகம் அந்தக் குரலைக் கேட்டு பெரிதாக மலர்ந்தது. "ஆஹா! எத்தனை நாட்களாயிற்று இந்தக் குரலைக் கேட்டு! நண்பரே... மன்னிக்க வேண்டும். பேரரசரே! தங்களது முக தரிசனத்தை எனக்கு அளிப்பீர்களா?"

சற்று நேரத்திற்கு முன் சந்தடி செய்யாமல் வந்து வீரரோடு வீரராக ஒட்டிக்கொண்டு நின்றிருந்த அருள்மொழிவர்மர் ஒரு புன்சிரிப்புடன் உடன்கூட்டத்தானை விலக்கிக் கொண்டு முன்வந்தார். அவரை அந்த நேரத்தில் அந்தச் சூழலில் சற்றும் எதிர்பார்க்காத அத்தனை வீரர்களும் சட்டென்று வாளை முன்வைத்து மண்டியிட்டு

வணங்கி "பேரரசர் இராஜராஜசோழர் வாழ்க!" என்று ஒரே குரலில் முழங்கினார்கள்.

பேரரசர் அந்த இளைய பிஷுவை நெருங்கி வந்து ஆரத்தழுவிக் கொண்டார். இருவர் கண்களும் சில கணங்களில் பனித்து விட்டன.

12. வீரத்தின் விளைநிலம்



பேரரசர் அருள்மொழிவர்மரும் பிஷு ஆனந்த தேரரும் நீண்ட காலம் கழித்து ஒருவரையொருவர் சந்தித்த மகிழ்ச்சியில் சிறிது நேரம் ஒன்றும் பேசத் தோன்றாமல் நோக்கியது நோக்கியபடி நின்றார்கள்.

"இந்தப் பத்து வருடங்களில் உங்களின் தோற்றம் அப்படியே இருக்கிறது. சிறிது கூட மாற்றமில்லை" என்று வியந்தார் பேரரசர்.

"உங்களின் வெளித்தோற்றத்தில் சிறிது மாற்றங்கள் வந்து விட்டனதாம். ஆனால் அந்தப் பழைய நட்பையும் நெருக்கத்தையும் இன்னமும் உங்களின் கண்களில் மிக நன்றாகவே தரிசிக்கிறேன். சோறுடைத்த சோழநாட்டின் பேரரசரே! தங்களுக்கு வணக்கம். காம்போஜ நாட்டின் அமைதியையும் சமாதானத்தையும் ஏந்தி இந்த தட்சிண தேசத்தின் பௌத்த புண்ணியப் பதிகளை தரிசிப்பதற்காக பல நாட்கள் பயணம் செய்து வந்துள்ளோம்" என்ற ஆனந்த தேரர் இரு கரம் கூப்பினார்.

"தங்களையும் தங்கள் குழுவையும் தென்னாடு வரவேற்கிறது! காலங்காலமாக இம்மண்ணில் வேர்கொண்டு விட்ட பௌத்தத்தின் சார்பிலும் சோழநாட்டுப் மக்களின் சார்பிலும் தங்களை வருக வருகவென்று வரவேற்கிறேன். தாங்கள் வந்த இந்த நல்ல நேரத்தில் இம்மண்ணில் அன்பும் சமாதானமும் தழைக்கட்டும் ஓங்கட்டும்!" பேரரசர் அத்தனை பிஷுக்களையும் நேருக்கு நேர் நோக்கிக் கரங்குவித்து பதில் வணக்கம் செய்தார்.

"தாங்களும் குழுவும் தற்போது எங்கு தங்கியிருக்கிறீர்கள்?"

"சீனத்து விஹாரையில் எங்கள் பகுதிகளிலிருந்து வரும் பிஷுக்களுக்கென்று தனி அறைகள் உள்ளன. அங்குதான் தங்கியிருக்கிறோம்."

"விஹாரையில் வசதிக்குறைவு ஏதேனுமிருந்தால் தெரிவியுங்கள். சீர் செய்து விடலாம்."

"புத்த பகவானின் கருணையினால் அவ்வாறு எதுவுமில்லை. தங்களின் அன்புக்கு நன்றி."

"தேரரே! தற்போது அக்கசாலையில் எனக்குச் சிறிது வேலையிருக்கிறது, கிளம்ப வேண்டும். தங்களை இன்று மாலை சந்திக்கலாமா?"

"ஆச்சாரியார் இது பற்றிக் குறிப்பிட்டார். இன்று முன்மாலை நேரத்தில் பதர திட்ட விஹாரைக்கு ஒரு தியானப் பயிற்சிக்காக நாங்கள் அனைவரும் வருகிறோம். பயிற்சி முடிந்ததும் தங்களை சந்திப்பதற்காக நான் விஹாரையில் காத்திருக்கிறேன்."

"நல்லது. இன்றிரவே நான் தஞ்சைக்குத் திரும்ப வேண்டியுள்ளதால் இன்று மாலை நாம் கட்டாயம் சந்தித்து விடுவோம்."

"நல்லது" என்று பதிலளித்துவிட்டு சற்றே திரும்பிய பிஷு ஆனந்தர் தலையைச் சற்றே குனிந்தபடி அவர்களுக்கு சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்த பரமன் மழபாடி என்றழைக்கப்பட்ட அந்த வீரனை கவனித்தார்.

"பேரரசர் கிளம்புவதற்கு முன் ஒரு கேள்வி. இந்த வீரரின் பெயர் எப்படி தங்களுக்குத் தெரிந்தது?"

"பரமனை நாகை அக்கசாலைக் கடகத்திற்கு அனுப்பியதே நான்தானே? இவர் பல்லவராயரின் தனிச் சேவகத்தைச் சேர்ந்த வீரர். மதுரைப் படையெடுப்பு நிகழ்வதற்குச் சிறிது காலத்திற்கு முன் இவர் கொண்டுவந்த மிக முக்கிய தகவல்களால்தான் பாண்டிப் படையினரின் ஆயுதங்களைப் போருக்கு முன்னரே நம்மால் பெருமளவு கைப்பற்ற முடிந்தது. அந்தப் போர் நமது பக்கத்தில் அதிக சேதத்தை ஏற்படுத்தாமல் வெற்றியை அளித்ததற்கு இவருடைய பங்களிப்பே முக்கிய காரணம். இந்த வீரருக்கு முறையான பயிற்சியை நாகைக் கடகம் அளிக்கும் என்கிற நம்பிக்கையில்தான் இங்கே அனுப்பினேன். என்ன

மழபாடியாரே! ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருக்கிறீர்கள்?"

"சொல்ல வேண்டியதனைத்தையும் தாங்களே புகன்று விட்டீர்கள். அரசே! கடகத்தில் புதிய நுணுக்கங்களையும் போர்ப்பயிற்சி முறைகளையும் முறையாகக் கற்று வருகிறேன். படைத் தலைவர்களின் பயிற்சி முறைகள் இங்கு அற்புதமாக அமைந்துள்ளன."

"சரி, பின் நான் கிளம்புகிறேன். தேரரே! மாலை சந்திப்போம்." என்று கூறிய பேரரசர் அவ்விடம் விட்டகன்றார்.

"கடகக் குழுத் தலைவரே! நம்முடைய சங்கத் தோழர்களை இதற்கு மேல் காக்க வைப்பது நன்றாயிராது. அவர்களை அனுப்பி வைத்துவிட்டுச் சில வாள் சுழற்சிகளை தங்களுக்கு செய்து காண்பிக்கிறேன்."

"மிக்க நன்றி!"

* * * * * * * *

பாண்டி மண்டலத்தின் வெண்டி நாட்டில் குறண்டியூர்[77] என்றழைக்கப்படும் சிற்றூரின் தென்கிழக்கே விடங்கன் வாய்க்காலையொட்டிப் பிரியும் சிறு பாதையில் இரு புரவிகள் மெல்ல நடைபயின்று கொண்டிருந்தன. அந்த முன்மாலை நேரத்து இருட்டிலும் அப்புரவிகள் தடுமாறாமல் பாதையைக் கண்டுபிடித்துச் செல்வதைப் பார்க்கும்போது அவை பலமுறை அந்த இடத்திற்கு வந்து போயிருக்க வேண்டுமென்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இரு புரவிகளிலும் ஆரோகணித்திருந்த மனிதர்களை அந்த இருட்டில் சரிவர அடையாளம் காண முடியவில்லை. என்றாலும் உத்தேசமாகத் தெரியும் உருவத்தைக் கொண்டு அவர்களில் ஒருவர் மத்திம வயதினரென்றும் மற்றவர் சற்றே வயதானவர் என்றும் கணிக்கலாம்.

அவர்கள் சென்று கொண்டிருந்த பாதை குறுகிக் கொண்டே சென்றதால் ஒரு கட்டத்தில் ஒருவரின் பின்

இன்றைய இராமநாதபுரத்தில் பள்ளிமடை என்னும் பெயரில் அமைந்துள்ள கிராமம்.

இன்னொருவர் புரவியைச் செலுத்திக்கொண்டு போக வேண்டியதாயிற்று.

"வழக்கம்போல ஆலமரத்தடியிலேயே புரவிகளைக் கட்டி வைத்து விடுவோமா?" என்று முன்னால் சென்று கொண்டிருந்தவர் வினவினார்.

"இளவலே! சற்றே மெதுவாகப் பேசுங்கள். சொல்லச் சொல்லக் கேட்காமல் பிடிவாதமாக இந்த ஆபத்தான நேரத்தில் இங்கு வந்திருக்கிறீர்கள்..."

"என்ன கொடுமையடா இது? நான் பிறந்த மண்ணில் என் முன்னோரும் மூத்தோரும் தங்களின் உதிரத்தையும் உயிரையும் சிந்திய இந்தப் புண்ணிய பூமியில் மாலை நேரத்து இருட்டில் ஒரு திருடனைப்போல நுழைகிறோமே என்று ஏற்கனவே நான் சங்கடத்தில் இருக்கிறேன். இந்த இலட்சணத்தில் உரக்கப் பேசாதீர்கள்! மெதுவாகப் பேசுங்கள்! அங்கு செல்லாதீர்கள்! இங்கு சொல்லாதீர்கள்! என்கிற அடக்குமுறைகள் வேறு. அரையன் மானாபரணரே! எனது பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு."

"மன்னிக்கவேண்டும். இங்கிருக்கும் நிலைமை தெரியாமல் பேசுகிறீர்கள். மண்டலமெங்கிலும் ஒற்றர்கள் விரிந்து பரந்து கிடக்கிறார்கள்."

"ஆமாம், ஆமாம்! இந்தப் பாழும் காட்டுப் பிரதேசத்தில் அதோ அந்த ஆலமரத்திற்கடியில் சோணாட்டு ஒற்றன் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறான். வாரும்! இருவரும் அவனிடம் சென்று நேரே அகப்பட்டுக் கொள்வோம். இப்படி அஞ்சியஞ்சி வாழ்வதை விட தஞ்சையின் பாதாளச்சிறையில் உயிரை விடுவதே மேல்!"

"பாண்டிய குலத்தின் வீரமிகு இளவலே! சோழனின் பாதாளச் சிறையில் உயிரை விடுவதற்காகவா தாங்கள் பிறப்பெடுத்திருக்கிறீர்கள்? விவேகமில்லா வீரம் ஆபத்தானது என்பதை நான் உங்களுக்குப் பலமுறை சொல்லியிருக்கிறேன் அல்லவா? அஞ்ச வேண்டியவற்றுக்கு அஞ்ச வேண்டுமென்று திருவள்ளுவப் பெருமானே உரைத்திருக்கிறாரே... ஒற்றர் நடமாட்டங்களைப் பற்றி நான் சொல்லியது தங்களுக்கு மிகையாகத் தெரியும்தான். ஆனால் என்றாவது ஒருநாள் என் கூற்றில் உள்ள உண்மையைத் தாங்களே உணர்வீர்கள். மேற்கொண்டு இதுபற்றிப்

பேசவேண்டாம். ஆலமரம் வந்து விட்டது. புரவியை அதில் [illegible]டுங்கள்..."

"நான் ஏதாவது கோபமாகப் பேசியிருந்தால் மனதில் வைத்துக்கொள்ளாதீர்கள். என் மனது அந்த அளவிற்குக் [illegible]படைந்திருக்கிறது."

"உங்கள் தந்தையாரின் அத்தனை குணங்களும் தங்களிடம் அப்படியே பதித்துள்ளன. அவரும் இப்படித் தான் கோபத்தில் என்னவெல்லாமோ பேசுவார். பின் [illegible]னே வருந்துவார். இது பாண்டிய குலத்தின் பிறவிக் குணம் போலும்."

"கோபத்தை மட்டும்தான் தந்தையாரிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறேன். பீடு ஓங்கிய அவருடைய [illegible]த்தில் ஒரு சிறிதாவது எனக்கிருந்திருந்தால் இப்படித் திருடனைப் போல் ஒளிந்து ஒளிந்து வாழ்வேனா?"

"ஆஹா! தங்களுடைய வீரத்தையா குறைவாக [illegible]பிடுகிறீர்கள்? இளவலே! நீங்களே தடுக்க முயன்றாலும் தடையில்லாமல் பொங்கும் வீரம் உமது உதிரத்தோடு [illegible]யிருக்கிறது. ஆனால் உங்களுக்கான காலம் இன்னும் [illegible]வில்லை. காலம் கருதி நடப்பவர்க்கு ஞாலமும் கைகூடும் என்கிற வள்ளுவர் பெருமானின் மொழியைத் தாங்கள் [illegible]றிந்ததில்லையா? ஒவ்வொரு செயல்பாட்டையும் [illegible]லம் கருதிச் செய்யவேண்டும். இன்றைக்குக் காலம் நமக்கு [illegible]ரானதாக இருக்கிறது. அதனால் எச்சரிக்கையோடு [illegible]யல்படவேண்டியிருக்கிறது. நாளை காலம் மாறும். [illegible]லோரை பிறக்கும். அந்த நம்பிக்கையை விட்டு [illegible]தீர்கள்!"

"உண்மைதான் மானாபரணரே! நம்பிக்கை ஒன்றுதான் [illegible]விடம் தற்போது மிச்சமுள்ளது."

"உங்களின் தோளில் கிடக்கும் பட்டு வஸ்திரத்தையும் [illegible]ரங்களையும் இந்த ஆலமரப் பொந்திலேயே வைத்து [illegible]ங்கள். வெற்றுடம்போடு கோயிலுக்குச் செல்வோம்."

"குடியானவனைப்போல் தோற்றமளிப்பதற்காகவா? [illegible]ன். பெரியப்பா! என்னை மன்னித்து விடுங்கள். [illegible]களின் புண்ணியத் திதியன்று உங்களுக்காக எதுவும் [illegible]ண்டு வராமல் வெறும் கைகளை ஏந்தி ஒரு [illegible]சைக்காரனைப்போல் வரும் இந்தச் சடையனை [illegible]வித்து விடுங்கள்."

"இளவலே! மனந்தளர வேண்டாம். வீர சுவர்க்கத்திலிருக்கும் சுந்தர பாண்டியரும் வீரபாண்டியரும் நம்மைப் பார்த்துக்கொண்டுதான் இருப்பார்கள். உங்களின் நிலையை அவர்கள் அறிவார்கள். இந்த ஆபத்தான காலத்திலும் பிடிவாதமாகத் தம் பள்ளிப்படையக் காண வரும் சோதரன் மகனைச் சுந்தர பாண்டியத் தேவர் நிச்சயம் ஆசீர்வதிப்பார். கிளம்புங்கள். இன்னும் சிறிது நேரத்தில் கோயில் மூடப்பட்டுவிடும்."

புரவிகளைக் கட்டிவைத்துவிட்டு உடைகளை மாற்றிக் கொண்டு இருவரும் அந்தக் காட்டுப் பாதையின் ஓரமாக ஊரை நோக்கி நடந்தார்கள்.

"மானாபரணரே! நீங்கள் கொடுத்து வைத்தவர். இந்தப் புண்ணிய பூமியில் பல காலத்திற்கு முன்பு நடந்த அந்த வீரம் மிகுந்த போர்க்களத்தை நேரில் காணும் பாக்கியம் செய்தவரல்லவா நீர்?"

"என்ன இன்னும் அந்தப் போர்க்களத்தைப் பற்றிய பேச்சு தங்களின் திருவாயிலிருந்து வரவில்லையே என்று எதிர்பார்த்தேன்... வந்துவிட்டது. நான் கொடுத்து வைத்தவன் அல்ல இளவலே! கொடுத்து வைத்தவனே அல்ல. இந்தப் புண்ணிய பூமியில் அன்று வீரசுவர்க்கத்தை அடைந்த எனது பாட்டனாரே கொடுத்து வைத்தவர். ஆ! எத்தனை பெரிய மாவீரர் அவர்? ஒரு சூறாவளியைப் போலல்லவா சோழன் சைனியத்தை அன்று பந்தாடினார்? ஒருவர் இருவரல்ல. கிட்டத்தட்டப் பன்னிரண்டு பேர் அவரை ஒரேயடியாகச் சூழ்ந்துகொண்டு வெட்டிச் சாய்த்தார்களாம்! சோழனின் வீரத்தைப் பார்த்தீர்களா? அந்த நிலைமையிலும் பன்னிருவரில் நான்கு பேரின் கைகால்களைக் காவு வாங்கி விட்டுத்தான் பாட்டனின் கரங்கள் ஓய்ந்தனவாம்..."

"மீண்டும் அந்தப் போர்க்களத்தைப் பற்றி விபரமாகத் தெரிவியுங்களேன்..."

"சிறுவயதிலிருந்து எத்தனையோ முறை இந்த வெண்பு நாட்டுப் போரைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நானும் சொல்லியிருக்கிறேன். கேட்போரின் உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும் அச்சரித்திரத்தை எத்தனை முறை சொன்னாலும் கேட்டாலும் அலுப்புத் தட்டுவதில்லைதான். அதனால் மீண்டும் ஒருமுறை சொல்கிறேன்.

இளவலே! அப்போது எனக்கு மிகச் சிறிய வயது. பிராயம் எட்டு அல்லது பத்துதான் இருக்கும். சிறு வயதிலிருந்தே என் தந்தையாரைவிட என் பாட்டனாரிடம் அதிகப் பிரேமை எனக்கிருந்தது. அவர் அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்ற வீரர். நான் பிறந்தபோது அவருடைய பெயரைத் தான் எனக்கும் வைத்தார்கள். வழிவழியாகத் தென்னவன் சேனாபதி நாயகமாயிருந்த வம்சம் எங்களுடையது. அந்த முறையில் என் பாட்டனார் மானாபரணரும் பாண்டிய சைனியத்தின் ஒரு பகுதிக்குச் சேனாபதி நாயகமாயிருந்தார். அவருடன் நான் சிறு வயதில் பலமுறை வாட்பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். 'உடலை எப்போதும் வஜ்ரம் போல வைத்துக்கொள்ள வேண்டும்' என்று அடிக்கடி சொல்வார். ஏனெனில் அவருடைய மூத்த மகனும் என்னுடைய தந்தையாருமான வீரநாராயணர் சிறு வயது முதலே சீக்கில் விழுந்து விட்டார். என் தந்தை சாதிக்க வேண்டியதையெல்லாம் நான் சாதிப்பேனென்று என் பாட்டனார் உறுதியாக நம்பினார். அதற்காகவே சிறப்பு பயிற்சிகளெல்லாம் எனக்களிக்கப்பட்டன.

திடீரென்று ஒருநாள் பராந்தகனின் சோழப்படை அவனது மகன் உத்தமசீலியின் தலைமையில் பாண்டி மண்டலத்தைத் தாக்கியது. அப்போது பாண்டியப் பேரரசராக இருந்தவர்தான் உங்களின் பெரியப்பா சுந்தர பாண்டியத் தேவர். உங்களின் தந்தையார் வீரபாண்டியர் அப்போது தென்திசை மாதண்ட நாயகராக இருந்தார். அவருடைய தலைமையிலிருந்த மிகப் பெரிய படை வந்து சேர்வதற்குள்ளாகவே போர் துவங்கிவிட்டதுதான் துரதிருஷ்டம்.

போருக்குக் கிளம்பிக்கொண்டிருந்த என் பாட்டனாரின் காலைக் கட்டிக்கொண்டு நானும் வருவேனென்று பிடிவாதம் பிடித்தேன். அவருக்கு அதில் பரம திருப்தி. போருக்குக் கிளம்பு முன் என்னிடம் அவர் ஒரு சத்தியப் பிரமாணத்தை வாங்கிக்கொண்டார். அது என்னவெனில் ஒருவேளை அவர் போர்க்களத்திலிருந்து வரமுடியாமல் போக நேர்ந்துவிட்டால்..."

இந்த இடத்தில் அரையன் மானாபரணனாரின் உள்ளம் நெகிழ்ந்து தொண்டை மிகவும் கம்மிவிட்டது. தோளிலிருந்த துண்டால் மெல்லத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டார். பாண்டிய இளவல் என்று அவரால் அழைக்கப்

பட்ட சடையமாறர் அவருடைய தோள்களை மெல்லப் பிடித்து அவரை தேற்றினார்.

"சொல்லுங்கள்! மேற்கொண்டு சொல்லுங்கள். அந்த வீர வரலாற்றை ஆயுள் முழுவதும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று ஆவலெழுகிறது எனக்கு. தொடர்ந்து சொல்லுங்கள்!"

"சொல்கிறேன்..." என்று பதிலிறுத்த அரையனார் அந்த வரலாற்றைத் தொடரலானார்.

13. பள்ளிப்படை சுந்தரபாண்டிய ஈச்சுரம்



"எனது பாட்டனார் என்னிடம் வாங்கிக் கொண்ட பிரதிக்ஞை இதுதான்: மாணாபரணா! ஒருவேளை இந்தப் போர்க் களத்திலிருந்து நான் திரும்ப முடியாமல் போய் வீரசுவர்கத்தை அடைந்து விட்டால், என்னுடைய வீரவாளை எப்படியாவது களத்திலிருந்து நீ மீட்டு வைத்துக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல. பாண்டிய குலத்திற்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். எங்கோ கிடந்த நம் குடும்பத்தாரை வாழவைத்த அந்தக் குலத்தைக் காப்பது ஒன்று தான் நமது குலதர்மம். ஒருவேளை நான் திரும்பி வராமல் போக நேர்ந்தால் நமது குல தர்மத்தைக் காக்க வேண்டிய பெரும்பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன்.

உன்னுடைய வாழ்நாளில் உனக்கிருக்கும் கடமைகள் இரண்டே இரண்டுதான். ஒன்று பாண்டிய குலத்தின் இளவலுக்கு எந்நேரமும் பாதுகாப்பளிப்பது. இரண்டாவது தென்னவர் குலதனத்தை ஈழத்திலிருந்து எப்பாடுபட்டாவது மீட்டு மீண்டும் பாண்டிய குலத்திடம் ஒப்படைப்பது. நான் சொல்வதையெல்லாம் புரிந்துகொள்ளக்கூடிய பிராயம் உனக்கில்லை என்பது எனக்குத் தெரியும். இருப்பினும் வேறு வழியில்லை. செய்வாயா? என்று வினவினார்.

அப்போது எனக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் 'செய்கிறேன் பாட்டா!' என்று அவருடைய கைகளைப் பிடித்து வாக்குக் கொடுத்தேன். அவருக்கு அதில் அத்தனை மகிழ்ச்சி! சட்டென்று திரும்பிப் பார்க்காமல் கிளம்பி விட்டார்.

நடந்து கொண்டிருக்கும் போரைப் பற்றிய பயங்கர செய்திகள் நாள்தோறும் வந்த வண்ணம் இருந்தன. சோழர் படை முன்னேறிவிட்டது! என்றொரு செய்தி வரும். அதற்கடுத்த நாழிகையிலேயே சோழர் படைகள் பின்வாங்கிக் கொண்டிருக்கின்றன! என்று மற்றொரு செய்தி வரும். இரண்டில் எதனை நம்புவதென்றே புரியாது. இந்தச் சித்திரவதையைப் பல நாட்களுக்கு அனுபவித்தோம். ஆனால் ஒன்று தெளிவாகப் புரிந்தது. அது என்னவெனில் வீரபாண்டியரின் தென்திசைப் படைகள் வந்து சேருமுன் வெண்டிநாட்டுப் போரை முடித்துவிட சோழர் படைகள் உறுதி பூண்டுள்ளன என்பதுதான். பாண்டியரும் வாயுவேக மனோவேகமாகத் தன்னால் முடிந்த வரையில் படைகளை விரட்டிக்கொண்டு வந்தார். ஆனாலும் காலம் கடந்து விட்டது. அந்தோ! அதுவரை சமாளித்த சுந்தரபாண்டியரின் படைகளால் அன்றொரு நாள் மட்டும் தாக்குப்பிடிக்க முடிந்திருந்தால்? சரித்திரமே வேறு மாதிரியாகவல்லவா எழுதப்பட்டிருக்கும்..??

வீரபாண்டியரின் படைகள் வெண்டிநாட்டு எல்லையை இன்னும் ஒரு நாளில் நெருங்கிவிடும் என்கிற செய்தி கிடைத்ததும் சோழப் படைகளின் மூர்க்கம் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. அவர்கள் சுந்தர பாண்டியரையும் அவரைச் சுற்றிச் சூழ்ந்திருந்த தென்னவர் ஆபத்துதவிகள் படையினரையும் குறிவைத்துத் தாக்கினார்கள். ஒரு கட்டத்தில் பாண்டிப் படைகள் பின்வாங்கத் துவங்கியது அவர்களுக்கு மிகுந்த ஊக்கத்தைக் கொடுத்தது. பாண்டிப் படைகள் பின்வாங்கியதற்கு ஒரே காரணம் இன்னும் ஒரு நாள் தாக்குப் பிடித்தால் வீரபாண்டியரின் படைகள் வந்து சேர்ந்துவிடுமே என்கிற எண்ணம்தான்.

விதி வேறுமாதிரியாக முடிந்தது. சுந்தர பாண்டியரும் அவரைச் சூழ்ந்திருந்த ஆபத்துதவிப் படைகளையும் இதோ! நாம் நின்றுகொண்டிருக்கிறோமே.. இந்தக் குறண்டியூரில் சோழர் படைகள் அன்று மாலை சுற்றி வளைத்தன. மிகக் கடுமையான போர் நடந்தது. போரின் முன்னணியில் நின்று சோழ சைனியத்தை நிர்மூலமாக்கிக்கொண்டிருந்த என் பாட்டனாரை பன்னிரண்டு பேர் சேர்ந்து வீழ்த்திக் கொன்றார்கள். அவருடைய மரணத்தினால் சற்றே கவனமிழந்த பாண்டியரின் வலது தோளில் சோழன் உத்தமசீலியின் விஷ அம்பு பாய்ந்துவிட்டது. அவருக்கு மயக்கம் வர ஆரம்பித்து விட்டது.

அவரை எப்பாடுபட்டேனும் போர்க்களத்திலிருந்து வெளியேற்றி விடவேண்டுமென்று ஆபத்துதவிகள் முயன்றிருக்கிறார்கள். ஆனால் நடக்கவில்லை. அன்றைய தினம் முடிவதற்குள் சுந்தர பாண்டியரைத் தீர்த்துவிட வேண்டுமென்று வெறிகொண்டிருந்த சோழப் படைகள் பாண்டியர் அடிபட்டுவிட்டதை அறிந்து ஊன்மத்தம் கொண்டு தாக்கின. இளவலே! இப்போது நினைத்தாலும் நெஞ்சம் கொதிக்கிறது. ஆபத்துதவிப் படையினர் ஐம்பது சொச்சம் பேர்களை வெட்டி வீழ்த்திவிட்டு உத்தம சீலியின் படையினர் பாண்டியரைக் கைப்பற்றினர்..."

உணர்ச்சி மேலிட்டால் அரையன் மானாபரணரின் மேனி முழுவதும் நடுங்கத் துவங்கிவிட்டது. சடைய மாறரின் உள்ளமும் பெரிதும் கலங்கிவிட்டது. இருவரும் அந்தக் காட்டுப்பிரதேசத்தையொட்டி அமைந்திருந்த சுந்தர பாண்டிய ஈச்சுரம்[78] என்னும் பள்ளிப்படைக் கோயிலை நெருங்கி விட்டிருந்தனர்.

* * * * * * * *

அந்தப் பள்ளிப்படைக் கோயில் குறண்டியூரின் அத்துவான பூமியில் அந்த மாலை நேரத்து இருளில் பயங்கரமாகக் காட்சியளித்தது. வடிவத்தில் அது கோயிலாகத் தென்பட்டாலும் தெய்வ சான்னித்தியத்தில் இருக்கும் உணர்வை ஏற்படுத்தாமல் ஏதோ மயான பூமியில் நின்று கொண்டிருப்பதைப் போன்ற உணர்வையே ஏற்படுத்தியது. பள்ளிப்படைக் கோயில்களின் இயல்போ இப்படித்தானா? அல்லது அந்த பயங்கர இரணபூமியின் சரித்திரத்தைச் சற்று தெரிந்து கொண்டதனால் நமக்கு ஏற்படும் மனப்பிரமையா? என்று புலப்படவில்லை.

கோயிலின் கர்ப்பக்கிருகத்தில் ஒரே ஒரு விளக்கு மட்டும் முணுக் முணுக்கென்று காற்றில் லேசாக ஆடியபடி எரிந்துகொண்டிருந்தது. சொல்லிவைத்தாற்போல அர்த்த மண்டபத்திலும் முகமண்டபத்திலும் ஒரே இருட்டு கோயிலுக்குள் யாரோ ஒருவர் நடமாடிக்கொண்டிருந்ததை அவ்வப்போது தோன்றி மறைந்த விளக்கின் ஒளியால்தான் புரிந்துகொள்ள முடிந்தது.

---

78 இன்றைக்குக் காலநாத சுவாமி திருக்கோயில் என்றழைக்கப்படுகிறது.

அரையன் மானாபரணரும் சடையமாறரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"இளவலே! நான் சொல்வதைக் கேளுங்கள். இங்கும் ஆபத்தில்லையென்று சொல்லிவிட முடியாது. அதனால்..."

"அடடா.. இந்த மாலை நேரத்தில் இந்த அத்துவான பூமிக்கு நான் வருவேன் என்பது சோணாட்டு ஒற்றர்களுக்குத் தெரிந்து எனக்காகக் காத்திருக்கிறார்கள் என்கிறீர்களா?"

"நீங்கள் வருவீர்களென்று அவர்களுக்குத் தெரியாது ஆனால் பாண்டிய இராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது அவர்களுக்கு மிகுந்த விசுவாசமாக இருக்கக் கூடியவர்கள் யாராவது இந்நேரத்தில் வருவார்களென்பது அவர்களுக்குத் தெரியும். மறந்துவிடாதீர்கள். இன்றைக்குச் சுந்தர பாண்டியருக்குத் திதியென்றால் நாளை அவர்களின் இளவரசர் உத்தம சீலியின் திதி! இந்தக் குறண்டியூர் மண்ணில்தான் உத்தமசீலியைக் கொன்று உங்கள் தகப்பனார் 'சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்' என்று பட்டப்பெயர் பூண்டார்!"

"அந்த அளவிற்குப் புத்திசாலித்தனத்துடன் செயல்படக் கூடியவர்களும் இருக்கிறார்களா என்ன?"

"இருக்கிறார்கள். ஒருவரல்ல, இருவர்! ஒருவன் பல்லவராயன். மற்றவன் மாராயன். இருவரும் அருள்மொழி வர்மனின் இரண்டு கரங்கள்."

"சீக்கிரம் கோயிலுக்குச் செல்வோம். குருக்கள் கதவை மூடிவிடப் போகிறார்."

"நாம் வரும்வரை காத்திருக்கச் சொல்லி இரகசிய உத்தரவு பிறப்பித்தாகிவிட்டது. அதனால் குருக்கள் காத்திருப்பார். ஆனால் கோயிலின் சூழல்தான் சற்று சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. வழக்கமாக அர்த்த மண்டபத்தில் இரு தீபங்களாவது எரிந்துகொண்டிருக்கும்."

"உங்களின் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய ஒரு வழிதான் உள்ளது. நான் உள்ளே நுழைகிறேன். எனக்கு ஏதாவது ஆபத்து ஏற்படும் பட்சத்தில்..."

"சரியாயப் போயிற்று! இத்தனை நாட்கள் உங்களைப் காப்பாற்றியது இப்படிக் காவுகொடுக்கவா என்ன? நான் நுழைகிறேன். ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டால்..."

"நான் வந்து காப்பாற்றுகிறேன்."

"அதுதான் தவறு. என்னைக் காத்துக்கொள்ள எனக்குத் தெரியும். உள்ளே ஏதாவது அசம்பாவிதம் நடப்பதுபோல் தெரிந்தால் உடனடியாக நீங்கள் ஆலமரத்திற்குச் சென்று நமது இரு புரவிகளையும் எடுத்துக்கொண்டு நமது இரகசிய இடத்திற்குச் சென்றுவிடுங்கள்..."

"தேவைக்கு அதிகமாகவே அச்சப்படுகிறோம் என்று தோன்றுகிறது. இருந்தாலும் நீங்கள் சொல்வதால் கேட்கிறேன்."

"உங்களின் சிறு வில்லையும் குறுவாளையும் என்னிடம் கொடுத்துவிட்டு இந்த மரத்தின் பின்னால் நின்று கொள்ளுங்கள். உள்ளே ஆபத்து எதுவுமில்லையென்றால் நானே வந்து அழைத்துச் செல்கிறேன். நான் வரும்வரை மறந்தும் மரத்தை விட்டு வெளியே வரவேண்டாம்!"

* * * * * * * *

உள்ளே நுழைந்த அரையன் மானாபரணரை திருக்கோயில் மாவிரதிகளுள்[79] ஒருவரான தத்புருஷசிவன் வரவேற்றார். "வாருங்கள்! வாருங்கள்! தங்களுக்காகத்தான் நீண்ட நேரமாகக் காத்திருக்கிறேன்!" - அவருடைய குரலில் அதிக உற்சாகமில்லை.

"எல்லாம் நலந்தானே?"

"இந்த மயான பூமியில் என்ன நலம் வேண்டிக் கிடக்கிறது? ஏதோ பிழைப்பு ஓடிக்கொண்டிருக்கிறது..."

"சரி. சுந்தர பாண்டிய ஈச்சுரமுடையாருக்குக் காலையிலேயே சிறப்புப் பூஜைகள், அபிஷேகங்கள் எல்லாம் செய்தாகிவிட்டதல்லவா?"

"எல்லாம் முடிந்தது. இதோ, பிரசாதங்களைத் தனியாக எடுத்து வைத்திருக்கிறேன்."

அரையனார் சற்றே குனிந்து மிகக் கம்மிய குரலில் "சிவனாரே! இங்கு எதுவும் ஆபத்தில்லையே? உங்களை

[79] பள்ளிப்படைத் திருக்கோயில்கள் மகாவிரதிகள் அக்கது மாவிரதிகள் என்றழைக்கப்பட்ட பாசுபத சமயத்துறவிகளால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

யாராவது மிரட்டிக் கோயிலுக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறார்களா என்ன?"

"அதெல்லாம் ஒன்றுமில்லையே?" என்று மெல்லிய குரலில் சொல்லி முடிப்பதற்குள் அவருடைய முகம் வியர்த்து விறுவிறுத்து விட்டது.

"உண்மையைச் சொல்லுங்கள்! நீங்கள் பாண்டிய குலத்திற்குக் கடமைப்பட்டவர்."

"எப்படியும் இன்று நீங்கள் இங்கு வருவீர்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதனால்..."

"ஆஹா! அகப்பட்டுக்கொண்டோமா?"

"இன்னும் இல்லை. வந்திருப்பது நீங்கள்தான் என்று எனக்குத் தெரிந்தால் ஒரு சமிக்ஞை செய்யச் சொல்லி [illegible]வு. அந்த சமிக்ஞை கிடைத்ததும் கோயிலுக்குப் பின்புறமுள்ள காட்டில் ஒளிந்திருக்கும் வீரர்கள் கோயிலைச் சுற்றி வளைப்பார்கள்..." - அந்த வார்த்தைகளைச் சொல்லி முடிக்கும் முன்பே சிவனாருடைய மெய் வெடவெடவென்று நடுங்கத் துவங்கிவிட்டது.

"நான் வருவதை கவனித்திருப்பார்களா?"

"நிச்சயம். என்னுடைய சமிக்ஞைக்காக இந்நேரம் காத்திருப்பார்கள்."

"மாலையிலிருந்து யாருமே கோயிலுக்கு வரவில்லையா?"

"வந்தார்கள். ஒருவருக்குப்பின் ஒருவராக ஊரிலிருந்து [illegible] வந்து தரிசனம் செய்துவிட்டுப் போகும்படி ஏற்பாடு செய்திருந்தேன். அது நல்லதாகப் போயிற்று. இப்போதும் ஊரிலிருந்து எவரோ ஒருவர்தான் தரிசனத்திற்காக வந்திருக்கிறார்களா? அல்லது இராஜகுலத்தினர்தான் வந்திருக்கிறார்களா? என்று கணிப்பது கடினம். என்றாலும் தங்களின் ஆகிருதி சற்று சந்தேகத்தை உண்டாக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதோ, நான் ஊரில் சொல்லி வைத்துவிட்டு வந்துள்ளபடி இன்னொரு குறண்டியூர்ப் பெரியவர் கோயிலுக்கு வந்து கொண்டிருக்கிறார் [illegible]கள்..."

"நல்லதாய்ப் போயிற்று. அந்தப் பெரியவரும் கிட்டத்தட்ட என்னுடைய உயரம்தான் இருக்கிறார். அவரை

உள்ளேயே சிறிது நேரம் வைத்துக்கொள்ளுங்கள். அவருடைய ரூபத்தில் நான் வெளியேறி விடுகிறேன்..."

"என்ன அவலம் இது? சுவாமி தரிசனம் கூடச் செய்யவிடாமல்.."

"என்ன செய்வது? காலம் இன்று நமக்கு எதிராக இருக்கிறது. சரி, விலகி நில்லுங்கள். அந்தப் பெரியவர் நெருங்கி வந்து விட்டார்..."

உள்ளே வந்த பெரியவர் அரையனாரை கவனிக்காமல் நேராக சுவாமி சன்னிதிக்கு அருகில் நின்றுகொண்டு மும்முரமான தரிசனத்தில் மூழ்கினார். தத்புருஷரும் பூசனைகளில் ஈடுபட்டவராக லிங்கத்தின் மேலிருந்த மலர் மாலைகளை சரி செய்வதில் ஈடுபடலானார். நழுவிவிடுவோம் என்று முடிவெடுத்து அரையனார் நகரத் துவங்கிய அந்தக் கணத்தில்..

அந்தப் பெரியவர் சட்டென்று அர்த்த மண்டபத்தில் கட்டியிருந்த பெரிய மணியை அடித்து ஓசையெழுப்பத் துவங்கி விட்டார்! அந்த இருள் நேரத்தின் மௌனத்தைக் கிழித்துக்கொண்டு மணி சப்தம் நாலாபுரங்களிலும் 'டாங்' 'டாங'"கென்று பரவிற்று. அடுத்த கணமே மௌனத்தில் உறைந்து போயிருந்த அந்தக் கோயிலைச் சுற்றிச் சந்தடிகள் கேட்கத் துவங்கின.

"மோசம் போனாமையா! இந்தக் குறண்டியுர்க்காரன் துரோகம் செய்துவிட்டான்..!" என்று அலறினார் தத்புருஷ சிவனார்.

14. நடக்காத காரியம்!



மணி சப்தம் கோயிலுக்குச் சற்று தூரத்தில் மரத்தடியில் ஒளிந்து நின்று கொண்டிருந்த சடையமாறருக்கும் கேட்டது நிச்சயம் ஏதோ பிரச்சனைதான். அதில் சந்தேக மில்லை. அரையனாருக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி திரும்பிப் பாராமல் அவர் இப்போது ஓட்டம் பிடித்தாக வேண்டும் ஆனால் வீரம் இயல்பாகவே கைவரப் பெற்ற சடையமாறரால் அவ்விதம் ஓட முடியவில்லை சட்டென்று தன்னுடைய வில்லில் அம்பு பூட்டினார்

சுற்றுப்புறமெங்கிலும் இருள் சூழ்ந்திருந்ததாகையால் ஒன்றும் புலப்படவில்லை. கண்ணுக்குத் தென்பட்ட ஒரே ஸ்ரீ சுந்தரபாண்டிய ஈச்சுரத்து மகாதேவருக்கருகில் எரிந்து கொண்டிருந்த நுந்தா விளக்கு[80] மட்டும்தான்...

இல்லை. இப்போது அதுவும் அணைந்து விட்டது!

* * * * * * * *

மணியோசை எழும்பிய சில கணங்களில் தன்னைச் சுதாரித்துக்கொண்ட அரையனார், அடுத்த கணம் ஒரே பாய்ச்சலில் தனது வாளால் கர்ப்பக்கிருகத்து விளக்கை அணைத்தார். சுற்றிலும் அந்தகாரம் அடுப்பங்கரியைப்போல் சூழ்ந்துகொண்டது. கோயிலைச் சுற்றி சடசடவென்று ...மாட்டங்கள் கேட்கத் துவங்கின. அடுத்த சில கணங்களுக்கு கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் மிகுந்த குழப்பம் நீடித்தது. "பிடி! பிடி!" "ஏய், இந்தப் பக்கமாக வா! ...விடப் போகிறான்?" "ஐயோ! விட்டுவிடுங்கள்!" ...என்ற குரல்கள் ஏககாலத்தில் எழுந்தன.

கோயிலின் வாயிலிலிருந்து அவசர அவசரமாக ...றைய கழுத்தைப் பிடித்துத் தள்ளப்பட்டதைப்போல் ...யில் வந்து விழுந்த உருவத்தை வாயிலின் இரு ...களிலும் காத்துக் கொண்டிருந்த கைக்கூலிகள் ...டைய நீண்ட வாளால் வெட்டி வீழ்த்தினர். அடுத்த ...மே அவர்கள் இருவர் மார்பிலும் அம்புகள் பாய்ந்து ...களைச் சாய்த்தன.

கோயிலிலிருந்து முன்வந்த உருவத்தைப் பின்பற்றி ...றொரு பெருத்த உருவம் வெளியில் வந்து ஒரு கணம் ...முற்றும் பார்த்தது. இந்த உருவம்.. ஏறக்குறைய ...ருடையதைப் போலில்லை? அப்படியானால் ...முன் வெளியில் வந்து உயிரை விட்டது..?? அட ...வுளே! அந்தக் குறண்டியூர்ப் பெரியவரா?

பெருத்த உருவத்தின் வாயிலிருந்து ஒரு பிரத்யேக ...கையொலி கிளம்பிற்று. அவ்வளவுதான்! அந்த ...கவே காத்திருந்ததுபோல் தூரத்திலிருந்து அம்பு

---

[80] ... விளக்கு என்பது நுந்தா விளக்கு எனத் திரிந்து வழங்கப்பட்டது. ... விளக்கு என்று பொருள்படும்.

மழை பொழிய ஆரம்பித்துவிட்டது. அடடா! வீரர்கள் பிடித்திருந்த வாட்கள் மட்டுமே மின்னும் அந்த இருட்டில் அந்த வாட்களை அடையாளமாக வைத்துக்கொண்டே அம்புகள் தொடுக்கப்படுகின்றனவே??

சில கணங்களில் வெளியில் வந்துவிட்ட அந்தப் பருத்த உருவம் நேராக ஆலமரத்தடியை நோக்கி ஓட்டம் பிடித்தது. கோயிலின் வாயிலுக்கருகில் மேலும் நான்கு வீரர்கள் உயிரை இழந்து வீழ்ந்தார்கள். கோயிலில் மீண்டும் விளக்கை ஏற்றி அதில் தனது தீப்பந்தத்தைப் பற்றவைத்துக்கொண்டு வீரர்களின் தலைவன் வெளியில் வந்து பார்த்தபோது தன் பக்கத்தில் ஏற்பட்டிருந்த சேதத்தைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து நின்றான்.

வெகு தூரத்தில் இரு புரவிகள் வேகமாகக் கிளம்பியோடும் குளம்படிகள் அவனுக்குக் கேட்டன.

* * * * * * * *

"தப்பியது தம்பிரான் புண்ணியம்!"

"இல்லை. எப்படியும் தப்பியிருப்போம். இவர்கள் சோழனின் ஒற்றர்படை வீரர்களே அல்ல..."

"என்ன சொல்கிறீர்கள் அரையனாரே?"

"சோழனின் ஒற்றர்படை இப்படிக் கூட்டமாக வந்து ஆளைப் பிடிக்க முயலாது. தந்திரமாக நரிபோல் அணுகி இரையை வலைக்குள் வீழ்த்துவார்கள். ஆனால் இங்கிருந்தவர்கள் கூலிப் படைகளைப்போலச் செயல்பட்டார்கள். ஆட்களைப் பார்த்தாலும் சோழ நாட்டவனைப் போலில்லை இந்தப் பகுதி ஆட்களாகத்தான் தெரிகிறார்கள். அவசர அவசரமாக சுற்றுப்புற கிராமங்களிலிருந்து ஆட்களைப் பொறுக்கியெடுத்து அமைக்கப்பட்ட கூலிப்படை இது..."

"இத்தனை அவசரமாக நம்மைப் பிடிக்க முயல்வது யார்?"

"தெரியவில்லை. அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் நான் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும்."

"சரியாய்ப் போயிற்று."

"தானைத் தலைவரிடம் இந்த நிகழ்வைத் தெரிவிப்போம். என்ன சொல்கிறாரென்று பார்க்கலாம்."

"சரி, கழிந்தது கழியட்டும். ஒழிந்தது ஒழியட்டும். பற்பல ஆபத்துக்களையும் மீறிக் குறண்டியூருக்கு வந்து பெரிய தந்தையாரின் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டாயிற்று. அடுத்தது என்ன?"

"மலைநாட்டின் இரகசிய இடமொன்றில் அமரபுஜங்கப் பாண்டிய தேவரைச் சந்திப்பதுதான். அதற்குமுன் தெற்கே சுந்தரபாண்டியபுரத்தில் நாம் சேர்த்திருக்கும் படைகளை அவரவர் பகுதிகளுக்கே அனுப்பிவிட்டு அடுத்த உத்தரவு வரும்வரை காத்திருக்கச் சொல்ல வேண்டும். அதற்கும் முன்னதாக இங்கு நடந்த சம்பவங்களனைத்தையும் புரியப் படுத்தி..."

"பாண்டியபுரப் படைகளின் எண்ணிக்கை எனக்குக் கவலையைக் கொடுக்கிறது மானாபரணரே. மிஞ்சி மிஞ்சிப் போனால் இரண்டாயிரம் பேர் தேறுவார்கள்..."

"கவலைப்படாதீர்கள்! வள்ளுவனாரிடம் கணிசமான படைகள் குவிந்திருக்கின்றன. எப்படியாவது சோழனைச் சுற்றிவிட்டுத் தெற்கே நாஞ்சில் நாட்டிற்கு அவனை இழுத்து விட்டுவிட்டோமென்றால் வெற்றி நமதே!"

"எப்படி அத்தனை உறுதியாகச் சொல்கிறீர்கள்?"

"ஒருமுறை ஆரைவாய்மொழிக்குச் சென்று அங்கே வள்ளுவனார் செய்திருக்கும் பலவிதமான ஏற்பாடுகளைப் பார்வையிட்டீர்களானால் நீங்களே புரிந்துகொள்வீர்கள்."

"அது சரி. நாம் சரிவர ஆயத்தமாகுமுன் நமது உண்மையான நோக்கங்களை எதிரிகள் புரிந்து கொண்டு எச்சரிக்கையடைந்துவிட்டால்?"

"அதற்காகக்தானே காந்தளூர்ச் சாலையை களத்தில் இறக்கி விட்டது? இளவலே! ஒன்று கூறுகிறேன். அதனை என்றும் நினைவில் வைத்திருங்கள். இந்த உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு விஷயத்தில் பலவீனம் உண்டு. வீராதி வீரர்களும்கூட இதற்கு விதிவிலக்கல்ல. ஏதோ ஒரு விஷயத்தில் ஏதோ ஒரு இடத்தில் நாம் அனைவருமே பலவீனமானவர்களாகிவிடுகிறோம்.

மாவீரராக விளங்கிய உங்கள் தந்தையாருக்கும் ஒரு பலவீனம் இருந்தது. அதை நான் குறிப்பிட வேண்டாம்

உங்களுக்கே தெரியும். அந்த பலகீனத்திற்கு விலையாகக் கடைசியில் அவர் தம் இன்னுயிரையே இழக்க வேண்டி வந்தது என்பதையும் மறந்திருக்கமாட்டீர்கள். அருள்மொழி வர்மனுக்கும் ஒரு மிகப் பெரிய பலகீனம் உண்டு. அந்த பலகீனத்தைத்தான் இப்போது நாம் சரிவரப் பயன்படுத்த நினைக்கிறோம்."

"வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால் இதில் எனக்கு சிறிதும் நம்பிக்கையில்லை. நாம் நினைக்கும் படியெல்லாம் நடக்குமளவிற்கு அவன் அத்தனை பெரிய முட்டாளாயிருப்பானென்று நான் நினைக்கவில்லை..."

"மற்ற விஷயங்களில் எப்படியோ தெரியாது. ஆனால் சாலை விவகாரத்தில் அருள்மொழியின் சிந்தனா சக்தியை அளவில்லாத கோபம் மறைக்கிறது."

"இத்தனை வருடங்களுக்குப் பிறகு ஞாபகத்தில் வைத்திருக்குமளவிற்கு ஆதித்தனின் மரணம் அத்தனை கொடூரமானதா என்ன?"

"கொடூரம்தான் இளவலே. மிகக் கொடூரமான மரணம். நிதானமாகத் திட்டமிட்டு நன்கு நிறைவேற்றப்பட்ட கொடூரம் அது. எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத விதத்தில் முற்றிலும் எதிர்பார்க்காத ஆட்களால் நிறைவேற்றப்பட்டதால்தான் அந்த மரணம் இன்றுவரை அருள்மொழியை பாதிக்கிறது. ஆனால் ஆதித்தனுக்கு அப்படிப்பட்டதொரு மரண தண்டனையை நிறைவேற்றியது முற்றிலும் நியாயமானதுதான்.

இளவலே! தகனத்தின்போது உங்களது தந்தையாரின் உடலில் தலை இல்லை. ஆதித்தனின் கட்டளையின் பேரில் சோழநாட்டு வீரர்கள் வெட்டிக்கொண்டுபோய் விட்டதாகச் சொன்னார்கள். எங்கள் எல்லோருக்கும் இரத்தம் கொதித்தது! 'சோழன் தலைகொண்ட' வீரபாண்டியன் என்று உங்களின் தந்தையார் பட்டம் பூண்டதென்னவோ உண்மைதான். ஆனால் வேறு எந்தவிதமான இழிவான காரியத்திலும் ஈடுபடவில்லை. சோழன் என்ன செய்தான் தெரியுமா? வெட்டப்பட்ட தலையை எல்லோரும்

பார்க்கும்படித் தஞ்சைக் கோட்டை வாயிலில் சொருகி வைத்தான்[a] ..."

"இப்போது நீங்கள் என்னுடைய பலகீனமான பக்கத்தைத் தொட்டுவிட்டீர்கள். தந்தையாருக்கு இறுதிக் கடன்களைக் கூடச் செய்யமுடியாததை நினைத்தால் எனக்கும் கோபம் தலைக்கேறிவிடுகிறது மூளை சிந்திக்கும் திறனை இழந்து விடுகிறது. ஆனது ஆகட்டும் என்று நரகத்திற்கே சென்று அந்த ஆதித்தனை வெட்டி வீழ்த்தவேண்டுமென்று வெறியுண்டாகிறது.... ஓ" தலையை அப்புறமும் இப்புறமும் சிலுப்பிக்கொண்டார் சடையமாறர்

"சரி, பழையதை அதிகம் கிளற வேண்டாம். நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசுவோம்."

"மலைநாட்டில் அமரபுஜங்கர் இப்போது எங்கே இருக்கிறாரென்பது உமக்குத் தெரியுமா?"

"அது பரம இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது எல்லோரும் மகோதகைப்பட்டினத்திற்கருகில் உள்ள காட்டுப் பகுதிகளில் சகல வசதிகளுடனும் தங்க வைக்கப்பட்டுள்ளதாகக் கேள்வி. எனக்கென்னவோ சந்தேகமாக இருக்கிறது."

"சேரநாட்டு வேந்தர் பாஸ்கர இரவிவர்மன் திருவடி நமக்குப் பகிரங்கமாக ஆதரவு தெரிவிப்பாரா?"

"உண்மையைச் சொல்லவேண்டுமென்றால் அவர் இருதலைக் கொள்ளி எறும்பாகத்தான் இருக்கிறார் சோழருடன் பகிரங்கமான பகையையோ போரையோ அவர் விரும்பவில்லையென்றுதான் சொல்லவேண்டும். ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தால் நட்புறவை நாடவும் தயங்க மாட்டார்..."

"அது ஆபத்தாயிற்றே?"

"நிச்சயமாக. அதனால்தான் பகிரங்கமாக இருவரும் எந்த அரசியல் உறவும் பூண்டுவிடாமலிருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது."

---

[a] இராஜேந்திர சோழரின் எசாலம் செப்பேடுகள் இந்நிகழ்வுக்குச் சான்று [illegible].

"இந்த விவகாரத்தைப் பொறுத்தவரையில் சோழனுடைய நிலைபாடு என்ன? நாம் என்னென்னவோ திட்டங்கள் தீட்டிக்கொண்டிருக்க அவன் தடாலென்று பெருமாளுடன் கை கோர்த்துக்கொண்டு விட்டால்...?"

"அது நடக்காத காரியம்!"

"எப்படி அத்தனை உறுதியாகச் சொல்கிறீர்கள்?"

"இவர்கள் இருவரும் பகிரங்க உறவு பூண முடியாமல் காந்தளூர்ச் சாலை விவகாரத்தை நாம் நந்திபோல் முன்னிறுத்திவிட்டோம். இராஜதந்திரம் இராஜதந்திரம் என்றெல்லாம் பேசுகிறார்களே? இதைவிட சிறந்த இராஜ தந்திரத்தைப் பார்க்க முடியுமா? அஹ்...ஹ்..." - கெக்கலித்துச் சிரித்தார் அரையன் மானாபரணர்.

"எனக்கும்கூடக் காந்தளூச்சாலையை இந்த விவகாரத்தில் ஈடுபடுத்தியதை சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. இரவிநீலி குடும்பத்தாரை அருள்மொழி வீரநாராயணபுரத்திலிருந்து நாடுகடத்தியதோடு பிரச்சனை முடிந்ததல்லவா? பின் சாலை எவ்வாறு இதில் சம்மந்தப் படுத்தப்பட்டது?"

"மூன்று விதமான காரணங்களால் சாலை இந்த விவகாரத்தோடு சம்மந்தப்படுத்தப்படுகிறது. முதலாவது ஆதித்த கரிகாலனைக் கொலை செய்வதற்கான திட்டம் முழுவதும் சேரநாட்டின் காந்தளூர் வலியசாலையில்தான் வகுக்கப்பட்டது. இரண்டாவது அந்தத் திட்டத்தைச் செவ்வனே வகுத்துக் கொடுத்தவர் சாலையின் இன்றைய ஆச்சாரியரான திருநாராயண பட்டதிரி. மூன்றாவது ஆதித்தனைக் கொலை செய்ததைப் போலவே அருள்மொழி வர்மனையும் தீர்த்துக்கட்ட இப்போது சாலையில் திட்டம் தீட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. அவ்வளவுதான் விஷயம்!"

"என்ன... நிஜமாகவா? அருள்மொழியைத் தீர்த்துக்கட்டத் திட்டம் தீட்டப்பட்டுக்கொண்டிருக்கிறதா?"

"ஆமாம். அருள்மொழியை அகற்றிவிட்டு அல்லது பரலோகத்திற்கு அனுப்பிவிட்டு மதுராந்தகன் கண்டராதித்தனை சோழநாட்டின் அரசனாக முன்னிறுத்துவதுதான் பட்டதிரியின் திட்டம்."

"இந்தச் செய்திகளெல்லாம் பரம இரகசியங்களல்லவா? சோழர்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"நாம் தெரியவேண்டுமென்று நினைத்ததால் தெரிந்தது! அஹ்...ஹ்..." - மீண்டும் அரையனாரிடமிருந்து அதே கெக்கலிப்பு.

"என்ன சொல்கிறீர்கள்?"

"எதிரிகளுக்கு நாம் விரும்பும் ஒரு சில தகவல்கள் தக்கபடி போய்ச் சேரும்படி பார்த்துக்கொள்வதுதான் நமது ஒரே பணி. சமீபத்தில் நடந்த மதுரைப் படையெடுப்பில்கூட ஒரு ஓலைத் துணுக்கை விட்டுவிட்டு வந்தோம். அதனை அவர்கள் கைப்பற்றி வைத்துக்கொண்டு திருநாராயண பட்டதிரியை நேரடியாக மிகப்பெரியதொரு சதியில் இந்நேரம் சம்மந்தப்படுத்தியிருப்பார்கள். இளவலே! காந்தளூர்ச் சாலையை அருள்மொழியால் தாக்காமல் இனி இருக்கவே முடியாது. சாலைப் பெருமக்களாலும் அருள்மொழியை எதிர்க்காமலிருக்க முடியாது. அத்தனை தூரத்திற்கு இருவரையும் நாம் இதில் முன்னிழுத்து விட்டு விட்டோம்."

"ஏதோ நேரில் பார்ப்பதுபோல் நடந்து கொண்டிருப்பவைகளைச் சொல்லிச் செல்கிறீர்கள்?"

"உண்மைதான். நமது கண்கள் சோழநாடெங்கிலும் வியாபித்துள்ளன. அருள்மொழியின் ஒவ்வொரு அசைவையும் நாம் துல்லியமாகக் கவனித்து வருகிறோம்..." - அரையன் மானாபரணரின் முகத்தில் அபூர்வமானதொரு புன்னகை தோன்றி மறைந்தது.

"சரி, இன்றிரவு எங்கு தங்குகிறோம்?"

"இரவு எத்தனை நேரமானாலும் சோளாந்தகச்[1] சதுர்வேதி மங்கலத்தை அடைந்து குலசேகரக் கிழார் வீட்டிலேயே தங்கிவிடுவோம். மற்ற இடங்களில் தங்குவது ஆபத்து."

பின்னிரவு நேரத்தில் இருவரும் சதுர்வேதி மங்கலத்தை அடைந்தபோது அங்கே முக்கியமானதொரு செய்தி அவர்களுக்குக் காத்திருந்தது.

---

[1]சோழாந்தகன் அல்லது சோளாந்தகன் என்னும் பெயர் இடைக்காலச் சேரரசில் பிரசித்தமானது. மதுராந்தகன் (மதுரையின் அந்தகன்) என்ற பெயருக்கு எதிராக உருவான பெயர் இது. இப்பெயரைப் பல அரசர்களும் அரசியல் அதிகாரிகளும் பூண்டுள்ளனர்.

15. நானாதேசிகள் காவற்படை



வரையார்வனபோல் வளரும் வங்கங்கள்
கரையார் கடல் நாகை...[83]
என்று ஞானசம்மந்தப் பெருமானாலும்
தொள்ளை ஆம் நல் கரத்து ஆனை
சுமந்து வங்கம் சுங்கமிடத்
தொள்ளும் வேலைத் தென்னாகை...[84]

என்று சுந்தரப் பெருமானாலும் பாடப்பெற்ற புகழ்மிக்க நாகைக் கடற்கரையில் வழக்கம்போல அன்றும் 'வங்கம்' என்று சங்ககால நூல்கள் குறிக்கும் பாய்மரம் விரித்த பெருங்கலங்கள் கடற்கரையிலிருந்து வெகு தூரத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தன. சுந்தரர் நாகை மண்ணில் கால்பதித்து ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகள் கழிந்து விட்டிருந்த அன்றைய நிலையிலும் வங்கங்களின் போக்குவரத்து அங்கே மிகுதிப்பட்டிருந்தனவேயொழியக் குறையவில்லை.

கடற்கரையின் குறிப்பிட்டதொரு பகுதியில் நானா தேசிகள் என்றழைக்கப்பட்ட வணிகக்குழுவைச் சேர்ந்த வாணிக அன்பர்கள் மிகுதியான அளவில் காணப்பட்டார்கள். அவர்களுடைய பேச்சுக்களிலிருந்தும் பரபரப்பான நடவடிக்கைகளிலிருந்தும் 'சுவர்ணத் தீவு' என்று அழைக்கப்படும் சாவகத் தீவிலிருந்து பெருங்கலங்கள் பலவும் அவர்களுக்குரிய சரக்குகளை ஏற்றிக்கொண்டு நாகையை வந்தடைந்திருக்கின்றன என்பதாக அறிகிறோம்.

[83] வரை என்றால் மலை என்று பொருள். வங்கங்கள் மலைகள் ஊர்வன போல் கடற்கரையருகில் ஊர்ந்து கொண்டிருநதனவாம்! தேவாரம் 1.84.7.
[84] யானைகளை சுமக்ககககூடிய அளவிற்குப் பெரிய அளவிலான வங்கங்கள் சுங்க முத்திரை பெறுவதறகாக நாகைக கடறகரையில் புகுந்தன என்பதுதான் இதன் பொருள். தொள்ளும் என்பதற்குச் 'சொருகிக்கொள்ளும்' என்றொரு அர்த்தமும் 'இளைப்பாற' என்று மற்றொரு அரததமும உண்டு. சுந்தரா இபபதிகததில் இரட்டுற மொழிந்திருக்கிறாா எனறு தோன்றுகிறது. தேவாரம் 7.101.8.

சுந்தரர் குறிப்பிடும் 'பருவன் கனகம்' கூட[85] ஒரு சில சாத்து மூட்டைகளில் இருக்கலாமோ என்னவோ! நாமறியோம்.

கடலில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்த அப்பெருங் கலங்களிலிருந்து சரக்கு மூட்டைகளைக் கூலியாட்கள் சிறு படகுகளில் ஏற்றி உப்பங்கழிகளின் வழியே நிலத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். தாம் இன்னாருடைய குழுவைச் சேர்ந்தவர் என்று மற்றவர்கள் அறிவதற்காக ஒவ்வொரு கூலிக்காரரும் குறிப்பிட்ட நிறத்தில் சிறியதொரு தலைப்பாகை கட்டிக் கொண்டிருந்தார். இவ்வாறு திசையாயிரத்து ஐந்நூற்றுவர், பதினெண் பூமி நாட்டார், அஞ்சு வண்ணத்தார்[86] என்று பலவகைப்பட்ட வாணிபக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் அந்தக் காலை நேரத்தில் கடற்கரையில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்

வணிகர்கள் உப்பங்கழிகளுக்குள் நுழைந்துவிட்ட சிறு படகுகளில் ஏறித் தம்முடைய சரக்குகள் நல்லபடியாக வந்து சேர்ந்துள்ளனவா என்று சோதித்தறிவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். சரக்குகள் சேதமின்றி வந்துவிட்டால் அப்பட்டமான மகிழ்ச்சி அவர்களுடைய முகத்தில் விரிந்தது.

"சுங்கத்தார் வருவதற்குள் சரக்குகளை பத்திரமாக இந்த இடத்தில் இறக்கப்பா!"

"பார்த்து! பார்த்து! மெதுவாக இறக்கு. அதில் சீனத்து மண்பாண்டங்களும் வண்ணப் பானைகளும்[87] இருக்கின்றன பத்திரம்!"

"தெற்கே போகும் சரக்கா? அதோ. அங்கு சென்று அடுக்கிவிடு!" என்றெல்லாம் உத்தரவுகள் கேட்டன.

சிறிது நேரத்தில் சுங்கமிடும் அதிகாரிகள் நானாதேசி வணிகர்களின் சரக்குகள் அடுக்கப்பட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

[85] "[illegible] கனகம் கற்பூரம் பகர்ந்த முகந்து பப்பரவர் [illegible] சிந்தும் தென்னாகை...." தேவாரம் – 7.101.5
[86] [illegible]வண்ணததாா எனறு கல்வெட்டுக்களில குறிக்கப்படுபவா [illegible] வணிகாகளான அஞ்சுமான்கள் என்பது சில [illegible]களின கருதது.
[87] [illegible]து மணபாணடங்கள் நாகை மற்றும் கங்கை கொண்ட [illegible]ரத்து அகழவாராய்ச்சிகளில் கிடைத்திருப்பது குறிபபிடத்தககது.



சோழ இராஜ முத்திரை

"தெற்கே செல்லும் சாத்து மூட்டைகளை அவசரமாக அனுப்ப வேண்டுமாமே? எங்கே அவை?"

"அதோ!"

மளமளவென்று அத்தனை சரக்கு மூட்டைகளிலும் புலி, குத்து விளக்கு, வெண்சாமரம், வில் முதலானவை கொண்ட பெரியதொரு இராஜ முத்திரை[88] பொறிக்கப் பட்டது.

"கிளம்பலாம். அடேய்! வண்டிகளை இந்தப் பக்கம் விட்டுக் கொண்டு வா. நானாதேசிகளின் சாத்து மூட்டைக்

[88] சோழர்களின் இராஜமுத்திரை லெயிடன் செப்பேடுகள், கரந்தைச் செப்பேடுகள் முதலான பலவேறு செப்பேடுகளிலும் கிடைத்துள்ளன.

காவலர்கள்[89] சற்று தூரத்தில் நிற்கிறார்கள் பார்! அவர்களை வரச்சொல். மளமளவென்று புறப்பட்டு விடுவோம்.

என்ன? என்ன சொல்கிறாய்? நீ கூறுவது காதில் சரியாக விழவில்லை. சற்று உரக்கச் சொல்! அங்கு நிற்பவர்களில் நமது காவலர்களா யார் என்று கேட்கிறாயா? அங்கே பெருத்த மீசையுடன் நின்று கொண்டிருக்கிறார்களே அவர்கள்தான். சீக்கிரம் ஆகட்டும்!" என்று தன் அருகிலிருந்த வேளக்காரனை விரட்டினார் ஒரு வணிகர்.

சிறிது நேரத்தில் நான்கு காவலர்கள் புடை சூழ எட்டு காளைமாட்டு வண்டிகள் "ஜல்! ஜல்!" என்னும் சப்தத்துடன் கடற்கரைப் பெருஞ்சாலையிலிருந்து கிளம்பின.

* * * * * * * *

கடற்கரைப் பெருஞ்சாலையின் மித்தியான போக்குவரத்தைக் கடந்து தெற்கே செல்லும் தொண்டித் துறைமுகச் சாலையை அடைவதற்குள் உன்பாடு என்பாடு ஆகிவிட்டது. அன்று நாகையின் போக்குவரத்தும் காவலர்களும் அந்த இரு வணிகர்களின் வாயில் விழுந்து புறப்பட்டதை எழுதத் துவங்கினால் அதுவே இரண்டு அத்தியாயங்களுக்கு விரிந்துவிடும். விரிவுக்கஞ்சி விட்டு விடுகிறோம்.

ஒருவழியாகச் சாத்து வண்டிகள் துறைமுகச் சாலையை அடைந்ததும் பயணம் வேகம் பிடித்தது. தடைகளும் போக்குவரத்தும் அதிகம் தென்படாத பாதையாதலின் வண்டிக்காரர்கள் உற்சாகமாக மாடுகளைச் செலுத்தினர். வண்டிகளுக்கு முன்புறம் இரு காவலர்களும் பின்புறம் இரு காவலர்களுமாகத் தத்தம் புரவிகளில் தொடர அந்த நீண்ட வண்டிவரிசை வேகவேகமாக நாகையைக் கடந்து கொண்டிருந்தது.

சரக்குகள் அதிகம் வைக்கப்படாத இரண்டாவது வண்டியில் இடம் பிடித்துக்கொண்டிருந்த இரண்டு வணிகர்களும் பயணம் வேகம் பிடித்துவிட்டதைக் கண்டு ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் நிதானமாக வெற்றிலையில்

[89] பெரும் வணிகக்குழுக்கள் தங்களுக்கென்று தனிக் காவற்படையைக் கொண்டிருந்தன.

சுண்ணாம்பு தடவியபடி நாட்டின் வாணிப நிலவரங்களைப் பேசத் தலைப்பட்டனர்.

“என்னப்பா! சிவப்பனின் வியாபாரம் எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது? நிலைமை சொல்லிக்கொள்ளும்படியாக இல்லையென்று கேள்விப்பட்டேன்? ”

அவர்களின் நிம்மதி அடுத்த ஒரு நாழிகை நேரம்கூட நீடிக்கவில்லை. நாகைப்பட்டினத்தின் புறம்படிப் பகுதிகளை[90] அந்த வண்டிகள் தாண்டியதும் முன்னால் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்த இரு காவற்படை வீரர்களுள் ஒருவனின் வாயிலிருந்து ஒரு சிறிய சீழ்க்கையொலி கிளம்பியது. அவ்வளவுதான்! அடுத்த கணமே முன்சென்றுகொண்டிருந்த இரு புரவிகளும் வாயுவேக மனோவேகமாகத் துறைமுகச்சாலையில் தெறித்துப் பாய்ந்தோடலாயின!

வணிகர்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி சொல்லுந்தரமன்று.

“எய்! என்..ன.. என்ன நடந்துகொண்டிருக்கிறது? அப்போதே இவர்கள் இருவரும் புதியவர்களாய் இருக்கிறார்களேயென்று சந்தேகித்தேன். தலைவர்தான் கட்டாயப்படுத்தி தெற்கே செல்வதற்கு இவர்கள்தான் ஏற்றவர்களென்று சொல்லி.. அடேய்! எங்கே ஓடுகிறீர்கள்! நாங்கள் யாரென்று தெரியுமா?” - வணிகர்களில் ஒருவர் வண்டியிலிருந்து எழுந்து நின்று கூக்குரலிட்டார்.

பின்னால் வந்துகொண்டிருந்த இரு காவலர்களும் அவர்களை நெருங்கினார்கள். “ஐயா...”

“எங்களிடம் என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது! மளமளவென்று ஓடிக்கொண்டிருக்கும் அந்த இருவரையும் துரத்திப் பிடியுங்கள்!”

“ஐயா மன்னிக்க வேண்டும். நாங்கள் நானாதேசிகளின் காவற்படையைச் சேர்ந்தவர்களே அல்ல!”

“ஐயோ! என்ன சொல்கிறீர்கள்? என்ன இழவா இது?”

“பொறுங்கள். நான் சொல்ல வந்ததைக் கேளுங்கள். உங்கள் படையைச் சேர்ந்த வீரர்கள் இன்னும் சிறிது

[90] புறம்படி என்பது இன்றைய புறநகர் பகுதிகளை ஒக்கும்.

..ரத்தில் வந்து விடுவார்கள். அதுவரை வண்டிகளை பாதையை விட்டுவிட்டு சற்றே விலக்கி...”

“என்ன ஐயா சொல்கிறீர்கள்? பொற்கழஞ்சுகளாக மாதா மாதம்தான் காவற்படைகென்று தனியாக அழுகிறோமே. பின் எதற்காக இத்தனை குழப்பங்கள்? முதலில் நீங்கள் யார்? புரவிகளில் முன்னால் ஓடிக் கொண்டிருப்பவர்கள் யார்? சற்றே விளக்கிச் சொன்னீர்களானால் புண்ணியமாகப் போகும்!”

அந்த வீரன் வணிகரை நெருங்கி மெல்ல நிலைமையை விளக்கத் துவங்கினான்.

* * * * * * * *

முன்னால் ஓடிக்கொண்டிருந்த இரண்டு புரவிகளுமே முரட்டு அரேபியப் புரவிகளாகத் தெரிந்தன. தம் முதுகில் ..ர்ந்திருப்பவர்களையும் அவர்களின் அசைவுகளையும் அவை இன்னமும் சரிவரப் பழக்கிக்கொள்ளவில்லை. ..னால் சற்றே சிரமப்பட்டுத்தான் அவைகளால் குறித்த ..தையில் பயணப்பட முடிந்தது. புரவி வீரர்கள் இருவரும் அந்தப் புரவிகளைத் தட்டிக்கொடுத்து “பயப்படாதே! நான் ..ன் நண்பன்தான்” என்று முடிந்தவரை ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தனர். மிகப் பெரிய மீசையும் ..லைப்பாகையுமாகக் காட்சியளிக்கும் அந்த இருவரின் ..முகங்களையும் நம்மால் சரிவர அடையாளங்காண ..வில்லை.

நாகைப் புறம்படியைத் தாண்டிய சில காத தூரத்தில் ..றமுகப் பெருவழி இரண்டாகப் பிரிந்தது. இடது ..க்கமாகச் சென்ற கோடியக்கரைப் பாதையை விட்டுவிட்டு ..புறமாகச் சென்ற தொண்டிப் பெருவழியில் அந்தக் ..வலர்கள் புரவிகளை விட்டுக்கொண்டு சென்றனர். யுக ..ந்திரங்கள் என்று சொல்லத்தக்க ஒன்று அல்லது ..றரை ஜாம நேரத்தில் தலையஞ்சாலை என்றழைக்கப் ..ட சடையன் சேரி, கீழையூர், நீர்முலை முதலான ..ர்களைக் கடந்து தனியூரான உம்பளர் சேரியின்[91] ..லையைப் புரவிகள் தொட்டன.

..ஊர்களும் இன்றும் அதே பெயர்களில் இப்பகுதியில் ..துள்ளன.

"அப்பாடா! இனி ஆபத்தில்லை." என்றார் முதல் புரவியிலிருந்த காவல் வீரர்.

"அப்பாடா! ஒரு வழியாக நீங்கள் பேசத்துவங்கி விட்டீர்கள். இனி பயணம் கசக்கும் ஆபத்தும் இல்லை" என்றார் மற்றவர் சிரித்தபடி. இவர்கள் இருவரின் குரல்களும் நமக்கு மிகப் பரிச்சயமானதாயிருக்கின்றனவே? யாரிவர்கள்?

"எல்லாம் கனவுபோல இருக்கிறது. இன்னமும் கூட என்னால் நடந்துகொண்டிருப்பவற்றை நம்பமுடியவில்லை. இதோ! இன்னும் சில கணங்களில் சொப்பனம் கலைந்து எழுந்து வழக்கம்போலக் கடகப் பயிற்சிக்குப் போய் விடுவேன் என்றுதான் தோன்றுகிறது."

"சில நாட்களுக்கு முன்புவரை எனக்கும்கூட அப்படித்தான் தோன்றியது. நாகை மண்ணை மிதித்ததிலிருந்து அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டேன். அருள்மொழித்தேவரின் தர்ம இராஜ்ஜிய பரிபாலனத்தில் எது வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். இதோ! நம் கண்முன் தெரியும் இந்த ஊர் மாயாஜாலமாய்க் காணாமல் போகலாம். என்னுடன் பேசியபடி வரும் நீங்கள் வானத்தில் புரவியுடன் பறக்கலாம். எது நடந்தாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன்!"

இரண்டாமவர் கலகலவென்று சிரித்தார்.

"சரி, அப்போது நானும் இனி நடக்கப்போகும் பற்பல ஆச்சரியங்களுக்கும் ஆயத்தமாகிக் கொள்கிறேன்."

"மன்னிக்கவும் நேற்றிரவு உங்களை அகால நேரத்தில் எழுப்ப வேண்டியதாகிவிட்டது. சரியானபடி என்னை அறிமுகம் செய்துகொள்ளக்கூட அவகாசமில்லை. நான் வடதிசை தொண்டை மண்டலத்தின் சேனானி. பெயர் கம்பன் அரையன்."

"வந்தனங்கள். நேற்றிரவு சந்தித்தபோது இருள் உங்களின் திருமுகத்தை முழுவதுமாக மறைத்துவிட்டது இன்றோ நீங்கள் ஒட்ட வைத்துக்கொண்டிருக்கும் பெரிய மீசை முகத்தை முக்காலே மூன்று விசம் மூடிவிட்டது ஹும், இன்னமும் உங்களின் முகதரிசனம் எனக்குச் சரியாகக் கிட்டாதது துர்பாக்கியம்தான். நான் பரமன் மழபாடி. நாகைக் கடகத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் சாதாரணப் படை வீரன்."

"வேடிக்கையாகப் பேசுகிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில் எந்த வீரனும் சாதாரணனில்லை. அதிலும் அந்த அற்புத பிஷு ஆனந்த தோரால் கடகத்தின் அத்தனை வீரர்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நீர் சாதாரணரே அல்ல!"

"எனக்கு இன்னமும் என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பது புரியவில்லை. தாங்கள் ஏதோ மிக முக்கியமான இராஜ்ஜிய காரியத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்பது தெரிகிறது. ஆனால் இதில் நான் எவ்வாறு நுழைந்தேன்? என் பணி என்ன என்பதில் இன்னமும் தெளிவு ஏற்படவில்லை. உங்களின் பணிக்கு உறுதுணையாக இருக்கும்படி நேற்று பிஷு கூறியது மட்டும்தான் மனதில் நிற்கிறது. வேறெதுவும் புரியவில்லை."

"எனக்கும் பல விஷயங்களில் இன்னமும் தெளிவு ஏற்படவில்லைதான். சொல்லப்போனால் இந்த மிக முக்கியமான பணிக்கு நான் அருகதையுள்ளவன்தானா? என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். பேரரசரே என்னை நம்பி முக்கியப் பொறுப்பை ஒப்படைத்து விட்டதால் அதனைச் சரிவர நிறைவேற்றும் கடமை எனக்கிருப்பதாக எண்ணித்தான் மேற்கொண்டு இதில் ஈடுபட்டிருக்கிறேன். அரசருக்கு உங்களிடம் தனிப்பட்ட முறையில் பரிச்சயம் உள்ளதால் உங்களை முழுமையாக நம்பும்படியும் நான் அறிந்தவை அனைத்தையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளும்படியும் கட்டளையிடப் பட்டிருக்கிறது. நீண்டதொரு பயணத்தை மேற்கொண்டிருப்பதால் நாம் பேசுவதற்கு அதிக அவகாசம் கிடைக்கும். மெல்ல மெல்ல நான் அறிந்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்."

"மிக்க நன்றி கம்பன் மணியனாரே!"

மணியனார் சற்றே திரும்பிப் பரமன் மழபாடியார் என்றழைக்கப்பட்ட அந்த வீரரின் முகத்தை நோக்கினார். அவருடைய கண்களில் தெரிந்த நட்புணர்வை.. முகத்தில் ஒளிர்ந்த வீரக் களையை.. எதற்கும் அஞ்சாமல் நேருக்கு நேர் நோக்கும் அந்தப் பார்வையை.. உள்வாங்கிக் கொண்டார். அவருடைய உள்ளம் மெல்லக் குழைந்தது. ஒரு நல்ல வீரன் மற்றொரு சுத்தமான வீரனை சந்தித்தால் ஏற்படும் இயல்பான மகிழ்ச்சியும் நீண்ட பயணத்திற்கு நல்லதொரு துணை கிடைத்த பெருமிதமும் அவருடைய முகத்தில் பொங்கின.

"ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் இப்போது விடைகூற இயலுமா?" - பரமன் மழபாடியார் சற்று சந்தேகத்துடன் இளையவரை வினவினார்.

"கேளுங்கள்."

"இத்தனை மிக முக்கியமான பணிக்கு அனுபவம் சிறிதுமில்லாத நான் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டேன்?"

"இந்தக் கேள்விக்கு என்னால் நேரடியாக பதில் கூற முடியாது நண்பரே! இதற்கான விடையை அந்தப் பிஷுவிடமும் பேரரசரிடமும்தான் கேட்க வேண்டும். அப்படிப் பார்த்தால் எனக்கும்கூட இதுபோன்ற இராஜாங்க விவகாரங்களில் சிறிதளவுகூடப் பயிற்சியில்லைதான். என்றாலும் ஏதோ ஒரு நம்பிக்கையின் பேரில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

நேற்றிரவு அந்த பிஷுவும் பேரரசரும் பதரதிட்ட விஹாரையின் மூத்த ஆச்சாரியருடன் இரவு மிக நீண்ட நேரம் அந்தரங்கமாக அளவளாவிக் கொண்டிருந்தார்கள். பல்லவராயரும் மாராயரும்கூட அந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. பிஷுவுடனான சந்திப்பு முடிந்தபின் பேரரசர் தஞ்சைக்குக் கிளம்பிவிட்டார். கிளம்புமுன் என்னிடம் ஒரு வார்த்தை ஒரே ஒரு வார்த்தைதான் பேசினார்.

"கம்பன் மணியனாரே! மிக முக்கியமான பொறுப்பை உங்களை நம்பி ஒப்படைக்கிறேன். நீங்கள் அதனைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்களென்பதில் சந்தேகமே இல்லை. நாகையில் குடி கொண்டிருக்கும் காரோணப் பெருமானின் அருள் உங்களுக்கு என்றும் உண்டு வருகிறேன்!"

பின் பிஷுவும் பல்லவராயரும்தான் எனக்கிடப்பட்டிருக்கும் பணி இன்னது என்பதைச் சுருக்கமாக விளக்கினார்கள். பிஷு "உடனடியாக அக்கசாலைக் கடகத்திற்குச் செல்ல வேண்டும்" என்று சொன்னபோதுதான் எனக்குத் துணையாக உங்களையும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப் பேரரசர் திட்டமிட்டிருந்தது புரிந்தது. இரவு உங்களைச் சந்தித்தபின் நடந்தவைதான் உங்களுக்கே தெரியுமே?"

"அந்தப் பின்னிரவு நேர இருட்டில் உங்களிருவரையும் அடையாளம் கூடக் காண முடியவில்லை. குரலை

வைத்துத்தான் பிஷு ஆனந்த தேரரை இன்னார் என்றறிந்தேன். அவர் நேற்று காலையில்தான் என்னை முதல் முறையாகச் சந்தித்தார். நான் வைத்திருந்த வாளைப் பார்த்தும் சிலாகித்தார். அது என் கைகளில் இருக்கும்வரை என்னை யாரும் வெல்ல முடியாதென்று ஆசீர்வதித்தார். அவ்வளவுதான். அவ்வளவுதான் எனக்கும் அவருக்குமான பழக்கம். அந்தப் பழக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு என்னையே இந்த மிக முக்கியப் பொறுப்பைக் கொடுப்பதற்கு முடிவெடுத்திருக்கிறார் என்றால்...?"

"அவருடைய மனதில் நீங்கள் அழுத்தமாக இடம் பெற்று விட்டீர்களென்று அர்த்தம். நண்பரே! நான் ஒன்று சொல்கிறேன். உள்ளத்தை ஒத்த உள்ளம் அறிவதற்கு அதிக நேரம் ஆகாது. சில மனிதர்களைப் பார்த்தவுடன் பிடித்துப் போய்விடுகிறது. ஒரு சிலரை சில காலம் பழகியபின் புரிந்துகொள்ள முடிகிறது. வேறு சிலரோடு எத்தனை காலம் பழகினாலும் மனது ஒட்ட மறுக்கிறது. இதற்கெல்லாம் காரண காரியங்கள் தேடிக்கொண்டிருக்க முடியுமா என்ன? பேரரசர் என்னை நம்பிப் பொறுப்பை ஒப்படைத்ததைப் போல் பிஷு உங்களிடமும் ஒரு முக்கியப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார் என்று கொள்ள வேண்டியதுதான். ஆனால் ஒன்று புரிகிறது. பேரரசர் அனுபவம் வாய்ந்த பழைய ஒற்றர்களை நம்புவதைக் காட்டிலும் அனுபவமற்ற புதியவர்களையே அதிகமாக நம்புகிறார். அதன் வெளிப்பாடாகத் தான் நீங்களும் நானும் மிக அபாயகரமான வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறோம்..."

'ஒற்றர்கள்' என்றும் 'அபாயகரமான' என்றும் பேச்சுவாக்கில் கம்பன் அரையனார் குறிப்பிட்டது மழபாடியாருக்கு அதிர்ச்சி ஏற்படுத்தியது!

அவர்கள் இருவர் மீதும் சுமத்தப்பட்டிருப்பது அபாயமிக்கும் திருப்பணியா என்ன?

16. வளங்கெழு தொண்டி



சங்ககாலம் தொட்டே தொண்டி நகரானது பாண்டியர்களின் முக்கியக் கடற்கரைப் பட்டினமாகப் புகழ் பெற்றிருந்தது. முசிறி, கொற்கை முதலான இடங்களில் அமைந்திருந்த துறைமுகங்களுக்கு அடுத்த படியாகத் தொண்டியின் வாணிபம் அக்காலத்தில் அமைந்திருந்தது.

சங்ககாலப் புலவரான அம்மூவனார் ஒரு நாள் தொண்டித் துறைமுகத்துக்கு வருகை புரிந்தார். அலைகள் ஆர்ப்பரிக்கும் கடலும் கடலுக்கு அஞ்சாமல் மீன் பிடித்து வரும் பரத்தவரும் அவர்கள் கொண்டு செல்லும் வலைகளை அடிக்கடி அறுத்துக்கொண்டு வெளியில் ஓடிவிடும் மாபெரும் மீன்களும் அதன் காரணமாக அடிக்கடி தைக்கப்பட்டுக்கொண்டிருந்த புதிய மீன் வலைகளும் கடற்கரையின் ஒரு ஓரத்தில் செப்பனிடப் பட்டுக் கொண்டிருந்த படகுகளும் கட்டு மரங்களும் கரைக்குச் சற்றுத் தள்ளி அடர்த்தியாக வளர்ந்திருந்த புன்னை மரங்களும் அதில் கூக்குரல் கொடுத்துக் கொண்டிருந்த பலவிதப் பறவையினங்களும் அவருடைய கண்களையும் கருத்தையும் கவர்ந்தன.

அவர் சென்ற நாளில் பெரும் சுறாவொன்று திசை தெரியாமல் தடுமாறிக் கரையில் அகப்பட்டுக்கொண்டு உயிரை விட்டுவிட்டது. அதனை அதிகாலையில் கண்ட பரத்தவச் சிறுவனொருவன் ஓடிப்போய் அவன் தந்தையிடம் தெரிவித்திருக்கிறான். அவர் தம்முடைய சுற்றத்தாருடன் வந்து சுறாவின் உடலை பகிர்ந்து அண்டை அயலாருக்கெல்லாம் கொடுக்க ஏற்பாடு செய்தார். அன்று முழுவதும் சுறா இறைச்சி நெருப்பில் வேகும் நாற்றத்தால் (நாற்றமென்றால் அக்காலத்தில் மணம் என்று பொருள்) அந்தக் கடற்கரையே மூழ்கிக் குளித்தது.

இத்தகு அருமையான நெய்தல் நிலக் காட்சிகளை ஒரு பார்வையாளராய் வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்த அம்மூவனாருக்கும் ஒரு துண்டு சுட்ட சுறா இறைச்சியும் சிறிதளவு தயிரும் மதிய உணவாகக் கிடைத்தன. தொண்டியின் அனுபவங்கள் அவருடைய உள்ளத்தில்

ஆழமாகப் பதிந்தன. பின்னாளில் நெய்தல் நிலத்தின் தலைவனுக்கு தலைவியின் நலனை உரைக்கப் புகுங்கால் தொண்டி அனுபவங்கள் அவருக்கு அருமையான காரணங்களாய் அமைந்துவிட்டன.

குருஉத் திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்

பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்

மோட்டுமணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி,

மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்

வளங்கெழு தொண்டி அன்ன இவள் நலனே....

"தலைவனே! அலைகள் மோதி மணல் மேட்டை ...க்கப் படகுகளை செப்பனிட்டுப் புதிய வலைகளை ...யும் மீனவர்கள், மணல் மேட்டுக்கரையில் ...கப்பட்ட சுறாமீனை மணம் கமழ சுற்றிலும் உள்ள ...லாருக்கும் பிரித்துத் தரும் வளமுடைய தொண்டி ...ப் போலத் தலைவியின் நலன் மிகச் சிறந்ததாகும்..." ...று பாடினார் அவர். இப்பாடல் அகநானூற்றுத் ...ப்பில் இடம்பெற்றுள்ளது

இப்பழம்பெரும் வாணிப நகரானது நமது கதை ...க்கும் காலத்திலும் நல்லதொரு புழக்கத்தில் இருந்த ...ண்டிநாட்டுத் துறைமுகப்பட்டினமாகவே விளங்கியது[92]. ...ண்டிய அரசியல் வன்மையின் வளர்பிறைத் தேய்பிறைக் ...லங்களைப்போல் அதன் முக்கியத்துவமும் வாணிப ...மும் மாறி மாறி வளர்ந்தும் தேய்ந்தும் வந்தன.

* * * * * * * *

மார்கழி மாதத்தின் கிருஷ்ணபட்சத்துத் தசமி இருள் ...ன் மீது கவிழ்ந்து ஒரு ஜாமமும் ஒரு நாழிகையும் ...ந்துவிட்ட அந்த முன்னிரவு நேரத்திலும் தொண்டி ...நகரின் தெருக்களில் போக்குவரத்து குறைவின்றிக்

...) இங்கு குறிப்பிடும் தொண்டி தற்போது இராமநாதபுரம் ...டத்தில் கடற்கரையருகில் அமைந்துள்ள நகரமாகும். சங்ககாலத் ...ர், மாநகரும் இதுவும் ஒன்றா என்பது ...ச்சிக்கிடமானதாகவே உள்ளது. கேரளத்தின் மேற்குக் கரையில் ...துறைமுகத்துக்குமேல் பரதப்புழா நதியின் முகத் துவாரத்தில்தான் ...டைய தொண்டி அமைந்திருந்தது என்பதாக ஒரு சாரார் ...சொல்லுகின்றனர்.

காணப்பட்டது. வீடுகள்தோறும் மாடங்களிலும் சாளரங்களிலும் பெரும் அகல் விளக்குகள் மார்கழிக் குளிருக்கு அஞ்சாமல் எரிந்து கொண்டிருந்தன. அவ்விளக்குகளின் பெரிதான அளவைப் பார்த்தாலே அவை இரவு முழுவதும் எரிவதற்காக ஏற்றப்பட்டுள்ள நந்தா விளக்குகள் என்பது தெளிவாகும்.

அக்காலத்தில் இது போன்ற நந்தா விளக்குகள் அல்லது அணையா விளக்குகளைக் கோயில்களிலும் மற்ற பொது இடங்களிலும் ஏற்றி வைப்பது வழக்கமாக இருந்தது. திருக்கோயில்களில் நந்தா விளக்கெரிப்பதற்காக அளிக்கப் பட்ட நிவந்தங்கள் ஏராளமாகக் காணக்கிடைக்கின்றன. பகல்-இரவு எனும் பாரபட்சமின்றி எந்நேரமும் நிலவும் வணிகப் போக்குவரத்தை மனதில் கொண்டே இப்பெருவிளக்குகள் தொண்டி நகரெங்கிலும் ஏற்றி வைக்கப் பட்டுள்ளன போலும்.

நகரப்பகுதியிலிருந்து கடற்கரை நோக்கிச் செல்லும் தொண்டியின் முக்கிய வீதியான ஸ்ரீவல்லபன் திருவீதியின் இரு புறங்களிலும் கூட்டம் ஜேஜே என்று நெட்டித் தள்ளியது. பிற்காலப் பாண்டியப் பேரரசர்களுள் ஒருவரான ஸ்ரீமாற ஸ்ரீவல்லபரின் பெயரைத் தாங்கி நின்ற அந்த வீதியில் சாவகம், கடாரம், மாப்பளம், சீனம் முதலான வெளிநாட்டு வணிகர்கள், பாரசீகத்துப் புரவி வியாபாரிகள் கலிங்கம், கோசலம், காஷ்மீரம், உஜ்ஜயினி முதலான வட தேசத்து வணிகர்கள் என்று பலதரப்பட்ட மனிதர்கள் காணப்பட்டார்கள். வல்லபன் திருவீதியின் வட எல்லையில் அமைந்திருந்த துறைமுகத்தில் மாலைநேரச் சுங்கப் பணிகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பத் தலைப்பட்ட எண்ணற்ற உள்ளூர் அரசாங்க ஊழியர்கள் வீதியில் திரண்டிருந்த கூட்டத்தால் பெருந்தொல்லைக்கு ஆளாக நேர்ந்தது.

திருவீதி முடிந்து துறைமுகப் பகுதிகள் துவங்குமிடத்தில் அமைந்திருந்த பேரங்காடியிலும் கூட்டத்திற்குக் குறைவில்லை பாய்மரங்கள் விரித்த பெருங்கலங்களில் பற்பல வெளிநாடுகளிலிருந்து வந்திறங்கியிருந்த அதியற்புதமான பொருட்கள் பல அங்கு குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. பொருட்கள் வந்திறங்கியவுடன் குறுகியகால இலாபம் சம்பாதித்துவிடும் நோக்கில் பல வணிகர்களும் அங்கேயே கடைவிரித்துத் தத்தம் பொருட்களை விற்றுவிடத் தலைப்பட்டார்கள்

கடற் பிரயாணத்தில் சற்றே சேதமடைந்து விட்ட பொருட்கள் அரை விலைக்கும் கால் விலைக்கும் விற்கப்பட்டன. அவற்றுக்கு உள்ளூர்வாசிகளிடம் அதிகக் கவர்ச்சியிருந்தது.

பேரங்காடிக்கும் வல்லபன் திருவீதிக்கும் இடைப்பட்ட சிறியதொரு மணல் மேட்டில் ஒரு கூத்தாடி செப்படி வித்தைகள் செய்து காண்பித்துக்கொண்டிருந்தான். மளமள வென்று ஒரு நீளமான தாம்புக்கயிற்றை அவன் வானை நோக்கி வீசி எறிவதையும் அதனைப் பிடித்துக் கொண்டு பன்னிரண்டு வயதுச் சிறுவனொருவன் சரசரவென்று மேலேறி இருட்டில் காணாமற் போவதையும் பெருங்கூட்டமொன்று வாய் பிளந்தபடி பார்த்துக்கொண்டிருந்தது. கூத்தாடியின் மனைவி போன்று காணப்பட்ட பெண்மணி பார்வையாளர்களைச் சுற்றிச்சுற்றி வந்து சிறியதொரு பனையோலைக்குடலையில் கழஞ்சுகளை வசூல் செய்து கொண்டிருந்தாள்.

மணல் மேட்டைத்தாண்டி அமைந்திருந்த பகுதியில் ஏழுமக்கோள் ஆருடக்காரர்களும், நாடிக் கணியர்களும், நிமித்தகர்களும் ஜோஸ்யர்களும் வரிசையாக அமர்ந்து வாடிக்கையாளர்களின் ஷேம இலாபங்களை கோள்களின் நிலைகளைக் கொண்டு அலசி ஆராய்ந்து விரித்துரைத்துக் கொண்டிருந்தார்கள். பல்வேறு நாட்களின் தசா புத்தி சணங்கள், கோள்நிலைகள், பாதசாரங்கள் முதலான விவரங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு இன்னாருடைய ஜென்ம நட்சத்திரத்துக்கு விதை விதைக்க ஏற்ற நாள் எது, அறுவடைக்கு ஏற்ற நாள் எது, விவாஹத்திற்கு ஏற்ற நாள் புது தொழில் துவங்குவதற்கு ஏற்ற நாள் எது இவற்றையெல்லாம் அவர்கள் விரிவாகக் கூறி அதற்குரிய பலனை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்கள்.

பல்லி சொல்லுக்குப் பலனுரைக்கும் கௌளி சாத்திர வல்லுனர்கள் ஒரே ஒரு மாடையை மட்டும் வாங்கிக் கொண்டு பலன்களை சட்டென்று கூறினார்கள் மேல் விவரங்கள் கேட்பவர்களை அவர்கள் ஜோஸ்யர்களிடமும் ஆருடக்காரர்களிடமும் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்

பேரங்காடிக்குச் சிறிது மேற்கே அமைந்திருந்த வீதிகளில் வரிசையாகப் பற்பல சத்திரங்களும் விடுதிகளும் அமைந்திருந்தன. அவற்றுள் ஒரு சில விடுதிகள் இலவச உணவு போஜன சாலைகள் போலும். ஏனெனில் காவியுடை

தரித்த பஞ்சபட்சப் பரமானந்தப் பரதேசிகள் பலரும் அங்கே கணிசமான அளவில் தென்பட்டார்கள். வேறு சில விடுதிகளோ நல்ல அமைப்புடன் பெருந்தனத்து வணிகர்கள் தங்கும் வாணிப விடுதிகள்போல் தெரிந்தன. அவற்றுள் நுழைய எல்லோருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. ஏறக்குறைய எல்லா விடுதிகளிலுமே மனிதர்கள் போவதும் வருவதுமாக இருந்ததால் அந்தப் பகுதியே ஒரு சந்தைக் கடைபோல் காட்சியளித்து.

விடுதிகளுள் சற்று வசதிகள் நிறைந்ததாகத் தென்பட்ட மாறனாதிச்சன் சத்திரத்தின் வாயிலில் நாகைப் புறம்படியில் இரண்டு நாட்களுக்கு முன் நாம் விட்டுவிட்டு வந்த நண்பர்களிருவரும் மிகுந்த அலுப்புடனும் கலைந்த கேசத்துடனும் சொருகும் விழிகளுடனும் காட்சியளித்தார்கள். அவர்களின் கடிவாளத்திற்குக் கட்டுப்பட்டு அவர்களினருகே நின்றிருந்த அந்த இரண்டு அரேபியப் புரவிகளும்கூட வாயெல்லாம் நுரைதள்ளி மிகுந்த அயற்சியுடன் நிலைகொள்ளாமல் நின்றிருந்தன.

சத்திரத்தின் வாயிலில் நின்றுகொண்டிருந்த மத்தியஸ்தனொருவன் "வாருங்கள்! வாருங்கள்! வழக்கமான அறைகள் எல்லாம் தீர்ந்துவிட்டன. வணிகர் தங்கும் அறைகள் மட்டுமே உள்ளன. கட்டணம் இரண்டு பொற் கழஞ்சுகள். இரண்டே இரண்டு பொற்கழஞ்சுகள்! தங்க விரும்புவோர் வரலாம். வாருங்கள்! வாருங்கள்! " என்று தொண்டை கிழியக் கூவிக்கொண்டிருந்தான்.

"ஓரிரவு தங்குவதற்கு இரண்டு பொற் கழஞ்சுகளா? பகல் கொள்ளையாக அல்லவா இருக்கிறது?" என்று சத்திரத்தைக் கடக்கும் உள்ளூர்வாசிகள் தன்னை மனதாரச் சபிப்பதை அந்த மனிதன் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

நண்பர்களிருவரும் அவனை நெருங்கினார்கள்.

"ஐயா! வரவேண்டும்… வரவேண்டும்…"

"இரண்டு நாட்களுக்குத் தங்கிக்கொள்கிறோம். இந்தாருங்கள் இரு கழஞ்சுகள்."

"அடேய் செண்பகநாடா! எங்கே போய்த் தொலைந்தாய்? களைத்திருக்கும் இந்த இரு புரவிகளுக்கும் உடனே நீரும் கொள்ளும் காட்டு. ஐயா! நீங்கள் வாருங்கள்"

"சாப்பாடு ஏதாவது உள்ளதா?"

"ஆஹா! இரவுச் சோறும் மீன் குழம்பும் ஆமைக் கறியும்[93] தயாராக உள்ளன. நாற்பது மாடைகள்."

"என்ன…?? நாற்பது மாடைகளா?" - பரமன் மழபாடியாரால் நடந்துகொண்டிருக்கும் அக்கிரமத்தைப் பொறுக்க முடியவில்லை.

"அதை ஏன் கேட்கிறீர்கள்? தொண்டியில் பொருட்களின் விலை அத்தனை தூரத்திற்குப் பாழாகிக் கிடக்கிறது…" என்று ஒரு பெரிய இராமாயணமே படிக்க ஆயத்தமானவனை இளையவர் மடக்கி "இடக்கட்டும் ஸ்நானத்திற்கு வெந்நீர் இரண்டு திவலைகளில் அறைக்கு உடனடியாக அனுப்பி வையுங்கள்" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு அகன்றார்.

மத்தியஸ்தனை ஒரு அனல் பார்வை பார்த்துவிட்டுப் பரமன் மழபாடியாரும் இளையவரைத் பின்தொடர்ந்தார்.

* * * * * * * *

ஒரு கட்டு வெற்றிலையை வாயில் அதக்கிக்கொண்டு வாயிலுக்கு விரைந்த விடுதியின் மத்தியஸ்தன், மீண்டும் தன்னுடைய பழைய பணியில் ஈடுபடத் துவங்கினான் "வாருங்கள்! வாருங்கள்! இன்னும் இரண்டே இரண்டு அறைகள்தான் மீதமுள்ளன…"

நிகழ்வுகள் எதுவுமின்றி ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று நாழிகைகள் கழிந்தபின். ஒரு கருத்த பாண்டி நாட்டு மனிதன் அவனை நெருங்கினான். அவனைக் கண்டவுடன் மத்தியஸ்தனின் வாயெல்லாம் பல்.

"என்ன வேலா? சாவகத்திலிருந்து புதிதாகச் சரக்கு ஏதாவது வந்திருக்கிறதா? ஒரு பிழி நமது பக்கம் தள்ளினால் நிறைகிறது…" என்று பல்லிளித்தவனை வேலன் என்று அழைக்கப்பட்ட அந்த வாட்டசாட்டமான மனிதன் ஒரு ஓரமாகத் தள்ளிக்கொண்டு சென்றான்.

"உஸ்… சப்தம் செய்யாதே! இது வேறு விவகாரம்…."

---

93 அக்காலத்தில் ஆமைக் கறியுண்பது கடற்கரை நகரங்களில் பிரபலமாக இருந்தது.

"வாருங்கள்! வாருங்கள்! (பின் மெல்லிய குரலில்) என்ன விவகாரம்?"

அந்தக் கறுப்பு மனிதன் குனிந்து மத்தியஸ்தனின் காதுகளில் ஏதோ புகன்றான்.

"இரண்டே கழஞ்சுகள்… இரண்டே கழஞ்சுகள்… வாருங்கள்! (மெதுவாக) சரியான தகவலுக்கு என்ன பரிசு?"

மீண்டும் மத்யஸ்தனின் காதுகளில் ஏதோ இரகசியம் ஓதப்பட்டது.

"என்ன, நாற்பது கழஞ்சுகளா?"

"உஸ்… சப்தம் செய்யாதே என்று சொன்னேனா இல்லையா? மெதுவாகப் பேசு! நான் கேட்கும் தகவல்…"

"அப்பனே! நான் இன்றைக்கு நரி முகத்தில் முழித்திருக்கிறேன் போலும். விடுதியில் வியாபாரம் பிரமாதம். வந்த இலாபம் போதாதென்று இப்போது சுளையாக நாற்பது பொற்கழஞ்சுகள் வேறு கிடைக்கப் போகிறது."

"என்ன உளறுகிறாய்?"

"நீ தேடிக்கொண்டிருக்கும் இரு மனிதர்களும் தற்சமயம் இருக்குமிடம் எனக்குத் தெரியும்" என்றபடி கண்களைச் சிமிட்டினான் அவன்.

17. ஆபத்து! ஆபத்து!



பின்னிரவு மெல்லக் கழிந்து கொண்டிருந்த விடியல் நேரத்தில் மாறனாதிச்சன் சத்திரத்தின் பின்வாயிலில் மெல்லிய அரவம் கேட்டது. நன்கு வளர்ந்திருந்த நான்கு உருவங்கள் வாயிற் கதவம் வழியாக உள்ளே நுழைந்தன. அவர்கள் நுழைவதற்கு ஏதுவாகச் சத்திரத்தித்தின் பின்புறக் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது போலும். உள்ளே நுழைந்தவர்களை மத்தியஸ்தன் வாயின் மேல் விரலை வைத்து "சப்தம் செய்ய வேண்டாம்!" என்று சைகை காட்டிவிட்டு மாடிப்படிகளின் மீது ஏறத் துவங்கினான். அவனைப் பின்தொடர்ந்த நால்வரும்

ஏறும்போது அந்த மரப்படிகளில் மெல்லிய சப்தம் எழத்தான் செய்தது.

மேல் தளத்தை அடைந்ததும் "எங்கே கழஞ்சுகள்?" என்று வினவினான் மத்தியஸ்தன்.

"எந்த அறை?"

"முதலில் கழஞ்சுகள். அப்புறம்தான் மற்ற தகவல்களெல்லாம்!"

"கீழே சத்திரத்தின் முன் வாயிலுக்கு வெளியே வேலன் இருளில் பதுங்கியிருக்கிறான். அவனிடம் சென்று வாங்கிக்கொள்!"

"எங்கே காட்டு?"

சாளரத்தின் வழியாக அவர்கள் அனைவரும் எட்டிப் பார்த்தார்கள்.

"அதோ! அந்த மரத்திற்கருகில்தான் வேலன் நின்று கொண்டிருக்கிறான். அவனுடன் வேறு சில பெரிய மனிதர்களும் இருக்கிறார்கள். பார்த்து நடந்துகொள்."

"கழஞ்சுகள் கிடைத்துவிடுமல்லவா?"

"ஏன் இத்தனை அவநம்பிக்கை? நேராகச் சென்று கழஞ்சுகளை வாங்கிக்கொள். நாங்கள் வந்த வேலையைக் கவனிக்கிறோம். எந்த அறை?"

"இங்கிருந்து நேராகச் சென்று கிழக்கே திரும்பு. அங்கே வணிகர்கள் தங்கும் பெரியதொரு அறை தென்படும். அங்குதான் தங்கியிருக்கிறார்கள்."

"அறைக்குத் தாழ்ப்பாள் உண்டா?"

"உண்டு. ஆனால் நான் தற்சமயம் அதனைத் திறந்துதான் வைத்திருக்கிறேன்."

"நல்லது."

"நீங்கள் வருவதற்குள் நான் கீழே சென்று…"

அந்த வாக்கியம் நிறைவு பெறும்வரை காத்திருக்கப் பொறுமையில்லாமல் அவர்கள் விறுவிறுவென்று முன்னேறினார்கள்.

"நீயும் சங்கரனும் வாயிலின் இரு பக்கங்களிலும் நின்று கொள்ளுங்கள். நானும் இவனும் உள்ளே நுழைகிறோம்" என்று அந்தக் குழுவின் தலைவன் மெல்லிய குரலில் கட்டளைகள் பிறப்பிப்பது மத்தியஸ்தனின் காதுகளில் கேட்டது. அவன் ஓரிரு கணங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான். தவறு செய்து விட்டோமோ? என்றுகூடத் தோன்றியது. சமாளித்துக் கொண்டு வாயிலை நோக்கி நடக்கத் தலைப்பட்டான்.

* * * * * * * *

"வேலா! வேலா! இந்த இருட்டிலா நின்று கொண்டிருக்கிறாய்?"

"ஆமாம். அருகில் வா!"

"கழஞ்சுப் பை தயாராக உள்ளதா? உன் ஆட்களுக்கு அறையை அடையாளம் காட்டியாயிற்று"

"அருகில் வா!"

தயங்கித் தயங்கி அந்த மரத்தின் இருளை அண்டியவனின் கழுத்தை ஒரு நீண்ட அங்கவஸ்திரம் பளிச்சென்று சுற்றிக்கொண்டது.

"அடேய்! அவர்கள் இருவரையும் எங்களின் ஆட்கள் பிடித்துக்கொண்டு வெளியில் வரும்வரை சப்தம் செய்யாமல் இங்கேயேதான் இருக்க வேண்டும். ஆட்கள் நாங்கள் தேடி வந்தவர்கள்தான் என்று உறுதியான பிறகுதான் கழஞ்சுகளும் மாடைகளும். அதுவரை சப்தம் செய்யாமல் இரு இல்லையேல் குரல்வளையை நெரித்து விடுவேன்!" அங்கவஸ்திரம் இன்னும் இறுக்கப்பட்டது இந்தக் குரலுக்குரியவன் வேலனே அல்ல! ஆனால்.. ஆனால்... இந்தக் குரலை நாம் வேறெங்கோ கேட்டிருக்கிறோமல்லவா?

தாம் செய்தது சிறு தவறல்ல, மாபெரும் பிழை என்கிற எண்ணம் மத்தியஸ்தனின் மனதில் வலுப்பட்டது.

"மா..மாடைகளா? நா நாற்பது கழஞ்சுகள் என்றல்லவா?"

"உஸ்.... சப்தம் செய்யாமல் பொறுத்திரு."

வினாடிகள் ஒவ்வொன்றும் ஒரு யுகமாய்க் கழிந்தன சிறிது நேரத்தில்...

"அதோ! சாளரத்தில் ஆள் நடமாட்டம் தெரிகிறது.."

"கீழே இறங்கியதும் முன் வாயிலின் வழியாகத்தானே எடுத்துக் கொண்டு வரச் சொல்லியிருக்கிறாய்?"

"எடுத்துக்கொண்டா? அடப்பாவிகளா.. அவர்களைக் கொலையே செய்து விட்டீ..."

"உஸ்.. கொலையில்லை, வெறும் மயக்கம்தான். வீணாக ...ளாதே. வேலா! வாயிற்பக்கமாக அவர்கள் வெளியே ...ந்ததும் நேராக இங்கே அழைத்துக்கொண்டு வந்துவிடு ...ரவிகள் தயாராக இருக்கின்றன."

சாளரத்தில் நடமாட்டம் தெரிந்து பல வினாடிகள் ...ந்த பின்னும் வாயிலில் எவரும் தென்படவில்லை.

"வேலா! தவறிப்போய் அவர்கள் சத்திரத்தின் ...புறத்திற்குச் சென்று விட்டார்களா என்ன?"

"இல்லையே? படித்துப் படித்துச் சொல்லியிருந்தேனே ...பக்கம் புரவிகளைக் கட்டி வைப்பதற்கு வழியில்லை ...து ஆட்களுக்குத் தெரியுமே?"

"இங்கே நின்றுகொண்டு யோசிப்பதைவிட மேலே ...ன்று பார்த்துவிட்டு வா!"

"நா...நானா?"

"ஆமாம். பின் இவனையா அனுப்புவது? உடனே செல்! ...தம் வேண்டாம்."

"...எந்த அறை?"

"...ரிகர்கள் தங்கும் கிழக்குப் பகுதி அறை மேல் ... அடைந்ததும்."

"...தெரியும் செல்கிறேன்..."

வேலன் தயங்கித் தயங்கி சத்திரத்திற்குள் நுழைந்தான் ...ம் செய்யாமல் படிகளில் ஏறி மேல்கட்டை அடைந்து ...றம் வழியாக வெளியில் நின்று கொண்டிருப்பவர்களை ...ன் இருளில் ஒன்றும் தெரியவில்லை

...க்குப் பகுதி அறையின் கதவு திறந்தேயிருந்தது ...த்துக் கொண்டிருந்த கடற்காற்றில் அது அப்புறமும் ...மும் ஆடியது. அறையில் தெரிந்த மெல்லிய ...ச்சத்தில் அவனுடைய நான்கு ஆட்களும்

அலங்கோலமாக வீழ்ந்து கிடந்தார்கள்! “ஐயோ!” என்று வாயில் புறப்பட்டுவிட்ட மெல்லிய அலறலை மிகுந்த சிரமத்துடன்தான் அவனால் அடக்கிக்கொள்ள முடிந்தது.

மளமளவென்று கீழே இறங்கி மரத்தடியை அடைந்து “மோசம் போனோம் ஐயா!” என்று அலறினான் வேலன்.

மத்தியஸ்தனின் கழுத்திலிருந்த அங்கவஸ்திரத்தின் பிடி மேலும் இறுகிற்று. மயக்கம் போட்டுக் கீழே விழுந்தான் அவன்.

* * * * * * * *

சிறிது நேரத்திற்கு முன் நண்பர்கள் தங்கியிருந்த அறைக்குள் நுழைய முற்பட்ட வேலனின் ஆட்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கவனிப்போம்.

அடியாட்கள் இருவர் அறையின் வாயிலை நெருங்கியதும் பக்கத்திற்கொருவராகக் காவலுக்கு நின்று கொண்டார்கள். மற்ற இருவரும் திறந்து வைக்கப்பட்டிருந்த அறைக்குள் மெல்ல நுழைந்து கதவைத் தாழிட்டார்கள்.

உள்ளே இரு உருவங்கள் உடல் முழுவதும் போர்வையைப் போர்த்திக்கொண்டு கும்பகர்ணர்களைப் போல் உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. அப்படியே வாயைக் கட்டிப்பிடித்து அமுக்கி குண்டுக்கட்டாக கட்டித் தூக்கிவிடலாம் என்று நினைத்த கணத்தில்...

ஏதோ ஒரு மின்னல் கழுத்துக்கருகில் வெட்டியதுபோல் தோன்றியது. அடுத்த மின்னல் வலது நெற்றிப்பொட்டில் அவ்வளவுதான் தெரியும்! சுருண்டு விட்டார்கள்.

வெளியில் பொறுமையுடன் காத்துக்கொண்டிருந்த மற்ற இருவரும் ஒரு கட்டத்தில் பொறுமையிழந்து [illegible] காலத்தில் உள்ளே நுழைய.. அவர்களுக்கும் மின்னல் வைத்தியம்தான்!

நான்கு பெருத்த உருவங்கள் வரிசையாகச் சுருண்டு விழுந்ததால் ஏற்பட்ட நில அதிர்ச்சி ஆழ்ந்த உறக்கத்திலிருந்த இரு கும்பகருணர்களையும் ஒருவழியாக எழுப்பி விட்டது. என்னதான் நடந்து கொண்டிருக்கிறது?

“நண்பர்களே! ஆபத்து! உடனடியாக உங்கள் உடைமைகளை எடுத்துக்கொண்டு புறப்படுங்கள்!” என்று

[illegible] குரல். அந்தக் குரலுக்குரியவரின் உருவம் சரிவரத் தெரியாவிட்டாலும் அதனை ஊகிப்பது கடினமானதாக இல்லை. நாகையில் இரண்டு நாட்களுக்கு முன் அவர்கள் சந்தித்த பிக்ஷு ஆனந்த தேரர்தான் அவர்!

“நீங்களா? இந்த நேரத்திலா? இவர்களெல்லாம் யார்?”

“கேள்விகளெல்லாம் அப்புறம். சீக்கிரம் கிளம்புங்கள்! அவசரம்...”

அடுத்த சில கணங்களில் மூட்டை முடிச்சுக்களுடன் [illegible] மூவரும் மெல்ல சத்திரத்தின் பின்வாயில் வழியாக சந்தடி செய்யாமல் நழுவினார்கள்.

* * * * * * * *

“எங்களைப் பிடிக்க வந்தவர்கள் யார்? அவர்களைத் [illegible]நக்குத் தெரியுமா?”

“அவர்கள் நால்வரும் கைக்கூலிகள். அவர்களை ஏவி[illegible]டவர்கள் வேறு மனிதர்கள்.”

“வேறு மனிதர்களென்றால்?”

“வேறு யார்? ஒன்று அமரபுஜங்கனின் கூட்டத்தாராய் [illegible] வேண்டும். அல்லது நமக்கெதிராகத் திரண்டிருக்கும் [illegible]நில் நாட்டு சக்திகளின் அடியாட்களாய் இருக்க வேண்டும்.”

“எத்தனையோ முன்னெச்சரிக்கையுடன் நாகையிலிருந்து [illegible]பட்டும் நம்மை அடையாளம் கண்டு கொண்டு [illegible]ார்களே?”

“அது சற்று கவலைக்குரியதுதான். நண்பர்களே! நாம் [illegible]டுக் கொண்டிருக்கும் பூமி பன்னெடுங் [illegible]கவே பாண்டியர்களின் மண். இங்கிருக்கும் [illegible] கல்லும் மண்துகளும் பாண்டியர்களுக்கு [illegible]மே விசுவாசமாயிருக்கும். அதனை நன்றாக நினைவில் [illegible]ளுங்கள். நாம் மூவரும் ஒருசேரப் பயணித்தால் [illegible]ப் பிடிப்பது மிகச்சுலபம் என்பதால்தான் தனியாகப் [illegible]த்தேன். அப்படியிருந்தும் நீங்கள் அகப்பட்டுக் [illegible]ண்டீர்கள். நான் நினைத்தவாறுதான் சம்பவங்கள் [illegible]ள்ளன...”

"என்ன? எங்களுக்கு ஆபத்து வரும் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொண்டா மாறனாதிச்சன் சத்திரத்தில் தங்கச் சொன்னீர்கள்?" என்று வினவினார் கம்பன் மணியனார்.

"நீங்கள் தொண்டியில் எங்கு தங்கியிருந்தாலும் கண்டுபிடித்திருப்பார்கள். அதனால்தான் எனக்குச் சிறிதளவு பழக்கமான இடத்தில் தங்கச் சொன்னேன்."

"எப்படியோ, மிகச் சரியான நேரத்திற்கு வந்து எங்களைக் காப்பாற்றி விட்டீர்கள். மிக்க நன்றி."

"இப்படி ஒவ்வொரு முறையும் என்னால் உங்களைக் காப்பாற்ற முடியாமல் போகலாம். மேலும் எனக்கு வேறு சில பணிகளும் இடப்பட்டிருக்கின்றன. அவற்றையும் நான் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதனால் நீங்கள் இருவரும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது."

"அடுத்ததாக...?"

"இன்றிலிருந்து நான்காம் நாள் நாம் கொற்கைத் துறைமுகத்தில் சந்திக்கிறோம். அங்கே சங்கிராம விஹாரை என்று கேளுங்கள். யார் வேண்டுமானாலும் வழி காட்டுவார்கள். விஹாரையில் உங்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. வேண்டுமானால் என்னுடைய பெயரைக் கூறுங்கள். மற்றபடி இங்கிருந்து கொற்கைத் துறைமுகத்தை அடையும்வரை ஒருவருக்கொருவர் காவலாக நின்று கொள்ளுங்கள். சத்திரம் சாவடிகளில் தங்காமல் வீட்டுத் திண்ணைகளில் படுத்துக் கொள்ளுங்கள். சந்திப்போம்!"

மின்னலைப்போல் நுழைந்து மின்னலைப் போலவே மறைந்தும் போய்விட்ட தேரரை இருவரும் திகைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

18. பார்க்கவ க்ஷேத்திரம்



கதிரவன் தனது கிரணங்களைக் கிழக்கு வானில் படரவிட்டுக் கொண்டிருந்த அந்த இளங்காலைப் பொழுதில் அனந்தபுரத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்த காந்தளூர் மகாதேவர் திருக்கோயிலின் முன்பில் அமைந்திருந்த சிறு மைதானத்தில் பன்னிரண்டு அல்லது பதினான்கு வயது நிரம்பிய சிறுவர்கள் வரிசையாக அணி வகுத்து நின்றார்கள். இருபத்தியொரு பேர் கொண்ட வரிசைகளாக மொத்தம் மூன்று வரிசைகள் அமைக்கப் பட்டிருந்தன.

சிறுவர்களின் முன்புறம் இரண்டு இளைஞர்கள் நின்று அவர்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்தார்கள் தாடி மீசையும் விரிசடையுமாகக் காணப்பட்ட அவர்களின் நெற்றியில் மிகப்பெரிய சந்தனப் பொட்டு துலங்கிற்று கண்களில் ஒரு பரபரப்பும் கூர்மையும் தென்பட்டன. அவர்களில் ஒருவன் நீண்ட வாளையும் மற்றவன் பெரியதொரு கேடயத்தையும் ஏந்திக்கொண்டிருந்தான் முன்குடுமி வைத்திருந்த அந்தச் சிறுவர்களின் பார்வை அடிக்கடி மகாதேவர் அம்பலம் என்றழைக்கப்படும் திருக்கோயில் வளாகத்தில் படிந்து மீண்டதிலிருந்து அங்கிருந்து வரப்போகும் எவரையோ அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள் என்பது புலப்பட்டது

அந்தப் பகுதியில் படிந்திருந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு "டாங்!" என்ற ஒன்றை மணியோசை மகாதேவர் அம்பலத்திலிருந்து எழுந்தது. அந்த மணியோசையைக் கேட்டதும் இரு இளைஞர்களும் பரபரப்பாகி விட்டார்கள்.

"சிறுவர்களே! நேர்ப்பார்வையுடன் விறைப்பாக நில்லுங்கள். ஆச்சாரியார் வரப் போகிறார். அடேய்! மூன்றாம் வரிசையில் பின்னால் நிற்பவர்களுக்கு எத்தனை முறை சொல்வது? நேராக நிற்கப் போகிறீர்களா இல்லையா?"

இளைஞர்களின் பாபரப்பு சிறுவர்களின் மனத்தில் [illegible] பயத்தை விளைவித்தது. அவர்களின் கண்கள் [illegible]த்தைக் தேக்கி நின்றன. சிறிது நேரத்தில் திருக்கோயில்

கோபுர வாயிலிலிருந்து நான்கு பெரியவர்கள் வெளியில் வந்தார்கள். அதில் ஒருவர் மட்டும் மைதானத்தை நோக்கி நடைபோட, மற்றவர்கள் தெற்கே செல்லும் வீதியில் திரும்பிவிட்டார்கள்.

மைதானத்தை நோக்கி நடந்து வந்த முதியவர் வயதாகிவிட்டாலும் திடகாத்திரமான மேனியுடன் விளங்கினார். அவரது முன்நெற்றியில் உறுதியாக முடியப் பட்டிருந்த முன்குடுமியானது அவரது அங்க அசைவுகளுக்கு ஆட்படாமல் நின்றது. அவருடைய நெற்றியையும் உடலின் பல பாகங்களையும் மகாதேவர் கோயிலின் சந்தனமும் திருநீறும் அலங்கரித்தன. வலது கரத்தில் ஒரு பெரிய கைத்தடியை ஏந்தி கம்பீரமாக அவர் நடந்து வருவதைப் பார்த்தால் சிறுவர்களைப்போலவே நமக்கும் மெல்லிய மரியாதையும் பயமும் ஏற்படுகின்றன. 'ஆச்சாரியார்' என்கிற விகுதிப் பெயரால் மரியாதையுடன் குறிப்பிடப்பட்ட அந்த முதியவரின் பார்வை அங்குமிங்கும் போகாமல் நேராக அந்த மைதானத்தின் மீதே படிந்திருந்தன. அவருடைய கால்களும் அந்தப் பகுதியை நோக்கியே ஒருமுகமாக நடைபோட்டன. வெகு விரைவில் சிறுவர்கள் அணிவகுத்து நின்ற பகுதியை அடைந்து விட்டார் அந்தப் பெரியவர்.

அவர் வந்து நின்றதும் அந்தச் சிறுவர்கள் அனைவரும் சொல்லி வைத்ததைப்போல் கைகூப்பித் தலைவணங்கி குருவணக்கம் செய்தார்கள்.

ஆச்சாரியார் சற்று நிதானமாக நின்றிருந்தவர்கள் அனைவரையும் நோக்கினார். அவருடைய கண்கள் சிறுவர்களின் கண்களை நேருக்கு நேராகச் சந்தித்தன. ஒவ்வொருவரின் மனத்தையும் ஊடுருவி அதிலுள்ள இரகசியங்களனைத்தையும் கிரகித்துக் கொண்டு விடுவது போல் அமைந்திருந்தது அவருடைய பார்வை. அந்தப் பார்வையின் தீட்சிண்யத்தைத் தாங்க முடியாமல் சில சிறுவர்கள் தலையைக் குனிந்துகொண்டார்கள். அப்படிக் குனிபவர்களைப் பார்த்து மெல்லிய வெற்றி முறுவலொன்று ஆச்சாரியாரின் முகத்தில் முகிழ்த்தது.

அவர் நேராக நின்று கொண்டார். கைத்தடியை கீழே வைத்துவிட்டுக் கரம் குவித்தார். கண்மூடினார். சில கணங்களில் ஆதவன் மேகங்களை விலக்கிக்கொண்டு கீழ்த்திசையில் மகாதேவர் அம்பலத்திற்குப் பின்னால் காட்சியளிக்க, அந்தக் கிரணங்கள் ஆச்சாரியாரின்

தலைக்குப் பின்னால் விரிந்தன. அந்தக் கணத்திற்காகக் காத்திருந்தவர் போலும் ஆச்சாரியார் கம்பீரமான குரலில் [illegible]க்கண்ட பொருளில் அமைந்த வடமொழி ஸ்லோகத்தை முழங்கினார்.

"மூவுலகிற்கும் ஒளிகொடுக்கும் ஆதித்தனாகிய சூரிய தேவனைப் பிரார்த்தனை செய்கிறேன்! ஏழு புரவிகள் பூட்டிய இரதத்தில் ஊர்ந்து கருணை மிகக் கொண்டு இந்தப் பூவுலகின் உயிர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கும் சூரிய தேவன், என்னுடைய பிரார்த்தனையை இரக்கம் கொண்டு ஏற்கட்டும். அவனுடைய ஒளி பொருந்திய தேஜஸ் என்னுடைய உடலில் இறங்கட்டும். இன்றைய பொழுது எனக்கும் என் சுற்றத்தாருக்கும் என்னை நம்பியிருக்கும் பிற உயிர்களுக்கும் நன்றாக அமைய வேண்டுமென்று சூரிய தேவனைப் பிரார்த்தனை செய்து கொள்கிறேன். ஓம்! ஓம்! ஓம்!"

இதயத்தின் அடியாழத்திலிருந்து எழுந்த அவரது [illegible] மிகுந்த கட்டைக் குரல் அந்தச் சிறுவர்களைக் கட்டிப் போட்டது. எதுவும் செய்யத் தோன்றாமல் கைகூப்பியபடியே நின்றார்கள் அவர்கள்.

"சிறுவர்களே! இன்று நீங்கள் பழம் பெருமை மிக்க கல்வி கேந்திரமாகிய காந்தளூர்ச்சாலையில் வித்யாரம்பம் செய்வதற்காகக் கூடியிருக்கிறீர்கள். மலைநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட தேஜஸ்விகளாகிய உங்களின் முகத்தில் பொலியும் அறிவுக்களையையும் கற்றுக் கொள்ளும் ஆர்வம் மிகுந்த கண்களையும் கண்டு பூரித்துப் போகிறேன்.

நான் காந்தளூர்ச்சாலையின் மூத்த ஆச்சாரியர்களுள் ஒருவன். என் பெயர் திருநாராயண பட்டதிரி. இன்றிலிருந்து மூன்று மண்டல காலங்களுக்கு[94] நான் உங்களுக்கு ஆச்சாரியனாக இருந்து எனக்குத் தெரிந்த வித்தைகளைக் கற்றுக் கொடுப்பேன். எப்போதும் புதிதாகச் சாலையில் சேரும் மாணவர்களின் முதல் மூன்று மண்டலங்களை நான் எடுத்துக்கொண்டு விடுகிறேன். நல்ல தெளிவான உறுதியான [illegible]யான கருத்துக்களை முளையிலேயே விளைவித்து விடுவதுதான் என் நோக்கம்.

---

94. ஒரு மண்டலம் (திரிபக்ஷம்) என்பது 45 நாட்கள் கொண்டது.

மாணவர்களே! உங்களிடம் நான் நிறையக் கேள்விகள் கேட்பேன். கேள்விகள் ஆரோக்கியமானவை. தெளிவற்ற குழப்பத்திலிருந்து தெளிந்த ஞானத்திற்கு அவை நம்மை இட்டுச் செல்கின்றன. நீங்களும் என்னை ஒரு வரம்புக் குட்பட்டுக் கேள்வி கேட்கலாம். எனக்குத் தெரிந்தவரையில் நானும் அதற்கு பதிலளிக்க முயல்வேன். இப்போது முதல் கேள்வி. இங்கு நீங்களெல்லோரும் எதற்காகக் கூடியிருக்கிறீர்கள்?"

"புகழ்மிக்க காந்தளூர்ச்சாலையில் பயின்று சட்டன் ஆவதற்கு!" - ஒரு சிறுவன் உற்சாகமாகப் பதில் சொன்னான்.

"ஆஹா! மிகச்சரி. இப்போது நீ சொன்ன பதிலிலிருந்து பல கேள்விகள் இயல்பாக எழுகின்றன. இந்த சாலை என்பது என்ன? சட்டன் ஆவது என்பது என்ன? எதற்காக நீ சட்டன் ஆக வேண்டும்? சாலை எதற்காகச் சட்டர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்? இப்படிப் பல கேள்விகள். இவற்றை நீங்கள் முழுமையாகப் புரிந்து கொண்டால்தான் நாளை மனமுவந்து ஐம்புலன்களையும் பயிற்சியில் செலுத்த முடியும். செய்து கொண்டிருக்கும் வித்யையின் உயரிய நோக்கத்தை சரியான முறையில் புரிந்து கொள்வதுதான் நல்ல சட்டன் ஆவதற்கு முதற்படி"

அவர் மெல்ல அந்தக் கூட்டத்தைச் சுற்றி நடக்கத் துவங்கினார். பேசியபடியே விறைப்பாக நின்ற ஒவ்வொருவரையும் கண்களால் எடை போட்டார். மிகக் கவனமானவன், கவனம் குறைவானவன், கவனம் முழுவதுமாகச் சிதறி வேறெங்கோ பராக்கு பார்த்துக் கொண்டிருப்பவன் என்று அத்தனை பேரையும் மனதில் குறித்துக் கொண்டார். ஒரே வாரத்தில் இந்த அறுபத்து மூன்று பேரின் பெயர்களையும் நினைவில் வைத்துக்கொள்ளும் ஆற்றல் அவருக்கு இருந்தது.

"இந்தக் கேள்விகளுக்கு நானே பதிலளிக்கிறேன். மிகக் கவனமாகக் கேளுங்கள். கவனம் சிதறினால் முதல் நாளே சாலையிலிருந்து வெளியேற்றப்படுவீர்கள்!"

சிறுவர்கள் திடுக்கிட்டுப்போய் பட்டதிரியின் வார்த்தைகளில் முழுமையாகக் கவனம் செலுத்த முற்பட்டார்கள்.

"சிறுவர்களே! நமது மலைநாடான புண்ணிய பூமியை பரசுராம க்ஷேத்திரம் அல்லது பார்க்கவ க்ஷேத்திரம் என்று

ஒரு காரணத்தோடு அழைக்கிறோம். பரமாத்மாவின் அம்சமாக ஜமதக்னி முனிவரின் புத்திரனாக அவதரித்தவரும் க்ஷத்திரியர்களின் இன்னல்களிலிருந்து இந்த உலகத்தைக் காப்பதற்காக இருபத்தியொரு முறை போர் தொடுத்தவரும் அப்படிப் போர்தொடுத்து வீழ்த்தப்பட்ட இராஜாக்களின் உதிரம் நிரம்பிய குட்டையில் கம்பீரமாக நின்று தமது பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்தவருமான ஸ்ரீ பரசுராமன் தன்னுடைய வீரம் மிகுந்த கோடாரியினால் ஸ்தாபிதம் செய்த பிரம்ம க்ஷேத்திரம் இந்த பூமி. வடக்கிலிருந்து க்ஷத்திரியர்களின் இன்னல்கள் தாங்க முடியாமல் தெற்கே இடம் புகுந்த அந்தணர்களுக்காகத் தனி இடம் வேண்டுமென்று கடலுக்குள் மூழ்கிக்கிடந்த இந்த பூமியை வெளிக்கொணர்ந்தார் ரிஷிபர்யனான பார்க்கவ இராமன் கொண்டு வந்த கையோடு கோகர்ணத்திலிருந்து குமரி முனைவரை அறுபத்தி நான்கு கிராம க்ஷேத்திரங்களை உருவாக்கினார். இவற்றுள் முப்பத்தியிரண்டு கிராமங்கள் மலைநாட்டிலும் மேலும் முப்பத்தியிரண்டு கிராமங்கள் துளு நாட்டிலும் அமைந்துள்ளன.

கங்கைக் கரையிலிருந்து தாங்கள் துரத்தப் பட்டதைப்போல் இந்த பூமியிலிருந்தும் நாங்கள் துரத்தப் பட்டுவிட்டால் என்செய்வது? என்று நம்முடைய முன்னோர்கள் அந்த அவதார புருஷரை வினவினார்கள் அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா?

வேத வித்தகர்களே! இந்த பூமி உங்களுடையது. இந்த மண்ணின் ஒவ்வொரு துகளும் உங்களுடையது. ஆக இதனைக் காத்து இரட்சிக்கும் பொறுப்பும் உங்களுடையதே! ஆகவே இந்தப் பூமியில் நீங்கள் உங்கள் குலத்திற்குரிய கடமைகளில் மட்டும் ஈடுபட்டால் போதாது. அந்தணர்களாக மட்டுமின்றி க்ஷத்திரியர்களாகவும் நீங்கள் இங்கே அவதாரமெடுக்க வேண்டும். அதற்கான [illegible]யை நான் இப்போதே அளிக்கிறேன். உங்களில் புதிய தர்மத்தை ஏற்பதற்குச் சித்தமாய் இருப்பவர்கள் முன்னே வாருங்கள்!

அவருக்கு முன்னால் கூடி நின்ற அந்தணர்கள் மிகுந்த [illegible]மும் மனக்கிலேசமும் அடைந்தார்கள். [illegible]துக்களால் வேள்வித்தீயில் நெய்வார்க்கும் கரங்களால் [illegible] பிடிக்க முடியுமா? எனும் சஞ்சலம் அவர்கள் மனத்தை [illegible]ரித்தது. அத்தனை பெரிய கூட்டத்தில் ஒருவர். ஒரே

ஒருவர் மட்டும் ஷத்ரிய தர்மத்தை ஏற்க தைரியமாக முன் வந்தார். அவர் யார் தெரியுமா?"

கம்பீரமான குரலில் அந்தக் கேள்வியை எழுப்பி விட்டு பட்டதிரி நாற்புறங்களையும் சுற்றி நோக்கினார். "தெரியுமா? தெரியுமா?" என்று அந்த மைதானத்தின் நான்கு திசைகளிலும் அவரது குரல் பட்டுத்தெறித்து எதிரொலித்தது போன்றதொரு பிரமை எழுந்தது. சிறுவர்கள் வாய் பிளந்தபடி ஒன்றும் பேசத் தோன்றாமல் அவரையே நோக்கி நின்றார்கள்.

"அவர்தான் திரிவிக்கிரம நம்பூதிரி. என்னுடைய முப்பாட்டனுக்குப் பாட்டனுக்கும் முப்பாட்டன். திரிவிக்கிரம நம்பூதிரியின் கரங்களில் பார்க்கவ இராமன் தாம் காத்து வந்த ஷத்திரிய தர்மத்தை இந்த பூமியில் அவர் காக்க வேண்டுமென்று நீரால் தாரை வார்த்தார். அந்தத் தாரையின் ஸ்பரிசம் நம்பூதிரியின் கரங்களில் ஆயிரம் யானைகளின் பலத்தை ஏற்றியது. அவரைத் தொடர்ந்து மேலும் மூவர் இராமனிடம் நேரடியாக இந்த தர்மத்தைக் காப்பதாக உறுதி பூண்டார்கள்.

அந்தணர்கள் வாள்பிடிக்க வேண்டுமெனில் அவர்களுக்கு முறையான சங்கிராமப் பயிற்சிகள் தேவையென்பதால் இந்த நால்வரையும் ஆசான்களாக்கி நான்கு முக்கிய சாலைகளை மலைநாட்டில் ஏற்படுத்தினான் பரசுராமன். இந்த நான்கு சாலைகளிலும் அமைக்கப்பட வேண்டிய களரி அல்லது களம், கொடுக்கப்பட வேண்டிய பயிற்சிகள், காவல் புரிய வேண்டிய தெய்வங்கள் என்று எல்லாமே அக்காலத்தில் நிர்ணயம் செய்யப்பட்டன.

சிறுவர்களே! வீரம் மிகுந்து ஷத்திரிய தர்மத்தைக் காப்பேன் என்று எழுந்து நின்ற முதல் வீரரான திரிவிக்கிரம நம்பூதிரி ஸ்தாபிதம் செய்ததுதான் நமது காந்தளூர்ச்சாலை. மீதமுள்ள மூன்று சாலைகளுமே நமது முறைகளை ஒட்டித்தான் தமது செயல்பாடுகளை அமைத்துக் கொண்டுள்ளன. இதனைக் 'காந்தளூர் மரியாதை' என்று குறிப்பிடுவார்கள். சிறுவர்களே! தனுர் வேதத்தில் நிகரற்று விளங்கிய திரிவிக்கிரம நம்பூதிரிகளின் புனிதமான பாதங்கள் நடமாடிய மண்ணில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். அவரால் ஸ்தாபிக்கப்பட்ட காந்தளூர்ச் சாலையில் இன்று நீங்கள் வித்யாரம்பத்திற்காகக் கூடியிருக்கிறீர்கள்!"

சிறுவர்களுக்கு மெய் சிலிர்த்தது. ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவான மேனியராய் பார்க்கவ இராமனின் பாதம் பட்டு மிக நீண்ட வாளெடுத்து நான்கு புறங்களிலும் ஆவேசமாய்ச் சுழற்றும் காந்தளூர்ச் சாலையின் முதல் ஆச்சாரியரான திரிவிக்கிர நம்பூதிரியை அவர்கள் மனதால் நினைத்து வணங்கி நின்றார்கள்.

"ஒன்றை நன்றாக மனதில் கொள்ளுங்கள். வெறும் பிறப்பினால் ஒருவன் எந்த தர்மத்தையும் அடைவதில்லை. ஒருவன் பிறக்கும்போது எந்த வருணத்தானாகவும் பிறப்பதில்லை. அவனுடைய வளர்ப்பு, செயல்பாடுகள், முன்கர்மவினை இவற்றால்தான் ஒருவன் தனக்குரிய தர்மத்தை அடைகிறான்.

ஆகவே பிறப்பினால் நீங்கள் அந்தணர்களாகவோ ஷத்திரியர்களாகவோ ஆகிவிடுவதாக எண்ணம் வேண்டாம்! ராஜரிஷியாகிய விசுவாமித்திரர் ஒரு ஷத்திரியர் ஆயினும் தன்னுடைய வலிமையான தபஸ்ஸினால் அவர் அந்தண நிலையை அடைந்தார். பார்க்கவ இராமனான பரசுராமன் அந்தணராகப் பிறந்தும் கார்த்தவீர்யார்ஜுனக் அரசர்களின் கொட்டத்தை ஒழிப்பதற்காக ஷத்திரிய தர்மத்தை மேற்கொண்டார். பிறப்பால் அந்தணரான துரோணாச்சாரியார் தனுர்வேதப் பயிற்சியில் ஈடுபட்டு இணையற்ற ஷத்திரியராக விளங்கினார்.

வைணவத்தின் ஆழ்வார்களில் பலரும் பல குலங்களில் அவதரித்தவர்கள் என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். ஆனால் அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான பக்தி செய்து கேசவனின் பாதார விந்தங்களை அடைந்தார்கள். பிறப்பால் வேளாளராகப் பிறந்த நம்மாழ்வாரின் திருவாய்மொழியைத்தான் மூன்று மண்டலங்களிலும் ஓதி வருகிறோம். குலங்கள் நாலிலும் பிறந்திலேன் என்று பாடிய பாணர் குலத்தவரான திருப்பாணரும் ஆழ்வாராக திகழ்ந்தார்.

ஆகப் பிறக்கும் குலங்களாலும் கோத்திரங்களாலும் ஒருவன் எந்த நிலையையும் அடைந்துவிடுவதில்லை. இதனை உணர்ந்த நமது முன்னோர்கள் அக்காலத்தில் புதுமையான விதியொன்றை வகுத்தார்கள். அதாவது பிறப்பால் ஒருவன் நாட்டின் தலைவனாகிவிட முடியாது. அதாவது மணி மகுடம் தரித்த மன்னருக்குத் தலைமகனாகப் பிறப்பதாலேயே அந்நாட்டின் முடி அவனுக்குக் கிடைத்துவிடாது.

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நான்கு சாலைகளும் கூடி நடந்தும் வீர தீர விளையாட்டுக்களில் அவன் கலந்துகொண்டு ஜெயித்தாக வேண்டும். அப்படி ஜெயிப்பவரே மலைநாட்டின் பெருமாள் அரசராகப் பதவியேற்க முடியும். வெகு காலத்திற்கு நடைமுறையிலிருந்த இந்த வழக்கம் பின்னர் பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டது. அரசர்கள் இல்லாத காலங்களில் படை நிர்வாகத்தை சாலையும் மந்திரிகளின் நிர்வாகத்தை நான்கு தளிக்காரர்களும் ஏற்றுக்கொள்வதுண்டு. ஆக, இன்னாருக்கு மகனாய்ப் பிறப்பதால் நீங்கள் அடைவது எதுவுமில்லை. அந்த முதல் பிறப்பு வெறும் உடலின் பிறப்பு. அதற்கு மேலான அர்த்தங்களொன்றும் கிடையாது. இரண்டாவது பிறப்பு என்றொரு முறையை அதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டது. இரு பிறப்பாளன் என்று பொருள்படும் துவிஜன் என்னும் சொல்லுக்கு அர்த்தம் 'உண்மையான பிறப்பை அடைந்தவன்' என்பதே.

சிறுவர்களே! இன்று முதல் நீங்கள் புகழ்மிக்க காந்தளூர்ச் சாலையின் சட்டர்களாகப் பிறப்பெடுத்திருக்கிறீர்கள். சாலையின் தர்மத்தைக் காக்க உங்களின் உடல், பொருள், ஆவி, சொத்து, சுகங்கள் முதலான அனைத்தையும் தியாகம் செய்வதற்கு நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும். செய்வீர்களா? சாலைக்காக இத்தனை தியாகங்களை நீங்கள் செய்வீர்களா?"- இரு கரங்களையும் உயர்த்தி ஆக்ரோஷமாக வினவினார் பட்டதிரி.

"செய்கிறோம் ஆச்சாரியரே. நிச்சயமாகச் செய்கிறோம்!" என்று சிறுவர்கள் உறுதியளித்தார்கள்.

இந்தக் கட்டத்தில் சிறுவர்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவன் மெல்லக் குனிந்து ஆச்சாரியாரின் காதுகளில் ஏதோ புகன்றான். "இன்னும் இரு நாழிகை நேரத்தில் வந்து சந்திக்கிறேன். அவரை அங்கேயே இருக்கச்சொல்" என்று பதிலளித்தார் பட்டதிரி.

19. தாக்குதல் தொடருமா?



காந்தளூர்ச் சாலை மகாதேவர் திருக் கோயில் வளாகத்திற்குள் அமைந்திருந்த கூத்தம்பலம் என்னும் மேடையின் கிழக்கே மறைவானதொரு இடத்தில் வள்ளுவ நாடாழ்வார் திருநாராயண பட்டதிரிக்காக இருப்புக் கொள்ளாமல் காத்துக் கொண்டிருந்தார். அவருடைய உதடுகள் மெல்ல எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. பார்வை ஓரிடத்தில் நில்லாமல் அங்குமிங்கும் சுழன்றுகொண்டிருந்தது. மகாதேவர் கோயிலுக்கு அந்தக் காலை நேரத்தில் வருகை தந்துகொண்டிருந்த பக்தர்களைப் பார்ப்பதில் அவருக்கு நாட்டமில்லை என்பது தெளிவு. மேடையின் ஓரத்திலேயே முடங்கிக் கிடந்தார் அவர்.

சிறிது நேரத்தில் வெளியே அரவம் கேட்டது. ...னுடன் வந்திருந்த இளைஞனை படிக்கட்டுக்கு அருகில் ...க்கச் சொல்லிவிட்டு மேடையில் ஏறினார் பட்டதிரி.

"வணக்கம்!"

"வரவேண்டும்! வரவேண்டும்! ஏன் சாலைக்கே நேரடியாக வந்திருக்க வேண்டியதுதானே? அங்கு ...திருக்கலாமே?"

"காரணம் வேறொன்றுமில்லை. மகாதேவரை தரிசனம் ...து நீண்ட காலமாகிறது. அதனால்தான் அம்பலத்திற்கு ...யம் செய்தேன். அப்போதுதான் நீங்கள் அருகிலிருக்கும் ...னத்தில் மாணவர்களுடன் வித்யாரம்பத்திற்காகக் ...ருக்கிறீர்களென்பது தெரிவிக்கப்பட்டது. செய்தி ...னேன்."

"நன்று நன்று. வீட்டில் அனைவரும் சுகம்தானே?"

"நல்ல சுகம். உங்களின் பெண்கள் இருவரும் ...னாரும் தம்பிகளும் நலமா?"

"மகாதேவரின் அருளால் ஒரு குறைவும் இல்லை. ...ழிகளின் இரகசியக் கூட்டம் விழிஞத்தின் ஆய்வேள்

அரண்மனையில் நடந்ததென்று நீங்கள் அனுப்பிய செய்தி கிடைத்தது. கூட்டத்தில் என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?"

"எல்லாம் ஒரே குழப்பமாக முடிந்தது. உறுதியாக எந்தவொரு முடிவும் எடுக்காமல் கலைந்தோம்..."

"அடடா..."

"பெரியவர் இராமவாழியை நான் பேசவே விட்டிருக்கக்கூடாது. தேவையற்ற பல பழைய குப்பைகளைக் கிளறிக் கூட்டத்தின் நோக்கத்தையே சிதைத்து விட்டார்!"

"பெரியவரை நொந்துகொள்ள வேண்டாம். பழையவற்றைப் பற்றிப் பேசுவது தவறல்ல. ஆனால் புதிய சூழ்நிலைகள் உருவாகிக் கொண்டிருப்பதை மனதில் கொண்டால் போதும்."

"முதலில் பாண்டியரைச் சோழன் தாக்கியதற்குப் பின்னணியில் இருக்கும் சில தகவல்களை விவரித்தேன். மதுரையை நாசம் செய்தவன் நேராக மலைநாட்டிற்குத்தான் படையெடுப்பான் என்பதைச் சொன்னேன். அந்தப் படையெடுப்பின் முதல் கட்டமாகக் காந்தளூர்ச் சாலையைத் தாக்குவதற்கும் திட்டமிட்டிருக்கிறான் என்பதையும் கூறினேன் இந்தக் கட்டத்தில் இராமவாழியார் புகுந்து பழைய தகவல்களை விவரிக்கிறேன் என்று உங்களின் குடும்பத்தாரை உள்ளிழுத்துவிட்டு விட்டார்."

"முதலில் காந்தளூர்ச் சாலை எனும் ஸ்தாபனம் எங்கள் குடும்பத்தாருக்கு மட்டும் உரியது அல்ல என்பதை நாடுவாழிகளும் மற்றவர்களும் உணர வேண்டும். நமது கேரள பூமியின் பண்டைய கலாச்சார அடையாளங்களில் அதுவுமொன்று. அதனைத் தாக்குவதென்பது ஒவ்வொரு மலைநாட்டவரையும் அவமானப்படுத்தும் செயல். இந்த ஸ்தாபனத்தின் பிதாமகராக அறியப்படும் திரிவிக்கிரம நம்பூதிரியின் வழித்தோன்றல்கள் என்கிற வகையில் எங்களின் குடும்பம் சாலையுடன் நெருக்கமான உறவு பூண்டுள்ளது. வழிவழியாக எங்களின் குடும்பத்தார் இந்தச் சாலையின் மேன்மைக்காகப் பாடுபட்டுள்ளனர். ஆனால் இன்றைய நிலையில் காந்தளூர்ச் சாலை தனிப்பட்ட குடும்ப நலன்களுக்கு அப்பாற்பட்டது என்கிற உண்மையை நீங்கள் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்."

"போகட்டும். தலைவரிடமிருந்து வேறு ஏதாவது செய்திகள் பிறகு வந்தனவா? குறிப்பாக எந்த விதமான தாக்குதல் நடைபெறப் போகிறது? மலைநாட்டின் எந்தப் பகுதிகள் தாக்கப்படப் போகின்றன? எவ்வாறு தாக்கப்படப் போகின்றன என்பதைப்பற்றி —"

"ஒரு தகவலுமில்லை. இந்த விஷயத்தில் சோழனுடைய ...ம் தெளிவேற்படவில்லை."

"தாக்குதல் தென்பகுதிகளின் மீதுதான் நடைபெறும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா ஆச்சாரியரே?"

"அதில் சந்தேகமேயில்லை. வடபகுதிகளையோ மகோதைப் பட்டினத்தையோ நேரடியாகத் தாக்குமளவிற்குச் சோழனுக்கு இன்னமும் மதிகெட்டு விடவில்லை. அவன் கோபமெல்லாம் இப்போது எங்களின் மீதுதான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் என் மீதும் என் மைத்துனர்கள் மீதும் எங்களின் குடும்பத்தின் மீதும்தான்."

"தங்களின் குடும்பத்தார் மீதுள்ள கோபத்தைச் சாலையின் மீது காட்டுவானேன்?"

"நாடுவாழியாரே! மலைநாட்டில் நாம் போற்றிப் ...க்கும் சாலை என்னும் ஸ்தாபனத்தைக் கண்டு சோழன் ...படுகிறான். ஒவ்வொரு சாலையிலும் தனக்கெதிராக மலைநாட்டவர் எங்களின் தூண்டுதலினால் அணி ...வதாகக் கற்பனை செய்து கொள்கிறான். உத்தமச் ...ழ தேவருக்கும் நமது குடும்பத்தாருக்கும் நிலவி வந்த ...கம் அவனது சந்தேகத்தைத் தூண்டிவிட்டுவிட்டது. ...வாழிப் படைகளுக்கும் ஆயிரத்தவர் படைகளுக்கும் ...களுக்கும் இடையில் நிலவும் நட்புறவு அவனுக்கு ...பாகக் கசக்கின்றது. ஒரு நல்ல நாள் பார்த்து ...மெல்லோரும் அணிதிரண்டு வந்து அவனை அழித்து ...வோமென்று நினைத்துக் கொள்கிறான். அப்படி நாம் ...யாகத் திரளாமல் பார்த்துக் கொள்வது அவசியம். ... முதல்கட்டமாக மலைநாட்டின் சாலைகள் ...தொழிக்கப்பட வேண்டும்..."

"மலைநாட்டின் பகுதிகளைத் தாக்காமல் சாலைகளை ...ம் தாக்குவதென்பது எப்படி நடைபெறும்?"

"நாடுவாழிகளான நீங்களெல்லோரும் சோழனுடன் ...முழைத்தால் முடியும். உங்களின் கட்டுப்பாட்டிலிருக்கும்

ஆரல்வாய்மொழிக் கணவாய் வழியாக சோழனின் படைகள் மலைநாட்டிற்குள் நுழைவதை அனுமதித்தால் முடியும்..."

"அது நடக்காத காரியமாயிற்றே?"

"அப்போது உங்களைத் தாக்கி வள்ளுவ நாட்டின் பகுதிகளைக் கைப்பற்றி முன்னேறுவதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை..."

"கணவாயைத் தாண்டுமுன் சோழர் படைகளை அடியோடு நாசம் செய்வதைத் தவிர வேறு வழி எங்களுக்கும் இல்லை."

"நீங்கள் நினைத்தால் அது நிச்சயம் முடியும். கணவாயின் அமைப்பை நான் நன்கறிவேன். உங்களின் அனுமதியின்றி அதனைக் கடப்பது இயலாத காரியம். நாடுவாழியாரே! இந்தத் தாக்குதலிலிருந்து நீங்கள் சாலைகளை மட்டும் காப்பாற்றவில்லை. ஒட்டுமொத்த மலைநாட்டையுமே காப்பாற்றுகிறீர்கள்! இந்த மண்ணின் அரசர் முதல் ஆண்டி வரை உங்களுக்குக் கடன்பட்டவர் ஆகிறார்கள்..."

"ஆனால் என்னுடைய படைகளை மட்டும் வைத்துக் கொண்டு இதனை சாதிக்க இயலாது பட்டதிரியாரே! எனக்குப் பல விதங்களிலும் உதவி தேவைப்படுகிறது..."

"என்னென்ன விதமான உதவிகள் தேவை சொல்லுங்கள்..."

"முதலில் சோழனின் நிலப்படை, நீர்ப்படை பற்றிய துல்லியமான விபரங்கள். நம்மை எதிர்க்க வரும் படைகளின் எண்ணிக்கை எத்தனை, தஞ்சையிலேயே தங்கப்போகும் படைகள் எத்தனை... இந்தக் கேள்விகளையெல்லாம் விபரமாகத் தெரிவிக்கும்படி தலைவருக்கு முறியொன்று அனுப்பியுள்ளேன்."

"நீர்ப்படையாவது ஒன்றாவது! அவற்றைத்தான் உத்தம காலத்தில் முடக்கிப்போட்டாயிற்றே! வெறும் நிலப்படை மட்டும்தான். தலைவருக்கு நீங்கள் எழுதிய ஓலை ஒரு பக்கம் இருக்கட்டும். நமது விசுவாசிகள் இன்னமும் சோழ இராஜாங்கத்தின் பல்வேறு மட்டங்களில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களின் மூலம் இது சம்மந்தமாக ஏதாவது செய்தி திரட்ட முடிகிறதா என்று பார்க்கிறேன்."

"பார்க்கிறேன்" என்று பட்டதிரியின் வாயிலிருந்து சாதாரணமாக வார்த்தைகள் வராது. அப்படி வந்துவிட்டால் காரியம் முடிந்துவிட்டது என்று பொருள். வள்ளுவனார் அதனை அறிவார்.

"இரண்டாவதாகத் தெற்கே நாஞ்சில் நாட்டுப் பகுதிகளில் படையெடுப்பு நடைபெறும் பட்சத்தில் எங்கே எவ்வாறு சோழப் படைகளை நசுக்குவது என்பதற்கான துல்லியமான திட்டம். இதில் தங்களின் யோசனைகளை நான் பெரிதும் வரவேற்கிறேன்..."

"செய்து விடலாம்."

"மூன்றாவது. இது மிக முக்கியமானது. சோழர் படைகளை நாம் எதிர்க்கும் பட்சத்தில் மலைநாட்டுப் படையினரில் எத்தனை பேர் நமக்கு ஆதரவாகப் படைவீரர்களை அனுப்புவார்கள், யார் யார் வெறும் வாய்மொழியாகவே ஆதரவைத் தெரிவித்துவிட்டு மௌனமாயிருக்கப் போகிறார்கள் என்னும் தகவல் தனைக் கொண்டுதான் நமது திட்டங்களும் தாக்குதல்களும் அமையும்!"

"இது சற்று சிக்கலானது. யோசிக்க வேண்டிய விஷயம்."

"இந்தச் சிக்கலுக்கு ஒரு தீர்வைக் கண்டுவிடலாம் என்றுதான் கோட்டையில் கூட்டத்தைக் கூட்டினோம். கடைசியில் அது பயனற்ற வகையில் முடிந்தது."

"நீங்கள் ஒட்டு மொத்த நாடுவாழிகளையும் ஒரே இடத்தில் கூட்டி இந்தக் கேள்விக்கு விடைகாண விழைகிறீர்கள். முதலில் தென்பகுதிகளில் அமைந்துள்ள நாடுடையவர்களை மட்டும் மனதில் வையுங்கள். நேரடியாக பாதிக்கப்படப் போகிறவர்கள் அவர்கள்தான்."

வள்ளுவ நாடுவாழியார் மெல்லச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

* * * * * * * *

தஞ்சை உள்ளாலையின் ஒரு பகுதியாக அமைந்திருந்த சோழன் திருமாளிகையையொட்டி சோழப் படைகளின் பெரிய புரவிலாயமொன்று அமைந்திருந்தது. போர்க் களங்களில் சமர் செய்வதற்கென்றே சிறப்பாகப்

பயிற்றுவிக்கப்பட்ட அரேபியப் புரவிகள் அங்கே நூற்றுக்கணக்கில் புரக்கப்பட்டன.

முன்னிரவு துவங்கி ஒரு ஜாம நேரம் கழிந்துவிட்ட அந்தப் பொழுதில் இலாயத்தில் நடமாட்டங்கள் பெரிதும் குறைந்துவிட்டிருந்தன. உறங்காமல் கொட்டக் கொட்ட முழித்துக் கொண்டிருந்த ஓரிரு புரவிகளின் லேசான கனைப்பைத் தவிர வேறு சப்தங்களெதுவும் அங்கே எழவில்லை. பகலில் அந்தப் பகுதிகளில் காவல் புரியும் வீரர்களில் பாதிக்கும் குறைவானவர்களே இரவு ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அதனால் லாயத்தின் பல்வேறு பகுதிகளும் அமைதியிலும் அந்தகாரத்திலும் மூழ்கியிருந்தன.

லாயத்தின் மேற்குப்பகுதியில் இருள் பெரிதும் மண்டியிருந்த ஒரு பகுதியில் ஒரு உருவம் அங்குமிங்கும் பார்த்தபடி மெல்ல நகர்ந்துகொண்டிருந்தது. உற்றுக் கவனித்தால் அந்த உருவம் பெரியதொரு அங்கியை முக்காடாகத் தலையிலிருந்து கால்வரை போர்த்திக் கொண்டிருப்பது தெரியும். எச்சரிக்கையோடு நகர்ந்தாலும் குழப்பங்களின்றி அந்த உருவம் குறிப்பிட்ட பாதையில் நடப்பதைப் பார்த்தால் அந்தப் பகுதி அந்த உருவத்திற்குப் பரிச்சயமானதாகவே தெரிந்தது. லாயத்தின் மேற்குப் பகுதியில் காவலிருந்த வீரன் இருளடைந்திருந்த பகுதிகளை விட்டுவிட்டுத் தீப்பந்தம் எரிந்துகொண்டிருந்த கொட்டிலின் அருகில் நின்றுகொண்டு புகையிலையை வாயில் அதக்கிக் கொண்டிருந்தான்.

சற்று தூரத்திலிருந்து அவனை அணுகிக்கொண்டிருந்த உருவத்திற்கு அந்த வீரனின் பின்புறமே தெரிந்தது. அங்குமிங்கும் கண்களை ஓட்டிய அந்த மர்ம உருவம் சட்டென்று கீழே கிடந்த சிறு கல்லை எடுத்து அந்த வீரனுக்கருகில் எறிந்தது. வீரன் சற்றே திரும்ப, அவனது முகத்தைக் கவனித்துக்கொண்டது உருவம். உறுதியுடன் அவனை மெல்ல அணுகியது. தனக்கருகில் ஏதோ அரவம் கேட்பதையுணர்ந்து அந்த வீரன் சுதாரித்துத் திரும்புவதற்குள் அவனது வாய் கழுத்துக்கருகிலிருந்து நீண்ட மாயக் கரங்களால் மூடப்பட்டுவிட்டது!

"உஸ்... பலதேவா! சப்தம் செய்யாதே. நான்தான்."

இந்தக் குரல்...?? இந்தக் குரல்???

பலதேவன் என்றழைக்கப்பட்ட வீரன் திடுக்கிட்டுப் ...யாய்த் திரும்பிப் பார்த்தான்.

"நான்தான் என்றால்..??"

"நானேதான்!" - சட்டென்று தீப்பந்தத்தை ஒரு கணம் ... முக்காட்டை விலக்கிக் காட்டியது அந்த உருவம். ... தூரத்திலிருந்து இவர்களிருவரையும் கவனித்துக் ...ண்டிருக்கும் நம்மால் அந்த உருவத்தின் முகதரிசனத்தை ...திருஷ்டவசமாகப் பெறமுடியவில்லை. அடுத்த கணமே ...டு மீண்டும் அந்த உருவத்தின் தலையைப் போர்த்தி ...ட்டது.

"தாங்களா? இந்த நேரத்திலா? ஐயோ! ஆபத்தாயிற்றே..."

"உஸ்... நான் சொன்னபடி செய்தாயானால் உனக்கு ஒரு ...ந்தும் நேராது. பலதேவா! என்னைப் பற்றி உனக்கு ...றாகத் தெரியுமில்லையா?"

பலதேவனின் கரங்கள் மெல்ல நடுங்கத் துவங்கி...

20. அன்பில் திருமாளிகை



"பலதேவா! எனக்கு விசுவாசமாக இருந்தவர்கள் என்றைக்குமே வீண் போனதில்லை. அது உனக்கு நன்றாகவே தெரியுமென்று நினைக்கிறேன். தொண்டை மண்டலத்தில் அடையாளம் தெரியாத அனாதையாய் அலைந்து கொண்டிருந்த உனக்கு இப்படியொரு வாழ்க்கை அமைந்தது யாரால் என்பது உனக்கே ...யுமல்லவா?"

"...ழையவற்றை நான் மறக்கவில்லை ஐயா."

"...ின் என்ன தயக்கம்? தொடர்ந்து உனது ...த்தைக் காட்ட வேண்டிய தருணம் வந்துவிட்டது. ... ஒரு பெரிய பலப்பரிட்சை. இதில் நாம் ஜெயித்து ...ல் நீ இந்தப் புரவி லாயத்திற்கே தலைவனாக்கப் ... அதனை மனதில்கொள்."

...தேவன் ஒரு கணம் தன்னைப் புரவி லாயத்தின் ...னாகப் பாவித்துக்கொண்டான். முதல் வேலையாக

அந்தத் திமிர் பிடித்த கங்காளனை வேலையை விட்டு நீக்க வேண்டும்! என்ன பேச்சு பேசிவிட்டான் அவன்?

"நான்... என்ன செய்ய வேண்டும்?"

"சற்று அருகில் வா!" - பலதேவனின் காதோரத்தில் சில மந்திரங்கள் ஓதப்பட்டன.

"ஐயோ! அது மிக ஆபத்தாயிற்றே? மாட்டிக் கொண்டால் என் மைத்துனன் தலை மண்ணில் உருள்வது நிச்சயமாயிற்றே? என்னுடைய விசுவாசத்தைக் காண்பிக்க அவனை ஆபத்தில் மாட்டிவிடச் சொல்கிறீர்களே?"

"ஒரு ஆபத்தும் இல்லை. அவன் நீண்ட நாட்களாக வேளத்தில் பணியாற்றுகிறவன். ஒரு சந்தேகமும் வாராது."

"இருந்தாலும்..."

"பலதேவா! விஷயம் கொஞ்சம் சிக்கலானது என்பதால்தான் இத்தனை தூரம் உன்னைத் தேடி வந்திருக்கிறேன். உன்னால் முடியாது என்றால் சொல்லிவிடு. எனக்கு இதனை முடித்துக் கொள்ள வேறு வழி வகைகளுண்டு."

"ஐயனே! கோபிக்க வேண்டாம். முடிந்தவரையில் முயற்சிக்கிறேன். தாங்களை மறுபடியும் எங்கு சந்திப்பது?"

"வரும் பௌர்ணமியன்று இதே இடத்தில் நானே உன்னை வந்து சந்திக்கிறேன்."

"சரி."

"எச்சரிக்கையுடன் நடந்துகொள்! வருகிறேன்."

* * * * * * * *

பலதேவன் என்றழைக்கப்பட்ட புரவி இலாயத்தின் ஊழியனிடம் விடைபெற்றுக்கொண்ட அந்த முக்காடு உருவம் வந்த வழியே திரும்பி வீரசோழன் மாளிகையின் பின்புறத்தை அடைந்தது. பின் மாளிகையின் மதிலையொட்டி மெல்ல நடக்கத்துவங்கியது.

இரவு துவங்கி ஒரு ஜாமமும் இரண்டு நாழிகைகளும் கழிந்துவிட்டிருந்த அந்தப் பொழுதில் நிலா வெளிச்சம் நன்றாகவே அந்தப் பகுதிகளில் பரவியிருந்தது. அந்த வெளிச்சம்கூடத் தன் மீது பட்டுவிடக்கூடாது என்பது

...லும் அந்த உருவம் மாளிகையையொட்டிச் செழித்து ...ந்திருந்த பல்வேறு மரங்களின் நிழலிலேயே பதுங்கிப் ...துங்கி முன்னேறியது.

சிறிது தூரம் சென்றதும் வீரசோழன் திருமாளிகையின் ...று மதில் பிரியுமிடம் வந்தது. இந்த இடத்தில் சற்றே ...ானித்த அந்த உருவம் மேற்கே இருளடைந்து கிடந்த ...றொரு மாளிகையின் பின்புறத்தைச் சிறிது நேரம் உற்றுப் ...த்தது. அங்கு நடமாட்டங்கள் எதுவுமில்லையென்று ...திப்படுத்திக்கொண்ட பிறகு அந்தப் பகுதியை நோக்கி ...வேகமாக நடக்கத் துவங்கியது.

வீரசோழன் திருமாளிகைக்குக் கிழக்கே அமைந்திருந்த ...ர்ந்த பெருமதில் தனது பெரிய வளாகத்திற்குள் இருவேறு ...ளிகைகளை உள்ளடக்கியிருந்தது. அதில் முதல் ...யில்தான் அன்பில் ஆதுலர் சாலை செயல்பட்டு ...து. முன்னொரு காலத்தில் அருள்மொழிவர்மரின் ...னாரான பராந்தகர் சுந்தரச் சோழரிடம் முதல் ...ராகப் பணியாற்றிய அன்பில் அநிருத்தப் பிரம்மாதி ...ர் அம்மாளிகையில் வசித்து வந்தார். அவருடைய ...த்திற்குப் பிறகும் மாளிகையின் சிறு பகுதியில் ...ந்து வசித்து வந்த அவருடைய சந்ததியினர் ...திராயரின் நினைவாக ஒரு ஆதுலர் சாலையை ...ற அறைகளில் நடத்தி வந்தனர். பிரம்மாண்டமான ...ளிகையின் முன் அறைகள் இவ்வாறு ...ளாகத்திலிருக்க, புழக்கடை மற்றும் நந்தவனம் ...ந்திருந்த பின்கட்டுப் பகுதிகளும் அங்கே ...ந்திருந்த பல்வேறு அறைகளும் புழக்கமின்றி ...டைந்து கிடந்தன. காலப்போக்கில் நந்தவனத்தில் ...விட்ட மரங்களின் நீண்ட வேர்கள் மற்றும் செடி ...களின் அகோரப் பசிக்கு அவற்றுள் சில இரையாகிக் ...ம் இருந்தன.

...வ்வாறு புழக்கம் அதிகமற்றுக் காணப்பட்ட அந்தப் ...ல் அந்த இரவு நேரத்தில் அந்த உருவம் ...கும் பார்த்தவாறு முன்னேறுவது எதற்காக ... நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை ...ின் அடர்த்தி காரணமாக இருள் மண்டிக்கிடந்த ...ுதிகளின் பல்வேறு அறைகளையும் கூர்மையாகக் ...வாறு முன்னேறிய அந்த உருவம் ஓரிடத்தில் ...ரு மண்டபமும் அதனைத் தொடரும் முற்றமும் ...தும் பகுதியில் சற்று நிதானித்தது. மண்டபத்தை

யொட்டி அமைந்திருந்த ஒரு அறையின் சிறு வாயிற் கதவம் அதன் கவனத்தைக் கவர்ந்ததுபோல் தோன்றியது. மெல்ல முன்னேறித் திறந்திருந்த அந்த வாயிற்கதவத்தின் வழியாக தன் பெரிய உடம்பை உள்ளே நுழைத்துக்கொண்ட அவ்வுருவம், அடுத்த கணமே அறையின் கதவத்தைத் தாழ்ப்பாளிட்டுக் கொண்டு விட்டது.

வெளியே ஏகத்துக்கு இருள் மண்டிக் கிடந்தாலும் மூடிக்கிடக்கும் அந்த அறைக்குள் எவ்வாறு மெல்லிய வெளிச்சம் வருகிறது என்று வியக்கிறோம். ஓ! இப்போது புரிகிறது. அந்த அறையின் மேற்தளத்தில் சிறியதொரு திட்டி வாசல் அமைத்து அதன் வழியாகச் சந்திரனின் ஒளி உள்ளே வருவதுபோல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் அந்த அறை இருளோகத்தில் மூழ்கியிருக்கவில்லை போலும்.

உருவம் அறையின் வடமேற்குப் பகுதியை அடைந்து அங்கே பூமியில் காய்ந்த இலைகளினூடே துழாவி ஏதோ ஒன்றை... நாதாங்கி போலல்லவா தெரிகிறது?... பிடித்து மேலிழுக்க... என்ன அதிசயம்? அறையில் தரையோடு தரையாக அமைந்திருந்த கண்ணுக்குத் தெரியாத ஒரு கதவம் மெல்லத் தன் வாயைப் பிளந்தது. பூமியில் ஒரு பெரிய துவாரம். அந்த உருவம் தன் கால்களை மடக்கி உள்ளிறக்கித் தட்டுத் தடுமாறிபடி படிகள் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து அந்த சுரங்க அறைக்குள் ஒரு வழியாக இறங்கி விட்டது. அது வெறும் சுரங்க அறை மட்டும்தானா அல்லது வேறு எங்காவது இட்டுச் செல்லும் சுரங்கப் பாதையா என்பதை இனிமேல்தான் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

மெல்லத் தரையில் அமர்ந்து சில நிமிடங்கள் ஆசுவாசப்படுத்திக்கொண்ட அந்த உருவம், இருள் மண்டிக் கிடந்த அந்த அறையின் தெற்கு மூலையை நோக்கி நகர்ந்தது. அந்த உருவம் நகர நகரத்தான் அது நாம் நினைத்ததைப்போல் சிறிய அறையில்லை. மேலே எழும்பியிருக்கும் மாளிகையின் பல அறைகளையும் உள்ளடக்கி அவற்றின் கீழே இரகசியமாக அமைக்கப் பட்டுள்ள நீண்ட பாதாள அறை என்பது நமக்குப் புரிகிறது. மாளிகையின் கீழ் இப்படியொரு அறை எதற்காகவோ?

ஒரு வழியாகத் தெற்கு மூலையில் அறையை அடைந்த எழுப்பப்பட்டிருந்த நீண்ட சுவர் தென்பட்டது. ஆக

[illegible]யம் இது சுரங்க வழியில்லை. அறை மட்டும்தான் [illegible] அறை என்றும் குறிப்பிடலாம். நாற்புறங்களிலும் [illegible]யிருக்கும் இந்த நீண்ட இருட்டறைக்குள் இரவு [illegible]த்தில் இந்த உருவத்திற்கு அப்படியென்ன முக்கியமான [illegible]யம்?

சுவரை அடைந்ததும் தன் இடுப்பிலிருந்த [illegible]களை மெல்ல சப்தம் செய்யாமல் கீழே [illegible]துவிட்டு கால்மடக்கிக் கீழே அமர்ந்த அந்த உருவம் [illegible] முதுகைக் காட்டியபடி என்னவோ செய்ய, சிறிது [illegible]த்தில் அந்த அறைக்குள் மிக மெல்லிய வெளிச்சம் [illegible]யது. குறிப்பிட்டதொரு கடல் மீனின் எண்ணெயால் [illegible]துகொண்டிருந்த அந்தச் சிறு விளக்கின் வெளிச்சம் மிக [illegible]ங்கலாகவே அந்த அறைக்குள் பரவினாலும் முன்பு [illegible]ந்திருந்த கும்மிருட்டை விரட்டுவதற்கு அது [illegible]துமானதாகவே இருந்தது.

வெளிச்சம் பரவியதும்தான் அது எத்தனை பெரிய [illegible] என்பதை உணர முடிகிறது. கிழக்கும் மேற்கும் [illegible] தெற்குமாய் விரிந்து பரவும் இந்தச் சுரங்க அறை [illegible]ளிகையின் கீழ்ப்பகுதி முழுவதையும் [illegible]மித்துள்ளது போல் தெரிகிறதே? அது மட்டுமா? [illegible]றையின் ஒரு மூலையில் பழைய துருப்பிடித்த [illegible]களும் ஏராளமாகக் குவித்து வைக்கப் [illegible]க்கின்றனவே? ஆபத்துக் காலங்களில் ஆயுத [illegible]கவும் இந்தப் பகுதி பயன்படுத்தப்பட்டிருக்குமா [illegible] அன்பில் பிரம்மாதிராஜரின் அரசியல் மற்றும் [illegible]த்திறன் பற்றிப் பலரும் பலவிதமாகக் கேள்வி [illegible]ந்தாலும் அவரது பழைய மாளிகையில் [illegible]யொரு அமைப்பை இந்த நேரத்தில் நாம் [illegible]ர்க்கவில்லையென்பதை ஒப்புக்கொள்ளத்தான் [illegible] இத்தகைய இரகசியக் கட்டுமானம் எதற்காக [illegible] வைகுண்டத்திலிருக்கும் அந்த பிரம்மாதிராஜருக்கே [illegible]ம்!

[illegible]திருஷ்டவசமாக நமக்கு முகத்தைக் காட்டாமல் [illegible] காட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும் அந்த [illegible]த்தை, இன்னமும் நம்மால் அடையாளம் காண [illegible]வில்லை. சராசரிக்கும் மேலான அதன் உயரமும், [illegible] படர்ந்திருக்கும் திண்மையான தோள்களும், [illegible]பிடித்து உயரே முடியப்பட்டிருக்கும் ஜடாபாரமும் [illegible] தயக்கத்திற்கும் அச்சத்திற்குமே உள்ளாக்குகின்றன.

அந்த உருவம் மெல்ல எழுந்து சுவற்றின் கையை வைத்துத் தடவித் தடவி எதையோ தேடியது. மூடிய அறையின் வெற்றுச் சுவற்றில் அப்படி எதைத்தான் தேடுகிறதோ? மெல்ல மெல்ல முன்னேறியபடி அங்கும் இங்கும் கையை வைத்துத் தேடிய அந்த உருவம் ஓரிடம் வந்ததும் பளிச்சென்று முக்காட்டை முன்னிழுத்து விட்டுக் கொண்டு சுவற்றில் காதை வைத்துக் கேட்கத் துவங்கியது!

கடவுளே.. இந்தச் சுவற்றில் ஏதோ ஒரு இரகசிய துவாரம் உள்ளது போலிருக்கிறதே? இதில் காதை வைத்துக் கேட்டால்... காதை வைத்துக் கேட்டால்... இந்த பாதாள அறைக்கு அடுத்தபடியாக அமைந்துள்ள அறையின் அறையாவது? இந்தப் பாதாள அறைதான் அன்பில் திருமாளிகை முழுவதும் படர்ந்துள்ளதே? அப்படியானால் தற்போது நாம் நிற்கும் இடம் மாளிகையின் கிழக்கு எல்லையாகவல்லவா முடியும்?

எனில்? பக்கத்து மாளிகையில் ஏதோ ஒரு அறையில் நிகழும் உரையாடல்களையா இந்த உருவம் ஒட்டுக்கேட்டுக் கொண்டிருக்கிறது?

அது மட்டுமல்ல. பாதாள அறையின் [illegible] துவாரத்திலிருந்து மண்ணின் மேல் அமைந்துள்ள அடுத்த மாளிகையின் ஒரு கோடி அறையில் நடக்கும் உரையாடல்களைக் கேட்கவேண்டுமெனில்.. இந்தத் துவாரம் பாதாள அறையின் சுவர்களினூடே மேலேறி அடுத்த மாளிகையின் கோடி அறையில் இரகசியமானதொரு இடத்தில் முடிந்தாக வேண்டும். இப்படிப்பட்ட தொடர்பு அமைப்பு பிரம்மாதிராஜரின் காலத்திலேயே ஏற்படுத்தப் பட்டிருக்குமா என்ன? ராஜர் அடுத்தவர் இரகசியங்களை ஒட்டுக்கேட்பதில் பிரியமுடைய ஆள்தான். அதற்காக இப்படியா?

அது சரி, தற்போது அன்பில் ஆதூலர் [illegible] அமைந்திருக்கும் இந்தத் திருமாளிகைக்கு அடுத்து அமைந்திருக்கும் மாளிகை??... சிவ சிவா! அம்பலவாணன் பழுவூர் நக்கனான இராஜராஜப் பல்லவராயர் வசிக்கும் குவளாலபுரத்து அரண்மனையல்லவா?

சப்தம் செய்யாமல் அந்த உருவத்தைப்போல் நாமும் நமது செவிகளை அந்த சுவற்றின் இரகசியத் துவாரத்தில் பதிப்போம். நமது சந்தேகம் சரிதான். மிக மெல்லியதாக ஆனால் கூர்ந்து கேட்டால் தெளிவாகப் புரியுமளவிற்கு [illegible]

பேச்சுக்குரல்கள் கேட்கின்றன. இப்போது சற்றே உரக்கப் பேசிக்கொண்டிருப்பது தளபதி மாராயர்தானே?

* * * * * * * *

"ஆக, நண்பர்களே! அங்கும் இங்கும் வேறு வழியில்லை [illegible]தபடி இந்த நாஞ்சில் நாட்டுப் படையெடுப்பை [illegible]த்தியே ஆக வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்!"

"மாராயரே! நீங்கள் சொல்வது அவலை நினைத்து [illegible] இடித்த கதையாக இருக்கிறது. வாழையடி [illegible]யாகத் தொடரும் சேர சோழ உறவின் [illegible] [illegible]யாக வாளைப் பாய்ச்சும் இந்த [illegible] [illegible] யெடுப்பு சேர-பாண்டியர் நெருக்கத்திற்கு [illegible] [illegible] செய்வதோடு நம் படை பலத்தை பலவீனப்படுத்தி [illegible] பிற எதிரிகளான கங்கர்கள், நுளம்பர்கள், [illegible]ராஷ்டிரகூடர்கள், மேலைச் சளுக்கர்கள் என்று அத்தனை [illegible] அணிதிரண்டு வந்து சோழ நாட்டை நாசம் செய்து [illegible] வழிகோலிவிடும் என்று அஞ்சுகிறேன்..."

"இருக்குவேளிரின் தலைவரே! உங்கள் [illegible]டையான பேச்சுக்கு மகிழ்ச்சி. பிறருடைய [illegible]பிராயத்தையும் செவிமடுப்போம். மழவரையரே! [illegible]நாட்டுப் படையெடுப்பைப் பற்றிய உங்கள் [illegible]தென்ன?"

"கொடும்பாளூராரின் கருத்துக்கு என் கருத்து நேர் [illegible]ானது. இந்தப் படையெடுப்பை இப்போது நாம் [illegible]று நடத்தவில்லையென்றால் அடுத்த சில திங்களில் [illegible] நாட்டுப் படைகளும் நாஞ்சில் நாட்டுப் படைகளும் [illegible]யை நோக்கி நகரத் துவங்கிவிடும். பின் போர் [illegible] தவிர்க்க முடியாத செயலாகிவிடும். அதற்கு [illegible] முன்னின்று அவர்களை சந்திப்பது நல்லது"

"பழுவேட்டரையர் கண்டன் சத்ருபயங்கரன் என்ன [illegible]கிறார்? பழுவூர் அரசருக்கு இக்கூட்டத்திற்கான [illegible]ப்பு அனுப்பப்படவில்லையா என்ன?"

"அவரது குடி சேர நாட்டைச் சேர்ந்தது ஆதலின் இப் [illegible] யெடுப்பு அவருடைய மனதுக்கு உகந்ததாக இல்லை [illegible]த்தாரின் முடிவுக்கு நான் கட்டுப்படுகிறேன் என்று [illegible]னுப்பிவிட்டார். பழுவூரின் படைகள் இப்போரில்

கலந்து கொள்வது கூட சந்தேகம்தான். ஏனென்றால் அப்படையில் பல வீரர்களுக்கு மலைநாடுதான் தாய்நாடு!"

"போர் என்று ஒன்று நிகழ்த்துவதற்கு முன்னால் உரிய முறையில் தூதனுப்புவதுதான் மரபு. ஒப்புக்கொள்கிறீர்களா பல்லவராயரே?"

"நிச்சயம். படையெடுப்பிற்குமுன் நாஞ்சில் நாட்டிற்கும் மகோதகைக்கும் தூது அனுப்பத்தான் வேண்டும்!"

"ஆய்வேள்களின் மறைவிற்குப் பிறகு மலைநாட்டின் தென்பகுதிகளில் நாடுவாழிகள் ஏறக்குறைய சுயேச்சையாக தத்தம் பகுதிகளில் அதிகாரம் செலுத்தி வருவதாகத்தான் கேள்விப்படுகிறோம். அதனால் மகோதகைக்குத் தூது அனுப்ப வேண்டிய அவசியமில்லையல்லவா?"

"நீங்களே ஏறக்குறைய சுயேச்சையாக என்று குறிப்பிட்டு விட்டீர்கள். உண்மை அதுதான். சேர அரசரான பெருமாளுக்குப் பெயரளவிலாவது ஒரு அதிகாரம் இருக்கத்தான் செய்கிறது அதனால் அவருக்கும் செய்தி தெரிவிப்பதே முறையாக இருக்கும்"

"என்னவென்று செய்தி அனுப்புவதாக உத்தேசம்?"

"காந்தளூர்ச் சாலையின் சட்டர்களைச் சோழப் படைகள் சந்திக்க விரும்புகின்றன என்று!" - பல்லவராயரின் குரல் ஏனோ சற்று தயக்கத்துடன்தான் ஒலித்தது.

21. திண்ணைப் பேச்சு



"நம்மைத் தேடி வந்த நபர்கள் யாரைப் பார்ப்பதற்குக் கூலிக்காரர்களைப்போலத் தெரிந்தார்கள். ஆக அவர்களை அனுப்பி விட்டது வேறு யாரோ என்று... அப்படி யார்தான் நம்மைத் தேடி வந்து கொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்கு நம்மிடம் ஆகவேண்டிய காரியம் என்ன ஒன்றுமே புரியவில்லையே?"

"சொல்லிவைத்தாற்போல் அங்கே பிஷு வந்து நம்மைக் காப்பாற்றியதும்கூட புரியாத புதிராகத்தான் உள்ளது. மட்டுமா? அந்தக் கூலியாட்களில் ஒருவனின் முகத்தை விளக்கொளியில் கண்டேன். சரிவரப் பார்க்கமுடியா...

...ஆனாலும் அவனை நிச்சயம் முன்பு எங்கோ ஓரிடத்தில் - ... தேசத்தில் சந்தித்திருக்கிறேன் என்று தோன்றுகிறது"

"சரியாய்ப் போயிற்று! . அப்படியானால் நம்மைப் ... வந்தவர்கள் பாண்டி மண்டலத்தவரோ வேறு ...நாட்டவரோ என்று பிஷு புகன்றது?"

"அவருக்கே தெரியாமல் இருக்கலாம். நண்பரே! நாம் ... இந்த விவகாரத்தில் ஒரு சோ... ...டிருக்கிறோம். மாட்டிக் கொண்டிருக்கிறோம் என்று ... கூறலாம். உங்களிடம் நான் இதுவரைப் பல ...களைத் தெரிவிக்கவில்லை. அரசாங்க இரகசியங்கள் ...தால் அதனைச் சொல்லாமல் தவிர்த்தேன் ஆனால் ... சம்பவங்களனைத்தையும் நோக்கும்போது இனியும் ...இருப்பது நல்லதல்ல என்று மனதிற்குப் படுகிறது ... நான் சொல்லப்போவதை எச்சரிக்கையுடன் ...கொடுத்துக் கேளுங்கள்..."

...க்கப்போகும் நீண்ட உரையாடலுக்கு ...முரையாகத் தன்னருகிலிருந்த மண் கலயத்திலிருந்து ... நீரை வாயில் புகட்டிக் கொண்டார் ... மார்கழி மாதத்தின் இரவு நேர வாடைக்காற்று ... முகத்தை வருடிக் கொண்டு சென்றது

நண்பர்களிருவரும் தொண்டியிலிருந்து கொற்கைக்குச் ... வழியில் ஒரு பெயர் தெரியாத கிராமத்தில் ...தொரு குடிசையின் திண்ணையில் ஓய்வெடுத்துக் ...கொண்டிருந்தார்கள். அக்குடிசை அமைந்திருந்த வாரப்பிற்குச் ... தூரத்தில் ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலின் கரையில் ...களைச் சுமந்து வந்த புரவிகளிரண்டும் கரையோரத்துப் ...களை மென்று தின்றுவிட்டு வாய்க்காலின் நீரை ...மாகப் பருகித் தாகசாந்தி செய்துகொண்டிருந்தன.

"பல்லவராயரே! நான் தொண்டை மண்டலத்தின் ... என்பதாக உங்களிடம் அறிமுகப்படுத்திக் ...ன். உண்மையில் நான் வெறும் வீரனல்ல ... நாயகம். தொண்டை மண்டலத்தின் வட பகுதியில் ...பாடியையொட்டித் தண்டூன்றியிருக்கும் நமது ... ஒரு பகுதிக்கு நான் நாயகம் செய்கிறேன் ...மண்டலத்தின் திருப்பழனத்தில் பிறந்தாலும் ... வாழ்வின் முக்கியப்பகுதி தொண்டை ...த்தில்தான் கழிந்தது சில வருடங்களுக்கு முன் ... சாளுக்கிய மன்னரான இரண்டாம் தைலபர்

தொண்டை மண்டலத்தின் மீது படையெடுத்து வந்தபோது அவரது படைகளை நமது சைனியம் வீறுடன் எதிர் கொண்டது. அந்தப் போரில் நமது சைனியம் காட்டிய வீரம் பலரது செவிகளை - குறிப்பாகத் தற்போது சோழப் பேரரசராக விளங்கும் அருள்மொழிவர்மரின் காதுகளை சென்றடைந்தது என்னும் விபரம் அப்போது எனக்குத் தெரியவில்லை.

இன்று சோழ சாம்ராஜ்ஜியத்தின் தூண்களில் ஒருவராக விளங்கும் இராஜராஜப் பல்லவராயர் சிறு பிராயம் முதல் என்னை நன்றாக அறிவார். என்னுடைய தந்தையாருக்கும் அவருக்குமிருந்த தொடர்பினால் என் வளர்ச்சியில் பிரத்யேக அக்கறை செலுத்தினார் என்று கூறலாம். உத்தம சோழருக்குப் பின் அருள்மொழிவர்மர் பதவியேற்றபோது பல முக்கிய அதிகாரிகள் மாற்றத்திற்கு உள்ளானார்கள். மாற்றமடையாத ஒரே நபர் பல்லவராயர்தான் என்பதை நீங்கள் ஊன்றிக்கவனிக்க வேண்டும். அந்த அளவிற்குப் பல்லவராயர் சோழ சாம்ராஜ்ஜியத்தில் மிக முக்கியமானவர்.

ஏறக்குறைய ஒரு திங்களுக்கு முன்னால் ராயர் என்னைத் தொடர்பு கொண்டார். தஞ்சையில் பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் பேரரசர் அருள்மொழிவர்மர் சளுக்கப் படையெடுப்பில் நமது சைனியம் ஆற்றிய தொண்டை மிகவும் சிலாகித்துப் பேசியதாகவும் சில முக்கிய அந்தரங்க வேலைகளுக்கு நம்பிக்கையான பொறுப்பான மனிதர்கள் அவசரமாகத் தேவைப்படுவதால் உடனே புறப்பட்டு வந்து விடும்படியும் எழுதியிருந்தார். நானும் எனது சைனியத்தை எனக்கடுத்த பொறுப்பிலிருந்தவரிடம் ஒப்புவித்துவிட்டு தஞ்சைக்கு வந்து சேர்ந்தேன்.

வந்தபின்தான் பேரரசர் நாகைப்பட்டினத்திற்குச் சென்று விட்டதாக அறிந்தேன். நானும் பல்லவராயரும் கிளம்பி நாகையில் அவரைச் சந்தித்தோம். பேச்சோடு பேச்சாக திடீரென்று நான்தான் மலைநாட்டுப் படையெடுப்பை முன்னின்று நடத்தப்போகும் தளபதி என்று அரசர் அறிவித்து விட்டார்! எனக்கோ கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை பேரரசரே நம்மை நம்பி இத்தனை பெரிய பொறுப்பை ஒப்படைக்கிறாரே, இதற்கு நாம் தகுதியுடையவர்தானா? இதற்குரிய அனுபவம் நமக்கு உண்டா? மலைநாட்டுப் பகுதிகள் நமக்கு முற்றிலும் பழக்கமில்லாத பகுதிகளாயிற்றே? என்று பல வகைகளிலும்

[illegible]கமடைந்தேன். அன்று மாலை [illegible]தரதிட்ட [illegible]வாரையின் தலைமை ஆச்சாரியரான மஹா காசியப [illegible]டன் பேரரசர் அனந்தபுரத்தின் காந்தளூர்ச் சாலை [illegible]காரத்தை விரிவாக விவாதித்ததாகப் பல்லவராயர் [illegible]னர் குறிப்பிட்டார்."

"என்ன? காந்தளூர்ச் சாலையா? கேள்விப்பட்ட [illegible]கத்தான் இருக்கிறது. ஆனால் எங்கு அமைந்துள்ளது [illegible]தை நான் அறிந்ததில்லை. மலைநாட்டுப் [illegible] யெடுப்பைப் பற்றியல்லவா [illegible] [illegible]ண்டிருந்தீர்கள்? இதில் காந்தளூர்ச்சாலை திடீரென்று [illegible]ருந்து முளைத்தது?"

"மலைநாட்டு அரசியல் பின்புலத்தையும் அதற்கும் [illegible]நருக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் [illegible]ந்தவற்றைத் தனியாகக் கூறுகிறேன். இப்போது நான் [illegible] வந்ததைக் கேளுங்கள். விஹாரையின் [illegible]ரியாருடன் சாலை விவகாரத்தை பேரரசரும் [illegible]வராயர் முதலானோரும் விவாதித்தனர் என்று [illegible]டேனல்லவா? அங்குதான் சில முக்கிய முடிவுகள் [illegible]கப்பட்டிருக்கின்றன என்று தோன்றுகிறது. பல்லவ[illegible] விவரித்த பின்புதான் இது வழக்கமான படையெடுப்[illegible] பல அரசியல் மற்றும் சமுதாயச் சிக்கல்களை [illegible] க்கிய விவகாரம் என்பதே புரிந்தது. எந்த விதமான [illegible]க்கு அருள்மொழிவர்மர் என்னைத் தளபதியாக [illegible]த்திருக்கிறார் என்பதையும் அந்நேரம்தான் நான் [illegible]ந்தேன்..."

[illegible]யாருக்குப் பல கேள்விகள் நாவின் முனையில் [illegible] நின்றன. என்றாலும் கம்பன் மணியனாரின் [illegible]த் தடங்களை கலைத்துவிடக்கூடாது என்பதால் [illegible]க்கையுடன் மௌனம் காத்தார்.

"இடையே காம்போஜத்திலிருந்து இந்த பிக்ஷு அங்கிருந்து [illegible] வந்து சேர்ந்தார். அவருக்கும் அருள்மொழி[illegible] [illegible]ம் முன்பே பழக்கம் இருந்திருக்கும் [illegible]க்கிறது. பிக்ஷுவின் திருமுகத்தைக் கவனித்தீர்களா? [illegible] எங்கோ எப்போதோ பார்த்த முகம் போலில்லை?"

[illegible]யாருக்கு மணியனாரைவிட சற்று [illegible]கவே அந்த முகத்தை எங்கு பார்த்தோம் என்பது [illegible] நின்றது. மிகக் கூர்மையாகத் தான் பார்க்கும் [illegible] விஷயங்களையும் உள்வாங்கிக்கொள்ளும்

ஆற்றல் இயல்பாகவே கைவரப்பெற்றிருந்த அவருக்கும் பிஷுவின் முகம் இன்னாருடையதைப் போலத்தான் இருக்கிறது என்பது புரிந்தது. என்றாலும் அது சற்றே சிக்கலான விவகாரம். அதற்குள் நுழைந்தால் இந்த உரையாடல் வேறு திசையில் திரும்பிவிடும் என்பதால் தன்னுடைய சிந்தனைகளுக்குக் கடிவாளமிட்டுக் கொண்டவர் சர்வ சாதாரணமாக "ஆம். எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது" என்று பதிலிறுத்தார்.

"பிஷு ஆனந்தர்தான் உங்களை இந்த விவகாரத்தில் வலுக்கட்டாயமாகப் பிணைத்துவிட்டார். அதற்காக அவர் உங்களிடமிருந்து நன்றிகளைப் பெறப்போகிறாரா? அல்லது வசவுகளை வாங்கிக் கட்டிக்கொள்ளப் போகிறாரா? என்பது இன்னமும் தெரியவில்லை..."

மணியனாரின் முகத்தில் பூத்த முறுவல் இப்போது மழபாடியாருக்கும் தொற்றிக் கொண்டது.

"மேலே சொல்லுங்கள்."

"பிஷுவும் அருள்மொழிவர்மரும் மிக நீண்ட நேரம் அந்தரங்கமாக விவாதித்தார்கள். என்னவெல்லாம் விவாதித்தார்கள், என்னென்ன விதமான முடிவுகள் எடுக்கப் பட்டன என்பவற்றையெல்லாம் என்னால் அறிய முடியவில்லை. ஆனால் இரவோடிரவாக உங்களைப் பார்த்தேயாக வேண்டும். மறுநாள் காலை நாமிருவரும் நாகையிலிருந்து இரகசியமாகக் கிளம்பியேயாக வேண்டுமென்று பிஷு வற்புறுத்திக் கூறினார். நானாதேசி வணிகர்களின் குழுத்தலைவருக்கும் இரவோடிரவாக முறியொன்று அனுப்பப்பட்டது. அவரும் உரிய ஏற்பாடுகளைச் செய்து வைத்தார். நாமும் திட்டமிட்டபடி கிளம்பினோம்."

"பிஷு எதற்காக இந்தப் பணிக்கு என்னைத் தேர்ந்தெடுத்தார் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வில்லையே தவிர அவருடைய மனதில் ஏதோ சில காரணகாரியங்கள் உள்ளன என்பதை நான் புரிந்து கொண்டேன்" என்றார் மழபாடியார் மெல்லிய குரலில் அவருடைய பாட்டனார் குருகாடியூர்ச் செல்லக்கிழானைப் பற்றிச் சொன்னபோது அந்த பிஷுவின் முகத்தில் சட்டென்று ஒரு கணம் பளிச்சென்று பூத்த ஒளி! அது மட்டுமா? தஞ்சைப் பெரிய செண்டு வாயில் திருச்சித்திரக் கூடத்தில் பார்த்த அந்த மறக்கவே முடியாத திருமுகம்....

"இத்தனை எச்சரிக்கையாகச் செயல்பட்டும் நாம் தொண்டியில் கண்டறியப்பட்டிருக்கிறோம் என்பதுதான் ஆச்சரியமானது!"

"கூலிக்காரர்கள் தேடிவந்த ஆட்கள் நாம்தானா என்பதை அறியாதவரை அதனை உறுதிபடக் கூறவியலாது. தொண்டிச் சம்பவம் ஒரு பக்கம் கிடக்கட்டும். மலைநாட்டின் பின்புலத்தையும் காந்தளூர்ச் சாலை விவகாரத்தையும் விவரிக்கிறேன் என்றீர்களே? அதனை சற்று விபரமாகக் கூறுங்கள்" என்றார் மழபாடியார்.

"சரி சொல்கிறேன்..." என்று துவங்கிய மணியனார் நாம் முன்பு சென்ற அத்தியாயங்களில் விவரித்த மலைநாட்டின் அரசியல் மற்றும் சமுதாயப் பின்புலங்களை தாம் புரிந்துகொண்ட வகையில் சுருக்கமாக விவரித்தார்.

"மலைநாட்டுத் தென்பகுதிகளைப் பொறுத்தவரையில் நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டிருக்கிறேன். அதாவது சங்ககாலம் முதற்கொண்டே நீங்கள் குறிப்பிடும் மலை நாட்டின் தென் பகுதிகளை ஆண்டுகொண்டிருந்த ஆய்வேளிர், நூறு வருடங்களுக்கு முன்புவரை கூட தனிநிலையில்தான் இருந்தார்களாம். அவர்களை முழுவதுமாக நசிப்பித்த பெருமை பாண்டியர்களையே சாரும். பாண்டிய அரசர்களான ஸ்ரீமாற ஸ்ரீவல்லபரும் வரகுண பாண்டியரும் ஆய்வேளிர் ஆண்டு கொண்டிருந்த சேரர் கோட்டையைப் பிடித்து விட்டார்களாம் இந்த முற்றுகைகளுக்குப் பின்னர் பாண்டியர்களுக்குத் திறை செலுத்தும் குறுநில மன்னர்களாகத்தான் அவர்களால் இருக்க முடிந்தது" என்றார் மழபாடியார்.

"உண்மைதான். ஆய்வேள் வம்சத்தவரில் கடைசி மன்னராகக் குறிப்பிடப்படும் விக்கிரமாதித்தர் தன் பெயருடன் வரகுணரின் பெயரை இணைத்துக்கொண்டு விக்கிரமாதித்த வரகுணர் என்றுதான் அறியப்பட்டாராம். தொடர்ச்சியாகப் பாண்டியப் படைகளிடம் அடைந்த தோல்வி ஆய்வேளிர் மன்னர்களைக் கடுமையாகப் பாதித்துவிட்டது இனி நாடுவாழிப் படைகளை மட்டும் நம்பிப் பயனில்லை என்றுதான் மலைநாட்டின் சாலை போன்ற ஸ்தாபனங்களை வெகுவாக ஆதரிக்கத் துவங்கினார்களாம். மகாதேவர் கோயிலுடன் இணைந்த காந்தளூர்ச் சாலை, விண்ணகரக் கோயிலுடன் இணைந்த பார்த்திவசேகரபுரத்துச் சாலை முதலானவை இந்தக் கால

கட்டத்திற்குப் பின்புதான் மிகுந்த வீரியம் கொண்டு எழுந்தன. அரசியலில் பெருமுக்கியத்துவம் பெறத்துவங்கின என்கிறார்கள்...."

"ஆக ஒரு வகையில் நாம் சேரமான் பெருமாள் ஆண்டு கொண்டிருக்கும் மகோதகைப் பகுதிகளைத் தாக்கவில்லை. பாண்டிய ஆதிக்கம் நிலைபெற்றிருக்கும் ஆய்நாட்டைத்தான் தாக்கப்போகிறோம் என்று சொல்லலாமா?"

விழிகள் விரியப் பரமன் மழபாடியாரை நோக்கினார் மணியனார். வீரம் மட்டுமல்ல, அரசியல் விவேகமும் நிரம்பக் கைகூடிவரும் அதிசயமான இளைஞர் இவர் என்னும் எண்ணம் அவரது மனதில் அக்கணம் தோன்றியிருக்க வேண்டும்.

"சொல்லலாம்தான். ஆனால் நான் முன்பு குறிப்பிட்டதைப் போல் இப்படையெடுப்பை வழக்கமான போர்களுக்கு ஒப்பிட முடியாது. அருள்மொழிவர்மரின் முக்கியக் குறி காந்தளூர்ச் சாலைதான். மற்ற எதுவுமே அல்ல...!"

"காந்தளூர்ச்சாலையில் ஆயிரம் விவகாரங்கள் நடக்கட்டும். அதில் சோழநாட்டுக்கெதிராக ஆயிரமாயிரம் இரகசிய அரசியல் சதிகள் தீட்டப்படட்டும். ஒவ்வொரு சட்டனும் பட்டனும் சோழருக்கும் அருள்மொழி வர்மருக்கும் சூழ்ச்சிகள் செய்வதாகவே வைத்துக் கொள்வோம்! இருந்தாலும் பகிரங்கமாக அவர்கள் நம்மை எதிர்த்து நிற்காத வரையில் அந்தப் பழமையான கல்வி கேந்திரத்தை நம்மால் தாக்குவதென்பது இயலாது அவர்கள் சட்டென்று எழுந்து நின்று நீங்கள் கேள்விப்பட்டவை யெல்லாம் வீண் வதந்தி. பாண்டிய நாட்டவர் பரப்பிவிட்ட சதி! எங்களுடைய கவனமெல்லாம் மாணவர்களைப் பயிற்றுவிப்பதில்தான் இருக்கிறது! என்று கைவிரித்துவிட்டால் நிலைமை மேலும் சிக்கலாகி விடும். இந்தச் சூழ்நிலைகளை மனதில் கொள்ளாமல் நேரடியாக நாம் சாலையைத் தாக்குவோமேயானால் மக்களின் நன்மதிப்பை ஒட்டு மொத்தமாக இழக்கவேண்டி வரும்."

"நிச்சயமாக. இது ஒரு விஷயம் மிகக் கடுமையாக பலமுறை பல வடிவங்களில் அருள்மொழிவர்மரும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது."

"ஒன்று கேட்கிறேன். இரவிநீலி குடும்பத்தார் தம் ... னார் ஆதித்த கரிகாலரை வஞ்சகமாக வீழ்த்தியதில் ... இந்தப் பிரச்சனை அத்தனையுமே தொடங்கியது என்றீர்கள். அப்படியெனில் அவர்களுக்கு சோழ ... லத்திலேயே ஒட்டு மொத்தமாக ஒழித்துக் கட்டாமல் அவர்களின் நிலங்களை மட்டும் பிடுங்கிவிட்டு நாடு கடத்தி... இப்போது சம்மந்தமில்லாமல் சாலையின்மீது படையெடுப்பு அது இதுவென்று..."

சட்டென்று மழபாடியாருக்கு மிகப்பெரிய விஷயம் ஒன்று புலனாகத் தொடங்கியது! மிக மிகப் பெரிய விஷயம் சம்மந்தமில்லாதவைபோல் தெரியும் சம்பவங்களுக்குள்ளே ஓடிக்கொண்டிருக்கும் அந்த மைய இழை... அருள்மொழி வர்மரின் செயல்பாடுகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் அந்த அந்தரங்க நோக்கம்... அதிர்ச்சியில் சட்டென்று திண்ணையிலிருந்து எழுந்துவிட்டார் அவர்!

"என்ன... என்ன ஆயிற்று?"

"ஒ...ஒன்றுமில்லை...."

மழபாடியார் தன்னைச் சமாளித்துக் கொள்ள ... ாதபாடு படவேண்டியிருந்தது.

அடுத்த கணமே அருள்மொழிவர்மர் அவருடைய ... த்தில் தோன்றினார். ஒரு சிறிய இழை பிடிபட்டதற்கே இத்தனை தூரம் நம்மை நாமே மெச்சிக் கொள்கிறோமே ... ன் முக்கிய சூத்திரதாரியான அவர் எத்தனை பெரிய ... ளி? நுட்பமான இந்தத் திட்டத்தை அவர் எத்தனை ... யமாகத் தீட்டியிருக்க வேண்டும்? ஏகப்பட்ட ... சியைக் கிளப்பிவிட்டுவிட்டு அதில் எதிரியின் ... பார்வை மங்கியிருக்கும் நேரத்தில் முன்னேறிப் பாய்வது ... ால் சம்மந்தமில்லாததொரு அரசியல் புழுதியைக் கிளப்பி பேரரசர்மேல் மழபாடியார் கொண்டிருந்த ... தை அந்த நேரத்தில் வானளாவ உயர்ந்தது. அவரைப் புரிந்து கொள்வது மிகக் கடினம் என்பது பிடிபட்டது

"ஹிஹிஹீஹீ!"

இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு வாய்க்கால் ... யோரத்திலிருந்து எழுந்த புரவிகளின் கனைப்புக் குரல் மழபாடியாரைத் திடுக்கிடச் செய்தது.

"மணியனாரே! வாளை உருவிக்கொள்ளுங்கள். ஏதோ ஆபத்து..."

இளையவருக்காகக் காத்திராமல் தன் குறுவாளுடன் திண்ணையிலிருந்து கணத்தில் குதித்து கரையோரத்தை நோக்கிப் பாய்ந்தோடினார் பரமன் மழபாடியார்.

22. தேவநாக பண்டிதர்



புரவிகளின் கனைப்புச் சப்தம் விடாமல் கேட்டதால் பரமன் மழபாடியார் ஒரே ஓட்டத்தில் அவை கட்டப்பட்டிருந்த வாய்க்காலின் கரையை அடைந்தார். ஆறாவது அறிவு கைவரப்பெறாத உயிர்களாக இருந்தாலும் தெளிவும் கூர்மையும் வரப்போகும் ஆபத்தை முன்னுணரும் நுகர்ச்சியும் நிரம்பப்பெற்ற மிருகங்கள் என்பதால் அரேபியப் புரவிகளிடம் பொதுவாகவே அவருக்கு தனிப்பட்ட ஈடுபாடு இருந்தது. ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் புரவிகள் காரணமா இல்லாமல் கனைக்க மாட்டா என்பது திண்ணம்.

மங்கிய நிலவொளியில் புரவிகள் பயந்ததற்கான காரணத்தை அவர் கணத்தில் கண்டறிந்தார். வாய்க்கால் கரையில் புரவிகள் கட்டப்பட்ட இடத்திற்கருகே ஒரு நீண்ட கருநாகமொன்று கரையேறியிருந்தது. வாய்க்காலின் நீரில் நீந்தி வந்ததாலோ என்னவோ அதன் உடல் மெல்லிய நிலவொளியிலும் நன்கு பளபளத்துக் கொண்டிருந்தது.

கரையேறிய நாகம் நிலத்தின் அதிர்வுகளைக் கொண்டும் உஷ்ணத்தைக் கொண்டும் ஏதோ ஜந்துக்கள் அங்கிருப்பதை உணர்ந்திருக்க வேண்டும். எதற்கும் தனது இருப்பைக் காட்டி முதலில் எச்சரிப்போம். மீறித் தாக்கினால் பார்த்துக் கொள்ளலாம் என்கிற தன்னம்பிக்கையுடன் தனது படத்தைப் பெரிதாக விரித்து "புஸ்...புஸ்..." என்று சீறியிருக்க வேண்டும்.

பாவம்! புரவிகள் நிலைதான் பரிதாபமானது. அவற்றின் கால்கள் வரப்பில் கட்டப்பட்டிருந்ததால் தப்பியோடவும் முடியாமல் எதிர்த்து நிற்கவும் முடியாமல் அஞ்சிப் பெருங் குரலெடுத்துக் கனைக்கத் துவங்கியிருந்தன.

நிலைமையை ஷணநேரத்தில் உணர்ந்துவிட்ட மழபாடியார் அருகிலிருந்த நீண்டதொரு கவட்டைக் கழியால் நாகத்தை மீண்டும் வாய்க்கால் நீரிலேயே தள்ளிவிட்டார். புரவிகளை நெருங்கி வந்து தட்டிக் கொடுத்துச் சமாதானம் செய்தார். அவற்றின் மேனி மெல்ல இன்னமும் நடுங்கிக்கொண்டுதான் இருந்தன. இத்தனை கூருணர்ச்சி நிரம்பிய பிராணியை நம்பாமல் கட்டி வைக்கிறோமே! என்று தன்னைத்தானே ஒரு கணம் நொந்து கொள்ளத் தோன்றியது.

"என்ன? என்ன ஆயிற்று?" என்று வினவியபடி அடுத்த கணமே கம்பன் மணியனாரும் கரைக்கு ஓடோடி வந்து சேர்ந்தார்.

"கருநாகமொன்று புரவிகளை பயமுறுத்திக் கொண்டிருந்தது. விரட்டிவிட்டு விட்டேன் இனிமேலும் இந்தப் பகுதியில் இவற்றைக் கட்டி வைப்பது நல்லதல்ல நமது குடிசைக்கருகிலேயே ஒரு புன்னை மரம் இருக்கிறதல்லவா? அங்கே சிறிது வைக்கோலைப் போட்டு தண்ணீரையும் விட்டு விடுவோம். இரவு நல்ல ஓய்வெடுக்கட்டும். அப்போதுதான் விடியலில் புறப்பட முடியும்..."

நண்பர்கள் இருவருக்குமே களைப்பு அதிகமாக இருந்ததால் மேற்கொண்டு தங்களின் திண்ணைப் பேச்சைத் தொடர முடியாமல் சுருண்டு படுத்துவிட்டனர். இருவரும் நள்ளிரவுக்குமேல் எழுப்பிய குறட்டைக் கச்சேரியினால் குடிலிற்குள் படுத்திருந்தவர்கள் பெருந்தொல்லைக்கு ஆளானார்கள். என்றாலும் விருந்தினர்கள் எனும் மரியாதையினால் அந்தத் தொந்தரவுகளைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

* * * * * * * *

மறுநாள் காலை எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு முதல் இரண்டு நாழிகைகளுக்குள் புறப்பட்டுவிடுவோம் என்று திட்டமிட்டிருந்த நண்பர்களுக்கு எதிர்பாராத பிரச்சனையொன்று வந்து சேர்ந்தது

முதல் நாள் சர்ப்பத்தைப் பார்த்து பயந்ததாலோ என்னவோ புரவிகளுள் ஒன்றுக்குக் காய்ச்சல் கண்டுவிட்டது. அதன் உடல் கொதித்துக் கொண்டிருக்க,

வயிற்றுப் பகுதியும் முன்கழுத்தும் இடைவிடாமல் நடுங்கிக் கொண்டிருந்தன. நல்ல ஜாதிப்புரவியான அதனை அங்கேயே விட்டுவிட்டுச் செல்வதற்கும் மனம் வரவில்லை. அவர்கள் தங்கியிருந்த கிராமத்திலிருந்து எட்டு காத தூரம் வடமேற்கே சென்றால் பனையூர் என்றொரு ஊர் வருமென்றும் அங்கு வைத்தியர்கள் பணிபுரியும் ஆதுலர் சாலையொன்று அமைந்துள்ளதென்றும் கிராமத்தார் தெரிவித்தார்கள். அங்கே புரவிகளுக்கு வைத்தியம் பார்ப்பார்களா இல்லையா என்பதற்கு உறுதியான பதில் கிடைக்கவில்லை.

அவர்கள் பிரயாணம் செய்யவேண்டிய திசைக்கு நேர்மாறான திசையில் பனையூர் அமைந்திருந்தது என்றாலும் அடுத்தபடியாக எந்த ஊரில் மருத்துவ வசதி கிடைக்கும் என்று தெரியாமல் திண்டாடுவதைவிட பனையூருக்கே சென்று ஒரு முயற்சி செய்து பார்ப்பது என்று நண்பர்களிருவரும் சிறிது நேர விவாதத்திற்குப் பின் முடிவு செய்தார்கள்.

கிராமத்துப் பாதையில் அந்த காலை நேரத்தில் அடி மேல் அடி வைத்து நடைபாதைப் பயணத்தை மேற்கொள்வ தென்பது சுகமான அனுபவமாகவே இருந்தது. பல நாட்கள் இரவிலும் பகலிலும் புரவிகளில் பயணித்தே பழக்கப்பட்டு விட்ட உடலுக்கு நடைப்பயணம் உற்சாகமளித்தது. பனையூருக்குச் செல்லும் பாதை சிறியதொரு வாய்க்காலின் கரையையொட்டியே சென்று கொண்டிருந்ததால் அந்த அதிகாலை நேரத்தில் நீரில் விளையாடிக்கொண்டிருந்த வாத்துக்களும் வாய்க்காலின் சின்னஞ்சிறிய மீன்களைக் கொத்த முயலும் வண்ண வண்ண மீன்கொத்திப் பறவைகளும் ஆங்காங்கே நெளிந்து கொண்டிருந்த நீர்ப் பாம்புகளும் அவர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்தன.

"இந்த இராஜாங்க வேலைகளையெல்லாம் ஒரு மூட்டைதாகக் கட்டி வைத்துவிட்டு இதுபோன்ற அமைதியான கிராமமொன்றில் பேசாமல் விவசாயம் செய்து கொண்டு வாழ்க்கையைக் கழித்துவிடலாமா என்று அவ்வப்போது தோன்றுகிறது. இங்கே படர்ந்திருக்கும் அமைதிக்கும் நாம் உலவும் படபடப்பு நிறைந்த உலகத்திற்கும்தான் எத்தனை வித்தியாசம்?"

"படபடப்பு நிறைந்த உலகத்திலிருந்து வருவதனால்தான் இந்த அமைதியையும் அழகையும் உங்களால் இரசிக்க

படுகிறது. இங்கேயே கிராமத்தில் இருக்கும் மனிதர்களின் கண்களை சற்றே உற்றுக் கவனியுங்கள். தாங்கள் உலவும் உலகத்தின் உன்னதத்தை அவர்களில் பெரும்பாலானோர் அறியார்கள். ஆக, இரண்டுமே தேவை என்று என் குருநாதர் கூறுவது வழக்கம். ஒன்று செயல்பாடுகள் நிறைந்த உலகம், மற்றது செயல்பாடுகளற்ற அமைதியான உலகம். ஒன்றை இராஜஸம் என்றும் மற்றதை தாமஸம் என்றும் கூறிவிடுவார்கள். இரண்டுக்கும் மத்தியில் அமைந்திருக்கிறது சத்துவ உலகம்..."

"நீங்கள் நிறைய சாத்திரங்களையும் நூல்களையும் கற்றவர்போல் தெரிகிறது?" என்று வியந்தார் இளையவர். உருவுகண்டு எள்ளாமை வேண்டும் என்னும் தெய்வப்புலவரின் கூற்றுதான் எத்தனை உண்மையானது? ஏதோ நாகையின் கடகத்திலிருக்கும் சாதாரண வீரர் பாதுகாவலுக்காக நம்முடன் வருகிறார் என்றல்லவா நினைத்திருந்தோம்? இவருடைய நீள அகலங்களை நாம் இன்னமும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை போலிருக்கிறதே? உண்மையில் இவர் வெறும் கடக வீரர்தானா அல்லது ஏதாவது பெரிய இடத்தைச் சேர்ந்த ஆளையா?

"அட, அதெல்லாம் ஒன்றுமில்லை. பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும் என்பார்களே? அந்தக் கதைதான் என்னுடையது."

"நீங்கள் அடக்கத்தின் காரணமாக அப்படிக் குறிப்பிட்டுக் கொள்கிறீர்கள்."

"கிடக்கட்டும். நேற்று நாம் பேசிக்கொண்டிருந்த விஷயங்கள் தொடர்பாகத் தங்களைச் சில கேள்விகள் கேட்கலாமா? மலைநாட்டின் பின்புலம், காந்தளூர்ச்சாலைப் படையெடுப்பு என்று பலவற்றையும் நேற்றிரவு நாம் விரிவாகப் பேசினோம். ஆனால் தற்போது தங்களுக்கிட்டிருக்கும் பணி என்ன? எதற்காகத் தெற்கே இத்தனை தூரம் சென்றுகொண்டிருக்கிறோம்? என்பதைப் பற்றித் தாங்கள் ஒன்றுமே கூறவில்லை. அதனைப் பற்றிய முழு விபரங்கள் உங்களுக்குத் தெரியுமா? பகிர்ந்து கொள்ளக்கூடிய விஷயமாக இருந்தால் அறிய ஆவலாக இருக்கிறேன்."

வீரமும் விவேகமும் நிரம்பிய இந்த இளைஞர் எதிர்காலத்தில் பிரகாசமாக வருவார். இவரை வெறும்

மெய்க்காவல் வீரராக மட்டும் பார்ப்பது அவருக்கு நாம் புரியும் இழுக்கு. ஏதோ ஒரு முக்கியக் காரணத்தினால்தான் பிஷு குறிப்பாக இவரை நம்முடன் பிணைத்திருக்கிறார் என்னும் எண்ணம் ஏற்கனவே இளையவர் மனதில் உறுதியாகக் குடிகொண்டுவிட்டது. அதன் காரணமாகத் தான் முதல் நாளிரவு பல விஷயங்களை மழபாடியாருடன் மனம் விட்டுப் பகிர்ந்துகொள்ள முடிந்தது. இப்போது இந்த வீரர் கேட்கும் கேள்வியும் சாதாரணக் கேள்வியல்லவே? சில வினாடிகள் யோசித்தார் மணியனார். பின்பு தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேசத்துவங்கினார்.

"மழபாடியாரே! நாம் சோழ ராஜாங்கத்தின் மிக மிக முக்கியமான இரு இரகசிய ஓலைகளை நாம் சுமந்து செல்கிறோம். இவற்றுள் ஒன்று காந்தளூர்ச்சாலையின் ஆச்சாரியார் திருநாராயண பட்டதிரிக்கு எழுதப்பட்டது மற்றது எவருக்குரியது என்பது இன்னமும் தெரிவிக்கப் படவில்லை. பிஷு அதனைத் தகுந்த நேரத்தில் தெரிவிப்பார் என்று பேரரசர் மொழிந்தார் இந்த ஓலைகள் குறிப்பிட்ட நபர்களிடம் நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும் அவர்கள் மட்டுமே இதனைப் பிரித்துப் படிக்க வேண்டும் எக்காரணம் கொண்டும் வேறு எவர் கைகளிலும் இந்த ஓலைகள் அகப்பட்டுவிடக்கூடாது என்பது அவருடைய உறுதியான கட்டளை. மீறி இந்த ஓலைகளுக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டால் உடனடியாக அவற்றை அழித்துவிட எனக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது"

மழபாடியார் தலையை நிமிர்த்தி கம்பன் மணியனாரின் முகத்தை நேருக்கு நேராக நோக்கினார்.

"ஆக நீங்கள் சோழ இராஜாங்கத்தின் தூதுவராக செய்தியைச் சுமந்து செல்கிறீர்கள். அல்லவா?"

"இல்லை. இது தூது அல்ல. நமது அரசாங்கத்தின் தூதர்கள் முறைப்படி சேர நாட்டிற்கு பகிரங்கமாக அனுப்பிவைக்கப்பட இருக்கிறார்கள். நமது பணி இரகசியப் பணி. நமது கைகளில் இருப்பது இரகசிய ஓலை."

"இன்னாரிடம் ஓலைகளை சேர்ப்பித்துவிடு என்று நேரடியாகக் கூறாமல் கொற்கைக்கு வா! தொண்டிக்கு வா என்று ஆனந்த தேரர் நம்மை இழுத்தடிப்பது எதற்காக?"

"அது ஓரளவிற்கு எனக்குப் புரிகிறது. விஷயம் என்னவெனில் வியூகங்கள் அன்றாடம் மாறிக்கொண்டி

ருக்கின்றன. ஒற்றர்களிடமிருந்து பலவகையான செய்திகள் தினமும் பேரரசரை வந்தடைந்து கொண்டிருக்கின்றன அதற்கேற்றாற்போல் நமது பணியின் தன்மையும் மாறக்கூடும். அதனால்தான் நேரடியாகக் காந்தளூருக்குப் போகச் சொல்லாமல் குறிப்பிட்ட இடம்வரை மட்டும் வரச் சொல்கிறார்கள். இது என்னுடைய யூகம் மட்டுமே உண்மையில் ஆனந்தர் என்ன நினைத்திருக்கிறார் என்பதை அந்தப் புத்தபகவானே அறிவார்!"

"பிஷு ஆனந்தருக்கு அரசியலில் ஏன் இத்தனை ஈடுபாடு?"

"அது ஏனென்பது புரியவில்லை. ஆனால் அருள்மொழி வர்மருக்கும் ஆனந்த தேரருக்கும் மிக மிக நெருக்கமான அந்தரங்கமான நட்பும் உறவும் நிலவுகின்றன. பேரரசருக்குச் செய்யும் உதவியாக ஆனந்தர் இதனை நினைக்கக்கூடும் அல்லது வேறு ஏதேனும் இரகசிய காரணங்கள் உள்ளனவோ என்னவோ!"

அவர்களின் பேச்சு சட்டென்று தடைபட்டது [illegible] எதிர்ப்பாதையில் மெள்ள நடந்து வந்து கொண்டிருந்ததொரு முதியவர் அவர்களின் கவனத்தை முழுவதுமாகக் கவர்ந்துவிட்டிருந்தார்.

நல்ல உயரம். ஓரளவிற்கு நீண்ட தாடி மீசை [illegible] ண்டுமே பெரும்பாலும் நரைத்துவிட்டிருந்தன [illegible] ல் வண்ணமாகத் திகழ்ந்த அவரது திருமேனி அந்த [illegible] சற்றே தூக்கிக் காட்டியதைப்போலத் தெரிந்தது [illegible] மேல்தூக்கிய நெற்றி. அதில் பளிச்சென்று திருநீறு [illegible] நீண்ட தடி.

[illegible] பர்களைவிட அவர்களின் புரவிகளே அந்தப் [illegible] வரின் கவனத்தை முதலில் கவர்ந்தன அருகில் [illegible] அவற்றை வாஞ்சையோடு தடவிக்கொடுத்தார் [illegible] கணம் "அடடா! உடல் நடுங்கிக் கொதிக்கிறதே [illegible]! இந்தப் புரவிக்கு சுரம் கண்டிருக்கிறது"

அடேயப்பா, இவருக்குத்தான் எத்தனை கவர்ச்சிகரமான [illegible] டைக்குரல்?

"ஆம் ஐயா. அதனால்தான் வைத்தியம் பார்ப்பதற்காகப் [illegible] ருக்குச் சென்று கொண்டிருக்கிறோம்."

மணியனார் பதிலளித்து முடிக்கும்வரை பொறுத்திராமல் அவர் புரவியின் வாயைத் திறந்து பரிசோதிக்கத் துவங்கினார். கழுத்துக்கருகில் கையை வைத்து சிறிது நேரம் அதன் நாடித் துடிப்பைப் பரிசோதித்தார். "ஹூம்! மிக உயர்ந்த நவாம்ஸப் புரவிகளப்பா இவை! இந்தச் சுழிகளைப் பார்த்தீர்களா? அருமை.. அருமை. உங்கள் ஆடை அணிகலன்களைப் பார்த்தால் பெரிய வீட்டுப் பிள்ளைகளைப்போல் தெரியவில்லை. ஆனால் இம்மாதிரியான உயர்ஜாதிப் புரவிகளை இராஜகுடும்பத்தார்தான் வைத்துப் பேணிகாக்க முடியும்."

"நாங்கள் சோழ அலுவலர்கள். எங்கள் எஜமானருக்காக கொற்கைவரை சென்று இந்தப் புரவிகளைக் கொடுக்க வேண்டியுள்ளது.." - சட்டென்று ஒரு பொய்யை யோசிக்காமல் முன்வைத்தார் மணியனார்.

"சரிதான். புரவிகளுக்கு வைத்தியம் பார்ப்பதற்காக பாதை மாறிப் போய்க்கொண்டிருக்கிறீர்களாக்கும்! பனையூரில் இம்மாதிரியான அரேபியப் புரவிகளுக்குச் சரிவர வைத்தியம் பார்க்கக் கூடியவன் எவனும் இல்லையோ அப்பா? வழக்கமான பச்சிலைகளை இவற்றுக்குக் கொடுத்தால் வயிற்றைக் கெடுத்து நீர்ப்போக்கை அதிகரித்து விடுமே? சுரமும் தணிந்தாற் போல் தணிந்து பின் அதிகரித்து விடுமே?"

நண்பர்களிருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். எதிர்பாராத சிக்கலல்லவா முளைத்து விட்டது? பெரியவரைப் பார்த்தால் பொய் சொல்பவரைப்போல் தெரியவில்லையே?

"என்ன செய்வதென்று தெரியவில்லை ஐயா. நாங்கள் கொற்கைக்குச் சென்று உடனடியாகப் புரவிகளை ஒப்படைத்தேயாக வேண்டும்."

"ம்.. உங்களைப் பார்த்தாலும் பரிதாபமாகத்தான் இருக்கிறது. நான் ஒரு யோசனை சொல்கிறேன். எனக்கு அசுவ வாகடத்தில்[95] ஓரளவிற்கு அனுபவம்.. ஓரளவிற்கு என்ன? நிறையவே உண்டு. முடிந்தவரை உங்கள் புரவிக்கு

[95] புரவி வைத்திய சாஸ்திரம்.

நானே வைத்தியம் பார்க்க முயற்சிக்கிறேன். ஆனால் [illegible]திலுக்கு நீங்கள் எனக்கொரு உதவி செய்தாக வேண்டும்"

மணியனாரின் புருவங்கள் "என்ன?" என்பதைப்போல் உயர்ந்தன.

"நானும் தெற்குப் பக்கம்தான் சென்று [illegible]ண்டிருக்கிறேன். புரவியின் உடல்நிலை தேறினால் [illegible]யும் உங்களுடன் ஏற்றிக்கொண்டு செல்ல வேண்டும் [illegible]ற்கைக்கு மேற்கே சில காத தூரத்தில் அமைந்துள்ள [illegible]க்குருகூரில் என்னை இறக்கி விட்டுவிட வேண்டும்"

"நம்மாழ்வார் அவதரித்த தலமான திருக்குருகூரையா [illegible]டுகிறீர்கள்? பரமபாகவதத் தலமாயிற்றே அது? [illegible]வரான தாங்கள் அங்கா செல்கிறீர்கள்?"

"சைவ வைணவ பேதங்களையெல்லாம் கடந்து [illegible]ட்டவனப்பா நான்.

தாழ் சடையும் நீள் முடியும் ஒண் மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்நாணும் தோன்றுமால் – சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து.

[illegible]லும் பேயாழ்வாரின் திருமொழிக்கேற்பத் தரிசிக்கும் [illegible]னை திருப்பதிகளிலும்[96] இரு தெய்வங்களையுமே [illegible] வணங்கி வருகிறவன். ஆதலின் குருகூருக்குச் [illegible]வதில் எனக்கு எந்தத் தடையும் கிடையாது [illegible]மையில் நான் குருகூருக்கும் அப்பால் தெற்கே வெகு [illegible] வரை செல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் [illegible]ற்கையிலிருந்து உங்களை அதிகதூரம் இழுத்தடிக்க [illegible]மென்றுதான் குருகூரைக் குறிப்பிட்டேன்"

நண்பர்களிருவரும் சற்றே விலகி வந்து ஆலோசனை [illegible]தார்கள். பெரியவரை அவர்களின் பயணத்தில் கூட்டுச் [illegible]த்துக் கொள்வதில் மிகப்பெரிய தயக்கங்கள் [illegible]ந்தாலும் புரவியின் காய்ச்சலை ஒடுக்க வேறு மார்க்கம் [illegible]படவில்லை. நேரம் ஆக ஆகக் காய்ச்சல் அதிகமாகி [illegible]ட்டால் என்னாவது என்னும் கவலையும் சேர்ந்து

[96] [illegible] பதி – மங்களகரமான அல்லது புனிதமான ஊர்.

கொண்டது. முடிவில் பெரியவரின் திட்டத்திற்கு ஒத்துக் கொள்வது என்று முடிவானது.

"ஐயா! தாங்கள் யார்? தங்களின் பெயர் என்ன?"

"நான் தெற்கே கழிக்குடியில் பாசுபத மஹாவிரதிகளால் நிர்வகிக்கப்பட்டுவரும் மடமொன்றினைச் சேர்ந்தவன். என் பெயர் தேவநாக பண்டிதன்."

"நல்லது.. என் பெயர் விருச்சிகன். இவன் பெயர் காளமேகன். உங்களின் யோசனையை நாங்கள் ஏற்கிறோம். தயவுசெய்து உடனடியாக உங்களின் வைத்தியத்தைத் தொடருங்கள்.."

பெரியவர் மளமளவென்று வேலையில் இறங்கினார். வாய்க்காலின் கரையோரம் பச்சை பசேலென்று முளைத்துக் கிடந்த பலவகைத் தாவரங்கள் அவருடன் மௌன பாஷையில் பேசின. பலவகை மூலிகைகளைப் பறித்துக் கொண்டவர், மருந்து சமைக்கத் தேனும் பாலும் தேவையென்று கூறவே அவர்கள் முதல் நாளிரவு தங்கிய கிராமத்திற்கே மீண்டும் சென்று அவற்றை சம்பாதித்துக் கொள்வது என்று முடிவானது.

23. பண்டிதர் வரலாறு



தென்னாட்டின் கடல்வழி வாணிபம் செழித்து வளர்ந்திருந்த அந்நாளில் வணிகச் சாத்துச் மூட்டைகளையும் சரக்குகளையும் ஒரு பட்டினத்திலிருந்து மற்றொன்றிற்கு எளிதாகக் கொண்டு செல்வதற்கு ஏதுவாகத் தென்கிழக்குக் கடற்கரையோரத்தில் சகல பெருவழியொன்று பாண்டிய நாட்டின் அரசாங்கத்தாலும் வணிகர்களாலும் புரக்கப்பட்டு வந்தது. நன்கு அகலமாக அமைந்திருந்த இச்சாலையானது இராமேஸ்வரத்திற்குத் தென்மேற்கே 'கடலாடி' என்று இந்நாளில் அழைக்கப்படும் பகுதியில் துவங்கி தட்ஷிண தேசத்தின் தென்முனையான கழிக்குடி வரை நீண்டு சென்றது. இக் கடற்கரைச்சாலை வழியே பயணித்து வரும் சரக்கு வண்டிகளைப் பாண்டிய மண்டலத்தின் உட்பகுதிகளுக்கு அனுப்ப ஆங்காங்கே இடைவழிகளும் குறுக்குச் சாலைகளும் அமைக்கப் பட்டிருந்தன.

பாண்டி மண்டல வாணிபத்தின் முதுகெலும்பு என்று [illegible]ணிக்கப்படும் தகுதி நிறைந்த அந்த இராஜ [illegible]டையானது அம்மண்டலத்தில் ஒரு காலத்தில் [illegible]டன் கோலோச்சிய மன்னரின் பெயரால் 'கோச்சடையர் பெருவழி' என்று பெயரிடப்பட்டிருந்தது [illegible]ங்கமும் வணிகச் செட்டிமார்களும் சேர்ந்து பெயர் [illegible]த்தால் ஆயிற்றா? "கோச்சடையர் பெருவழி"யானது [illegible]வட்டத்தில் மக்களின் நாவில் மாறி மருவி நமது கதை [illegible]கழும் காலத்தே 'சடையம் பெருவழி' என்றே பரவலாக அறியப்பட்டிருந்தது. இரவு பகல் வேறுபாடின்றி எந்நேரமும் [illegible]தியான போக்குவரத்தைக் கொண்டிருந்தாலும் [illegible]ன்பகுதிகளுக்குச் செல்வதற்கு இதனினும் சிறந்த வழி [illegible] யாது என்பதால் தெற்கே செல்ல முனையும் [illegible]யாணிகள் பலரும் சடையம் பெருவழியில் பயணம் [illegible]கொள்வதைத் தவிர்க்க முடியவில்லை.

இப்பெருவழிக்கு நாம் வந்து சேரும் பிற்பகல் நேரத்தில் [illegible] கதை மாந்தர்கள் மூவரும் தமது இரு புரவிகளுடனும் [illegible] மாட்டு வண்டியைப் பின்பற்றியபடி அந்த இராஜ [illegible]டையின் ஓரமாகச் சென்று கொண்டிருந்தார்கள் [illegible]லையில் ஒரு வேளை வைத்தியமும் பத்தியமும் [illegible]ந்திருந்தாலும் காய்ச்சல் கண்டிருந்த புரவி சிறிது நேரம் [illegible]வெடுத்துக் கொள்வதுதான் அதன் உடல் நலத்திற்கு நல்லது என்று பண்டிதர் கண்டிப்பாகச் சொல்லி [illegible] தால் வேறு வழியின்றி அந்தக் கிராமத்திலேயே தங்கி [illegible] முற்பகல் நேரத்தில்தான் அவர்களால் கிளம்ப [illegible]ந்தது. புரவிக்கு மூன்று வேளைகள் பத்தியம் முடிந்து [illegible]வும் கழிந்த பின்புதான் அதனைச் செலுத்திக்கொண்டு [illegible] முடியுமாதலால் அதுவரை தாமதிக்காமல் நடை [illegible]மாகவே சடையம் பெருவழியை அடைவது என்று [illegible] செய்து அதனை செயல்படுத்தியும் விட்டார்கள்

பண்டிதர் பார்வைக்கு அத்தனை பிரகாசமானவராகத் [illegible]விட்டாலும் அவரது கைப்பக்குவத்திற்கு பலன் [illegible]த்தான் செய்தது. பெருவழியை அவர்கள் [illegible]ந்திருந்த அந்தப் பிற்பகல் நேரத்தில் சிக்கடைந்திருந்த [illegible]ன் கண்கள் நல்ல தெளிவை அடைந்திருந்தன. அதன் [illegible] நடுக்கமும் ஓரளவிற்கு நின்றிருந்தது என்றாலும் [illegible]லாத அந்த ஜீவனை அதிகத் தொந்தரவிற்கு [illegible]க்க வேண்டாம் எனும் எண்ணத்தினால் அவர்கள் [illegible] மெதுவாகவே பயணத்தைத் தொடர்ந்தார்கள்

ஆங்காங்கே ஓய்வெடுத்துக்கொள்வது, புரவிக்கு வேளை தவறாமல் நீர்காட்டுவது முதலான பணிகளும் குறைவில்லாமலே நடந்து கொண்டிருந்தன.

வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்களைச் சந்தித்திருந்த பண்டிதருடன் அளவளாவியபடி பயணிப்பதென்பது நண்பர்களிருவருக்கும் சுகமாகவே இருந்தது. பயணக் களைப்பு அதிகம் அவர்களை வாட்டவில்லை. பேச்சு சுவாரஸ்யத்தினால் நாழிகைக்கு ஒருமுறை அவர் சாலையின் ஒரு ஓரத்தில் ஒதுங்குவதையும், இளம் வெற்றிலைகளின் காம்பை அழகுடன் கிள்ளி எறிந்துவிட்டுப் பக்குவமாகச் சுண்ணம் தடவி வெற்றிலையிட்டுக் கொள்வதையும்கூட நண்பர்கள் சகித்துக் கொள்ளப் பழகிவிட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

கழிக்குடியின் பாசுபத மடத்தைச் சேர்ந்தவரான தேவநாக பண்டிதர் தன் வாழ்வில் நிஜமாகவே நடந்த நிகழ்ச்சிகள் என்கிற முன்னுரையுடன் பல்வேறு அனுபவங்களையும் எடுத்துரைத்தார். அவற்றில் சில நம்பக்கூடியதாகவே இருந்தன. வேறு சில முற்றிலும் நம்பத்தகாதனவாய் இருந்தன. குறிப்பாகத் தான் வடதேசத்தில் இமயத்தின் நடுவே அமைந்திருந்த வதரி[97] வரை சென்று வந்ததாகக் கூறிய அனுபவங்களெல்லாம் மழபாடியாருக்குக் கடைந்தெடுத்த பொய்களாகவே தோன்றின. என்றாலும் ரசம் குன்றாமல் அவர் சம்பவங்களை விவரித்த பாங்கு நண்பர்களின் மனதைக் கவர்ந்தது. எல்லா வைத்தியர்களுமே எப்படிச் சொல்லி வைத்தாற்போல் பேச்சுக்கலையை நன்கு பயின்று வைத்திருக்கிறார்கள்? வைத்திய சாஸ்திரப் பயிற்சியின் ஓரங்கமாக பேச்சுக்கலையும் பயிற்றுவிக்கப்படுகிறதா என்ன' என்றெல்லாம் எண்ணங்கள் முளைத்தன.

சிறு சிறு அனுபவங்களாகத் தொடர்பின்றிப் பல்வேறு நிகழ்வுகளையும் விவரித்துக்கொண்டிருந்த பண்டிதர் தனது பூர்வோத்திரத்தைப் பற்றியும் பிறப்பு வளர்ப்பு முதலான தகவல்களைப் பற்றியும் ஒன்றும் கூறாதிருக்கவே ஒரு கட்டத்தில் பொறுக்கமாட்டாமல் கம்பன் மணியன் அவருடைய வாழ்க்கை வரலாற்றை விளக்கும்படி பண்டிதரிடம் வேண்டிக்கொண்டார். பண்டிதர் சொன்ன

---

[97] இன்றைய பத்ரிநாத்.

சுயசரிதையில்' அவரது மற்ற அனுபவங்களைப் போலவே பொய்யும் மெய்யும் சம அளவில் கலந்திருந்தாற் போலத்தான் காணப்பட்டன. என்றாலும் விறுவிறுப்பான பல்வேறு நிகழ்வுகளையும் கொண்டிருந்த காரணத்தினால் பண்டிதரின் வாய்மொழி வெளிவந்த வரலாற்றை சுருக்கமாக வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

* * * * * * * *

பண்டிதர் பிறந்த ஊர் பாண்டியரின் தலைநகரான மதுரையம்பதியை ஒட்டி அமைந்திருக்கும் திருமாலிருஞ்சோலை எனும் புண்ணியப் பதி. பரம வைணவக் குடும்பத்தில் பிறந்தாலும் ஏனோ சிறு வயது முதலே அவருக்குச் 'சுடலைப் பொடி பூசும் கள்வனிடம்' உள்ளம் சென்றுவிட்டது. அதனால் சிறு வயது முதலே வீட்டாரிடம் பிணக்கு.

அவர் பிறந்த சில ஆண்டுகளில் சோழர்களின் பிரம்மாண்டமான படையெடுப்பு பாண்டி மண்டலத்தின் மீது நிகழ்ந்திருக்கிறது. பாண்டிய குலத்தினை அடியோடு அழித்துக் கட்டிவிடவேண்டும் என்கிற முனைப்போடு நடத்தப்பட்ட அப்படையெடுப்பினைத் தாக்குப்பிடிக்க முடியாமல் பாண்டிய இராஜா தங்களின் குலதனத்துடன் ஈழ மண்டலத்திற்குத் தப்பியோடிவிட்டார் மன்னர் பரம்பரையுடன் நெருக்கமாக உறவு பூண்டவர்கள் என்கிற முறையில் பண்டிதரின் குடும்பமும் மன்னரைத் தொடர்ந்து ஈழ மண்டலத்திற்குச் சென்றிருக்கிறது.

அங்கு பற்பல கஷ்டங்களை அனுபவித்துவிட்டு இறுதியாக இலங்கைத் தீவின் தென்பகுதியில் அமைந்துள்ள ரோஹண மலைக்காடுகளில் பாண்டிய மன்னர் குழாம் சூழ்ந்து அரசரைச் சந்தித்திருக்கிறது. அவரது வேண்டுகோளுக்கிணங்க பாண்டி மன்னரின் பரிவாரங்கள் அந்தக் காட்டிற்குள் ஒரு சில மாதங்கள் தங்கின. இந்தக் காலகட்டத்தில்தான் பண்டிதருக்கு மிருக சிகிச்சை முறைகள் சிறிதளவு பரிச்சயமாகியிருக்கின்றன.

பாண்டி மண்டலத்தில் படையெடுப்பு நடத்தியும் வெறி தணியாத சோழ வேந்தர்கள், பாண்டியருக்கு அபயமளிக்கத் துணிந்த ஈழ தேசத்தின் மீதும் படையெடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால் எத்தனையோ விதங்களில் முயன்றும் அடர்ந்து படர்ந்திருந்த ரோஹண மலைக்

காடுகளுக்குள் அடைக்கலம் புகுந்திருந்த பாண்டிய மன்னரைப் பிடிக்க முடியவில்லை. தோல்வியுடன் திரும்பியிருக்கிறார்கள். பயனற்ற இந்தப் படையெடுப்பினால் ஈழத்து மக்களின் கடுமையான அதிருப்திக்குச் சோழர்கள் ஆளானதுடன் அவர்களது தளபதியான கொடும்பாளூர் சிற்றரசரையும் பலிகொடுக்க வேண்டி வந்தது.

இதற்கிடையில் காட்டில் தண்டூன்றியிருந்த பாண்டிய மன்னரை துரதிருஷ்டவசமாகப் பக்கவாத நோய் தாக்கி விட்டது. அவரால் முன்பு போல் நடமாட முடியவில்லை. மலைநாட்டில்தான் இதற்குச் சரியான முறையில் சிகிச்சை அளிக்கக்கூடிய ஆயுர்வேத வைத்தியர்கள் உண்டென்பதால் அங்கு செல்வதென்று முடிவாயிற்று. பாண்டிய மன்னர் தாய் வழியில் சேர இராஜ பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதால் சேர மன்னருக்கு ஓலையனுப்பப்பட்டது. இக்காலகட்டத்தில் சேர-சோழ உறவு மிகவும் செழித்தோங்கியிருந்தாலும் தாய் வழியில் நெருக்கமான இரத்த பந்தம் உடையவர்[98] என்பதாலும் சிகிச்சைக்காகவே வருகிறார் என்பதாலும் சேர மன்னரால் அவரது வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. ஆக, ஈழத்து மன்னரிடம் விடைபெற்றுக்கொண்டு பாண்டிய மன்னரும் அவருடன் பிணைந்திருந்த குடும்பங்களும் மலைநாட்டிற்குக் கிளம்பியுள்ளன.

மலைநாட்டில் அனந்தபுரம், கொல்லம் என்று பல இடங்களுக்குக் குழு பயணப்பட்டது. அனுபவம் வாய்ந்த பல ஆயுர்வேத ஆசான்கள் மன்னருக்கு சிகிச்சை செய்தனர் என்றாலும் துரதிருஷ்டவசமாக சிகிச்சைகள் பலனின்றி மன்னர் சிவலோகமடைந்துவிட்டார். மன்னர் இறந்து விட்டதால் அவருடன் பயணித்துக் கொண்டிருந்த பாண்டிநாட்டுக் குடும்பங்கள் தனித்தனியே சிதறிவிட்டன. பண்டிதரின் குடும்பம் மலைநாட்டின் பல இடங்களிலும் சுற்றியலைந்துவிட்டு இறுதியில் நாஞ்சில் நாட்டு மண்ணில் குடியேறியது. இந்தக் காலகட்டத்தில் பண்டிதருக்கு முறையான கல்விப் பயிற்சி பெறும் பிராயம் துவங்கி விட்டதால் அங்கேயே ஆரம்பக் கல்வி போதிக்கப்பட்டது

பாண்டி மண்டலத்தில் பண்டைய அரச பரம்பரையைச் சேர்ந்த சகோதரர்களான சுந்தர பாண்டியரும் வீர

[98] கேரளம் இன்றுவரை தாய்வழிக் குலமரபையே (Matrilineal Lineage) பினபற்றி வருகிறது எனபது குறிபபிடததககது.

பாண்டியரும் தலைசிறந்த வீரர்களாக இக்காலத்தில் தலையெடுத்தார்கள். குறிப்பாக வீரபாண்டியர் சோழர்களைப் பல போர்களில் தோற்கடித்து பாண்டி மண்டலத்தில் நிலையானதொரு ஆட்சியை நிறுவினார். சோழர்களோ பாணர்கள், கங்கர்கள், இராஷ்டிரகூடர்கள் என்று வடக்கிலிருந்து வந்த தாக்குதல்களைச் சமாளிப்பதில் மும்முரமாக இருந்ததால் வீரபாண்டியரை சிறிது காலம் கவனிக்காமல் இருந்தார்கள். ஒரு கட்டத்தில் பண்டிதரின் குடும்பம் மீண்டும் மதுரையம்பதிக்கே திரும்பிவிடலாம் பழையபடி நிலம் நீச்சுடன் நல்வாழ்வு துவங்கலாம் என்று முடிவெடுத்த சமயத்தில்தான் கொடூரமாக நடத்தப்பட்ட செவ்வூர்ப் போர் வீர பாண்டியரின் உயிரைப் பறித்ததுடன் பாண்டி தேசத்துப் படைகளையும் இரக்கமின்றி அழித்தொழித்துவிட்டது. பல்வேறு இன்னல்களுக்கிடையில் வீரபாண்டியரின் சிறு குழந்தையை - குலக் கொழுந்தை - பாண்டிய அமைச்சர் காப்பாற்றித் தெற்கே கொண்டு வந்து சேர்த்துவிட்டார். தலைமறைவாகத் திரிந்த அந்த அமைச்சருக்கும் குழந்தைக்கும் பண்டிதரின் குடும்பம் பழைய விசுவாசத்தை மறக்காமல் அடைக்கலம் கொடுத்திருக்கிறது.

சிறிது காலத்தில் இளைஞனாகப் பிராயமடைந்த பண்டிதர் மலைநாட்டின் பாரம்பரிய வைத்தியர்களிடம் ஆயுர்வேத சாஸ்திரத்தையும் மிருக வைத்தியத்தையும் பல வருடங்களுக்குப் பயின்றிருக்கிறார். குறிப்பாக [illegible]குடிக்கருகில் அமைந்திருந்த பார்த்திவசேகரபுரத்தின் [illegible] பட்டாரகர் திருக்கோயில் சாலையில் "அங்க களரி" ஆசான்களோடு இவருக்கு நெருங்கிய தொடர்பேற்பட்டிருக்கிறது. அவ்வாசான்களின் சிகிச்சை முறைகள் [illegible]பரை வைத்தியர்களிடமிருந்து சிறிது வேறுபட்டு [illegible]தோடு பல்வேறு வகை நுட்பங்களையும் கொண்டு [illegible]ங்கியது. அனைத்தையும் கற்றுத் தேர்ந்த பண்டிதர் [illegible] வாழ்வின் அலைச்சல்களினால் வெறுப்புற்று குமரிக் [illegible]யில் அமைந்திருந்த லகுளீசர் மடத்துறவியிடம் சிவ [illegible] பெற்றுக்கொண்டு வாகீஸ்வரரான[99] சிவ

[99] லகுளீச பாசுபத மஹாவிரதிகள் சிவபெருமானின் வாகீஸவரா[illegible] எனனும திருககோலததைப் போறறினாாகள. தஞசை சரஸ்வதி மகால கலைககூடத்தில "பிரம்மன்" எனனும தவறான

பெருமானின் பாதாரவிந்தங்களில் மனதைச் செலுத்து சன்னியாசியாகிவிட்டார். மடத்தில் ஜப தபங்களில் ஈடுபடுவதுடன் சமயம் கிடைக்கும்போதெல்லாம் பாண்டி மண்டலமெங்கும் சுற்றித் திரிந்து தன்னுடைய வைத்திய சாஸ்திரத்தைக் கொண்டு அனைவருக்கும் உதவியளிப்பதை ஒரு கிரமமாகச் செய்து வருகிறார்.

* * * * * * * *

பண்டிதர் வரலாற்றில் பின்புலமாகத் திகழ்ந்த சரித்திர நிகழ்வுகளை மழபாடியாரும் ஓரளவிற்கு அறிந்திருந்தார். பண்டிதருடைய சரிதை மட்டும் உண்மையென்றால் அவருடைய பிராயம் தற்போது எழுபது அல்லது குறைந்த பட்சம் அறுபதையாவது தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் மனிதரைப் பார்த்தால் பிராயம் ஐம்பதுக்கு மேலிருக்கும் என்று தோன்றவில்லை. ஆக முன்னும் பின்னும் நிகழ்ந்த சில சம்பவங்களைக் கோர்த்து ஒரு வரலாறாக வழங்கியிருக்கிறார் எனும் முடிவிற்குத்தான் வரவேண்டியுள்ளது. தன்னுடைய தனிப்பட்ட எண்ணங்களை வெளிக்காட்டிக்கொள்ள மழபாடியார் விரும்பவில்லை. பண்டிதரும் அதனை இரசித்திருக்க மாட்டார் என்பது நிச்சயம்.

"பாசுபத மடங்கள் ஏன் எப்போதும் பள்ளிப்படைக் கோயில்களோடே தொடர்பு கொண்டுள்ளன?" - சம்பந்தமில்லாமல் ஒரு கேள்வியை எழுப்பினார் கம்பன் மணியனார்.

"அப்படிக் குறிப்பிடுவது தவறு விருச்சிகனாரே. பள்ளிப்படைக் கோயில்கள்தான் எங்கள் மடங்களோடு தொடர்பு கொண்டுள்ளன. கலிங்க தேசத்தில் அவதரித்த எங்களின் மஹாகுரு லகுளீசப் பெருமான் உபதேசித்த தத்துவம் அப்படி. சிவபெருமானை மயானத்தில் ஆடல் நிகழ்த்துபவனாக பிணங்கள் எரிந்து கொண்டிருக்கும் சுடலையில் ஊன்மத்தம் கொண்டு நிருத்தம் புரிபவனாக வணங்குவது எங்கள் மரபு. எல்லா மயானங்களிலும் வாழ்க்கையின் அநித்தியத்தையும் சிவத்தின் நித்தியத்தையும்

பெயருடன் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகீஸ்வரர் திருமேனி தமிழ்நாட்டின் எழிலமிகு பல்லவர் கலைப்படைப்புக்களுள் ஒன்றாகும்.

நாங்கள் காண்கிறோம். அதனை மற்றவர்க்கும் போதிக்கிறோம். ஆனால் மற்ற சைவப் பிரிவினரின் கொள்கைகளும் போதனைகளும் சற்று சாத்வீகமானவை. ஆனால்தான் மயானத்தோடு நெருங்கிய தொடர்புள்ள பள்ளிப்படைக் கோயில்களை மற்றவர்கள் நிர்வகிப்பதைக் காட்டிலும் நாங்கள் ஏற்று நடத்துவது நன்மை பயக்கும் என்று மக்கள் நினைக்கிறார்கள்.

ஆனால் பள்ளிப்படைக் கோயில்கள் மட்டுமின்றி மற்ற கோயில்களையும்கூட நாங்கள் நிர்வகிக்கிறோம். சோழர்களின் தாய் மண்டலமான சோழதேசத்திலே பட்டீஸ்வரம் பழையாறையின் அருகில் பல்லவர் காலத்தில் ஒரு மிகப்பெரிய ஸஹஸ்ர லிங்கேஸ்வரம். அதாவது ஆயிரம் லிங்கங்கள் கொண்டதொரு திருக்கோயில். லகுளீச பாசுபதர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது காலத்தின் கோலம்! அப்பெருங் கோயில் இன்றைக்குப் பாழ்பட்டு சரிந்து விட்டது[100]"

"பள்ளிப்படைக் கோயில்கள் எடுப்பதன் காரணமென்னவென்று தரே? சற்று விளக்குவீர்களா?" - மீண்டும் மழபாடியாரிடமிருந்து இன்னொரு பள்ளிப்படைக் கேள்வி.

அடடா. தொடர்ந்து எதற்காக மணியனார் பள்ளிப்படைகளையே கட்டிக்கொண்டு அழுகிறார்? என்று மழபாடியாருக்கு வியப்பேற்பட்டது. ஆனால் இளையவரின் எண்ணங்களோ வேறு மாதிரியாக இருந்தன. பண்டிதர் உண்மையிலேயே பாசுபத மடத்தைச் சேர்ந்தவர்தானா? அவருக்கு எத்தனை தூரம் அதன் தத்துவங்களெல்லாம் தெரியும்? என்று ஆழம் பார்ப்பதற்காகவே அவர் அடுத்தடுத்து வினாக்கள் தொடுத்துக் கொண்டிருந்தார். இதுவரை பண்டிதர் பொய்யர் என்று உறுதியாகச் சொல்லக்கூடிய அளவிற்கு எந்தத் தகவலும் அவருக்குக் கிடைக்கவில்லை. பாசுபதத் தத்துவத்தில் அவரது ஞானமும் விசேஷமாகவே இருக்கிறது. தொடர்ந்து எதற்காக இவரைச் சந்தேகித்துக்கொண்டிருக்கிறோம்?

[100] இத்திருக்கோயில் அமைந்திருந்த பண்டைய நந்திபுரம் எனும் கோவூர் தற்போது தஞ்சை மாவட்டத்தில் வீரசிங்கம்பேட்டை – இரட்டை கோயில் என அழைக்கப்படுகிறது. முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியம் அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

"ஆஹா, அப்படிக் கேளுங்கள். இதல்லவோ கேள்வி! பள்ளிப்படைகளை வடமொழியில் அதிஷ்டாநம் என்று குறிப்பிடுவார்கள். ஒருவர் 'பள்ளிப்படுத்தப்பட்ட' இடத்தில் எழுப்பப்படுவதுதான் பள்ளிப்படைக் கோயில். சிவ தீட்சை பெற்ற தூய ஆன்மாக்கள் சிவகதியடைந்த அந்த இடத்தில் அந்த ஐக்கியத்தை உருவகப்படுத்தி எழுப்பப்படுவதுதான் பள்ளிப்படைக் கோயில்..." என்று உற்சாகமாக ஒரு நாழிகை நேரம் பண்டிதர் விவரித்த தத்துவார்த்தங்களில் பாதிக்கு மேல் நண்பர்களின் காதில் ஏறவில்லை என்பதை நாம் சொல்லாமலே வாசகர்கள் விளங்கிக் கொள்வார்களாக.

* * * * * * * *

அந்திசாயும் நேரத்தில் வரகுணமங்கலம் என்ற பகுதியின் கீழ்ப்பிடாகையாக அமைந்திருந்த காரிப்புத்தூருக்கு மூவரும் வந்து சேர்ந்தார்கள். மேற்கொண்டு பிரயாணப்படாமல் அங்குள்ள சத்திரத்திலேயே தங்கிக்கொண்டு மறுநாள் பொழுது உதயமானபின் கிளம்புவது என்று முடிவானது.

சத்திரத்தின் வேளக்காரன் புரவிகளுக்கு நீரருந்த கொள்ளும் காட்ட பின்கட்டுக்கு அவைகளை ஓட்டிக் கொண்டு வரச்சொன்னான். பண்டிதர் அவனிடம் புரவிகளுள் ஒன்றுக்கு சிக்குக் கண்டு தற்போதுதான் தேறி வருகிறதென்றும் மிகுந்த கவனத்துடன் இரவு முழுவதும் பத்தியத்தைக் கடைபிடித்து நாளைய பயணத்திற்கு அதனைத் தயாராக்க வேண்டுமென்றும் விரிவாக எடுத்துரைத்தார். அதுவரை சற்று அசிரத்தையுடனே கேட்டுக்கொண்டு வந்த வேளக்காரன் மழபாடியார் ஒரு மஞ்சாடியைக் கையில் அழுத்திய பிறகுதான் உற்சாகத்துடன் "சரி" என்றான்.

சத்திரத்தில் கிடைத்த எளிய இரவு உணவு வகைகளான அப்பங்களையும் அரிசிக் கொழுக்கட்டைகளையும் வயிறார உண்டுவிட்டு மூவரும் களைப்புத்தீர சீக்கிரமே உறங்கி விட்டார்கள்.

24. மதுர கீதம்



உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட மழபாடியாரின் மனதில் விடியற்காலைப் பொழுதில் அழகிய கனவுக் காட்சியொன்று விரிந்தது.

பௌர்ணமி நிலவின் கிரணங்கள் பட்டு தக தகவென்று பளபளத்துக்கொண்டிருக்கும் நதி. அந்த நதியில் தனியாய் ஒரு ஒற்றைப் படகு. படகின் பின்பக்கத்தில் அமர்ந்து மழபாடியார் துடுப்பு வலித்துக் கொண்டிருக்கிறார். மனதில் எந்தவிதமான சலனங்களும் இல்லை. எப்போதும் எல்லையில்லாமல் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கும் தனிப்பட்ட எண்ணங்களெல்லாம் மறைந்து போய் விட்டிருக்க அந்த இனிய சூழலில் தன்னை மறந்து ஒன்றிப்போய் நிற்கும் மோன நிலை.

அவருக்கு முன்னே உட்கார்ந்திருக்கும் ஒரு உருவம், படகின் மறு ஓரத்தில் ஒயிலாய்ச் சாய்ந்தபடி விளிம்பில் கையை வைத்துக் கொண்டு முகத்தை அதில் பதித்து நதிநீரை இமைக்கின்றி நோக்கியபடி நிற்கிறது. மெல்லப் படிந்திருக்கும் நிலவின் வெளிச்சத்தில் அது ஒரு பெண்ணாருவமென்பது புரிகிறது.

மழபாடியார் ஒருமுறை அவளை அழைக்க நினைத்து வாயைத் திறக்கிறார். ஆனால் அடுத்த கணமே என்னவோ நினைத்துக் கொண்டாற்போல் மௌனமாகிறார். தானாக அவள் தன் பக்கம் திரும்ப மாட்டாளா? காந்தி மிகுந்த அவளது முகவதனத்தின் அழகை மீண்டும் ஒருமுறை இந்தச் சந்திரனொளியில் பருகி மகிழ மாட்டோமா? என ஏங்குகிறது அவரது மனம். சிறிது நேரத்தில் மிக மெல்லிய குரலில் இனிய பாடலொன்று விசும்பல் கீதமாய் அந்தப் பெண்ணிடமிருந்து எழுகிறது... அடடா, இரவும் நிலவும்கூட உள்ளத்தை உருக்கும் இந்தக் குரலைக்கேட்டுக் கண்ணீர் விடுவதும் போலிருக்கிறதே!

மாலைக் கருக்கலிலே
மதுவனம் பூக்கையிலே...
மண்ணின் மாந்தரெல்லாம்
இணைந்து இன்புறுகையிலே...

விம்மிக் குழையுதடி – உள்ளம்
வேதனையில் துஞ்சுதடி.

வருவேன் மறுநாள் என்று
ஒரு திங்கள் ஆச்சுதடி....
நாளை நாளை என்று – ஒரு
வேளையும் போச்சுதடி....
கரியவன் வருவானோ ? – சாய
புரிதோள் தருவானோ ?

தோழிகள் கேலிசொன்னார் – மனம்
மாற்றிட யுக்தி சொன்னார்
வேறிடம் போனானென்று
வேதனைப் பேச்சு சொன்னார்...
நாரணன் வருவானடி – மறக்கக்
காரணம் உண்டோடி ?

இனியும் பொறுத்திருக்க
இடமில்லை அகத்துள்ளே...
அவன் நினைவால் சிறுத்தே
அழிந்திடும் திருமேனி...
உடல் எரியும் கணத்தில்...
உயிர் பிரியும் கணத்தில்...
கடல்வண்ணன் வாரானோ ? – அவன்
திருவடி காணேனோ ?

கீதம் காற்றில் கரைந்து முடிந்த பின்பும் அந்த நிகழ்ச்சியின் நெகிழ்ச்சியைக் கலைக்க விரும்பாததுபோல சிறிது நேரம் நிசப்தம் அங்கே குடிகொண்டிருந்தது. மழபாடியாரின் கண்களிரண்டும் குளமாகிவிட்டிருந்தன.

“மதுரா..”

அடடா, இவர் உச்சரித்தால் மட்டும் தன்னுடைய பெயருக்கு ஏன் இப்படியொரு இனிமை உண்டாகின்றது? தான் ஒரு மானுடப் பெண்ணல்ல - தேவதை எனும்படியாக அல்லவா அழைக்கிறார் இவர்? என்று அந்தப் பேதையின் உள்ளம் ஒரு கணம் வியந்து விகசித்தது.

“ம்.”

“மதுரா!”

“ம்......”

“ஒன்றுமில்லை. ஒரு எண்ணம் தோன்றுகிறது அதனைச் சொல்லலாமா என்று பார்க்கிறேன்...”

“சொல்லுங்களேன்...” - ம்ஹூம்! இன்னமும்கூட அந்த முகம் நிமிரவில்லை.

“சொன்னால் கோபித்துக் கொள்ளக்கூடாது.”

“...”

“சரியா?”

“ சரி..”

“மதுரா, இத்தனை அமைதியாக இத்தனை ஆனந்தமாக நான் என் வாழ்நாளில் இருந்ததேயில்லை. இதற்கு மேலும் ஒரு வாழ்க்கை தேவையா? வாழ்க்கை இந்தக் கணத்திலேயே இப்படியே இந்த ஓடத்திலேயே உன்னுடைய அண்மையிலேயே முடிந்துவிடலாகாதா? என்று தோன்றுகிறது...”

அந்த முகம் சட்டென்று நிமிர - ஓ! இதென்ன? சரசரவென்று இரு மெல்லிய நீர்த்தாரைகள் கன்னங்களின் வழியே இறங்கி வழிகின்றனவே...? அதனைத் தாங்க மாட்டாமல் சட்டென முகம் வரை நீண்டுவிட்ட மழபாடியாரின் கரங்களை மெல்ல விலக்கி விட்டுவிட்டுத் தானே அந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள் அவள். அடடா! இந்தப் பெண்ணழகியின் முகத்தில் ததும்பும் எல்லையில்லாத சௌந்தர்யத்தைக் கவிராஜனான காளிதாசனால்கூட சரிவர வர்ணிக்க முடியுமென்று தோன்றவில்லை.

“ஏன் இப்படி அமங்கலமாகப் பேசி என் உள்ளத்தைச் சுடுகிறீர்கள்?”

"மனதில் பட்டதை அப்படியே சொன்னேன். தவறா?"

"இன்னுமொருமுறை அப்படிச் சொல்லாதீர்கள்."

"சரி, சொல்லவில்லை.. மதுரா! உறந்தைக்[101] கடகத்தில் நான் பயிற்சிக்காக சேர்ந்து நான்கு திங்கள்களுக்கு மேல் ஆகிவிட்டன. என்னுடைய உறந்தை வாழ்க்கையைப் பற்றி நீயும் வந்ததிலிருந்து கேட்பாய் கேட்பாய் என்று காத்திருந்து அலுத்துவிட்டேன். ஏன், நான் உறந்தைக்குச் சென்றது உனக்குப் பிடிக்கவில்லையா? குருகாடியிலேயே கடைசிவரை நிலம் நீச்சுகளை கவனித்துக்கொண்டு நான் காலத்தைக் கழிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறாயா?"

"ஏன் தொடர்ந்து என் மனத்தைப் புண்படுத்தியே பேசுகிறீர்கள்? உங்கள் பாட்டனாரின் வீர உதிரம் உங்கள் திருமேனியின் அங்கமெல்லாம் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை அறியாதவளா நான்? எத்தனை முறை சோழப் படையில் சேர்வது பற்றியும் பயிற்சியில் ஈடுபடுவது பற்றியும் என்னுடன் பேசியிருக்கிறீர்கள்? இந்தச் சிற்றூரிலேயே உங்களால் அதிக நாட்களுக்கு அடைந்து கிடக்க முடியாது என்பது எனக்குத் தெரியாதா என்ன?"

"பின் ஏன் என்னிடம் ஒன்றும் பேசமாட்டேன் என்கிறாய்? உறந்தை வாழ்க்கையைப் பற்றி உன்னிடம் அங்குலம் அங்குலமாக விவரிக்க வேண்டுமென்றல்லவா ஓடோடி வந்தேன்!"

"உண்மையைச் சொல்லவா? நீங்கள் வந்ததிலிருந்து நீங்கள் வந்துவிட்டீர்கள்! நீங்கள் வந்துவிட்டீர்கள்! என்ற ஒற்றை எண்ணம்தான் என் மனதில் இந்தக் கணம் வரை நிற்கிறது. அதற்கு அடுத்ததாக இன்னும் சில நாட்களில் மீண்டும் நீங்கள் கிளம்பிவிடுவீர்கள் என்னும் எண்ணம் வாட்டி வதைக்கிறது..." சட்டென்று அவள் முகத்தை மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி விசும்ப, மழபாடியார் பதறிப்போனார்!

"அடடா, மதுரா! என்ன இது சிறு குழந்தை மாதிரி..?"

"என்னால் உங்களின் பிரிவைத் தாங்க முடியவில்லை. வெட்கத்தை விட்டு ஒப்புக்கொண்டு விடுகிறேன். இந்த நான்கு திங்கள்கள் எப்படிக் கழிந்தன என்று எனக்கே

---

[101] இன்றைய திருச்சியின் ஒரு பகுதியாக அமைந்துள்ள உறையூர்.

வியப்பாக இருக்கிறது. யோசித்தால் ஏதோ ஒரு யுகம் கழிந்துவிட்டது போன்றதொரு பிரமை ஏற்படுகிறது!" - விசும்பல்களுக்கு நடுவில் அவள் சொல்லி முடித்தாள்.

"விரைவில் நமது திருமணம் நடக்கும் மதுரா. அதுவரை பற்களைக் கடித்துக்கொண்டு நாட்களை நகர்த்தியாக வேண்டும். இப்போதுதானே பயிற்சியில் சேர்ந்திருக்கிறேன். இன்னும் சிறிது காலம் கழித்துத்தான் தக்க முறையில் படை வீரனாகச் சேர்த்துக் கொள்வார்கள். அப்படிச் சேர்ந்தவுடனேயே நாம் நமது வாழ்க்கையை உறந்தையில் துவக்கிவிடலாம்."

"அதற்கு எத்தனை காலம் ஆகும்?"

"தெரியவில்லை மதுரா. குறைந்தது ஒரு வருடமாவது கடகத்தில் பயிற்சிபெறவேண்டுமென்கிற விதி இருக்கிறது. அதனை எனக்காக மாற்றவேண்டுமென்று கோர முடியாது."

"ஒரு வருடமா?" - அவள் வாய் பெரிதாகப் பிளந்தது

"ஆம், அது குறைந்தபட்சம்..."

"நீங்கள் அருகிலிருக்கும்போதெல்லாம் வாழ்க்கை வசந்தமாய்க் காட்சியளிக்கிறது. என்றாவது ஒருநாள் உங்களை நிரந்தரமாகத் தஞ்சமடைந்துவிடுவேன் என்னும் நம்பிக்கை பிறக்கிறது. அது வரை பொறுத்துக் கொண்டுவிடலாம் என்னும் திண்மையும் உண்டாகின்றது. ஆனால் நீங்கள் இல்லாத போதில் இனம்புரியாத பயங்கள் என்னைச் சூழ்ந்து கொள்கின்றன. என்னால் ஒருபோதும் அடையவே முடியாத உயரத்திற்கு நீங்கள் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்னும் பிரமை ஏனோ உண்டாகிறது..."

"அடடா, ஏன் அப்படி நினைக்கிறாய்? மதுரா! இன்று நான் உனக்கு உறுதியளிக்கிறேன். நான் பிற்காலத்தில் எந்த உயரத்தில் இருந்தாலும் உனக்கு மிக மிக அண்மையில் உன் கரங்களுக்கு எட்டும் தூரத்தில்தான் இருப்பேன். இது நிச்சயம்!"

"உங்கள் குடும்பத்தார் ஓரளவிற்கு என்னுடன் முதலாக நடந்து கொண்டாலாவது நம்பிக்கை பிறக்கும். அதுவும் நடப்பதில்லை. உங்களின் அன்னையார் நான் என்ன முயற்சி செய்தாலும் பாராமுகமாகவே இருந்துகொள்கிறார்."

மழபாடியார் தலையைக் குனிந்துகொள்கிறார். ஊராரின் அத்தனை எதிர்ப்புக்களையும் மீறி அந்தப் பெண்ணிடம் மனதைப் பறி கொடுத்திருக்கிறோமே என்று ஒரு கணம் தன்னைப் பற்றியே அவருக்கு வியப்பு ஏற்படுகிறது. குலம் கோத்திரமெல்லாம் பார்த்த பிறகா காதல் முகிழும்? இந்தச் சிறிய உண்மை ஏன் ஒருவருக்கும் புரிய மாட்டேன் என்கிறது?

"என் அன்னையார் வாழ்க்கையில் பல துன்பங்களை சிறுவயதில் அனுபவித்தவர். அவரைப் பொறுத்தவரையில் என் திருமணம் என்பது அவர் வாழும் சுற்றத்தைச் சார்ந்த விஷயம். என்னுடைய தனிப்பட்ட விருப்பங்களுக்கு அங்கே இடமில்லை. உற்றவர் உறவினர் மத்தியில் "உங்கள் ஒருவரின் தயவுமின்றி இவனை வளர்த்து ஆளாக்கியிருக்கிறேன் பார்!" என்று முழங்கவேண்டுமென்பதுதான் அவரது நெடுநாளைய கனவு. நமது காதல் அந்தக் கனவைக் குலைத்துவிடுமென்று அவர் அஞ்சுகிறார். போயும் போயும் ஒரு நாட்டிய பெண்டின் குடும்பத்திலா குருகாடி செல்லக்கிழாரின் பரம்பரை பெண்ணெடுக்க வேண்டும்? என்று சுற்றம் இகழுமாம்! என்ன சுற்றம் வேண்டிக்கிடக்கிறதோ தெரியவில்லை... நாங்கள் ஒரு கவளம் சோற்றுக்கு சிரமப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ஒருவரும் உதவிக்கு வரவில்லை. இன்று நான் சிறிதளவு தலையெடுத்ததும் நல்லது கெட்டதற்கெல்லாம் அழைப்பே வருகிறது. எதற்காக அவர்களைக் கட்டிக்கொண்டு அழ வேண்டுமோ!"

"உங்கள் அன்னையின் எண்ணம் ஒருபுறம் இருக்கட்டும். என்னைப்பற்றி என் குடும்பத்தைப் பற்றி தங்களின் எண்ணம் என்ன? வெளிப்படையாகத் தெரிவித்து விடுங்கள். நான் எந்தக் களங்கமுமற்றவளென்பது....."

"அடடா, என்னைச் சொல்லிவிட்டு நீ இப்போது என் மனம் புண்படும்படி பேசலாமா?" - மழபாடியார் அந்தப் பால்வடியும் முகத்தை ஒருகணம் பரவசத்தோடு பருகுகிறார். "உன்னால் களங்கப்படவே முடியாது மதுரா! உன்னை யாரும் களங்கப்படுத்த முயலக்கூட முடியாது. தீண்டும் அசுத்தங்களைக்கூடத் தூய்மைப்படுத்திவிடும் பவித்திரமான அக்கினி நீ!"

சிறுவயதிலிருந்து சிறிதும் பெரிதுமாக அவமானங்களை மட்டுமே சந்தித்து வந்த அந்தப் பேதையை அந்த மலைபோன்ற நம்பிக்கை முழுவதுமாக அசைத்துவிட்டது.

ஓவென்று கதறிக்கொண்டே மழபாடியாரின் பாதங்களைக் கட்டிக்கொண்டு அழுகிறாள் அவள். "இது ஒன்று போதும். இந்த ஒரு நம்பிக்கை போதும்! இந்த அடியாள் உங்கள் அடியை உயிருள்ளவரை பிரியாள். இது சத்தியம்!"

"அடடா, என்ன மதுரா இது? எழுந்திரு. எதற்காக இத்தனை உணர்ச்சி வசப்படுகிறாய்?"

"ஒ-ஒன்றுமில்லை. நானா என் அன்னையோ மனமறிந்து எந்தக் குற்றமும் செய்ததில்லை. ஆனாலும் முறைகெட்ட குடும்பம் எனும் முத்திரை எங்களின் மீது விழுந்துவிட்டது. இந்த அளவிற்கு என்னிடம் யாருமே அன்போ நம்பிக்கையோ வைத்ததில்லை. அதனால்தான் தாங்கமுடியாமல்..."

"கண்களைத் துடைத்துக்கொள். இதுவரை நான் உன்னுடைய பூர்வோத்திரத்தைப் பற்றி விபரமாக ஒன்றும் கேட்டதில்லை. ஆனால் இன்று கேட்கவேண்டுமென்று தோன்றுகிறது. கொஞ்சம் சொல்லேன்..."

"சொல்வதற்கென்ன இருக்கிறது? எல்லாம் விதிதான்! என் அன்னை சிறுவயதினளாக இருந்தபோது குடும்பம் வறுமையில் வாடியதால் கச்சி ஏகம்பத்தில் தளிப்பெண்ணாக பந்தம் செய்து கொடுத்துவிட்டார்கள். பருவம் வந்ததும் முறைப்படி முறையோடுதான் என் தந்தையை அவள் மணந்துகொண்டாள். ஆனால் என் தந்தையின் மனம் வேறு பாதையில் போகவேண்டுமென்று விதித்திருந்தால் அதை யாரால் மாற்ற முடியும்? திருக்காளத்திக்கு அலுவல் சம்பந்தமாக ஒரு முறை பயணம் மேற்கொண்டவர் அங்கேயே ஒரு கணிகையின் வீட்டில் தஞ்சமடைந்துவிட்டார். அதற்குப்பின் கச்சியில் குடியிருக்க அன்னைக்குப் பிடிக்கவில்லை...

குடிபெயர்ந்து எங்கு செல்வது என்று யோசித்தபோதுதான் குருகாடி அவளது மனதுக்குப் பட்டிருக்கிறது. அவளது பாட்டன் வழியில் கிடைத்த சில சொத்துக்களும் நிலங்களும் குருகாடியில் இருந்ததால் இங்கே வந்து பிழைத்துக்கொள்ளலாம் என்று என்னையும் பிடித்துக்கொண்டு தைரியமாக வந்துவிட்டாள். தொண்டை மண்டலத்தவரை விட சோழ மண்டலத்து மண்ணின் மைந்தர்கள் ஆதரவற்ற எங்களிடம் அன்போடு நடந்து கொள்வார்களென்று ஒரு எண்ணம்.

ஆனால் இங்கு வந்த பிறகு நடந்ததே வேறு. நாங்கள் வந்த சில திங்களிலேயே ஊர்ப் பெரியமனிதர்கள் சிலர் அன்னையிடம் தவறாக நடக்க முயன்றார்கள். அவள் அதற்குச் சம்மதிக்காததால் கச்சியில் எங்கள் வாழ்க்கையைப் பற்றிய பலவகையான வதந்திகள் குருகாடி முழுவதும் பரப்பப்பட்டுவிட்டன. தான் மீண்டும் ஒருமுறை இடம் பெயர்ந்தால் அவர்கள் சொன்னதெல்லாம் உண்மை என்பது போலாகும் என்பதால் அன்னை உறுதியாக இந்த இடத்திலேயே இருக்க முடிவு செய்துவிட்டாள். ஊரார் தன்னை எத்தனை அவதூறு பேசினாலும் பேசட்டும் கொள்ளட்டும். என்னை எப்படியாவது நல்லபடியாக வளர்த்து ஆளாக்கினால் போதுமென்று அவளுக்குத் தோன்றி விட்டது. என்னுடைய இருப்பு ஒன்றுதான் அவள் உயிர் வாழ்வதற்கான ஒரே காரணம். என்னைத் திருமணம் முடித்து ஒரு ஆண்மகன் கையில் ஒப்படைத்துவிட்டால் இறுக்கப் பிடித்துக்கொண்டிருக்கும் தனது உயிரை அவள் விட்டுவிட்டாலும் ஆச்சரியமில்லை. அந்த அளவிற்கு வேதனையை அனுபவித்து விட்டாள்..."

"எனக்குப் புரிகிறது மதுரா!" என்றார் மழபாடியார். சிவபக்தியிற் சிறந்த மாதரசியாய் காரைக்கால் அம்மையாரும் திலகவதியம்மையும்[102] மங்கையர்கரசியாரும்[103] இவ்வாறுதான் இருந்திருப்பார்கள் எனும்படியான தோற்றப்பொலிவுடன் தூய்மையே உருவாய் விளங்கும் மதுரவாசகியின் அன்னையார் ஒரு கணம் மழபாடியாரின் உள்ளத்தில் வந்து போனார். உலகம் எத்தனை மாறினாலும் அபலைப் பெண்டுகளின் அவலம் மட்டும் மாறப்போவதில்லை என்று அவருக்குத் தோன்றியது.

"உங்களை... நான்... அத்தான் என்று அழைக்கலாமா? அந்த உரிமை எனக்கு உண்டா?"

"உனக்கில்லாத உரிமையா? தாராளமாக அழைக்கலாம்! ஆனால் அப்படி அழைக்கும் உரிமை படைத்தவள் வேறொருத்தியும் இருக்கிறாளென்பதைச் இப்போது சொல்லி விடுகிறேன். என்னுடைய மாமன் மகள்..."

"என்ன.....?"

---

[102] அப்பர் பெருமானின் தமக்கையார்.
[103] சிவபக்தியிற் சிறந்த பாண்டியப் பேரரசி.

சற்று அதிர்ச்சியுடன் முன்னேறி வர இருந்தவள் படகின் எதிர்பாராத குலுங்கலில் தள்ளாடி... அடடா! ஆற்றில் விழுந்துவிட்டாளே? கடவுளே! மதுராவிற்கு நீச்சல் தெரியாதே? அடுத்த கணமே துடுப்பை உள்ளிழுத்து வைத்துவிட்டு மழபாடியார் நீரில் குதிக்க...

இனிமை நிறைந்த அக்கனவு அக்கணத்தோடு கலைந்தே போனது. அது மட்டுமல்ல. இமைகள் பிரிய விழித்தவர், தனக்கும் மணியனாருக்குமிடையில் படுத்திருந்த பண்டிதரைக் காணாமல் திடுக்கிட்டார்!

25. செண்டு வாயில் சித்திரக்கூடம்



பொழுது இன்னமும் முழுவதுமாகப் புலர்ந்து விடவில்லை. இருள் பூமியின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே மிச்சமிருந்தது என்றாலும் கிழக்கில் ஆதவன் எழுவதற்கான ஆயத்தங்கள் பலமாகவே நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதை சூட்சும அறிவால் உணர்ந்த சிறு உயிரினங்களும் பறவையினங்களும் உற்சாகத்துடன் கூச்சலிட்டபடி விடியலை வரவேற்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தன. ஆனால் மனித குலம் மட்டும் "ஆஹா, இருள் இன்னமும் சிறிது மிச்சமிருக்கிறது. இருக்கும் நேரத்தை வீணாக்காமல் கலைந்துவிட்ட உறக்கத்தை மீண்டும் விட்ட இடத்திலிருந்து பிடிப்போம்!" என்னும் நினைப்புடன் துயிலில் ஆழத் தலைப்பட்டது.

சத்திரத்தில் கனவு கலைந்ததால் திடுக்கிட்டுப்போய்க் கண்விழித்த மழபாடியார் பக்கத்தில் படுத்திருந்த பண்டிதரைக் காணாமல் மேலும் அதிர்ச்சிக்கு ஆளானார். தன்னருகில் என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதையே முற்றிலும் அறியாதவராக இன்னமும் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் மணியனாரைக் கண்டதும் ஒரு கணம் எரிச்சல் உண்டாயிற்று. மறுகணம் பாவம், நீண்ட பயணத்தினால் அசந்து உறங்கிக் கொண்டிருக்கிறார் போலும் எனும் எண்ணமும் தோன்றியது.

பண்டிதரிடம் ஏனோ மழபாடியாருக்கு மரியாதையோ மதிப்போ பக்தியோ இன்னமும் உண்டாகவில்லை. ஒரு நாள் முழுவதும் நன்றாகப் பேசிப் பழகியிருந்தாலும்

முதன்முதலில் அவரைக் கண்டபோது ஏற்பட்ட ஒரு விதமான சந்தேகமும் குறுகுறுப்பும் கடைசிவரை அவனை விட்டு அகலவில்லை.

பொதுவாக எல்லா மனிதர்களுக்குமே பலவகையான உள்ளுணர்வுகளை இயற்கை வழங்கியிருக்கிறது. ஆனால் பலரும் அவற்றைக் கூர்மையாகக் கவனிப்பதில்லை. உள்வாங்கிக் கொள்வதில்லை. உபயோகிப்பதில்லை. நாளாவட்டத்தில் அந்த நுண்ணிய உணர்வுகள் அறவே மங்கிப்போக சுற்றமும் சமூகமும் வலுக்கட்டாயமாக ஏற்றி வைத்த சிந்தனைகள் மனதை ஆக்கிரமிக்கத் துவங்கி விடுகின்றன.

ஆனால் மழபாடியாரைப் போன்ற மனிதர்கள் அந்த உள்ளுணர்வுகளை மங்காமல் வைத்துக் கொள்வதுடன் அதன் குரலைக் காதுகொடுத்துக் கேட்கும் சக்தியையும் பெற்று விடுகிறார்கள் அடிக்கடி மேற்கொள்ளப்படும் தியானப்பயிற்சி இதனை மேலும் எளிதாக்குகிறது.

இவ்வகையான மனிதர்கள் அடுத்தவர்களைப் பார்த்தவுடன் எடைபோட்டு விடுவார்கள் அது மட்டுமல்ல முதன் முதலில் தோன்றும் இவ்வுணர்வைப் பின்னர் மாற்றிக்கொள்ளவும் மாட்டார்கள் என்ன நடந்தாலும் எத்தனை முறை தேனொழுகப் பேசினாலும் "என்னுடைய உள்ளுணர்வு பொய் சொல்லாது நீ இன்னார்தான் அந்த முடிவில் மாற்றமில்லை! என்பது போலத்தான் நடந்து கொள்வார்கள்.

கழிக்குடியின் பாசுபத மடத்தைச் சேர்ந்தவராகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்த தேவநாத பண்டிதர் அசுவ வைத்தியத்தில் தேர்ந்தவர்தான். பாசுபத மஹாவிரதத் தத்துவங்களிலும்கூட அவருக்கு ஆழ்ந்த ஞானம் உண்டுதான் பலவகையான அனுபவங்களையும் அவர் வாழ்க்கையில் அனுபவித்தவராகவே இருந்துவிட்டுப் போகட்டும் ஆனால் அவர் நம்பத்தகுந்தவரல்ல. அவர் சொல்வதனைத்தும் உண்மையுமல்ல என்றுதான் மழபாடியாருக்குத் தோன்றியது தாங்கள் இருவரும் அவரிடம் நடித்துக்கொண்டிருப்பதுபோல் அவரும் நடித்துக் கொண்டிருக்கிறார் இந்த நாடகம் முதலில் முடியுமா அல்லது அவர்களின் பயணம் முதலில் முடியுமா தெரியவில்லை.

படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தவர் என்ன ஆனார்? இரவோடிரவாகச் சத்திரத்திலிருந்து நழுவிவிட்டாரா? அம்பனார் இடைக்கச்சில் சொருகி வைத்திருந்த மெல்லிய மூங்கிலாலான ஓலைக்குழல் பத்திரமாக உள்ளதா என்பதையறிவதற்காக மழபாடியாரின் கண்கள் இளையவரின் இடைப்பகுதியை நோக்கின கப்பிக்கிடந்த இருளில் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை

பளிச்சென்று எழுந்து நின்று கண்களைக் கசக்கிக் கொண்டவர், ஏதோ ஒரு உந்துதலால் தள்ளப்பட்டு சத்திரத்தின் வாயிற்பகுதிக்குச் செல்லாமல் புறக்கடைப் பக்கத்திற்கு விரைந்தார். அங்கு சிறிது தூரத்தே ஓடிக் கொண்டிருந்த வாய்க்காலின் கரையில் அவர் கண்ட காட்சி அவரை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியதுடன் பண்டிதரைப் பற்றிய அவரது எண்ணத்தையும் பெரியதொரு பரிசிலனைக்கு ஆட்படுத்தி விட்டது.

பரந்து விரிந்திருந்த வாய்க்காலின் புல்தரையில் நீண்ட மான்தோலில் நின்றபடி பண்டிதர் யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். "இயமம், நியமம், ஆசனம், பிரத்யாஹாரம், பிராணாயாமம், தாரணம், தியானம், சமாதி என்னும் எட்டு அங்கங்களை உள்ளடக்கிய அஷ்டாங்க இராஜயோகப் பயிற்சியில் மூன்றாவது அங்கமாகத் திகழ்வதே ஆசனம்!" என்னும் பெரியதொரு முன்னுரையுடன் தனது குருநாதர் யோகாசனப் பயிற்சியைத் துவக்கியது மழபாடியாரின் நினைவுக்கு வந்தது பரத கண்டம் முழுவதும் அந்நாளில் பரவிவிட்டிருந்த பல்வேறு ஹத யோகப் பயிற்சி முறைகளில் பண்டிதர் பயின்று கொண்டிருந்தது அதிகாலையில் சூரியனின் முன்னிலையில் மேற்கொள்ளப்படும் "சூரிய நமஸ்காரம்" என்னும் பயிற்சி முறை என்பது அவருக்குப் பார்த்தவுடன் புரிந்து போயிற்று ஆசனங்களுக்கு ஏற்றபடி பல விதங்களிலும் வளைந்துகொடுத்த பண்டிதரின் அங்கங்கள் அப்பயிற்சியில் அவருக்கிருந்த அனுபவத்தை சொல்லாமல் சொல்லின தேவநாக பண்டிதரின் மீது முதல் முறையாக மழபாடியாருக்குச் சிறிதளவு மரியாதை ஏற்பட்டது எனலாம்.

அவரைத் தொந்தரவு செய்ய விருப்பமின்றி தனது காலைக்கடன்களை மழபாடியார் முடித்துக்கொள்வதற்கும் இளையவர் எழுந்திருப்பதற்கும் சரியாக இருந்தது அடுத்த ஒரு நாழிகைப் பொழுதில் மூவருமே சத்திரத்திலிருந்து கிளம்பிவிட்டனர். சீக்கடைந்திருந்த புரவியின் உடல்

நிலையும் நன்கு தேறியிருந்ததால் அதில் மழபாடி[illegible] ஏறிக்கொள்ள, மற்றதில் பண்டிதரும் கம்பன் மணியனா[illegible] ஆரோகணித்தார்கள். மத்திம கதியில் புரவிகள் நடைபோ[illegible] சடையம்பெருவழியில் அவர்களின் பயணம் அன்றைய [illegible] முழுவதும் தொடர்ந்தது.

*   *   *   *   *   *   *   *

'தஞ்சாபுரி' என்று அந்நாளில் அறியப்பட்ட தஞ்[illegible] நகரானது உள்ளாலை, புறம்படி என்னும் இரும் பெ[illegible] பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. உள்ளாலையின் [illegible] பகுதிகளையும் உள்ளடக்கியபடி மலையைப்போ[illegible] சுற்றிலும் எழுந்த கோட்டை மதில்[104], அ[illegible] நாலாபுறங்களையும் சூழ்ந்து நின்றது. மதிலின் [illegible] முனையில் நின்று பார்ப்பவர்களுக்கு மறு கோ[illegible] தென்படவில்லை.

முத்தரையர்களிடமிருந்து தஞ்சாபுரியைக் கைப்பற்[illegible] விஜயாலயச் சோழர், தம்மிடமிருந்து பிறிதொரு[illegible] அதனைப் பிற்காலத்தில் அபகரித்து விடலாகாது எனக்[illegible] தேசமெங்கிலுமிருந்து பல நூறு ஆட்களைத் தருவித்[illegible] கோட்டையின் பழைய மதில்களை பலப்படுத்தும் பணி[illegible] மேற்கொண்டாராம். பத்தாண்டுகளுக்கும் மேல[illegible] தொடர்ந்த அப்பெரும்பணி அவருடைய இறு[illegible] காலத்தில்தான் நிறைவடைந்ததாம். தன்னுடைய மனோ[illegible] படியே கோட்டையின் நான்கு திசைகளிலும் கா[illegible] தெய்வமாக எல்லைக்காளிதேவியின்[105] திருவுருவங்க[illegible] பிரதிஷ்டை செய்துவிட்டு "பிற்காலச் சோழர் சந்ததி[illegible] தலைநகரை நீதானம்மா நாற்திசைகளிலும் நின்று கா[illegible] வேண்டும்!" என்று மனமுருக வேண்டியபடி அவளு[illegible] திருவடியிலேயே அவர் உயிர் பிரிந்ததாம்.

---

[104] பதினெண சிததாகளுள ஒருவரான கருவூாத தேவரின தஞசை இராசராஜேசசுரம மீதான திருவிசைபபா, பதது பாடலகளிலும தஞசையை "இஞசி சூழ தஞசை" எனறே குறிபபது கவனததில கொளளததககது. இஞசி எனறால கோடடை மதிலெனறு பொருள.

[105] விஜயாலயா தஞ்சைக் கோட்டை வாயிலில் நிசும்ப சூதனியை பிரதிஷடை செயததறகு செடபேடடுச சானறு உளளது. சோழா கால[illegible] நிசுமபசூதனியின திருவுருவஙகள குறுஞசிறபஙகளாக புளளமஙகை திருவாலநதுறையாா கோயில, திருசசெனனமபூணடி திருசசடைமுடி மகாதேவா கோயில முதலான இடஙகளில காணககிடைககினறன.

விஜயாலயரின் புத்திரனான ஆதித்த சோழர் மதில் [illegible] பலமாக இருந்தால் போதாது. மதிலைச் சுற்றிய அகழியும் பெரிதாக இருக்கவேண்டுமென்று நினைக்கவே [illegible] முத்தரையர் காலத்து அகழியும் தூர்க்கப்பட்டு [illegible] அகலங்கள் பெரிதுபடுத்தப்பட, ஒரு கட்டத்தில் அகழிக்கான நீரை வெண்ணாற்றிலிருந்து தருவிக்க வேண்டியதாகிவிட்டது. இதற்காக இராஜ்ஜியத்தின் [illegible] வல்லுனர்கள் ஒரு ஏற்பாடு செய்தார்கள். அது [illegible]வெனில், வெண்ணாற்றில் குறிப்பிட்ட கட்டத்திற்கு [illegible] நீர்ப் போக்குவரத்து அதிகரித்தால், அது [illegible] [illegible]களின் வழியாக அகழிக்குள் பாய்ந்துவிடும். [illegible] [illegible]நீரின் அளவு குறைந்ததும் நின்றுவிடும். இவ்வாறு [illegible]போது புதிய நீர் பாய்வதும் அ[illegible] [illegible]ததால் அகழியின் நீர்வாழ் உயிரினங்கள் [illegible] [illegible]தன. அகழிக்குள் வசித்த நீண்ட வாய் முதலைகளுக்[illegible] [illegible]மீன்கள் உணவாகக் கிடைத்தன.

நிசும்பசூதனியாகிய காளிதேவி விஜயாலய[illegible] [illegible] வாக்குறுதி மாறாமல் நடந்துகொண்[illegible] [illegible]டைய காலத்திற்குப்பின் தஞ்சாபுரியை ஒருவரா[illegible] [illegible]க்கவே முடியவில்லை. சோழர்களின் பலம் நாளொரு [illegible]யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து [illegible] [illegible] நடக்கும் காலத்தில் மிக உன்னதமானதொரு நிலை[illegible] [illegible]ந்திருந்தது.

இத்தகைய பெருமைகள் பலவும் வாய்ந்த தஞ்சாபுரிக் [illegible]ருக்குத்தான் நாம் இப்போது வந்து சேர்ந்திருக் [illegible]. அலைகடலென ஆர்பரிக்கும் அகழி[illegible] [illegible]வையொத்த மதிலையும் தாண்டி நகரின் [illegible] [illegible]ான கிழக்கு நுழைவாயில் வழியே உள்ளே [illegible]கிறோம். அஷ்ட மங்கலங்களும் பொறிக்கப்பட்டு [illegible]த்திருமகளாகிய கஜலட்சுமியின்[106] [illegible] [illegible]தலமாக விளங்கும் இந்நுழைவாயில் பண்[illegible] [illegible]ழப் பேரரசரின் பெயரால் 'கரிகாற் பெருவளத்தான்

---

[106] [illegible] நுழைவாயிலகளில அஷடமஙகலஙகளுடன் கஜலடசுமியின [illegible]தையும பொறிபபது பணடைய மரபு எனபது சோழாகாலக [illegible]களை ஆராயுமபோது தெரிகிறது. பெரிய கோயிலின திரு[illegible] [illegible]ன திருவாயிலின அஷடமஙகலஙகள், திருநதுதேவனகுடி [illegible]வாயில அஷடமஙகலஙகள் முதலியன சிறபபாக [illegible]டவை.

திருவாயில்' என்று அறியப்படுவதை அறிந்து மகிழ்கிறோம். வாயிலுக்குள் நுழைந்ததும் நெரிசல் மிக்க பகுதியாக விளங்கும் திருபுவனமாதேவிப் பேரங்காடியையும்[107] அதனையொட்டி சாரி சாரியாக அமைக்கப்பட்டுள்ள பல்வேறு பெருந்தெருக்களையும் மாட மாளிகைகளையும் கோபுரங்களையும் சடுதியில் கடந்து ஆனையாட்கள் தெரு வழியாக நகரின் மத்தியப் பகுதியாக விளங்கும் அரண்மனைப் பகுதிகளை[108] அடைகிறோம்.

அரண்மனைப் பகுதிகள் என்று நாம் பொதுவாகக் குறிப்பிடும் இடம் உண்மையில் பல இராஜ மாளிகைகளையும் தன்னகத்தே உள்ளடக்கியது. அதனால்தானோ என்னவோ அந்தப் பகுதிகளை மட்டும் ஒரு சிறியதொரு மதில் சுவர் அணைத்தபடி செல்கிறது. நமது யூகம் சரியானதே என்பதற்கு அத்தாட்சியாக அம்மதிலின் பல்வேறு பகுதிகளிலும் மெய்க்காவல் வீரர்கள் காவற்பணியில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம். பிரம்மாண்டமாக நெடிதுயர்ந்து நிற்கும் இப்பண்டைய அரண்மனையின் பல பகுதிகளையும் பார்ப்பதற்கு துரதிருஷ்டவசமாகத் தற்போது அவகாசமில்லை. நேராக அரண்மனையின் தென்மதிலையொட்டி அமைந்துள்ள புரவி லாயத்திற்கு எதிரில் காணப்படும் பெரிய செண்டு வாயில் என்னும் பகுதியை அடைவோம். அதற்கருகில் தெரியும் சுதவம் வழியாக நுழைந்தால் தஞ்சையின் பிரசித்தமாக விளங்கும் 'பெரிய செண்டு வாயில் திரு சித்திரக்கூடத்தை'[109] அடையலாம்.

வழக்கமாக இராஜவம்சத்தவரும் பெருந்தனத்து அதிகாரிகளும் மட்டும் வந்து செல்லும் அந்த சித்திரக்கூடமானது வருடத்தில் ஒருநாள் மட்டும், அதாவது மாசி மகக் கொடியேற்றம் தஞ்சை தளிக்குளத்தார் கோயிலில் நடைபெற்று முடிந்த மூன்றாம் நாள் பொதுமக்களுக்காகத் திறந்துவிடப்பட்டது.

பொதுமக்களிடம் இக்கூடத்தைப் பற்றிய பலவித வதந்திகளும் கட்டுக்கதைகளும் நிலவி வந்தன. இக்கூடத்தின்

---

107 கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அங்காடி.

108 இவை இன்றைய தஞ்சையின் ஸ்ரீநிவாசபுரம் பகுதிகளில் அமைந்திருக்கலாம்.

109 கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ள சித்திரக்கூடம்.

இரகசிய அறையொன்றில் தங்கத்தையும் வெள்ளியையும் நவ வைர வைடூரியங்களையும் பதித்துச் செய்வித்த சில அருமையான சித்திரங்கள் உள்ளனவாம். அதனைப் பார்ப்பதற்குச் சோழப்பேரரசரைத் தவிர வேறு எவருக்கும் அனுமதி இல்லையாம்! மேலும் சித்திரக்கூடத்தின் இரகசிய அறைகள் ஆபத்துக் காலங்களில் தப்பிப்பதற்கான சுரங்கப் பாதைகளைக் கொண்டிருக்கிறனவாம். குறிப்பாக ஒரு பாதை தஞ்சையிலிருந்து நேராகப் பழையாறைக்கே சென்று விடுமாம்!

இத்தகைய வதந்திகள் எழுவதற்கு ஒரு முக்கியமான காரணம் இருந்தது. சூரிய வெளிச்சம் பட்டு ஓவியங்கள் மங்கிப்போய்விடும் என்பதால் கூடத்தின் பல அறைகளிலும் மேல்நிலைச் சாளரங்கள் அமைக்கப்படவில்லை. அதனாலேயே பட்டப்பகல் வேளைகளில்கூட கூடத்தின் பல அறைகள் இருள் மண்டிக் கிடந்தன. சித்திரக்கூடத்தின் போக்குவரத்தும் அதிகம் இல்லையென்பதால் பெரும்பாலும் ஒரு அடர்ந்த அமைதியே அங்கு கவிந்திருக்கும். [illegible] சப்தத்தைத் தவிர வேறொன்றும் கேட்காது. இவ்வாறாக இருளும் அமைதியும் மண்டிய [illegible] சூழலில் காட்சிதரும் அரண்மனைப் பகுதியைப் பற்றி மக்களிடையே பல்வேறு வதந்திகள் பரவிக்கிடந்ததில் வியப்பில்லை அல்லவா?

ஆனால், என்ன ஆச்சரியம்! இன்று நாம் சித்திரக் கூடத்திற்குள் நுழையும் வேளையில் படர்ந்திருக்கும் அமைதியைக் கிழித்துக்கொண்டு பல குரல்கள் ஒலிக்கின்றனவே? அதோ! கூடத்தின் கிழக்குக் கோடியில் [illegible] வெளிச்சம்கூடத் தெரிகிறதே?

முதலில் ஒரு காவலன் பயபக்தியுடன் பெரியதொரு [illegible] ஏந்தியபடி வருகிறான். அவனைத் தொடர்ந்து இளவரசரான அருள்மொழிவர்மர் கம்பீரமாக நடந்து வருகிறார்... நாகையில் நாம் சந்தித்த மனிதரா இவர் என்று ஆச்சரியப்படும்படியாக மேனியெங்கும் முத்து ஆபரணங்கள் பூண்டு நீண்ட கொண்டையை மேலே முடுக்கிவிட்டு நெற்றி நிறைய திருநீறு தரித்து சிவப்பழமாகக் காட்சியளிக்கிறார். அவரைத் தொடர்ந்து மீசை மெல்ல அரும்பத் தொடங்கியிருக்கும் இளைஞன் ஒருவனும் இளம்

பெண்கள் மூவரும்[110] நடந்து வருகிறார்கள். அனைவருக்கும் பின்னால் இன்னொரு விளக்கேந்திய காவலன்.

சித்திரக்கூடத்தில் ஓரளவிற்கு சூரிய வெளிச்சம் நிறைந்திருக்கும் ஒரே பகுதியான சபா நாயகர் மண்டபத்தில் காணப்பட்ட ஆசனத்தில் அருள்மொழிவர்மர் அமர்ந்து கொள்ள, அந்த இளைஞனும் பெண்களும் அவரைச் சூழ்ந்து நின்று கொண்டார்கள். காவலர்கள் சற்று தூரத்தில் மரியாதையுடன் விலகி நின்றார்கள்.

அருள்மொழிவர்மர் அவர்களை முதன்முதலில் பார்ப்பதுபோல் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். குறிப்பாக அந்த இளைஞனை சற்று நிதானமாகவே பார்த்தார். அரும்பு முகத்தில் தெரியும் குறுகுறுப்பையும் கண்களில் தெரியும் வியப்பையும் உடல் முழுவதும் பரவியிருக்கும் அமைதியின்மையையும் உணர்ந்தார். ஒரு கணம் தன்னுடைய பதினைந்து வயது பிம்பத்தைத் தானே பார்த்துக்கொண்டிருப்பது போல் பிரமை ஏற்பட்டது! குழந்தை குழந்தை என்று நினைத்துக் கொண்டிருந்தோம். இத்தனை தூரமா வளர்த்துவிட்டான் மதுராந்தகன்?

அடுத்ததாக அந்தப் பெண்களிடம் அவரது பார்வை பதிந்தது. பெண்களில் சற்றே மூத்தவளாகக் காணப் பட்டவள் மரியாதையின் காரணமாக முகத்தைக் குனிந்து கொள்ள, இளையவளோ அஞ்சாமல் அவரை நேருக்கு நேர் நோக்கினாள். அவளுடைய அத்தையை அப்படியே அச்செடுத்து வைத்தாற்போன்ற முகம் ! மூன்றாவது பெண் மிகச் சிறியது. சிரிப்புடன் எங்கோ பார்த்துவிட்டு அவர் பக்கம் திரும்பியது.

"ஏனப்பா, எங்களை இப்படி முறைத்துப் பார்க்கிறீர்கள்?"

பேரரசர் ஒரு புன்சிரிப்புடன் அவர்கள் மூவரையும் தன் ஆசனத்தில் இருத்திக்கொண்டார். மூத்தவர்கள் மூவரும் அரசரின் இரு பக்கங்களிலும் அமர்ந்துவிட, எங்கே அமர்வது என்று தவித்த சிறியவளுக்கு அவருடைய மடியே

---

110 முதலாம் இராஜராஜருக்கு மூன்று பெண்கள் (குந்தவை, மாதேவடிகள், கங்கமாதேவி) இருந்தனா என்பது திருவையாறு கல்வெட்டாலும் திருவலஞ்சுழி கல்வெட்டாலும் தெளிவாகின்றது.

பரிசாகக் கிடைத்தது. சிறிது நேரம் அவளுடைய தோளைப் பிடித்து உச்சி முகந்தார். மஞ்சளும் மருதோன்றியும் செம்பருத்தி இலையும் அந்த வாலைக் குமரியின் இயல்பான பெண்மணத்தோடு கலந்து நெற்றிப் பொட்டில் அற்புத சுகந்தமாகப் பரிமளித்தன.

"விடுங்கள் அப்பா! என்னவோ நல்ல நல்ல கதைகளெல்லாம் சொல்வீர்கள் என்று விளையாட்டை விட்டுவிட்டு வந்தால் ஒன்றும் பேசாமல் முறைத்துக் கொண்டிருக்கிறீர்களே?" என்று சிணுங்கினாள் அவள்

"உஸ்.. கங்கமாதேவி! சிறிது நேரம் சும்மாயிரு!" - என்று அடக்கினாள் மூத்தவள். அரசரின் பொருள் பொதிந்த பார்வை ஒரு கணம் அவள் மீது படிந்தது.

"சொல்கிறேனம்மா. நிச்சயம் சொல்கிறேன். நமது முந்தோர் சரித்திரத்தில் கதைகளுக்கா பஞ்சம்? சொன்னால் போயிற்று... ஆனால் அதற்கு முன்னதாக சில முக்கியமான விஷயங்களைப் பேசவேண்டியிருக்கிறது. அதனால்தான் இராஜகம்பீரன் சபை முடிந்ததும் உங்களை நேராக என்னுடன் அழைத்து வந்துவிட்டேன்...

செல்வங்களே! கடந்த மூன்று வருடங்களில் உங்களுடன் நான் அதிக நேரம் செலவிடவில்லையென்பதை அறிவீர்கள். பட்டமேற்ற நாள் முதல் பல சிக்கல்கள், அரசாங்க அலுவல்கள். ஒரு கணம் என் கவனம் குறைந்தாலும் எங்கோ ஏதோ ஒரு தவறு நேர்ந்துவிடுகிறது பின் அதனை சீர் செய்யப் பெருமுயற்சியெடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு அரசாங்கம் நன்கு இயங்க முறையோடு செயல்படும் நிர்வாகம் மிக அவசியம் . அதனால் பல அலுவல்களையும் நானே நேரடியாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறேன். இத்தகைய அலுவல்களினால் உங்களுடன் நான் முன்புபோல் பேசிக்களிக்க முடியவில்லை.

நீங்களோ இந்தக் காலகட்டத்தில் பிராயமெய்தி நன்கு வளர்ந்து விட்டீர்கள். இது கற்க வேண்டிய வயது. கல்வி, கலை என்று தொட்டவையனைத்தும் கைகூடிவரும் வயது இந்தப் பருவத்தை வெறும் விளையாட்டுப் போக்காகக் கழிந்துவிட்டால் பின்னர் கற்பதென்பது இயலாத காரியம் அதனால் இக்காலகட்டத்தைப் பயனுள்ள வகையில் நீங்கள் கழிப்பதற்கு ஏதுவாக சில முக்கிய முடிவுகளை நான் எடுத்துள்ளேன். அதனை உங்களுடன் பகிர்ந்துகொள்ளலா மென்றுதான் இங்கு அழைத்து வந்தேன்.

முதல் கட்டமாக, மதுராந்தகனை நாகையின் பௌத்த திட்ட விஹாரையில் ஆச்சாரியர் மஹாகாசியப தேரரிடம் கல்வி கற்க அனுப்பப்போகிறேன். ஆச்சாரியாரின் கல்வியறிவு கடலனையது. தமிழிலும் வடமொழியிலும் பாலி கிரந்தங்களிலும் அவருக்கிருக்கும் இலக்கிய இலக்கணத் தேர்ச்சி எனக்குத் தெரிந்தவரையில் சோழ மண்டலத்தில் வேறு எவருக்குமில்லை. நானே ஒரு கட்டத்தில் நாகையில் கல்வி கற்றவன்தான். "கற்றவர் பயிலும் கடல்நாகை" என்பது அப்பர் பெருமானின் வாக்கு. விஹாரையின் சூழ்நிலை மதுராந்தகனை அமைதிப்படுத்தும். எல்லையில்லாமல் பொங்கிப் பெருகிக்கொண்டிருக்கும் அவனது வாலிப சக்தியை தேக்கி நெறிப்படுத்தும். மேலும் ஆச்சாரியருக்கு இவன் மீது தனிப்பட்ட அபிமானம் உண்டு. அதனால்தான் இந்த முடிவை எடுத்தேன். மதுராந்தகா! நாகைக்குச் செல்வது உனக்கு மகிழ்ச்சிதானே?"

"ஆஹா! மிக்க மகிழ்ச்சி அப்பா! தஞ்சையிலிருந்து எப்போது வெளியில் கிளம்புவோமென்று காத்துக் கொண்டிருக்கிறேன்."

"ஒரு எச்சரிக்கையை மட்டும் நான் உனக்கு முன்பே கொடுத்து விடுகிறேன். உன் வயதில் நானும் இப்படித்தான் 'புதிய இடம்! புதிய மனிதர்கள்!' என்று உற்சாகமாக விஹாரைக்குக் கிளம்பினேன். ஆனால் அந்த ஆரம்பகால மகிழ்ச்சி ஒரு திங்களில் காணாமற்போய்விட்டது. விஹாரையின் சூழல் என் பொறுமையை அளவுக்கு அதிகமாகச் சோதித்தது. எப்போதும் மெதுவாக நடைபெறும் பணிகள், மென்மையாக மட்டுமே பேசும் பிக்ஷுக்கள், அடிக்கடி நடைபெறும் தியான வகுப்புக்கள்...

அப்பப்பா! நாம் உலவும் பரபரப்பான உலகிற்கும் அந்த பௌத்த உலகிற்கும்தான் எத்தனை வித்தியாசங்கள்? ஆனால் அந்த அமைதியை உணரும் அறிவோ இரசிக்கும் நுட்பமோ அந்நாட்களில் எனக்கில்லை. எப்போதடா தந்தையார் வருவார்கள்? எப்போது தஞ்சைக்குத் திரும்பலாம் என்றுதான் தோன்றிக்கொண்டே இருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டுதான் காலத்தை நகர்த்தினேன்.

ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, அந்த அமைதி என்னுள்ளும் படர்ந்தது அப்போதுதான் பிக்ஷுக்கள் வாழ்க்கையையே ஒரு தியானமாக, ஒவ்வொரு செயலையும் ஒரு வழிபாடாக மாற்றிக்கொண்டுள்ளார்கள் என்பது

உண்மை புலப்பட்டது. நிற்பது, நடப்பது, உண்பது, உறங்குவது என்னும் பல செயல்களையும் நாம் அனிச்சையாய் பழக்கத்தின் காரணமாகச் செய்து வருகிறோம். மனமொன்றி அதில் ஈடுபடுவதில்லை. ஆனால் பௌத்தத்தில் சுவாசத்தைக்கூட நன்கு உணர்ந்தே செய்ய வேண்டும் என்று விதித்திருக்கிறார்கள். இதற்காகவே புத்த பகவானால் உபதேசிக்கப்பட்ட 'அன்பான சதி சூத்திரம்' என்று தனி கிரந்தமே உண்டு.

இந்த உண்மை புரியத்துவங்கியதும் உலகமே மாறி விட்டது. உண்மையில் உலகமா மாறியிருந்தது? இல்லை. இல்லவேயில்லை. நான்தான் மாறியிருந்தேன்!"

தான் சொல்லும் விஷயங்களை ஆர்வம் மிக்க விழிகளுடன் கூர்மையாக உள்வாங்கிக்கொள்ளும் தனயனை அருள்மொழி வர்மர் ஒரு தந்தையின் ஸ்தானத்தில் நின்று பார்த்தும் இரசித்தார். ஒருநாள் இவன் மிகப் பெரியவனாக வருவான் என்னும் எண்ணம் அவருள் ஆழமாக தோன்றியது. அதற்குரிய சரியான சூழலை அமைத்துத் தர வேண்டிய பெருங்கடமை தனக்கிருப்பதையும் அவர் அக் கணத்தில் நன்றாக உணர்ந்தார்

26. தக்கோல வீரர்



"ஆக, அந்த பௌத்த விஹாரையின் நிலவும் அமைதியான சூழலில் பொறுமை இழந்து விடாமல் அந்தப் பேரமைதியை நன்கு உள் வாங்கிக் கொண்டாயானால், மிகுந்த பயனை அடையலாம்..."

"சரி அப்பா!"

பருவத்துக்கு வந்துவிட்ட மூத்த மகள் குந்தவையை நோக்கினார். இன்னும் சிறிது காலத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும். யாரைப் பார்ப்பது? தெரியவில்லை. அவள் இன்னமும் தலைநிமிர்ந்து அவரைப் பார்க்கவில்லை.

அவளுக்கடுத்தவளைப் பார்த்தார்

"அனுபமா[111]! எப்படியம்மா இருக்கிறாய்?"

நடுவிற் பெண்பிள்ளை[112] என்று அந்தப்புரங்களில் குறிப்பிடப்பட்ட அந்தப் பெண் அவரை நிமிர்ந்து பார்த்தது.

"மகாதேவர் அருளினால் நன்றாக இருக்கிறேனப்பா."

திகைப்புடன் அருள்மொழிவர்மர் அவளை நோக்கினார். சாதாரணமாக எல்லோரையும்போல் "நன்றாக இருக்கிறேன்" என்று சொல்லாமல் மிகக் குறிப்பாக "மகாதேவர் அருளினால் நன்றாக இருக்கிறேன்" என்று சொல்லும் வயதா இது? இவள் சாதாரணப் பெண்ணல்ல என்று அவருக்கு எப்போதுமே தோன்றுவதுண்டு. இன்று அந்த எண்ணம் மிகுதியாகவே வலுப்பெற்றது.

சிறு வயது முதலே பக்குவம் நிறைந்த பெண்ணாக தெய்வ பக்தியையும் சிவநெறியையும் சிந்தையில் தேக்கிய செல்வியாகவே அவள் காட்சியளித்திருக்கிறாள். வளரும் பருவத்திற்கேற்ற விளையாட்டுத்தனங்கள் அவளிடம் காணப்படவில்லை. எப்போதும் ஏதோ சிந்தனை அவள் மனதில் ஓடிக்கொண்டே இருப்பதுபோல் தோன்றும். தளிக்குளத்தார் ஆலயத்தின் சரஸ்வதி பண்டாரத்திலிருந்து எக்கச்சக்கமான ஓலைக்கட்டுகளைத் தருவித்து எப்போதும் எதையாவது படித்துக்கொண்டிருப்பது அவளுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு. "உங்கள் பெண்ணுக்குக் கல்வி கற்றுத்தர எங்களால் ஆகாது. நாங்கள்தான் அவளிடம் நிறையக் கற்க வேண்டியிருக்கிறது" என்று அத்தனை சோழநாட்டுப் பண்டிதர்களும் கைவிரித்து விட்டார்கள். ஒரு கட்டத்தில் தமிழில் இருக்கும் பெரும்பாலான நூல்களைப் படித்து முடித்து விட்டதனாலோ என்னவோ சமஸ்கிருதம் மற்றும் பிராகிருதத்தின் பக்கம் அவளது கவனம் தற்போது சென்றிருக்கிறது. சம்ஸ்கிருத இலக்கண-இலக்கியங்களை அனாயசமாகப் பயிலத் துவங்கியிருக்கிறாள். இன்னும் சிறிது

---

[111] முதல பராநதகரின இரணடாவது பெணணின பெயா அனுபமா. அருளமொழிவாமா தமது பெணணுககும அவவம்மையின பெயரை வைததிருநததாகக கொளக. இபபெணணே பிறகாலததில மாதேவடிகள் என்று பெயா பெறுகிறாா.

[112] கல்வெட்டுக்களும் இவரை இவவாறுதான அழைககினறன.

[113] நூலகம.

நாட்களில் நாட்டிலிருக்கும் பண்டிதர்களை வம்புக்காக வாதம் செய்ய அழைத்தாலும் வியப்பில்லை.

"மிக்க மகிழ்ச்சியம்மா. தளிக்குளத்தார் அருளினால் நீ சிவநெறியிச் சிறந்து விளங்குவாய்!" என்று மனதார வாழ்த்தினார் அருள்மொழிவர்மர். திருமணப் பருவமடைந்துவிட்டால் இவளை எவன் கையில்பிடித்துக்கொடுக்க முடியுமென்று அவருக்குத் தோன்றவில்லை. அம்மாதிரியான சிந்தனைகள் இவளுக்கு உண்டானதாகவும் தெரியவில்லை. இவளுடைய அன்னையோ அன்றாடம் இவளைப்பற்றிப் புலம்பிக்கொண்டிருக்கிறாள்.

"அனுபமா! உன்னையும் இளையவளான சிறிய குந்தவையையும் திருவல்லத்திற்கு சிலகாலம் அனுப்பி வைக்கும்படி அக்கனிடமிருந்து அன்புக் கட்டளை வந்திருக்கிறது. காஞ்சியிலிருந்து உங்களுக்குக் கல்வி பயிற்பதற்காக ஆசிரியர்கள் தருவிக்கப்படுவார்கள்."

காஞ்சி என்ற பெயரைக்கேட்டதும் அனுபமாவின் முகம் மிகப் பெரிதாக மலர்ந்தது. ஏனெனில் வடமொழிப் பண்டிதர்கள் பலரும் அங்கிருப்பதாக அவள் கேள்விப்பட்டிருந்ததுதான். அத்தையாரின் புத்தி கூர்மையை எண்ணி வியந்தாள் அந்தப் பெண். ஆனால் சிறியவளின் முகமோ அதற்கு நேர் மாறாக பெரிதும் வாட்டமடைந்தது. தஞ்சை, பழையாறையில் இருக்கும் அவளுடைய விளையாட்டுத் தோழிகளை விட்டுப் பிரியும் நினைவே அவளது இருதயத்தை இரண்டாகப் பிளப்பதுபோல் இருந்தது. கண்கள் சில நொடிகளில் கலங்கியே விட்டன.

"அக்காவுடன் நானும் போய்த்தான் ஆக வேண்டுமா அப்பா?"

"ஆம் அம்மா! நிச்சயம் நீயும் போகத்தான் வேண்டும். உங்கள் நலனில் என்னைவிட உங்கள் அன்னையை விட அத்தையாருக்கே அதிக அக்கறை உண்டென்பதை நான் சொல்லியா தெரியவேண்டும்?"

அந்தப் பேதைப் பெண் மேற்கொண்டு ஒன்றும் பேசத்தோன்றாமல் நின்றாள். கண்களிலிருந்து மட்டும் பொலபொலவென்று கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அழுது கொண்டே "சரி அப்பா!" என்றாள்.

வாழ்க்கையில் எத்தனையோ இன்ப துன்பங்களைச் சந்தித்திருந்த மாமன்னரின் பக்குவப்பட்ட மனதையே

அந்தச் சிறு பெண்ணின் கண்ணீர் அசைத்துப் பார்த்து விட்டது என்பது அவருடைய முகபாவங்களிலிருந்து புரிந்தது. தம்மைச் சார்த்தவர் எவருக்கும். அது தம் மக்களாகட்டும் அல்லது குடிமக்களாகட்டும். சிறு துன்பம் நேர்வதையும் பொறுக்கமாட்டாத மனம் படைத்தவராக இருந்தார் அந்த அதிசய மனிதர்.

"அழாதே அம்மா. உன் எண்ணங்கள் எனக்குப் புரிகின்றன. வேண்டுமானால் உனக்காக நான் ஒரு ஏற்பாடு செய்கிறேன். அது என்னவெனில், உன்னுடன் உன்னுடைய அணுக்கமான தோழிகள் நால்வரை உன்னுடன் வல்லத்திற்கு அழைத்துச் செல்ல அனுமதிக்கும்படி அக்கனிடம் பரிந்துரைக்கிறேன். சந்தோஷம்தானே?"

அவ்வளவுதான். வாடி வதங்கியிருந்த தாமரை முகம் பளிச்சென்று பிரகாசமடைந்துவிட்டது! என்ன செய்வதென்று அவளுக்குத் தோன்றவில்லை. நொடியில் தன்னுடைய பிரச்சனையைத் தீர்த்து வைத்துவிட்டாரே தந்தையார்? என்று மிதமிஞ்சிய மகிழ்ச்சியும் ஆச்சரியமும் ஒருங்கே அவளை ஆட்கொண்டன. "அப்பா! அப்பா!" என்று அவருடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு அன்பு முத்தமொன்றும் ஈன்றாள் அந்தப் பெண்

விகல்பமறியாத அந்தச் சிறு குழந்தையின் அன்பு அந்தக் கணத்தில் அருள்மொழிவர்மரை முழுவதுமாகக் கட்டிப் போட்டது. அவளுடைய முதுகை மெல்ல வருடிக் கொடுத்தார் அவர். "மிக்க மகிழ்ச்சியம்மா. கதை, கதையென்று நச்சரித்துக் கொண்டிருந்தாயே... அதனைத் துவங்கலாமா?"

"சீக்கிரமே துவங்குங்கள். நல்ல சண்டை நிறைந்த கதையாகச் சொல்லுங்களப்பா" என்றாள் அவள். சேனைகளின் அணிவகுப்பு - போர்முனை - கடுமையான கத்திச் சண்டைகள் - வீரதீர பராக்கிரமங்கள் நிறைந்த கதைகளே கங்கமாதேவிக்குப் பிரியமானவையாக இருந்தன.

"அதிகச் சண்டை வேண்டாமப்பா அது போன்ற பல கதைகளை நீங்கள் கூறிவிட்டீர்கள். பக்தி மணம் கமழும் நாயன்மார் அல்லது ஆழ்வார்களின் கதை எதையாவது கூறுங்களேன்!" என்றாள் மூத்தவள். சிறியவள் வடக்கு என்றால் இவள் தெற்கு என்பதுதான் வழக்கம்.

"ம்ஹூம்! உங்களிடம் கதை கேட்டுப் பல நாட்களாகின்றன சண்டைகள் நிறைந்த கதைதான் முதலில் அதற்குப் பின்பு வேண்டுமானால் பக்திக் கதையெல்லாம் சொல்லுங்கள்..."

"சரி, உங்கள் இருவருக்குமே திருப்தியளிக்கும் வகையில் ஒரு கதை சொல்கிறேன். ஆனால் நான் சொல்லப்போவதை கதையென்று குறிப்பிடுவது தவறு. இந்தப் புனித மண்ணில் சில காலத்திற்கு முன் நிஜமாகவே ஜீவித்திருந்த மகாபுருஷர் ஒருவரின் நம்ப முடியாத நிஜ வரலாறம்மா இது! வாருங்கள் என்னுடன்..." என்றபடி எழுந்த பேரரசர், சபாநாயகர் மண்டபத்திற்கு வடக்கே அமைந்திருந்த அறைகளை நோக்கி நடக்கத் துவங்கினார். அவருடைய செல்வங்களும் காவலர்களும் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

செண்டு வாயில் சித்திரக்கூடம் வடவாயில், தென்வாயில் என்று இரு பெரும் வாயில்களைக் கொண்டிருந்தது. தென் வாயிலுக்கெதிரே புரவி லாயமும் அதனையொட்டி அரண்மனையின் மதிற்சுவரும் வட வாயிலுக்கெதிரே அரண்மனை உத்தியான வனமும் அமைந்திருந்தன. வாயில் அமைப்பில்லாத கிழக்குப் பகுதி மட்டும் அரண்மனையின் பிற பகுதிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டது. இப்பகுதியின் வழியாகத்தான் முந்தைய கதை மாந்தர்கள் கூடத்திற்குள் புகுந்தார்கள் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

சித்திரக்கூடத்தின் வடவாயிற் பகுதியையொட்டி அமைந்திருந்த அறைகள் சோழர் குலத்தின் மூத்தோர் பலருடைய வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிடும் சித்திரங்களைக் கொண்டிருந்தன. குறிப்பாக விஜயாலயச் சோழர், முதலாம் ஆதித்த சோழர், முதலாம் பராந்தகச் சோழர் முதலானோருடைய கால நிகழ்வுகளைக் குறிப்பிடும் சித்திரங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன. அருள்மொழிவர்மர் பலமுறை பலரையும் இந்த அறைகளுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அங்குள்ள சித்திரங்களை விஸ்தாரமாக விளக்கியிருக்கிறார். மேற்குறிப்பிட்ட மூன்று அரசர்கள் மீதும் அவருக்குத் தீராத பிரேமை இருந்தாற் போலக் காணப்பட்டது. எத்தனை முறை பார்த்தாலும் கேட்டாலும் அவருக்கு அம்மூவரின் சரித்திரங்கள் அலுப்புத் தட்டவில்லை.

வாயிலிலிருந்து மூன்றாவதாக அமைந்திருந்த அறைக்குள் நுழைந்த பேரரசர், தக்கோலப் பெரும்போரைக் காட்சியாகச் சித்தரிக்கும் மிகப் பெரிய சித்திரத்திற்கு முன்பு நின்றார். அவரைத் தொடர்ந்து மூவரும் அவருக்குப் பின்னால் வந்து நின்று கொண்டார்கள். காவலர்கள் சித்திரங்களுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் விளக்குகளை சற்றுத் தள்ளிப் பிடித்துக்கொண்டு நின்றார்கள்.

"செல்வங்களே! இத்தக்கோலப் பெரும்போரை நான் பலமுறை உங்களுக்கு விளக்கியிருக்கிறேன். சோழ சைனியமும் இராஷ்டிரகூட சைனியமும் அலைகடலெனத் திரண்டு நின்று தொண்டை மண்டலத்தில் 'திரு ஊறல்' என்று முற்காலத்தில் அழைக்கப்பட்ட தக்கோலத்தை இரணகளமாக்கியதை மிக விளக்கமாக பல சமயங்களில் எடுத்துரைத்திருக்கிறேன்.

அப்பெரும்போரில் முதலாம் பராந்தகரின் வீரப் புதல்வர் இராஜாதித்தர் அரும்பெரும் வீரச்செயல்கள் பலபுரிந்து பொன்னுடல் நீக்கிப் புகழுடம் பெய்தி சோழர் வரலாற்றில் "ஆனைமேற்துஞ்சியச் சோழர்" என்னும் பட்டம் பெற்றதையும் விளக்கியிருக்கிறேன். தக்கோலப் பெரும்போர் வரலாற்றை மட்டும் மாற்றியமைக்கவில்லை; பலரது வாழ்க்கையையும்கூட மாற்றியமைத்தது. அதில் ஒருவர் மிக முக்கியமானவர். இதோ பாருங்கள்!"

வழக்கமாக அனைவரின் பார்வையும் கவரும் இராஜாதித்தரையும் அவர் ஆரோகணித்திருந்த யானையையும் விடுத்து போர்க்களத்தின் மறுகோடியைச் சுட்டிக் காட்டினார் அருள்மொழிவர்மர்.

"உண்மையில் போர் எவ்விதம் நடந்ததோ அதனை நமது அரண்மனைச் சைத்திகர்[114] ஆழமாகப் புரிந்து கொண்டு மிகச் சிறப்பாக இவ்வோவியத்தில் எழுதிக் காட்டியிருக்கிறார். வழக்கமாகப் போர்க்களங்களில் களத்தின் ஒரு முனையில்தான் மிக உக்கிரமான தாக்குதல் இரு சாராருக்கும் நடக்கும். இரு சேனானி நாயகங்களும் அங்குதான் நேருக்கு நேர் மோதிக் கொள்வார்கள்.

ஆனால் தக்கோலப் பெரும்போரில் களத்தின் இரு முனைகளில் இராஷ்டிரகூடச் சைனியங்கள் உக்கிரம் காட்ட

---

[114] ஓவியர்.

வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. சோழ சைனியம் இராஜாதித்தரைப் போன்று வேறொரு மகா வீரனையும் தன் பக்கத்தில் கொண்டிருந்ததே அதற்குக் காரணம். கங்கர் படையும் இராஷ்டிரகூட சைனியங்களைப் பந்தாடிய அந்த மாவீரர் இவர்தான்!"

அவர் சுட்டிய இடத்தில் தாடி மீசையுடன் வீரரொருவர் சைனியத்தின் முன்பு நின்று இரு கைகளிலும் வாளேந்தி அனாயசமாகச் சுழன்று கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் நின்றிருந்த சோழர் படையில் ஏராளமான யானைகளும் அவற்றின் அம்பாரிகளில் ஆயிரக்கணக்கான வீரர்களும் கையில் வில் அம்புடன் தயாராக நின்றார்கள்.

"என்னுடைய பாட்டனாரான அரிஞ்சயச் சோழர் சாதாரணமாக யாரையும் எளிதில் புகழ்ந்துவிடமாட்டார். ஆனால் அவரே இவ்வீரரைப் பற்றி பல நேரங்களில் மிகவும் சிலாகித்துப் பேசியிருக்கிறார். தக்கோலத்துப் போரில் அவரும் கலந்து கொண்டிருந்ததால் இவ்வீரரின் வாள் வீச்சை நேரில் காணும் பாக்கியம் அவருக்கு வாய்த்தது. என் பாட்டனார் கூறிய அந்த நிஜ வரலாற்றை இன்றுவரை நான் வேறு யாருடனும் பகிர்ந்து கொண்டதில்லை. வீரமும் ஈரமும் இணைந்து ததும்பும் அவ்வீரரின் வரலாற்றை நீங்கள் அனைவரும் நிச்சயம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதால் உங்களுக்காக இன்று எடுத்துரைக்கிறேன்."

அறையின் வாயிலில் நிழல் ஆடியது. வேறு யாரும் அதனைக் கவனிக்காவிட்டாலும் அருள்மொழிவர்மரின் கூர்மையான கண்கள் அதனைக் கவனித்துவிட்டன. அடுத்த கணம் வாயிலுக்கருகில் ஒரு காவலன் தென்பட்டான். அவன் மாராயரின் தனிச்சேவகத்தைச் சேர்ந்தவன் என்பது அவனைப் பார்த்த மாத்திரத்தில் அவருக்குப் புரிந்து போயிற்று.

"மாராயரிடமிருந்து முறி வந்திருக்கிறது. அதனை வாங்கிக்கொண்டு வா!" என்று அருகிலிருந்த காவலனிடம் கூறினார். அவன் தலையை வணங்கிவிட்டு வாயிலுக்குச் சென்று முறியை வாங்கிக்கொண்டு வந்தான். அதில் எழுதப் பட்டிருந்தவை மிகச்சில வரிகள்தாம்.

சோழச் சக்ரவர்த்திகள் சமூகத்திற்கு வணக்கம்.

மலை நாட்டிலிருந்து நமது ஒற்றன் ஐங்கரன் பல முக்கியச் செய்திகளுடன் இன்று காலை வந்து தஞ்சையை வந்தடைந்

துள்ளான். அவனும் நானும் பல்லவராயருடன் தங்களை உடனடியாக சந்திக்க விரும்புகிறோம். எங்கு சந்திப்பதெனபதை இதனைக் கொண்டுவரும் தனிச்சேவகனிடம் தெரியப்படுத்தவும்.

குரவன் இராஜராஜ மாராயன்.

"நண்பகல் விருந்துக்கு நமது உணவுச்சாலைக்கு வந்துவிடச் சொல்" எனத் திருவாய்மொழியாகத் தனது உத்தரவைத் தெரிவித்துவிட்டு மீண்டும் ஓவியத்திற்குத் திரும்பினார் பேரரசர்.

"அது ஒரு காலம். சேர நாட்டின் பெருமாள் அரசரான ஸ்தாணு இரவியும் முதலாம் ஆதித்த சோழரும் மிக நெருக்கமான உறவு பூண்டு ஒழுகிய காலம்...." எனத் துவங்கி அருள்மொழிவர்மர் கூறிய அந்த நீண்ட அதிசய வரலாற்றினை தற்போதைக்கு வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள இயலாமைக்கு மிகவும் வருந்துகிறோம்.

சம்பவங்கள் விறுவிறுப்படைந்து கொண்டிருப்பதால் நாம் தொடர்ந்து கதையின் போக்கிலேயே பயணப்பட வேண்டியுள்ளது.

27. ஐங்கரன் தகவல்கள்



தஞ்சை உள்ளாலை அரண்மனைப் பகுதிகளில் நடுநாயகமாக விளங்கிய பேரரசர் அருள்மொழிவர்மரின் பிரத்தேயக மாளிகையின் மேற்குப் பகுதியிலுள்ள மிலாடுடையார் திருநந்தவனத்திற்கருகில் அமைந்திருந்த உணவுச்சாலை மதிய வேனில் வெப்பத்தில் தகித்துக் கிடந்தது. இளைப்பாற விடாமல் நந்தவனத்திலிருந்து வீசும் காற்றும் சொல்லி வைத்தாற்போல் எங்கோ சென்று ஒளிந்துகொண்டு விட்டது. சற்றே கவலையுடன் இதனைக் கவனித்த உக்கிராண வேளக்காரர்கள் அரண்மனைக்கு ஆளனுப்பி வெட்டிவேர்கள் கொண்டு செய்யப்பட்ட பெரும் விசிறிகளையும் அவற்றைப் பிரயோகிக்கத் தெரிந்த ஆட்களையும் வரவழைக்கத் தலைப்பட்டார்கள்.

உணவுச் சாலையின் மத்தியப் பகுதியில் அமைந்திருந்த முற்றத்தையொட்டிய நாழியில் நான்கு பலா மனைகள் இரண்டிரண்டாக எதிரெதிரே அமைக்கப்பட்டிருந்தன.

மனைகளுக்குமுன் நன்கு சுத்தம் செய்யப்பட்ட தலை வாழை இலைகள் இடப்பட்டிருந்தன அவற்றில் மிகச் சிறிய அளவில் அன்னமும் சிறிதளவு நெய்யும் பரிமாறப்பட்டிருந்தன. முதலாவது மனையில் அருள்மொழிவர்மரும் அதற்கடுத்த மனைகளில் பல்லவராயரும் மாராயரும் அமர்ந்திருக்க, நான்காவது மனையில் நாம் இதுவரை சந்தித்திராத புதிய மனிதர் ஒருவர் அமர்ந்திருந்தார். இவரே மாராயர் தமது முறியில் குறிப்பிட்டிருந்த ஐங்கரனாக இருக்கலாம்.

நால்வரும் உணவருந்துமுன் மேற்கொள்ள வேண்டிய பிரார்த்தனைகளைச் செலுத்தியபின் உக்கிராணத்து வேளக்காரன் மணங்கமழும் பொன்னி வெண்பொங்கல் அன்னத்தையும் கூடவே நெய்யையும் பரிமாறிவிட்டுச் சென்றான். அன்னத்தைத் தொடர்ந்து பல்வேறு கறியமுதுகள், இனிப்பு வகைகள், பணியாரங்கள் என்று பல உணவு வகைகளும் படையெடுத்து வந்து இலைகளை நிரப்பிவிட்டன. அருள்மொழிவர்மர் தலை அசைத்ததும் நால்வரும் மெல்ல உணவருந்தத் துவங்கினார்கள். வேளக்காரன் பணிவுடன் வாயிலுக்கருகில் நின்றுகொண்டான். அரண்மனையிலிருந்து வந்திருந்த பணிமக்கள் இருவர் மெல்ல விசிறி வீசத்துவங்கினார்கள்.

"எத்தனை நாட்களுக்கு முன் மலைநாட்டிலிருந்து கிளம்பினீர்?"

"ஏறக்குறைய ஒரு பட்சம். பதினைந்து நாட்கள் இருக்கும் அரசே!"

"உமது பணி மிக சீரியது. வாழ்க!"

"எல்லாம் தங்களின் ஆசிகள்."

"நீர் அவ்வப்போது அனுப்பிவந்த ஓலைகளின் செய்திகளை மாராயர் நம்மிடம் பகிர்ந்து கொண்டுதானிருந்தார். என்றாலும் ஓலையில் பல செய்திகளை உம்மால் குறிப்பிட முடியாமலே போயிருக்கலாம் என்று யூகிக்கிறேன்..."

"உண்மைதான் பேரரசே. இதற்காகவே ஒரு நடை தஞ்சைக்கு நேரில் வந்து ஒரு சில முக்கியச் செய்திகளைத் தெரிவித்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்."

"நன்று... நன்று. மேலே சொல்லத் துவங்கும்."

"நான் பெரும்பாலான நாட்களை வள்ளுவ நாடு வாழியாரைப் பின்தொடர்ந்து அவரது நடவடிக்கைகளை அறிந்து கொள்வதிலேயே செலவழித்தேன். நாம் சோழ நாட்டிற்குப் படையெடுக்கும் பட்சத்தில் நம்மை முன்னின்று எதிர்ப்பதற்கான எல்லா வேலைகளையும் அவர் மும்முரமாகக் கவனித்து வருகிறார். வேணாடுடையவராகிய கோவர்தன மார்த்தாண்டர், கொளத்து நாடுடையவர், வீரக் குறும்பொறையர் என்று பல நாடுவாழிகள் அவருக்கு ஆதரவாக இருக்கிறார்கள். தென்மலைநாட்டின் ஒரே நுழைவாயிலான ஆரைவாய்மொழிக் கணவாயருகில் இவர்களின் படைகளனைத்தும் தண்டுன்றியுள்ளன..."

"ம்.. மேற்கொண்டு சொல்லும்!"

"காந்தளூர்ச் சாலைக்கும் இவர்களுக்கும் மிக நெருக்கமான தொடர்பும் நிலவுகிறது. அடிக்கடி சாலையின் ஆச்சாரியாரான திருநாராயண பட்டதிரியை வள்ளுவனார் சந்தித்துவிட்டு வருகிறார். சாலையின் மிக மூத்த சட்டர்கள் நாடுவாழிகளின் படைகளுக்கு அவ்வப்போது சிறப்புப் பயிற்சிகள் அளித்து வருகிறார்கள். இதில் மிகவும் கவலைக்குரிய ஒரு அம்சம் என்னவென்றால் வழக்கமான போர்முறைகளை முற்றிலும் விடுத்து தொடுவர்மம், படுவர்மம், தட்டுவர்மம் முதலான வர்ம பயிற்சி முறைகளையும் வஜ்ரம், தேக்கம் முதலான போர்முறை களையும் சட்டர்கள் நாடுடைய படைகளுக்குக் கற்றுக் கொடுப்பதுதான். சாலையின் சட்டர்கள் இம்மாதிரியான பயிற்சிகளில் நிகரற்று விளங்குகிறார்கள்."

"அறிவோம்..."

"வள்ளுவனார் ஒரு முக்கியக் கூட்டத்தை ஏறக்குறைய ஒரு திங்களுக்கு முன் விழிஞத்தின் ஆய்வேள் கோட்டையில் கூட்டினார். அதில் நாடுவாழிகள் அனைவரையும் ஒன்று திரட்டி அவர்கள் அனைவருமே நம்மை எதிரிகளாகக் கருதுமாறு பல மொழிவுகளை முன்னுரைத்தார். ஆனால் அவரது அறைகூவல் எல்லோரிடமும் எடுபடவில்லை. ஏறக்குறைய இரு அணிகளாக அவர்கள் பிரிந்து நிற்கிறார்களென்றுதான் தோன்றுகிறது. ஆனால் வள்ளுவனாரின் பலமே அந்தக் கூட்டத்தில் அதிகமாக இருந்தது என்பது தெளிவு. எனினும் நிஜமாகவே சோழருடன் போர் என்று வந்துவிட்டால் மேற்கொண்டு ஒரு சில நாடுவாழிகளும் அவர்பின் சேர்ந்து கொள்ளலாம்."

"ஒரு வேளை நாம் தென்பாண்டி நாட்டிற்குப் படையெடுத்துச் செல்லாமலே இருந்தால், அவர்கள் நம்மை நோக்கிப் படைகளை நகர்த்தும் சாத்தியக்கூறு உள்ளதா?"

"தற்போதைக்கு இல்லை. ஆனால் நிலைமை மாறினாலும் மாறி விடலாம். நாடுவாழியாரால் நீண்ட காலத்திற்குப் அப்பெரும் படைகளை வைத்துக்கொண்டு சமாளிக்க இயலாது."

வாயிலில் நின்றுகொண்டிருந்த உக்கிராணத்து வேளக்காரன் அன்னம் இலைகளில் குறைந்துவிட்டதை அறிந்து ஒருமுறை மீண்டும் வந்து அன்னம் வைத்து விட்டுப்போனான்.

"படைகளுக்கான சாமக்கிரியைகள் எங்கிருந்து வருகின்றன என்பதைக் கண்டறிய முடிந்ததா?" பல்லவராயரின் கேள்வி இது.

"இல்லை. அந்தத் தகவல்களை என்னால் திரட்ட முடியவில்லை. ஆனால் தளவாடங்கள் பலவும் ஆரைவாய் மொழிக் கணவாய் வழியாகத்தான் வருகின்றன. அதாவது தென்பாண்டி நாட்டிலிருந்து! ஆனால் இவற்றையெல்லாம் யார் இத்தனை மெனக்கெட்டு அனுப்பி வைக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இதற்கான செலவினங்களுக்கு எந்தப் பொக்கிஷத்திலிருந்து நிதி திரட்டப்படுகிறதென்பதும் மர்மமாக இருக்கிறது."

"ம்...மேற்கொண்டு சொல்லுங்கள்..."

"இதுவரை நான் கூறிய தகவல்களெல்லாம் ஏறக்குறைய முன்பே முறிகளில் எழுதி அனுப்பியிருந்தவைதான். ஆனால் இனிமேல் கூறப்போகும் தகவல்கள் முறியில் குறிப்பிடப்படாதவை. மிக மிக இரகசியமானவை..."

"சொல்லுங்கள்..."

"தானைத் தலைவர் என்று ஒருவரைப் பற்றிய பேச்சு அடிக்கடி அவ்வட்டாரத்தில் கேட்கிறது. குறிப்பாக நாடுவாழியார் அவர் மூலம்தான் சோழ நாட்டில் நடக்கும் அத்தனை செய்திகளையும் உடனுக்குடன் அறிந்து கொள்கிறார்..."

வேளக்காரன் அன்னத்திற்குப் பறிமாறவேண்டிய நெய்ப் பாத்திரத்துடன் வந்தான்.

"அந்தத் தானைத் தலைவருக்குச் சோழநாடு முழுவதும் கண்களும் காதுகளும் உள்ளனவென்பதுபோல் தெரிகிறது. பேரரசரின் அரண்மனை உட்பட தஞ்சையின் பல முக்கிய பிரமுகர்களின் அரண்மனைகளிலும் அவருடைய உளவாளிகள்..."

வேளக்காரன் அருள்மொழிவர்மருக்கு நெய்யை விடும்போது தவறுதலாக சிறிது நெய் இலைக்கு வெளியே விழுந்துவிட்டது. அவருடைய முகபாவம் கணம் நேரம் மாறிற்று. வேளக்காரன் பதறிப்போய் "மன்னித்துவிடுங்கள் பேரரசே! மன்னித்து விடுங்கள். கைத்தவறுதலாகக் கொட்டிவிட்டது. தயை கூர்ந்து மன்னித்துவிடுங்கள்!" என்று பலமுறை மன்றாடினான்.

"கைப்பிழை"[115] அனைவருக்கும் நேரக்கூடியதுதான். பதற்றப்படாதீர்கள்" என்றார் அருள்மொழிவர்மர் அமைதியாக. வேளக்காரன் தோளிலிருந்த துண்டை எடுத்துச் சிந்திவிட்ட நெய்யை அவசர அவசரமாகத் துடைத்துவிட்டுப் போனான். அருள்மொழிவர்மர் பழைய மந்தகாசத்துடன் நின்றுவிட்ட அவர்களின் உரையாடலைத் தொடர்ந்தார்.

"வள்ளுவ நாடுவாழியார் மற்றவர்களை ஏமாற்றுவதற்காக இப்படியொரு நாடகங்களை ஆடிக் கொண்டிருக்கிறார் தானைத்தலைவராவது மண்ணாவது அதெல்லாம் அவருடைய கற்பனை. எனக்கெதிராக மற்றவர்களைத் தூண்டிவிட இப்படிப்பட்ட கதாபாத்திரங்களை உருவாக்கி உலவவிடுகிறார் போலிருக்கிறது."

"அ...அப்படி இருக்குமென்றுதான் நானும் நினைத்தேன் பேரரசே. சரியாகச் சொல்லிவிட்டீர்கள்" - என்றான் ஐங்கரன். அவனது முகத்தில் சிறிதளவு குழப்பம் தெரிந்தது.

"சோழநாட்டில்.. குறிப்பாகத் தஞ்சையில் நமக்கு விசுவாசமான மனிதர்கள்தான் இன்று உள்ளனர். உளவாளிகளும் ஒற்றர்களும் சென்ற ஆட்சியுடன் அழிந்தொழிந்துவிட்டார்கள். இந்த சோழ நாட்டு மண் அளிக்கும் உணவை உண்டு உயிர் வளர்க்கும் மக்கள் பல

---

[115] கை தவறுதல் என்பதைக் கைப்பிழை என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

தலைமுறைகளாக இங்கு குழந்தை குட்டிகளுடன் வந்து குடியேறியுள்ள மண்ணின் மைந்தர்கள். நமக்கெதிராக எப்போதும் திரும்ப மாட்டார்கள் என்பதை மலைநாட்டின் நாடுவாழிகள் உணரும் காலம் அதிக தொலைவில் இல்லை!"

"சத்தியமான வாக்கு."

"வள்ளுவனார் ஆயிரமாயிரம் படைகளை ஆரைவாய் மொழிக்கருகில் குவித்து வைக்கட்டும். கவலையில்லை சோழ நாட்டுப் படைகள் அவற்றைப் போர் முனையில் சந்திக்கும்!"

"ஜெயம்! ஜெயம்!" என்று வாழ்த்தினார் பல்லவராயர்

* * * * * * * *

அரண்மனை விருந்து முடிந்ததும் நால்வரும் தாம்பூலம் தரிப்பதற்காக மிலாடுடையார் நந்தவனத்தையொட்டிய மண்டபத்தை அடைந்தனர். தாம்பூலத் தட்டை அங்கே வைத்துவிட்டு அகன்று விடுமாறு அருள்மொழிவர்மர் வேளக்காரனிடம் சைகை செய்யவே அவன் உடனே அகன்றுவிட்டான். மதிய வெய்யிலுக்கு மிகவும் இதமாக நந்தவனத்திலிருந்து மெல்லிய காற்று புறப்பட்டு அவர்களது மேனிகளை வருடிவிட்டுப் போனது. நல்ல தளிர் வெற்றிலைகள் நான்கைப் பொறுக்கி அவற்றில் சுண்ணாம்பு தடவிய வண்ணம் அருள்மொழிவர்மர் மெல்லிய குரலில் பேசத் துவங்கினார்.

"ஐங்கரனாருக்கு இன்னும் சில காலம் காந்தளூர்ச் சாலையில் வேலையில்லை போலிருக்கிறதே?"

"எ என்ன சொல்கிறீர்கள் அரசே? ஒன்றும் புரியவில்லையே?"

"நமது எதிரிகளை ஒற்றறியக் காந்தளூர்ச் சாலை வரை செல்ல வேண்டியதில்லை. நமது அரண்மனையைச் சுற்றி வந்தால் போதும் என்கிறேன்"

அரண்மனைப் பாதுகாவல் பொறுப்பை ஏற்றிருந்த பல்லவராயரின் முகம் ஆயிரம் தேள்கள் கொட்டியதைப் போன்ற அதிர்ச்சியை அடைந்தது. என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார் இவர்?

"அரசே.."

"வேளக்காரன் நெய் விடும்போது அது தவறுதலா இலைக்கு வெளியில் விழுந்ததே. அந்தத் தவறு எப்படி ஏற்பட்டதென்பதை யாராவது கவனித்தீர்களா?"

"இல்லை. பேச்சில் மூழ்கியிருந்ததால் கவனிக்கவில்லை. தாங்கள்தான் அது கைப்பிழையாக நேர்ந்துவிட்டது என்று கூறினீர்களே?"

"கைப்பிழை நேர்ந்ததென்னவோ உண்மைதான். ஆனால் அது எவ்வாறு நேர்ந்ததென்பதை கவனிக்கவேண்டும். அப்போதுதான் ஐங்கரனார் தானைத் தலைவரைப் பற்றியும் அவருக்குத் தஞ்சை அரண்மனையெங்கிலும் இருக்கும் உளவாளிகள் பற்றியும் கூறிக் கொண்டிருந்தார். அதனைக் கேட்டதும் வேளக்காரனின் மெய் ஒரு முறை நடுங்கிற்று. அந்த மெய் நடுக்கம் கைக்கும் பரவிற்று. அதனால்தான் நெய் தவறி விழுந்தது. சாதாரணமாக வேளக்காரர்கள் நம் பேச்சில் அணுவளவும் கவனம் செலுத்தக்கூடாதென்று கண்டிப்பான விதியிருக்கிறது. அதையும் மீறி இவன் நம் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்று கொண்டாலும்கூட மேனி நடுங்க வேண்டிய அவசியம் இல்லை. அவனிடம் ஏதோ தவறிருக்கிறது. முன்பு அவனை எமது திரு மஞ்சன சாலையில் சந்தித்திருக்கிறேன். எப்போது உக்கிராண அறைக்கு மாற்றலாகி வந்தானென்று தெரியவில்லை..."

"அவனை உடனடியாகப் பிடித்துத் தோலை உரித்து..." பற்களை நறநறவென்று கடிக்கத் துவங்கினார் மாறன். கோபத்தில் அவரது முகம் சிவந்துவிட்டது.

"ம்ஹூம். அவ்வாறு செய்யக்கூடாது. தற்செயலாக இறைவன் இவனை அடையாளம் காட்டியுள்ளார். இதனை நாம் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். முதலில் இவனும் அந்தக் கூட்டத்தில் ஒரு உளவாளியா இல்லையா என்பதை சந்தேகத்துக்கிடமின்றி ஊர்ஜிதம் செய்துகொள்ள வேண்டும். பின்னர்..."

"பின்னர்?"

அருள்மொழிவர்மரின் முகத்தில் மெல்லிய புன்னகை முகிழ்த்தது.

"அந்தத் தானைத் தலைவரைப்போலவே இவனைப் போன்ற துரோகிகளை நாமும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

"என்ன சொல்ல வருகிறீர்களென்பது விளங்கவில்லையே?"

"ஐங்கரனார் அடுத்த இருவாரங்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைக் கூறுகிறேன். அதற்குப்பின் ...கவேண்டிய காரியங்களைப் பற்றிப் பேசுவோம்.

முதலில் இந்த வேளக்காரன் விவகாரம். குற்றவாளியாய் இருக்கும் பட்சத்தில் அவனும் நம்மைப்போலவே எச்சரிக்கை அடைந்திருப்பான் என்று தோன்றுகிறது. ...னால்தான் அப்போது நீங்கள் பேசியதற்கு நேர் மாறாக ...னத்தலைவன் என்று ஒருவருமில்லை என்பது போல் ...ன் பேசினேன். என்றாலும் அது எத்தனை தூரத்திற்கு ...ருமென்று தெரியவில்லை. அதனால் அவன் யாரையும் ...னும் சில காலத்திற்குத் தொடர்புகொள்ள முயல ...ட்டான். ஆனால் இவனை ஏவிவிட்டவனுக்கு இங்கு ...ந்த நிகழ்ச்சிகள் தெரிய வாய்ப்பில்லை. என் அனுமானம் ...ரியாக இருந்தால் இவனை ஏவிவிட்டவன் சிறிது ...ட்களில் பொறுமையிழந்துபோய் இவனைத் தொடர்புகொள்ள முயல்வான். அப்படித் தொடர்பு கொள்ள முயல்வது யார்? அவர்தான் நீங்கள் முன்னர் ...ப்பிட்ட தானைத் தலைவரா? என்பதை நீங்கள் ...டறிய வேண்டும். இது மிக முக்கியமான மிக ஆபத்தான ...வ ஜாக்கிரதையாக முடிக்கவேண்டிய முதற் பணி.

அடுத்த கட்டமாக, கடந்த பத்து அல்லது பதினைந்து ...ருடங்களில் தஞ்சை அரண்மனையிலும் ...ஜாங்கத்திலும் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் யார் ... என்று கவனிக்க வேண்டும். புரவுவரி திணைக்களம், ...சாலை, பொற்சாலை, ஆதுலர்சாலை என்று ஒரு ...த்தையும் விட்டுவைக்கக்கூடாது. அப்படிச் ...ந்தவர்களில் எத்தனை பேர் தகுதியான பின்புலம் ...து கண்டோலை இல்லாமல் பெரிய மனிதர்களின் ...த்தைகளின் பேரில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் ...பதைக் கவனிக்க வேண்டும். அதில் உள்ளூரைச் ...ந்தவர்களைக்கூட ஒதுக்கிவிடலாம். கிராமங்களிலிருந்து ...யூரிலிருந்து. வேறு மண்டலங்களிலிருந்து ஏழைகளாக ...ந்து இங்கு பணிக்குச் சேர்ந்தவர்கள் யார் யார் என்பதை

அறிவதுதான் முக்கியம். என்னுடைய அனுமானம் சரியென்றால், குறிப்பிட்ட வகையான ஆட்களுக்கு மட்டுமே நீலி குடும்பத்தார் ஆதரவளித்திருப்பார்கள் என்று தோன்றுகிறது. ஏனெனில் புதிய ஆட்கள்தான் விசுவாசமாக இருப்பார்கள். இது கடினமான பணி. மெதுவாகச் செய்ய வேண்டிய பணி. அதனால் உமது உதவிக்காக நமது தனி சேவகத்திலிருந்து சில ஆட்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

மூன்றாவது. இரவிநீலி குடும்பத்தாருக்கு வேண்டப் பட்டவர்கள் யார் யார் என்பதையும் அவர்களுடைய பின்னணியையும் அவர்களில் எத்தனைபேர் தஞ்சை மற்றும் பழையாறையில் உள்ளனர், எத்தனை பேர் காஞ்சி மற்றும் பிற தலைநகரங்களில் உள்ளனர் என்று அறிந்துவரும் பணி. இதற்காக கிருஷ்ணன் இராமனை பத்து நாட்களுக்கு முன்னர் வீரநாராயணபுரத்திற்கு அனுப்பி வைத்தேன். அவன் வந்த பின்தான் மேற்கொண்டு தகவல்கள் தெரியும்...."

"உத்தரவு அரசே! தங்களின் சித்தம் போலவே செயல்படுகிறேன்."

அருள்மொழிவர்மர் புன்னகைத்தார்.

"வெற்றியோடு திரும்பி வாருங்கள்!" என்று கையுயர்த்தி ஆசி கூறினார்.

28. உறங்காப் புளி



நம் கதை நடக்கும் காலத்திற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன் தென் பாண்டி நாட்டில் 'திருக்குருகூர்' என்னும் பதியில் காரி எனும் வேளாளர் தமது அன்பு மனைவி உதயநங்கையுடன் வாழ்ந்து வந்தார். பல காலம் குழந்தைப் பேறின்றித் தவித்த தம்பதியருக்கு இறையருளால் ஒரு குழந்தை பிறந்தது. வாராது வந்த மாமணியைப்போல் வந்த மாணிக்கத்திற்கு 'மாறன்' என்னும் பெயரிட்டுச் சீராட்டினர் பெற்றோர்.

அந்தோ! அவர்களின் மகிழ்ச்சி அதிக காலத்திற்கு நீடிக்கவில்லை. ஏனெனில் அவர்களின் குழந்தை மற்ற இயல்பான சிசுக்களைப் போலல்லாமல் பேசா

மந்தையாகவே கிடந்தது. அசைவுகளும் அதிகம் இல்லை ஆனால் வாயில் மட்டும் ஒரு மெல்லிய புன்னகை எப்போதும் இருந்தது. குருகூரில் குடிகொண்டிருந்த ஆதிநாதப் பெருமான் அருளால் பிறந்த அந்தக் குழந்தையை அந்த வேதநாதனே உய்விக்கட்டுமென்று பெற்றோர் விண்ணகரக் கோயிலின் அருகிலிருந்த புளியமரத்தின் கீழ் ஒருதினம் விட்டுவிட்டு வந்தனர்.

அந்த அதிசயக் குழந்தை பேசாமலே பிராயமெய்தியது "அடே மாறா! இங்கே பார். எங்கே, வாயைத் திறந்து ஒரு வார்த்தை... அம்மா... எங்கே சொல் பார்ப்போம்?" என்றெல்லாம் அதனைப் பேசவைக்க முயன்ற பெற்றோருக்கு அதே பழைய புன்னகை மட்டுமே பதிலாகக் கிடைத்தது. கண்களில் ஒரு எப்போதும் ஒரு ஞான மயக்கம் ஒரு தேடல்... தேங்கிக் கிடந்தது.

ஒரு முறை குருகூருக்கு விஜயம் செய்த சாமியாரிடம் போய்க் குழந்தையைக் காட்டினார்கள் பெற்றோர் "வரங்கிடந்து பெற்ற குழந்தை! இப்படி ஊனமாகப் பிறந்தது என்ன பாவத்தினால் சுவாமி?" என்று கண்ணீர் உகுத்தாள் உதயநங்கை.

குழந்தையை சற்றே உற்றுப் பார்த்தார் சாமியார். "இது குறைபட்ட குழந்தையைப் போல் தெரியவில்லையே அம்மா! இது வேறு பிறவி. மானுடமல்ல... தெய்வம். சற்றே பொறுமையாக இரு. நல்லது நடக்கும்!" என்று போதித்தார்

அந்த நல்லது காரிமாறனின் பதினாறாம் வயதில் நடந்தது.

வானில் தெரிந்த ஒளியொன்று மதுரகவி எனும் பாண்டிய அமைச்சரை[116] சகலமும் கற்ற பண்டிதரை தென்பாண்டி நாடுவரை இழுத்து வந்தது. அவ்வொளி இறுதியில் குருகூர் ஆதிநாதன் விண்ணகரின் அருகிலிருந்த புளியமரத்தின் கீழ் முடிந்தது. தமக்கு வழிகாட்டிய ஒளி உண்மையில் ஒரு பதினாறு வயது பாலகனிடமிருந்து

---

[116] மதுரைக்கு அருகில் அமைந்துள்ள ஆனைமலை நரசிங்கப்பெருமாள் குடைவரைக் கோயிலில் உள்ள கல்வெட்டில் குறிப்பிடப்படும் மதுரகவியையே வைணவ ஆழ்வாராக அறிஞர்கள் அடையாளம் கண்டுள்ளனர். பார்க்க T.A.Gopinatha Rao, History of the Srivaishnavas.

வெளிப்பட்ட ஞான ஒளியென்பதை மதுரகவியால் முதலில் நம்பவே முடியவில்லை.

அது விடியற்காலை நேரம். மதுரகவி அந்தக் குழந்தையை மெல்ல நெருங்கினார் அது கண்விழித்து அவரைப் பார்த்துச் சிரித்தது. ஒரு வழியாக வந்து விட்டாயா? என்று கேட்பதைப் போல.

"செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று பாலகனை வினவினார் பண்டிதர். பண்டிதர்களாலும் தத்துவ வித்தகர்களாலும் எளிய கேள்விகளை ஒரு போதும் கேட்கமுடியாது ஆன்மிகத்தில் மிகச் சாதாரணமாகப் புரிந்துவிடும் விஷயங்களைக் கூட பாண்டித்தியம் சிக்கலாக்கிவிடும். ஆன்மத் தேடலில் படிப்பு ஒரு வழிகாட்டி மட்டுமல்ல. முதுகில் ஏறி நிற்கும் சுமையும்கூட. அதனால்தான் பெரியவர்கள் 'அமுதால் உன்னைப் பெறலாமே!' என்று பாடினர். 'கற்றால் உன்னைப் பெறலாமே!' என்று ஒருவரும் கூறியதில்லை. கல்வியறிவு நிறைந்த பண்டிதர்களுக்குக் காணக் கிடைக்காத காளி பாமரனான காளிதாசனுக்கு அகப்பட்டாள்.

குழந்தை அவரை நோக்கியது. மீண்டும் மெல்லச் சிரித்தது. பவளவாய் திறந்தது.

"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்!"

இதுதான் பிறந்தது முதல் அது உச்சரித்த முதல் வார்த்தை. வார்த்தையல்ல. வாக்கியம். வாக்கியம் கூட அல்ல.. வேதம்.

அவ்வளவுதான். மதுரகவியின் பாண்டித்தியமும் கர்வமும் அந்தக் கணத்தோடு ஒரு முடிவுக்கு வந்தன. தாம் பலகாலமாகத் தேடிக்கொண்டிருந்த குரு இந்தப் பாலகனே என்பது புரிந்தது. கண்களில் கண்ணீர் இயல்பாக வடிந்தது "சுவாமி!" என்று காரி மாறனின் திருவடி பணிந்தார் மதுரகவி.

அன்று முதல் ஆரம்பமானது ஒரு மிகப் புனிதமான குரு-சிஷ்ய உறவு. ஒன்றல்ல இரண்டல்ல, கிட்டத்தட்ட முப்பத்தைந்து வருடங்கள் மதுரகவியார் தமது குருநாதரான காரிமாறனாம் வண்சடகோபரின் திருவடி நிழலில் அந்தப் புளியமரத்தின் கீழ் கரைந்தார். காணாமல் போனார். சடகோபர் மொழிந்த அத்தனை தமிழ் வேதங்களையும் ஒன்று விடாமல் எழுதி வைத்தார். திருவிருத்தம்,

திருவாசிரியம், பெரிய திருவந்தாதி- இறுதியில் மணிமகுடமாகத் திருவாய்மொழி. குருவும் சீடனும் ஸ்ரீநாதப் பெருமானின் அபயத்தில் மயர்வற மதிநலம் அருளப் பெற்றார்கள்[117].

சடகோபரின் திருவடி நிழலிலேயே இருந்ததினாலோ என்னவோ மதுரகவியாரால் பரம்பொருளைக் கண்டு சேவிக்க முடியாமல் போய் தம் கண்ணெதிரே காட்சியளித்த குருநாதரையே பாடுபொருளாக்கி "கண்ணிநுண் சிறுத் தாம்பு" பாடியருளினார். இருவருமே வைணவம் போற்றும் பன்னிரு ஆழ்வார்களுள் இருவராயினர் பக்தர்கள் காரி மாறன் மீது கொண்ட அபிமானத்தின் காரணமாக "நம்மாழ்வார்" என்றும் திருவாய்மொழி ஓதியதால் "திருவாய்மொழிப்பிள்ளை"[118] என்றும் குறிக்கப்படலானார்.

நம்மாழ்வாரின் காலத்திற்குப் பின் ஒரு நூற்றாண்டு கரைந்தது. ஆழ்வார்கள் பரம்பரை முடிந்து வைணவத்தின் ஆச்சாரிய பரம்பரை தோன்றும் காலம் வந்தது. ஆச்சாரியர்களுள் முதல்வராகப் பின்னர் முகிழ்க்கப்போகும் நாதமுனிகள்[119] என்னும் வீரநாராயணபுரத்து யோகி[120], தாம் கேள்விப்பட்ட ஆழ்வார் பாசுரங்களைத் தேடித் தேசமெங்கும் திரிந்தார். இறுதியில் திருக்குருகூரில் இறைவன் அருளால் அவருக்கு அனைத்துப் பாடல்களும் கிடைத்தன. அவற்றை முறையாகத் தொகுத்து இசை கூட்டி

---

[117] இங்கு குறிப்பிடப்பட்ட நம்மாழ்வாரின் சரித்திரம், பிற்கால வைணவ குரு பரம்பரை நூல்களான பின்பழகிய பெருமாள் ஜீயரின் "குரு பரம்பரா ப்ரபாவம்" மற்றும் கருடவாஹன பண்டிதரின் "திவ்ய சூரி சரிதம்" முதலான நூல்களில் காணப்படும் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தொல்லியல் மற்றும் வரலாற்றியல் நோக்கில் ஆழ்வார்களின் சரித்திரம் இன்னும் ஆழமாக ஆராயப்பட வேண்டும்.
[118] இன்றும் திருக்குருகூரில் உள்ள நம்மாழ்வார் சன்னிதி திருவாய்மொழிப்பிள்ளை திருமுன் என்றே குறிக்கப்படுகிறது. சோழர் கல்வெட்டுகள் சில விண்ணகரங்களில் திருவாய்மொழி பாடுவதற்காக அளிக்கப்பட்ட நிவந்தங்களைக் குறிப்பிடுகின்றன.
[119] ஆனைமங்கலச் செப்பேடுகள் வரைந்த ஸ்ரீநாத என்னும் வடமொழிக்கவியை நாதமுனியாக அடையாளம் காண்கிறார் அறிஞர் கோபிநாத ராவ். பார்க்க T A Gopinatha Rao, History of the Srivaishnavas.
[120] "யோக இரகசியம்" என்னும் தமிழ் யோகசாத்திர நூல் இவரால் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. மறைந்துவிட்ட இந்நூலின் ஒரு சில பகுதிகளை தம் தந்தையார் (யோக மேதை திரு.கிருஷ்ணமாச்சாரியார்) மூலம் கற்று வைத்திருப்பதாக யோக ஆசிரியர் திரு.கி.தேசிகாச்சாரியார் குறிப்பிடுகிறார். பார்க்க இவருடைய Yoga by Heart எனும் புத்தகம்.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தமாக உலகுக்களித்து அழியாப் புகழுக்கு ஆளானார்.

இத்தனை பெருமைகள் நிரம்பிய வைணவப் பதியான திருக்குருகூரை பகல் முழுவதும் சடையம் பெருவழியில் பயணப்பட்ட புரவிகளிரண்டும் நண்பகல் வேளையில் அடைந்தன. உணவு நேரத்தின்போது மட்டும் சிறிதளவு ஓய்வெடுத்துவிட்டு இடைவிடாமல் பிரயாணப்பட்டதால் அது சாத்தியமாயிற்று. முடிந்தால் பண்டிதரைக் குருகூரில் விட்டுவிட்டுப் பொழுது சாய்வதற்குள் கொற்கைக்குச் சென்றுவிடுவதுதான் நண்பர்களின் திட்டம். பிஷு அங்கே அவர்களுக்காக சென்ற இரு தினங்களாகக் காத்துக் கொண்டிருந்திருப்பார். ஏற்கனவே புரவியின் காய்ச்சலினால் ஏற்பட்ட காலதாமதம் போதும். மேற்கொண்டு அதிகம் தாமதிப்பது நல்லதல்ல என்றுதான் இருவருக்குமே பட்டது.

ஆனால் ஊர் எல்லையை நெருங்கியதும் அங்குள்ள விண்ணகரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானை இருவரும் தரிசனம் செய்துவிட்டுத்தான் போகவேண்டும் என்று பண்டிதர் ஒரேயடியாகப் பிடிவாதம் பிடிக்கத் துவங்கி விட்டார்.

"இளைஞர்களே! நான் சாதாரணமாக எவரையும் எதற்காகவும் இத்தனை தூரம் வற்புறுத்துவது கிடையாது. நானென்ன விருந்துக்கும் கேளிக்கைக்குமா அழைக்கிறேன்? வந்தது வந்தீர்கள். குருகூர் வரதனையும் கையோடு தரிசித்து விட்டுப் போய்விடுங்கள் என்றுதானே கூறுகிறேன்? ஆதிநாதப் பெருமாளையும் பிராட்டிகளையும் ஒரு கணம் கண்குளிர தரிசனம் செய்தீர்களானால் நான் ஏன் இத்தனை வற்புறுத்துகிறேன் என்பது புரிந்துவிடும். இது சாதாரண தலமல்ல. ஆழ்வார்களில் தலைசிறந்தவரான நம்மாழ்வார் என்னும் சடகோபர் அவதரித்த புண்ணிய பூமி. இப்பதியில் கால் பதிப்பதற்கே முற்பிறவிகளில் தவம் செய்திருக்க வேண்டும். இத்தனை தூரம் வந்துவிட்டுப் பெருமானை தரிசனம் செய்யாமல் போனீர்களானால் அது மிகவும் துரதிருஷ்டவசமானதே!" என்று பயந்தும் நயந்தும் பல வழிகளில் தரிசனத்தின் பயனை எடுத்துக்கூறி அவர்களை ஊருக்குள் வரவழைக்க முயன்றார்.

நண்பர்கள் இருவரும் தனியே பிரிந்து சென்று ஆலோசித்தார்கள். பின்னொரு முறை இத்தனை தூரம் வரமுடியுமோ என்னவோ? வந்தது வந்தோம். தரிசனத்தை

முடித்துக்கொண்டே போய் விடலாம் என்று இறுதியில் முடிவு செய்தார்கள்.

* * * * * * * *

கற்பூர ஒளியில் கரியவன் தரிசனம் கண்குளிரக் காணக் கிடைத்தது.

கரியவனைக் காணாத
கண்ணென்ன கண்ணே?
கண்ணிமைத்துக் காண்பார்தம்
கண்ணென்ன கண்ணே?

என்று முன்னிலைப் பரவலாகவும் படர்கைப் பரவலாகவும் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர் குரவையில் உருகி உருகித் திருமாலின் பெருமையைப் பாடிப் பரவியிருந்தது மழபாடியாருக்கு ஞாபகம் வந்தது.

"பெருமாளின் பெயர் ஆதிநாதன். காரி மாறனாக இங்கு அவதரித்த சேனைமுதலியாரை[21] ஆட்கொண்ட ஆண்டவன். ஒரு கை பக்தர்களுக்கு அபயஹஸ்தமாக உயர்ந்துள்ளது. பின் கரங்கள் சங்கு சக்கரங்களை கர்த்தரி முத்திரையில் ஏந்தி நிற்கின்றன. அருகில் திருமகளும் நிலமகளும் எழுந்தருளியிருக்கின்றனர். நம்மாழ்வாருக்குக் காட்சியளித்த எம்பிரான். தரிசனம் செய்து கொள்ளுங்கள்!"

பக்தர் போக்குவரத்து அதிகமில்லையாதலால் விண்ணகரத்து பட்டர் மிக நிதானமாகவே தரிசனம் செய்து வைத்தார்.

பண்டிதர் கூறியது நிஜம்தான். மெல்லிய தீப ஒளியில் கிடைத்த அந்த தெய்வ தரிசனம் மனத்தின் இண்டு இடுக்குகளில் ஒளிந்துகொண்டிருந்த மாசுகளை மெல்லமாய் கணத்தில் விரட்டிச் சுத்தம் செய்துவிட்டது. இதனைத் தவறவிட்டிருந்தால் அது துர்பாக்கியம்தான். நல்ல வேளை பெருமாள் கருணை காட்டினார். தரிசனம் முடிந்த பின் பட்டர் கொடுத்த புளியோதரை மற்றும் தத்தியோனப்[22]

[21] நம்மாழ்வாரைத் திருமாலின் சேனை முதலியாரான விஷ்வக்சேனரின அவதாரமாகக் கொள்வது வைணவ மரபு.
[22] தயிர் சாதம்.

பிரசாதங்களை காய்ந்த வாழைச்சருகில்[123] கட்டி முடிந்து கொண்டு இருவரும் பண்டிதருக்குப் பிரியாவிடை கொடுத்துக் கிளம்பினார்கள்.

"தம்பிகளா! நீங்கள் எங்கிருந்தாலும் நன்றாக இருப்பீர்கள். மதுரையம்பதியில் குடிகொண்டிருக்கும் சுந்தரேசன் மனது வைத்தால் மீண்டும் வருங்காலத்தில் சந்திப்போம். கிளம்புங்கள்.." என்று அவரும் மனதார வாழ்த்தி விடையளித்தார்.

சிறிது நேரத்தில் அந்த இரண்டு ஜாதிப்புரவிகளும் கொற்கைக்குச் செல்லும் இராஜபாட்டையில் பாய்ச்சல் காட்ட ஆரம்பித்தன.

* * * * * * * *

விண்ணகரின் கோயில் வாயிலில் நண்பர்களின் தலை மறைந்ததும் பண்டிதர் பட்டருக்குக் கண்களால் ஏதோ சைகை காட்டவே, அவர் மிகப் பணிவுடன் "உள்ளது உள்ளது. தங்களுக்காக இருவரும் உறங்காப் புளியருகில் காத்துக் கொண்டிருக்கின்றனர். நான் கோயிலின் முக்கிய வாயிலை உடனே சாற்றி விடுகிறேன். மாலை வரை தங்களை யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள். பிரசாதங்கள் தயாராக இருக்கின்றன. அவசியம் உணவருந்துங்கள். நான் உத்தரவு பெற்றுக் கொள்கிறேன்!" என்று கூறியவர் கர்ப்பக்கிருகத்தின் கதவை அடைத்துவிட்டு அவ்விடம் அகன்றார். முன்பு மழபாடியாரும் கம்பன் மணியனும் இருந்தபோது காட்டாத பணிவையும் குழைவையும் இப்போது அவர் பண்டிதரிடம் காட்ட வேண்டிய அவசியமென்ன என்பது புரியவில்லை.

பண்டிதர் கம்பீரமாகக் கோயிலைச் சுற்றி வந்து கோயிலுக்கருகில் அமைந்திருந்ததொரு சிறு மேட்டில் திருக்குருகூரின் ஸ்தல விருட்சமான அந்த பிரம்மாண்ட மான புளியமரம் காட்சியளித்தது. அது சாதாரண மரமல்ல. மிகப் புனிதமான மரம். அந்த மரத்தின் அடியில்தான் காரி மாறனான நம்மாழ்வார் தமது ஜீவிதத்தின் பெரும்பகுதியைக் கழித்தார். அந்த ஞானத் தவசியின் மோனத்தவத்தாலோ

[123] காய்ந்த வாழை இலைகளை உணவு கட்டி எடுத்துக்கொள்ள உபயோகிப்பது வழக்கம்.

என்னவோ அந்தப் புளிய மரமும் தன்னுடைய சொந்த இயல்புகளை விட்டுவிட்டு ஞானப் பேறடைந்திருந்தது. சாதாரணப் புளியமரங்களின் இலைகள் இரவில் கண் மூடுவதுபோல் குவிந்துவிடும். ஆனால் இந்த மரத்தின் இலைகள் ஒருபோதும் கண் மூடுவதில்லை. அதனாலேயே அம்மரத்தினை மக்கள் உறங்காப் புளியென்றும் புளியாழ்வார் என்றும் அழைக்கத் தலைப்பட்டனர். அது மட்டுமல்ல. அதில் காய்க்கும் காய்களும் புளியங்காய்களாக இருக்குமேயொழிய ஒருபோதும் பழமாகப் பழுப்பதில்லை. அதன் மரப் பட்டைகளை பல்வேறு வியாதிகளுக்கும் ஔஷதமாகத் திருக்குருகூர் மக்கள் பயன்படுத்தி வந்தனர்[124].

அந்தப் புனித மரத்தின் கீழ் இருவர் பண்டிதருக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். அதில் ஒருவர் சற்றே கனத்த சரீரத்துடன் வயதானவராகக் காணப்பட்டார். மற்றவர் பிராயத்தில் இளையவர். இருவருமே நமக்குப் பின்புறங்களைக் காட்டிக்கொண்டு அமர்ந்திருப்பதால் அவர்களை இன்னாரென அறியக்கூடவில்லை.

பண்டிதர் அவர்களை நெருங்கியதும் இருவரும் மிகப் பணிவுடன் எழுந்து நின்று முகமன் கூறினார்கள்

"வந்தவர்களைப் பார்த்தீர்களா? அவர்கள்தானா?"

"அவர்களேதான்!" என்றார் வயதானவர் இந்தக் குரல் நமக்கு மிகப் பரிச்சயமானதாக உள்ளதே?

"அப்படியானால் காரியம் ஜெயம்தான் எதனை உங்களின் கத்தியால் சாதிக்க முயன்று தோற்றீர்களோ அதனை என் புத்தியால் மிக எளிதாக சாதித்து விட்டேன்" என்றார் பண்டிதர் மகிழ்ச்சி அவரது குரலில் மறைக்க முடியாமல் இழையோடியது.

"ஆஹா! நன்று நன்று தங்களால் சாதிக்க இயலாதது உண்டோ?" - இந்தக் குரல் நிச்சயம் நமக்குப் பழகிய ஒன்றுதான். அதில் சந்தேகமேயில்லை.

[124] ஏறககுறைய ஆயிரதது இருநூறு ஆணடுகள் கழிநதுவிடட இனறைய நிலையிலும உறஙகாப புளிமரம இனறுவரை ஆழவார திருநகரியில இருககிறது. அதன இலைகள இனறும கணமூடுவதிலலை. காயகள பழுபபதிலலை.

"மிக முக்கியமான மிக ஆபத்தான முன்னேற்றங்களை குருகூர் வரதன் அருளால் கண்டறிந்துள்ளோம். நமது வியூகங்களை மாற்ற வேண்டிய அவசரக் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. முதலில் இந்தப் பிரசாதங்களை அருந்துங்கள். பசியோடிருப்பீர்கள்..."

"நல்லது. கரங்களை சுத்தம் செய்துகொண்டு வந்து விடுகிறோம்" என்று கூறியபடி எழுந்த இருவரையும் திகைப்புடன் நோக்குகிறோம். இவர்கள் குறண்டியூரில் நாம் சில காலத்திற்கு முன்பு சந்தித்த பாண்டிய இளவல் சடையமாறனும் அரையன் மானாபரணரும் அல்லவா?

29. சங்கிராம விஹாரை



பகலென்றும் இரவென்றும் ஒரு நாளுக்கு இரு பொழுதுகள் இருக்கின்றன என்பது கூட இந்தக் கொற்கை மாநகருக்குத் தெரியுமோ தெரியாதோ? என்று நண்பர்கள் வியந்தார்கள். ஏனெனில் மாலை முடிந்து இரவு நேரம் துவங்கி இரண்டரை நாழிகைகள் கழிந்துவிட்ட அந்தப் பொழுதிலும் அக்கோநகரம் 'நாள் முடிந்துவிட்டது' என்பதற்கான எந்த அறிகுறிகளையும் காண்பிக்காமல் விறுவிறுப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஜே! ஜே! என்று எல்லா இடங்களிலும் ஒரே கூட்டம்.

நகருக்குள் நுழைந்தவுடன் இருவருமே தத்தம் புரவிகளிலிருந்து அவரோகணிக்க வேண்டியதாகிவிட்டது அப்பெருங்கூட்டத்திற்கு நடுவே புரவிகளின் கடிவாளத்தைப் பிடித்தபடி நடப்பதே மிகக் கடினமான செயல்!

நகரின் ஒதுக்குப்புறமான இடத்தில்தான் துறவிகள் வசிக்கும் சங்கிராம விஹாரை அமைந்திருக்கும். நகர நெரிசலுக்குள் நுழையாமல் நேராக விஹாரைக்குச் சென்று விடலாம் என்றெண்ணியிருந்த நண்பர்களுக்குப் பெருத்த ஏமாற்றம்! அம் மஹாவிஹாரை கொற்கையின் மிக முக்கியப் பகுதியான துறைமுகப் பெருவீதியின் முனையில் அமைந்திருந்தது அதனால் நகரின் நெரிசல் மிகுந்த மையப் பகுதிக்குள் தவிர்க்கவியலாமல் நுழையவேண்டியதாகி விட்டது.

நகரவாசிகள் பலரும் தத்தம் வீடுகளின் வாயில்களில் மாவிலைத் தோரணங்கள் கட்டுவதையும் ஒரு சிலர் குலையோடு கூடிய வாழை மரங்களை நிலைக்கால்களில் கட்டி வைப்பதையும் வியப்புடன் நோக்கியபடி நண்பர்கள் வீதிகளில் நடந்தனர். போக்குவரத்து நெரிசலையும் பொருட்படுத்தாமல் கிடைக்கும் சிறு துண்டு இடத்தில் பெண்டுகள் தமது கலைத்திறமையை வண்ண வண்ணக் கோலங்கள் வரைந்து வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள் முகங்களில் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாமல் கம்பன் மணியனார் உள்ளூர்வாசி ஒருவரைப் பிடித்து "என்ன, ஏதாவது திருவிழா வருகிறதா என்ன?" என்று விசாரித்தார்.

"என்ன தம்பி! எந்த உலகத்தில் இருக்கிறீர்கள்? அடுத்த இரண்டு நாட்களில் தை பிறக்கப் போகிறதே! அதனை வரவேற்றுக் கொண்டாட வேண்டாமா? கொற்கை வாணிப நகர்தான். அதற்காக அறுவடைத் திருநாளை நாங்களும் கொண்டாடக் கூடாதா என்ன?" என்று சரமாரியாகக் கேள்விக் கணைகள் வீசத்துவங்கிவிட்டார். அவரை சமாதானப்படுத்தி அனுப்புவதற்குள் பெரும்பாடாகி விட்டது.

"அட, தை பிறப்பதுகூடத் தெரியாமலா சுற்றிக் கொண்டிருக்கிறோம்?" என்று வியப்பேற்பட்டது சிக்கல் மிகுந்த அரசாங்கப் பணிகள் வாழ்வின் சின்னஞ்சிறிய சந்தோஷங்களைக் கூடப் பறித்துக் கொண்டுவிடும் போல

சிறுவயதில் திருப்பழனத்தில் அவரது பாட்டன் வீட்டில் வருடா வருடம் வெகு விமரிசையாகத் தைத் திருவிழாவைக் கொண்டாடியது அவரது நினைவுக்கு வந்தது அவரது பாட்டனாருக்கு நான்கு புதல்வர்கள் இரு பெண்கள் மணியனாரின் அன்னைதான் மூத்தவர். அதனால் மாமன்கள் அனைவரும் அவர் மீது சிறுவயது முதலே அன்பைப் பொழிந்தார்கள் அதிலும் தைத்திருவிழா என்று வந்துவிட்டால் கூடுதல் கொண்டாட்டம்தான்! அனைவரும் குடும்பத்துடன் கிளம்பி நான்கு ஐந்து நாட்களுக்கு முன்னரே பழனத்திற்கு வந்து சேர்ந்து விடுவார்கள் அந்தப் பெரிய வீட்டின் அத்தனை அறைகளும் மனிதர்களால் நிறைந்துவிடும் உக்கிராண அறையில் சமையல் ஏதோ கல்யாண வீட்டு விருந்தைப் போல் உருவாகிக் கொண்டிருக்கும். அறுவடையை எதிர்பார்த்து நெஞ்சு நிமிர்த்தி நிற்கும் வயல்களைப் பார்த்தாலே மனம்

நிறைந்துவிடும். அடுத்த பத்து நாட்கள் விளையாட்டும்
வேடிக்கையுமாகக் கழியும்.

சட்டென்று காலம் பின்னோக்கிச் சென்று
விடலாகாதா? மீண்டும் பாட்டன் கையைப் பிடித்துக்
கொண்டு வயல் வரப்புக்களையும் வாய்க்கால் கரைகளையும்
சுற்றி வர மாட்டோமா? என்று ஒரு கணம் மிகப் பெரிய
ஏக்கம் உருவானது.

இல்லை. காலம் ஒருபோதும் பின்னோக்கித் திரும்பிப்
போவதில்லை இனி நாம் போக வேண்டிய பாதை வேறு
பயணம் வேறு. பழைய சங்கதிகளை அவ்வப்போது
நினைத்துப் பார்க்கலாம். மெல்ல அசைபோடலாம்.
தனிமையில் சிரித்துக்கொள்ளலாம். அவையெல்லாம் அழகு
மிகுந்த நினைவுகள் அவ்வளவே.

மணியனாரின் மனம் இப்படிப் பாட்டன் வீட்டைப்
பற்றிய நினைவுகளில் மூழ்கிப் போனதெனில்
மழபாடியாரின் மனமோ மிகவும் கனத்துப்போய்க் கிடந்தது.
ஏனெனில் பல வருடங்களுக்குமுன் ஒரு அறுவடைத்
திருவிழாவின்போதுதான் அவரது தந்தையார் மறைந்து
போனார். அவர் விட்டுவிட்டுச் சென்ற 'தந்தை' என்னும்
ஸ்தானத்தை இதுவரை வேறு எவராலும் [illegible]
முடியவில்லை. தமது தந்தையாரைக் குறித்த ஏக்கங்கள் [illegible]
ஆழமாக மழபாடியாரின் அடிமனதில் வேரூன்றியிருந்தன.
அவர் மட்டும் இன்று இருந்திருந்தால் மதுராவைக்
கைப்பிடிப்பதில் எந்த சிக்கல்களும் ஏற்பட்டிருக்காதோ
என்னவோ...

ஒவ்வொரு அறுவடைத் திருவிழாவின் போதும் அவரது
வீட்டில் மட்டும் தந்தையாருக்கான திதி நடக்கும். [illegible]
நாட்களில் சேலையை வரிந்து கட்டிக்கொண்டு
வேலைகளில் மூழ்கிப்போகும் அவருடைய அன்னையார்
அன்று ஒருநாள் மட்டும் மூலையில் உட்கார்ந்துவிடுவார்.
யாரிடமும் எதுவும் பேசமாட்டார். அவ்வப்போது மெல்லிய
விசும்பல் ஒலி கிழக்கு மூலையிலிருந்து எழும். "[illegible]
இப்படி? எங்களுக்கு மட்டும் ஏன் இந்த வேதனை"
என்னும் கேள்வி அந்த விசும்பல்களில் தொக்கி நிற்கும்.
இந்தக் காட்சிகளைக் காணச்சகிக்காமல் மழபாடியார்
வெளியில் சென்றுவிடுவது வழக்கம்.

அவருக்கும் அந்த இழப்பைப் பற்றிய வேதனை
இருக்கத்தான் செய்தது ஆனால் அதனை மனதின் [illegible]

[illegible]லையில் போட்டுப் புதைத்துவிடவே அவர் முயன்றார்.
[illegible]னுடைய துன்பங்களை ஆடம்பரமான அழுகைகளின்
[illegible] காட்டிக்கொள்வதோ சுயபச்சாதாபத்தின் [illegible]
[illegible]த்தவர்களின் பரிதாபத்தைத் தேடிக்கொள்வதோ
அவருக்கு ஆண்மை மிகுந்த செயல்களாகத் தோன்றவில்லை.
[illegible] நமக்கு இப்படி நேர்ந்துவிட்டது [illegible]
[illegible]ந்திருக்கலாம்தான். ஆனால் நேர்ந்துவிட்டது இந்தத்
[illegible]த்தை நான் சுமப்பேன். இதனை மட்டுமல்ல வாழ்க்கை
[illegible] என்மேல் ஏற்றி வைக்கப்போகும் அத்தனை
[illegible]களையும் தைரியமாகச் சுமப்பேன். நான் ஆண்மகன்
[illegible] வீரத்தில் நிகரற்றவரான குருகாடி செல்வமழபாடியின்
[illegible]. என் உடம்பில் ஓடுவது அவர் உதிரம் நான்
[illegible] சிவரை தலை நிமிர்ந்துதான் நிற்பேன் அத்தனை
[illegible]களையும் தைரியமாகத் தாங்குவேன். சிரித்தபடி தாண்
[illegible]வேன்! என்னும் கடுமையான மனவுறுதி அவரது மனதில்
வேரூன்றி விட்டிருந்தது.

தந்தையாரைப் பற்றிய நினைவுகளிலிருந்து மனதைத்
[illegible] முகமாகப் பண்டிதரைப் பற்றிய யோசனைகளில்
[illegible]த்தைக் குவிக்க முற்பட்டார் மழபாடியார்
[illegible]பாகவே பல கேள்விகள் அவரது மனதில் முகிழ்த்தன.

யார் அவர்? குருகூருக்குச் செல்வதற்காக ஏன் நம்முடன்
சேர்ந்துகொள்ள வேண்டும்? பேச்சுத் துணைக்காகவா?
அல்லது நல்ல புரவியில் ஏறி விரைவாகப் பயணம்
செய்யலாம் என்கிற எண்ணமா? இத்தனைக்கும் பயணத்தில்
புரவிகளை அவ்வளவாகப் பயன்படுத்தக்கூட இல்லை
[illegible] வேண்டுமென்றே நம்முடன் ஒட்டிக்கொண்டது
போலத்தான் தோன்றுகிறது.

தற்செயலாகத்தான் நம்மை அவர் சந்தித்தாரா? அல்லது
அனைத்துமே திட்டமிடப்பட்டதொரு ஏற்பாடா? அந்தத்
[illegible]த்தில் ஒரு பகுதியாகத்தான் புரவிகளுக்குக் காய்ச்சல்
[illegible]ாக்கப்பட்டதா என்ன??? நாம்தான் வேறு விதமாக
[illegible] கற்பித்துக்கொண்டோமா? சேச்சே! வாய்க்காலின்
[illegible] கருநாகம் கரையேறுவதையும் அதனைக் கண்டு
புரவிகள் நடுநடுங்கியதையும் கண்டோமே. நமக்குப்
[illegible]க்கவில்லை என்பதற்காக ஒரேயடியாகப் பண்டிதர் மீது
[illegible]றலாமா? அது சரி, நம்முடன் அவர் எதற்காக
[illegible] மெனக்கெட்டு ஒட்டிக் கொள்ளவேண்டும்? அது
[illegible] மர்மமாகவல்லவா இருக்கிறது?? ஓலைகளோ

பத்திரமாக இருக்கின்றன என்று மணியனார் கூறிவிட்டால் பின் பண்டிதரின் நோக்கம்தான் என்ன?

அடுக்கடுக்காக மனதில் எழும்பிய கேள்விகள் அவனைப் பெரியதொரு குழப்பத்தில் ஆழ்த்தின. அந்தக் கேள்விகளுக்கான விடைகளைச் சுமந்து நின்ற சங்கிராம விஹாரையானது அவர்களின் வரவுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தது.

* * * * * * * *

பௌத்தம், அந்நாளில் தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் வேரூன்றியிருந்தது. குறிப்பாகக் கீழ்த்திசை நாடுகளுடன் சுறுசுறுப்பான வாணிபத்தில் ஈடுபட்டிருந்த வணிகர்கள் பௌத்தத்தை ஆர்வத்துடன் பின்பற்றினர். இவர்களின் ஆதரவால் தமிழகத்தின் கிழக்குக் கரையோரத் துறைமுகப் பட்டினங்கள் பலவற்றிலும் பல்வேறு பௌத்தப் பள்ளிகளும் விஹாரைகளும் சேதியங்களும் அமைக்கப் பட்டிருந்தன.

இவ்வாறு பரவலாகப் பின்பற்றப்பட்ட பௌத்தத்தை ஒருவகையில் 'தென்னகப் பௌத்தம்' என்றே கூறலாம். ஏனெனில் தென்னகத்திற்கேயுரிய பலவிதமான மாண்புகளையும் மரபுகளையும் தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டுதான் தட்ஷிண தேசத்தில் பௌத்தம் தழைத்தது. உதாரணமாக இங்கு அமைந்திருந்த விஹாரைகளில் பக்தர்களால் தானமாகக் கொடுக்கப்பட்ட வெண்கலப் பௌத்தப் படிமங்களைச் சுட்டலாம். நாகைப்பட்டினத்தில் தற்செயலாகக் கிடைத்த பௌத்தப் படிமங்கள் மட்டுமே முந்நூறுக்கும் மேலிருக்கும்! இந்தியாவில்.. ஏன்? தென்கிழக்கு ஆசியாவிலேயேகூட இத்தனை படிமங்கள் ஒரே இடத்தில் கிடைத்ததாகத் தெரியவில்லை. பதினான்கு அல்லது பதினைந்தாம் நூற்றாண்டுவரைகூடப் பிழைத்திருந்த இந்தப் பௌத்தக் கலாச்சாரக்கூறு பின்னர் மறைந்தொழிந்தது நம்முடைய துரதிருஷ்டமே.

இத்தகைய பத்தாம் நூற்றாண்டு பௌத்தத்தின் சிறியதொரு அங்கமாக விளங்கிய சங்கிராம விஹாரை நாகையின் பிரம்மாண்டமான விஹாரைகளைப் போலல்லாமல் மிகச் சிறிய கட்டிடமாகவே காட்சியளித்தது. விஹாரையின் முன்புறத்தில் இயங்கிய முக்கிய வழிபாட்டுக் கூடத்தில் இரவு பகலென்று பாராமல் பக்தர்கள்

குவிந்தவண்ணம் இருந்தார்கள். கடலில் பெரும்பயணம் மேற்கொள்வோர், சரக்குகளைக் கப்பல்களில் ஏற்றி அனுப்புவோர், உற்றார் உறவினர்களை வழியனுப்ப வந்தோர், வெளிதேசத்திற்குப் பொருளீட்டச் செல்பவர், முதல் முறையாகக் கடற்பயணம் மேற்கொள்வோர், கடற் பயணங்களிலேயே வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவழித்தோர் என்று பலவகைப்பட்ட பக்தர்களும் அங்கே வந்து பகவானின் பாதாரவிந்தங்களில் தத்தம் பிரார்த்தனைகளைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அத்தனை பக்தர்களின் வேண்டுகோள்களையும் பொறுமையுடன் செவிமடுத்து பதிலுக்குத் தன்னுடைய மந்திரப் புன்னகையையும் 'தந்தோம்' என்பதற்கு அறிகுறியாக அபயஹஸ்த முத்திரையும் காட்டி அமர்ந்திருக்கும் சங்கிராம விஹாரையின் நாயகர்[125] பல்லவர் காலத்தினர். அழகுக்குப் பேர்போனவர். கீழ்த்திசை நாடுகளின் வழிபாட்டு முறைக்கேற்ப அவருக்கு முன் பக்தர்கள் கால்களை வஜ்ராசனமாக மடித்து இரு கரங்களிலும் எரியும் நறுமண வத்தியை ஏந்தி மேலும் கீழுமாக விழுந்து விழுந்து வணங்குவதை காண்கிறோம்[126].

கூட்டம் மிக அதிகமாக இருந்தாலும் வழிபடுவோர் ஒரு பக்கம், வழிபாட்டிற்காக காத்து நிற்போர் ஒரு பக்கம், வழிபாட்டை முடித்துக்கொண்டு விஹாரையிலிருந்து திரும்புவோர் ஒரு பக்கமென்று அந்த பக்தர் குழுக்கள் ஒரு கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வது வியப்பாகத்தான் உள்ளது. ஆங்காங்கே நிற்கும் பிக்ஷுக்கள் மாறாத புன்சிரிப்புடன் அவர்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

இந்த வழிபாட்டுக் கூடத்தின் வழியே நடந்து பின்புறம் அமைந்திருந்த பிக்ஷுக்கள் தங்கும் விஹாரையை நண்பர்களிருவரும் அடைந்தார்கள். விஹாரையின் வாயிலில்

---

[125] பௌத்தப் படிமங்களை "நாயகர்" எனும் சொல்லால் அக்காலத்தில் குறிப்பிட்டுள்ளனர். நாகையில் "அக்கசாலைப் பெரும்பள்ளி நாயகர் – பொன்னை விசயத்தாகும் நாயகர்" எனும் பொறிப்புடன் பௌத்தப் படிமம் கிடைத்துள்ளது.

[126] இன்றும் தாய்லாந்தில் இவ்வித வழிபாட்டுமுறை வழக்கத்திலிருப்பதைக் காணலாம்.

நின்று கொண்டிருந்த காவி வஸ்திர பிக்ஷு ஒருவர் அவர்களுக்கு முகமன் கூறி வரவேற்றார்.

"வரவேண்டும், வரவேண்டும்! வழிபாட்டுக் கூடம் முன்னால் அமைந்துள்ளது. இங்கிருந்து நேரே சென்றால்.."

"மன்னிக்கவேண்டும் தேரரே. நாங்கள் பகவானை தரிசனம் செய்ய வரவில்லை. எங்களுக்கு மிகவும் தெரிந்த பௌத்தத் துறவியொருவர் இங்கு எங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். அவரை சந்திப்பதற்காக வந்தோம்."

"ஓ! அப்படியா? அவருடைய திருநாமமென்னவோ?"

"அவருடைய பெயர் ஆனந்தர்."

"அடடா! அது மிகப் பிரபலமான பெயராயிற்றே? எங்கள் விஹாரையிலேயே அந்தத் திருநாமத்துடன் பதினைந்து பேர் தேறுவார்களே? வேறு ஏதாவது அங்க அடையாளங்கள், குறிப்புக்கள் உண்டா?"

"அவர்... காம்போஜத்திலிருந்து வந்தவர். நல்ல உயரம் மெல்லிய உடல்வாகு. மிகத் தெளிவான முகம்."

"நீங்கள் கூறுவதைப் பார்த்தால் நேற்று மாலை காம்போஜம் சென்றுகொண்டிருக்கும் கலத்திலிருந்து வந்திறங்கிய பிக்ஷு ஆனந்த தேரரை அல்லவா குறிப்பிடுவது போலத் தெரிகிறது? நல்லது. என்னுடன் வாருங்கள்."

காம்போஜக் கலமா? என்று நண்பர்களுக்கு ஒரு கணம் வியப்பேற்பட்டது. "வாருங்கள். இந்தப் பக்கமாக வளைந்து வாருங்கள்! வாயிற்படியின் உயரம் சற்று குறைவு, பார்த்து வாருங்கள்.." என்று வழிகாட்டிய பிக்ஷு, தன் கரங்களில் ஒரு சிறிய தீபத்தை ஏந்தியபடி விஹாரையின் பல அறைகளையும் கடந்தார்.

அந்த விஹாரை பார்ப்பதற்குச் சிறியதாகத் தென்பட்டாலும், அதனுள் பல அறைகள் கிழக்கிலும் மேற்கிலுமாக அமைந்திருந்தன. கொற்கைக்கு வந்து போகும் பௌத்தக் குடிமக்கள் ஓரிரு நாட்களுக்குத் தங்கிவிட்டுப் போகும் வசதிக்காக அவை கட்டப்பட்டிருந்தன. ஆங்காங்கே அமைந்திருந்த சாளரங்களின் வழியே 'பளிச்'சென்ற நிலவொளி தன் கிரணங்களை வாரியிறைத்தது.

"இரவு உணவு அருந்திவிட்டீர்களா? அல்லது பிரசாதங்களை சிறிதளவு எடுத்து வரட்டுமா?"

"உங்களுக்கு ஏன் வீண் சிரமம்..."

"இதிலென்ன சிரமம் இருக்கிறது? பகவானின் பிரசாதங்களை உங்களுடன் பகிர்ந்துண்பதில் மகிழ்ச்சி மட்டுமே உண்டு. இதோ! அவர் தங்கியிருக்கும் அறை..."

அவர்களின் கண்களுக்கு முன்விரிந்த அறையின் மரக்கதவை மென்மையாக இரண்டுமுறை தட்டினார் பிக்ஷு.

30. மோசம் போனோம்!



அறையின் உள்ளிருந்து "வாருங்கள்" என்றொரு குரல் கேட்டது. அது ஆனந்த தேரரின் குரல்தான். அவர்களை அழைத்து வந்த பிக்ஷு, அறைக் கதவை மெல்லத் திறந்து "தேரருக்கு மாலை வணக்கங்கள் உங்களைத் தேடி இந்த நண்பர்களிருவரும் வந்துள்ளனர். இவர்களுடன் உரையாடிக் கொண்டிருங்கள். நான் பகவானின் பிரசாதங்களுடன் சிறிது நேரத்தில் வருகிறேன்" என்று புகன்று விட்டு மறைந்தார்.

அது ஒரு எளிய அறை. அதன் ஒரு கோடியில் பெரிய தீபமொன்று தன் பரந்த வெளிச்சத்தை தாராளமாக அறை முழுவதும் பரவவிட்டிருந்தது. அந்த தீபத்தின் எண்ணையில் சுகந்தப் பொருட்கள் கலந்திருந்ததாலோ என்னவோ அந்த அறை முழுவதுமே ஒரு மெல்லிய நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. அறையின் உச்சியில் அமைந்திருந்த சாளரங்களின் வழியாக வானத்திலிருந்த தாரகைகளும் நிலவும் அவர்கள் மூவரையும் சிறிது நேரம் முறைத்துப் பார்த்தன.

ஆனந்த தேரர் முடிந்தவரை அமைதியுடன் இருப்பதைப் போல் காட்டிக்கொள்ள முயன்றாலும் அவாது மனதில் பொங்கிக் கொண்டிருந்த பெரும் பரபரப்பு முகத்தில் தெளிவாகவே தெரிந்தது "நண்பர்களே! ஏன் இத்தனை தாமதம்? இன்னும் ஒரு முகூர்த்த நேரம் தாமதமாக வந்திருந்தீர்களானால் என்னைச் சந்தித்திருக்க முடியாது என்ன நடந்தது??"

"அது ஒன்றுமில்லை. புரவிகளுள் ஒன்றுக்குக் காய்ச்சல் கண்டு விட்டது" என்று துவங்கிய மணியனார் தொண்டியிலிருந்து கொற்கை வரை அவர்கள் இருவரும் வந்து சேர்ந்த வரலாற்றை மிகச் சுருக்கமாக விளக்கினார். பெரிதும் முயன்றும் புதிய மனிதரொருவர் அவர்களுடன் பாதிப் பயணத்தில் சேர்ந்து கொண்டதை அவரால் மறைக்க முடியவில்லை.

"என்ன? புதிய மனிதருடன் சேர்ந்துகொண்டு பயணப் பட்டீர்களா? தெரியாதவர்களுடன் ஒருக்காலும் பிரயாணம் செய்ய வேண்டாம் என்று நாகையில் ஒன்றுக்கு நூறுமுறை படித்துப் படித்துக் கூறியிருந்தேனே... அதையும் மீறியா செயல்பட்டீர்கள்?"

"அது- வேறு வழியின்றி அவ்வாறு செய்ய வேண்டியதாகிவிட்டது. புரவிகளுக்கு வைத்தியம் செய்த அந்தப் பெரியவர் தன்னைத் திருக்குருகூர்வரை அழைத்துச் சென்றால்தான் ஆயிற்று என்று நிர்பந்தித்து விட்டார்..."

"குருகூருக்குச் செல்வதற்கு ஆயிரம் வழிமுறைகள் உள்ளனவே? உங்களுடன் சேர்ந்துகொண்டுதான் பயணப்பட வேண்டுமென்பதில்லையே? இதில் ஏதோ சூது மறைந்துள்ளது என்பது நிச்சயம். ஓலைகள் பத்திரம்தானே?"

"மிக மிக ஜாக்கிரதையாக வைத்திருக்கிறேன்."

"எங்கே, ஓலைச்சுருளை எடுங்கள்?"

மழபாடியாருக்கு வயிற்றிலிருந்து ஒரு பந்து மேலெழும்பி மேலண்ணத்தை அடைந்தது. அடிமனதில் எங்கோ ஏதோ பெரியதொரு தவறு நேர்ந்துவிட்டது என்னும் எண்ணம் அவருக்குக் குருகூரிலிருந்தே தோன்றிக் கொண்டிருந்தது. தற்போது அது உறுதிப்பட்டது.

"இதோ!"

மழபாடியாரிடம்கூடக் காட்டாமல் சர்வபத்திரமாகத் தன்னுடைய மெய்ப்பைக்குள் ஒளித்து வைத்திருந்த பித்தளை ஓலைச்சுருளை கம்பன் மணியனார் பயபக்தியுடன் தேரரிடம் நீட்டினார்

தேரர் அந்த ஓலைச் சுருளை உடனடியாகப் பிரிப்பார், உள்ளிருக்கும் பனை முறிகளை ஆராய்வார் என்று இருவரும் எதிர்பார்த்தார்கள் ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. மாறாக, ஓலைகளைத் தாங்கியிருந்த

பித்தளைச் சுருளை நேராக விளக்கொளியில் சென்று ஆராய்ந்தார். எப்போதும் சாந்தி நிலவும் அவரது முகம் கடுகடுவென்று மாறியது.

"நண்பர்களே! ஏமாந்து போய்விட்டீர்கள். முறிகள் பறி போகவில்லை என்பதென்னவோ உண்மைதான். ஆனால் ஓலைச்சுருள் திறக்கப்பட்டிருக்கிறது. முறிகளில் எழுதப் பட்டிருக்கும் செய்திகள் படிக்கப்பட்டுவிட்டன!"

இளையரின் முகம் சொல்ல முடியாத விகாரத்தை அடைந்தது. "என்ன... என்ன சொல்ல வருகிறீர்கள் தேரரே?"

"ஒருக்காலும் நீங்களோ இந்த வீரரோ ஓலைச்சுருளைப் பிரிக்கவில்லையே? நாகையில் உங்களிடம் சுருளைக் கொடுக்கும்போதே நான் சொல்லும்வரை இதனைத் திறக்க வேண்டாம் என்று கூறியிருந்தது நினைவில் உள்ளது தானே?"

"நிச்சயமாகப் பிரிக்கவில்லை. சொல்லப்போனால் இந்த ஓலைச்சுருளை இவரிடம் காண்பிக்கக்கூட முயலவில்லை. மிகப் பத்திரமாகப் பாதுகாத்து வந்தேன்..."

"அப்படியானால் அந்தப் புதிய மனிதன்தான் சுருளைத் திறந்து முறிகளைப் படித்திருக்கிறான் என்றாகிறது. நண்பர்களே! பெருந்தவறு செய்து விட்டீர்கள்!"

"எப்படி ஓலைச்சுருள் திறக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்தீர்கள்?" என்று வினவினார் மழபாடியார். அவரது மனதிலும் பெரியதொரு பயம் பற்றிவிட்டது. என்னதான் ஓலைகளை மணியனார் சுமந்தாலும் அவருக்குப் பாதுகாவலாக இருக்க வேண்டிய தனது கடமையிலிருந்து தவறியவராகிறார் இல்லையா?

"இதோ பாருங்கள்!" என்று அவர்களை தீபத்திற்கருகில் அழைத்துச் சென்ற ஆனந்தர், பித்தளைச் சுருளின் ஒரு முனையைச் சுட்டிக்காட்டினார்.

"இரகசியமான இராஜாங்க ஓலைகள் குறிப்பிட்ட ஆள்வரை பத்திரமாகச் சென்று சேருகின்றனவா அல்லது வழியில் பிரித்துப் படிக்கப் பட்டிருக்கின்றனவா என்பதைக் கண்டறியப் பல வழிமுறைகள் உண்டு. அதில் ஒரு வழியைத்தான் நான் கையாண்டேன். இதோ இங்கிருக்கும் சிறு கோடுகளைக் கவனியுங்கள். ஓலைச்சுருள் முழுவதுமாக மூடப்பட்டபின் இந்தக் கோடு இடப்பட்டது.

அதனால் சுருளில் இருபகுதிகளிலும் இந்தக் கோடு நேராக இசைந்திருந்தது. தற்போது அந்த இசைவு பெரிய மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறது அவசர அவசரமாக எவரோ ஓலைச்சுருளைத் திறந்து முறிகளைப் படித்துவிட்டு, மீண்டும் பத்திரமாக உங்கள் கச்சில் சொருகி விட்டிருக்கிறார்கள்."

"நயவஞ்சகன்!" என்று பற்களை நறநறவென்று கடித்தார் மணியனார். பண்டிதரை அந்த இடத்திலேயே கண்டதுண்டமாக வெட்டிப் போட்டுவிட வேண்டுமென்ற வெறி அவருக்கு உண்டானது. காரிப்புத்தூர் சத்திரத்தில் அவர்கள் மூவரும் தங்கிய இரவு தன்னை மறந்து சிறிது நேரம் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டது நினைவுக்கு வந்தது. அந்த நேரத்தில் மெல்ல ஓலைகளை எடுத்துப் படித்திருக்கிறான் அந்த வஞ்சக வேடதாரி. ஓலைக் குழல் வைத்திருந்த இடம் காலையில் விழித்தபோது சிறிது கலைந்திருந்தது உண்மைதான். அது நமது உறக்கத்தினால் ஏற்பட்டது என்றல்லவா நினைத்துவிட்டோம்?

நாம்தான் உறங்கி விட்டோமென்றால் நமக்குக் காவலாக வந்த மழபாடியாருமல்லவா சேர்ந்து உறங்கி விட்டார்? ஒருவேளை ஒருவர் மாற்றி ஒருவர் முறை வைத்துக்கொண்டு உறங்கியிருக்க வேண்டுமோ? அடடா முதல் பணியில் முக்கியப் பணியில் இத்தனை தூரம் நான் தோல்வியடைந்திருக்க வேண்டாம்! இனிப் பல்லவராயரின் முகத்தில் விழிப்பது எப்படி? ஐயோ! பேரரசரின் நம்பிக்கையை முழுவதுமாகக் குலைத்துவிட்டேனே?

தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டார் அவர்.

மழபாடியாரின் மனமும் தாங்கமுடியாத வேதனையில் சட்டென்று உள்மடங்கி உட்கார்ந்துவிட்டது. இதுபோன்ற மிகச் சங்கடமான தருணங்களில் சம்பவங்கள் கைமீறிப் போய் துன்பம் தலைக்கேறி விடும் வேளைகளில் அவர் செய்வது ஒன்றே ஒன்றுதான். மனதில் அவரது குலதெய்வமான கச்சிப்பட்டு ஐஞ்சந்தி துர்க்கா தேவியை

---

[127] காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் துர்க்காதேவி. பரமன் மழபாடியார் இத்தேவிக்குக் கொடுத்த நிவந்தத்தைக் குறிப்பிடும் கல்வெட்டு தேவிக்கு அருகிலேயே அமைந்துள்ளது.

முழுவதுமாக வரிப்பது. அவளது பாதார விந்தங்களில் சிந்தையைச் செலுத்துவது. நல்லதோ கெட்டதோ என்னால் செய்யக் கூடியவற்றை செய்துவிட்டேன் இனிமேல் நீதான் என்று பாரத்தை அவள் மேல் போட்டுவிடுவது

"அந்தப் புதிய மனிதர் யார்? அவரது அங்க அடையாளங்கள் என்ன? அவரைப் பற்றிய முழு விபரங்களையும் கூறுங்கள்" - தேரரின் குரலில் தெரிவது இகழ்ச்சியா என்ன?

"கழிக்குடியின் பாசுபத மடத்தைச் சேர்ந்த துறவியாக அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவரது குடும்பம் பண்டைய பாண்டிய இராஜ்யங்களுடன் நெருங்கிய தொடர்ப்பிலிருந்திருக்கும் போலிருக்கிறது தற்சமயம் அந்தத் தொடர்புகள் அற்றுவிட்டன வைத்தியத்தில் தேர்ச்சி பெற்றவராகக் காணப்பட்டார் குறிப்பாக அசுவ வைத்தியத்தில் அவரது தேர்ச்சி நன்றாகவே உள்ளது. கருத்த மேனியர். நல்ல உயரம், உடல்வாகு பிராயம் ஐம்பத்தைந்திற்குமேல் இருக்கும். நரைத்த மீசை தாடி அவரது பெயர் தேவநாக பண்டிதர்!" - இடிந்துபோய் உட்கார்ந்திருந்த மணியனார் மெல்லிய குரலில் பதிலிறுத்தார்.

"என்ன பெயர் சொன்னீர்கள்?"

"தேவ... நாக... பண்டிதர்!"

"ஆஹா! மோசம் போனோம். முற்றிலுமாக மோசம் போனோம்! யாரிடம் ஒரு போதும் நமது இரகசியங்கள் அகப்படக்கூடாதோ அவரிடமே ஏமாந்திருக்கிறீர்கள் நண்பர்களே! இனி அந்த பகவான் சாக்கிய முனிதான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்."

மழபாடியாரின் மனதில் தேவி தோன்றினாள். சிரித்தாள்.

'இப்படி என்னை முற்றிலுமாகக் கைவிட்டு விட்டாயே அம்மா? அரசர் என்னை நம்பி ஒப்படைத்த பொறுப்பை நிறைவேற்றுவதில் இத்தனை பெரிய தோல்வியா? ஒரு எச்சரிக்கை ஒரு சிறு குறிப்பு கொடுத்திருந்தால்கூட விழித்துக் கொண்டிருப்பேனே?' என்று அழாக் குறையாகப் புலம்பித் தள்ளினார் மழபாடியார்.

"அடேய் மழபாடி! பரம்பரை பரம்பரையாக என்னை வழிபட்ட குடும்பமடா உன்னுடையது. நீ உன் பாட்டனின் அம்சம். அதனால்தான் அவனைப்போலவே என்னை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறாய். உன்னை நான் கைவிட்டுவிடுவேன்? ஒரு போதும் கிடையாது. மாயை உன் கண்களை மறைக்கிறது. அதனால்தான் நாகையில் கிளம்பிய நாள் முதல் நான் உன் மனதிற்கு அனுப்பும் செய்திகளை கவனிக்காமல் மேம்போக்காக நடந்து கொண்டிருக்கிறாய். ஒன்று சொல்கிறேன் கேள். அந்தப் பண்டிதன் மட்டுமல்ல இந்தப் பிஷுவும் உங்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறான். நன்றாக சிந்தித்துப்பார். எதற்காக உன்னை அவசர அவசரமாக இந்தப் பயணத்தில் சேர்க்க வேண்டும்? இத்தனை முக்கியமான ஓலைகளை அனுப்ப உங்களைப்போன்ற ஏமாளிகளை விட்டால் வேறு ஆட்களா கிடைக்கவில்லை? சரி, கொடுத்ததுதான் கொடுத்தாயிற்று பின் எதற்காக துறைமுகம் துறைமுகமாக இவன் உங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறான்? ஒன்றாவது ஏற்றுக் கொள்ளக் கூடியதைப்போல் தெரிகிறதா?

சிந்தித்துப்பார். உன் குருநாதன் அந்தச் செண்பகத் தோட்டத்துக் கிழவன் படித்துப் படித்து உபதேசித்த தர்க்கவாத அடிப்படைகளை உபயோகித்துப்பார். மலைத்துப் போய் நிற்காதே! இன்னமும் குடி முழுகி விடவில்லை. அந்த அளவிற்குப் போவதற்கு நானும் விடமாட்டேன். நீ உன் புத்தியை சற்று உபயோகப்படுத்து. வேறு விதமாக, வேறு கோணத்தில் இதனை அணுகிப்பார். இந்த நாடகத்தில் உனக்குக் கொடுக்கப்பட்ட பங்கு என்ன என்பது உனக்கே மெல்ல மெல்லப் புரியும்!"

"இப்படித்தான் ஏதாவது நடக்குமென்று அப்போதே அருள்மொழிவர்மரிடம் எச்சரித்தேன்.." என்று ஏதோ கூறத் துவங்கிய பிஷு தாம் பேசிக்கொண்டிருப்பதைச் சிறிதும் கவனிக்காமல் ஏதோ தியானத்தில் நிற்பதுபோல் கண்மூடி அசையாமல் நிற்கும் மழபாடியாரை ஆச்சரியத்துடனும் கோபத்துடனும் கவனித்தார். கோபத்துடன் என்ன கூறினோம்? பின் அவருடைய கடைவாயின் இறுதியில் ஒரு சிறு புன்னகை ஒளிந்து கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறதே? அர்த்தமற்ற இவரது நடத்தைக்கு என்னதான் பொருள்? பழம்பெருமை மிக்க கொடும்பாளூர் சங்கிராமவிஹாரையின் நாயகரே! நீங்களாவது என்னதான்

நடந்து கொண்டிருக்கிறதென்பதை சற்றே விளக்கிச் சொல்லுங்களேன்?

31. மாயை தெளிந்தது



மனம் இருவேறு நிலைகளில் செயல்படுகிறதென்பதை மெய்ஞானம் மட்டுமல்ல விஞ்ஞானமும் ஒப்புக்கொள்கிறது. ஒன்று தூல மனம் (Concious mind), மற்றது சூட்சும ஆழ்மனம் (Sub concious mind). இரண்டும் இருவேறு தளங்களில் இயங்குகின்றன.

நாம் பெரும்பாலும் தூல மனத்துடன்தான் நம்மை இணைத்துக் கொள்கிறோம். இந்தத் தளம் அறியாமை நிறைந்தது. கண்களால் காணும் பொருட்கள் கொடுக்கும் அறிவும் வறட்டுக் கல்வியறிவு கொடுக்கும் ஞானமும்தான் இதில் மிச்சம். தூல மனம் கண்களால் காண்பவற்றை மட்டுமே உள்வாங்கிக் கொள்கிறது. அதனை மட்டுமே நம்புகிறது. எல்லாருடனும் எல்லாவற்றுக்கும் தர்க்கம் செய்கிறது. நம்முடைய தன் முனைப்பை முனை மழுங்காமல் பாதுகாப்பது தூல மனம்தான். வித்யா கர்வமும், தான் என்ற அகம்பாவமும் இந்த மனத்திலிருந்துதான் வேர் பரப்பிக் கிளைவிரித்து விஷ விருட்சமாக வானளாவ வளர்கின்றன.

ஆனால் நல்ல வேளையாகத் தூல மனத்தோடு மட்டும் மனித இனம் படைக்கப்படவில்லை. அது இயங்கும் மற்றொரு தளமும் உண்டு. அதனை சூட்சும மனம் என்று குறிப்பிடுகின்றார்கள். தூல மனம் மேகம் எனில் சூட்சும மனம் வானம். தூல மனம் ஒரு துளி நீரெனில் சூட்சும மனம் சமுத்திரம். சூட்சுமத் தளத்தில் செயல்படும்போது "நான்" என்னும் அகம்பாவம் முற்றிலும் கரைந்துபோய் பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்தப் பேரியக்கத்துடன் மனம் இணைகிறது. அந்த இணைப்பினால் வெளியில் பரந்து இருக்கும் பேரறிவும் ஆற்றலும் தனிமனதிற்குக் கிடைக்கிறது.

மிகப் பெரிய பிரம்மாண்டமான ஏரியிலிருந்து ஒரு வாய்க்காலை வெட்டி விட்டால் அதில் எத்தனை வேகத்துடன் நீர் பாயுமோ அத்தனை வேகத்துடன் பிரபஞ்ச ஆற்றல் தனி மனதிடம் பாய்கிறது. வலிமையற்ற மனதிற்கு அந்தப் பேராற்றலைத் தாங்கும் சக்தி கிடையாது.

அதனால் முதலில் மனதின் வலிமையையும் ஆக்கத்தையும் வளர்த்துக்கொண்டு அதற்குப் பிறகு சிறிது சிறிதாக பயிற்சியின் மூலம் அந்தப் பிரபஞ்ச சக்தியைத் தொட முயற்சிக்க வேண்டும். பின் மெல்ல மெல்ல நிரந்தரமாக நம்மை இணைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள்.

பரத கண்டத்தில் தோன்றிய அத்தனை ஞானிகளும் முனிபுங்கவர்களும் யோகிகளும் வாழ்க்கையின் ஒரே குறிக்கோளாகக் கண்டது இந்த இணைப்பையே. வேதங்களும், வேதங்களுக்கு அடுத்தபடியாக அவற்றின் அங்கங்களாகத் தோன்றிய ஆரண்யகங்களும், வேத அந்தமாகிய உபநிடதங்களும் அடிநாதமாக இந்த ஒரே கருத்தைத்தான் பதிவு செய்துள்ளன. இந்த இணைப்பை சுருக்கமாக “யோகம்” எனும் சொல்லால் குறிப்பிடுவார்கள். “யோகம்” என்பது “யுஜ்” எனும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியது. இதற்கு “இணைத்துக் கொள்ளுதல்” என்று அர்த்தம்.

தனிமனித மனம் பிரபஞ்ச அறிவுடன் தன்னை இணைத்துக் கொள்ளவேண்டுமென்பதற்காக நான்கு சிறந்த வழிமுறைகளை உருவாக்கினார்கள். இவை முறையே ஞான யோகம், இராஜ யோகம், கர்ம யோகம், பக்தி யோகம் என்று பெயர் பெறும். வாழ்க்கையின் ஒரே நோக்கம் இறுதி நோக்கம் இது ஒன்றே ஒன்றுதான் எனும் எண்ணம் அழுத்தமாக நமது சிந்தனைகளில் வேரூன்றியிருப்பதால் தான் பழங்காலம் முதல் இந்த நூற்றாண்டு வரை நாம் விஞ்ஞானிகளை அதிகம் உருவாக்காமல் மெய்ஞ்ஞானிகளை உருவாக்கி வருகிறோம். பரதக் கண்டம் உருவாக்கிய அளவிற்கு அத்தனை மெய்ஞ்ஞானிகளை உலகின் வேறு எந்தக் கண்டமும் எந்தக் காலத்திலும் உருவாக்கியதில்லை!

முறையான யோகப் பயிற்சி இல்லாமலேகூட ஒரு சில சமயங்களில் கணநேரத்திற்கு நாம் நம் மனதைப் பிரபஞ்ச ஆற்றலுடன் இணைத்துக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் நேர்வதுண்டு. பேருந்தில் சாதாரணமாகப் பயணம் செய்துகொண்டிருந்த போதுதான் உலகின் மிகப்பெரிய விஞ்ஞானிகளுள் ஒருவரான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் தன்னுடைய மிகப்பிரபலமான ஒட்டுறவுத் தத்துவத்தை (Theory of Relativity) முதன் முதலில் கூறினாராம்! கணிதமேதை இராமானுஜன் பல சிக்கல் மிகுந்த கணிதப் பயன்பாடுகளை அனாயசமாக யோசிக்காமல் எழுதிக் கொண்டே போவாராம். இப்படிப் பல உதாரணங்களை சொல்லிக்

கொண்டே போகலாம். இந்த ஆச்சரியங்களெல்லாம் தனி மனித மனம் பிரபஞ்ச மனத்துடன் தன்னை இணைத்துக் கொண்டதினால்தான் சாத்தியமாயிற்று.

இவ்வளவு ஏன்? நமது இயல்பு வாழ்க்கையிலேயே கூட அவ்வப்போது மின்னலைப் போல் ஒரு கணம் இந்தப் பிரபஞ்சப் பேரறிவை உணரும் சந்தர்ப்பங்கள் பல வாய்க்கத்தான் செய்கின்றன. நாம்தான் அவற்றைக் கூர்மையாகக் கவனிப்பதில்லை. நினைத்துக்கொண்டே இருந்தேன். நீங்களே வந்துவிட்டீர்கள். உங்களுக்கு நூறு ஆயுசு! என்கிறோமே. வந்தவரைப் பற்றிய நினைப்பு எவ்வாறு வந்தது என்பதை எப்போதாவது யோசித்திருக்கிறோமா?

கதைக்கு நடுவே சூட்சும மனம் பற்றிய மேற்கூறிய நீண்ட விளக்கத்தினை நாம் இப்போது வழங்கியதற்குக் காரணமுண்டு. ஏனெனில் கச்சிப்பட்டு ஐஞ்சந்தி நங்கையின் அருளால் சில கணங்களுக்கு மழபாடியார் பிரபஞ்சப் பேறாற்றலுடன் தன்னை இணைத்துக்கொள்ளும் பேறடைந்தார். அதுவரை நடந்து முடிந்த அத்தனை சம்பவங்களும் கண நேரத்தில் மழபாடியாரின் மனதில் வந்து போயின. வேறு விதமாக யோசி! வேறு கோணத்தில் அணுகிப்பார்!

“இப்படித்தான் ஏதாவது நடக்குமென்று அப்போதே அருள்மொழிவர்மரிடம் எச்சரித்தேன்...”

“பிஷு”வின் வார்த்தைகள் மீண்டும் ஒருமுறை மனதில் வந்து போயின. அப்படியெனில்..? முன்பே இது திட்டமிடப்பட்டு கணிக்கப் பட்டுவிட்டதா? அதாவது... இப்படித்தான் நடக்க வேண்டுமென்றே அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்பட்டது போலத் தெரியவில்லை?

இப்படித்தான் நடக்கவேண்டுமெனில்.. எதிரிகளிடம் நாம் சுமந்து வந்த ஓலைகள் நம்பகமான முறையில் அகப்பட்டேயாக வேண்டுமெனில்... நிச்சயம் பல முன்னேற்பாடுகளைச் செய்துதானாக வேண்டும். முறிகளை வழக்கமான ஓலைதூக்கிகளிடமோ ஒற்றர்களிடமோ அனுப்பாமல் அனுபவம் அற்றவர்களிடம் அடையாளம் எளிதாகக் காணப்படக் கூடியவர்களிடம் அனுப்பியாக வேண்டும். அடையாளம்! ஆஹா... இதனை எவ்வாறு நாம் கணிக்கத் தவறினோம்?? மணியனார் சற்றே சிவந்த மேனியர். நாமோ மாநிறம். தனியொருவராக நானோ அவரோ

சென்றிருந்தால் அடையாளம் காண்பது கடினம். ஆனால் இருவராகச் சேர்ந்து பிரபலமான இராஜபாட்டையில் உயர்ஜாதி அரேபியப் புரவிகளில் ஒருசேரப் பயணித்தால் நாம் சென்ற பாதையை விசாரித்து அறிவது அத்தனை கடினம் அல்லவே? அடக்கடவுளே! இதற்காகத்தான் நாகை கடகத்திலிருந்து அவசர அவசரமாக இந்தப் பணிக்காக நாம் தேர்ந்தெடுக்கப்பட்டோமா? இதற்காகத்தான் பிஷு கண்டிப்பாக இருவரும் சேர்ந்தேதான் பயணம் செய்ய வேண்டுமென்று நாகையில் கூறினாரோ??

தொண்டியில் நம்மைப் பிடிக்க முயன்றவர்கள் எதிரிகள்தான். அத்தனை துல்லியமாக நம்மை அந்தச் சத்திரத்தில் அவர்கள் பிடித்ததும் சாத்தியம்தான். ஏனெனில் நாம் அங்குதான் தங்கப்போகிறோம் என்கிற செய்தி பிஷுவிற்குத் தெரியுமே! ஏதோ இரகசியச் செய்தியைக் கசியவிடுவதைப்போல் ஒற்றர்களின் மூலம் அவரே நமது இருப்பிடத்தை எதிரிகளுக்குத் தெரியப்படுத்தியிருக்கலாம். பின் நம்மைக் காப்பாற்ற முயன்றது எதற்காக? ஒருவேளை அப்போதுதான் இவை நிஜமாகவே மிக முக்கியமான ஓலைகள் என்பதை எதிரிகள் நம்புவார்கள் என்பதற்காகவா?

ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. அதாவது, பிஷு நம்மைக் காப்பாற்றினாரே தவிர அந்தச் சத்திரத்திலிருந்த ஒருவரிடமும். ஏன், அந்த அடியாட்களிடம்கூடத் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ளவில்லை. எதிரிகள் நாம்தான் அவர்களின் ஆட்களைப் பொறுத்திருந்து தாக்கி வீழ்த்தி விட்டதாக நினைக்கக்கூடும். அப்படியெனில்...? பிஷு நம்முடன் சம்மந்தப் பட்டிருப்பது எதிரிகளுக்குத் தெரியாது தெரியக்கூடாது. ஏனெனில்??? நானும் கம்பன் மணியனாரும் இந்த நாடகத்தில் அத்தனை முக்கியப் பாத்திரங்கள் அல்ல. முக்கியமானவர் இந்த பிஷு ஒருவரே! இதற்கு ஒரே ஒரு அர்த்தம்தான் கற்பிக்க முடியும். அதாவது...

பரமன் மழபாடியார் தலை நிமிர்ந்த அந்தக் கணத்தில் பெரிதும் உணர்ச்சிவசப்பட்டிருந்த கம்பன் மணியனார் வாளை உருவி பிஷுவின் காலடியில் வைத்து மண்டியிட்டார்.

"தேரரே! நான் வெறும் வீரன். எதிரிகளைப் போர்க்களத்தில் நேருக்கு நேராக சந்திப்பதே எனது வழக்கம். இந்த ஒளிவு-மறைவுத் தாக்குதல்களெல்லாம் எனக்குப் புதியவை. பழக்கமற்றவை. என்னுடைய பணியில் நான்

தோற்றுவிட்டேன் என்பதை முழுமனதுடன் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் தோல்வியை வெற்றியாக மாற்றுவேன். அந்தப் பண்டிதனைத் தேடி இரவோடிரவாகக் புறப்படுவேன். உலகின் எந்த மூலையில் அவன் ஒளிந்து கொண்டிருந்தாலும் அவனைப் பிடித்து உங்கள் காலடியில் ஒப்படைப்பேன். இந்தப் பணியில் ஒருவேளை நான் தோற்றுவேனாகில் இதே வாளால் எனது சிரத்தை அரிந்து கொற்றவைக்குப் படைக்கிறேனென்று என் வாளின் துணையாக..."

ஓங்கி உயர்ந்த மணியனாரின் வலது கரத்தை மழபாடியார் அப்படியே தாங்கிப் பிடித்தார்.

"சத்தியம் செய்துவிடாதீர்கள்! பின் பிஷுவும் மகாராசரும் இதுவரை பட்டபாடு வீணாகிவிடும் பல மணி நேரம் சிந்தித்துத் தீட்டப்பட்ட திட்டம் வீணாகிவிடும் அதோ! இதுவரை நம்மை மிரட்டிக்கொண்டிருந்த தேரரின் முகம் அஷ்ட கோணல்களையும் அடைந்திருப்பதைப் பாருங்கள்..."

பிஷு ஆனந்த தேரர் ஆச்சரியத்துடன் மழபாடியாரை நோக்கினார். "என்ன சொல்ல வருகிறீர்கள்?"

மழபாடியார் அந்த நிலையிலும் தைரியமாகச் சிரித்தார். "ஆனாலும் இத்தனை தூரத்திற்கு எங்கள் இருவரையும் விளையாட்டு பொம்மைகளாக்கியிருக்க வேண்டாம். இந்தவற்றைச் சொன்னால் என்னுடைய நண்பரால் அதனைத் தாங்கிக் கொள்ளவே முடியாது!"

மழபாடியாரின் சொற்கள் இளையவரைப் பெருங் குழப்பத்தில் ஆழ்த்தின. "பரவாயில்லை. சொல்லுங்கள் ஏற்கனவே மிகவும் மனம் நொந்து போயிருக்கிறேன் மேற்கொண்டு என் மனதைப் புண்படுத்தும் வகையில் எதுவும் கூறிவிட வேண்டாம்."

"எதற்காக நொந்து போக வேண்டும் மணியனாரே? நம்மை அனுப்பி வைத்த காரியம் நல்ல முறையில் நிறைவேறி விட்டது. அதற்காக மகிழ்வதுதானே நியாயம்?"

"நீங்கள் பூடகமாகப் பேசுவதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. சற்றே விளக்கமாகச் சொல்வீர்களா?"

"இந்த விவகாரத்தில் முதலிலிருந்தே எனக்குப் பல சந்தேகங்கள் இருந்தன. அவற்றுக்குத் தெளிவான

விளக்கங்கள் இதுவரை கிடைக்கவேயில்லை. இன்றுதான் மாயை விலகியது. வெளிச்சம் பிறந்தது. மணியனாரே! மனதை திடப்படுத்திக்கொள்ளுங்கள். இந்த பிஷுவும் பேரரசருமாகச் சேர்ந்து நம்மிருவரையும் பகடைக் காய்களாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்..."

"பகடைக்காய்களா? என்ன சொல்கிறீர்கள்?"

"ஆம்! உங்களிடம் கொடுக்கப்பட்ட முறிகள் தவறான நபர்களுக்குத் தவறான செய்திகளுடன் எழுதப்பட்ட பொய்யான ஓலைகள் எதிரிகளின் கைகளில் சிக்கவேண்டும் என்பதற்காகவே எழுதப்பட்ட ஓலைகள். இந்த நாடகத்தை உண்மையென்று நம்பவைக்கத்தான் நீங்களும் நானும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். ஒற்றர்களிடமோ ஓலை தூக்கிகளிடமோ கொடுத்தனுப்ப வேண்டிய ஓலைகளை உங்களிடம் கொடுத்ததும், உங்களைத் தனியாக அனுப்பாமல் கூடவே என்னைச் சேர்த்துவிட்டதும்கூட அந்த நாடகத்தின் ஒரு பகுதிதான். ஒரு குருடன்கூட நாம் சென்ற பாதையை விசாரித்துப் பின்தொடர்ந்து விடலாம். என்ன தேரரே. நான் சொல்வது சரிதானா?"

பிஷுவின் முகத்தில் தெரிந்த உணர்ச்சிகளை அடையாளம் காண்பது சிரமமாக இருந்தது. ஆச்சரியமும் மெல்லிய மகிழ்ச்சியும் அதில் தெரிந்தன. "மேலே சொல்லுங்கள்!" என்றார் அவர் மெல்ல.

"தொண்டியில் நாம் சரியாக அடையாளம் காணப்படவேண்டும் என்பதற்காகவே குறிப்பிட்ட சத்திரத்தில் தங்கவைக்கப்பட்டோம். நாம் இரகசியமாக இராஜாங்க ஓலைகளைச் சுமந்து செல்கிறோம் என்ற செய்தி எதிரிகளுக்கு ஏதோ ஒரு முறையில் தெரிவிக்கப் பட்டது. திட்டமிட்டபடியே எதிரிகள் ஒரு திருட்டு நாடகத்தை நடத்தி நமது ஓலைகளைக் கவர முயன்றார்கள்."

"அப்போது இவர் எதற்காக நம்மைக் காப்பாற்ற வந்தார்? அவர்கள் ஓலைகளை அபகரித்துக்கொண்டு செல்லட்டும் என்று விட்டுவிட வேண்டியதுதானே?"

"நல்ல கேள்வி. இந்த நாடகம் முற்றிலும் நம்பகத் தன்மை வாய்ந்ததாக நடைபெறவேண்டுமெனில் நமது ஓலைகள் எதிரிகளின் கரங்களில் எளிதில் அகப்பட்டுவிடக் கூடாது. அது மிக முக்கியம். ஒன்றைக் கவனித்தீர்களா? பிஷு சொல்லி வைத்தாற்போல் சரியான நேரத்தில் அங்கே

வந்து நம்மைக் காப்பாற்றினாரே தவிர தொடர்ந்து நம்முடன் பயணிக்கவேயில்லை. நம்மை நிலமார்க்கமாக வரச்சொல்லிவிட்டு அவர் நீர்வழியைப் பின்பற்றினார். என்னெனில் எதிரிகளின் கவனம் நம்மீது முழுவதுமாகப் பதிந்திருந்தால் அவரை ஒருவரும் கவனிக்கமாட்டார்கள் இல்லையா? என்னுடைய யூகங்கள் மட்டும் சரியெனில் உண்மையான ஓலைகளைக் கொண்டு செல்வது நாமல்ல. இந்தத் தேரர்தான்!"

"காம்போஜத்துக் கப்பலில் இவர் பிரயாணம் செய்கிறார் என்று கொற்கையில் நமக்கு வழிகாட்டியப் பிஷு கூறியதும் நானும் சிறிது குழம்பிவிட்டேன். சில நாட்களுக்கு முன்னர்தானே இவர் நமது தாய்மண்ணில் கால் பதித்தார்? அதற்குள் பிரயாணமா?...ஆஹா! ஒரு வேளை அவ்வாறு இருக்குமோ?" - வாய்பிளந்து நின்று விட்டார் மணியர்.

"எ..என்ன சொல்கிறீர்கள்? - இப்போது மழபாடியார் சற்றே குழப்பமடைந்தார்.

"இந்தத் திட்டத்தின் சூத்திரதாரி யார் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. நீங்கள் குறிப்பிட்டதைப்போல் பிஷுவோ பேரரசரோ இந்தத் திட்டத்தைத் தீட்டவில்லை. அந்தப் பெருமையை இவர்களுக்குக் கொடுக்காதீர்கள். இதன் சூத்திரதாரி கொற்கைக் கடலில் நங்கூடம் பாய்ச்சி நிற்கும் அந்த மாகலத்தில் இருக்கிறார்!" என்றார் மணியனார்.

32. இனி உங்கள் பணி



காம்போஜத்து பௌத்த பிஷுவான ஆனந்த தேரர் நண்பர்கள் இருவரையும் மாறாத வியப்புடன் நோக்கி நின்றார். அடுத்த கணம் சற்றே உணர்ச்சி வசப்பட்டவராக அப்படியே இருவரையும் இறுக்கப் பிடித்துத் தழுவி ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்.

"நண்பர்களே! நீங்கள் மிகச்சிறந்த வீரர்கள் மட்டுமல்ல. மிகப் பெரிய விவேகிகளும் கூட என்பதை நிரூபித்து விட்டீர்கள். என்னுடையே தேர்வு என்றைக்குமே தவறானதில்லை. சோழ நாட்டின் சிங்கங்களே... உங்களைப் பகடைக்காய்களாகப் பயன் படுத்தும் எண்ணம் எனக்கோ

அருள்மொழிவர்மருக்கோ அணுவளவும் கிடையாது! பரமன் மழபாடியாரே! நாகைக் கடகத்திலிருந்த அத்தனை வீரர்களுக்கு மத்தியில் உங்களைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் வேறு. அது உங்களின் பாட்டனார் குருகாடு செல்லக்கிழார் சம்மந்தப்பட்ட விவகாரம். அதனைப் பிறிதொருநாள் சொல்கிறேன்.

வீரர்களாகிய உங்களிருவருக்கும் அருள்மொழிவர்மரும் நானும் பார்த்து வைத்திருக்கும் பணி வேறு. அது ஒரு மகத்தான பெரும்பணி! அதனைச் செயல்படுத்துவதற்காக உங்களிருவரையும் தென்பாண்டி நாடு வரை அனுப்ப வேண்டியிருந்தது. ஓலைகளை உங்களிடம் கொடுத்தனுப்பும் எண்ணம் எங்கள் இருவருக்குமே கிடையாது. அவ்வாறு நாங்கள் சிந்திக்கவுமில்லை.

ஆனால் நீங்கள் குறிப்பிட்டபடி அந்தக் காம்போஜக் கலத்திலிருக்கும் அரசியல் சூத்திரதாரி சற்றே தந்திரமானவர். எதிரிகள் ஒருகாலத்தில் அவரை நயவஞ்சகமானவர் என்று குறிப்பிட்டதுண்டு. அவரது பின்புலம் அப்படி! அவர்தான் வெறுமனே உங்களிருவரையும் அத்தனை தூரத்திற்கு அனுப்பாமல் அந்தப் பயணத்தையும்கூட எதிரிகளைத் திசைதிருப்பப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற நூதனமான திட்டத்தைக் கூறினார். அது உங்களுக்கும் நமது பிற்காலத் திட்டங்களுக்கும் அனுகூலமானது என்பதால் நாங்களும் ஒப்புக்கொண்டோம்.

ஆக மலைநாட்டுக்கு உண்மையில் செல்லவேண்டிய ஓலைகளை நான் கொற்கை வரை சுமந்து வருவது அதற்குப்பின் உங்களிடம் ஓலைகளை மாற்றிக்கொள்வது என்று திட்டமிட்டோம். அதனால்தான் உங்களையொட்டி நானும் பாண்டிநாட்டிற்கு வரவேண்டும் என்றாகிப் போனது. ஏதோ ஒரு கலத்தில் தெற்கே செல்வதற்கு பதில் அவருடனேயே பயணித்தால் என்ன? என்று தோன்றியது. கலம் தொண்டியை அடையும்போது நீங்களும் தொண்டியில் இருக்க வேண்டும் என்பதால்தான் அவசர அவசரமாக உங்களிருவரையும் நாகையிலிருந்து கிளப்பி வைத்தோம். சோளந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் நமக்கிருந்த தொடர்புகள் மூலம் பாண்டிநாட்டு அரசியல் சக்திகளுக்கு, நீங்கள் ஓலை கொண்டு போகும் விஷயம் தெரிவிக்கப் பட்டது.

நான் எதிர்பார்த்தபடியே தொண்டியில் ஒரு திருட்டு நாடகம் நடைபெற்றது. பாண்டிநாட்டு அரசியல் அதிகாரிகள் இருவர் அடியாட்களை அமர்த்தி உங்களைக் கடத்திச்செல்ல முற்பட்டனர். மாறனாதிச்சன் சத்திரத்திற்கு அருகில் அமைந்திருந்த இலவச இரவு போஜன சாலையொன்றில் மாறுவேடத்தில் நான் அனைத்தையும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தேன். ஓலைகள் மட்டும் பறிபோவதாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் உங்களையே கடத்திக்கொண்டு போய்விட்டார்களானால் காரியம் விபரீதமாகிவிடும் என்பதால்தான் நான் குறுக்கிட்டேன். அவர்களின் ஆட்களை நீங்களிருவரும் அடித்துப்போட்டு விட்டதாக அவர்கள் நினைத்துக் கொண்டனர். பின் நிகழ்ந்தவைகளை நீங்களே கூறி விட்டீர்கள்.

விஷயத்தை முதலிலேயே உங்களிடம் கூறிவிடலாம் என்பதுதான் அருள்மொழிவர்மரின் அபிப்பிராயம். ஆனால் அந்தத் திட்டத்தின் சூத்திரதாரியான அந்த மகானுபாவரோ அதனைத் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். உங்களிடம் அந்த உண்மைகளைக் கூறவேண்டிய அவசியம் கடைசிவரை கூடாது என்பது அவரது எண்ணம். உங்களின் மதி நுட்பத்தை அவர் குறைவாக மதிப்பிட்டுவிட்டார். ஆனால் இங்கு நடந்தவற்றைக் கூறினால் அவரும் என்னைப் போலவே அகமகிழ்வார். எங்கள் இருவரையும்விட அருள்மொழிவர்மர் உச்சி குளிர்ந்து போவார் என்பது சர்வ நிச்சயம்."

"நீங்கள் குறிப்பிடும் அந்த சூத்திரதாரி...."

"நாகை பதரதிட்ட விஹாரையின் மூத்த ஆச்சாரியரான மஹாகாசியப தேரர்!" என்று முடித்தார் கம்பன் மணியனார்.

மழபாடியாருக்கு மேற்கொண்டு பேசத் தோன்றவில்லை. பார்வைக்குப் பரமசாதுவாகத் தெரிந்த அந்தத் துறவிக்கு இப்படியொரு முகமா?

"சம்சார வாழ்க்கையைக் கடந்து சன்னியாசம் மேற்கொண்டுவிட்ட துறவிகளுக்கு அரசியலில் ஏன் இத்தனை ஆர்வம் என்று நீங்கள் யோசிக்கலாம். எங்களைப் போலித் துறவிகள் என்றுகூட நீங்கள் எண்ணக்கூடும். அவ்வாறெல்லாம் நினைக்கவேண்டாம்! புத்தபகவானின் சரணகமலாலயங்களைத் தவிர எங்கள் இருவர் மனதிலும்

வேறொன்றும் இல்லை. ஆனால் எங்கள் இருவ[illegible] பூர்வாசிரமமும் சோழமண்ணுடன் சோழ அரசாங்கத்து[illegible] மிகப் பலமாகச் சம்மந்தப்பட்டிருக்கின்றன. மே[illegible] தமிழகத்தில் இனி பௌத்தம் பிழைக்க வேண்டுமா[illegible] அருள்மொழி தென்னக அரசியல் சதுரங்கத்தில் வெ[illegible] பெற்றேயாக வேண்டுமென்கின்ற நிர்பந்தமும் இருக்கி[illegible] அதனால் அவருக்கு வேண்டிய உதவிகளைப் புரியும் கட[illegible] எங்களுக்கு இருப்பதாக நினைக்கிறோம்.

இதன் பின்னணிகள் அனைத்தையும் உங்களுக்கு வி[illegible] வேண்டிய தருணம் இதுவல்ல. இன்னும் சிறிது நேர[illegible] காம்போஜத்துக் கலம் கிளம்பிவிடும். அதற்குள் [illegible] கலத்திற்குச் சென்று தேரரைச் சந்தித்தாக வேண்டும்..."

"மீண்டும் நீங்கள் காம்போஜத்திற்கா செல்கிறீர்கள்?"

"இல்லை. காசியப தேரர் செல்கிறார். நான் அவரு[illegible] கழிக்குடி வரை மட்டுமே செல்கிறேன்."

"கழிக்குடியா?" என்று அலறினார் மணியர். அ[illegible] ஊரின் பெயர் தேவநாக பண்டிதர் விவகாரம் காரண[illegible] அவருக்குள் ஒரு அருவருப்பை உண்டாக்கியிருந்தது.

"ஆம். நான் மட்டுமல்ல, நீங்களும்கூட என்னு[illegible] கலத்தில் கழிக்குடிவரை வருகிறீர்கள்"

"என்ன, நாங்களுமா?"

"ஆம். உங்களுக்காக நானும் அருள்மொழியும் [illegible] பெரும்பணியைப் பார்த்து வைத்திருப்பதாகக் கூறி[illegible] அல்லவா? அந்தப் பணியை நிறைவேற்றுவத[illegible] நீங்களிருவரும் கழிக்குடிவரை செல்ல வேண்டியிருக்கி[illegible] கிளம்புங்கள் உடனடியாக!"

மூவரும் அங்கிருந்து வெளியேறும் சமயத்தில் ஆ[illegible] தங்கியிருந்த அறையை நண்பர்களுக்கு அடையா[illegible] காட்டிய விஹாரையின் பிக்ஷு அவசர அவசரமாக வ[illegible] சேர்ந்தார். "நல்லவேளை! பிரசாதங்களை மூட்டை[illegible] எடுத்து வந்திருக்கிறேன். நீங்கள் அதற்குள் கி[illegible] விட்டீர்கள் போலிருக்கிறது. உங்களின் பயணம் வெற்றி[illegible] நமது ஆசிகள்!"

சங்கிராம விஹாரையின் நாயகரே பிக்ஷு வடிவ[illegible] வந்து அவர்களை ஆசீர்வதிப்பதாக நண்பர்க[illegible] தோன்றியது.

அந்நாளில் நாகை கீழ்த்திசை நாடுகளுடனான வாணிபத்தில் கொடிகட்டிப் பறந்ததெனில் கொற்கை [illegible]திசை நாடுகளுடனான வாணிபத்தில் செழித்து நின்றது. [illegible]யாக அரேபியா, பாரசீகம், யூததேசம், யவனர் நா[illegible] [illegible]ரேக்கம் முதலான நாடுகளிலிருந்து பல்வேறு வணிகப் பொருட்களுடன் வரும் கலங்கள் மலைநாட்டின் [illegible]ற்கரையை அடைந்து அங்கிருந்து நில மார்க்கமாகவும் [illegible] மார்க்கமாகவும் கொற்கையை அடையும். குறிப்பாக [illegible]ரேபியப் புரவிகளைப் பெருமளவில் இறக்குமதி செய்யும் [illegible]றைமுகமாகக் கொற்கை திகழ்ந்தது.

சங்ககாலம் தொட்டுப் பெருமை பெற்றிருந்த கொற்கையின் முத்து வாணிபமும் நமது கதை நடக்கும் [illegible]லம் வரை நன்றாகவே நடைபெற்றுக்கொண்டிருந்தது[128] [illegible]றிப்பாகப் பாண்டிய கவாடம் எனும் விகுதிப்பெயருடன் [illegible]றிப்பிடப்பட்ட பெருமுத்துக்கள் கொற்கைக் கடலில் [illegible]மளவு கிடைத்தன. மேற்திசை நாட்டு [illegible]கர்களிடையே இவ்வகை முத்துக்களுக்குப் பலத்த [illegible]வேற்பு இருந்தது. பாண்டிய இராஜாங்கம் சில காலமாக [illegible]டங்கண்டு போயிருந்ததால் தென்பாண்டி நாட்டு [illegible]கர்கள் உற்சாகம் குறைந்திருந்தாலும் முத்து [illegible]பாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டுதான் [illegible]ந்தனர். பாண்டியரோ, சோழரோ நிலையான வலு[illegible] [illegible] ஏற்பட்டால் போதும் என்பதுதான் அவர்களின் [illegible]ப்பு.

சங்கிராம விஹாரை கடற்கரைக்கு மிக அருகில் [illegible]றைமுகப் பெருவீதியில் அமைந்திருந்ததால் வெகு [illegible]வில் நமது நண்பர்கள் மூவரும் கடற்கரையை அடைந்து விட்டார்கள். கடலில் தென்பட்ட சிறு [illegible] கொன்று அவர்களை காம்போஜக் கலத்திற்கருகில் [illegible]ண்டு சேர்த்தது. 'காம்போஜத்துக் கலம்' என்றதும் [illegible]வில் பெரியதாக இருக்கும் என்று நினைத்த [illegible]யனாருக்கு ஏமாற்றம்! அது மிக மிகச் சாதா[illegible] [illegible]கவே அது தோற்றமளித்தது. மிஞ்சிப்போனால் [illegible]து நாற்பது பேர் அதில் பயணிக்கலாம்

---

[128] [illegible]குப் பின்வந்த பல நூற்றாண்டுகளிலும்கூட கொற்கை முதது [illegible]ம நலநிலையில் இயங்கியது மாக்கோ போலோவின [illegible]குகளால் தெரியவருகிறது.

"இந்தக் கலமா காம்போஜத்திற்குச் செல்கிறது?" என்று வாய்விட்டுக் கேட்டுவிட்டார் அவர்.

"இல்லை. இது காம்போஜத்திற்குச் செல்லும் கலமில்லை. அந்தக் கலம் பிரம்மாண்டமானது. அளவிற் சிறந்த அந்த மாகலத்தைக் கொற்கை வரை செலுத்திக் கொண்டு வரமுடியாது. ஏனெனில் இராமேஸ்வரத்திற்கு அருகில் கடலில் அமைந்திருக்கும் இராமபிரான் பாலம் குறுக்கிட்டுவிடும். அதனால் அந்த மாகலத்தை நாகையிலிருந்து நேராக இலங்கைக்குச் செலுத்திக் கொண்டுபோய் விடுவார்கள்.

இலங்கையில் அந்தக் கலம் சில நாட்கள் காத்திருக்கும். அந்த இடைவெளியில் சிறு கலங்கள் பல கொற்கைக்கும் கழிக்குடிக்கும் தொண்டிக்கும் சென்று பயணிகளை ஏற்றிக் கொண்டு இலங்கைக்குக் கொண்டு சென்று சேர்த்துவிடும். ஆச்சாரியார் முதலில் அந்த மாகலத்தில் பயணித்து நேராக இலங்கை சென்று தம்மசோக விஹாரையில்[129] தங்குவதாகத்தான் ஏற்பாடு. பின்னர் நான் வருகிறேன் என்றதும் இந்தக் கலத்தில் பயணப்பட ஒப்புக்கொண்டார்."

மழபாடியாரின் மனம் அவர்களது பேச்சில் இலயிக்கவில்லை. இன்னமும் விடை காணமுடியாத ஒரு கேள்வி அவரது மனதில் மிச்சமிருந்தது. தேவநாக பண்டிதரின் பெயரைச் சொன்னதும் பிஷுவின் திருவாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் அவரை இன்னமும் சங்கடப்படுத்திக்கொண்டிருந்தன.

"யாரிடம் ஒரு போதும் நமது இரகசிய ஓலைகள் அகப்படக் கூடாதோ அவரிடமே ஓலைகளை ஒப்படைத்திருக்கிறீர்கள் நண்பர்களே..."

பண்டிதரை முன்பே பிஷுவிற்குத் தெரியுமா? அதற்கான சாத்தியக்கூறு மிகவும் குறைவாயிற்றே? பின் எப்படி பண்டிதரின் பெயரைக் குறிப்பிட்டவுடனேயே அவரால் இவ்வாறு மொழிய முடிந்தது? அவரிடமே கேட்டு விடலாமா? இல்லை. இதனை நாமே கண்டறிய வேண்டும். குருகாடியூர்ப் பரமன் மழபாடியை இனி இவர்கள்

[129] தர்ம அசோகர் விஹாரை என்பது தம்மசோக விஹாரையாக மருவிற்று. இப்பெயரில பல விஹாரைகள் இலங்கையில அமைந்திருந்தன.

ஒருபோதும் குறைவாக மதிப்பிட்டுவிடக்கூடாது. தேவ..நாக.. பண்டிதர்.... தேவநாக... பண்டிதர்...... யாரைய்யா நீர்? எங்களை அத்தனை தூரம் நம்பவைத்து ஏமாற்றினீர்? மீண்டும் கழிக்குடியில் உம்மைச் சந்திப்போமா?

கலத்தை நெருங்கியவுடன் அதிலிருந்து கீழிறக்கப்பட்ட கயிற்று ஏணியில் ஏறி மூவரும் தளத்தை அடைந்தனர். இந்தக் கலத்தில்தானே நம்மை முட்டாளாக்கிய அந்தக் கெடுகெட்ட ஆச்சாரியார் இருக்கிறார்? அவரைப் பிடித்து அப்படியே கழுத்தை இறுக்கி நெறித்துப்போட்டு விடுவோமா? என்று ஒரு வெறி கணநேரம் இளையவருக்கு உண்டானது.

சீ! எத்தனை பாபகரமான எண்ணம்? என்று மனதை அதட்டிப் பணியவைக்க முயன்றார் அவர்.

33. காந்தளூர்க் களரி



அந்த நீண்ட கூர்மையான வாட்களிரண்டும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டிருந்தன. கண நேரம் அசந்தாலும் ஒன்று மற்றதைத் தாக்கி வீழ்த்தி விடக்கூடும். ஆனால் அதற்கு இடங் கொடாமல் வாட்களைப் பிடித்திருந்த கரங்கள் எச்சரிக்கையோடு மோதலை எதிர்பார்த்துக் காத்திருந்தன. முதல் தாக்குதலை யார் நிகழ்த்தப்போவது எனும் எதிர்பார்ப்பு காற்றில் இருந்தது.

ஒரு வாள் காந்தளூர்ச் சாலையின் மூத்த ஆச்சாரியாரான [illegible]நாராயண பட்டதிரியின் இடது கரத்தில் திகழ்ந்தது. அவருடைய வலது கரம் பெரியதொரு மரக் கேடயத்தைப் பிடித்திருந்தது. வாள் பிடித்த கரத்தை சற்றே முன் நீட்டி, கேடயம் தாங்கி நிற்கும் கரத்தை பின்வைத்து இடது காலை உறுதியுடன் பூமியில் முன் ஊன்றி நிற்கும் அவரது அஸ்வ வடிவு[130] நிலையை கூடிநின்ற மாணவர்கள் வியப்புடனும் மரியாதையுடனும் நோக்கி நின்றார்கள். இச்சிறுவர்களை

[130] களரி உலகில் நிற்கும் நிலை வடிவு என்னும் சொல்லால் குறிப்பிடப்படும். கஜ வடிவு, ஸிம்ஹ வடிவு, சர்ப்ப வடிவு என்று பல வடிவுகள் உண்டு.

நாம் சில காலத்திற்கு முன் காந்தளூர் மகாதேவர் திருக்கோயில் மைதானத்தில் சந்தித்தது நினைவிற்கு வருகிறது.

பட்டதிரிக்கு எதிரே தைரியமாக வாள்பிடித்து நிற்கும் மனிதரை நாம் முதல் முறையாகச் சந்திக்கிறோம். இவர் இளைஞர். சிவந்த மேனியர். பிராயம் முப்பதிலிருந்து நாற்பதுக்குள் இருக்கலாம். அவரது நீண்ட சிகை நன்றாக இறுக்கிப் பின்புறம் மடிக்கப்பட்டிருக்க, நெற்றியில் திருநீற்றுப் பட்டையும் சந்தனப்பொட்டும் துலங்கின. முகத்தில் அடர்த்தியான தாடி, மீசை. சிவந்து நிற்கும் கண்கள். கழுத்தில் பெரியதொரு ருத்திராட்ச மணி. மார்பின் குறுக்கே முப்புரிநூல். உறுதியாக இடையில் இறுக்கப்பட்டு, பின்புறம் மடித்துக் கட்டப்பட்ட வெண்ணிற ஆடை அனைத்தும் சேர்ந்து அவருடைய தோற்றத்தின் கம்பீரத்தைப் பன்மடங்கு உயர்த்திக் காட்டின. முக ஜாடை ஏறக்குறைய பட்டதிரியை ஒட்டியிருந்தாலும் அவரிலும் இளமையாகத் துலங்கும் இந்த வீரர் யாராயிருக்கக் கூடும் எனும் வியப்பு மேலிடுகிறது.

இந்த இரண்டு பெருமக்களும் நிற்கும் இடமானது சற்று வித்தியாசமான முறையில் வடிவமைக்கப்பட்டிருப்பதையும் காண்கிறோம். பூமியின் மட்டத்திலிருந்து ஏறக்குறைய நான்கு அடி ஆழத்திற்குப் பெரிய பள்ளம் தோண்டப் பட்டிருக்க, அந்தப் பள்ளத்தின் மத்தியப் பகுதியில்தான் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். இதனைப் பள்ளம் என்று சொல்வதை விட நீள்சதுரப் பெருங்குழி என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். ஏனெனில் குழியின் நீள அகலங்கள் ஏறக்குறைய நாற்பத்தியிரண்டு அடி மற்றும் இருபத்தியொரு அடியைத் தொட்டுவிடும். நீண்டிருந்த குழியின் நாற்புறங்களிலும் பூமியின் மட்டத்திற்கு மேல் நான்கு அடி உயரத்திற்கு மண்சுவர். சுவருக்கு மேல் மூங்கில் கழிகளால் அமைக்கப்பட்டிருந்த குறுக்குச்சட்டங்கள் எழும்ப, உயரே தென்பட்ட மர உத்தரங்களுக்கு மேல் தென்னை ஓலைகளால் வனையப்பட்டிருந்த கூரை.

குழியின் தென் மேற்கே ஈசான மூலையில் பெரிய மேடை. அதில் பல அடுக்குகள் தென்பட்டன. அந்த அடுக்குகள் ஒவ்வொன்றும் மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருக்க, அதன் பக்கமாக ஒரு சில ஆயுதங்களும் சார்த்தி வைக்கப்பட்டிருந்தன. இந்த இடத்தின் வித்தியாசமான அமைப்பை நம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லையே!

ஒரு வேளை... இதுதான் காந்தளூர்ச் சாலையின் மிகப் புனிதமான இடமாகக் கருதப்படும் குழிக்களரியாக[141] இருக்குமோ?

மேற்கொண்டு இந்த இடத்தைப் பற்றி யோசிப்பதை நிறுத்திக்கொள்வோம். ஏனெனில் இந்தச் சிறிய இடை வெளியில் காத்திருந்து காத்திருந்து பொறுமையிழந்து விட்ட அந்த இளைஞர், தன்னுடைய பிடிவாளால் பட்டதிரியைத் தாக்கத் துவங்கிவிட்டார். காற்றில் பளீர் பளீரென்று நெருப்புப் பொறிகள் கிளம்பின. களார்! களார்! பளார்! பளாரென்று என்று இரண்டு வாட்களும் ஆக்ரோஷமாக மோதிக்கொள்ளும் சப்தம் அந்தப் பிராந்தியத்தையே ஒரு உலுக்கு உலுக்கியது

இளைஞர் ஆவேசமாகத் தாக்கினாலும் அந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சாமல் தாக்குதலை எதிர் கொண்டார் பட்டதிரி. ஒவ்வொரு முறையும் இளைஞர் தன்னுடைய சக்தியையெல்லாம் பிரயோகித்து பட்டதிரியின் வாளைக் காற்றில் பறக்கவைக்க முயல்வதும் பட்டதிரி அவரது சக்தியை ஏதோ ஒரு வகையில் திசைதிருப்பி விரயமாக்குவதுமாகவே கழிந்தது. இளைஞரும் அதனை நன்றாக உணர்ந்தவராகவே காணப்பட்டார். என்றாலும் தொடர்ந்து பட்டதிரியின் வாளை வீழ்த்தும் முயற்சியை அவர் கைவிடவில்லை. இந்த முறை இல்லையென்றால் அடுத்த முறை எனும் மனவுறுதி அவரது முகத்தில் தெரிந்தது.

தாக்குதல் மிகக் கடுமையாகிக் கொண்டிருந்தது ஒரு கட்டத்தில் இருவரும் பூமியிலிருந்து ஹூங்காரத்துடன் வானில் எழும்பிச் சென்று அந்தரத்தில் மோதிக் கொண்டார்கள்! சில சமயங்களில் இளைஞர் மட்டும் வானில் பறந்து தாக்க, பட்டதிரி பூமியில் கால்களை அரை மண்டி நிலையில் மடக்கி வட்டச் சுவடடித்தபடியே[142] அவரை எதிர்கொண்டார். அத்தனை தாக்குதல்களிலும் இளைஞர் வாளை அதிகம் உபயோகப்படுத்தினாரென்றால் பட்டதிரி கேடயத்தையே அதிகம் நம்பியிருந்தார்.

---

[141] கேரளத்தின் குழிக்களரிகள் அன்றிலிருந்து இன்றுவரை இதே முறையிலதான் வடிவமைக்கப்படுகினறன.

[142] கால வைககும நிலை களரி பரிபாஷையில் சுவடு எனபபடும.

எத்தனையோ உக்கிரத்துடன் பலப்பல வழிகளில் முயன்றும் இளைஞரால் பட்டதிரியின் வாளை வீழ்த்த முடியவில்லை.

நேரம் செல்லச் செல்ல இளைஞரின் கரங்களில் ஆவேசம் குறைந்தாற்போல் காணப்பட்டது. எத்தனை ஆற்றல் மிக்கவராக இருந்தாலும் ஒரு கட்டத்தில் சக்தி முழுவதும் செலவழிந்துபோய் கரங்கள் பலவீனப்படும் நிலை ஏற்படுமல்லவா? அந்த நிலைதான் அவருக்கு ஏற்பட்டது. அவருடைய கணநேர பலவீனத்தையும் மனத்தளர்ச்சியையும் எப்படியோ கண்டறிந்து விட்ட ஆச்சாரியர், இதற்காகவே காத்திருந்ததுபோல் தன்னுடைய வாளை சரேலென்று ஒருவரும் எதிர்பாராத கணத்தில் குறிப்பிட்ட விசையோடு பாய்ச்சினார்.

இளைஞர் அவருடைய தாக்குதல் இன்னதென்று சுதாரித்துக் கொண்டு தன்னைத் தற்காத்துக்கொள்ள முயலும் முன் பிரயோகிக்கப்பட்ட சக்தி முழுவதும் இளைஞரின் வாளில் பாய்ந்து அது உக்கிரமானதொரு சப்தத்துடன் இரண்டாகப் பிளந்து வீழ்ந்தது! அது மட்டுமல்ல. பட்டதிரியின் வாள் நுனி அவரது மார்பிலும் மெல்லிய கீறலை ஏற்படுத்திவிட்டது.

கூடிநின்ற சிறுவர்கள் இயல்பாகக் கைதட்டத் துவங்கினார்கள் ஆனால் அடுத்த கணமே ஆச்சாரியாரின் கண்களிலிருந்து பொங்கிய கனலைக் கண்டு அதனை பயத்துடன் நிறுத்திக் கொண்டார்கள்.

இளைஞர் வாளின் பிடியைத் தூர வீசிவிட்டு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கத் தோல்வியில் கண்மூடி மண்டியிட்டு நின்றார். அவருடைய தலை துவண்டு குனிந்தது.

“வாமனா! அற்புதமாகப் போரிட்டாய். வருத்தப்பட வேண்டிய அவசியமே இல்லை. அந்த வாள் உன் கால்களை வாரிவிட்டு விட்டது. அதற்கு நீ என்ன செய்வாய்?” பட்டதிரி அந்த இளைஞரை எழுப்பி அவரின் தோள்களில் வாஞ்சையுடன் கை பதித்தார்.

“நான் மிகவும் நேசித்த வாள் அண்ணா அது. சிறுவயது முதல் அதனைப் பேணி வந்திருக்கிறேன். அது உங்களின் தாக்குதலைத் தாங்கமுடியாமல் பிளந்துவிட்டதே என்பது தான் மனதிற்கு வருத்தமாக இருக்கிறது.”

“தம்பி! இன்றைக்கு நான் பிரயோகித்த வீச்சு சற்று விசேஷமானது. ‘நரசிம்ஹப் பிரயோகம்’ என்று இதற்குப் பெயர். நானே இதனைப் பலகாலமாக உபயோகித்ததில்லை.

வாளின் ஜீவசக்தி மற்றும் மனதின் பிராணசக்தி - இந்த இரண்டையுமே சரிவிகிதத்தில் உபயோகித்து மிக நுட்பமாக எச்சரிக்கையுடன் பிரயோகிக்க வேண்டிய வீச்சு இது. சற்று பிசகினாலும் ஏவிவிட்டவனையே பதம் பார்த்துவிடும். அதன் வலிமை உனக்குப் புரியவேண்டும் என்பதற்காகவே இப்போது உத்தம கதியில் மெலிதாகப் பிரயோகித்துக் காட்டினேன். மற்றபடி பிராணாபாயம் நேரும் காலங்களில் மட்டுமே இதனைப் பயன்படுத்த வேண்டும் என்பது கண்டிப்பான விதி.

நான் சாலையில் படிக்கும் காலத்தே ஏறக்குறைய இருநூறு பேர் நான்கு கலங்களாக[133] எங்கள் ஆச்சாரியாரிடம் பயின்றோம். அப்போது நான் தைத்திரிய சரணத்தாரின்[134] தலைவனாக இருந்தேன். அந்த இருநூறு பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கே மாணவர்களுக்குத் தான் அவர் இதனைச் சொல்லிக் கொடுத்தார். மாணாக்கர் [illegible]ங்கையில் அவர் இந்தப் பிரயோகத்தைச் சொல்லிக் கொடுத்துவிட்டு எங்கள் நால்வரையும் எச்சரித்தது மறக்க முடியாமல் மனதில் பதிந்திருக்கிறது.

‘நாராயணா! இது மிக மிக நுட்பமானதொரு பிரயோகம். தகுந்தவர்களுக்கு மட்டும்தான் இதனைச் சொல்லிக் கொடுக்கவேண்டும். இல்லையேல் பெரும்பாவம் வந்து சேரும். எச்சரிக்கையோடு இரு!’

நான் என்னுடைய ஆயுட்காலத்தில் ஒரே ஒரு முறைதான் இதனை முழுவீச்சில் பிரயோகித்திருக்கிறேன். அதுவே பெருவினையாக முடிந்தது. நரசிம்ஹப் பிரயோகத்தின் விசேஷம் என்னவென்றால்....”

குழியின் கிழக்கு திசையில் அமைந்திருந்த குடிசை வாயிலில் நிழலாட பட்டதிரியின் பேச்சு தடைபட்டது.

ஆச்சாரியாருக்கும் நம்பூதிரிக்கும் வணக்கங்கள். தங்களுக்கு மன்னிக்க வேண்டும். பார்த்திவசேகர புரத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது. தமையனாருக்கு மீண்டும் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டதாம்.

---

[133] கலங்கள் – பிரிவுகள்.

[134] தைத்திரிய சரணத்தார் என்பது கலங்களில் ஒரு பிரிவு. பாரக [illegible]ராசா கோக்கருந்தடக்கரின் பார்வதிசேகரபுரச் செப்பேடு.


தங்களையும் தம்பிமார்களையும் உடனடியாக அழைத்துவர வேண்டுமாம்!"

பட்டதிரியின் முகம் எல்லையில்லாத மனவேதனையை ஒரு கணம் வெளிப்படுத்தியது. அடுத்த கணமே சமாளித்துக் கொண்டவராய் "வாமனா! அச்சுதனையும் உடன் கூட்டிக் கொண்டு விரைவாகக் கிழக்கு வாயிலுக்கு வந்து சேர். சட்டர்களே! இன்றைய பயிற்சி முடிந்தது. அனைவரும் களரியை விட்டு அமைதியாக நீங்கி விடுதிக்குச் செல்லுங்கள். நாளை மீண்டும் சந்திப்போம்..." என்று உத்தரவிட்டுவிட்டு விறுவிறுவென்று அந்த இடத்தை விட்டு வெளியேறினார்.

வாமனன் என்று ஆச்சாரியாரால் ஒருமையில் அழைக்கப்பட்ட வாமனன் நம்பூதிரி என்ற அந்த இளைஞர் தன்னுடைய உடைந்த வாளையும் அண்ணனின் வாளையும் மிகுந்த மரியாதையுடன் களரியின் ஒரு ஓரத்தில் வைத்துவிட்டுக் கலைந்து செல்லும்படி சிறுவர்களுக்குச் சைகை காண்பித்தார். அவர்கள் தத்தம் கலத்து மாணவர்களுடன் ஒரு வரிசையை ஏற்படுத்திக்கொண்டு மெல்ல வெளியேறினார்கள்.

அனைவரும் வெளியேறியபின் அவர் ஒரு பெருமூச்சுடன் களரியை விட்டு வெளியே வந்து நின்று ஒரு கணம் சுற்றுவட்டாரத்தை நோக்கினார் அவரது விழிகளின் வழியே நாமும் அந்த சுற்றுப்புறங்களை நோக்கி நிற்கிறோம். இதுதான் காந்தளூர்ச் சாலை என்று தென்னாடு முழுவதும் அறியப்பட்டிருக்கும் புகழ்பெற்ற கல்வி கேந்திரமா என்ன?

அந்தக் குடிசைக்கு வெளியே விரிந்து பரந்திருந்த பெரிய மைதானத்தில் பல்வேறு பிராயத்திலிருந்த இளைஞர்கள் வரிசை வரிசையாகப் பல்வேறு உடற்பயிற்சி முறைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். நாகைக்கடகத்தில் நாம் கண்ட குழுப்பயிற்சிக் காட்சிகளுக்கும் இங்கே நாம் காணும் காட்சிகளுக்கும் மிகப்பெரிய வித்தியாசங்கள் தென்படுகின்றன. கடகத்தில் வீரர் குழுக்கள் தனித்தனியே மல்யுத்தம், சிலம்பம், வாள்சண்டை முதலான பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தார்களென்றால் இங்கோ இளைஞர்கள் நான்கே பிரிவுகளாகத்தான் பிரிந்து நின்றார்கள்.



காந்தளூர்ச் சாலை வளாகம்

கடகப் பயிற்சிகளில் ஆயுதங்களின் பயன்பாடு அதிகமாக இருந்தது. ஆனால் இங்கோ ஆயுதங்களை அதிகமாகப் பயன்படுத்தாமல் கைகளையும் கால்களையும் பல்வேறு நிலைகளில் உயர்த்தியும் மடக்கியும்தான் பயிற்சி நடைபெறுகிறது[135].

மைதானத்திற்கு வடக்கிலும் தெற்கிலுமாய் நீண்ட குடியிருப்புப் பகுதிகள் தெரிந்தன. அவை பெரும்பாலும் மண் கட்டிடங்களாக விளங்காமல் கேரளத்திற்கே உரித்தான மரக் கட்டுமானங்களாகவே திகழ்ந்தன. மைதானத்திற்குக் கிழக்கே நீண்டிருக்கும் மதிலுக்கு மத்தியில் சாலையின் முக்கிய வாயில் அமைந்திருக்க, அந்த வாயிலுக்கு மேல் மலைநாட்டுப் பாணியில் ஒரு நிலை கோபுரம் எழுந்தது.

மைதானத்தின் தென் மேற்கு மூலையில் அமைந்திருந்த களரியின் வாயிலில் நின்றுகொண்டு இக்காட்சிகளைக் கண்ணாரக் கண்ட வாமனரின் பார்வை அவர் நின்ற திசைக்கு நேர் எதிரே வடகிழக்கு மூலையில் நிலைத்தது. அங்கே மத்தியப் பிராயத்திலிருந்த இளைஞரொருவர் மாணவர் குழுவிற்குப் பயிற்சியளித்துக் கொண்டிருந்தார். ஆச்சாரியார் குறிப்பிட்ட அச்சுதன் ஒருவேளை இவராகவே இருக்கக்கூடும்.

வாமனர் நேராக அவரை நோக்கி நடக்கத் துவங்கினார். அவர் மைதானத்தைக் கடக்கும்போது பயிற்சியில் ஈடுபட்டிருந்த பல இளைஞர்களும் மரியாதையுடன் தலை வணங்குவதிலிருந்து வாமனருக்கு சாலையில் செல்வாக்கு மிகுந்திருப்பது புலனாகின்றது. பயிற்சியில் ஈடுபட்டிருந்த அந்த இளைஞரை நெருங்கி வாமனர் ஏதோ புகன்றார். அவர் மாணவர்களுக்குச் சில உத்தரவுகள் பிறப்பித்துவிட்டு அவசர அவசரமாகக் கிளம்பினார்.

சிறிது நேரத்தில் மூன்று புரவிகள் சாலையிலிருந்து கிளம்பித் தெற்கே வேகமாகப் பயணிக்கத் துவங்கின.

---

[135] மலைநாடடுக் களரிப பயிற்சி முறையை வடக்கன் முறை, தெறகன முறை எனறு இருபெரும பிரிவுகளாகப பிரிககிறாாகள. வடககன முறையில ஆயுதப பயன்பாடு அதிகம. ஆனால தெறகே அது கிடையாது. தெறகன முறை மலைநாடடின தெனபகுதிகளில – குறிப்பாக வேணாடு, அனநதபுரம, வளளுவநாடு, நாஞசில நாடு முதலான பகுதிகளில அதிகம பயிறறுவிககபபடடது.

34. மரணப்படுக்கை



பார்த்திவசேகரபுரத்தின் விஷ்ணு பட்டாரகர்[136] திருக்கோயிலையொட்டி அமைந்திருந்த பெருமதிற்சுவரின் வட மேற்கு மூலையில் சற்று உள்தள்ளி அமைந்திருந்தது அந்தப் பெரிய வீடு. வீட்டின் வாயிலில் முல்லை, மல்லி, சண்பகம், மருதோன்றி, பாரிஜாதம் என்று பல்வேறு வகையான பூச்செடி கொடிகள் பூத்துக் குலுங்கின. வீட்டின் வாயிலில் பல மனிதர்கள் கூடி நின்றார்கள். அவர்களில் பலரும் தாடி மற்றும் விரிசடையுடன் கூடிய அந்தண இளைஞர்களாகவே இருந்தார்கள். அவர்களின் முகபாவங்கள் கவலை, மனக்கிலேசம், துக்கம் என்று பல்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்திக்கொண்டிருந்தன.

மெல்லிய குரலில் சிலர் தமக்கருகில் நின்றுகொண்டிருந்தவர்களுடன் பேசத் தலைப்பட்டார்கள். மிகுந்த முனைப்புடன் காதுகளைத் தீட்டிக்கொண்டு கேட்டால் அவர்களின் உரையாடல்கள் கீழ்க்கண்டவாறு அமைந்திருப்பதை அறியலாம்.

"நேற்று மாலையிலிருந்து இழுத்துக் கொண்டிருக்கிறதாம். ஆசானுக்கு ஆனாலும் சம்சார பந்தம் மிக அதிகம்..."

"மனதில் ஏதோ ஒரு பாரம் கிடந்து அழுத்திக் கொண்டிருக்கிறது என்கிறார்கள். பட்டதிரியும் தம்பிகளும் வந்தால்தான் மேற்கொண்டு விபரங்கள் தெரியும்."

"அனந்தபுரத்திற்கு ஆள் அனுப்பியாகிவிட்டதல்லவா?"

"விடியற்காலையிலேயே தகவல் அனுப்பப்பட்டு விட்டது அவர்கள் எந்த நேரமும் வந்து சேரலாம். அதோ! சாலைக்கோடியில் மெல்லிய புழுதிப்படலம் எழுகிறதே!

---

[136] ...மாலை விஷணு பட்டாரகா எனறே பல கலவெடடுககள ...கினறன.

புரவிகளின் கனைப்புக்கூட கேட்கிறது? அநேகமாக அது பட்டதிரியாகவே இருக்கக்கூடும்!"

வேகவேகமாக விரட்டிக்கொண்டு வரப்பட்ட புரவிகள், அந்த வீட்டின் முன் சரேலென்று நிறுத்தப்பட்டன. புரவிகளிலிருந்து திருநாராயண பட்டதிரியும் வாமனனும் மற்றும் அச்சுதன் நம்பூதிரியும் இறங்கி நேராகக் கிணற்றடிக்குச் சென்று கை கால்களை சுத்தம் செய்து கொண்டு விறுவிறுவென்று வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

வீட்டின் மத்தியப் பகுதியில் அமைந்திருந்த முற்றத்தின் நடுவே துளசி மாடத்திற்கருகில் ஒரு கட்டிலில் அந்த வயதான முதியவர் கிடத்தப்பட்டிருந்தார். அவரைச் சுற்றிலும் அவரது குடும்பத்தாரும் சில விரிசடை இளைஞர்களும் சற்று தூரத்தே தலைப்பாகை கட்டி வைத்தியரைப்போல் தெரிந்த ஒருவரும் கூடி நின்றார்கள். அனைவரது முகத்திலும் சொல்லவொண்ணாக் கவலை எழுதி ஒட்டியிருந்தது.

கிழவரின் முகத்தில் எழுபது சொச்ச வருட வாழ்க்கையின் உழவுகள் அனுபவ இரேகைகளாய்க் கோடுகளாய். நிரந்தரமாகப் படிந்துவிட்டிருந்தன. கண்கள் மிகவும் பஞ்சடைத்துப்போய் அரைகுறை மயக்கத்தில் தெரிந்தாலும் வாய் மட்டும் தொடர்ந்து ஏதோ வார்த்தைகளை முணுமுணுத்துக் கொண்டிருந்தது. கரங்களில் மெல்லிய நடுக்கம். அவருடைய தலைமாட்டில் அருகே மனைவியைப்போல் காணப்பட்ட வயதான பெண்மணியொருவர் ஒரு கிண்டியில் மருந்துகளுடன் கூடிய பசும்பாலை ஏந்தி நின்றார். கிழவரின் வாய் சற்று அகலத்திறந்தால் அந்தப் மருந்தைப் புகட்டிவிடலாம் என்பது அவரது எண்ணம் போலும்.

அதிகம் சப்தம் செய்யாமல் முற்றத்தினுள் நுழைந்த பட்டதிரி, கட்டிலை நெருங்கி அந்தப் பெண்மணியிடமிருந்து பால்கிண்டியை வாங்கிக் கொண்டார். கட்டிலுக்கருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து தன்னுடைய அன்புத் தமையனாரின் முகத்தை நோக்கினார் தாமும் தமையனுமாகக் கடந்து வந்த பல நீண்ட பாதையின் ஞாபகங்கள் அவருடைய மனதில் அலை அலையாய்ப் பிரிப்பிரியாய்ப் பொங்கியெழுந்தன. கண்கள் கரகரவென்று இயல்பாக நீர் வடிந்தது

நினைவு தெரிந்த நாள் முதல் தன்னுடைய வாழ்க்கையின் எல்லா முயற்சிகளுக்கும் வெற்றிகளுக்கும் தோல்விகளுக்கும் ஆசாபாசங்களுக்கும் இன்பங்களுக்கும் துன்பங்களுக்கும் மௌன சாட்சியாய், மனசாட்சியாய் நின்ற ஒரே ஜீவன் இவர்தான்! என்னும் எண்ணம் அவரது இதயப் பாளங்களை ஊடுருவிப் பாய்ந்தது. அண்ணா! அண்ணா! என்று மனம் அரற்றியது. கண்களைத் துடைத்துக் கொண்டு அந்த வயதான முகத்தை மெல்ல வருடிவிட்டார் பட்டதிரி.

அந்த ஸ்பரிசம் கிழவரின் உடலில் ஏதோ மின்சாரத்தைப் பாய்ச்சியதுபோல் தெரிந்தது. அவரது கண்கள் மெல்ல மலர்ந்தன.

"யா...யாரது? நா...ரா...யணனா? வந்துவிட்டானா...? த...ம்...பி..." கிழவரின் குழறிய வார்த்தைகளைப் புரிந்து கொள்வது சற்று சிரமம்தான்.

"ஆமாம் அண்ணா. நான்தான் வந்திருக்கிறேன். வாமனனும் அச்சுதனும்கூட வந்திருக்கிறார்கள்..."

"நா...ராயணா! அவள் உன் மீது மிகவும் கோபமாக இருக்கிறாளடா! அவளது உக்கிரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதடா... அந்த வெப்பம்...!!!"

"கொல்"லென்று இருமலொன்று அடிவயிற்றிலிருந்து கிளம்பி அவருடைய பேச்சைத் தடை செய்தது. பட்டதிரி அவசர அவசரமாகப் பாலைப் புகட்ட முயன்றார்.

"வேண்டாம். இந்தப் பச்சிலை அரைக்கப்பட்ட பாலைக் குடித்துக் குடித்து அலுத்துவிட்டது. கொஞ்சம் தண்ணீர் போதும்..."

தண்ணீர் கொண்டு வரப்பட்டு புகட்டப்பட கிழவரின் கண்களில் சற்று தெளிவு பிறந்தது.

"நாராயணா! அவள் நம் குலத்தை வேரோடு அழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பாள் போலிருக்கிறது"

"இதெல்லாம் தெரிந்த விஷயம்தானே அண்ணா! எதற்காக இந்த முடியாத நேரத்தில் அவளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?"

"காரணம் இருக்கிறதடா. காரணம் இருக்கிறது! மற்றவர்கள் எல்லோரையும் சற்று வெளியே சென்று நிற்கச் சொல். உன்னிடம் தனிமையில் பேசவேண்டும்."

பட்டதிரி வாமனரிடம் விஷயத்தைச் சொல்ல, அவர் அனைவரையும் முற்றத்தை விட்டு வெளியேற்றிவிட்டு இறுதியில் தாமும் வெளியேறினார். என்னதான் உடன் பிறந்தவனாக இருந்தாலும் வயது வித்தியாசம் அதிகம் என்பதால் மூத்தவருடன் அவருக்கோ அச்சுதனுக்கோ அத்தனை பிடிமானம் கிடையாது. ஒரு பெரிய தந்தையின் ஸ்தானத்தில்தான் இருவரும் அவரை வைத்திருந்தார்கள். தம்பியரையும் அண்ணனையும் இணைக்கும் பாலமாகத் திகழ்ந்தவர் பட்டதிரி ஒருவர் மட்டுமே. அந்திம நேரத்திலும் அவர்களிருவருக்குமிடையில் தாம் நிற்பதைக்கூட மூத்தவர் விரும்பவில்லை என்பதுபோல் தெரிந்தது. வெளியேறும் போது சற்று வருத்தமாகக்கூட இருந்தது

"எல்லோரும் கிளம்பிவிட்டார்களண்ணா..." என்றார் பட்டதிரி.

"சாலை குருக்களும் ஆசான்களும் மரணப்படுக்கையில் தனக்கு மிக அணுக்கமானவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கென்று ஒரு இரகசியம் அல்லது ஒரு சூத்திரம் எப்போதும் மிச்சம் வைத்திருப்பார்கள்.[137] என் கதையும் அதைப்போலவே ஆகி விட்டது." - கிழவரின் முகத்தில் மெல்லி முறுவல் பூத்தது

"என்ன சொல்கிறீர்களண்ணா? என்னிடம் நீங்கள் பகிர்ந்து கொள்ளாத விஷயம்கூட இருக்கிறதா என்ன?"

"ஹாஹ்-ஹ்...!" - என்று ஒரு மாதிரியான விரக்தி குரலில் சிரித்தார் கிழவர். "பைத்தியக்காரா! நீ என்னை அத்தனை அப்பாவியென்றா நினைத்துக்கொண்டிருக்கிறாய்? எனக்குத் தெரியாது என்று நீ நினைத்துக்கொண்டிருக்கும் பல விஷயங்களும் எனக்குத் தெரியும் அதனை மனதில் கொள்!"

பட்டதிரிக்கு ஆச்சரியம் உண்டானது. இப்படி யெல்லாம் பேசக்கூடியவரில்லையே இவர்? அண்ணன் தம்பியருள் மூத்தவராகப் பிறக்கவில்லையென்றாலும் சிறுவயது முதலே பட்டதிரிதான் குடும்பத்தின் தலைமகனாகப் பொறுப்பு வகித்து வந்திருக்கிறார்.

137 களரி ஆசான்களிடையே இந்த மரபு சமீப காலம் வரைகூட நீடித்திருந்ததை ஆய்வாளர் பிலிப் ஸர்ரிலியின் கட்டுரை ஒன்றினால அறிகிறோம்.

அண்ணனாகட்டும் தம்பியராகட்டும் தன்னைக் கேட்காமல் இதுவரை எந்தக் காரியத்தையுமே செய்ததில்லை. தன் மேலில் அவர்களுக்கு அத்தனை தூரம் பக்தியும் மரியாதையும் உண்டு என்பதாகத்தான் அவரது நினைப்பு இத்தனை நாட்களாக இருந்து வந்திருக்கிறது. அதில் அவருக்கு எல்லையில்லாத இறுமாப்பும் உண்டு.

ஆனால் கிழவர் இப்போது கூறுவதைப் பார்த்தால் நிஜத்திற்கு வேறு நிறங்களும் உண்டு போலிருக்கிறதே? உண்மை சுடும் என்பது இதுதானோ?

"நான் ஒரு காரியத்தை ஏறக்குறைய முப்பது முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் செய்தேன். உனக்குத் தெரியாமல் நான் செய்த மிகச்சில காரியங்களுள் அதுவும் ஒன்று. இன்றோ அதுவே நம் குலத்துக்குக் கேடாக முடிந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். அதனை இப்போது உன்னிடம் சொல்லவில்லையென்றால் பின் ஒருபோதும் சொல்ல முடியாமலே போய்விடலாம். நமன் நேற்று மாலையிலிருந்து நம் வீட்டு வாசலில் காத்து நிற்கிறான் ஆனால் உன்னிடம் இந்த பாரத்தை இறக்கிவைத்து விட்டுத்தான் கிளம்புவேனென்று நானும் பிடிவாதமாக அவனது அழைப்பை மறுதலித்துக் கொண்டிருக்கிறேன்."

முப்பந்தைந்து வருடங்களுக்கு முன் என்றால்??? பட்டதிரியின் முகம் அஷ்டகோணல்களை அடைந்தது. ஏனெனில் அந்தக் காலகட்டத்தில் தம்பியும் தமையனும் ஒரு முக்கியமான பிரச்சனையின் காரணமாக பிரிந்து மனக்கசப்பெய்திப் பலகாலம் பிரிந்திருந்தார்கள். அப்போது செய்யப்பட்ட காரியமெனில்? நிச்சயம் பட்டதிரிக்கு எதிரானதாகத்தான் இருந்திருக்கும். அதில் சந்தேகமில்லை. அத்தனை வருடங்கள் கழித்து அதனை மரணப்படுக்கையில் நினைக்கிறாரெனில்? அத்தனை பயங்கரமான காரியமா அது?

பட்டதிரிக்கு மயிர்க்கூச்செறிந்தது. மிகப்பெரியதொரு அலை... முப்பத்தைந்து வருடங்கள் வயதான அலை.. அவரையும் அவரது குடும்பத்தாரையும் மூழ்கடிக்க வருவது போன்றதொரு பிரமை அவருக்கு உண்டானது. அண்ணன் மீதிருந்த பக்தியும் பாசமும் சில கணங்களுக்குக் காணாமல் போக, தனது பொறுமையைத் தற்காத்துக்கொள்ள அவர் மிகுந்த பிரயத்தனப்படவேண்டியிருந்தது.

"நாராயணா! உன்னுடைய வெற்றியின் இரகசியத்தை நான் அறிவேன். ஏன் உன்னை எவராலும் அங்கைப் போரிலோ[138] வாட்போரிலோ வெல்ல முடியாது என்னும் சூட்சுமம் எனக்குத் தெரியும். எனக்கு மட்டுமே தெரியும்..." - பட்டதிரி எந்தவொரு உணர்ச்சியையும் காட்டாமல் கட்டுப்படுத்திக் கொண்டு கிழவரின் முகத்தை நோக்கி நின்றார்.

"நம்முடைய ஆசான் இரவிநீலி பட்டதிரி... அன்றொரு நாள் மரணப்படுக்கையில் கிடந்தபோது உன்னையும் என்னையும் கூப்பிட்டனுப்பினாரே, ஞாபகம் இருக்கிறதா? அப்போது நீ தைத்திரிய சரணத்தின் தலைவனாக இருந்தாய். நானோ பவிஷிய சரணத்தின் தலைவனாக இருந்தேன்... அஹ்ஹ..."

மீண்டும் இருமல் துவங்கிவிட்டது. பட்டதிரி மறுபடியும் நீரைப் புகட்டி அவரை ஆசுவாசப்படுத்த முயன்றார். சம்மந்தா சம்மந்தமில்லாமல் எதையெதையோ தலைமையனார் பேசிக் கொண்டிருப்பது அவருக்குக் கவலையளித்தது. புத்தி ஒரு வேளை பிசகிவிட்டதோ எனும் ஐயம்கூட உண்டானது.

"நம் இருவரையும் தவிர வேறு இரு மாணவர்களும்கூட அங்கு இருந்தார்கள்... அப்போதுதான் நாம் நரசிம்மப் பிரயோ... அஹ்ஹ்ஹ்ஹ்ஹ..." - உடல் குலுங்கத் தொடர்ந்து இருமல் பல கணங்களுக்கு நீடித்தது.

"நமன் உள்ளே வந்து விட்டானடா... நான் உடனே அந்த இரகசியத்தை உன்னிடம் சொல்லியாக வேண்டும்..."

"உஸ்... பதற்றப்படாதீர்களண்ணா. நமனுமில்லை ஒன்றுமில்லை. சற்று நிதானப்படுத்திக்கொள்ளுங்கள். உங்களுக்கு ஆயுள் இன்னமும் மிச்சமிருக்கிறது."

"தப்பிதம் செய்துவிட்டேனடா தம்பி. அப்போது உன் மீது ஏற்பட்ட அளவு கடந்த கோபத்தால் அவ்வாறு செய்து

[138] ஆயுதங்கள் எதுவுமின்றி வெறும் கரங்களால் உடலின் வர்ம நிலைகளைத் தாக்கிப் புரியப்படும் போர். இதனைப்பற்றிய குறிப்பு கம்ப இராமாயணத்தில் யுத்த காண்டத்தில் காணப்படுகிறது. பண்டைய அங்கைக்காரர்களை குறிப்பிடும் கல்வெட்டு திருச்செந்தூருக்கருகில் கண்டறியப்பட்டுள்ளது. தகவல் – எஸ். இராமசந்திரன் அவர்களின் 'வர்மக்கலை' ஆய்வுக்கட்டுரை.

விட்டேன்!" - கிழவரின் திடீரென்று அழத் துவங்கினார். உடல் குலுங்கிக் குலுங்கி நடுங்கத் துவங்கி விட்டது. பட்டதிரிக்கு பயம் அதிகரித்தது.

"வைத்தியரை வேண்டுமானால் உள்ளே வரச் சொல்லட்டுமா அண்ணா?"

"முட்டாளே! முக்கியமான விஷயத்தை உன்னிடம் சொல்ல வந்து கொண்டிருக்கிறேன்... வைத்தியனாவது ஒன்றாவது? அடேய்! பிரயோகத்தைக் கற்றுக்கொடுத்த பின் மற்றவர்களையெல்லாம் ஆசான் வெளியில் போகச்சொல்லி விட்டார், ஞாபகம் இருக்கிறதா?"

எப்படி மறக்கும்? அந்த மறக்க முடியாத நிகழ்வு எப்படி மறக்கும்? தாம்தான் ஆச்சாரியார் இரவிநீலியாருக்கு மிக அணுக்கமானவன். மற்றவர்கள் எல்லோருமே தனக்குப் அப்புறம்தான் எனும் பட்டதிரியின் தற்பெருமை மிக்க நினைவில் மண்ணையள்ளிக் கொட்டிய சம்பவமல்லவா அது? அதற்குப்பின் எத்தனை நாட்கள் இந்த நாசமாய்ப் போகிற கிழவனிடம் என்ன நடந்ததென்று சொல் அண்ணா! ஆச்சாரியார் கடைசியாக என்னதான் கூறினார்?? என்று துருவித்துருவி எத்தனை முறை விசாரித்திருப்போம்?? அந்தக் கேள்விக்கு மட்டும் கடைசி வரை ஏனோ சரியான படி பதில் வரவேவேயில்லை. இத்தனை வருடங்கள் கழித்து இந்த இறுதித் தருணத்தில் எதற்காக அந்த விவகாரத்தைக் கிளப்பி நமது மனதைக் குழப்பியடித்து... சிவ சிவா!

"சத்தியம் செய்துகொடுத்து விட்டேனடா தம்பி. அதைப்பற்றி உன்னிடம் ஒரு போதும் சொல்லமாட்டேன் என்று ஆசானிடம் வாக்குதத்தம் செய்துகொடுத்து விட்டேன். அதனால்தான் இத்தனை நாட்கள் உன்னிடம் பரஸ்தாபிக்கவில்லை ஆனால் இன்று அதுவே நமது ஆதாயத்திற்கு பாசக்கயிறாக வந்து இறுக்கிவிடுமோ என்று பயப்படுகிறேன். என்னுடைய சத்தியத்தை மீறித்தான் ஆக வேண்டும்..."

கிழவர் திடீரென்று தமது இடது உள்ளங்கையின்மேல் வலது உள்ளங்கையைப் பதித்துக்கொண்டார். பின் ஓரிரு கணங்கள் கழித்து இரண்டு கரங்களையும் சற்று மேலே தூக்கிக் கரங்களைத் தலைகீழாகத் திருப்பி வலது உள்ளங்கை கீழே செல்ல வைத்து இடது கையை மேலே கொணர்ந்தார். நிருத்த சாஸ்திரத்தில் கூறப்படும் ஏதோ ஒருவகையான ஹஸ்தத்தை அவர் அவிநயம் செய்ய

முற்படுவதைப்போலத் தெரிந்தது. இந்த நேரத்தில் எதற்காக இந்த விசித்திரச் செய்கை?

பட்டதிரிக்கு சட்டென்று பலப்பல வருடங்களுக்கு முன்னால் அவர் கண்ட ஒரு பழைய காட்சி நினைவிற்கு வந்து அவரது உடலில் ரோமாஞ்சனத்தை உண்டாக்கியது.

உடல்நிலை மிகவும் மோசமாகித் தமது முறியில்[139] பலகீனத்துடன் படுத்திருந்த ஆச்சாரியர் இரவிநீலி அனைவரையும் வெளியேறச் சொல்லிவிட்டு அண்ணனுடன் மட்டும் ஏதோ அந்தரங்கமாகப் பேச முயல, முக்கியமான நேரத்தில் தம்மை வெளியேறச் சொல்லிவிட்டாரே ஆச்சாரியார்? அப்படித் தமக்குத் தெரியக்கூடாத எந்த இரகசியத்தை அல்லது எந்த வர்மப் பிரயோகத்தை அண்ணனுக்கு மட்டும் கற்றுக்கொடுக்கப் போகிறார்? அண்ணனை விடத் தாம் எந்த வகையில் குறைந்து போய்விட்டோம்? என்று அழுகையுடனும் முறியைச் சுற்றிச் சுற்றி வந்தது அவரது நினைவிற்கு வந்தது. கடைசியில் ஆத்திரம் அறிவை மறைக்க, பழைய ஏணியொன்றைக் கொண்டு வந்து அவசர அவசரமாக அந்த முறியின் கூரையில் ஏறி அதிலிருந்த துவாரம் வழியாக அவர் கண்ட காட்சி..

அண்ணனார் இப்போது பிடித்துக் கொண்டிருக்கும் இதே விசித்திரமான ஹஸ்தமுத்திரையைத்தான் ஆசான் அன்று இவருக்குச் செய்து காண்பித்துக் கொண்டிருந்தார் அல்லவா? இதன் அர்த்தம்தான் என்ன?

"இது.. இது.. என்னவென்று.. தெரியுமா நாராயணா?"

கிழவருக்கு உணர்ச்சி வேகம் அதிகரித்துக் கொண்டிருந்தது. அந்த வேகம் அதிர்வுகளாக உடலில் பரவி தொடர்ந்த நடுக்கத்தைத் தோற்றுவித்தது. அதையும் மீறி கட்டிலிலிருந்து எழுந்திருக்க முயன்றார் அவர்.

"தயவுசெய்து என்னைத் தடுக்காதீர்களண்ணா வெளியில் சென்று வைத்தியரை வரவழைக்கிறேன் உங்களின் உடல்நிலை மோசமாகிக் கொண்டிருக்கிறது!" - பட்டதிரி நாற்காலியிலிருந்து எழுந்து வாசலை நோக்கி நடக்க முற்பட்டார்.

---

139 அறை.

"உனக்.....கு.... தெரியாதடா.............."

பிடிவாதமாக எழுந்திருக்க முயன்ற கிழவர் தள்ளாடிக் கட்டிலிலிருந்து பெருஞ்சப்தத்துடன் கீழே விழுந்தார்!

"ஐயோ அண்ணா!" என்று பதறியபடி பட்டதிரி அவரது உடலைத் தாங்கிப் பிடிக்க முயல, அதற்குள் வாயிலில் நின்றுகொண்டிருந்த பலரும் சப்தத்தைக் கேட்டு முற்றத்தினுள் நுழைந்து விட்டார்கள்.

"ஐயையோ.. கடவுளே! என்ன ஆகிவிட்டது இவருக்கு?" என்று அழுது புலம்பியபடி கட்டிலை நெருங்கிய அவரது மனையாட்டியை எவரோ அடக்கினார்கள். கீழே கிடந்த கிழவரின் உடல் மிகக் கடுமையாக நடுங்கிக் கொண்டிருக்க, அவரது வாய் இழுக்கத் துவங்கிவிட்டது. இருந்தாலும் கண்களில் ஏராளமான வெறி.

"தம்பி___!" -

வாய், பேசவே முடியாமல் மிகவும் கோணிக்கொண்டு விட்டதால், அருகில் சிதறிக்கிடந்த தண்ணீரில் ஆள்காட்டி விரலை நனைத்து, சாணத்தரையில் கிழவர் நடுங்கும் விரல்களால் எதையோ எழுதத் துவங்கினார்! பட்டதிரியின் முகம் அதிர்ச்சியில் முழுவதுமாக வெளிறிப் போய்விட்டது இத்தனை முனைப்புடன் கிழவர் சொல்ல வரும் விஷயம்தான் என்ன?

வடமொழியில் கிழவர் எழுதிய முதல் எழுத்து கிட்டத்தட்ட ச என்பதைப்போல் தெரிந்தது. அடுத்த எழுத்து... மிகவும் சிதைந்து.. ர போலல்லவா இருக்கிறது! அல்லது முதலெழுத்துடன் சேர்த்து வாசித்து சா என்று கொள்ள வேண்டுமா? அடுத்து.. மிகவும் சிதைந்து.. ட ?

மூன்றாவது எழுத்தை முழுவதுமாக எழுதி முடிக்குமுன் கைகளும் கால்களும் விலுக்! விலுக்கென்று நான்கைந்து முறை இழுத்துக்கொண்டன. அடுத்த கணம் கிழவரின் தலை அவர் மிகவும் நேசித்த அவரது அன்புத்தம்பியின் மடியில் நிரந்தரமாகச் சாய்ந்தது.

"ஐயோ! என்னைத் தனியே தவிக்க விட்டுவிட்டுப் போய்விட்டீர்களா?"எனும் அவரது மனைவியின் அலறல் அந்த வீட்டின் கூடமெங்கும் மாடமெங்கும் எதிரொலித்து வானத்தை ஒருமுகமாகச் சென்றடைந்தது.

கண்ணீர் நிரம்பிய தனது கண்களை இறுக்க மூடிக் கொண்டார் பட்டதிரி.

35. இதுதான் வாழ்க்கை!



மேற்கு வானில் கதிரவன் மெல்லச் சாய்ந்து கொண்டிருந்தான். அவன் தீட்டியிருந்த செஞ்சாந்துச் சித்திரத்துக்கு இணையாக பூமியில் ஓங்கி உயர்ந்து வளர்ந்து கொண்டிருந்த சிதையின் நெருப்பு மெல்ல மெல்ல அவிந்து அடங்கத் துவங்கியிருந்தது. அக்கினி பகவான் தனக்கு இரையாக்கப்பட்ட அந்த மனித உடலை எந்தப் பற்றுதலுமின்றி சிறிது சிறிதாக உள்வாங்கிக் கொண்டிருந்தான். எத்தனையோ ஆசைகளை அபிலாஷைகளை இன்பங்களை துன்பங்களை எதிர்பார்ப்புகளை ஏமாற்றங்களை நம்பிக்கைகளை துரோகங்களை எண்பது வருடங்கள் பார்த்துப் பார்த்து அனுபவித்த அந்த உடல், மெல்ல மெல்ல எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தது.

"இதுதான் வாழ்க்கை. இதுதான் மரணம். இதுதான் அநித்தியம். இதுதான் சூனியம். ஒன்றுமில்லாத பரவெளி பிரபஞ்சம். எல்லையில்லாததொரு நீர்ப்பரப்பின் சிறு குமிழிதான் உன்னுடைய மனித வாழ்க்கை! ஆகையால் மனிதா... இங்கே எதையும் சேர்ப்பதற்கு அவசியமேயில்லை ஏனெனில் கொண்டு செல்லப் போவது ஒன்றுமில்லை.

உன்னுடைய கஷ்டங்களும் கவலைகளும் வாழ்க்கையின் அநித்தியத்துக்கு முன் அற்றமற்றதாகி விடுவதை நீ அறியவில்லையா? எதற்காக அழுகிறாய்? எதற்காகச் சிரிக்கிறாய்? இரண்டுமே வேடிக்கையாகத் தெரியவில்லை?" என்றெல்லாம் அவிந்துகொண்டிருந்த அந்த நெருப்பின் நாவுகள் உலகத்தாருக்கு உபதேசிப்பதைப் போன்றதொரு பிரமை உண்டானது.

அந்தப் பூவுடலுடன் வைத்து எரிக்கப்பட்ட அகில் மற்றும் சந்தன மரங்களின் வாசம் காற்றில் கும்மென்று வீசியது என்றாலும் மனதிற்குக் கனமான அந்தச் சூழலின் தன்மை காரணமாக நறுமணத்தின் இனிமையை இரசிக்க

முடியவில்லை. வார்த்தைகளில் வடித்துவிட முடியாததொரு சோகம் அங்கே கவிந்திருந்தது.

எரிந்துகொண்டிருந்த சிதைக்கு சற்று தூரத்தில் தென்பட்ட சிறுநதியின் கரையில் ஒரு பாறையின்மேல் பட்டதிரியும் அவரது தம்பியர் இருவரும் பக்கத்திற்கு ஒருவராக அமர்ந்திருந்தார்கள். நீண்ட நேரத்திற்கு இருவரும் ஒருவருடனும் பேச முயற்சிக்கவில்லை கடைசியில் ஒரு வழியாகப் பாறையிலிருந்து எழுந்து மண்ணில் கால்பதித்த வாமனர், பட்டதிரியின் தோளில் தமது கைகளைப் பதித்தார்.

"கிளம்பலாம் அண்ணா. மிகவும் நேரமாகிவிட்டது நாளை காலை நாமனைவரும் சாலையில் இருந்தேயாக வேண்டும்."

"இல்லை தம்பி. கிளம்புவதற்குமுன் நான் செய்ய வேண்டிய காரியம் ஒன்றுள்ளது. நீங்கள் இருவரும் இப்படி என் முன் வந்து அமருங்கள்."

தம்பியர் இருவரும் பாறையிலிருந்து எழுந்து வந்து பட்டதிரிக்கு முன் புல்தரையில் குத்துக்காலிட்டு அமர்ந்தார்கள்

"அண்ணனாரின் வாழ்க்கை நமக்கெல்லாம் ஒரு மிகப் பெரிய படிப்பினையைக் கற்றுக்கொடுத்திருக்கிறது நமக்கு அணுக்கமானவர்களுடன் மிக நெருக்கமானவர்களுடன் நாமது அத்யந்த இரகசியங்களை ஒரு கட்டத்தில் பகிர்ந்து கொண்டு விடவேண்டும். ஒருவருக்கும் கடைசிவரை தெரியவே கூடாது என்று நாம் நினைக்கும் விஷயங்களைத் தவிர மற்றவற்றை நல்லதொரு தருணத்தில் பகிர்ந்துகொண்டு விடுவது நல்லது. ஏனெனில் மனிதவாழ்க்கை மிகவும் நிச்சயமற்றது. யாருக்கு எப்போது என்ன நேரும் என்பதைச் சொல்லவே முடியாது.

அண்ணன் என்னிடம் ஒரு மிக முக்கியமான விஷயத்தைச் சொல்லாமல் மறைத்துவிட்டார் என்பது புரிகிறது மரணப்படுக்கையில்தான் அதனை என்னிடம் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று தோன்றியிருக்கிறது ஆனால் விதி அவரை முந்திக் கொண்டது. கடைசிவரை என்னிடம் அந்தச் செய்தியை அவரால் முழுமையாகப் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. மிகப் பெரிய தவறு

செய்து விட்டோம் எனும் எண்ணத்துடன்தான் அவர் போய்ச் சேர்ந்தார்."

"என்ன அண்ணா சொல்கிறீர்கள்? அவர் உங்களிடம் ஒரு விஷயத்தை மறைத்து வைத்தாரா? நம்பவே முடியவில்லையே?"

"ஆம். நம்பமுடியாத செய்திதான். ஆனாலும் உண்மை அது அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை சம்மந்தப்பட்டு இரகசியமாக இருந்தால்கூட நான் கவலைப்படமாட்டேன். ஆனால் அது அப்படிப்பட்டதல்ல என்று தோன்றுகிறது. அதனால்தான் அவர் கூறிய அத்தனை செய்திகளையும் அது சம்மந்தமாக எனக்குத் தெரிந்த அத்தனை பின்னணித் தகவல்களையும் அவற்றுடன் பின்னிப் பிணைந்த என்னுடைய சொந்த வாழ்வின் சில நிகழ்வுகளையும் உங்களுடன் இன்றே பகிர்ந்து கொள்வதென்று முடிவு செய்து விட்டேன்..."

அச்சுதன் நம்பூதிரி முதல் முறையாக வாயைத் திறந்தார்.

"நீங்கள் கூறுவதும் சரிதான் அண்ணா. உங்களின் மனோநிலை எங்களுக்குப் புரிகிறது. மூத்தவர் உங்களிடம் முக்கியமான விவகாரங்களை அத்தனை தூரம் மறைத்திருக்க வேண்டியதில்லை என்றுதான் எனக்கும் தோன்றுகிறது..."

"முதலில் ஒரு சில முடிவுகளை அவசரமாக எடுப்பதும் பின்னர் அதற்காக வாழ்நாள் முழுவதும் வருந்துவதும்தான் அவருடைய பாணி. கடைசியில் அவரது முடிவும் அதே முறையில்தான் அமைந்தது. கிடக்கட்டும். மலைநாட்டின் சாலையாசான்களும் ஆச்சாரியர்களும் பூவுடல் உகுத்துப் பொன்னுடல் பெற்று வாழும் வீர சொர்கத்தில் அவருக்கும் ஒரு இடம் கிடைத்திருக்குமென்பதில் ஐயமில்லை. மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பற்றிச் சிந்திப்பதுதான் சிலாக்கியமானது. ஹூம்!" என்று கூறிப் பெருமூச்செறிந்த பட்டதிரி, மூத்தவர் மரணத்தறுவாயில் தம்முடன் பகிர்ந்துகொண்ட செய்திகளையும் எழுதிக்காட்ட முயன்ற வாக்கியத்தையும் முடிந்தவரையில் நினைவுகூர்ந்தார். வாமனரும் அச்சுதரும் அவர் கூறிச் சென்ற செய்திகளை பிளந்தவாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"அவர் கூற வந்த விஷயம் மிகப் பயங்கரமானதாக இருக்கும் போலிருக்கிறதே அண்ணா? நாம் அனைவரும்

முயன்று எப்படியாவது அதன் அர்த்தத்தைக் கண்டறிந்தேயாக வேண்டுமே...?"

"நிச்சயமாக. ஆனால் சம்மந்தா சம்மந்தமில்லாமல் அவர் பேசிய பல வாக்கியங்களையும் என்னால் திருப்திகரமாக ஒரு இழைக்குள் கொண்டுவர முடியவில்லை. முதலில் தம்புராட்டியைப் பற்றிப் பேசினார். அவள் நம் குலத்தையே வேரறுத்துவிடப் போவதாகக் கூறினார். பின் முப்பது வருடங்களுக்குமுன் நான் ஒரு காரியத்தைச் செய்தேன் என்றார். ஆனால் அது என்னவென்று கூறவில்லை. பின் அதற்கும் முற்பட்ட காலத்திற்குச் சென்று எங்களின் ஆசானான இரவிநீலி பட்டதிரி மரணப் படுக்கையில் கூறிய சிலவற்றை நினைவுகூர்ந்தார். கடைசியில் சம்மந்தமேயில்லாமல் சரட அல்லது சாட என்று எதையோ எழுதினார். தம்பிகளா! என் மண்டை வெடித்துவிடும் போல் தோன்றுகிறது!"

அந்த மூவருள் நிதானமும் நுண்ணறிவும் மிக்கவரான வாமனர் தலைகுனிந்து கண்மூடி நீண்டதொரு சிந்தனையில் ஆழ்கினார். இருள் முழுவதுமாகக் கவிந்துவிட்டிருந்த வானில் தாரகைகள் வெளியே வரலாமா? வேண்டாமா? என்று இரண்டும்கெட்டான் யோசனையில் மூழ்கியிருந்தன. ஒரு சில அவசரக்குடுக்கை நட்சத்திரங்கள் அதற்குள் முகத்தை முழுக்கவும் ஆரம்பித்துவிட்டன. நதியிலிருந்து புறப்பட்ட வாடைக்காற்று சில்லென்று அவர்களது மேனியைத் தழுவிவிட்டு அவர்களது மேலாடைகளையும் செல்லமாக அவிழ்த்தெறிந்துவிட்டுப் போனது.

"அவர் முதலில் பிராட்டியைப் பற்றித்தான் குறிப்பிட்டிருக்கிறார் அல்லவா? ஆகையால் அதிலிருந்தே ஆரம்பிப்போம் அண்ணா" என்ற வாமனர், ஒரு சில கணங்கள் இடைவெளி விட்டுவிட்டுத் பின் தொடர்ந்தார்.

"உங்களின் இளம்பிராய வாழ்க்கையைப் பற்றியோ திருமணம் பற்றியோ தம்புராட்டியார் பற்றியோ இதுவரை நாங்கள் உங்களிடம் கேட்டதில்லையண்ணா. உங்களுக்கும் அவற்றை எங்களுடன் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பு இதுவரை வாய்க்கவில்லை. அரசல் புரசலாக எங்களுக்குச் சில விவகாரங்கள் தெரியும். என்றாலும் உங்களின் திருவாயால் நடந்தவற்றைக் நேரடியாகக் கேட்டறிவதுதான் அனைவருக்கும் நல்லதென்று தோன்றுகிறது. ஆகையால் நீங்கள் தவறாக நினைத்துக்கொள்ளவில்லையென்றால்...."

"இதில் தவறாக நினைத்துக்கொள்வதற்கு என்ன தம்பி இருக்கிறது? கசப்பான சில பழைய நினைவுகளை அசை போடுவதற்குப் பயந்துகொண்டுதான் நான் அவற்றை உங்களுடன் இதுவரை பகிர்ந்துகொள்ளவில்லையே தவிர உங்களிடம் எதையும் மறைக்கவேண்டுமென்று ஒரு போதும் நினைத்ததில்லை. தம்புராட்டியாரைப் பற்றி நீங்கள் ஆதியோடந்தமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் என்னுடைய இளைமைக்காலத்தின் ஒரு சில ஏடுகளைப் புரட்டியாக வேண்டும். ஆக, இனி நான் சொல்லப்போவதை கவனமுடன் செவிமடுப்பீர்களாக!"

பட்டதிரியின் பார்வை அவர்களுக்கெதிரே விரிந்த அந்த நதியைக் கடந்து.. வயல்கள் மரங்கள் செடி கொடிகளைக் கடந்து.. கீழ்வான வெளியின் இருட்டில் எங்கோ நிலையில்லாமல் குத்திட்டு நின்றது. அவரது மனமோ வாயுவேக மனோவேகமாகப் பலப்பல ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்றது. எத்தனையோ இன்ப துன்பங்களையும் எதிர்பாராத திடுக்கிடும் நிகழ்வுகளையும் ஏந்தி நின்ற அவரது வாழ்க்கையை பிரத்யேக விருப்பு வெறுப்புக்களின்றி நிதானமாக மனதில் நிறுத்தி அசைபோட முயன்றார் அவர்.

"நமது வாழ்விலா இத்தனை சம்பவங்களும் நடந்தன?" என்று அவருக்கே சற்று ஆச்சரியமாக இருந்தது.

சற்று பயமாகக்கூட இருந்தது.

36. வாளேந்திய வெள்ளாட்டி



"சிறுவயதிலேயே நானும் அண்ணனும் சாலையின் மாணவர்களாய்ச் சேர்ந்து விட்டோம். அப்போது நமது சாலையின் மூத்த ஆச்சாரியாராக இருந்தவர் ஆசான் இரவிநீலி பட்டதிரி. அவருக்கும் நமது தகப்பனாருக்கும் ஒன்று விட்ட அண்ணன் தம்பிமுறை ஆக வேண்டும் என்பதால் எங்களின் மீது அவருக்குத் தனிப்பட்ட பாசமும் பரிவும் எப்போதும் இருந்தது. அவரது மூன்று புதல்வர்களும்கூட அப்போது எங்களுடன்தான் கல்வி கற்றார்கள். அம்மூவரில் இராம தாஸன் மிகத் திறமையானவனாகத் திகழ்ந்தான்.

அவனைப்பற்றி நானும் அண்ணனும் அடிக்கடி பேசிக் கொள்வோம். நாங்கள் பிராயம் எய்துமுன்னர் அவர்கள் சோணாட்டுக்குக் குடிபுகுந்து விட்டதால் நெருங்கிப் பழகும் வாய்ப்பேற்படவில்லை.

காலப்போக்கில் நாங்களிருவரும் எங்கள் கலங்களின் உபதலைவர்கள் ஆனோம். அப்போதெல்லாம் அனந்தபுரத்தில் ஐந்து வருடங்களுக்கொருமுறை பட்டதானம் நடைபெறுவதுண்டு. அவ்வாறு நடைபெற்ற தானமொன்றில் கலந்துகொண்டு சாஸ்திர பட்டதிரி[40] என்கிற பட்டமும் வாங்கிவிட்டோம். எங்களது வித்தையில் ஆச்சாரியாருக்கு பரிபூரண திருப்தியும் நம்பிக்கையும் இருந்தன. அடிக்கடி "என் பெயர் சொல்லும் மாணவர்களாக நீங்களிருவரும் விளங்குவீர்கள்!" என்று ஆசீர்வதிப்பார். நாங்களும் மகிழ்ந்து போவோம்.


அப்போதெல்லாம் சாலைகளில் சமையல் செய்யவும் மற்ற எடுபிடி வேலைகளுக்காகவும் வெளியூரிலிருந்து அனந்தபுரத்திற்குப் பிழைக்கவரும் பெண்களை வெள்ளாட்டிகளாக வேலைக்கு அமர்த்திக்கொள்வதென்று[41] ஒரு பழக்கம் பின்பற்றப்பட்டு வந்தது. முதலில் அவசர ஆள் தேவைக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்வழக்கம் நாளடைவில் ஒரு நடை முறையாகவே மாறிவிட்டது. பிரம்மச்சரியத்தை முக்கியமாக வலியுறுத்தும் சாலை பாரம்பரியத்தில் பெண்களை வேலைக்கு வைப்பதில் சில சிரமங்கள் இருக்கத்தான் செய்தன என்றாலும் பிரமாதமான பிரச்சனையாக எதுவும் உருவெடுக்கவில்லையென்பதால் யாரும் அதனைக் கண்டு கொள்ளவில்லை.

எனக்குப் பிராயம் இருபத்தைந்து அல்லது இருபத்தாறு இருக்கும். இளமை உடலெங்கும் பூரித்துக்கொண்டிருந்த பருவம் அது. என்றாலும் உடனடியாகத் திருமணம் செய்து கொள்ள முடியவில்லை.

---

[40] பட்டதிரி என்பது குறிப்பிட்டவரின் தகுதியை நிர்ணயித்துக் கொடுக்கப்படும் பட்டமாகும். இதில் சாஸ்திர பட்டதிரி, ஸமார்த்த பட்டதிரி, பாகவத பட்டதிரி என்று மூன்று வகைகள் உண்டு.

[41] பார்த்திவசேகரபுரச் செப்பேடுகள் இவ்வழக்கத்தைத் தவிர்க்குமாறு வலியுறுத்துகின்றன.



வலியசாலைக் குடும்பம்.

சாலையின் அடுத்த ஆச்சாரியர்களாக நானும் அண்ணனும் உருவாக வேண்டுமெனில் அடுத்த ஐந்து வருடங்களுக்குத் தொடர்ந்து பிரம்மச்சரியத்தைக் கடைபிடித்து இதரச் சாலைகளின் கலத்தலைவர்களைக் கலமறுக்கும் போட்டிகளில் வென்று கலநாயகங்களாகத் தேர்ச்சி பெற்றாக வேண்டும் எனும் நிர்பந்தம் இருந்தது. ஆசானும் நமது தந்தையாரும் அதனைப் பெரிதும் விரும்பினார்கள்.

என் வயதையொத்த இளைஞர்கள் திருமணம் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாக இருப்பதைக் கண்டு எனக்கு அளவு கடந்த கோபம் பொங்கியது. பலமுறை சாலையைவிட்டு இரவோடிரவாக ஓடி விடுவதென்று அண்ணனும் நானும் திட்டமிட்டோம். ஆனால் நமது குடும்பம் காந்தளூர்ச் சாலையோடு மிக நெருக்கமாகக் கொண்டிருந்த சம்மந்தமும் நமது தந்தையாருக்கு நாடெங்கிலுமிருந்த செல்வாக்கும் அத்திட்டத்தை செயல்படுத்த முடியாதபடி கட்டிப்போட்டு விட்டன.

இப்படி இளமையின் வேகத்தால் தவித்துக் கொண்டிருந்த எனக்கு மாமருந்தாக வந்து சேர்ந்தாள் ஒரு வெள்ளாட்டி. அவளுடைய பிராயமும் ஏறக்குறைய என்னுடையதை ஒத்ததாகவே இருந்தது. அவளும் அவள் தாயுமாகப் பிழைக்க வழிதேடி கொல்லத்திலிருந்து[142] அனந்தபுரம் வரை கால்நடையாகவே நடந்து வந்தார்களாம்! பரிதாபப்பட்டு இவளை மட்டும் சாலையில் சிறு வேலைகளுக்காகச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். விசாரித்ததில் அவளுடைய பெயர் ரேணுகா தேவி[143] என்று தெரிய வந்தது.

ரேணுகாவை முதன் முதலில் பார்த்தவுடனேயே மனதைப் பறிகொடுத்தவிட்டேன். நல்ல நிறம். எடுப்பான கண்கள். நாசி. அழகே உருவான அதரங்கள். ஒட்டு மொத்தத்தில் மிக மிக இலட்சணமான ஆரோக்கியமான பெண்ணாக அவள் என் கண்களுக்குத் தெரிந்தாள். ஆடை அணிகலன்கள் அத்தனை சுகமில்லையென்றாலும் அவளது தோற்றத்தில் ஒரு கம்பீரம் தெரிந்தது. செய்யும் வேலைகளில்

---

[142] கொல்லம் கல்வெட்டுக்களில் அப்பெயராலேயே குறிப்பிடப்படுகிறது.
[143] பரசுராமனை ஈன்ற தாயின் பெயரும் இதுதான்.

ஒரு அழகான பாங்கு தெரிந்தது. வெள்ளாட்டி தானே என்று என்னால் அவளை அலட்சியமாக நினைக்க முடியவில்லை.

என்னைப் போலவே இளமையின் வேகத்தால் தவித்துக் கொண்டிருந்த வேறு சில சட்டன்கள் அவளிடம் வம்பிழுக்கப் போய் வகையாக வாங்கிக் கட்டிக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். அவர்களின் அனுபவங்களைக் கேட்ட பிறகு அவள் மீது எனக்கிருந்த மதிப்பு பன்மடங்கு கூடி விட்டது. அவளை உடனடியாக நெருங்கிப் பேச முயலாமல் பார்வையினாலேயே என்னுடைய அக்கறையைத் தெரிவிக்க முயன்றேன். முதலில் அவள் அதனைக் கண்டு கொள்ளவில்லை, என்றாலும் நாளாவட்டத்தில் என்னுடைய இருப்பு அவளது கவனத்தைக் கவர்ந்ததென்பதை அறிந்து கொண்டேன். அவளுடைய வாய் பேசாத வார்த்தைகளை யெல்லாம் கண்கள் பேசின. அப்பப்பா! கனவிலும் நனவிலும் அந்தக் கடல் போன்ற கண்கள் என்னை என்ன பாடெல்லாம் படுத்தின?

அக்காலத்தில் காந்தளூர் மகாதேவர் திருக்கோயிலில் வருடாவருடம் திருவாதிரை உற்சவத்தின்போது பத்து நாட்கள் கூத்தும் மோகினியாட்டமும் பனயங்களி மற்றும் சங்ககளியும்[144] நடைபெறுவது வழக்கம். அந்தப் பத்து நாட்களும் சாலையின் அத்தனை சட்டர்களும் மாலையில் கோயிலுக்குச் சென்று விட்டு இரவு வெகுநேரம் கழிந்த பிறகுதான் விடுதிக்குத் திரும்புவார்கள்.

அந்த வருடத் திருவிழாவின்போது இதர சட்டர்களுடன் நானும் கோயிலுக்குச் சென்றேன். ஆனால் உடல் நிலை சற்று சரியில்லாததால் கூத்தை அதிக நேரம் இரசிக்க முடியவில்லை. விரைவில் சாலைக்குத் திரும்பி விட்டேன். படுக்கையில் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த எனக்கு மிக மெல்லியதாக வாள் சப்தமும் கேடயத்தின் சப்தமும் கேட்டன. அட இந்த நேரத்தில் பயிற்சி செய்வது தகாத செயலாயிற்றே? யார் இத்தனை தைரியமாக வாள்சுழற்றிக் கொண்டிருப்பது? என்று வியந்தபடி விடுதிக்கு வெளியில் வந்தேன்.

[144] கேரளத்தின் ஒரு வகை நடனம். இதற்கும் சாலைப் பாரம்பரியத்திற்கும் தொடர்பு உண்டு.

நான் நினைத்ததைப்போலவே அந்த சப்தம் சாலையின் தென்மேற்கு திசையில் அமைந்திருந்த களரியிலிருந்துதான் வெளிவந்து கொண்டிருந்தது. கோபத்துடன் மளமள வென்று களரியை அடைந்து மூங்கில் தட்டிகளின் வழியே உள்நோக்கினேன். அங்கு நான் கண்ட காட்சி... ஆஹா! இன்றுவரை என் மனதில் அழிக்க முடியாமல் பதிந்து விட்டது.

களரியின் பூத்தாரையில் மலர்கள் தூவப்பட்டுத் தீபங்கள் அழகுற ஏற்றப்பட்டிருந்தன. அத்தீபங்கள் கொடுத்த மெல்லிய மஞ்சள் நிற வெளிச்சத்தில் ஒரு அழகு தேவதை வாளையும் கேடயத்தையும் வைத்துக்கொண்டு மிக மும்முரமாகப் பயிற்சி செய்து கொண்டிருந்தாள். பயிற்சிக்கு ஏற்றவாறு அவளது ஆடைகளும் தலைமுடியும் இறுக்கி முடியப்பட்டிருந்தன. அவளது இடக்கரம் வாளை அனாயசமாகச் சுழற்றியது. கேடயமும் அதற்கிணையாக ஈடு கொடுத்து உபயோகிக்கப்பட்டது. அவளாக ஒரு எதிராளியைக் கற்பித்துக்கொண்டு அவனுடைய வாள் சுழற்சிக்கு ஏற்றவாறு எதிர்ச்சுழற்சி செய்து கொண்டிருந்தாள்.

அந்த மெல்லிய விளக்கொளியில் விரிந்த அவளது மேனியழகு என் சித்தத்தைக் கிறுகிறுக்கச் செய்ததென்றால் அவள் வாள் சுழற்றிய நேர்த்தியும் கையாண்ட பிரயோகங்களும் என்னை வியப்பின் உச்சிக்கே கொண்டு சென்றன. ஏனெனில் அவை அனைத்துமே நான் என் மாணவர்களுக்கு அன்றாடம் சொல்லிக் கொடுக்கும் பிரயோகங்கள்! பல சட்டர்கள் பலப்பல ஆண்டுகள் பயின்றாலும் கைவராத சில சிக்கலான வீச்சுகளைக்கூட அவள் அற்புதமாகக் கையாளுவதைக் கண்டு நான் பிரமித்துப் போனேன். என்னுடைய வித்தையின் மீது எனக்கே மிகப்பெரிய மரியாதை ஏற்பட்டது அன்றுதான். வேலை செய்யும் சாக்கில் எங்கோ ஒளிந்திருந்து என்னுடைய அன்றாடப் பாடங்களை அக்கறையுடன் கவனித்துத் தனியே பயிற்சியும் செய்து வந்திருக்கிறாள் என்பது உடனடியாக எனக்குப் புரிந்தது.

புனிதமான இடமாகக் கருதப்படும் சாலையின் களரியில் சாதாரணமாகப் பெண்கள் காலடி எடுத்து வைப்பதே தவறு. ஆசானின் அனுமதியின்றி பூத்தாரையின் தெய்வங்களை வழிபடுவது அதைவிடத் தவறு. இவை எல்லாவற்றையும்விட ஆயுதங்களைத் தொடுவதும் பயிற்சி

செய்வதும் உச்சக்கட்டப் பெருந்தவறு! என்றாலும் அவள் மீது எனக்குத் துளியும் கோபம் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் அவளது மேனியழகா அல்லது அவள் பயின்று கொண்டிருந்த பயட்டின் செய்நேர்த்தியா என்பதை இன்று வரை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை அன்றே நான் அவளிடம் கடுமையாக நடந்து கொண்டிருந்தால் பின்னால் நடந்த பல விபரீதங்களைத் தவிர்த்திருக்கலாம் விதி யாரை விட்டது?

பயிற்சியை முடித்துக் கொண்டு அவள் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்த நேரத்தில் உள்ளே நுழைந்தேன். என்னை அவள் சர்வநிச்சயமாக அந்த நேரத்தில் அந்த இடத்தில் எதிர்பார்க்கவில்லை. அப்படியே வெலவெலத்துப்போய் என் காலில் வீழ்ந்தாள். ஏதோ ஒரு ஆர்வத்தின் காரணமாகப் பெருந்தவறு புரிந்து விட்டதாகவும் இனி ஒருபோதும் களரியின் பக்கம் தலை வைத்துப் படுக்க மாட்டேனென்றும் என்னென்னவோ புலம்பினாள். சாலையிலிருந்து வெளியேற்றிவிட்டால் பிழைப்பதற்கு வேறு வழியில்லை என்று கூறி அவள் அழுதது என் மனதைத் தொட்டது

இனி ஒருபோதும் களரிக்குள் நுழையக்கூடாதென்றும் அவளுக்கு இந்த வித்தையைத் தொடர்ந்து கற்பதில் ஆர்வமிருந்தால் நானே இரவில் இரகசியமான ஒரு இடத்தில் கற்றுத் தருகிறேனென்றும் கூறினேன். யோசித்துப் பார்த்தால் இத்தனை முட்டாள்தனமாகவா நாம் அவளிடம் அன்று நடந்து கொண்டோம்? என்று எனக்கே வெட்கமாக இருக்கிறது. இளம் பெண்மையின் சக்தி அத்தனை தூரத்திற்கு அன்று என்னை ஆட்டிப் படைத்தது என்பதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை. அவள் அழுது கொண்டே கைகூப்பியபடி நிலத்தில் பலமுறை விழுந்து விழுந்து சேவித்தாள். தன்னிடம் இத்தனை தூரத்திற்கு ஒருவரும் இரக்கத்துடன் நடந்து கொண்டதில்லையென்று பலமுறை கூறினாள்.

அன்று முதல் எனக்கும் அவளுக்குமான உறவு மலர்ந்தது. இரவில் பயிற்சிசெய்வதற்கென்றே சாலையின் விடுதியையொட்டிய சிறு காட்டில் அவள் ஒரு இடத்தைத் தேர்வு செய்து வைத்திருந்தாள். அந்த இடத்தில் முடிந்த போதெல்லாம் அவளுக்கு வாட்பயிற்சியும் வர்மக்கலைப் பயிற்சியும் அளித்து வந்தேன். வர்மத்தின் ஒரு பிரிவாக விளங்கும் அங்கைப் போர்முறைகளில் அவள் சிறந்து

...ங்கினாள் ஆர்வம் மிக்க மாணவியாக விளங்கியதால் ...ந்த ஆசான் இரவிநீலி கற்றுக் கொடுத்த நுணுக்கமான ...யப் பிரயோகங்களையெல்லாம் நானும் அவளுக்குத் ...காமல் கற்றுக் கொடுத்தேன் 'சுலபத்தில் ஒருவருக்கு ...க வித்தைகளைச் சொல்லித்தந்து விடாதே!' என்று ...ன் படித்துப் படித்துக் கூறியிருந்த எச்சரிக்கைகளைக் ...ல் பறக்கவிட்டேன்.

அவளுடைய தேர்ச்சியின் வேகமோ அசாத்தியமாக ...த்தது அவளுக்குப் புதிது புதிதாகப் பல ...ாகங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும் ...தற்காகவே நான் பலப்பல நூல்களைப் படிக்க வேண்டி ...து பல புதிய நடைமுறைகளை ஆராயவேண்டி வந்தது ...ந்த உற்சாகத்துடன் பயிற்சி செய்து பல நுணுக்கங்களை ...ம் கண்டறிந்தேன் ஆசானிடம் சிக்கலான கேள்விகள் ...க ஆரம்பித்தேன். அவற்றில் பல முதல் நாளிரவு ...கா என்னிடம் கேட்ட கேள்விகளாகவே இருந்தன ...னுடைய இந்தப் புதிய உற்சாகத்தை கவனித்துவிட்ட ...ன் தனியே அழைத்து என்னவென்று விசாரித்தார் ...ன்றுமில்லையென்று கூறி மழுப்பி விட்டேன்

ஆசானை ஏமாற்ற முடிந்ததைப் போல் அண்ணனை ...ால் ஏமாற்ற முடியவில்லை ஒரு நாள் இரவுப் ...ற்சியை முடித்துக் கொண்டு வருகையில் கையும் ...வுமாக அவரிடம் அகப்பட்டுக் கொண்டேன் வேறு ...யின்றி நடந்தவை அனைத்தையும் ஒப்புக்கொள்ள ...ண்டியதாகி விட்டது. ரேணுகாவின் வித்தைகளைப் ...ததும் அண்ணனுக்கும் அவள்மீது மரியாதை ...ட்டது எங்களின் காதலை மிகுந்த தயக்கத்துடன் அவர் ...ங்கரித்தார் கலநாயகங்களாகப் பொறுப்பேற்கும் வரை ...ப்பட்டுவிட வேண்டாம் என்று இருவருக்கும் ...த் திரும்ப வலியுறுத்தினார். நாங்களும் அவ்வாறே ...து கொள்வதாக உறுதியளித்தோம்

இதற்கிடையே சோழ நாட்டின் வீரநாராயணச் ...வேதி மங்கலத்தில் பல காலங்களுக்கு முன் ...யேறியிருந்த ஆசானின் குடும்பம், மிகுந்த ஆர்வமுடன் ...க்கு எய்தியிருந்தது காந்தளூர் மரியாதையை ஒட்டி ...புதிய சாலையையும் அவர்கள் தம் ...யில் ...ங்கியிருந்தார்கள் அச்சாலையின் முதல் ஆசானாகத் ...து தந்தையார் அமரவேண்டுமென்று தாஸன் மிகவும் ...ுப்பினார் ஆசானுக்கோ எங்களைக் கலநாயகங்களாக

ஆக்கிவிட்டால் நிம்மதியாகக் காந்தளூரிலிருந்து கிளம்பிவிடலாமே என்று எண்ணம். அதனால் கலங்களுக்கிடையேயான போட்டியை வழக்கத்தைவிட சற்று விரைவில் நடத்திவிடுவது என்று ஏற்பாடாயிற்று. போட்டியில் எப்படியும் வெற்றி பெற்றுக் கலநாயகனாக ஆகிவிடுவது என்னும் முனைப்புடன் நானும் நாட்களை நகர்த்திக்கொண்டிருந்தேன்.

ஆண்டவன் அப்போது எனக்கு மிகப்பெரிய சோதனை ஒன்றை வைத்தான்.

37. விதியின் விளையாட்டு



"மானுடம் இரண்டு பிரக்ருதிக்களை உள்ளடக்கியது. ஒன்று சரீரம். இன்னொன்று மனம். உடலுக்கென்று சில தேவைகள் இருக்கின்றன. அதைப் போலவே மனதிற்கென்றும் சில தேவைகள் இருக்கின்றன. இந்த இரண்டையும் உள்ளடக்கிய தேவைதான் காமம். அது மிகப் பெரிய சக்தி. ஒருவனை பரிபூரணமாக ஆக்கவும் அழிக்கவும் வல்லது. அதனால் தான் பெரியவர்கள் மற்ற எல்லாவற்றையும்விட காமாந்தகாரத்தை ஒரு கட்டுக்குள் வைப்பதைப்பற்றி பல விதங்களிலும் போதித்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

கலமறுக்கும் போட்டி நடக்க ஏறக்குறைய இரண்டு திங்கள்களே மீதமிருந்தன. நான் உச்சக்கட்டப் பயிற்சியில் இரவு பகலாக ஈடுபட்டிருந்தேன். எப்படியும் கலநாயகனாக ஆகியே தீரவேண்டுமென்கிற வெறி என்னை ஆட்டிப் படைத்தது. கலமறுக்கும் போட்டிக்கான அத்தனை விதிமுறைகளையும் ஆசானிடம் கேட்டறிந்து அதற்கு ஏற்றாற்போல் பயிற்சி செய்து வந்தேன். எனக்கு ஈடு கொடுத்து வாள் சுழற்றக்கூடியவர்கள் ஒருவரும் எங்கள் கலத்திலோ மற்ற கலங்களிலோ தென்படவில்லை. ரேணுகாவும் அண்ணனும்தான் எனக்கு ஈடாக அல்லது என்னையும் விஞ்சக்கூடிய வகையில் வாள் சுழற்றினர். அதனால் தினமும் பகலில் அண்ணனுடனும் இரவில் ரேணுகாவுடனும் பயிற்சி செய்யத் துவங்கினேன்.

எங்களின் பழக்கம் அரசல் புரசலாக அனைவருக்கும் தெரிந்து விட்டாலும் எவரும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளத் துணியவில்லை. ஏனெனில் கலநாயகனாக நான் தேர்வாகி விட்டால் சாலையில் நான் சொல்வதுதான் சட்டம் என்றாகிவிடும். அதனால் என்னைப் பகைத்துக் கொள்ள ஒருவனும் துணியவில்லை.

ஒரு நாள் இரவு. அமாவாசை முடிந்த பிரதமை அல்லது துவிதியை திதியாக இருக்கலாம். நானும் ரேணுகாவும் வழக்கம்போலக் காட்டில் வாள்சுழற்றிக் கொண்டிருந்தோம். திடீரென்று எங்கிருந்தோ ஊதற்காற்று வீசத்துவங்கியது. சற்று நேரத்தில் சடசடவென்று மழை பிடித்துக்கொண்டது. வேறு வழியின்றி இருவரும் அருகிலிருந்த மண்டபத்தில் ஒதுங்கினோம். நான் அத்தனை காலமாகக் கடிவாளமிட்டுக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த காமக் குதிரை அன்று கட்டவிழ்த்துக் கொண்டது. "பிளீ ஹிஹிஹி" என்று கோபத்துடன் குரலெடுத்துக் கனைத்தது. நான் அதற்குக் கடிவாளத்தைப் போட முயற்சிக்க, அதன் வேகம் முன்னிலும் அதிகரித்தது. இறுதியில் நான் தோற்றேன். குதிரை வென்றது.

அன்றிரவு நான் அடைந்த மனவேதனைக்கு அளவேயில்லை. என்னுடைய அவசர புத்தியும் கட்டுக்கடங்காத உணர்ச்சிகளும் என்னை வெட்கத்தில் ஆழ்த்தின. பலவிதமான வார்த்தைகள் கூறி ரேணுகாவை சமாதானம் செய்தேன். கலநாயகமாகத் தேர்ச்சி பெற்றதும் முதல் வேலையாக அவளைத் திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதியளித்தேன் அண்ணனிடமிருந்து இதனை மறைத்து விடுவது என்று இருவரும் முடிவு செய்தோம்

காந்தளூரிலிருந்து கழிக்குடிக்கு இரகசியமாகச் சென்று கிராமவித்தர்களை[145] அழைத்து வந்து கடற்கரையில் தேவி பகவதியின் சன்னிதானத்தில் பலவிதமான பிராயச்சித்தங்கள் செய்தேன். இருந்தாலும் மனதில் அமைதி உண்டாகவில்லை. நடக்கக்கூடாதது நடந்துவிட்டது என்றே தோன்றிக் கொண்டிருந்தது.

---

145 கிராமவித்தர் எனும் சொல்லை கிராம + வித்தகர் என்று புரிந்து கொள்ள வேண்டும். கிராமவித்தர்கள் கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகின்றனர்.

பலரும் பலநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டி[illegible] கலமறுக்கும் போட்டிக்கான நாள் வந்தது. மலைநாட்டி[illegible] மற்ற மூன்று சாலைகளிலிருந்து ஆசான்களும் சட்டர்க[illegible] காந்தளூருக்கு வந்து சேர்ந்தார்கள். நம்முடைய தந்தையா[illegible] போட்டியைக் காண நேரில் வந்திருந்தார். விடுதிக[illegible] கூட்டம் அலைமோதியது.

போட்டிக்கான முதல் நாளிரவு ரேணுகா[illegible] சந்தித்தேன். பலவித வார்த்தைகள் கூறி என்னை மி[illegible] உற்சாகப்படுத்தினாள் நாற்கலங்களிலும் என்னை[illegible] அண்ணனையும் வெல்லக்கூடியவர் ஒருவரும் கிடை[illegible] என்றாள். ஒரு ஓரமாக நின்று போட்டிகளைப் பார்[illegible] கொண்டிருப்பேன். உங்களிருவரின் வெற்றிக்கா[illegible] தேவிக்கு நேர்ந்து கொள்வேன் என்றெல்லாம் கூறிய[illegible] ஞாபகம்.

மறுநாள் போட்டி துவங்கியது அனை[illegible] எதிர்பார்த்தபடி நானும் அண்ணனுமாக [illegible] போட்டிகளிலெல்லாம் வெற்றி மேல் வெற்றி பெ[illegible] கொண்டு வந்தோம் மற்ற சாலைகளின் கலத்தலைவ[illegible] எங்களைத் தாக்குப்பிடிக்கமுடியாமல் வரிசை[illegible] சுருண்டனர் குறிப்பாக மூழிக்குளத்து சாலையிலி[illegible] வந்திருந்த நான்கு கலத் தலைவர்களும் படுதோல்வி[illegible] சந்தித்தனர். போட்டிகள் நல்லபடியாக முடிவடை[illegible] என்று அனைவரும் நினைத்த வேளையில் மூழிக்குள[illegible] ஆச்சாரியார் தேவையில்லாமல் தலையிட்டு ஒரு குழப்[illegible] உண்டாக்கினார்.

அதாவது கலநாயகங்களாகத் தேர்ச்சி பெறப்போ[illegible] மட்டும் போட்டிகளில் வெற்றியடைந்தால் போ[illegible] அவரது கலத்தில் அவரால் பயிற்றுவிக்கப்பட்ட ச[illegible] ஒருவனாவது இதர கலத்தின் சட்டர்களுடன் போட்டி[illegible] வென்றாக வேண்டும். அப்போதுதான் நாயகம[illegible] போகிறவர் நல்ல ஆசானும் கூட என்பது தெளிவ[illegible] என்றார் அவர். இதற்கான நெறிமுறைகள் பண்[illegible] கலமறுக்கும் போட்டிகளில் உண்டாம்!

போட்டியின் இந்தப் புதிய விதி எனக்கு [illegible] ஆசான் இரவிநீலிக்கே சற்று குழப்பமாக இ[illegible] என்றாலும் வயதில் மூத்தவரான மூழிக்குள[illegible] எதிர்த்துப் பேச அவர் விரும்பவில்லை. [illegible] எங்களிருவரின் சார்பாக அவர் நடந்துகொள்கிறார் [illegible]

[illegible]ச்சாட்டு இருந்தது. அவரால் ஒன்றும் செய்ய [illegible]யவில்லை. நம்முடைய தந்தையாரின் முகமோ சொல்ல [illegible]வொண்ணா வேதனையைக் காட்டியது. பரம்பரை மானம் [illegible]றிபோய்க் கொண்டிக்கிறதே என்கிற துக்கம் அதில் [illegible]தெரிந்தது.

அண்ணனின் கலமான பவிஷ்ய சரணத்திலோ என்னுடைய தைத்திரிய சரணத்திலோ உருப்படியாக [illegible]வும் தேறமாட்டான் என்றாலும் வேறு வழியின்றி [illegible] பேரைத் தேர்ந்தெடுத்துப் போட்டிக்கு [illegible]ப்பினோம்

நாங்கள் எதிர்பார்த்தபடியே இருவரும் போட்டி [illegible]ங்கிய சில நாழிகைகளிலேயே தோல்வியடைந்து திரும்பி [illegible]ட்டார்கள். நான் மனமுடைந்து போனேன். கலநாயகம் [illegible] வேண்டுமென்கிற எனது நீண்ட நாளைய கனவு என் [illegible]களுக்கு முன்னால் தவிடுபொடி ஆகிக்கொண்டிருந்தது [illegible] பிரம்மச்சரியத்திலிருந்து வழுவியதற்காக காந்தளூர் [illegible]தேவரோ எனக்குத் தகுந்த தண்டனையளித்து விட்டார் [illegible] தோன்றியது

[illegible]ழிக்குளத்து ஆசான் எழுந்து நின்று "இவர்களின் [illegible] [illegible] பெற்ற மாணவர் வேறு எவருக்காவது போட்டியை [illegible]கொள்ள விருப்பமுண்டா?" என்று [illegible] [illegible]வினார் சங்கடமானதொரு அமைதி [illegible] [illegible]து சரிதான்! நமது கதை இத்துடன் முடிந்தது [illegible] சாலையிலிருந்து மூட்டை கட்டிக்கொண்டு [illegible] வேண்டியதுதான் என்று முடிவு செய்தேன்

அந்த அமைதியைக் கிழித்துக்கொண்டு "ஏனில்லை? [illegible]ருக்கிறேன்!" என்றொரு குரல் என்னுடைய சரணத்தின் [illegible] சிப் பத்தியிலிருந்து வந்தது. அட! இத்தனை [illegible]ாக ஆச்சாரியாருக்கு பதில்சொல்லக் கூடியவன் [illegible] கலத்தில்கூட இருக்கிறானா என்ன? என்று [illegible] வியந்தபடி நோக்கினேன். ஆனால் அடுத்த கணம் [illegible]திர்ச்சிக்கு உள்ளானேன்! ஏனெனில் அவ்வாறு [illegible]கக் குரல் கொடுத்தவள் ரேணுகா தேவி! மற்ற [illegible]களைப்போல் ஆடை அணிகளை மாற்றிக்கொண்டு [illegible]யபடி போட்டி நடக்கும் களத்திற்கு வந்து [illegible] அவள். நானும் அண்ணனும் அதிர்ச்சியில் [illegible] போய்ச் சிலையாகி நின்றோம்.

போட்டிகள் மீண்டும் துவங்கின. என்ன நடந்திருக்கும் என்பதை நீங்களே ஊகித்திருக்கலாம். அவளுடன் போட்டியிட்ட அத்தனை பேரும் உடலெங்கிலும் வாட் கீறல்களுடன் வெளியேறினார்கள். மலைநாட்டின் மூன்று சாலைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டர்களை அவள் அனாயசமாகப் பந்தாடிக் கொண்டிருந்தாள். நாங்களிருவரும் மகிழ்ச்சியுடன் நடப்பதைக் கவனித்து வந்தோம். ஆனால் ஆசான் இரவிநீலி பட்டதிரியின் முகத்தில் குழப்பம் தெரிந்தது. தனக்கே தெரியாமல் இப்படியொரு மாணவனை எப்படி இவர்கள் தயாரித்திருக்கிறார்கள்? என்கிற அதிருப்தி அதில் எழுதி ஒட்டியிருந்தது.

போட்டிகள் முடிவடைந்தன. கலநாயகங்களாக நானும் அண்ணனும் அறிவிக்கப்பட்டோம். மூழிக்குளத்து ஆசானும் மற்றவர்களும் தலையைக் குனிந்தபடி வெளியேறினார்கள்.

சாலையின் சட்டர்கள் அனைவரும் எங்கள் மூவரையும் தோளில் தூக்கிக் கொண்டு ஆனந்தத்தில் கூத்தாடினார்கள். அப்போது யாரும் எதிர்பாராத விபரீதம் நிகழ்ந்தது. அதுவரை முன்குடுமியாக இறுக்கி முடியப்பட்டிருந்த ரேணுகாவின் தலைமயிர் சட்டென்று கட்டவிழ்ந்து கீழே விழுந்தது! அவ்வளவுதான். அனைவரும் ஆச்சரியத்தில் உறைந்து போனார்கள்.

“இவளா! இந்த வெள்ளாட்டியா ஜெயித்தது? யார் இவளுக்கு வாள் சுழற்றக் கற்றுக் கொடுத்தார்கள்?” என்ற கூக்குரல் நாற்புறங்களிலும் எழுந்தது. நமது தந்தையாரும் ஆசானும் கடுங்கோபத்துடன் எங்கள் மூவரையும் நெருங்கினார்கள். ரேணுகாவின் முகத்தை ஒருகணம் கூர்ந்து நோக்கிய தந்தையாரின் முகத்தில் சொல்லில் வடிக்க வொண்ணாத அதிர்ச்சி! “நீ...... நீ...... மாளிகைப்புரத்து வீட்டைச் சேர்ந்த பெண்டல்லவா? இங்கு...... இங்கு எப்படி வந்து சேர்ந்தாய்?”

மாளிகைப்புரத்து வீடா! என் கண்களின் முன்னால் மூவுலகங்களும் சுழன்றன. மாபெரும் தவறு செய்து விட்டேன் என்கிற உணர்ச்சி எனக்கு உண்டானது. ரேணுகாவும் உறைந்துபோய்க் காணப்பட்டாள். அவளது கண்களில் ஏராளமான பயம் தெரிந்தது.”

38. மாளிகைப்புரத்து வீடு



“உள்ளதைச் சொல்! நீ மாளிகைப்புரத்து வீட்டின் இளவரசிதானே?” என்று தந்தையார் மீண்டும் உறுமினார். ரேணுகா பதில் பேசாமல் தலை குனிந்து நின்றாள். எனக்கோ வேதனை தொண்டையை அடைத்துக் கொண்டு நின்றது.

மாளிகைப்புரத்து வீட்டைப் பற்றி சிறு வயதிலிருந்தே கேள்விப்பட்டிருந்தோம். ஒரு காலத்தில் செழித்து நின்ற குடும்பம் அது. அக்குடும்பத்தின் மூதாதையர்கள் பெருமாள் அரசர்களுடன் நெருக்கமான பிணைப்பில் இருந்தார்கள். பின் பராந்தகச் சோழரின் காலத்தில் நிலைமை சற்று மாறத்துவங்கியது. மாளிகைப்புரத்து வீட்டார் சோழரிடம் அதிகப்படியான நெருக்கம் காட்டியது பெருமாளுக்குப் பிடிக்கவில்லை. பிணக்கு முற்றி ஒரு கட்டத்தில் தலைநகரான மகோதயபுரத்தை விட்டுக் கிளம்பித் தெற்கே நாஞ்சில் நாட்டில் அவர்கள் குடி புகுந்து விட்டனர். என்றாலும் சோழ விசுவாசத்தை முழுவதுமாகக் கைவிட்டு விடவில்லை. அதனால் நாடுவாழிகளின் அதிருப்திக்கும் அவர்கள் ஆளாக நேர்ந்தது

பல ஆண்டுகளுக்கு முன் ஏதோ ஒரு பிரச்சனையில் நமது தந்தையாருக்கும் மாளிகைப்புரத்து வீட்டின் பெரிய மனிதர்களுக்கும் மிகப் பெரிய சண்டை நடந்து கடைசியில் பெருமாள் அரசரே தலையிட்டுத் தீர்த்துவைக்க வேண்டியதாகி விட்டது என்பதாக நாங்கள் கேள்விப்பட்டிருந்தோம். ஆனால் என்ன விதமான பிரச்சனை அது என்பது எங்களுக்குத் தெரியவில்லை.

ரேணுகா அந்த வீட்டைச் சேர்ந்தவள் என்பதும் அவள் வெள்ளாட்டியாக இத்தனை நாட்கள் சாலையில் இருந்திருக்கிறாள் என்பதும் எனக்குப் பேரதிர்ச்சி தரும் செய்திகளாக இருந்தன. அத்தனை செல்வாக்கு மிக்க குடும்பத்தில் பிறந்தவள் இத்தனை நாட்கள் வெள்ளாட்டியாக வேடமேற்றிருக்கிறாள் என்றால், அதற்குத் தகுந்த காரணம் இருக்க வேண்டுமே? என்னைப் பொறுத்த வரையில் அதற்கு ஒரே ஒரு காரணம்தான்

கற்பிக்க முடிந்தது. சாலையில் கற்றுக் கொடுக்கப்படும் நமது தனுர் வித்தையை அவள் அபகரிக்க நினைத்திருக்கிறாள். நினைத்ததை நடத்தியும் காண்பித்துவிட்டாள். அதற்கு நான் துணை போயிருக்கிறேன். எத்தனை பெரிய அவமானம்?

"சொல்லடி! எதற்காக வெள்ளாட்டியாக வேடம் கட்டினாய்? எப்படி இத்தனை கிரமமாக உன்னால் வாள் சுழற்ற முடிகிறது?? யார் உனக்கு இந்த வித்தையைச் சொல்லிக் கொடுத்தார்கள்? சொல்! இல்லையேல் இங்கேயே உன்னை சம்ஹாரம் செய்து விடுவேன்!"

இளம் பெண்ணென்றும் பாராமல் அத்தனை பேர் முன்னிலையில் தந்தையார் அவளது தலைமயிரைப் பற்றி உலுக்கினார். அவள் ஒன்றும் பேசவில்லை. அழுது கொண்டே தலை குனிந்தபடி ஓரக்கண்களால் என்னை உற்று நோக்கினாள். நான் அவளது உதவிக்கு வருவேனென்று நினைத்தாள் போலும். நானோ கோபத்தின் உச்சக்கட்ட வெறியில் இருந்தேன். மற்ற எல்லா நினைவுகளையும் விட 'அவள் என்னை ஏமாற்றி விட்டாள்! என்னிடம் பொய் சொல்லி என்னைப் பைத்தியக்காரனாய் ஆக்கிவிட்டாள்!' எனும் ஒரே நினைவுதான் திரும்பத் திரும்ப வந்து வதைத்தது. அந்த நினைப்பே என் வார்த்தைகளைக் கட்டிப் போட்டுவிட்டது. ஒன்றும் கூறத் தோன்றாமல் பேந்தப் பேந்த விழித்தேன்.

"அடியேய்! உனது பாட்டன் அந்தக் கிழட்டுத் தம்புரான் உன்னை இங்கு அனுப்பி வைத்தானா? போய் சாலையின் வித்தைகளையெல்லாம் கற்று வா! அவற்றை சோழநாட்டு மறவன்களுக்குச் சொல்லிக் கொடுப்போம். பின் அவர்களை மலைநாட்டுக்கெதிராக படை கொண்டு வைப்போம் என்று கூறி அவன்தான் உன்னை இங்கே அனுப்பி வைத்தானா? இதற்காகத்தானடி பெண்களை சாலைக்குள் அனுமதிப்பதில்லை என்று சட்டம் வைத்திருக்கிறோம்! அதனை மீறி எந்த மடையன் உனக்கு வாள்சுழற்றச் சொல்லிக் கொடுத்தது? சொல்! அவனையும் உன்னுடன் சேர்த்து சம்ஹரித்து விடுகிறேன்." - அவருடைய பேய்க் குலுக்கலில் அவளது தலைமுடி முழுவதும் பிய்ந்து வராதது ஆச்சரியம்தான்.

அப்பொழுது நான் சற்றும் எதிர்பாராத விதமாக அண்ணன் முன்வந்தார். "அச்சன்! அவளுக்கு வித்தை கற்றுக் கொடுத்தது நான்தான். அவளை தண்டிக்கும் முன் என்னைத்

தண்டியுங்கள்" என்றார். நான் இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. நான் அங்கு சொல்ல வேண்டிய வார்த்தைகளை அண்ணன் சொல்லிக் கொண்டிருந்தார்.

அவ்வளவுதான். தந்தையாரின் கோபம் கட்டுக் கடங்காமல் போனது. ரேணுகாவின் தலைமயிரை முன்கியிழுத்துக் கன்னத்தில் பளீர் பளீரென்று அறைந்து கீழே தள்ளினார். அவளது மண்டை நிலத்தில் மோதியது. தடுக்க வந்த அண்ணனை அவரது கால்கள் ஆங்காரமாக உதைத்துக் கீழே தள்ளின.

"அடேய்! உன்னைப் பெற்றவன் நான். வயிறெரிந்து சாபமிடுகிறேன். உனக்கு இந்த வித்தை ஒரு நாளும் கைவராது. ஆசான்களையும் சாலைப் பாரம்பரியத்தையும் மண்ணோடு மண்ணாக்கிய நீயும் அவளும் நாசமாய்த்தான் போவீர்கள்!" என்று சபித்துவிட்டு நமது தந்தை வெளியேறினார்.

நான் எல்லாவற்றையும் உறைந்து போய்ப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை. எனக்கு பதிலாக அண்ணன் அவளைக் காக்க முன்வந்தது என் மனதைப் பிசைந்தது. கலநாயகம் ஆகவேண்டுமென்ற ஆசையில் மனிதாபிமானமில்லாமல் நடந்து கொண்டேனோ? என்று தோன்றியது.

அவள் நிலத்திலிருந்து எழுந்து நின்று என்னை ஆங்காரப் பார்வை பார்த்தாள். "சீச்சீ! உன்னை போல நம்பியவளை நட்டாற்றில் விட்டுவிடும் நீயும் மனிதனா? உனக்கு வித்தையும் ஒரு கேடா?" என்று அவள் கேட்காமல் கேட்பதைப் போல் தோன்றியது.

ஆசானின் அனுமதியின்றிச் சாலையைச் சேராத ஒரு அன்னியப் பெண்ணுக்கு வித்தை கற்றுக் கொடுத்த குற்றத்திற்காக அண்ணனும் அடுத்த இரண்டு நாட்களில் சாலையிலிருந்து வெளியேற்றப்பட்டார். கலநாயகமாகத் தேர்ச்சிபெற்று காந்தளூரின் ஆச்சாரியனாக வளர்ந்திருக்க வேண்டிய அண்ணன் அன்று ரேணுகாவைக் காப்பதற்காக தன்னுடைய வாழ்க்கையே தியாகம் செய்தார். அவருடைய இடத்தில் நின்றிருக்க வேண்டிய நானோ கலநாயகமாகத் தேர்ச்சி பெற்று விட்டேன்!

என் மனம் என்ன பாடுபட்டதென்பதை அந்தக் காந்தளூர் மகாதேவரே அறிவார். அடுத்தடுத்த நாட்களில்

நான் அண்ணனுடன் பலமுறை பேச முயன்றும் முடியவில்லை. அவர் அனந்தபுரத்திலிருந்து கிளம்பித் தெற்கே சென்றுவிட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். ஆசான் இரவிநீலி பட்டதிரிக்கு நடந்தவையனைத்தும் பூடகமாகப் புரிந்தாலும் என்ன ஏதென்று என்னிடம் விளக்கம் கேட்கவில்லை நான் ஏற்கனவே மனமுடைந்து போயிருந்தேன் என்பதை அவர் புரிந்துகொண்டு விட்டார்.

ரேணுகாவைத் தந்தையாரின் மிருகத்தனமான தாக்குதல் உடலளவிலும் மனதளவிலும் கடுமையாகப் பாதித்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். ஏறக்குறைய மனநிலை பிறழ்ந்த நிலையில் இருந்தவளை அவளது வீட்டார் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அவளுடைய இந்த நிலைக்கு நானும் ஒரு காரணம் என்று ஒரு பக்கம் தோன்றினாலும் மறுபக்கம் அவள் என்னை ஏமாற்றியவள் தானே? என்று எனக்கு நானே சமாதானம் செய்து கொண்டேன். அண்ணன் அவளுக்காகப் பரிந்து பேசி தன்னுடைய வாழ்க்கையையே கெடுத்துக் கொண்டு விட்டார். நான் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டு கலநாயகமாகி விட்டேன் என்றுதான் அப்போது தோன்றியது.

என்றாலும் அவளை என்னால் மறக்கவே முடியவில்லை. கனவிலும் நினைவிலும் அந்த இரவில் நாங்களிருவரும் இணைந்து பெற்ற அனுபவங்கள் திரும்பத் திரும்ப அலைமோதின. என்னிடம் அவள் முதல் நாளிலிருந்து கடைசிக் கணம் வரை மிகுந்த அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொண்டது நினைவில் வந்து அழுத்தியது.

ஒரு வேளை நான்தான் அவளைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டேனா? அண்ணன் அவளது நிலைப்பாட்டினை சரியாகக் கணித்திருந்தாரா? எதற்காக இத்தனை பிரயத்தனம் பட்டுச் சாலையில் வெள்ளாட்டியாகச் சேர்ந்தாள்? [illegible] வித்தைகளை அவள் கற்றுக் கொள்வதற்கான நிர்ப்பந்தம் என்ன? என்று ஆயிரக்கணக்கான கேள்விகள் புறப்பட்டு எனது சிந்தையை ஆக்கிரமிக்கத் துவங்கின.

மாளிகைப்புரத்து வீட்டைப் பற்றி மேற்கொண்டு விசாரிக்கத் துவங்கினேன். அவர்களுக்கும் சோழர்களுக்கும் உள்ள நெருக்கம் உண்மைதான் என்று புரிந்தது. என்னுடைய இயலாமையைச் சோழர்களின் மீதான [illegible]

[illegible]ங்காத கோபமாக மாற்றிக் கொண்டேன். சோழர்களின் தூண்டுதலால் மாளிகைப்புரத்து வீட்டின் தம்புரான் ஆயுர்வேத வித்தையை அபகரிக்க நினைத்திருக்கிறார் அதற்காக ரேணுகாவைப் பகடைக்காயாக்கி அனுப்பியிருக்கிறார். அவளும் வெள்ளாட்டியாய் வேடமிட்டு வித்தையை அபகரித்து விட்டாள். செய்த தவறுக்கு இறுதியில் தண்டனையும் கிடைத்துவிட்டது என்று எனக்கு நானே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேன். இந்த நினைப்பு மிகுந்த ஆறுதலளித்தது. என் மனசாட்சியை சாந்தப்படுத்தியது.

நின்று நிதானித்து யோசிக்கும் இன்றைய மனப்பக்குவம் அன்று இருந்திருந்தால் நேராக ரேணுகாவைத் தேடிப் போயிருப்பேன் அவள் எதற்காக சாலையில் வெள்ளாட்டியாகச் சேர்ந்தாள்? அவளது சூழ்நிலை என்ன? என்பதைக் கண்டறிந்திருப்பேன். தந்தையாரின் நடத்தைக்கு மன்னிப்புக் கேட்டிருப்பேன் அண்ணனைக் கண்டுபிடித்து அவரது நிலைப்பாட்டையும் புரிந்து கொண்டிருப்பேன். [illegible]ம் அத்தோடு முடிந்து போயிருக்கும். என்னுடைய வாழ்க்கையும் வேறு பாதையில் திரும்பியிருக்கும்.

ஆனால் துரதிருஷ்டவசமாக நமது தந்தையாருக்கே உரித்தான வறட்டுப் பிடிவாதமும் வீண் கௌரவமும் அன்று என் மனதை ஆக்கிரமித்திருந்தன. என்னுடைய [illegible]பைத் தந்தையார் தூபம் போட்டு வளர்த்தார். நான்தான் வம்சத்தின் மானத்தைக் காக்கப் பிறந்தவன் என்று ஏதேதோ கூறி என்னைச் சமாதானப்படுத்தினார்.

ரேணுகாவிற்கு நேர்ந்த துன்பங்கள் அவளது வீட்டில் பெரியதொரு கலகத்தை உண்டாக்கிவிட்டனவென்றும் அவளுக்கு நாஞ்சில் நாட்டின் ஆயுர்வேத வைத்தியர்கள் [illegible] வைத்தியம் செய்து வருகிறார்கள் என்றும் தகவல் [illegible] அவள் மீது உயிரையே வைத்திருந்த ஒரே தம்பி அவளது சித்தம் தவறிய நிலையைப் பார்க்கச் சகிக்காமல் [illegible] விட்டே ஓடிவிட்டதாகவும் அவளது [illegible] அந்தக் கிழட்டுத் தம்புரான் நமது ஒட்டுமொத்தக் [illegible]த்தையும் வேரோடு சாய்க்காமல் விடுவதில்லையென்று சபதம் செய்துவிட்டு வெறியோடு அலைவதாகவும் [illegible] உலா வந்தன

தம்புரானின் மிரட்டலுக்கு நமது தந்தையார் பணிந்து [illegible]வில்லையெனினும் உங்களிருவருக்கும் ஏதாவது துன்பம்

நேர்ந்துவிடப்போகிறதே என்று கவலைப்பட்ட[illegible] உங்களைக் காந்தளூரில் சேர்க்காமல் இரிஞ்ஞாலக்குடையில் நமது சிற்றன்னை பெரிய நங்கைச் சாணியின் வீட்டில் சில காலம் தங்கவைக்கலாமென்று முடிவு செய்யப்பட்டது

இடையில் ஆசான் இரவிநீலி பட்டதிரியின் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது அதனைக் கேள்விப்பட்டு அண்ணனும் சாலைக்கு வந்தார் மரணப்படுக்கையில் அண்ணனையும் என்னையும் மற்ற கலத்தலைவர்களையும் ஒன்றாகக் கூட்டிய ஆசான், பிரயோகங்களில் மிகவும் சிறந்ததான நரசிம்மப் பிரயோகத்தை எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அவதார புருஷனான பரசுரா[illegible] மலைநாட்டின் முதல் ஆச்சாரியரான திரிவிக்கி[illegible] நம்பூதிரிக்கு நேரடியாகக் கற்றுக் கொடுத்த தொன்மையா[illegible] பிரயோகம் அது.

'இதனைக் கர்மசிரத்தையோடு பயிலும்வரை உங்களை எவரும் எப்போதும் வெல்ல முடியாது!' என்று கூறி ஆசான் எங்களை ஆசீர்வதித்தார். பின் என்னையும் மற்றவர்களையும் அனுப்பிவிட்டு அண்ணனுடன் மட்டும் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார். அன்றிரவு அவரது உயிர் பிரிந்து விட்டது.

ஆசான் இல்லாத சாலையில் எனக்கு இருக்கவே பிடிக்கவில்லை. சிறிது காலம் வேறிடத்திற்குச் சென்று வசித்தால் மனதிற்கு அமைதி ஏற்படுமென்று தோன்றியது. இறுதிக் காரியங்களுக்காக வந்திருந்த அவரது புதல்வர்களின் அழைப்பை ஏற்றுத் தில்லையில் சிலகாலமும் வீரநாராயண புரத்தில் சில காலமும் தங்கினேன். எனக்குத் தெரிந்த [illegible] முக்கியப் பிரயோகங்களை அவர்களுக்குக் கற்பித்தேன்.

முன்பே குறிப்பிட்டதைப்போல அப்போது சோணாட்டு அரசியலில் சோமனும் தாஸனும் பல[illegible] வேர் விட்டு வளர்ந்து கொண்டிருந்தார்கள். ஆட்சி பொறுப்பிலிருந்த இரண்டாம் பராந்தகரான சுந்தரச் சோழர் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவரது தலை[illegible] ஆதித்த கரிகாலருக்கு இளவரசுப் பட்டம் [illegible] விட்டிருந்தார்கள். என்றாலும் ஆதித்தருக்கு எதிராக [illegible] அணி அவரது குடும்பத்திற்குள்ளேயே உருவா[illegible] கொண்டிருந்தது. சிற்றரசர்கள் சிலர் இந்த அணிக்கு ஆதரவாக இருந்தார்கள்.

சோமனும் தாஸனும் இந்த எதிரணித் தலைவர்களுடன் [illegible] நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் அடிக்கடி [illegible] சம்பாஷணைகளும் கூட்டங்களும் நடைபெற்றன [illegible] இதில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை [illegible] அவ்வப்போது என்னிடம் ஆலோசனைகள் பெற்று [illegible] அவர்களது அணி வெற்றி பெற்று விட்டால் [illegible] தில்லைக்கருகில் பெரியதொரு சாலையை [illegible] கொடுக்கப் போவதாகவும் அதில் நான் [illegible] விளங்குவேனென்றும் உறுதி கூறினார்கள்

தாஸனுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மாளிகைப் [illegible] வீட்டிற்கும் சோழ அரசியல் அதிகாரிகளுக்கும் தொடர்புகள் ஏதேனும் உள்ளனவா என்று ஆராய்ந்தேன் [illegible] அப்போதும் என்னால் ரேணுகாவை மறக்க முடியவில்லை என்பதுதான் உண்மை.

தீர விசாரித்ததில் தொடர்புகள் அவ்வளவாகக் கிடையாதென்றும் முதலாம் பராந்தகர் காலத்திற்குப் பிறகே உறவுகள் பட்டுப்போய் விட்டனவென்றும் தெரிந்தது. ஆக தந்தையார் ரேணுகாவை சோழநாட்டவருடன் தொடர்பு படுத்திக் கூறியவை அனைத்தும் வெறும் பொய்கள் என்றானது. தனிப்பட்ட பகையை தந்தையார் வேறு விதமாகத் திசை திருப்பி விட்டிருக்கிறார் என்பதும் புரிந்தது [illegible] அடைந்த மனவேதனைக்கு அளவேயில்லை [illegible] உடனடியாக ரேணுகாவைச் சந்திக்கவேண்டுமென்று வேகம் உண்டானது

ஆனால் நான் வீரநாராயணபுரத்திலிருந்து உடனடியாகக் கிளம்ப முடியாத வகையில் சில சிக்கலான அரசியல் சம்பவங்கள் விறுவிறுவென்று நடந்து முடிந்து விட்டன...."

39. ஆதித்தர் படுகொலை



"ஆதித்தருக்கெதிராக ஒரு அரசியல் அணி திரண்டிருந்தது என்று குறிப்பிட்டேன் அல்லவா? அவர்கள் ஒரு கட்டத்தில் அவரை இரகசியமாகக் கொலையே செய்து விடுவது என்கிற பயங்கர முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.சோமனுக்கும் தாஸனுக்கும் இந்த முடிவை எடுப்பதில் பெரும் பங்கு இருந்திருக்கிறது. ஆனால் படுபாதகமான அந்தத் திட்டம் பரம இரகசியமானது என்பதால் எனக்கு முன்னரே தெரிவிக்கப் படவில்லை.

நான் ஏறக்குறைய அனந்தபுரத்திற்குத் திரும்பத் தயாராக இருந்த நேரத்தில்தான் தாஸன் அவசரமாக வந்து ஆதித்தரை எவரோ கொலை செய்துவிட்டதாகவும் சோழ நாடே அரசியல் குழப்பத்தில் ஆழ்ந்திருப்பதாகவும் இன்னும் ஒரு திங்கள் கழித்துப் பிரயாணம் மேற்கொள்வதே உசிதமாக இருக்குமென்றும் தெரிவித்தான். நான் அதிர்ந்து போனேன்! எங்கே எவ்வாறு கொலை நிகழ்ந்ததென்று துருவித் துருவி விசாரித்தேன். வீராதி வீரனான ஆதித்தனைக் கொலை செய்வது அத்தனை எளிதன்று என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது. என்னுடைய கேள்விக் கணைகளைத் தாங்கமாட்டாமல் ஒரு கட்டத்தில் தாஸன் நடந்தவை அனைத்தையும் ஒப்புக்கொண்டான். மலையாள தேசத்தவரின் நலன் கருதியே இந்த துராக்கிருகமான செயலைப் புரிந்ததாகவும் ஆதித்தன் சோழராஜனாகப் பதவிக்கு வந்திருந்தால் முதல் வேலையாக சேரமான் பெருமாளை ஒழித்துக் கட்டியிருப்பானென்றும் பலவித வார்த்தைகள் கூறி சமாதானம் செய்தான். எனக்கோ மனம் அமைதி பெறவில்லை.

"தாஸா! என்ன இருந்தாலும் நீங்கள் சோழ இராஜாங்கத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். கடமைப் பட்டவர்கள். மன்னரின் குடும்பத்தைச் சேர்ந்த இளவரசனை இரகசியமாகக் கொல்வதென்பது மிகப்பெரிய குற்றம். இராஜத்துரோகம்! நீ ஒரே ஒரு முறையாவது என்னிடம் இது பற்றிக் கலந்தாலோசித்திருப்பாயானால் நிச்சயம் வேறு மார்க்கத்தைக் காட்டியிருப்பேன். பெரியதொரு பாவச்

செயல் புரிந்து விட்டாய். வாழ்நாள் முழுவதும்- இன்னும் வரப்போகும் பலப்பல ஜென்மங்களுக்கும்... உன்னை இந்தப் பாவம் வாட்டியெடுக்கும்" என்றெல்லாம் அவனிடம் கூறினேன்.

"நிலைமை கைமீறிப் போய்விட்டது நாராயணா. வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. நடந்தது நடந்து விட்டது இனி நடக்க வேண்டியதை கவனிப்போம்!" என்பதாக அவன் பதிலளித்தான்.

ஆதித்தனை எவ்வாறு கொலை செய்தார்கள் என்பதற்கு அவனிடம் சரியான பதிலில்லை. சாதாரணமாகப் பட்டம் கட்டப்பட்ட ஒரு இளவரசனின் உயிரைப் பறிப்பதென்பதே நடக்காத காரியம். அதிலும் ஆதித்தனைப் போன்ற மாவீரனைப் படுகொலை செய்வதென்பது மிக மிகக் கடினமான காரியம். இது எவ்வாறு சாத்தியமானது என்பது எனக்குப் புலப்படவேயில்லை. பின் பலகாலம் கழித்துத்தான் அந்தக் கேள்விக்கு விடை கிடைத்தது. அந்தப் படுகொலை நான் எதிர்பார்த்ததைவிட மிகக் கேவலமான துர்ச்செயலாக இருந்தது சற்று அவசரக்காரனாக இருந்தாலும் வீராதி வீரனான ஆதித்தனுக்கு அப்படிப்பட்ட கோரமரணம் நேர்ந்திருக்கக் கூடாதுதான்! அது எத்தனை தூரம் அவர்களது குடும்பத்தாரை குறிப்பாக அவனுடன் உடன் பிறந்தவர்களை பாதித்திருக்குமென்பதை அன்றே என்னால் உணர முடிந்தது.

அதற்குப் பிறகு வீரநாராயணபுரத்திலேயே என்னைத் தங்க வைத்துவிட தாஸனும் சோமனும் பலவழிகளில் முயன்றார்கள். ஆனால் நான் பிடிவாதமாகக் கிளம்பிக் காந்தளூருக்கு வந்து விட்டேன். கொலையில் எனக்கு நேரடித் தொடர்பில்லை என்றாலும் தவறான நபர்களுடன் தவறான நேரத்தில் தவறான இடத்தில் இருந்ததினால் சந்தேகத்தின் தீவிர நிழல் என் மீதும் விழுந்து விட்டது. நான் ஏதோ ஆசானின் புதல்வர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு சோழசாம்ராஜ்ஜியத்தையே ஒரு கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு முயல்வதாகத் தீவிரமான எண்ணம் அரசியல் மட்டங்களில் ஏற்பட்டுவிட்டது அதனை இன்றுவரை மாற்ற முடியவில்லை.

காந்தளூருக்குத் திரும்பியவுடன் சில காலம் அமைதியாகக் கழிக்க வேண்டுமென்று நினைத்தேன் புதிய சட்டர்களுக்குப் பயிற்சி கொடுப்பதில் தீவிரமாக என்னை

ஈடுபடுத்திக் கொண்டேன். முடிந்தால் ஒருமுறையாவது ரேணுகாவைச் சந்திக்க வேண்டுமென்று பெரிதும் விரும்பினேன். ஆனால் எத்தனை முயன்றும் அவளை இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. நாஞ்சில் நாட்டில் எங்கோ ஒரு இரகசிய இடத்தில் அவளுக்கு ஆயுர்வேத வைத்தியம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததை மட்டும் அறிய முடிந்தது. அண்ணனுக்கு மட்டும் அவளின் இருப்பிடம் தெரியுமென்றார்கள். ஆனால் அவருக்கோ என்மீது உண்டான பழைய கோபம் இன்னமும் மிச்சமிருந்தது. அதனால் அவரையும் அணுகிப் பேச முடியவில்லை.

பிடிப்பில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்த எனக்கு தந்தையார் வலுக்கட்டாயமாகப் பெருஞ்செல்லூரி[illegible] வளர்ந்து வந்த மாமன் மகளை மணமுடித்து வைத்தார். எங்களுக்கு மைத்ரேயியும் காத்யாயினியும்[146] பிறந்தார்கள். மாளிகைப்புரத்து வீட்டாருக்கு குறிப்பாக ரேணுகாவி[illegible] என் குடும்பத்தைப் பழிவாங்கும் உணர்ச்சி மிச்சமிருக்[illegible] என்று நான் பயந்ததால் அவர்களிருவரும் பா[illegible] வீட்டிலேயே வளர்வதற்கு ஏற்பாடு செய்தேன். [illegible] மனைவியும் ஏறக்குறைய அங்கேயே அவர்களுடன் [illegible] தன்னுடைய காலத்தின் பெரும்பகுதியைக் கழித்தாள்.

சோமனும் தாஸனும் சோழ அரசியலில் வளர்[illegible] பிரம்மாதிராயர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களின் [illegible] பரமேஸ்வரனும் பிராயமெய்தி அவ்விருவரின் [illegible] கரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தான். அவர்[illegible] குடும்பத்தாருடன் நெருங்கிய தொடர்பிலிருந்த [illegible] உறவுகள் மலைநாட்டிலிருந்து வீரநாராயணச் சதுர்[illegible] மங்கலத்திற்கு இடம் பெயர்ந்தன. நமது சாலையிலிரு[illegible] வெளியான பலப்பல சட்டர்களுக்கும்கூட அக்காலத்[illegible] சோழ ராஜாங்கத்தில் பல மட்[illegible] பதவியிலமர்ந்தார்கள்.

ஒரு கட்டத்தில் தாஸனும் சோமனும் மீ[illegible] காந்தளூருக்கு வந்து செல்லத் துவங்கினர். தாஸ[illegible] பெருமுயற்சி செய்து, என் மீது தீராக் கோபத்தி[illegible] அண்ணனைச் சாந்தப்படுத்தி மீண்டும் காந்த[illegible]

[146] யாகஞவலகிய மகரிஷியின் இரு மணைவியரின் பெயர்களை இ[illegible] பெணகள தரிததிருநததாகக் கொளக.

அழைத்து வந்தான். அதற்காக நான் அவனுக்[illegible] நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். என் மீதான [illegible] விட்டாலும் அண்ணனால் நிம்மதியாகக் காந்தளூரில் இருக்க முடியவில்லை. பழைய ஞாபகங்க[illegible] துன்புறுத்துகின்றன என்பதால் பார்த்திவசே[illegible] விஷ்ணு பட்டாரகர் திருக்கோயிலைச் சேர்ந்த கோக்கருந் தடக்கன் சாலையில் அவரைப் பிரதான ஆசானாக ஆக்குவதற்கும் அவன்தான் முயற்சிகள் செய்தான். அண்ணன் குடும்பத்துடன் அங்கே குடிபெயர்ந்தார். மீண்டும் எனக்கும் அண்ணனுக்குமான உறவு மெல்லத் துளிர்த்தது. என்றாலும் ரேணுகாவைப் பற்றிய பேச்சு ஒரு போதும் அவரிடமிருந்து எழவில்லை. ஜாடை மாடையாக நான் கேட்ட கேள்விகளுக்குக்கூட அவரிடம் சரியான பதிலில்லை.

வருடங்கள் பல கழிந்தன. தாஸன் என்னுடன் மிக நெருக்கமானான். பல்வேறு அரசியல் பிரச்சனைகளுக்கும் என்னிடம் வந்து யோசனைகள் கேட்பான். நானும் தெரிந்ததைச் சொல்வேன். பாண்டி நாட்டின் காளாமுகர் சமூகமான மல்லிகார்ஜுன மடத்தாருக்கு எப்போதுமே நமது சாலையின் மீது மரியாதை உண்டு. பலமுறை அம்மடத்தைச் சேர்ந்த தென்னவன் ஆபத்துதவிகளுக்கு நமது சாலையின் பண்டைய ஆசான்கள் அங்கைப்போர் முறைகளைக் கற்றுத் தந்திருக்கிறார்கள். அந்த [illegible] பயன்படுத்திப் பலகாலம் கிழக்கும் மேற்குமாக நின்ற பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் நானும் தாஸனும் [illegible] உறவை ஏற்படுத்திக்கொடுத்தோம். தில்லைக்கருகே [illegible] சாலையை தாஸன் துவக்கினான். கீழச்சாலை என்பது அதற்குப் பெயர். அவ்வப்போது நான் அங்கும் சென்று வந்தேன். நமது சட்டர்கள் பலர் அந்தச் சாலையில் ஆசிரியர்களாக அமர்ந்தனர்

நானும் அண்ணனும் பங்கெடுத்துக் கொண்டபின் ஏறக்குறைய பதினைந்து வருடங்களுக்கு மேல் மலைநாட்டின் சாலைகளுக்கிடையிலான கலமறுக்கும் போட்டிகள் நடைபெறவேயில்லை. போட்டிகளை முன்னின்று நடத்த வேண்டிய பண்டைய சாலை ஆசான்கள் அனைவருமே அக்காலத்தில் ஒரு சேர மறைந்துவிட்டது ஒரு காரணமாக [illegible] போட்டிகளைக் கைவிட்டுவிட வேண்டாமென்று கருதி நானும் அண்ணனும் மற்ற சாலையாசான்களும் இணைந்து

பெருமுயற்சி செய்து மீண்டும் கலமறுக்கும் போட்டிகளை நடத்தினோம்.

அப்போட்டிகளில் பங்கெடுத்துக்கொண்ட கழிக்குடி ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை மாணவர்களின் வீச்சுக்கள் எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தின. விசாரித்ததில் எனது சந்தேகம் சரிதான் என்பது ஊர்ஜிதமாயிற்று. ஆசான்களின்றிப் பல காலம் மூடிக் கிடந்த அச்சாலையைத் தற்போது மாளிகைப்புரத்து வீட்டின் தம்புராட்டியார்தான் எடுத்து நடத்தி வருவதாகவும் பயிற்சிகள் மிகச் சிறந்த முறையில் ஏறக்குறையக் காந்தளூர்ச் சாலைக்கு இணையாக அளிக்கப்படுவதாகவும் தகவல்கள் கிடைத்தன. நமது வித்தையை இரகசியமாகக் கற்றறிந்துவிட்டு அதனை நமக்கெதிராகவே பிரயோகிப்பதா? என்று எனக்கு ஒரு பக்கம் கடுங்கோபம் ஏற்பட்டாலும் மறுபக்கம் ரேணுகா தனக்குரிய வாழ்வை ஒருவழியாக அமைத்துக் கொண்டு விட்டாள் என்று அமைதி ஏற்பட்டது. போட்டியின் இறுதிச் சுற்று வரை தேர்ச்சி பெற்ற கழிக்குடி மாணவர்கள் கடைசியில் நமது சட்டர்களிடம் தோல்வி அடைந்தார்கள். அவர்களிடம் "ஒரு போதும் காந்தளூரை வெற்றி கொள்ள முடியாதென்று உங்கள் தம்புராட்டியிடம் போய்க் கூறுங்கள்!" என்று சொல்லியனுப்பினேன்.

காலம் செல்லச் செல்ல ரேணுகாவைவிட வேறு பல விஷயங்கள் எனது வாழ்வில் முக்கியத்துவம் பெற்று விட்டன. நீங்களிருவரும் பிராயமெய்திச் சாலையில் சேர்ந்தீர்கள். அந்தக் கணத்திலிருந்து என்னுடைய கவனம் முழுவதும் உங்களிடம் குவிந்து விட்டது. பண்டைய தனுர் வித்தையின் நெளிவு சுளிவுகள் அனைத்தையும் எனக்குத் தெரிந்தவரையில் உங்களுக்குப் போதிக்க வேண்டுமென்ற முனைப்பு மனதில் ஆழமாக வேர் விட்டுவிட்டது. கடந்த பல வருடங்களில் நீங்கள் பெற்றுள்ள நுண்ணிய தேர்ச்சி மனதிற்கு மிகுந்த திருப்தியளிக்கிறது. மைத்ரேயனும் காத்யாயினியும் சாலையில் சட்டர்களாகச் சேரவில்லையென்பது தவிரச் சிறுவயது முதலே அவர்களுக்கும் நமது வித்தைகளைக் கற்றுக் கொடுத்து வந்திருக்கிறேன். பிற்காலத்தில் அவர்களும் இத்துறையில் சிறந்து விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

அண்ணன் தொடர்ந்து ரேணுகாவுடன் தொடர்பில் இருந்து வந்தாரென்பது தெரிந்தது. ஆனால் அவளைப் பற்றி நானோ அவரோ பேசிக்கொள்ளவேயில்லை. கடைசிவரை

அவர் ஒன்றும் சொல்லாமலே கூடப் போயிருக்கலாம் என்று தோன்றுகிறது. தேவையில்லாமல் தொடர்பற்ற பல செய்திகளைக் கூறிக் கண்ணை மூடும் நேரத்தில் மூளையைக் குழப்பிவிட்டுவிட்டார் யோசித்துப் பார்த்தால் அவரது சித்தம் அந்தக் கணங்களில் சுவாதீனத்தில் இருந்ததா இல்லையா என்பதே சந்தேகமாக இருக்கிறது."

பட்டதிரி ஒரு பெருமூச்சுடன் தனது மிக நீண்ட கதாசரிதையை ஒருவழியாக முடித்துக் கொண்டு நாற்புறங்களிலும் நோக்கினார். அந்தக் காரிருளில் கண்ணுக்குப் புலப்படாத பல அருவங்கள் அவரது சரித்திரத்தைக் கேட்டுத் தலையசைப்பதைப் போன்றதொரு பிரமை உண்டானது. தலையை மெல்லச் சிலுப்பிக் கொண்டார் அவர்.

"எப்படிப்பட்ட வாழ்க்கை அண்ணா உங்களுடையது! அப்பப்பா... எத்தனை இன்பங்கள்? எத்தனை துன்பங்கள்?" என்று வியந்தார் அச்சுதன் நம்பூதிரி. பொருள் நிறைந்ததொரு மௌனம் அங்கே சில நிமிடங்களுக்குத் தொடர்ந்தது.

"என்ன வாமனா! நீ ஒன்றும் கூறாமலிருக்கிறாய்? உறங்கிவிட்டாயா என்ன?" என்று மெல்லிய சிரிப்புடன் வினவினார் பட்டதிரி.

"வாய்விட்டுச் சொல்லமுடியாத பல உணர்ச்சி அலைகள் உள்ளத்தில் எழுந்து ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றன அண்ணா அதனால்தான் ஒன்றும் பேசத் தோன்றவில்லை என் மனதிலிருந்த விடை காணமுடியாத பல கேள்விகளுக்கும் இன்று விடை கிடைத்தது. அதே சமயத்தில் வேறு பல புதிய கேள்விகள் கிளம்பி அவற்றின் இடத்தை அடைத்துக் கொண்டு விட்டன. தேங்கிப் பெருகிக் கொண்டிருந்த உங்கள் எண்ணங்களின் ஓட்டத்தைத் தடை செய்ய வேண்டாமென்றுதான் இடையில் குறுக்கிட்டுக் கேள்விக் கணைகளை வீச முனையவில்லை."

"ஓ...அப்படியா! நல்ல காரியம்தான் செய்திருக்கிறாய். நான் கூறவேண்டியதை ஏறக்குறையக் கூறி முடித்து விட்டேன். இப்போது உன் முறை. கேள்விக் கணைகளை ஒவ்வொன்றாக நீ வீசத் துவங்கலாம்."

"முதல் விஷயம். முக்கியமான விஷயம். ஆதித்தரின் படுகொலை. அதன் பின்னணியைச் சற்றுப் புரியும்படி விளக்குவீர்களா?"

"எனக்குத் தெரிந்தவரையில் விளக்குகிறேன் முதலாம் பராந்தகரான வீரசோழருக்கு[147] நான்கு புதல்வர்கள். அவர்களில் தலைமகனான இராஜாதித்தர் பராந்தகரின் பட்ட மகிஷியும் சேரமான் விஜயராகவரின் புதல்வியுமான கோக்கிழானடிகளுக்குப்[148] பிறந்தவர். சோழ இளவரசராக அவருக்குப் பட்டம் கட்டி வைக்கப்பட்டதையடுத்து நமது பெருமாள் நந்திக்கரைப்புத்தூர் வெள்ளங் குமரனின் தலைமையில் பல நாடுவாழிக் குடும்பங்களிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட வீர சைனியப் படையொன்றை உருவாக்கி இராஜாதித்தருக்குத் துணையாக அனுப்பி வைத்தார். மலையாளிகள் சேனையென்றே அழைக்கப்பட்ட இச்சைனியம் திருநாவலூரில்[149] இராஜாதித்தருடன் தண்டூன்றியிருந்தது.

எதிர்பாராமல் ஏற்பட்ட தக்கோலப் பெரும்போரில் கங்க அரசன் பூதுகனின் வஞ்சகத் தாக்குதலுக்கு இரையாகி இராஜாதித்தர் வீரசொர்க்கம் புகுந்தார். இதனைத் தொடர்ந்து அவரது சகோதரரான கண்டராதித்தர் சோழ அரசராகப் பதவியேற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சிவநெறிச் செல்வரான அவருக்கு இதில் அதிகப் பிரியமில்லையெனினும் அந்நாளைய அரசியல் சூழ்நிலையை மனதில் கொண்டு இராஜ்ஜியபாரத்தை ஏற்றார். இடையில் ஏற்பட்ட பாண்டிநாட்டுக் கலகமொன்றில் பராந்தகரின் மற்றொரு புத்திரரான உத்தமசீலியும் உயிரை இழந்தார். அடுத்தடுத்து நடந்த இரு கோர மரணங்கள் பராந்தகரின்

---

[147] பராந்தகருக்கு வீரசோழர் என்றொரு பெயர் உண்டு.
[148] திருநாவலூர்க் கல்வெட்டு, திருநந்திக்கரைக் கல்வெட்டு மற்றும் பிற ஆதாரங்களின் அடிப்படையில் பராந்தகரின் முதல் மனைவியும் இராஜாதித்தரின் தாயுமான கேரள இளவரசியார் சேரமான் பெருமாள் விஜயராகவரின் புதல்வியே என்பதை கேரள வரலாற்றாய்வாளர் எம்.ஜி.எஸ்.நாராயணன் நிறுவியுள்ளார். பார்க்க - Studies in Keralite History எனும் புத்தகத்தில் இவரது Cheras and Cholas கட்டுரை. கிழானடிகள் என்பது சேர அரசியர் அனைவருமே தரித்திருந்த பட்டப் பெயராகும்.
[149] திருநாவலூரின் கல்வெட்டுகளில் இவ்வீரர்களின் பெயர்கள் பதிவாகியுள்ளன. முன்குறிப்பிடப்பட்ட நாராயணனின் கட்டுரை இவர்களின் பெயர்களையும் அவர்தம் நாடுவாழிக் குடும்பங்களையும் ஆராய்கிறது

உடல்நலத்தைப் பெரிதும் பாதிக்கவே, அவரும் சில காலத்தில் சிவலோகமெய்தினார்.

கண்டராதித்தரால் அதிக காலத்திற்கு சோழ இராஜாங்க பாரத்தை ஏற்க முடியவில்லை. அவருடைய புத்திரனான மதுராந்தகன் அப்பொழுது சிறு பிராயத்தினனாக இருந்தபடியால் அவரது தம்பி அரிஞ்சயருக்குப் பட்டம் கட்டி வைக்கப்பட்டது. மதுராந்தகன் பிராயமெய்தும்வரை அரிஞ்சயர் இராஜ்ஜிய பாரத்தை ஏற்பதென்றும் அவனுக்கு உரிய வயது வந்ததும் பட்டம் கட்டி வைத்துவிட வேண்டுமென்றுதான் ஏற்பாடு. ஹூம்... விதி வேறுவிதமாக விளையாடியது.

அரிகுலகேசரியான அரிஞ்சயர் பட்டமேற்ற சில காலத்திலேயே தொண்டை மண்டலத்தின் ஆற்றூரில் பொன்னுடல் நீக்கிப் புகழுடம்பெய்தினார். மதுராந்தகர் இன்னும் பாலகனாகவே இருந்தபடியால் [illegible] [illegible]யானையில் ஒளிந்துகொண்டிருந்த இரண்டாம் பராந்தகருக்கு அடித்தது இராஜயோகம்! சுந்தர சோழர் என்ற பெயருடன் பட்டமேற்றார் அவர். [illegible] அவருடைய தலைமகனான ஆதித்த கரிகாலனுக்கும் ஏறக்குறைய மதுராந்தகரின் பிராயம்தான் இருக்கும்.

காலம் செல்லச் செல்ல ஆதித்தர் கண்மூடித்தனமான வீரராக உருவானார். வீரபாண்டியன் சிரத்தைக் கொய்து வந்து அதனைத் தஞ்சைக் கோட்டை வாயிலில் [illegible] வைத்துக் கொக்கரித்தார். பாண்டியர்கள் கொதித்துப் போனார்கள். சேரமான் பெருமாள் தமது கைப்பட 'இது தகாத செயல்' என்று சோழருக்கு முறியெழுதியதாக ஒரு வதந்தி நிலவியது.

மதுராந்தகர் தமது தந்தையைப் பின்பற்றிச் சிவநெறிச் செல்வராகத் திகழ்ந்தார். முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அவருக்கு இளவரசுப் பட்டம் கட்டாமல் சுந்தரச் சோழர் நாட்கள் கடத்திக் கொண்டே [illegible] சோழ இராஜாங்கத்தின் பல்வேறு மட்டங்களிலும் [illegible]ங்கள் முளைத்தன. ஆதித்தருக்கு ஆதரவாகவும் மதுராந்தகருக்கு ஆதரவாகவும் அணிகள் திரளத் துவங்கின. முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி மதுராந்தகருக்கே சோழர் தரவேண்டும் என்று ஒரு சாரார் [illegible]ழுந்தனர். மற்றவர்களோ நாட்டு நிலைமையை [illegible] வடக்கே இராஷ்டிரகூடர்களும் தெற்கே பாண்டியர்களும்

பலம் பெற்று வருகின்றனர். இந்நிலையில் ஆதித்தரைப் போன்றதொரு மாவீரர் பட்டமேற்றால்தான் சமாளிக்க முடியும் என்று வாதிட்டனர்.

அந்தக் கட்டத்திலாவது சுந்தரச் சோழர் அனைவரையும் ஒன்றாகக் கூப்பிட்டு தமது எண்ணத்தை வெளிப்படையாகத் தெரிவித்து அனைவரும் ஏற்கக்கூடிய நல்லதொரு முடிவை எடுத்திருந்தால் விஷயம் சுமுகமாக முடிந்திருக்கும். ஆனால் அவர் ஏனோ அவ்வாறு செய்யவில்லை. எங்கே சிற்றரசர்கள் அனைவரையும் கூப்பிடப்போய் அவர்கள் அனைவரும் மதுராந்தகருக்கு ஆதரவாகத் திரும்பிவிட்டால் என்னாவது என்கிற கவலை அவரை வாட்டியிருக்கலாம். நாளுக்கு நாள் இந்தப் பிரச்சனை முற்றிக்கொண்டே வந்தது...."

40. மலைநாட்டுச் செய்தி முறைமை



"ஒரு கட்டத்தில் ஆதித்தர் அணியின் வற்புறுத்தல் தாங்க முடியாமல் அவருக்கே இளவரசுப் பட்டம் கட்டி வைத்தார் சுந்தரச் சோழர். இந்த நிகழ்வு எப்படிப்பட்ட எதிர் விளைவுகளை அரசியல் மட்டங்களிலும் விளைவித்திருக்கும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம். ஆதித்தன் வீரன் என்பது எத்தனை உண்மையோ அத்தனை தூரம் அவன் முரடன் என்பதும் உண்மை. விவேகமற்ற வீரம் ஆபத்தானது. அதனால் நமது சேரமான் பெருமாளுக்கோ நாடுவாழிகளுக்கோ சுந்தரச் சோழரின் இந்த முடிவு பிடித்தமானதாக இல்லை.

ஆதித்தருக்கு எதிராக அணிதிரண்டிருந்தவர்கள் ஒன்றாகக் கூடி சதியாலோசனையில் ஈடுபட்டார்கள். அந்த ஆலோசனையின் முடிவு ஆதித்தரின் கொலையில் சென்று முடிந்தது..."

"இவ்வாறு கொலைச்சதியில் ஈடுபட்டவர்கள் குறிப்பாக யார் யார் என்று சொல்ல முடியுமா அண்ணா?"

"அவ்வாறு குறிப்பிட்டுச் சொல்லவியலாது தம்பி! நான் முன்பே குறிப்பிட்டதைப்போல வீரநாராயணபுரத்தில் தங்கியிருந்த நேரத்தில் மிகக் குறைந்த அளவு விபரங்களே எனக்குத் தெரிவிக்கப்பட்டன. அவற்றைத் தெரிவித்த

தாஸனோ வேறு யாருடனும் அந்த இரகசியங்களைக் கண்டிப்பாகப் பகிர்ந்துகொள்ளக் கூடாதென்று என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு விட்டான். பின்னாளில் நான் ஒரு சில தகவல்களை மட்டுமே பெற முடிந்தது. இன்று என்றில்லை. இன்னும் நூறாண்டுகள் கழித்து அந்த ரகசியங்கள் உண்மை வெளிப்பட்டாலும் அது தென்னகத்தையே உலுக்கிவிடும்! அத்தனை கொடிய சதி அது. சோழ இராஜாங்கத்தின் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ள நபர்கள் அதில் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள் என்று மட்டும் கூறிக் கொள்கிறேன்."

"அப்படியெனில் இரவிநீலி குடும்பத்தாரை மட்டும் அருள்மொழிவர்மன் தண்டித்ததில் நியாயமில்லையே? சதியில் ஈடுபட்ட அனைவரையும் கூண்டோடு பிடித்துச் சிறை செய்திருக்க வேண்டுமல்லவா?"

"அதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அவன் திருடர்களுக்கெல்லாம் திருடன். எப்போது என்ன செய்வான் என்பதை யாரும் எளிதில் கணித்துவிட முடியாது. உண்மையில் சதியில் ஈடுபட்டது சோமனும் அவர்தம் தம்பிமாரும்தான் என்று வைத்துக் கொள்வோம். தவறு செய்தவர்களை மட்டும் தண்டிப்பதுதானே நியாயம்? அதை விடுத்து அவர்கள் குடும்பத்தில் பெண் கொடுத்தவர், பெண்ணெடுத்தவர், மாமன், மைத்துனன், பேரன், பெயர்த்திகள் என்று ஏறக்குறைய வீரநாராயணபுரத்திலிருந்த நூற்றுக்கணக்கான குடும்பங்களையுமல்லவா விரட்டியடித்து விட்டான்[150]? இது எல்லா அரசியல் தர்மங்களுக்கும் அப்பாற்பட்டதல்லவா!

அவர்களை விரட்டிய கையோடு இப்போது நம்மைக் குறி வைத்திருக்கிறான். காந்தளூர்ச் சாலைப் படையெடுப்பு வரலாற்றில் ஒரு அழிக்க முடியாத கறையாகப் படிந்து ஆகப் போகிறது."

"ஒருவேளை சதியில் ஈடுபட்டுள்ள சிலர் அவனது குடும்பத்தையே சேர்ந்தவர்கள் என்பதினால்தான் அவ்வாறு தண்டிக்க முயலவில்லையா என்ன?"

"வாமனா! இது பற்றி எனக்குத் தெரிந்த தகவல்கள் அனைத்தையும் கூறிவிட்டேன். மேற்கொண்டு எந்த

---

150 பார்க்க Epigraphia Indica Vol 21 / No 27 (உடையார்குடிக் கல்வெட்டு).

விபரங்களைக் கேட்காதே. சாலையின் ஆசான்கள் அரசியல் வட்டாரங்களிலிருந்து சற்று ஒதுங்கியிருப்பதே நல்லது என்னும் பெரியதொரு உண்மையை எனது வாழ்வில் கற்றுக் கொண்டு விட்டேன்.”

“உங்களுக்கு விருப்பமில்லையென்றால் இந்த விஷயத்தைப் பற்றி மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை அண்ணா” என்றார் வாமனர் அடக்கமாக. என்றாலும் அவரது குரலில் சிறிதளவு ஏமாற்றம் தொனித்தது.

அச்சுதன் நம்பூதிரி தொண்டையைச் சிறிதளவு கனைத்துக் கொண்டார். “தவறாக நினைத்துக் கொள்ளவில்லையென்றால் நான் அடுத்த கேள்வியைக் கேட்கிறேன் அண்ணா. தாஸயேட்டன்[151] குடும்பத்தாருடன் தாங்களும் சேர்ந்து கொண்டு சோழநாட்டின் அரசியல் அமைப்பையே மாற்ற முயல்வதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளதே? அதைப் பற்றிச் சற்று விளக்கமாகக் கூறுவீர்களா?”

“ஹும்...” என்று நீண்டதொரு பெருமூச்சு பட்டதிரியிடமிருந்து வெளிப்பட்டது. “தம்பி! ஒரு சில சமயங்களில் நாம் செய்ய நினைக்கும் நல்ல செயல்கள் வேறு விதமாகச் சென்று முடியும். பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்கில் முடிந்த கதையை நாம் கேள்விப்பட்டதிலையா? அதனைப் போன்ற விவகாரம் அது. அதனால் சற்று விளக்கமாகவே கூறுகிறேன்.

நீ கூறும் அந்தக் குற்றச்சாட்டு உண்மைதான். ஆனால் நானும் தாஸனும் உண்மையில் என்ன செய்ய முயன்றோம் அதன் பின்னணி விபரங்கள் என்ன என்பதை நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டீர்களானால் நாங்கள் உண்மையில் பிடிக்க முயன்றது பிள்ளையாரைத்தான் என்பதை உணர்வீர்கள்.

பண்டைய காலத்திலிருந்தே சேர- சோழ - பாண்டியர் எனும் மும்முடி மன்னரின் ஆட்சி தென்னகத்தில் நிலைபெற்று விட்டது. களப்பாள இராஜர் காலத்திலும் அதற்குப் பின்வந்த பல்லவர் காலங்களிலும்தான் மலைநாட்டின் அரசியலமைப்பு மெல்ல மாறத்துவங்கியது. மத்தியில் ஒரே ஒரு முடிமன்னர். அவரிடமே அதி...

[151] தாஸன் + சேட்டன் என்பதை தாஸயேட்டன் என்று மலையாளத்தில் குறிப்பிடுவார்கள்.

இராஜ்ஜிய அதிகாரங்களும் அடக்கம் எனும் பழைய வழிமுறையின் சாதக பாதகங்களை ஆராய்ந்த நமது முன்னோர்கள் அதற்கு பதிலாக வேறொரு வழிமுறையை புகுத்தினார்கள். மலைநாட்டுச் செய்தி முறைமை[152] என்பது இதற்குப் பெயர்.

இந்த அமைப்பில் ஒட்டுமொத்த அதிகாரங்களையும் ஒரே மன்னரிடம் குவிந்திருப்பதற்கு பதில் படிப்படியாகப் பல்வேறு நிலைகளிலும் பிரித்தளிக்கப்படும். பெருமாள் அரசரே நாட்டின் தலைவர். அதில் சந்தேகமில்லை. ஆனால் அவருக்குத் தகுந்த ஆலோசனைகள் கூறி நெறிப்படுத்தும் அதிகாரம் ‘நாலுதளிக்காரர்கள்’ என்றழைக்கப்படும் குழுவுக்கு உண்டு. மகோதயபுரத்தையொட்டிய நான்கு தளியதிகாரிகளை மட்டும் இக்குழு கொண்டிருந்தாலும் அவர்கள் நாட்டின் மற்ற தளிக் குழுக்களையும் கலந்தாலோசித்தே பெருமாளுக்கு ஆலோசனைகள் வழங்க வேண்டும். நாலுதளிக்காரர்களின் கூட்டங்களில் பெருமாள் அரசரோ அவரது பிரதிநிதிகளோ கலந்து கொண்டேயாக வேண்டும் என்பது விதி[153].

நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இறை வசூலிக்கும் அதிகாரம் செலுத்தும் உரிமை பண்டைய குறுநில மன்னர்களான நாடுவாழிகளுக்கு மட்டுமே உண்டு. இவர்கள் பெருமாள் அரசரின் அதிகாரத்தை ஏற்றாலும் தத்தம் பகுதிகளில் நடக்கும் நன்மை தீமைகளில் தாங்களே தலையிட்டுத் தீர்த்து வைக்கலாம். நாட்டை எதிரிகள் தாக்க வரும்போது உரிய படைவீரர்களை கொடுத்தனுப்பும் கடமை இவர்களுக்கு உண்டு. பெருமாளின் ஒன்றுகுறை ஆயிரத்தவர் படைகளுக்கு வருடாவருடம் இவர்கள் நெல்லும் பிறவும் படியளந்தாக வேண்டும்.

இவையெல்லாவற்றையும் தவிர பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை திருநாவாயில் நடக்கும் மாமாங்கத் திருவிழாவில் பெருமாள் அரசராக தன்னவர் தனது வீரத்தையும் விவேகத்தையும் நிரூபித்தாக வேண்டும்.

[152] [illegible]கிழார் நாயனாரின் பெரிய புராணத்தில் இதனை [illegible] குறிப்பிடுகிறது. கழறிற்றறிவார் இவ்வழிமுறையைப் பின்பற்றி சேரமான் [illegible] நாயனாராகப் பட்டமேற்றதாக இந்நூல் உரைக்கும்.

[153] இதற்கான கல்வெட்டு – செப்பேடு – இலக்கியச் சான்றுகளை [illegible]ஜி.எஸ். நாராயணன் ஆராய்ந்துள்ளார்.

அப்படி நிரூபிக்கத் தவறினால் வேறொருவர் அரசராகப் பதவி ஏற்பார் என்றெல்லாம்கூட பழக்கங்கள் இருந்தனவாம். பின்னாளில் இவை பல்வேறு காரணங்களால் கைவிடப் பட்டுவிட்டன.

இவ்வாறு அமைந்த மலைநாட்டுச் செய்தி முறைமையின் அடிப்படை நியதிகள் என்னவெனில், ஒருவன் இராஜகுலத்தில் பிறப்பதினால் மட்டும் நாடாளும் உரிமை பெற்று விடுவதில்லை. அதற்கான தகுதிகள் அவனிடம் இருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் தகுதி நிறைந்த ஒருவருக்கு அந்த இடத்தை விட்டுக் கொடுத்து விட வேண்டும். மேலும், ஒருவரிடமே ஒட்டு மொத்த அதிகாரமும் குவிந்திருப்பதற்கு பதில் அதிகாரம் பல மட்டங்களிலும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதே.

இந்த மேலான அமைப்பு சோழ நாட்டிலும் இருந்திருந்தால் மதுராந்தகனுக்குரிய மகுடத்தைப் பறித்துத் தன் மகனுக்கு அளிக்க வேண்டுமென்று சுந்தரச் சோழருக்குத் தோன்றியிருக்காது. ஆதித்தன் படுகொலை போன்றதொரு அரசியல் விபத்தும் ஒருக்காலும் நிகழ்ந்திருக்காது. ஆக இவ்வாறான அரசியல் குழப்பங்கள் பிற்காலத்தில் நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்று மலைநாட்டில் இருப்பதைப் போன்றதொரு அமைப்பை சோழ-பாண்டி நாடுகளில் ஏற்படுத்த வேண்டுமென்று தாஸன் பெரிதும் விரும்பினான். அவனுடைய நோக்கம் நல்லதாகத் தென்பட்டதால் அதற்கு நானும் ஒத்துழைத்தேன். சோழ நாட்டில் நான்கு தளிகள் தேவையில்லை. ஒரே ஒரு தளி இருந்தாலே போதுமானது என்று முடிவு செய்தோம். அந்தத் தளி தென்னாட்டின் சைவக் கோயில்களுக்கெல்லாம் தலையாய திருக்கோயிலாக விளங்கும் தில்லை பொன்னம் பலம். சோழர்களுக்கும் தில்லைக்கும் நீண்ட நெடுநாள் தொடர்பிருப்பதால் இது சாத்தியப்படும் என்றே தெரிந்தது. தில்லைத் திருக்கோயிலின் மூவாயிரவரிடம் இதற்காகப் பலமுறை பேச்சு நடத்தினோம். மதுராந்தகர் உத்தம சோழரும் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டார். இதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட போதுதான் சளுக்கனான இரண்டாம் தைலப்பனின் படையெடுப்பு தொண்டை மண்டலத்தில் நிகழ்ந்தது. பின் எல்லாமே மாறிப்போய் விட்டது!"

"சோமன் மறைந்துவிட்டார் என்பதை நாங்களறிவோம். தாஸயேட்டனும் அவரது குடும்பத்தாரும் இப்போது எங்கே இருக்கிறார்கள் அண்ணா?"

"வீரநாராயணபுரத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டபின் அவனிடமிருந்தோ அவன் குடும்பத்தாரிடமிருந்தோ தகவல்கள் எதுவுமில்லை. பெருஞ்செல்லூருக்கருகே அமைந்துள்ள அவர்களது சொந்த கிராமக்ஷேத்திரத்திற்குச் சென்று விட்டதாகக் கேள்வி."

"சாலையை நிஜமாகவே சோழப்படைகள் தாக்கப் போகின்றனவா அண்ணா?"

"இதுவரை வந்துள்ள தகவல்கள் அப்படித்தான் தெரிவிக்கின்றன. பண்டைய கல்வி கேந்திரமான காந்தளூர்ச் சாலை தாக்கப்பட்டால் சேரநாடே கொதித்தெழும்! பெருமாள் வேறு வழியின்றித் தனது படைகளை அனுப்ப வேண்டி வரும். எல்லா நாடுவாழிகளும் ஓரணியாகத் திரளுவார்கள். இறுதியில் தனது முடிவை தானே தேடிக் கொள்வான் அந்த அகம்பாவி!" -ஆவேசமாகப் பேசியதால் பட்டதிரிக்குச் சற்று மூச்சு வாங்கியது.

"நிதானம் அண்ணா! நிதானம். சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நீண்ட நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்."

"இப்படி உங்களுடன் மனம்விட்டுப் பேசக்கூடிய சந்தர்ப்பங்கள் காந்தளூரில் அமைவதில்லையே தம்பி? அதனால் இப்போது பேசித்தானாக வேண்டும். வேறு ஏதேனும் கேள்விகள் உண்டா?"

"கேள்விகள் ஒரு பக்கம் கிடக்கட்டும் அண்ணா.. நமது [illegible]யனார் தம்முடைய இறுதிக்கணங்களில் உங்களிடம் எதையோ கூற முயன்றார் என்பதைப் பற்றியல்லவா நாம் பேசத் துவங்கினோம்? அந்த விஷயத்திற்கே மீண்டும் வருவோமா?"

"ஆம். அந்தப் புதிருக்கு மீண்டும் வந்துதானாக வேண்டும். அதோ வானத்தின் சப்தரிஷி மண்டலத்தின் அமைப்பைப் பாருங்கள். இரவு இரண்டாம் ஜாமம் முடிந்து மூன்றாவது துவங்கிவிட்டது. விரைவில் நமது உரையாடலை முடித்துக் கொண்டு சிறிது நேரமாவது உறங்கினால்தான் நாளை காலை இங்கிருந்து கிளம்ப முடியும்."

"சரட... அல்லது சாட - அது சம்மந்தமாக ஏதேனும் உங்களுக்குத் தோன்றுகிறதா அண்ணா? ஒருவேளை 'சரசமாக' இருக்குமா? இல்லையே.. மரணப்படுக்கையில் நினைக்க வேண்டிய வார்த்தையல்லவே அது?"

"எனக்கு ஒன்றும் தோன்றவில்லை தம்பி. கழிந்து போன இத்தனை வருடங்களில் என்னிடம் நேரடியாகத் தம்புராட்டியாரைப் பற்றி ஒரு வார்த்தைகூட அவர் பேசியதில்லை. அப்படிப்பட்டவர் இறுதிக் கணங்களில் ஏன் அவளைப் பற்றிக் குறிப்பிட்டாரென்பது தெரியவில்லை. அவளுக்கும் சரட அல்லது சாட என்கிற வார்த்தைக்கும் என்ன தொடர்பு? இதில் எங்களின் ஆசான் இரவிநீலன் எங்கிருந்து முளைத்தார்?"

"அண்ணியார் நம் மீது இன்னமும் கோபமாக இருப்பதற்குக் காரணமென்ன? கலமறுக்கும் போட்டிகளில் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை மாணவர்களால் ஜெயிக்கவே முடியவில்லை என்பதாலா?"

"அதனை மட்டும் காரணமாகக் கூறமுடியாது வாமனா. வேறு ஏதோ விவகாரம் இதில் அடங்கியிருக்கிறது. ஏனெனில் கலமறுக்கும் போட்டிகள் அதன்பின் நடைபெறவேயில்லை. பல்வேறு பிரச்சனைகளை... வித்திடும் அப்போட்டிகளை நீண்ட இடைவெளிக்குப் பிறகே கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு ஒரு முறையே நடத்த வேண்டுமென்று சென்ற போட்டிகளின் போது முடிவு செய்து விட்டோம்."

"என்ன? இருபது வருடங்களுக்கு ஒரு முறையா?"

"ஆமாம்!"

"சென்ற போட்டிகள் நடந்த வருடத்தின் பெயர் ஞாபகத்தில் உள்ளதா?"

"அதனை எப்படி மறக்க முடியும்? பிரமோதூத வருடத்துக் கலப்போட்டிகள் என்றுதானே அறி... செய்தோம்?"

கணிதத்தில் வல்லவரான வாமனரின் விரல்கள் ... வேகமாகக் கழிந்துவிட்ட வருடங்களை எண்... "அண்ணா! பிரமோதூத வருடமென்றா சொன்னீர்கள்?"

"ஆம்! ஏன் கேட்கிறாய்?"

"நடந்து கொண்டிருப்பது சர்வதாரி வருடம். அடுத்து வருவது விரோதி. பிரமோதூதத்திலிருந்து இருபதாவது ஆண்டு. கலமறுக்கும் போட்டிகளை நீங்கள் அடுத்த ஆண்டு நடத்தியாக வேண்டும் அண்ணா!"

"ஆம், நடத்தியாகத்தான் ஆகவேண்டும். அதை நானும் அறிவேன்" - அதுவரை கம்பீரமாக ஒலித்துக் கொண்டிருந்த பட்டதிரியின் குரல் ஏனோ மிகவும் கம்மி விட்டது.

"புது வருடம் பிறப்பதற்கு இன்னும் ஒன்றரை மாதங்களே உள்ளன அண்ணா!" என்றார் அச்சுதன் பரபரப்புடன். அதுவரை இடைவிடாமல் பேச்சு நிகழ்ந்து கொண்டிருந்த அந்த நதிக்கரையில் நீண்ட நேரத்திற்கு அர்த்தம் மிக்கதொரு மௌனம் படிந்து நின்றது.

41. ஆரைவாய்மொழி



முப்புறமும் கடலால் சூழப்பட்ட தீபகற்பமாக விளங்கும் தட்ஷிண தேசத்தின் தென்மேற்குப் பகுதியான மலைநாடு எனப்படும் கேரளத்திற்கும் தென் கிழக்குப் பகுதியான தமிழகத்துக்கும் இடையே இயற்கையன்னை எழுப்பிய அரணாக மேற்குத் தொடர்ச்சி மலை விளங்குகிறது. இம்மலையினூடே அமைந்திருக்கும் இரு முக்கியக் கணவாய்களே அந்நாளில் நில மார்க்கமாக மலைநாட்டுக்குச் செல்வதற்கு ஏற்ற வழிகளாக அமைந்திருந்தன.

இவ்விரு கணவாய்களுள் வடக்கே அமைந்திருந்த பாலக்காட்டுக் கணவாய் மலையாள தேசத்தின் ... பகுதிகளுக்குச் செல்வோர் பயன்படுத்தும் பாதையாக விளங்கியது. குறிப்பாக அந்நாட்டின் தலைநகரமான மகோதயபுரம் எனப்படும் கோநகருக்கும் அதனை யொட்டி அமைந்திருந்த பகுதிகளுக்கும் செல்லும் முக்கிய வணிகப் பாதையாக பாலக்காட்டுக் கணவாய் அந்நாளில் திகழ்ந்தது. மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்கே அமைந்திருந்த ஆரல்வாய்மொழிக் கணவாயோ கேரளத்தின் தென் பகுதிகளாக அன்று விளங்கிய நாஞ்சில் நாடு, புறத்தாய நாடு, குறுநாடு, வள்ளுவ நாடு, விழிஞம், திருவனந்தபுரம், ...நாடு முதலான பகுதிகளுக்குச் செல்ல விழைவோர்

பயன்படுத்தும் பாதையாக விளங்கியது. இங்கே நாடுகளாகக் குறிக்கப்படும் பகுதிகள் அனைத்தும் பிற்காலத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானமாக உருவெடுத்தன.

பொதிய மலை என்று முற்காலத்தில் குறிக்கப்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பயணம் மேற்கொள்பவர்கள் அதன் அடர்த்தியான பசுமையையும் இயற்கையன்னையின் பால் சுரக்கும் மார்பகங்களாய் அருவிப் புனல்களுடன் பூமியிலிருந்து விம்மிப் புடைத்து மேலெழும் மலைத்தொடர்களையும் கண்டு பிரமித்துப் போய்விடுவார்கள். வஞ்சனையில்லாமல் படர்ந்து கிடக்கும் கரும்பச்சைக் நிறக் கொடிகளும் வானளாவக் கிளை பரப்பி விரியும் மரங்களும் வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் செடிகளுமாய் இயற்கையன்னையின் பரிபூரண அரவணைப்பில் சதாசர்வகாலமும் படுத்துக் கிடக்கும் அந்த சொர்க்க பூமியை ஊடறுத்துச் செல்லும் ஆரல்வாய் மொழிக் கணவாய் அந்நாளில் ஆரைவாய்மொழி என்று குறிப்பிடப்பட்டது. "நாஞ்சி நாட்டு ஆரைவாய்மொழி"[154] என்பது கல்வெட்டு வாசகம். இவ்வாறு பாண்டி நாட்டிலிருந்து மலைநாட்டுக்குச் செல்லும் முக்கியக் கணவாயான ஆரைவாய்மொழியில் பெருங்கோட்டை யொன்றும் அக்காலத்தில் அமைந்திருந்ததாக அறிகிறோம்.[155]

* * * * * * * *

அந்தக் கார்கால மாலை நேரத்தில் ஆரைவாய்மொழிக் கணவாயானது சந்தடிகள் அதிகமின்றி அமைதியாகக் காணப்பட்டது. எப்போதும் அங்கே நிலவும் வணிகப் போக்குவரத்து கூட அவ்வேளையில் அடியோடு நின்று போயிருந்தது வினோதம்தான். கணவாய்க்குத் தொலைவில் நீண்ட கோட்டை மதிலொன்று விரிந்து படர்ந்திருந்தது. அம்மதிலையொட்டி மேலெழுந்த அடர்ந்த மலைக்காட்டின் நடுப்பகுதியில் பெரியதொரு சரிவின் ஓரமாக அமைந்திருந்த சிறு தளத்தில் ஒரு வீரர் குழாம் கூடாரமிட்டுத் தண்டூன்றியிருந்தது. அவர்கள் நிற்கும் இடத்திலிருந்து கணவாயின் நடமாட்டங்களை துல்லியமாகக் கண்காணிக்க

[154] Travancore Archaeological Series Vol VI P 98 .

[155] இன்றும் கூட இப்பகுதிகள் கோட்டைக்கரை என்றே அழைக்கப் படுகின்றன.

ஏற்றவாறு அம்மலைப்பகுதியின் ஏற்ற இறக்கங்கள் அமைந்திருந்தன.

தண்டூன்றியிருந்த வீரர்கள் அந்த முன்மாலை நேரத்தில் பல்வேறு செயல்பாடுகளில் மூழ்கியிருந்தார்கள். ஒரு சிலர் கேடயத்தையும் வாளையும் கையிலேந்தி உடல் முழுவதும் எண்ணெய் தடவிக்கொண்டு விர்- விர்ரென்று வீரச் சுழற்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். வேறொரு புறம் இரு வீரர்களுக்கிடையே துவந்த யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர்களைச் சுற்றிக் கூடியிருந்த கூட்டமானது இருவரின் சாகசங்களையும் ஆஹாகாரம் செய்து இரசித்தது. பல நிமிட நேரங்களுக்கு நீடித்த அந்த யுத்தத்தின் இறுதியில் ஒருவன் மற்றவனை அப்படியே தலைக்கு மேல் அந்தரத்தில் தூக்கி நான்கு சுழற்று சுழற்றி வீசியெறிந்தான்! "அம்மா..." என்றொரு பலகீனமான சப்தம் வீசப்பட்டவனிடமிருந்து எழுந்தது.

கூடாரங்களுக்கு வடக்கே சற்று ஒதுக்குப்புறமாக எரிந்து கொண்டிருந்த மெல்லிய நெருப்பில் மலைக் குளிருக்கு இதமாக இரண்டு உருவங்கள் குளிர் காய்ந்து கொண்டிருந்தன. கரங்களைத் தீயின் முன்பாக நீட்டுவதும் அடுத்த சில கணங்களில் சூடாகிவிட்ட அக்கரங்களை கன்னத்தில் வைத்துக்கொள்வதுமாக இளஞ்சூட்டு இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த அவ்விரு பெரிய மனிதர்களையும் நாம் சில காலங்களுக்கு முன் விழிஞம் துறைமுகக் கோட்டையில் சந்தித்திருக்கிறோம்.

"இறைவன் நடுக்கும் குளிரைப் படைத்தான். பின் அதனை ஈடு செய்யும் பொருட்டு நெருப்பையும் படைத்தான். நெருப்பைப் படைத்தவன், அதனை ஈடு செய்யும் பொருட்டு நீரைப் படைத்தான். அடடா! எத்தனை அரிய பேரியக்கம் இது!" என்று வியந்தார் கோவர்தன மார்த்தாண்டர்.

அவருக்கு எதிரில் அமர்ந்திருந்த வள்ளுவ நாடாழ்வாரின் புருவங்கள் நெறிபட்டன. "என்ன இது [illegible]ர்த் தத்துவம் ?"

"தத்துவம் என்றில்லை. வாழ்க்கையின் இடைவிடாத சுழற்சியை நினைத்து வியந்தேன். அவ்வளவுதான்!"

"உண்மை. நமது தாய்மண்ணான மலைநாட்டின் தலை [illegible]யும்கூட ஒரு சுழற்சியுடன்தான் சென்று

கொண்டிருக்கிறது சமீப காலங்களில் மட்டும் எத்தனை ஏற்ற இறக்கங்கள்!"

"பாண்டிய உத்தர மந்திரியாரிடமிருந்து செய்திகள் ஏதேனுமுண்டா?"

"சில நாட்களுக்கு முன் பாண்டி தேசத்தை விட்டுக் கிளம்பி விட்டார்களென்று செய்தி வந்தது எந்நேரமும் அவர்களை இங்கு எதிர்பார்க்கலாம்."

"சுந்தரபாண்டியபுரத்தில் பாண்டிப் படைகள் நிலவரம் என்ன? உங்களுக்கு அது சம்மந்தமாக செய்திகள் ஏதேனும் வந்தனவா?"

"இல்லை படைகளைத் தண்டூன்றத் தேவையான பொருளாதார வசதிகளை இன்றைய நிலைமையில் நம்மால் செய்து கொடுக்க முடியவில்லை அதனால் வீரர்களை அவரவர் கிராமங்களுக்கே அனுப்பி வைத்துவிட்டுச் சிறிது காலத்தில் மீண்டும் கூட்டிக் கொள்ளலாமென்று அமாபுஜங்கர் முடிவெடுத்து விட்டார்."

"சோழனின் மதுரைப் படையெடுப்பிற்கு முன்பாகவே பாண்டிநாட்டுப் பொக்கிஷங்களை நமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தாயிற்றே? அதற்குப் பின்னரும் பொருளாதார வசதிகளுக்கு என்ன தடை இருக்க முடியும்?"

"பண்டைய பாண்டிநாட்டுப் பொக்கிஷத்தின் பெரும் பகுதி பல காலத்திற்கு முன்னரே இலங்கையில் அகப்பட்டுக் கொண்டு விட்டதென்று பாண்டியர் கைவிரிக்கிறார் அவர் சொல்வது உண்மையாகவேகூட இருக்கலாம் இராஜசிம்மன் காலத்தில் பராந்தகன் படையெடுப்பின்போது தென்னவன் சுந்தரமுடியும் இந்திரஹாரத்தையும் தவிர வேறு பல நகைகளும் கூடக் கைமாறியிருக்கலாம் அன்றைய நிலைமை அப்படி! வீரபாண்டியர் மிச்சம் மீதி இருந்த பொக்கிஷத்தையும் செலவழித்தாரே தவிர சேர்க்கவில்லை கடந்த பல வருடங்களில் நிர்வாகமே சீர்கெட்டு கிடக்கும்போது அரசாங்க வருவாயை வசூலிக்க வழியேது இத்தனையும் போக எஞ்சியிருக்கும் பொருளில் ஒரு பகுதியைத்தான் சுந்தரபாண்டியபுரத்தின் படைகளுக்காக செலவழிக்க முடிகிறது அவல நிலைமைதான்! ஆனால் என்ன செய்வது?"

"தென்பாண்டி வணிகர்களிடம் வசூலில் ஈடுபாடு என்ன?"

"ஒன்று தெரிந்துகொள்ளுங்கள். ஓடுகின்ற குதிரையில் எந்தக் குதிரை நல்ல குதிரை என்று உறுதியாகத் தெரிந்த பின்தான் வணிகனின் பை தன் வாயைத் திறக்கும் நடந்து கொண்டிருக்கும் அரசியல் நாடகங்களை அவர்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். மதுரைப் படையெடுப்பின்போது நமது பக்கத்தில் சேதாரம் அதிகம் இல்லை என்றாலும் 'பாண்டியர் தோற்றோடிவிட்டார்' என்றுதான் செய்திகள் பரவியிருக்கின்றன. அது உண்மையில் பாண்டியரின் பலகீனமா? அல்லது இராஜதந்திரமா? என்பதை இனி நடக்கப் போகும் நிகழ்வுகள்தான் முடிவு செய்யும். அதனால் நடந்து கொண்டிருக்கும் சேர - சோழ - பாண்டிய பலப் பரீட்சையில் யாராவது உருப்படியாகத் தேறுவார்களா என்பதுதான் வணிகர்களின் எதிர்பார்ப்பு அது உறுதியாகத் தெரியும்வரை அவர்களிடம் கையேந்திப் பயனில்லை."

"ஹூம்! அவர்கள் ஆதரவளித்தால் நாம் எளிதில் வெல்லலாம். அவர்களோ நாம் வென்ற பின்தான் ஆதரவளிப்பேன் என்கிறார்கள். கஷ்ட காலம்!"

"மார்த்தாண்டரே! அதனால்தான் நமது திட்டத்தைப் பிசகுகள் இன்றித் துல்லியமாக நிறைவேற்றவேண்டியது மிக முக்கியமான காரியமாகின்றது. தானைத் தலைவர் இதில் மிகவும் அக்கறை கொண்டுள்ளார்."

"மகோதயபுரத்திலிருந்து செய்திகள் உண்டா?"

"கிடையாது. கடைசி வரை இருதலைக் கொள்ளி எறும்பாகவே இருந்து உறுதியான முடிவுகளை எடுக்க முடியாமல் தனக்கும் நாட்டிற்கும் பெருந்தீங்கை வரவழைக்கப் போகிறார் சேரமான் பெருமாள் என்றுதான் தோன்றுகிறது."

"காந்தளூர்ச் சாலையை நமது விவகாரத்தில் முழுவதுமாக இழுத்துவிட்ட பிறகும் கூடவா அவருக்குத் தயக்கம் நீடிக்கிறது? நாலுதளிக்காரர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?"

"தளிக்காரர்களுக்குத் திருநாராயண பட்டதிரியின் மீது பலத்த சந்தேகங்கள் உள்ளன. காந்தளூர்ச்சாலை அவருடைய முழுக் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறதா? அல்லது சாலையின் மற்ற ஆச்சாரியார்களுடன் விரோதப் போக்கை அவர் கடைபிடிக்கின்றாரா? என்பதை

அறிவதில்தான் அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர். படுபாவிகளே! உங்கள் உட்பூசலை சற்றே மறந்து அன்னியனுக்கு எதிராக ஓரணியில் திரளுங்கள்! இல்லையேல் ஒட்டுமொத்தமாக அனைவருமே அழிந்து போவோம்! என்று தொண்டை வறளக் கதறியும் பலனில்லை."

"அவ்வளவு தூரம் போவானேன்? நமது நாடுவாழிகளிலேயே பலருக்கு இந்த உண்மை புரிய வில்லையே..."

"நன்று சொன்னீர் மார்த்தாண்டரே.. நன்று சொன்னீர்! சோழனிடம் சூடு போட்டுக்கொண்டால்தான் இவர்களுக் கெல்லாம் புத்தி வரும் போலிருக்கிறது. ஆனால் அவன் சூடு போடுவதுடன் நிற்க மாட்டான். நம் அனைவரையும் அழித்தொழித்து விட்டுத்தான் ஓய்வான்!"

"ஒ..ஒன்று கூறலாமா?"

"அடடா, என்னிடம் என்ன தயக்கம்? எதுவானாலும் மனம் விட்டுப் பேசுங்கள். அதுதான் நல்லது."

"நீங்கள் என்னைத் தவறாக நினைத்துவிட வேண்டாம்..."

"மார்த்தாண்டரே! நாம் இருவரும் கடந்த பதினைந்து வருடங்களாகப் பழகி வருகிறோம். உங்களை நான் மிக நன்றாக அறிவேன். தயங்காமல் எதுவாயினும் சொல்லுங்கள்."

"நாடுவாழிகளில் சிலருக்கு என்ன எண்ணமென்றால் நீங்கள் பாண்டியருடனும் பட்டதிரியுடனும் அவர் கண்ணுக்குத் தெரியாத தானைத்தலைவருடனும் தனிப்பட்ட முறையில் இணைந்து கொண்டு உங்களின் சுயலாபத்திற்காக மலைநாட்டையும் சோழநாட்டையும் தேவையில்லாமல் வலுச்சண்டையில் ஈடுபடுத்துகிறீர்கள் என்பதுதான். தென்னாட்டில் உங்களது அரசியல் வன்மையையும் ஆதிக்கத்தையும் பன்மடங்கு பெருக்கிக் கொள்ளும் முயற்சியாக அவர்கள் இதனைக் காண்கிறார்கள்."

விரக்தியான வறட்டுப் புன்னகையொன்று வள்ளுவ நாடுவாழியின் முகத்தில் முகிழ்த்தது. "நிஜமாகவா கோவர்தனரே? இத்தனை கீழத்தரமாகவா என்னை மதிப்பிட்டு வைத்திருக்கிறார்கள்? என்னுடன் நீங்கள் ...

...மாகப் பழகி வந்திருக்கிறீர்கள். அத்தனை சுயநலமியா ...ன்?"

ஆதூரமாக வள்ளுவனாரின் கரங்களைப் பற்றிக் கொண்டார் மார்த்தாண்டர். "உங்களை நான் நன்றாக அறிவேன். அதனால் உங்களைப் புரிந்து கொள்கிறேன். சில தகவல்களை நீங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கா விட்டாலும் தகுந்த நேரத்தில் தெரிவிப்பீர்களென்று நிச்சயமாக நம்புகிறேன். இந்த நம்பிக்கையை மற்ற நாடுவாழிகளிடம் எதிர்பார்க்க முடியாதல்லவா?"

"அன்று ஆய்வேள் கோட்டையில் கூட்டிய நள்ளிரவுக் கூட்டத்தில் அந்த அடிகள் புரைக்கிழான் பேசும்போதே நினைத்தேன். அவன்தான் மற்றவர்கள் மனதையும் கலைத்து விட்டான் போலிருக்கிறது...."

"புரைக்கிழ நாடுவாழிக்கு உங்களின் மீது தனிப்பட்ட ...ம் இருப்பதென்னவோ உண்மைதான். ஆனால் ...ாக மற்றவர்களின் மனதைக் கலைத்துவிட்டார் என்று ...ல்ல முடியாது. வெளிப்படையாகத் தெரியாத உங்களின் ...று இரகசியத் திட்டங்கள் நாடுவாழிகளிடம் ...த்தைத் தோற்றுவிக்கின்றன. அவை நாட்டு ...மையை உத்தேசித்துத்தான் இரகசியமாக வைக்கப் ...கின்றன. என்றாலும்...."

உண்மையிலேயே இவை நாடுவாழிகளின் ...தேகங்களா? அல்லது அவர்களுள் ஒருவரான ...ர்த்தாண்டரின் தனிப்பட்ட சந்தேகங்களா? என்று ...ளுவ நாடாழ்வாருக்கு இப்போது குழப்பம் ஏற்பட்டது. ...லொன்றும் புகலாமல் புருவங்களை நெறித்தபடி ...வர்தனரை நோக்கினார் அவர்.

"உதாரணமாக அன்று மிக நீண்ட நேரம் நாடு ...களைக் காக்க வைத்துவிட்டு நீங்கள் கோட் ...டையின் உட்புறம் என்னவோ செய்து ...ருந்தீர்களல்லவா...."

...றென்றது வள்ளுவனாருக்கு! அப்படித் தொட்டு ...த் தொட்டு அடிமடியிலேயே கைவைத்து விட்டாரே ...த்தனர்?

"சந்தேகம் என்பது குடம் பாலில் துளி விஷத்தைக் ...து போன்றது மார்த்தாண்டரே! மனதில் சந்தேகத்தின்

விதை விழுந்துவிட்டால் அது விருட்சமாக வளர்வதற்கு அதிக காலம் பிடிக்காது."

"உண்மைதான். துரதிருஷ்டவசமாக நமது நாடுவாழிகளின் மனதில் அந்த சந்தேகத்தின் விதையானது விழுந்து விட்டது. அதனை அறவே பிடுங்கி எறிந்தாலொழிய அவர்களின் ஆதரவு கிடைக்காது!"

"மற்றவர்கள் கிடக்கட்டும். முதலில் உங்களுடன் தனிப்பட்ட முறையில் என்னுடைய வியூகங்களை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்கிறேன். பின் என்ன செய்யலாம் என்பதை நீங்களே சொல்லுங்கள்!"

தமது திட்டங்களை அந்த மெல்லிய நெருப்பு வெளிச்சத்தில் வள்ளுவனார் மண்ணில் வரைபடமிட்டு விவரிக்க முயலும் நேரத்தில்...

ஒரு வீரன் அவர்களை அணுகி நின்றான். "ஐயா! உங்களைக் காண பாண்டி தேசத்திலிருந்து வந்திருக்கின்ற பெரிய மனிதர்கள் இருவர் கணவாய்க்கருகே காத்துக் கொண்டிருக்கின்றனர்."

அவர்கள் அரையன் மானாபரணரும் சடைய மாறரும்தான் என்பதை உணர்ந்தார் வள்ளுவனார். "உடனடியாக அவர்களை அழைத்து வரலாம்!" என்று உத்தரவிட்டார்.

42. மந்திரியின் சந்தேகம்



"வரவேண்டும்... வரவேண்டும்... பாண்டிய குலத்தின் வீர இளவலையும் தென்னவன் உத்தர மந்திரியாரையும் நாஞ்சில் நாடு இருகரம் கூப்பி வரவேற்கிறது!" - தாமே விருந்தினர்கள் இருவரையும் எழுந்து நின்று வரவேற்றார் வள்ளுவ நாட்டு வாழியார்.

"தங்களை மீண்டும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி!" என்றபடி சடைய மாறரும் அரையன் மானா பரணரும் அவர்களுக்கருகில் அமர்ந்தனர். நெருப்பொளியில் விரிந்த அவர்களின் முகவதனங்களை நோக்கிய வள்ளுவனார் அவற்றில் களைப்பும் பரபரப்பும் சம அளவில் கலந்திருப்பதைக் கண்டார்.

"பருகுவதற்கு ஏதாவது எடுத்துக் கொண்டு வரச் சொல்லவா?"

"தற்போதிருக்கும் உடல் களைப்பிற்கு நாஞ்சில் நாட்டுக் கள்தான் ஏற்ற மருந்து. கூடவே சற்று மான்கறியும் கிடைத்தால் நல்லது."

வள்ளுவர் ஒரு வீரனை அழைத்து உரிய உத்தரவுகள் இட்டுவிட்டு வந்தார். அடுத்த சில நிமிடங்களிலேயே பெரிய கள் பானை அவர்களைத் தேடி வந்து விட்டது. வீரர்கள் புழங்கிய இடமாதலால் நேர்த்தியான கள்ளுக்கு அங்கே பஞ்சமில்லை போலும்! கார்கால மாலை நேரத்தில் புதிதாக நுரையுடன் இறக்கப்பட்டிருந்த அந்த நாஞ்சில் நாட்டுத் தென்னங்கள்ளைப் பருகுவதென்பது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட பேரின்பமாக இருந்ததென்பதை அவர்களது முக லாவண்யங்கள் காட்டிக் கொடுத்தன.

மானாபரணரின் பரபரப்பு சில கணங்களுக்குக் காணாமல் போனது. "ஆஹா! இந்தப் பகுதியின் கள்ளுக்கு இணையானதொரு அமிர்தத்தை இந்தப் பூலோகத்தில் காண முடியாது. நானும் எத்தனையோ இடங்களில் முயன்று பார்த்து விட்டேன்... நாஞ்சில் நாட்டுக் கள்ளுக்கு இணையாக வேறு எதையுமே கூறமுடியாது!" என்று மண்குவளையை உறிஞ்சியபடியே சிலாகித்தார் அவர்.

"பாண்டிய இளவலின் முகத்தில் இன்னமும் பரபரப்புப் பெரிதாகப் படர்ந்து கிடக்கிறதே? ஏதேனும் முக்கியச் செய்திகள் உண்டா?"

"மிக முக்கியமான செய்திகளுடன் வந்திருக்கிறோம். அழிக்குடி தேவநாக பண்டிதரின் அருளால் சோழனின் முக்கியத் திட்டங்கள் சில அம்பலமாகியிருக்கின்றன."

"ஆஹா! சொன்னதைச் சொன்னபடி நிறைவேற்றி விட்டார் பண்டிதர். அவருடைய ஆற்றலே தனி." வள்ளுவனாரின் வியப்பு அவரது பெரிய விழிகளின் வழியே வெளிப்படையாகத் தெரிந்தது.

"அழிக்குடி தேவநாக பண்டிதரா...? யாரவர்? எனக்குத் தெரிந்த மனிதர் இல்லை போலிருக்கிறதே...." என்றார் சடையமாறன் நாடாழ்வார் திகைப்புடன். இதுபோல இன்னமும் தமக்குத் தெரியாத இரகசியங்கள் எத்தனை இருக்கின்றனவோ! என்னும் ஆற்றாமை அவரது குரலில் வெளிப்பட்டது.

"உங்களுக்கு மிகவும் தெரிந்த மகானுபாவர்தான் அவர்" என்று உடல் குலுங்கச் சிரித்த வள்ளுவனார், அவரை நெருங்கிக் காதுகளில் ஏதோ புகன்றார்.

"ஆஹா! அப்படியா?" - என்று வியப்பில் பிளந்த கோவர்தனரின் திருவாய் மூடுவதற்குச் சில கணங்கள் பிடித்தன.

"அவர் இப்படியெல்லாம் துணிந்து செயல்படக் கூடியவரென்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியம்தான்."

"இந்த மனிதர் இப்படியெல்லாம் செய்யமாட்டார் என்று அடுத்தவர்களை மனக்கோட்டை கட்ட வைப்பதுதான் அவரது முக்கிய பலமே! கிடக்கட்டும் நண்பர்களே, நீங்கள் இருவரும் பண்டிதர் கொண்டு வந்த செய்தியை முதலில் கூறுங்கள். பின் நானும் சில முக்கிய செய்திகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது..."

பாண்டிய இளவலான சடையமாறர் முதல் முறையாக வாயைத் திறந்தார். "அருள்மொழிவர்மனின் தென்மலை நாட்டுப் படையெடுப்பு வதந்தியல்ல. நிஜம்தான் என்பதுதான் முக்கியமான முதல் செய்தி. அடுத்த சில மாதங்களில் இந்தப் படையெடுப்பு நிலமார்க்கமாக நிகழுமென்று தெரிகிறது. பண்டைய ஆய்வேளிர் ஆண்ட பகுதிகளான விழிஞம், அனந்தபுரம், நாஞ்சில்நாடு, கழிக்குடி, கோட்டாறு முதலான முக்கிய கேந்திரங்கள் இதில் தாக்கப்படலாம். இந்தத் தாக்குதல் நடைபெறக்கூடாதென்றால் வள்ளுவ நாடுவாழியும் பிற நாடுவாழிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் சோழரின் ஒப்புயர்வற்ற தலைமையை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குக் கப்பம் கட்ட ஒப்புக் கொள்ள வேண்டும். சோழருக்கெதிராகத் தாம் திரட்டி வைத்திருக்கும் படைகளைக் கலைத்துவிட வேண்டும். சோழப் படைகள் தென்மலை நாட்டிற்கு விஜயம் செய்யும் வழியில் பாண்டிப் படைகள் எதிர்த்தால் அவர்களைச் சோழர்களுடன் சேர்ந்து கொண்டு எதிர்க்க வேண்டும். இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க ஒப்புக் கொள்கிறாரா இல்லையா? என்று வினவி அரசாங்க ஓலையொன்று வள்ளுவ நாடுவாழியாரைத் தேடி வந்து கொண்டிருக்கிறது. ஒருவேளை அப்படி நடக்க ஒப்புக் கொள்ளவில்லையெனில் ஆரைவாய்மொழிக் கணவாய் படையெடுப்பில் கடுமையாகத் தாக்கி அழிக்கப்படும்!"

"என்ன திமிர்? எத்தனை ஆணவம்?"

"பொறுங்கள். மற்ற செய்திகளையும் கேட்போம். சொல்லுங்கள் இளவலே!"

"அடுத்த செய்தி காந்தளூர்ச் சாலை சம்மந்தப்பட்டது. சாலையின் ஆச்சாரியாரான திருநாராயண பட்டதிரி சோழரின் மேலாண்மையையும் ஆதிக்கத்தையும் ஏற்க வேண்டும். இளவரசர் ஆதித்த கரிகாலரின் கொலையில் நமக்கும் தம்மைச் சேர்ந்தவர்களும் பங்கிருப்பது உண்மைதான் என்பதைச் சோழர்களிடம் ஒப்புக்கொண்டு பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும். தேர்ந்தெடுக்கப் பட்ட சோழப் படைவீரர்களுக்குச் சாலையின் முக்கிய அங்கப் பயிற்சி முறைகளையும் தாக்குதல் நுட்பங்களையும் வர்மக்கலையையும் பயிற்றுவிக்க வேண்டும்."

"இதற்கு அவர் ஒப்புக்கொள்ளவில்லையென்றால்??"

"சாலை சோழர்களால் தாக்கித் தரைமட்டமாக்கி அழிக்கப்படும்!"

வள்ளுவனாரின் முகத்தில் மகிழ்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது. "நண்பர்களே! இதனினும் நல்ல செய்திகள் இந்த நிலைமையில் நமக்குக் கிடைக்க முடியாது நிச்சயமாக நாம் அவனுடைய ஆணவம் நிறைந்த மேலாண்மையை ஒப்புக் கொள்ளப் போவதில்லை. படையெடுப்பு நிகழும் பட்சத்தில், இதோ! நாம் அமர்ந்திருக்கும் இதே ஆரைவாய்மொழிப் பகுதியில் இரத்த ஆறு ஓடும். சோழர் படைகள் நிர்மூலமாக்கப்படும் இந்தப் பகுதிகளின் ஒவ்வொரு மரமும் புதரும் காடும் மேடும் பள்ளமும் உயரமும் நமது படைகளுக்கு அத்துப்படி எங்கே மறைந்து நின்று எப்படித் தாக்கினால் சேதம் மிக அதிகமாக இருக்கும் என்று பார்த்துப் பார்த்துத் தாக்குதல் நடத்தலாம். நமது பக்கத்தில் சேதாரத்தையும் குறைத்துக் கொள்ளலாம்.

சோழர் படைகள் நாஞ்சில் நாட்டுப்படைகளால் தாக்குற்றுச் சோர்ந்து போயிருக்கும் சமயத்தில் மறு பக்கத்திலிருந்து பாண்டிப் படைகள் அவர்களை நசுக்கும் அப்படி முதலையின் வாய்க்குள் அகப்பட்டுக்கொண்ட மலங்காகச் சோழர் படைகள் நிர்மூலமாகும்!"

வள்ளுவனார் உற்சாகமாகப் பேசிக்கொண்டே போக, சடைய மாறரும் கோவர்தனரும் அதனை வாய் பிளந்தபடி கேட்டுக் கொண்டிருந்தார்கள். குறிப்பாகக் கோவர்தனரின் முகத்தில் முன்பு தெரிந்த சந்தேக இரேகைகள் மறைந்து

ஆச்சரியக் குறிகள் தென்படத் துவங்கின. வள்ளுவனார் சாதாரண மனிதரில்லை போலிருக்கிறதே? நாம் நினைத்ததை விடச் சம்பவங்கள் சாதகமாக நடந்து கொண்டிருக்கின்றனவே?

அரையன் மானாபரணரின் முகத்தில் தெரிந்த உணர்ச்சிகளை இன்னதென்று வகைப்படுத்த முடியவில்லை. தொடர்ந்து வள்ளுவனாரின் பேச்சில் கவனம் செலுத்தினார் அவர்.

"எனக்கு மட்டுமல்லாமல் பட்டதிரிக்கு வேறு ஓலையனுப்புகிறானா அவன்? ஹ! சமீபத்தில்தான் அவரைக் காந்தளூரில் சந்தித்துவிட்டு வந்தேன். நமக்கு முழு ஆதரவும் நல்குவதற்கு ஆச்சாரியார் ஆயத்தமாக இருக்கிறார். தேவையேயில்லாமல் வீணில் அருள்மொழிவர்மன் சாலையை அரசியல் சதுரங்கத்தில் இழுத்து விடுகிறான் என்பது அவரது எண்ணம்.

வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்திலிருந்து இரவி... குடும்பத்தாரைக் குழந்தை குட்டிகளுடன் வெளியேற்றியது டன் ஆதித்த கரிகாலர் படுகொலையின் பழிவாங்கல் முடிந்தது. இதற்கு மேல் பட்டதிரியை அதில் சம்மந்தப் படுத்துவதும் சாலையைத் தாக்குவதும் அரசியல் மற்றும் தார்மீக தர்மங்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள். தனது தாய்நாட்டில் இத்தனை அநியாயங்கள் நடைபெறுவதை எந்த மலைநாட்டானும் சகிக்க மாட்டான்!

மேலும், ஜென்ம ஜென்மாந்திரப் பகைவர்களான சோழர் படைகளுக்குச் சாலைகளில் பரம்பரை பரம்பரையாகப் பேணிகாக்கப்பட்டு வரும் அங்கப் பயிற்சி முறைகளையும் வர்மக்கலையையும் கற்பிப்பது நடக்காத காரியம். நண்பர்களே! சோழன் பகல் கனவு கண்டு கொண்டிருக்கிறான். அவனது கொட்டம் உடனடியாக அடக்கப்பட வேண்டும். சொல்லப் போனால் அவன் நம்மை நோக்கிப் படையெடுக்கும் வரைக் காத்திராமல் உடனடியாகத் தஞ்சையைத் தாக்குவது நியாயமே. ஆனால் நம் பக்கம் சேதம் சற்று அதிகமாக இருக்கும். அதனால் இரை தானாக வலைக்குள் வந்து அகப்பட்டுக் கொள்ளட்டும் என்று பொறுத்திருக்க வேண்டியதுதான்."

தென் மேற்குப் பருவக்காற்று ஒரு ஆங்காரத்துடன் விர்ரென்று அவர்களைக் கடந்து சென்றது. போகும்

போக்கில் அவர்களுக்கு முன் எரிந்து கொண்டிருந்த நெருப்பையும் ஒரு முறை நன்றாக அலைக்கழித்து விட்டுத்தான் சென்றது. சற்று தூரத்தே நின்றிருந்த காவல் வீரன் நெருப்புத் தணலை ஒரு முறை நன்றாகக் கிளறி விட்டுவிட்டு மேலும் சில கட்டைகளையும் மரச் செதில்களையும் அதில் அடுக்கிவிட்டுச் சென்றான்.

வள்ளுவனார் தன்னுடைய சிறிய பிரசங்கத்தில் திருப்தியடைந்தவராய்க் காணப்பட்டார். பாண்டிய இளவல் முகத்திலும் தமது நண்பரான கோவர்தனர் முகத்திலும் அவருக்கு ஆதரவான உணர்ச்சிகள் தெரிந்தன. ஆனால் தென்னவன் உத்தர மந்திரியார்? அவருடைய முகம் ஏன் இத்தனை தூரத்திற்கு இறுகிக் கிடக்கிறது? ஒரு வேளை நாஞ்சில் நாட்டுக் கள் கொடுத்த வேகத்தில் அரை மயக்கத்திற்குச் சென்றுவிட்டாரா என்ன?

"என்ன, மானாபரணரே! பிழி கொடுத்த வேகத்தில் வேறு லோகத்திற்குச் சென்று விட்டதைப் போலத் தெரிகிறீர்?" வள்ளுவனாரின் குரலில் கிண்டல் வெளிப்படையாகவே தெரிந்தது.

"மனதில் பலகாலமாக எரிந்து கொண்டிருக்கும் தீக்கு முன் எந்தப் பிழியும் மயக்கத்தைக் கொடுத்துவிடாது வள்ளுவனாரே..." என்று சூடாக அவருக்கு மறுமொழி அளித்தார் அரையன் மானாபரணர்.

"நீங்கள் கூறியவை அனைத்தையும் கவனத்துடன் கேட்டுக் கொண்டுதானிருந்தேன். ஆனால் பண்டிதரின் செய்திகளை நீங்கள் பார்க்கும் கண்ணோட்டத்தில் என்னால் பார்க்க முடியவில்லை. முதலில் அந்தச் செய்தியின் நம்பகத்தன்மையே கேள்விக்குறியாக இருக்கிறது. அந்த ஓலையையும் அதில் பொறிக்கப்பட்டிருக்கும் சோழ ராஜ முத்திரையையும் நேரில் கண்டாலன்றி என்னால் அதனை நம்ப முடியாது. இந்தச் சந்தேகங்களெல்லாம் வேண்டாமென்றுதான் தொண்டியில் துணிந்து அந்தத் தூதர்களையே பிடித்துவிட முயன்றோம். ஆனால் சந்தேகத்திற்கிடமாகும் வகையில் அவர்கள் தப்பிச்சென்று விட்டார்கள். நானே நேரில் சென்றிருந்திருக்க வேண்டும். ஆட்களை அனுப்பியது தவறாக முடிந்தது. அந்த ...ளுர்களின் ஆற்றலைத் தவறாக மதிப்பிட்டு விட்டேன். அல்லது... நான் நினைத்தது தவறா? அங்கு அவர்களைத்

தவிர..?" - பேசிக்கொண்டே சென்ற மானாபரணர் சட்டென்று தீவிர சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்.

"என்ன? எதனைக் குறித்துச் சந்தேகப்படுகிறீர்கள்?"

"ஒன்றுமில்லை. என் சிந்தனைகள் ஒரு பக்கம் கிடக்கட்டும். மீண்டும் ஓலைகளுக்கே வருவோம். அந்தச் செய்திகளை முதன்முதலில் பண்டிதர் கூறியபோதே என்னுள் பல சந்தேகங்கள் பல கேள்விகள் முகிழ்த்தன. ஓலையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீகளென்பதைக் குழந்தை கூடச் சொல்லிவிடும். பின் எதற்காக அப்படியொரு அரசாங்க ஓலையை அனுப்ப வேண்டும்? நம்மைத் தவறான வழியில் திசை திருப்புவதற்காகவா? அருள்மொழிவர்மனை நான் நன்றாக அறிவேன். அவன் தந்திரங்கள் நிறைந்தவன். அவனைச் சுற்றியிருக்கும் ஆலோசகர் கூட்டம் அவனை விடத் தந்திரங்கள் நிறைந்தது. கொண்ட காரியத்தில் வெற்றியே அவர்களது ஒரே குறிக்கோள். அந்தக் குறிக்கோளினை அடையச் சாம, பேத, தான, தண்ட வழிமுறைகளைப் பிரயோகிப்பதில் அவர்களுக்கு எந்தத் தயக்கமும் இருக்காது.

சுருக்கமாகச் சொன்னால், அந்த ஓலையின் செய்திகளை நம்புவதில் எனக்குச் சிரமங்கள் இருக்கின்றன. பண்டிதரின் ஆற்றலையோ நம்பகத்தன்மையையோ நான் குறைத்து மதிப்பிடவில்லை. இராஜ முத்திரையை நான் கண்ணால் கண்டேன் என்கிறார் அவர். என்றாலும் எனக்குச் சந்தேகங்கள் குறையவில்லை. தானைத் தலைவரிடமிருந்து வந்திருக்கும் வேறொரு சம்மந்தமில்லாத கேள்வி வேறு எனது குடைச்சலை அதிகப்படுத்தியிருக்கிறது. நாகப்பட்டினத்தின் பண்டைய விஹாரையான பதரதிட்ட விஹாரையின் புத்த ஆச்சாரியார் மஹா காசியப தேரரின் பூர்வோத்திரங்களை அறியச் சொல்லி எழுதியிருக்கிறார் தலைவர். நடந்து கொண்டிருக்கும் விவகாரங்களில் அந்த பௌத்த ஆச்சாரியார் திடீரென்று எங்கே முளைத்தாரென்று தெரியவில்லை.

ஓலையில் காணப்படும் அந்தச் செய்திகளை ஒரு வேளை உண்மையென்று கொண்டாலும், ஆனால் அருள் மொழிக் கணவாயின் சாதக பாதகங்களை நாம் சரிவரப் புரிந்து கொண்டிருக்கிறோம் என்பது என்ன நிச்சயம்?

நமக்குத் தெரியாத பலவீனம் ஏதேனும் சோழரின் கண்களுக்குத் தட்டுப்படுகின்றனவோ என்னவோ?"

"வீண் சந்தேகங்கள் எதற்கு? நமது கணவாயின் அமைப்பையும் என்னுடைய திட்டங்களையும் உங்களுக்கு இப்பொழுதே விளக்குகிறேன். நமது கோட்டையில் பலவீனங்கள் அவர்களுக்குத் தெரியும் பட்சத்தில் அவை உங்களுக்கும் புலப்பட வேண்டும் இல்லையா?"

இருள் நன்றாகக் கவியத் தொடங்கிவிட்ட அந்தப் பொழுதில், எதிரே எரிந்துகொண்டிருந்த நெருப்பு வெளிச்சத்தின் துணையுடன் மண்ணில் பரபரவென்று பல கோடுகள் வரையத் துவங்கினார் வள்ளுவனார்.

43. தளிக்குளக்கரை



வள்ளுவனார் விறுவிறுவென்று வரை கோடுகள் வரைந்து கொண்டிருந்த அந்த முன்னிரவுப் பொழுதில் -

பிஷு ஆனந்தரையும் நமது கதாநாயக நண்பர்களிருவரையும் ஏற்றி வந்த படகு, கழிக்குடி என்று அக்காலத்தில் அழைக்கப் பட்ட குமரியம் பெருந்துறையை ஏறக் குறைய நெருங்கிவிட்ட நேரத்தில் -

அந்நாளைய தஞ்சைக் கோட்டையின் உள்ளாலைக்குள் நடுநாயகமாக அமைந்திருந்த தாமரைக் குளக்கரைக்குத் சற்று மேற்கே ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் நமக்கு மிகப் பரிச்சயமான சோழ இராஜாங்கத்தின் பெரிய தலைவர்கள் நால்வர் தீவிரமான உரையாடலில் ஈடுபட்டிருந்தார்கள்

அவர்களைச் சுற்றிலும் காவல் வீரர்களோ பாதுகாப்பு கட்டுப்பாடுகளோ அதிகமாகத் தென்படவில்லை. மெய்க் காவலர் இருவர் மட்டும் ஒரு ஓரமாக ஒதுங்கி நின்றார்கள் மிக அதிகமான மக்கள் கூட்டம் புழங்கும் தாமரைக் குளத்து தேவர் திருக்கோயிலின் அருகில் அமைந்திருந்தாலும் ஏனோ அந்தப் பகுதி மக்களின் கவனத்தை அதிகம் கவரவில்லை. நான்கு அல்லது ஐந்து தென்னை மரங்களும் அவற்றின் அடர்த்தியான கருநிழலும் தென்னங்கீற்றுக்களை ஊடுறுத்துக்கொண்டு வரும் மெல்லிய நிலா வெளிச்சமுமே அந்த இடத்தை ஆக்கிரமித்திருந்தன.

நகருக்கு நடுவே அமைந்திருந்தாலும் அந்தரங்கப் பேச்சுக்களுக்கு இது ஏற்ற இடம்தான். குறிப்பாக இராஜாங்க இரகசியங்களையும் விவாதங்களையும் நடத்துவதற்கு இந்த இடம் சரியான தேர்வுதான். சோழப் பேரரசரே இந்த இடத்தில் வந்து அமந்திருந்தாலும் அது மக்களின் கவனத்தை நிச்சயம் கவரப்போவதில்லை. இந்த விஷயம் அந்த நான்கு பெரிய மனிதர்களுக்கும் முன்பே தெரியும் போலும்.. அதனால்தான் சொல்லி வைத்தாற்போல் அவர்கள் நிம்மதியாக விவாதத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

"வருக, வருக, கிருஷ்ணன் இராமன் அவர்களே! தங்களைச் சிறிது காலம் பிரிந்து ஏங்கிக் கிடந்த தஞ்சையம்பதிக்கு இன்றுதான் அமைதி கிட்டியது..."

இவ்வாறு உரையாடலைத் துவக்கியவரின் உருவத்தை அந்தக் குறைவான வெளிச்சத்தில் நம்மால் அடையாளம் காணமுடியவில்லை என்றாலும் கம்பீரமான குரலை வைத்து அது பேரரசர் அருள்மொழிவர்மராகவே இருக்கலாம் என்று யூகிக்கிறோம்.

"தஞ்சையம்பதி ஏங்கியதோ இல்லையோ தளிக்குளத்து மகாதேவர் தமது அத்யந்த பக்தனான அமண்குடியாரைக் காணாமல் நிச்சயம் ஏங்கிப் போயிருப்பார்!" என்றது வேறொரு குரல். பரிகாசம் மிக்க இந்தக் குரலுக்குரியவர் பல்லவராயர் அல்லவா?

"நீங்களிருவரும் கூறியது எத்தனை தூரம் உண்மையென்று தெரியாது. ஆனால் தஞ்சையையும் தளிக்குள நாதரையும் காணாமல் வீரநாராயணபுரத்தில் நான் ஏங்கியதென்னவோ உண்மை.." என்றார் மூன்றாவது மனிதர். இவர் நாகையில் நமக்கு அறிமுகமான அமண்குடி கிருஷ்ணன் இராமன்தான் என்பதில் சந்தேகமில்லை

"உங்கள் குரலில் தெரியும் நம்பிக்கை பலமளிக்கிறது. போன காரியம் வெற்றிதான் என்று நினைக்கிறேன்."

"சேகரித்த தகவல்களை உங்கள் முன் படைக்கிறேன். பின் நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்" என்றார் அமண்குடியார் சாதுர்யமாக. தமது பணியை வெற்றி என்று வகைப்படுத்துவதில் அவருக்குத் தயக்கங்கள் இருக்கின்றன போலும்.

"நான் நாகையிலிருந்து உங்கள் அழைப்பிற்கு முன்னதாகவே வீரநாராயணபுரத்திற்குக் கிளம்பிவிட்டேன்

அல்லவா? அங்கு சென்ற பின்தான் தெரிந்தது மறுநாள் பாண்டியரின் தலைமையனாரான சேவூர் துஞ்சிய[156] சுந்தர பாண்டியத் தேவரின் திதி என்பது. அது மட்டுமல்லாமல் அந்தத் திதியின்போது ஒவ்வொரு வருடமும் குறண்டியூர் [illegible]ப்படை சுந்தரபாண்டிய ஈச்சுரத்தில் தர்ப்பணம் [illegible]வதற்காகப் பாண்டிய இளவலும் உத்தர மந்திரியும் [illegible]வார்கள் என்னும் திடுக்கிடும் தகவலும் கிடைத்தது ஒரு [illegible]த்தில் அவர்களைப் பிடித்து விடுவதற்காகச் சில [illegible]ப்படைகளை ஏற்பாடுகள் செய்து விட்டேன் [illegible]ர்தான் அது தவறு என்று தோன்றியது மூத்தோரின் [illegible]ணத்திற்காக வருபவர்களை.. அவர்கள் எதிரிகளாகவே [illegible]ந்தாலும் பிடிக்க முயல்வது தார்மீக ரீதியில் நியாயமான [illegible] அல்ல என்று தோன்றியது அதனால் அந்த [illegible]ற்சியைக் கைவிடுவதற்கு முயன்றேன் ஆனால் காலம் [illegible]ந்து விட்டது. கூலிப்படைகள்[157] அதற்குள் [illegible]ண்டியூருக்குக் கிளம்பிச் சென்று விட்டன.

மிகுந்த வருத்தத்துடன் அரசருக்கு ஒரு இரகசிய முறி அனுப்பினேன். அதற்கு ஒரு வாரம் கழித்து அவரிடமிருந்து [illegible]ல் முறி வந்தது. மிகுந்த அரசியல் பக்குவத்துடன் எழுதப்பட்டிருந்த அந்த பதில் ஏறக்குறைய இவ்வாறு அமைந்திருந்தது.

அமண்குடியாரே! இராஜாங்கப் பணியில் சேரும் [illegible] அனைவருக்குமே ஏற்படக்கூடிய ஆரம்பகட்ட [illegible]த்தினால்தான் நீர் இப்படிப்பட்ட காரியத்தைச் [illegible]திருக்கிறீர். உமது ஆற்றலில் நமக்குப் பரிபூரண [illegible]க்கை உள்ளது. அதனால் எதிலுமே அவசரம் [illegible]வே வேண்டாம். வாழ்க்கை மிகப் பெரியது! அதில் [illegible]கவும் அவசரப்பட்டு முடிவெடுக்கத் தேவையில்லை. [illegible]தேவர் நமக்கான பணிகளை வேறு எவருக்கும் ஒதுக்கி [illegible] மாட்டார். ஆகவே எப்போதும் நிதானமாகச் [illegible]ற்றுங்கள். கூலிப்படைகளால் ஒரு வேளை பாண்டிய

[illegible] என்பதற்கு இறந்த என்று பொருள் கொள்ள வேண்டும். [illegible] அரசர்களைக் குறிப்பிடும்போது இன்ன இடத்தில் துஞ்சிய [illegible] என்று குறிப்பார்கள். இது சங்ககாலம் தொட்டு இடைக்காலம் [illegible] முறையில் இருந்த பழக்கம்.

[illegible] பெற்ற படைவீரர்களுக்கும் கூலிப்படைகளுக்கும் பெருத்த [illegible] உண்டு. குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு சில [illegible]களைக்கொண்டு அமைக்கப்படும் படை கூலிப்படையாகும்.

இளவலுக்கு ஏதாவது நேர்ந்தால் உம்மை விட நான் அதிகம் வருத்தமடைவேன். நமச்சிவாயம்.

இந்தப் பதிலை வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன். நல்லவேளையாக நமது கூலிப்படைகளிடமிருந்து பாண்டிய இளவல் தப்பிவிட்டார். படைகள் சர்வநாசமடைந்தன. இனி ஒரு போதும் இம்மாதிரியாக காரியத்தில் ஈடுபடக்கூடாது என்கிற முடிவுடன் என் நடைமுறைகளைச் சற்று மாற்றிக் கொண்டேன்.

வீரநாராயணபுரத்திலிருந்து தஞ்சைக்குத் திரும்பி விடுவதாகப் போக்குக்காட்டிவிட்டு மீண்டும் மாறு வேடத்தில் அங்கே சென்றேன். நீலி குடும்பத்தாருடன் நெருக்கமான தொடர்பிலிருந்த எவராவது இன்னமும் அங்கே இருக்கிறார்களா என்று விசாரித்தறிவதுதான் என் நோக்கம். ஆனால் அவர்களைப் பற்றிய பேச்சை எடுத்தாலே பெரும்பாலானோர் என்னைச் சந்தேகக் கண்களுடன் பார்க்கத் தொடங்கிவிட்டனர். அதனால் உரிய தகவல்கள் கிடைக்கவேயில்லை.

நீண்டதொரு முயற்சிக்குப்பின் அவர்களது நிலத்தில் உழுகுடியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு கிழவியைப் பற்றிய தகவல்கள் கிடைத்தன. அந்தக் குடும்பத்தாருக்கு மிகவும் நெருக்கமானவள் என்று குறிப்பிட்டார்கள். நீலி குடும்பத்தார் நாட்டை விட்டுக் கிளம்பும்போது தன்னையும் அழைத்துச் செல்வார்களென்று அவள் எதிர்பார்த்திருக்கிறாள். அது நடக்காமல் போகவே அவர்களின் மீது அதிருப்தியுடன் வீரநாராயண புரத்திலிருந்து வேறெங்கோ சென்று குடியேறிவிட்டாள். பல இடங்களில் அலைந்து திரிந்து இறுதியில் பழுவூருக்கருகில் அவளைப் பிடித்தேன்.

கிழவி மிகச் சாமர்த்தியமானவள். வயதுதான் ஆகிவிட்டதே தவிர புத்தி மிக நன்றாகவே வேலை செய்து கொண்டிருக்கிறது. அவளது வாயைப் பிடுங்குவதற்குள் என் பாடு என்பாடு என்றாகிவிட்டது. அவளிடம் இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தான் விஷயங்களைத் திரட்ட முடிந்தது. ஒரு நிமிடம் தான் நீலியாரிடம் உழுகுடியாகச் சேர்ந்த நாட்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பாள். அடுத்த நிமிடம் வேறெங்கோ தாவி வீரநாராயணபுரத்து விண்ணகரக் கோயிலில் பணியிலிருக்கும் ஈஸ்வர

முனிவரைப்[158] பற்றிப் பேசுவாள். அதற்குப் பிறகு நீலியாரின் மலைநாட்டுப் பூர்வோத்திரங்களைப் பற்றிய தகவல்கள் ஏதாவது வந்து விழும். இப்படிச் சம்மந்தா சம்மந்தமில்லாமல் அவள் கூறிய விஷயங்களில் பல தகவல்கள் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தி விட்டன. அவற்றின் முழுப்பொருளையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை."

"அந்தத் தகவல்களைக் கூறும்! எங்களுக்கு ஏதாவது தோன்றுகிறதா என்று பார்ப்போம்."

"உதாரணமாக, தமது தந்தை இரவிநீலி பூச்சாரியாருக்குத் தர்ப்பணம் விடும்போது முதல் மூன்று சகோதரர்கள் மட்டும்தான் அதில் பங்கெடுத்துக் கொள்வார்களாம். நான்காமவரான மலையனூரான் அதில் பங்குகொள்ள மாட்டாராம்!"

"ஆச்சரியம்தான்."

"முதல் இரண்டு சகோதரர்களான சோமனும் ரவிதாஸனும் அரசியலின் உயர்மட்டத்து அதிகாரிகளுடன் பழகுவார்களாம். சேர தேசத்துடனான தொடர்புகளைத் தக்கவைத்துக் கொண்டதும் இவர்கள் தானாம். சோழ இராஜாங்கத்திலிருந்து மட்டுமல்லாமல் சேரர் தலைநகரான மகோதயபுரத்திலிருந்தும் தூதர்கள் வருவது வழக்கமாம்.

முதல் இருவரும் இவ்வாறிருக்க, மற்ற இருவருக்கும் அடிமட்டத்துத் தொடர்புகள் அதிகமாம். முக்கியமாகத் தஞ்சையில் வேலை தேடி வெளியூரிலிருந்து வரும் பலரையும் இவர்கள் சந்தித்து முடிந்தவரை சோழ அரண்மனைகளிலோ பெருந்தனத்தாரின் இல்லங்களிலோ வேலை வாங்கிக் கொடுப்பது வழக்கமாம் . இவர்களில் பலரும் இன்றுவரை நீலி குடும்பத்தாருக்கு விசுவாசமாக இருக்கிறார்கள் என்கிறாள் கிழவி."

அருள்மொழிவர்மர் மௌனமாக ஒரு முறை நிமிர்ந்து [illegible]ராயரைப் பார்த்தார். இருள் அடர்ந்திருந்தாலும் அவர் பார்வையின் பொருள் சேனாதிபதியாருக்குப் புரிந்தது.

---

158 வைணவத்தின் முதல் ஆச்சாரியாரான ஸ்ரீ நாதமுனிகளின் தந்தையார்.

"சதுர்வேதி மங்கலத்து நிலங்களைப் பெரும்பாலும் நிர்வகிப்பது அவரது குடும்பத்தார் மற்றும் பெண்மணிகள்தானாம். சகோதரர்கள் நால்வரும் விவசாய வேலைகளில் பங்கு கொள்வது கிடையாது. அப்புறம் இன்னொரு செய்தி. ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட நாட்களில் குட்டையான காளாமுக சந்நியாசி ஒருவர் தனது பரிவாரங்களுடன் அவர்களது வீட்டிற்கு வருகை புரிவது வழக்கமாம். முகத்தில் கருஞ்சனத்தைத்[159] தடவிப் பார்க்கவே பயங்கரமாகக் காட்சியளிக்கும் இந்தக் கூட்டம் கொடும்பாளூர் பகுதியிலிருந்து வருவதாகச் சொல்லிக் கொண்டாலும் மிக நீண்ட பிரயாணம் செய்தவர்களைப் போலக் காணப்படுவார்களாம். அனேகமாகத் தெற்கிலிருந்து வருகிறார்கள் என்பது கிழவியின் யூகம். இவர்கள் வந்து விட்டால் வேளக்காரர்கள், உக்கிராணத்து அணுக்கப் பணியாட்கள், உழுகுடிகள், ஊர்க்காரர்கள் என்று ஒருவருக்கும் வீட்டிற்குள் வர அனுமதியில்லையாம். வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் நீலி வீட்டுப் பெண்களே செய்வார்களாம். ஏதோ பூஜை புனஸ்காரமென்று வெளியில் சொல்லிக் கொண்டாலும் அவை நடைபெற்றதற்கான அறிகுறிகளே தெரியாதாம். இந்தக் காளாமுகக் கூட்டத்தாரைப் பற்றிக் கிழவி சொல்லிக் கொண்டிருக்கும் போது எனக்கு நீங்கள் முன்பு குறிப்பிட்ட மதுரை மல்லிகார்ஜுனர் மடம்தான் ஞாபகத்திற்கு வந்தது. இந்த அந்த மடத்துக் கும்பலாகவும் இருந்திருக்கலாம். தெரியவில்லை.

கிழவியைப் போலவே நானும் சம்மந்தமில்லாமல் பேசிக் கொண்டே செல்வதற்கு மன்னிக்கவும். என் மனதில் அவள் கூறிய விஷயங்கள் இவ்வாறுதான் பதிந்துள்ளன."

"பரவாயில்லை. தொடர்ந்து தங்களுக்கு ஞாபகத்தில் இருப்பதைக் கூறி முடித்துவிடுங்கள். பின் அவற்றின் பொருள் என்ன என்பதைப் பற்றி ஆராய்வோம்!"

"இருபது இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக அவர்களது குடும்பத்திற்கு நாயாக உழைத்தும் நன்றியில்லாமல் தன்னை இங்கேயே விட்டுவிட்டுச் சென்று

[159] காளாமுகம் என்றால் கருமையான முகம் என்று பொருள்படும். இக்கூட்டத்தார் முகத்தில் கருஞ்சந்தனத்தைத் தடவிக் கருமையாகக் காட்டிக் கொண்டார்கள்.

விட்டார்களே என்று கிழவிக்கு பலத்த கோபம். அவர்கள் எங்கு சென்றிருக்கிறார்கள் என்பதை அவளால் கண்டறிய முடியவில்லை. அநேகமாக மகோதயபுரத்திற்கருகிலோ பெருஞ்செல்லூரிலோ குடி பெயர்ந்திருக்கலாம் என்பது அவள் எண்ணம். உண்மை என்னவெனில் கிழவிக்கு குழந்தையோ குட்டியோ கிடையாது. அதனால் அவர்கள் சென்ற பின் ஆதரிப்பார் ஒருவருமில்லை. தற்போதைக்கு நான்தான் தென்வாயில் ஸ்ரீ கோயிலில் அவளுக்கு இரண்டு வேளை சட்டிச்சோறு[160] கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறேன்."

"கிழவி தன்னுடைய பேச்சில் தலைவர் அல்லது யானைத் தலைவர் அல்லது சேனைத் தலைவர் என்றொருவரைப் பற்றிக் குறிப்பிட்டாளா?"

அமண்குடியார் சில கணங்கள் நிதானித்தார். பின் "ஆம். குறிப்பிட்டாள்." என்று பதிலளித்தார்.

44. தொடர்ந்தான் ஐங்கரன்



தஞ்சைப் பெருநகரின் அபிமானதொங்கன் திருவீதியிலிருந்து ஆனையாட்கள் தெருவை நோக்கி வேகவேகமாக நடை போட்டுக் கொண்டிருந்த அந்த கருத்த மனிதனைக் கூட்டத்தில் தவற விட்டு விடாமல் தொடர்வதற்கு ஐங்கரன் பெருத்த சிரமப்பட வேண்டியிருந்தது. பணி முடிந்து அனைவரும் இல்லம் திரும்பும் மாலை வேளையாதலால் வீதியில் நகரமே திரண்டு வந்துவிட்டாற் போலப் பெருங் கூட்டம் சேர்ந்திருந்தது. போதாக்குறைக்கு மாலை நேரங்களில் தெருவோரங்களில் முளைக்கும் அல்லங்காடிக் காரர்கள்[161] வேறு தெருவின் கணிசமான நீள அகலங்களை ஆக்கிரமித்து விட்டிருந்தார்கள். இத்தனை ஜனசந்தடிக்கு நடுவே திருவீதியில் நடந்து போவதே சிரமமெனில்

[160] சிவயோகியருக்கும் தவசியருக்கும் நித்தம் சட்டிச்சோறு வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிவந்தங்களைப் பல கல்வெட்டுககள் குறிப்பிடுகின்றன.

[161] நாளங்காடி – பகல் அங்காடி. அல்லங்காடி – இரவு அங்காடி.


இரதங்களிலும் புரவிகளிலும் பல்லக்குகளிலும் பயணிக்கும் பெரிய மனிதர்களுக்குக் கஷ்டகாலம்தான்.

விஷயம் தெரிந்த உள்ளூர் ஆட்கள் மாலை நேரங்களில் இந்தப் பக்கமே தலைவைத்துப் படுக்க மாட்டார்கள். நேராக அரண்மனையிலிருந்து இராஜகம்பீரன் திருவீதி வழியே தளிக்குளத்தார் ஆலயப் பெருந்தெருவைப் பிடித்து அப்படியே வடக்கே தப்பிச் சென்று விடுவார்கள். சிறிது நேரத்தை மிச்சப்படுத்தலாம் என்று குறுக்கு வழியில் புகுந்து மாட்டிக் கொள்ளும் வெளியூர் ஆட்கள்தான் மிகுதி.

இந்த நெரிசலான தெருவீதியில் வேகவேகமாக நடைபயின்று கொண்டிருக்கும் அந்த மனிதனின் தலை மட்டும்தான் பல நேரங்களில் ஐங்கரனின் கண்களுக்குத் தெரிந்தது. இறுக்கி முடியப்பட்ட கொண்டையை மட்டும் அடையாளம் வைத்துக் கொண்டு பின்தொடர வேண்டியதுதான். ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு அரியதொரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதனைத் தவற விடுவானேன்?

சற்றே கூர்ந்து கவனிப்போமாகில், அந்தக் கருத்த மனிதனுடன் வேறொருவனும் நடந்து கொண்டிருப்பது புலனாகும். சொல்லப்போனால் அந்த இரண்டாவது மனிதன்தான் வேகவேகமாக முன்னே நடந்து கொண்டிருந்தான். ஐங்கரன் பின்தொடர்ந்த கொண்டை மனிதன் அவனுக்குப் பின்னால் ஏறக்குறைய இழுத்துச் செல்லப்படுவது போல் சென்று கொண்டிருந்தான். இவ்வாறாக அந்தச் சந்தடி மிக்கப் பெருவீதியில் மூன்று மனிதர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கூட்டத்தில் வழி கண்டுபிடித்துச் சென்று கொண்டிருந்தார்கள்.

வீதியோரங்களில் எரிந்து கொண்டிருந்த பெருவிளக்குக் கம்பங்களில் திருவிளக்கிடுவார் தத்தம் பணியைத் துவக்கி விட்டனர். கம்பங்களை மறைத்துக் கொண்டு கடை விரித்திருந்த அல்லங்காடிப் பெருமக்கள் அவர்களின் சரமாரியான வசவுகளுக்கு ஆளாக நேர்ந்தது. எங்கே இம்மாதிரியான வசவுகளால் கடை ஆட்களுடன் கைகலப்பு நேர்ந்து விடுமோ என்கிற பயத்தில் விளக்கிடுவாருடன் ஒரு காவல் வீரனையும் அனுப்பி வைத்திருந்தார் கோட்டைக் காவல் தலைவர். அந்த வீரன் தன் பெரிய ஈட்டியின் நீண்ட அடிப்பாகத்தை பூமியில் தட்டித் தட்டிப் பெரிதாகச் சப்தமெழுப்பியபடியே சென்று கொண்டிருந்தான்.



தஞ்சை உள்ளாலையின் ஒரு பகுதி

தன் முன் நடந்து சென்று கொண்டிருந்த கொண்டை மனிதன் ஆனையாட்கள் தெருவிற்குத்தான் சென்று கொண்டிருக்கிறான் என்கிற உறுதியுடன் நடந்து கொண்டிருந்த ஐங்கரன், விளக்கிடுவாரின் ஆரவாரங்களில் தன்னை மறந்து ஒரு சில நிமிடங்களில் கவனமிழக்க, அடுத்த கணம் தெருவில் அவனைக் காணாமல் திகைப்புற்றான்.

அடக்கடவுளே! வீதியோரங்களில் இருந்த மாளிகைகள் ஏதேனுமொன்றில் சட்டென்று உள்ளே புகுந்து விட்டார்களா என்ன? இல்லையே... மாளிகைக்குள் புகுவதற்கு முன் வாயிற்காவலரால் வழிமறிக்கப் படுவார்களே? அப்படியொன்றும் நடந்ததைப் போல் தெரிய வில்லையே?

வேகவேகமாக நாலெட்டு எடுத்து வைத்து அவர்கள் கடைசியாகத் தன் கண்களுக்குத் தென்பட்ட இடத்தில் வந்து நின்றான். அவனது கூர்மையான கண்கள் நாலா புறங்களிலும் மங்கிய மாலை இருளைக் கிழித்துக் கொண்டு துழாவின. அந்த முயற்சி வீண் போகவில்லை. வலது பக்கம் தெரிந்த இரு மாளிகை மதில்களுக்கு நடுவே சிறு வழியொன்று கிழக்கே சென்று கொண்டிருந்தது. அந்த வழியை அடைத்துக் கொண்டு பாண்டி நாட்டு முத்து வியாபாரியொருவன் கடை விரித்திருந்ததனால் அப்படி யொரு வழி இருப்பதே தெரியாமல் இருந்தது. இந்த ஒரு வழியைத் தவிர திருவீதியிலிருந்து திடுதிப்பென்று மறைந்து போவதற்கு வேறு மார்க்கங்களில்லை என்பதை ஐங்கரன் கண்டான். யோசிக்காமல் கடையைச் சுற்றிக் கொண்டு அந்தக் குறுகிய சந்தில் புகுந்தான்.

புகுந்த கணத்தில் அவன் கண்களிரண்டும் அந்தகாரத்தில் மூழ்கிவிட்டன. ஏனெனில் அவ்வழியின் இருபுறங்களிலும் நீண்டிருந்த பெருமதில்கள் வானின் வெளிச்சத்தை அறவே வரவொட்டாமல் மறைத்து விட்டிருந்தன. நல்ல வேளையாக இந்தக் கும்மிருட்டு சில கணங்களுக்குத்தான் நீடித்தது. அவனது அவசரம் கருதியோ என்னவா அந்தக் குறைவான இருளுக்கு அவனது [illegible] கண்கள் விரைவில் பழகிக்கொண்டு விட்டன.

எல்லையில்லாமல் விரிந்த இருட்டுப் பாதையில் விறுவிறுவென்று நேராக நடந்தான். சிறிது நேரத்தில் தென்புற மாளிகையின் குறுக்கு மதில் முடிந்து பின்மதில் தெரியத் துவங்கியது. வடபுறத்து மாளிகையின் மதிலோ

இன்னும் முடிவடையாமல் சென்றுகொண்டேயிருந்தது. ஐங்கரனுக்குத் தொடர்ந்து வடபுறத்து மாளிகையின் மதிலையொட்டி முன்னேறிச் செல்வதா? அல்லது இருண்டு கிடக்கும் தென் மாளிகையின் பின்கட்டுக்குச் செல்வதா? என்பதில் சிறிது குழப்பமேற்பட்டது.

சட்டென்று ஒரு முடிவெடுத்து ஏதோ ஒரு பாதையில் சென்றிருக்கலாம்தான். ஆனால் ஐங்கரனின் நீண்ட கால ஒற்றறியும் அனுபவம் அவ்வாறு யோசிக்காமல் செயல்படுவதை அனுமதிக்கவில்லை. ஓரிரு நிமிடங்கள் தாமதமானாலும் சிந்தித்துச் செயல்படுவதே சிறந்த வழி என்பதை உணர்ந்திருந்தான் அவன்.

முதலில் நாம் எங்கிருக்கிறோம் என்பது தெளிவாகத் தெரிய வேண்டும். அது தெரிந்தால்தான் மேற்கொண்டு அந்த இருவரும் எந்தப் பாதையில் சென்றிருப்பார்கள் என்பதை யூகிக்க முடியும். அபிமானதொங்கன் திருவீதியிலிருந்து கிழக்கே புறப்பட்டுச் செல்லும் இந்த [illegible] சந்து நிச்சயம் இராஜகம்பீரன் திருவீதியில்தான் முடிந்தாக வேண்டும். அதில் சந்தேகமில்லை.

ஆனால் கம்பீரன் திருவீதியை அடைவதற்குள் மேலும் ஒரு திருமாளிகையையாவது கடந்தாக வேண்டும். ஆக, வடபுறம் தெரியும் மாளிகை இரண்டு பெரிய திருவீதிகளை அடைத்துக்கொண்டு நிற்கிறது. யாருடைய திருமாளிகையாக இருக்கும்? மாராயரின் உய்யக்கொண்டான் திருமாளிகை? சீ அது ஜெயபீமதளிக்கருகில் அல்லவா அமைந்திருக்கிறது! சரிதான்! சிறிது காலம் மலைநாட்டில் வாசம் செய்ததில் திசையைச் சற்று மறந்துதான் போய்விட்டோம்.

ஆ- இப்போது ஞாபகம் வருகிறது. இந்த மாளிகை மாராயருடையதில்ல. பல்லவரையருடையது. அவருடைய பெரிய திருமாளிகை வாயில்தான் இராஜகம்பீரன் திருவீதியில் அமைந்திருக்கும். ஆனால் அவருடைய மாளிகை இத்தனை நீண்டதல்லவே? அதற்கு அருகில். அடடா! இது அன்பில் திருமாளிகையல்லவா? அப்படியானால் நாம் நிற்குமிடம் அன்பில் திருமாளிகைக்கும் வீரசோழன் திருமாளிகையின் புரவி லாயத்திற்கும் இடைப்பட்ட இடமல்லவா?

அவனுடைய சந்தேகம் சரிதான் என்பதை உறுதி செய்வதைப்போல் சற்று தூரத்தில் “பிளீஹிஹி...” என்ற புரவிகளின் கனைப்புச் சப்தம் கேட்டது. வீரசோழன்

திருமாளிகையின் புரவி இலாயமா? அன்பில் திருமாளிகையின் பின்கட்டா? புரவி இலாயம்தான் என்று உறுதியாக அடித்துச் சொன்னது உள்மனம். விறுவிறு வென்று அந்தக் குறுக்குப் பாதையில் நடக்கத் துவங்கி விட்டான்.

சிறிது தூரம் சென்றதும் புரவிகளின் கனைப்பு மிகத் தெளிவாகவே கேட்கத் துவங்கியது. இந்தப் பக்கத்தில் வாயில் அல்லது திட்டி வாயிலாவது தென்பட வேண்டுமே! இதோ தெரிகிறது. இனி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். புரவி இலாயத்தினுள் விளக்குகளும் பந்தங்களும் ஏற்றப்பட்டிருக்கும் என்பது நிச்சயம்.

அவன் வாயிலை மெல்ல நெருங்க புரவிகளுக்கே உரியதொரு பிரத்யேக நாற்றமும் வைக்கோல் வாசமும் அந்தப் பகுதியிலிருந்து பலமாக எழுந்தன. ஒரு புரவி - இரு புரவிகள் என்றால் பொறுத்துக் கொள்ளலாம். நாற்பது ஐம்பது புரவிகளாயிற்றே? குடலைப் புரட்டியது அவனுக்கு. மிகுந்த சிரமத்துடன் அதனைப் பொறுத்துக் கொண்டான்

நேரே வாயில் வழியாக உள்ளே நுழைவதா வேண்டாமா என்கிற பிரச்சனை அடுத்ததாக எழுந்தது. இரகசியமாக உள்ளே நுழைய முயல்பவர்கள் வழக்கமான வாயிலைப் பயன்படுத்துவது நல்லதல்லதான். என்றாலும் தற்போதைக்கு அவகாசமில்லை. உடனடியாக அவர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்டாக வேண்டும். இல்லையேல் பட்ட பாடுகள் அனைத்தும் வீண்!

மெல்ல வாயிலை எட்டிப் பார்த்து போக்குவரத்து அதிகமில்லை என்று முடிவு செய்து ஷணநேரத்தில் மின்னலைப்போல் உள்ளே நுழைந்துவிட்டான். நுழைந்த மறுகணம் ஒரு ஓரத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்த வைக்கோற் புதருக்குள் ஒடுங்கிக் கொண்டான். சிவ சிவா! இது நாட்டு வைக்கோல் போலும். உடம்பில் பட்டவுடன் அரிப்பைத் துவக்கி விட்டுவிட்டது. சற்று தூரத்தில் இரண்டு மனிதர்கள் உரையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது. இன்னும் சற்று நெருங்கியாக வேண்டும். அரிப்பு வேறு தாங்க முடியவில்லை. விரைவில் பிறிதொரு இடத்திற்குச் சென்று ஒளிந்து கொள்வதுதான் உத்தமம். வேறு வழியில்லை. துணிந்து ஒரு முயற்சி செய்துவிட வேண்டியது தான்.

அவர்களிருவரின் பார்வையும் விலகியிருந்த ஒரு கணத்தில் சரேலென்று பாய்ந்து நான்கு புரவிக் கூடங்களைக் கடந்து மதிற்சுவரின் ஓரமாகத் தெரிந்த இருட்டில் ஒண்டிக்கொண்டான். அந்த சில கணங்களுக்குள் வியர்த்து விறுவிறுத்துவிட்டது அவனுக்கு. இதோ! பேச்சுக்குரல்கள் இப்போது நன்றாகவே கேட்கின்றன.

"வந்ததிலிருந்து ஏனப்பா நடுங்கிக்கொண்டே இருக்கிறாய்? இது என்னுடைய இடம். இதில் யாரும் என் அனுமதியின்றி உள்ளே நுழைந்துவிட முடியாது"

"பலதேவா! என்னுடைய பிரச்சனையை உனக்கு எப்படிச் சொல்லிப் புரியவைப்பதென்று தெரியவில்லை. என் பேரில் ஏதோ சந்தேகம் விழுந்துவிட்டதோ என்று அஞ்சுகிறேன்."

"பார்ப்பதற்கு அப்பிராணியாகத் தெரியும் உன் பேரிலா சோழன் சந்தேகப்படுகிறான்? ஹா...ஹா...ஹா! கிடக்கப் போய் உறங்கும் நேரமாகிறது. என்ன, நான் கேட்ட செய்திகளைப் பற்றி ஏதாவது சங்கதிகள் அடிபட்டனவா?"

"சேர நாட்டிலிருந்து எவனோ ஒருவன் வந்திருக்கிறான் ஏதோ ஆரைவாய்மொழி, வள்ளுவ நாட்டார் என்றெல்லாம் செய்திகள் அடிபட்டன..."

"அவனுடைய முகத்தை கவனித்தாயா? அவனை இன்னார் என்று உன்னால் அடையாளம் காட்ட முடியுமா?"

"விளையாடுகிறாயா பலதேவா? உக்கிரணத்தார் ஒரு போதும் தலை நிமிர்ந்து பார்க்கவே கூடாது. உணவைப் பரிமாறி விட்டு விலகிவிட வேண்டும். தெரிந்ததா? இந்தச் செய்தியை ஒட்டுக் கேட்பதற்குள்ளேயே போதும் போதுமென்றாகி விட்டது. பேரரசருக்கு உணவிடும்போது மெய் நடுங்கிக் கை கால்களெல்லாம் உதறலெடுத்து நெய் கைப்பிழையாகக் கீழே கொட்டி - ஏகக் களேபரம்!"

"சரி, மேற்கொண்டு சொல்..."

"பின் முறியிலெழுதாத இரகசியச் செய்தி என்று ஒன்றையும் சொன்னான்."

"என்ன அது?"

"தானைத் தலைவர் என்று ஒருவர் இருக்கிறார். அவர் மூலம்தான் சோழநாட்டுச் செய்திகள் வள்ளுவனாருக்குப் போகின்றன என்றான் அந்தச் சோ நாட்டான். ஆனால் பேரரசர் நம்பவில்லை. வள்ளுவ நாடுவாழியாரின் கற்பனைகளுள் இதுவுமொன்று என்று கூறிவிட்டார்."

"அப்பாடா!" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான் பலதேவன்.

"எதற்காக இந்தப் பெருமூச்சு?"

"அது... ஒன்றுமில்லை. மேற்கொண்டு சொல்!"

"சொல்வதற்கு வேறொன்றுமில்லை. பலதேவா! உன்னுடைய மைத்துனன் என்ற ஒரே காரணத்தினால் இந்தப் பாபகாரியத்தை செய்யத் துணிந்தேன். இன்னொரு முறை இவ்வாறான கோரிக்கைகளுடன் என்னிடம் வராதே. எனக்குப் பிடிக்கவில்லை. எதற்காக உனக்கு இப்படிப்பட்ட அரசாங்கச் செய்திகள் தேவைப்படுகின்றன? எதிரி நாட்டு ஒற்றனாகிவிட்டாயா நீ?"

"உஸ்... சப்தம் செய்யாதே. நேரமாகிவிட்டது. புரவி இலாயத்தின் தலைவர் வருகின்ற நேரம். நீ கிளம்புகிறாயா?"

"பலதேவா! உன் சகவாசமே சரியில்லை. காலம் கெட்டுக் கிடக்கிறது. ஒழுங்காக நடந்துகொள். இல்லையேல் தமக்கையிடம் உன் நடத்தையைப் பற்றி எச்சரிப்பதைத் தவிர வேறு வழியில்லை எனக்கு."

அவன் மெல்ல நகர்ந்து வாயிலுக்கு விரைவதை ஐங்கரனின் கண்கள் கண்டன. அடடா, இதென்ன? சுற்று புறமெங்கிலும் நிலவின் ஒளி பலமாக விழுகிறதே? இன்னும் சிறிது நேரத்தில் நாம் ஒளிந்துகொண்டிருக்கும் இடத்திலும் வெளிச்சம் நிறைந்துவிடும் போலிருக்கிறதே? அவனுடைய கண்கள் இயல்பாக மேல்நோக்கித் திரும்பின. வான வெளியில் அடர்ந்த கருநீலப் பின்னணியினூடே பௌர்ணமி நிலவு மேகத்திரளை விட்டு வெளியே வந்து விடுவதற்கான கடைசி நிமிட ஒத்திகைகளில் பரபரப்பாக மூழ்கியிருந்தது

இன்று பௌர்ணமியா என்ன? திடுக்கிட்டுப் போகிறாம் நாம்!

"அடுத்த பௌர்ணமியன்று உன்னை இதே இடத்தில் சந்திக்கிறேன்!"

புரவி இலாயத்தில் அன்றொரு நாள் இரவு அந்த முகமூடி உருவம் பலதேவனிடம் மொழிந்த மொழிகள், மறக்க முடியாமல் நமது மனதில் பதிந்து கிடக்கின்றன ஐங்கரனுக்கு என்ன நேரப் போகிறதோ! என்கிற அச்சத்தில் நமது மேனி மெல்ல நடுங்கவும் தொடங்கி விட்டது

45. இரவில் இருவர்



புரவி இலாயத்தின் ஒரு ஓரத்தில் அமைந்திருந்த சிறு மண்டபத்தின் நிழலுக்கு இடம் பெயர்ந்திருந்தான் ஐங்கரன். பளிச்சென்ற பௌர்ணமி நிலவின் வெளிச்சம் அந்த இலாயத்தின் பல பகுதிகளிலும் படிந்திருந்ததால் சற்றுத் தள்ளி அமைந்திருந்த அந்த மண்டபமே பாதுகாப்பானது என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டான்.

மண்டபத்தின் ஒரு ஓரமாகப் புரவிகளின் கழிவுகளை வெளியேற்றும் கால்வாய் அமைந்திருந்தது. அந்தக் கால்வாயிலிருந்து சொல்லமுடியாத துர்நாற்றம் எழுந்து கொண்டிருந்தது. என்றாலும் அவசரத்திற்கு ஒளிந்து கொள்ள வேறு பத்திரமான இடம் கிடைக்கவில்லை

நாழிகைகள் ஆமை வேகத்தில் கழிந்து கொண்டிருந்தன

பலதேவன் நிதானமாகப் புரவிகளுக்கு நீரும் கொள்ளும் காட்டிக் கொண்டிருந்தான். சில புரவிகள் அவசரப்பட்டுக் கொள்ளைப் பிடுங்கித் தின்ன முற்பட, அது இலாயமெங்கும் சிதறவே அவன் எரிச்சலுக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தான் சில வேளைகளில் அவனது கோபம் புரவிகளின் கழுத்தில் பலமான அறையாகவும் வெளிப்பட்டது. ஆனால் புரவிகள் அவனது கோபத்தையெல்லாம் இலட்சியம் செய்யவில்லை. தொடர்ந்து தாம் நினைத்த காரியத்தை முடிப்பதிலேயே அவை குறியாக இருந்தன.

உணவிட்டு முடித்தவன் புரவி இலாயத்தை ஓரளவிற்கு சுத்தம் செய்துவிட்டுக் கைகால்களைக் கழுவிக்கொண்டு மண்டபத்தை நோக்கி நகர்ந்தான்.

ஐங்கரனின் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. எதற்காகச் சம்பந்தமில்லாமல் இங்கே வர முற்படுகிறான்? மண்டபத்தில்

ஏதாவது இருக்கிறதா என்ன? அவன் கண்கள் மண்டபத்தில் இருளைக் கிழித்துக்கொண்டு அலசின. அடடா.. அந்தக் கோடியில் ஏதோ ஒரு மூட்டை இருப்பதுபோல் தெரிகிறதே? அது இந்தப் பணியாளனுடைய இரவு உணவா என்ன? கெட்டது குடி! மண்டபத்தில் இருள் அதிகமாக இருந்தாலும் மிக அருகே நெருங்கி வந்து விட்டால் நமது உருவம் நிச்சயம் புலப்பட்டுவிடும். மிகவும் நெருங்கி விட்டான். இனி மண்டபத்திலிருந்து வெளியேறுவதற்கு அவகாசமில்லை. ஒரு போராட்டத்திற்கு ஆயத்தமாக வேண்டியதுதான்.

தன்னுடைய குறுவாளைக் கையில் பிடித்துக்கொண்டு இருளில் தெரிந்த அந்த நிழல் உருவத்தைத் தாக்கத் தயாரானான் ஐங்கரன். நுழைந்தவுடன் வாளின் பிடியால் மண்டையில் நச்சென்று ஒரே அடி! அந்த அதிர்ச்சியிலிருந்து பணியாளன் விடுபடுவதற்குள் வாயிலை நோக்கி ஒரே ஓட்டமாக ஓடிவிட வேண்டியதுதான். இந்தக் குறுகிய அவகாசத்திற்குள் தாக்கப்பட்டவன் சுதாரித்துக் கொண்டு தன்னைத் துரத்தாமலிருக்க வேண்டும். அல்லது கூச்சல் போட்டு புரவி இலாயக் காவலர்களைக் கூப்பிடா [illegible] விருக்கவேண்டும். இது சாத்தியப்படுமா இல்லையா என்றெல்லாம் யோசிப்பதற்கு நேரமில்லை. செயலுக்குத் தயாராக வேண்டியதுதான்.

மண்டபத்தை வேகவேகமாக நெருங்கிவிட்ட பலதேவன் உள்ளே நுழையாமல் அந்த மண்டபத்தின் மேற்பரப்பை ஆவலுடன் நோக்கியபடி நின்றான். அவனுக்கு இரண்டு கோல் இடைவெளியில் மண்டபத்தின் தெற்குத் தூணுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ஐங்கரனுக்கு அவன் [illegible] செய்து கொண்டிருக்கிறானென்பது புரியவில்லை.

ஓரிரு கணங்களில் மண்டபத்தின் உத்திரத்தில் “தொப்!”பென்று யாரோ குதிக்கும் சப்தம் கேட்டது. அதனைத் தொடர்ந்து மண்டபத்தின் கபோதத்திலிருந்து ஒரு உயரமான உருவம் கீழே இறங்க முற்படுவதையும் அதற்குப் பணியாளன் உதவி செய்வதையும் கண்டான் அவன். ஓ! இந்த மண்டபத்தின் மேற்தளம் இலாயத்தின் சுவரையொட்டி அமைந்திருக்கிறது [illegible] அருகிலமைந்திருக்கும் ஏதோ ஒரு மாளிகையின் [illegible] சுவர்களின் வழியாக ஏறி மண்டபத்தின் உத்திரம் வழியாக இந்த மர்ம உருவம் இலாயத்திற்குள் வந்திருக்கிறது.

“என்ன பலதேவா! காரியம் ஜெயம்தானே?” - இந்தக் குரல்??? ஐங்கரனுக்கு ஏனோ பயம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

“வெற்றிதான். ஆனால் பெருவெற்றியென்று சொல்வதற்கில்லை. என் மைத்துனன் மிகவும் பயந்து கிடக்கிறான். அதனால் அதிகம் செய்திகள் திரட்ட முடியவில்லை.”

“சரி. இந்த மண்டபத்தில் உட்கார்ந்து பேசுவோமா?”

“ஐயனே! இங்கு புரவிகளின் கழிவுகள் வெளியேறும் கால்வாய் அமைந்துள்ளதால் துர்நாற்றம் அடிக்கும். வேறு பாதுகாப்பான இடத்திற்குச் செல்லலாம் வாருங்கள்!” என்று அந்தப் புதிய உருவத்தைப் பலதேவன் கொட்டிலின் முன்பகுதிக்குக் கூட்டிச் சென்றான். இன்றிரவு முடிவதற்குள் இந்த இலாயத்தில் எத்தனை நாற்றமெடுக்கும் இடங்களுக்கு [illegible]ம் பெயரவேண்டுமோ! என்று நொந்தபடி ஐங்கரனும் அவர்களைப் பின்தொடர வேண்டி வந்தது

இரு கொட்டில்களுக்கு நடுவில் அமைந்திருந்த சற்றே [illegible] மண்டிய பகுதிக்குச் சென்று [illegible] பலதேவன். இருவரும் அதில் அமர்ந்து கொண்டார்கள். கொட்டிலுக்கருகில் ஒரு ஓரமாக நின்றபடி அவர்களின் உரையாடலைத் தொடர்ந்து ஒட்டுக் கேட்கத் [illegible]ப்பட்டான் ஐங்கரன்.

"பலதேவா! இராஜாங்கத்தில் மிக முக்கிய [illegible]ற்றங்களெல்லாம் நடைபெறப்போகின்றன. நீ தயாராக இருக்க வேண்டும். உன் மைத்துனன் கொண்டுவந்த செய்திகளை முதலில் கூறு. மற்றவர்களைப் பிறகு பேசிக் கொள்ளலாம்.”

வள்ளுவ நாடுவாழியாரைப் பற்றியும் சேரநாட்டு [illegible] பற்றியும் மைத்துனன் கூறிய செய்திகளை [illegible] சுருக்கமாகக் கூறி முடித்தான்.

"[illegible]னைத்தலைவரென்று எவரோ இருக்கிறாராம். அவர் [illegible]த்தான் சோழநாட்டின் இரகசியங்களெல்லாம் [illegible]டிற்குச் சென்று சேருகின்றனவென்று அந்த ஒற்றன் [illegible]னாம் ஆனால் பேரரசர் அதனை [illegible]வில்லையாம்!”

"ம். இப்படிக் கூறிவிட்டாலும் அருள்மொழிவர்மனை [illegible] முடியாது. மனதில் ஒரு ஓரமாக இதனைக் குறித்து

வைத்துக் கொண்டிருப்பான். தானைத் தலைவரைப் பற்றி அறியுமளவிற்கு அந்தச் சேரநாட்டு ஒற்றன் வந்திருக்கிறான் என்றால் அது மிக மிக ஆபத்தானது. அவனுடைய வேலையை உடனடியாகத் தீர்த்தாக வேண்டும். அவனை உன் மைத்துனனால் அடையாளம் காட்டவியலுமா?"

"முடியாது என்று கூறிவிட்டான். எதிரே அமர்ந்திருந்தாலும் தலை நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்ப்பதற்கு இவனுக்குத் திராணியில்லை - கோழை!"

"அவன் பேரில் சந்தேகம் வராமலிருப்பதும் ஒரு வகையில் நல்லதுதான். பின்னால் அவனை மீண்டும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்."

"ஐயா...! அந்தத் தானைத்தலைவர் என்பது...?"

"அவரைப்பற்றி அதிகம் பேசாமலிருப்பது உனக்கும் நல்லது. எனக்கும் நல்லது."

"புரிந்தது. தவறுக்கு மன்னிக்க வேண்டும். இனி ஒரு போதும் தவறான கேள்விகள் என்னிடமிருந்து எழாது."

"நல்லது. அரசியல் மாற்றங்கள் சில வரப் போகிறேனென்று கூறினேனல்லவா? அதனைப் பற்றிய சில தகவல்களை உன்னிடம் பகிர்ந்து கொள்கிறேன். அப்படியே வேறு சில முக்கிய உதவிகளையும் உன்னிடமிருந்து எதிர்பார்க்கிறேன்... "

"அடிமை எதற்கும் சித்தமாயிருக்கிறேன்."

"சேரநாட்டுப் படையெடுப்பு நடைபெறப் போவது உறுதியாகி விட்டது. இறுதி எச்சரிக்கை ஓலைகள் வள்ளுவ நாடுவாழிக்கு அனுப்பப்பட்டு விட்டன. சோழன் தென்சேர நாட்டைத் தாக்கப்போவது உறுதி. இந்தப் போரில் சோழனைப் படுதோல்வியடையச் செய்தால்தான் மற்ற காரியங்கள் நாம் நினைப்பதைப்போல் நடக்கும். அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு."

"பலமான எதிரணி சேர்த்து ஒருசேரத் தாக்குவதா?"

"ம்ஹூம். அதெல்லாம் தலையைச் சுற்றிக்கொண்டு மூக்கைத் தொடும் வழி. சுருக்கமான மிக நிச்சயமான வழியைக் கையாண்டு அவர்களை வீழ்த்த வேண்டும்!"

"நீங்கள் சொல்வது விளங்கவில்லையே...?"

உரையாடலின் இந்தக் கட்டத்தில் அந்த மர்ம உருவத்தின் குரல் மிகவும் அமிழ்ந்துபோக ஐங்கரனால் அந்த மிக முக்கியமான வாசகங்களைக் கேட்க முடியாமல் போய்விட்டது. நொந்து போனான் அவன். மிக முக்கியமான இரகசியம் பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. எப்பாடுபட்டாவது இதனைக் ஒட்டுக் கேட்டுத்தான் ஆக வேண்டும். இப்போது நின்று கொண்டிருக்கும் இடமே ஆபத்தானது. மேலும் நெருங்கி அடுத்த கொட்டிலுக்குச் செல்வது அதைவிட ஆபத்தானது. என்றாலும் வேறு வழியில்லை. நெருங்கித்தான் ஆக வேண்டும்.

"ஐயோ! நீங்கள் கூறுவது மிக மிக ஆபத்தான காரியமாயிற்றே... மாட்டிக்கொண்டால்... யோசிக்காமல் கழுவிலேற்றிவிடுவார்களே ஐயா?" பயத்தில் தோய்ந்த பலதேவனின் குரல் அவனையும் அறியாமல் உயர்ந்து விட்டது.

"முட்டாளே! ஏன் அலறுகிறாய்? எதற்காக உன்னிடம் இத்தனை இரகசிய விஷயங்களையும் பகிர்ந்துகொள்கிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இத்தனை பயந்தாங்கொள்ளியாக... இத்தனை கோழையாக... உடனே நடுங்கியாக இருந்தாயானால் வாழ்வில் ஒரு போதும் முன்னேற முடியாது. கடைசிவரை புரவிகளுக்கு நீர் காட்டிக் கொண்டு அவற்றின் கழிவுகளைச் சுத்தம் செய்து கொண்டு இங்கேயே கிட!" - அந்த உருவம் எழுந்திருக்கத் தலைப்பட்டது.

"ஐயனே! மன்னிக்க வேண்டும்..." பலதேவன் அந்த உருவத்தின் கால்களைப் பிடித்தான். "எனக்கு இம்மாதிரி விஷயங்களில் பழக்கமில்லை. அதனால் பயம் பிடித்து விட்டுகிறது."

"பின் எனக்கு மட்டும் இப்படி ஒளிந்து திரிந்து மறைந்து வாழ்வதில் முன்னனுபவம் இருக்கிறதா என்ன? மனதில் ஒரு இலட்சியத்தைக் கைக்கொண்டு விட்டால் அதைரியத்தைத் துடைத்துப் போட்டுவிட வேண்டும் இந்த உலகம் தைரியசாலிகளுக்கானது. கோழைகளுக்கானதல்ல இந்தக் காரியத்தை மட்டும் உன்னால் முடிக்க முடியுமானால் இந்தப் புரவி இலாயத்திற்கென்ன? சோழர் புரவிப் படைக்கே உன்னைத் தலைவனாக்குகிறேன்!"

"நிஜமாகவா???" - பலகீனமான மனம் படைத்த பலதேவனின் கண்கள் விரிந்தன. தினமும் நாற்றமெடுக்கும் கொட்டிலின் கழிவுகளுடன் இருந்து இருந்து அவனது

உடலிலும் அந்த நாற்றம் நிரந்தரமாகப் படிந்து விட்டதாக மனைவி ஏசியது நினைவிற்கு வந்தது. அந்த அகங்காரியின் கொட்டத்தை ஒரேயடியாக அடக்கிவிட்டு.. ஏன், அவளை ஒரு ஓரமாக ஒதுங்கி நில்! என்று சொல்லிவிட்டு.. நான்கு இளம் பெண்களைக் கூடத் திருமணம் செய்து கொள்ளலாம். நாட்டின் புரவிப்படைத் தலைவனை எதிர்க்கும் தைரியம் எவனுக்குண்டு??

"என்னை நீ நன்றாக அறிவாய் பலதேவா! நான் ஒரு முறை வாக்குக் கொடுத்து விட்டால் கொடுத்ததுதான். இந்தக் காரியத்தை மட்டும் முடித்தாயானால்...."

ஐங்கரன் எத்தனையோ எச்சரிக்கையாக அடுத்த கொட்டிலுக்கு நகர்ந்தாலும் அவனது இருப்பை அந்த அகால நேரத்தில் முழித்துக் கொண்டிருந்த புரவியொன்று உணர்ந்து விட்டது. மிருகங்களுக்கேயுரிய இயல்பான எச்சரிக்கையுணர்வு அதனை ஆக்கிரமிக்க, இருப்புக் கொள்ளாமல் "பிளீ....ஹி...." என்று கனைத்து வைத்தது.

அடடா! புரவி நின்று கொண்டே உறங்கிக் கொண்டிருக்கிறது[162] என்றல்லவா நினைத்தோம்? இது கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருக்கிறது போலிருக்கிறதே? ஐயையோ! இப்போது அவர்கள் எழுந்து இரண்டடி வந்தார்களானால் கையும் மெய்யுமாக மாட்டிக்கொள்வோம்! வேறு வழியேயில்லை. உடனடியாக வெளியேறியாக வேண்டும்.

"பலதேவா! என்ன ஒரு புரவி சம்மந்தமில்லாமல் கனைக்கிறது?"

"திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டு புரவிகள் இரவில் கனைப்பது வழக்கம்தான். நீங்கள் கவலைப்பட வேண்டாம்."

ஐங்கரன் அடி மேல் அடி வைத்து வாயிலை நோக்கி நகரத் துவங்கினான். நல்ல வேளையாக அவன் நின்ற இடத்திலிருந்து நான்கு கொட்டில்கள் தள்ளி ஒரு திட்டி வாயில் அமைந்திருந்தது. அதனைச் சப்தம் செய்யாமல் திறந்து...

162 புரவிகள் நின்றுகொண்டே உறங்கும் பழக்கமுடையவை.

"இங்கு வந்ததிலிருந்து மனது ஏதோ சரியாகவே இல்லை. யாரோ நாம் பேசுவதை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருப்பது போல் ஒரு எண்ணம் தோன்றிக் கொண்டேயிருக்கிறது..."

"என்னுடைய அனுமதி இல்லாமல் ஈ எறும்பு கூட இந்தக் கொட்டடிக்குள் நுழைய முடியாது ஐயா. வேண்டுமானால்..."

ஐங்கரன் முடிந்தவரை சப்தம் செய்யாமல் திறக்க முயன்றாலும் அந்தப் பழைய திட்டிவாயிற் கதவத்தின் தாழ்ப்பாள் இரவின் ஓசையைக் கிழித்துக்கொண்டு "கிறீச்!" என்று ஓசையெழுப்பத்தான் செய்தது.

"தீப்பந்தத்தை உடனே கொளுத்து! கிழக்குப் பக்கம் ஏதோ சப்தம் கேட்கிறது...."

ஐங்கரன் அரைகுறையாக அந்தத் திட்டி வாயிற் கதவத்தை மூடிவிட்டு வெளியே விரிந்த எல்லையில்லாத இருளில் ஓட்டம் பிடித்தான்.

46. கடற்கரைக் கோயில்



தளிக்குளக்கரையில் நடந்து கொண்டிருந்த விறுவிறுப்பான விவாதம் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. முழு நிலவு வானில் நன்றாக மேலெழும்பிய பிறகும் கூட அந்தத் தோப்பில் பேச்சுக் குரல்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டுதான் இருந்தன. நிலவின் தண்மை மிக்க ஒளியில் அந்த நான்கு பெரிய மனிதர்களின் திரு முகங்களையும் இப்போது நன்றாகவே காண முடிந்தது.

"ஆக, ஐங்கரன் கூறிய தகவல்களையும் நீங்கள் திரட்டி வந்திருக்கும் தகவல்களையும் வைத்துப் பார்க்கும்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் நாடகத்தில் தலைவர் அல்லது தானைத்தலைவர் என்று குறிப்பிடப்படும் முக்கியப் புள்ளிக்குப் பெரும் பங்கிருப்பது புலனாகின்றது. அவருக்குச் சோழ இராஜாங்கத்தின் பல மட்டங்களில் தொடர்புகள் இருப்பதும் உறுதி. ஐங்கரன் தொடர்ந்து பல நாட்களாக இந்தக் கும்பலுக்குள் ஊடறுத்துவிட

வேண்டுமென்று முயன்றுகொண்டிருக்கிறான். இன்னமும் வெற்றி கிட்டிய பாடில்லை" என்றார் அருள்மொழிவர்மர்.

"தொடர்ந்து முயன்று அவர் யார் என்ன என்பன போன்ற விபரங்களைத் திரட்டுவதுதான் என் அடுத்த கட்டப் பணியா?" - இது அமண்குடியார் கிருஷ்ணன் இராமனின் கேள்வி.

"இல்லை. அவரைத் தொடர முயல வேண்டாம். அது உங்களின் தலைக்கே ஆபத்தாக முடியும். நமக்கு வேறு சில பணிகள் இருக்கின்றன. நாளை மறுநாள் மீண்டும் நானும் நீங்களுமாக நாகைக்குக் கிளம்புகிறோம். மாராயரும் பல்லவராயரும் தென்னாட்டுப் படையெடுப்பிற்கான தளவாடங்களையும் கிரியைகளையும் சேகரிப்பதில் முனைவார்கள்."

"என்ன? மீண்டும் நாகைக்கா?"

"ஆம். இன்னும் ஓரிரு திங்களில் மாபெரும் வணிகக் கலங்கள் நான்கு கீழ்த்திசை நாடுகளுக்குப் புறப்படுகின்றன. அவற்றில் பல விலையுயர்ந்த சரக்குகள் செல்வதால் நானாதேசி வணிகர்கள் தகுந்த கடற்காவலுக்கு ஏற்பாடு செய்யும்படி அரசாங்கத்தை வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளனர். அந்த ஏற்பாடுகளை நாமிருவரும் முன்னின்று கவனிக்க வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் செல்கிறோம்."

கடற்காவற்படையை ஏற்பாடு செய்ய இவரே நேரில் செல்ல வேண்டுமா என்ன? என்று வியந்தார் அமண்குடியார். வணிகர்களுக்குத் தேவையேயில்லாமல் மிக அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் பேரரசர் என்னும் குற்றச்சாட்டில் சிறிதளவு உண்மையும் இருக்கும் போலிருக்கிறதே?

"மலைநாட்டிலிருந்து வேறு புதிய செய்திகள் ஏதாவது உண்டா?"

"ஐங்கரனை இங்கேயே நாம் தக்கவைத்துக் கொண்டபின் அதிகம் செய்திகளில்லை. மலைநாட்டின் நிலப்பகுதிகளையும் மொழி மற்றும் கலாச்சாரத்தையும் நன்கு அறிந்த நபர்கள் நமது ஒற்றர்படையில் சொற்பம்தான்.

அதில் முக்கியமான நால்வரை சளுக்க தேசத்திற்கும் வடுகர் நாட்டிற்கும்[163] குடமலைக்கும்[164] அனுப்பியாயிற்று. அனுபவமற்ற புதியவர்களை அங்கே அனுப்பினால் அவர்களின் தலைக்குத்தான் ஆபத்து..."

ஒற்றர் படைத் தலைவரான மாராயரின் குரலில் அதிருப்தி வெளிப்படையாகவே தெரிந்தது. அனுபவம் வாய்ந்த ஒரு ஒற்றனைச் சிக்கலான வெளியூர் வேலைகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளாமல் உள்ளூர் வேலைகளில் ஈடுபடுத்துவதில் அவருக்கு அத்தனை பிரியமில்லை போலும் என்று நினைத்துக் கொண்டார் கிருஷ்ணன் இராமன்.

"சரி, சரி. நீர் சொல்ல வருவது புரிகிறது. மீண்டும் ஐங்கரனை மலைநாட்டிற்கே அனுப்பியாக வேண்டும். வேறு வழியில்லை என்கிறீர். அவ்வளவுதானே? இன்னும் இரண்டு நாட்கள் பொறுத்திருப்போம். ஐங்கரனிடமிருந்து புதிய செய்திகள் எதுவும் வரவில்லையெனில் மீண்டும் மலைநாட்டிற்கே அவனை அனுப்பிவைத்து விடலாம். சரிதானா?" என்றார் பேரரசர் மாராயரை சமாதானப் படுத்தும் விதமாக.

"தங்களின் சித்தம்."

"பிஷு" ஆனந்த தேரரிடமிருந்துகூட ஏனோ இன்னமும் எந்தத் தகவலும் வந்து சேரவில்லை. நமது திட்டப்படிக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்குமானால் அநேகமாக இந்நேரம் அவர் நமது வீரர்களுடன் கழிக்குடிக்குச் சென்று சேர்ந்திருக்க வேண்டும்" என்று தன்னுடைய எதிர்பார்ப்பைப் பகிர்ந்து கொண்டார் பல்லவராயர்.

அரசியல் அனுபவமும் உலக ஞானமும் நிரம்பப் பெற்ற அந்தப் பழுத்த மனிதரின் கணிப்பு துல்லியமானதாகவே இருந்தது. ஏனெனில் அவர் அந்த வாக்கியத்தை [illegible]றையப் பூர்த்தி செய்து முடித்த அதே கணத்தில் அவர் குறிப்பிட்ட மூன்று மனிதர்களும் பழம் பெருமை வாய்ந்த கழிக்குடிக் கடற்கரையின் ஈரமணலில் தங்களின் பாதங்களை அழுத்தமாகப் பதித்தார்கள்.

---

[163] இன்றைய கர்நாடகம்.
[164] இன்றைய கூர்க்.

போக்குவரத்து பெரிதும் அடங்கிப்போயிருந்த அந்த பின்னிரவுப் பொழுதில் அவர்களை வரவேற்பது போலும் அந்தப் பெருங்கடலின் அந்தகாரத்திலிருந்து புறப்பட்ட பேரலையொன்று சடாரென்று கிளம்பிக் கரையில் மோதி உப்பு நீரால் அவர்களின் பாதங்களை நனைத்தது.

மலைநாட்டு மண்ணின் தலைவிதியையே மாற்றப் போகும் அந்த மூன்று மகத்தான மனிதர்களின் வருகையை தட்ஷிண தேசத்தின் இயற்கை எப்படித்தான் புரிந்து கொண்டதோ! நாமறியோம்.

* * * * * * * *

மூன்று மகா சமுத்திரங்கள் சங்கமிக்கும் புனிதம் மிக்க இடமான புறத்தாய நாட்டுக் கழிக்குடியின் கடற்கரை அந்த அதிகாலை வேளையில் அமைதி பொங்கும் எழிலுடன் காட்சியளித்தது. மாலைகளிலும் முன்னிரவு வேளைகளிலும் ஆஹா ஓஹோவென்று ஆர்ப்பரிக்கும் அலைகள்கூட அங்கு படிந்திருந்த அமைதியைக் குலைக்க விரும்பாதவை போலும் தமது ஆரவார தடபுடல்களை அடக்கிக் கொண்டு மெல்லிய சலனங்களுடன் கரையை வந்தடைந்தன. ஆதவன் கிழக்கில் உதயமாவதற்குக் குறைந்தது இன்னும் இரண்டு நாழிகைகளாவது ஆகலாம். என்றாலும் அதற்குள் மெல்லிய வெளிச்சம் அக்கோநகரின் மீது படியத் துவங்கி விட்டது.

தூய்மையையும் புனிதத்தையும் ஒருங்கே கொண்டு திகழும் அந்த அதிகாலை வேளையில் கடற்கரைக்கு அருகே அமைந்திருந்த கன்னியாபடாரியார்[165] ஆலயத்தில் உஷத்கால பூஜைக்கான ஆயத்தங்கள் தொடங்கின. தென்பாண்டி மன்னர்களால் 'தென்னவர்தம் குலதெய்வம்' என்று செப்பேடுகளில் விதந்தோதப்பட்ட அன்னை கன்னியா பகவதியாரை அந்த அதிகாலை வேளையில் தரிசித்து விடவேண்டுமென்கிற முனைப்புடன் உள்ளூர் ஆட்களும் வெளியூர் ஆட்களும் உற்சாகத்துடன் கோயிலில் திரண்டு கொண்டிருந்தார்கள்.

திருக்கோயிலின் முகமண்டப நுழைவாயிலைப் பெரிய கதவமொன்று அடைத்திருந்ததால் திரண்டிருந்த பக்தர்கள்

[165] குமரியம்மன் திருக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவியின் பெயர் இப்படித்தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

பலரும் மஹாமண்டபத்திலும் வெளிப்பிரகாரங்களிலுமே நிற்க வேண்டி வந்தது. அப்படி நின்ற பக்தர்களில் வட மேற்கு மதிற்பகுதியையொட்டிக் காத்திருந்தவர்கள் திருக்கோயில் மடைப்பள்ளியில் உருவாகிக் கொண்டிருந்த காலைப் பிரசாதங்களின் இனிய நறுமணத்தினால் ஈர்க்கப்பட்டார்கள். அவர்களின் மனதில் தேவியைப் பற்றிய எண்ணங்களைவிடத் தரிசனத்திற்குப் பின் கிடைக்கப் போகும் சூடான பொங்கல் மற்றும் அதிரசம் பற்றிய நினைவுகள் அதிகமாக ஆக்கிரமிக்கத் துவங்கி விட்டன.

அந்தப் பழங்கற்றளியின் திருச்சுற்றாலை மதிற்சுவருக்கும் சமுத்திரத்திற்குமிடையே தென்பட்ட நீண்ட மணல் வெளியில் சிறியதும் பெரியதுமாய் பல பாறைகள் சிதறிக்கிடந்தன. அப்பாறைகளில் கடலலைகள் திரும்பத் திரும்பப் பலமுறை மோதி மோதிச் சிதறி விளையாடிக் கொண்டிருந்தன. அப்படிச் சிதறிய நீரலைகளில் ஒரு சில சமுத்திரத்திற்கு உடனடியாகத் திரும்பி விடாமல் அந்தப் பாறைகளினூடே தெரிந்த சந்து பொந்துகளிலெல்லாம் புகுந்து புறப்படவும் செய்தன. இந்த விளையாட்டு பல யுகங்களாக நடைபெற்றுக் கொண்டிருந்ததாலோ என்னவோ அப்பாறைகள் பலவற்றில் கடற்பாசியும் இதர நீர்த் தாவரங்களும் பசும் போர்வையாய்ப் படிந்திருந்தன.

அப்பகுதியில் நீண்டிருந்த பெரும்பாறைகளிலொன்றில் புது நண்பர்களான காம்போஜத்து பிஷு ஆனந்த தேரரும் ...யவர் கம்பன் மணியனாரும் பார்வைகளை வெவ்வேறு திக்குகளில் செலுத்தியபடி அமர்ந்திருந்தார்கள். அவர்களினருகே கம்பீரமாகக் கைகளை மடித்துக் கண்ணெதிரே விரிந்த மஹாசமுத்திரத்தை நோக்கியபடி ...யர் பரமன் மழபாடியார்.

மூவரும் தத்தம் எண்ணங்களினாலான தனியுலகில் மூழ்கியிருந்தவர்களாகக் காணப்பட்டார்கள். எதற்காகவோ அல்லது யாருக்காகவோ அவர்கள் காத்திருப்பது போலும் தோன்றிற்று. அதிகாலை வேளையில் கடற்கரையில் அவர்களைச் சந்திக்க எவர் வரப்போகிறார்கள்? என்று நமக்கு வியப்பேற்படுகிறது.

புவனத்தின் ஈசுவரியாகிய கச்சிப்பட்டு ஐஞ்சந்தி துர்க்கா பரமேஸ்வரியை மனதின் அடியாழத்தில் எந்நேரமும் ...த்து வந்த மழபாடியாரின் மனதை வார்த்தைகளில் வடித்துவிட முடியாத எண்ணங்களும் உணர்வுகளும்

ஆக்கிரமித்திருந்தன. இந்த இடத்திற்கு நாம் வருவது இது தான் முதல் முறையா? என்று தன்னைத்தானே வியப்புடன் வினவிக் கொண்டார் அவர்.

இந்தக் கன்னியா பட்டாரகியார் திருக்கோயில் வளாகமும் திருச்சுற்றுமதிலும் கடலும் வானும் புதியன போல் தெரியவில்லையே? இதோ! இந்தக் கடற்கரையின் நீர்த்தாவரங்களையும் மணற்துகளையும் நாம் ஸ்பரிசிப்பது இதுவே முதல் முறையல்லவே? முக்கடல் கூடும் திரிவேணி சங்கமம், அந்தக் கருநீல சங்கமத்திற் கப்பால் எல்லையின்றி கண்ணுக்கெட்டிய தூரம் வரை இலக்கின்றி விரியும் வானம்.

பரமா! நிச்சயம் நீ இங்கு வருவது முதல் முறையல்ல. ஏதோ ஒரு யுகத்தில் ஏதோ ஒரு வடிவத்தில் நீ இந்தக் குமரியம் பெருந்துறைக்கு வந்திருக்கிறாய். தேவி கன்னியா பட்டாரகியின் சன்னிதானத்தில் மனமுருக நின்று பிரார்த்தனை செய்திருக்கிறாய். "எங்களை எங்கள் குலத்தை எங்களின் சோழவளநாட்டை தென்னகத்தை ஒரு குறைவுமில்லாமல் காக்க வேண்டும் தாயே!" என்று அவளுடைய திருத்தாள்களில் பணிந்து பரவியிருக்கிறாய்.

கழிக்குடிக் கடற்கரை உனக்குப் பழக்கமான இடம்தான். விட்டகுறை தொட்டகுறையாக ஏதோ ஒன்றுதான் உன்னை இத்தனை தூரம் தென்பாண்டி நாடுவரை இழுத்துக் கொண்டு வந்திருக்க வேண்டும். நடந்து கொண்டிருக்கும் அரசியல் நிகழ்வுகளையும் பேரரசரையும் பிஷுவையும் தாண்டிக் கழிக்குடிக்கும் உனக்கும் ஏதோ புரிந்துகொள்ள முடியாததொரு பந்தம் இருக்கிறது. ஜென்ம ஜென்மாந்திரங்களாகத் தீர்க்க வேண்டிய கணக்கொன்று மிச்சமிருக்கிறது. அதுதான் நீ இங்கு வருவதற்கான முக்கியமான முகாந்திரம்.

குருகாடி, உறந்தை, தஞ்சை, நாகை என்று பிறந்ததிலிருந்து சோழநாட்டைவிட்டு ஒருபோதும் வெளியேறியிராத உனது பாதங்கள், கடந்த ஒரு திங்களுக்குள் எத்தனையெத்தனை ஊர்களுக்குப் பயணப் பட்டுவிட்டன? ஒவ்வொரு பகுதியிலும் உனக்கேற்பட்ட அனுபவங்கள்தான் எத்தனை வித்தியாசமானவை?

கள்ளம் நிரம்பிய இந்தக் காம்போஜத்து பிஷு பேரரசரின் பெயரைச் சொல்லிக்கொண்டு உங்களுக்கு ஏதோ ஒரு முக்கிய வேலை வைத்திருப்பதாகப் பல நாட்களாகக் கூறி வருகிறார். ஆனால் அது இன்ன பணி

அல்லது காரியம் என்பதை இன்னமும் கூடத் தெரிவிக்கவில்லை. கிடக்கட்டும். விபரம் புரியாத இந்த அரசியல் பணியை முடிப்பதற்காகவா பட்டாரகி உன்னை இத்தனை தூரம் துரத்தியிருப்பாளென்று நினைக்கிறாய்? இருக்கவே முடியாது! இந்த பிஷுவுக்கும் அரசியல் அதிகாரிகளுக்கும். ஏன், உனக்கும்கூட இன்னமும் சரிவரப் புலப்படாத வேறொரு முக்கியக் காரணத்தின் பாற்பட்டுத் தான் இந்த மிக நீண்ட பயணத்திற்கான வாய்ப்பு உனக்கு அமைந்திருக்கிறது என்று தோன்றுகிறது.

இம்மாதிரி பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள் உனக்குள் முகிழ்ப்பது முதல் முறையல்ல. அதனால் இனி என்னதான் நடக்கப் போகிறதென்பதை அமைதியுடன் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதுதான்.

மேற்கொண்டு அலையலையாய் எழுந்த எண்ணங்களைக் கட்டுப்படுத்திக் கொண்ட மழபாடியார், பிஷுவை நோக்கினார். எப்போதும் ஓரளவிற்கு மகிழ்ச்சியுடனும் கலகலப்புடனும் தோன்றும் பிஷுவின் வதனம் ஏனோ தீவிர சிந்தனையில் மூழ்கியிருந்தது அவனது ஆழ்மனதின் சலனங்கள் மெல்லிய இரேகைகளாக முகத்தில் சுந்தரமாகப் படிந்துவிட்டிருந்தன. என்ன ஏதென்று வாய்விட்டுக் கேட்பதற்கும் தயக்கமாக இருந்தது. இவனது இளமையுடன் ஒப்பிடும்போது இளையவர் உற்சாகமாகவே தெரிகிறார். முகத்தில் சிறிதளவு பயணக்களைப்பு படிந்துள்ளது. அவ்வளவுதான்.

சட்டென்று "கீ!" "கீ!" என்ற அடிக்குரலில் பேரிரைச்சலுடன் கடல் நாரைகள் கூட்டங் கூட்டமாக அவர்களின் தலைக்கு மேல் பறந்து சென்று மழபாடியாரின் எண்ண ஓட்டங்களைக் கலைத்தன.

47. தேவி தரிசனம்



கன்னியா படாரியார் சன்னிதானத்தில் உஷத் கால பூஜை துவங்கப் போகும் நேரம் நெருங்கி விட்டதால் முக மண்டபத்தின் கதவுகள் திறக்கப்படலே திருக்கோயிலின் வாயிலில் திரளாகக் கூடியிருந்த கூட்டம் "தாயே பகவதி!" என்று பக்திப் பரவசத்துடன் உள்ளே நுழையத் தலைபட்டது.

"படாரியார் கோயிலின் வாயிற்கதவம் திறந்து விட்டது. இப்போதாவது உள்ளே செல்லலாமா?" என்று பிஷுவை நோக்கி வினவினார் கம்பன் மணியனார். அவருடைய குரலில் தொனித்த எரிச்சலிலிருந்து, இருந்த கொஞ்ச நஞ்சப் பொறுமையையும் அறவே இழந்து நிற்கிறார் இளையவர் என்பது புரிந்தது.

மழபாடியாருக்கும் ஏறக்குறைய அதே நிலைமைதான். முதல் நாள்வரை ஓய்வு ஒழிச்சலின்றிப் பயணத்தில் ஈடுபட்டிருந்ததால் விடியற்காலை மிக ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார் அவர். பிஷு தன்னைக் கூக்குரலிட்டு எழுப்பும் சப்தம் கனவுகளுக்கு நடுவே ஏதோ அந்தகாரத்தில் ஒலித்தாலும் அதனைக் கண்டுகொள்ளாமல் தொடர்ந்து போர்வைக்குள் ஒளிந்து கொள்ள முயன்றார். ஆனால் பாழாய்ப் போகிற பிஷு விட்டால்தானே? எப்படியோ ஒரு வழியாக இருவரையும் எழுப்பி விரைவிலேயே ஸ்நான பானங்களையும் முடித்துக் கொள்ளும்படி செய்துவிட்டார். சரி, ஏதோ முக்கிய வேலை உள்ளது போலும் என்று கிளம்பி வந்தால் படாரியார் கோயிலுக்கருகில் அமர்ந்து கொண்டு வானத்தை வெறித்துக்கொண்டிருக்கிறார் மனிதர். கோபம் வருமா வராதா?

"நண்பர்களே! வாழ்வில் நிறைய சாதிக்க வேண்டுமென்று நினைக்கும் நீங்கள் முதலில் பொறுமை என்றால் என்ன என்பதைக் கற்க வேண்டும். நான் பயிற்சி

பெற்ற திலோப்ப விஹாரத்தில்[166] மனதிற்குப் பொறுமை வரவேண்டும் என்பதற்காக சில நாட்கள் மணிக்கணக்கில் ஒரே இடத்தில் அமரவைத்து விடுவார்கள். சும்மா வெறுமனே அமர்ந்திருக்க வேண்டியதுதான். ஏன் எதற்கென்று கேள்விகளெல்லாம் கேட்கக்கூடாது. அப்படிக் கேட்டாலும் பதில் கிடைக்காது."

"நாங்கள் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களல்ல. இந்த இடம் பௌத்த விஹாரமல்ல. நாங்கள் உங்களிடம் பயிற்சி பெறும் சன்னியாசிகளுமல்ல!" என்றார் இளையவர் காரம் குறையாமல். ஒரு கணம் நின்று நிதானித்த பின்தான் ஏன் இவ்வாறு மரியாதையில்லாமல் எடுத்தெறிந்து பேசினோம்? என்று தோன்றியது. உடனே வருத்தம் தெரிவிக்கும் முறையில் "மன்னிக்கவேண்டும் தேரரே! தங்களை மரியாதை குறைவாகப் பேசிவிட்டேனென்று தோன்றுகிறது" என்றார்.

"துறவிகளுக்குரிய பண்புகளில் ஒன்று தனக்கு நேர்ந்த அவமானத்தைப் பொறுத்தல். தன் மீது எச்சிலைக் காறி உமிழ்ந்தவனிடம் கூடத் ததாகதர்[167] கோபப்படவில்லை எனும்போது நான் எம்மாத்திரம்? அதனால் உங்களின் மீது கோபமில்லை. ஆனால் பௌத்தத்தைத் தவறாகப் புரிந்து வைத்திருக்கிறீர்களே என்கிற வருத்தம்தான் உண்டு. நண்பர்களே! பௌத்தம் ஒரு மதமல்ல. அது ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நெறி. அதனை எவரும் கைக்கொள்ளலாம். பதர திட்ட விஹாரையில் உங்களின் பேரரசர் பல மணி நேரங்களைச் செலவிடுவதை அறிவீர்களல்லவா? அவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவரல்லவே? ஆக, உலகத்தைத் துறந்து சன்னியாசியானவர்களுக்கு மட்டும்தான் பௌத்தம் என்று ஒரு போதும் எண்ணாதீர்கள். நாம் இங்கே காத்திருப்பதற்கான காரணம் வேறு. நமக்கு தரிசனம் தர வேண்டிய தேவியார் இன்னமும் வந்து சேரவில்லை!"

"படாரியார் கோயிலின் திருவாயிற்கதவம்தான் திறந்து விட்டது போலிருக்கிறதே? வெளியே கூடியிருந்த மக்கள் கூட்டம் நுழைவதைத்தான் கண்டோமே. இனியும் இங்கே காத்திருந்து கொண்டிருப்பதில் என்ன பயன்?"

---

[166] திலோபபா என்பது கீழத்திசை நாடுகளில் புகழ்பெற்ற பௌத்த குருவின் பெயர்.

[167] புத்த பெருமானின் பெயர்களுள் ஒன்று.

"நான் கூறியதை நீங்கள் சரிவரக் கவனிக்கவில்லை போலிருக்கிறது. நமக்கு தரிசனம் தரவேண்டிய தேவியார் இன்னமும்..."

பேசிக்கொண்டிருந்த பிஷு சட்டெனப் பாறையிலிருந்து எழுந்து நின்று படாரியார் கோயிலின் வாயிலை நோக்கலானார். அவரது கவனத்தை அத்தனை தூரம் கவர்ந்த காட்சி என்ன என்பதை அறியவேண்டி நண்பர்களும் அந்தத் திசையை நோக்கினார்கள்.

திருக்கோயில் வெளிமதிலின் வாயிலை சிறு சிவிகை யொன்று நெருங்கிக் கொண்டிருந்தது. அதனை இரண்டு வலிமையான தூக்கிகள் சுமந்து வந்து கொண்டிருந்தார்கள். சிவிகைக்கு அருகில் பணிமகள் போல் தென்பட்ட ஒரு இளம்பெண் தாழங்குடையை மட்டும் ஏந்திக்கொண்டு வந்தாள்[168]. சிவிகைக்கு முன்னால் கட்டியக்காரர்களோ அரசாங்க முத்திரைகள் பொறித்த கொடிகளோ வேறு காவலாட்களோ படைவீரர்களோ தென்படவில்லை. சிவிகையின் முன்புறம் சிறிய அளவில் ஒரு வட்டத்திற்குள் மாடமாளிகை போன்றதொரு கட்டிடமும் அதற்கு நடுவில் ஒரு ஆமையும் இலச்சினைகளாக வரையப்பட்டிருந்தன. அதிகம் அறியப்படாத அந்த அடையாளத்தை மட்டும் வைத்துக் கொண்டு சிவிகையில் வந்து கொண்டிருக்கும் நபரை இன்னாரென்று யூகிப்பதில் நண்பர்களுக்குச் சிரமம் ஏற்பட்டது.

சிவிகை நெருங்குவதற்குள் பாறையிலிருந்து எழுந்து விட்ட பிஷு சில தப்படிகள் நடந்து திருக்கோயில் வாயிலை நெருங்கி ஒரு ஓரமாக நின்றுகொண்டார். அவரது கண்கள் ஆர்வத்துடன் அந்தச் சிவிகையையே வைத்த கண் வாங்காமல் நோக்கியபடி நின்றன. சொல்லப் போனால் அந்தக் கணங்களில் அவர் தன்னுடன் நின்று கொண்டிருந்த மணியனாரையும் மழபாடியாரையும் ஏன், இந்த உலகத்தையே கூட மறந்து விட்டாரென்றுதான் கூற வேண்டும்! அவரது இந்த அதீத ஆர்வத்திற்கான காரணத்தை அறிய முடியாத நண்பர்களிருவரும் வேறு

---

[168] சிவிகை – அல்லது பல்லக்கிற்கு அருகில் குடையைச் சுமந்து செல்லும் பணியாட்கள் இருப்பதைப் பல 18–19ம் நூற்றாண்டின் வண்ண ஓவியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வழியின்றி அவரைத் தொடர்ந்து நடந்து சென்று கோயிலின் வாயிலில் அவரருகே நின்று கொண்டார்கள்.

சிவிகை ஒரு வழியாய் இறக்கப்பட அதிலிருந்து ஏறக்குறைய ஐம்பது ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க மூதாட்டியார் ஒருவர் பணிமகள் துணையுடன் மெல்ல இறங்கினார். மலைநாட்டுப் பெண்டிருக்கே உரிய செழுமையான உடல்வாகுடனும் அளவான அணியலங் காரங்களுடனும் திகழ்ந்த அந்த மூதாட்டி, பார்த்த மாத்திரத்தில் மழபாடியாரின் மனதில் ஒரு மரியாதையை உண்டாக்கி விட்டார்

தலைக்கு மேல் ஒரு புறமாக நீண்டு கொத்தாக முடியப் பட்ட பெருங்கொண்டை. அதில் சொருகப்பட்டிருந்த எளிய முத்துப் பதக்கங்கள். கருமுடியில் அவ்வப்போது கொத்தாக நரை தெரிந்தாலும் அது அவருடைய தோற்றத்தின் கம்பீரத்தைக் கூட்டிக் காட்டவே செய்தது. நெற்றியில் துலங்கும் குங்குமம் மற்றும் சந்தனக் கீற்று. மிகக் களையான முகம். இளைய பிராயத்தில் நிச்சயம் பேரழகியாகத்தான் இருந்திருப்பார் என்பது உறுதி. கண்கள் மட்டும் நிலைகுத்தி ஒரேயிடத்தில் நிற்கின்றனவே? அது ஏன்? அடடா. இவருக்குப் பார்வை கிடையாதா என்ன? ஆம், அப்படித்தான் தோன்றுகிறது. பணிமகளின் துணையுடன் தான் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கிறார் என்றாலும் நடையில் தள்ளாட்டமில்லாத உறுதி தெரிகிறது. உடல் முழுவதும் திகழும் வெண் பட்டுத்துணி முண்டாக மார்பகம் வரை மறைத்திருக்க, கழுத்திலும் கரங்களிலும் மெல்லிய தங்க ஆபரணங்கள். இந்தப் பெண்ணரசியார் யாரோ?

தற்செயலாக பிஷுவின் பக்கம் திரும்பிய மழபாடியார் பெரியதொரு ஆச்சரியத்திற்கு உள்ளானார். ஏனெனில் பிஷுவின் கண்கள் பெரிதும் கலங்கிப் போய்க் காணப் பட்டன. கண்ணீர் எந்தக் கணத்திலும் வெளிவந்து விடுவேன் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது. முகத்தில் சொல்ல வொண்ணாத பல்வேறு உணர்ச்சிகள் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. உடல்கூட மெல்லிய நடுக்கத்திற்கு ஆளாகியிருந்தது. மிகுந்த சிரமத்தின் பேரில்தான் நின்று கொண்டிருந்தார் அவர். இந்த மூதாட்டியாருக்கும் இவருக்கும் ஒரு சம்மந்தமும் இருப்பது போல் தெரிய வில்லையே? பின் எதற்காக இத்தனை தூரம் உணர்ச்சி வசப்படுகிறார் பிஷு? என்று அறிய முடியாமல் குழம்பினார்

மழபாடியார். உணர்ச்சிக்கடலில் மூழ்கிக் கொண்டிருந்த பிஷுவின் சிந்தனைகளில் குறுக்கிடுவதற்கும் தயக்கமாக இருந்தது.

சிவிகையைச் சுமந்து வந்த தூக்கிகள் இருவரும் மூதாட்டியார் இறங்கியபின் சிவிகையை ஒரு ஓரமாக வைத்து விட்டுச் சிரமபரிகாரம் செய்துகொள்ளத் தலைப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் அவர்கள் முன்பு அமர்ந்திருந்த பாறைப்பகுதிகளை நோக்கி நடக்க முற்பட, மற்றவன் கோயில் வாயிலிலேயே குத்துக்காலிட்டு அமர்ந்து இடுப்பில் முடிந்து வைத்திருந்த வெற்றிலைச் சுருளை வெளியிலெடுத்து அவற்றில் சுண்ணம் தடவ ஆரம்பித்தான்

மூதாட்டியார் நிதானமாகக் பணிமகளின் கரங்களைப் பிடித்தபடி நடந்து வந்து கொண்டிருந்தார். சில நிமிடங்களில் திருக்கோயிலின் வாயிலை நெருங்கி விட்டவர், ஒரு கணம் நின்று நிதானித்தார்.

"சம்பங்கி! என்னவென்று தெரியவில்லையடி. ஏனோ நேற்று பின்னிரவுப் பொழுதிலிருந்து அவன் நினைப்பு மிக அதிகமாகவே இருக்கிறது..." - பணிமகளை நோக்கி அவர் புகன்ற வார்த்தைகள் நண்பர்களின் காதுகளிலும் வந்து விழுந்தன.

அவ்வளவுதான்! பிஷுவினால் அதற்குமேல் பொறுமை காக்க முடியவில்லை. அவரது உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த உணர்ச்சிகள் கரையை உடைத்துக் கொண்டன. கண்களில் நீர் பீறிட, அப்படியே ஓடிப்போய் அந்த மூதாட்டியாரைக் கட்டிக் கொண்டார் பிஷு! "அக்கா அக்கா.." என்று அவருடைய குரல் தழுதழுத்தது.

மூதாட்டியாரும் அவரை இறுக்கக் கட்டிப்பிடித்து உச்சி முகர்ந்து உணர்ச்சிக்கடலில் மூழ்கினார்.

"உதயா . உதயா... நிஜமாகவே நீ நீதான் வந்திருக்கிறாயா? என்னால் நம்பவே முடியவில்லையே! தாயே பகவதி! கடைசியில் நீ கண் திறந்து பார்த்து விட்டாயா? ஐயோ... எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லையே? உதயா! இன்ன தேதியில் வருகிறேனென்று ஒரு முறியெழுதி அனுப்பியிருக்கக்கூடாதா? என்ன இப்படித் திடுதிப்பென்று வந்து நிற்கிறாய்? எத்தனை வருடங்கள்... எத்தனை வருடங்கள் கழிந்து விட்டன?"

உணர்ச்சிக் கொந்தளிப்பில் பிஷுவைப் பிடித்துக் கொண்டு ஏறக்குறைய விழப்போய் விட்டார் மூதாட்டியார்! அவரை நிதானத்திற்குக் கொண்டு வரவே சில கணங்கள் பிடித்தன.

"கோயிலினுள் சென்று அமர்ந்து நிதானமாகப் பேசலாம், வா!" - என்று அவர் அழைக்கவே, பிஷு தம்மைத் தொடரும்படி நண்பர்களிடம் சைகை காட்டி விட்டுத் திருக்கோயில் வாயிலைக் கடந்தார்.

நண்பர்கள் இருவருக்கும் என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பது எள்ளளவும் விளங்கவில்லை. காம்போஜ தேசத்து பிஷுவிற்குத் தென்னகத்தில் - அதுவும் மழக்குடியில் - இப்படியொரு உறவு இருப்பதை எவரால் யூகிக்கவியலும்?

அனைவரும் பகவதியார் கோயிலின் முன் மண்டபங்களைத் தாண்டிச் சற்று உள்ளடங்கி அமைந்திருந்த நிருத்த மண்டபத்தை அடைந்தார்கள். மண்டபத்தின் பெரிய தூணொன்றில் மூதாட்டியார் சாய்ந்தபடி அமர்ந்துகொண்டார். அவருக்கு அருகிலேயே பிஷுவும் அமர்ந்து கொள்ள, நண்பர்களிருவரும் சிறிது தூரத்திலேயே நின்றுவிட்டார்கள்.

"உலக பந்தங்களிலிருந்தெல்லாம் விடுபட்டு விட்டாலும் உங்களின் அன்பாகிய பந்தத்திலிருந்து இந்த ஜென்மத்தில் எனக்கு விடுதலை கிடையாதக்கா. அப்படிப்பட்ட விடுதலையை நான் விரும்பவும் இல்லை!"

"எங்களையெல்லாம் மறந்தே போய்விட்டாயா உதயா? இடையில் எத்தனை வருடங்கள் கழிந்துவிட்டன! என்னைப் பார்க்க வேண்டுமென்று ஒரு முறை கூடவா உனக்குத் தோன்றவில்லை?" - மூதாட்டியாரின் குரலில் வருத்தமும் கோபமும் ஒரு சேர ஒலித்தன.

"எத்தனையோ முறை அந்த எண்ணம் வந்து போனது அக்கா. ஆனால் ஒரு வைராக்கியத்திற்காக நான் என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். நான் எடுத்துக் கொண்ட இரண்டு பிரதிக்ஞைகளும் காம்போஜத்திலேயே என்னைப் பல காலத்திற்குக் கட்டிப் போட்டு விட்டன. மீண்டும் இங்கே கால் பதித்தால் அது எடுத்துக் கொண்ட உறுதிமொழிகளை நிறைவேற்றும் பொருட்டுத் தான் இருக்கவேண்டும் எனும் திட்டம் மனதில் வேரூன்றி

விட்டது. அந்த எண்ணம்தான் வருடக்கணக்கில் என்னைச் சொந்த மண்ணிடமிருந்தே பிரித்து விட்டது."

"பழைய சம்பவங்களையெல்லாம் இன்னமுமா ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாய்?"

"என்ன அக்கா அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? அவற்றை நான் ஒருபோதும் மறந்ததில்லை..."

"அப்படியெனில்..? இத்தனை காலம் கழித்து நீ இப்போது வந்திருப்பதுகூட அந்தக் காரணம் பற்றித் தானோ?"

"இல்லையக்கா. அசைக்க முடியாத என்னுடைய மனதையும் உங்களுடைய ஓலை அசைத்து விட்டது. என்னுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளையெல்லாம் உதறியெறிந்துவிட்டுப் புத்த பகவானின் சரண கமலாலயங்களில் முழுவதுமாக என்னை ஒப்படைத்து விட்டுத்தான் காம்போஜத்தில் கலமேறினேன். சத்தியமாகச் சொன்னால் உங்களைச் சந்திப்பேனா இல்லையா என்றுகூட அப்போது எனக்கு உறுதியாகத் தெரியாது.

ஆனால் பகவானின் விருப்பம் வேறாக இருந்தது. நாகையில் நான் கால் பதித்த கணத்திலிருந்து நடந்த சம்பவங்களனைத்தும் அதனை நிரூபித்தன. சொன்னால் நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள். காலம் கனிந்துவிட்டது என்று தோன்றுகிறதக்கா. என்னுடைய பிரதிக்ஞைகளை நிறைவேற்றுவதற்கான வேளையும் நெருங்கி விட்டது" என்று பதிலளித்தார் பிக்ஷு.

அதுவரை உணர்ச்சி மயமாகியிருந்த முகத்தில் பெரியதொரு இறுக்கம் படர்ந்தது. தாடைகளில் எலும்புகள் எழுந்து அடங்கின. கை விரல்கள் படபடவென்ற சப்தத்துடன் மடங்கிக் கொண்டன. அவரது மெலிந்த தோள் கணத்தில் வஜ்ராயுதம்போல் மாறிவிட்டதை நண்பர்கள் வியப்புடன் கவனித்தார்கள்.

48. மருந்துவாழ் மலை



கழிக்குடிக் கடற்கரையோரத்தில் அமைந்திருந்த கன்னியா படாரியார் திருக் கோயிலின் மண்டபத்தில் அடுக்கடுக்காகத் தொடர்ந்த அதிர்ச்சி வைத்தியங்களால் அறவே குழம்பிப் போயிருந்த இளையவர் ஒரு வழியாகத் தம்மைச் சமாளித்துக் கொண்டார். "தேரரே! தயவு செய்து இந்த அம்மையார் யார்? காம்போஜத்தைச் சேர்ந்த தங்களுக்கும் இவருக்குமான உறவு என்ன? இங்கு என்னதான் நடந்து கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் இப்போதாவது விளக்குவீர்களா?"

மண்டபத்தில் தாங்கள் மட்டும்தான் இருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருந்த அம்மையாருக்குத் திடீரென்று முளைத்த புதுக்குரல் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அன்னியர்களுக்கு முன்னால் உணர்ச்சி வேகத்தில் பேசிக்கொண்டிருந்து விட்டோமே என்று அவரது முதிய முகத்தில் சிறிதளவு நாணமும் படர்ந்தது. "என்ன உதயா? உன்னுடன் மற்றவர்களும் வந்திருக்கிறார்கள் என்று ஒரு வார்த்தை சொல்லியிருக்கக்கூடாதா?" என்று நெளிந்தார்.

"மன்னிக்க வேண்டும். பல வருடங்கள் கழித்து உங்களைச் சந்தித்த மகிழ்ச்சியில் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நண்பர்களே! இவர்தான் மலைநாட்டின் பிரசித்தி பெற்ற பண்டைய இராஜ குடும்பங்களில் ஒன்றான மாளிகைப்புரத்து வீட்டின் தம்புராட்டியார் ரேணுகா தேவியார் நான் பூர்வாசிரமத்தில் இவருடைய உடன் பிறந்த தம்பி. உதயமார்த்தாண்டத் தம்புரான்!" என்று புகன்றார் பிக்ஷு.

'உதயமார்த்தாண்டத் தம்புரான்' எனும் பெயரைக் கேட்டதும் மழபாடியாருக்குத் தூக்கிவாரிப் போட்டது! என்ன? ஆனந்த தேரர் உண்மையில் மலைநாட்டின் இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவரா? அது மட்டுமல்ல. உதய மார்த்தாண்டத் தம்புரான் எனும் பெயர்- அது ஏன் நமது மனதைப் பிசைகிறது? நெஞ்சின் அடியாழங்களை அந்தச்

சாதாரண இராஜகுடும்பத்துப் பெயர் ஏன் இப்படிப் புரட்டிப் போடுகிறது?

முதன்முதலில் நாகைக் கடகத்தில் ஆனந்த தேரரைக் கண்ட போது அடுக்கடுக்காக எழுந்த பல எண்ணங்கள் மீண்டும் கிளம்பி மழபாடியாருடைய மனதை அலைக் கழித்தன. துறவு பூண்டிருந்தாலும் மறைக்கவே முடியாமல் அவரது முகத்தில் படிந்து கிடந்த இராஜ களை... தம்முடைய பாட்டனார் குருகாடியூர்ச் செல்லக்கிழாரைப் பற்றிச் சொன்னபோது அவரது முகத்தில் தோன்றிய கணநேர ஆச்சரியம்... எல்லாவற்றுக்கும் மேலாக தஞ்சைப் பெரிய செண்டு வாயில் திருச்சித்திரக்கூடத்தில் பார்த்த அந்த மறக்க முடியாத திருமுகம்! ஆண்டவா!! முன்பு நமது மனதில் தோன்றிய பல சந்தேகங்களுக்கும் மெல்ல மெல்ல விடை கிடைத்து வருகின்றன. மேலும் பொறுமை காக்க வேண்டும்.

"அக்கா! இதோ.. இவர்களைப் பார். சோழ நாட்டிலிருந்து நான் கொண்டு வந்திருக்கும் இரு செல்வங்களைப் பார்!" - பிஷுவின் அழைப்பைத் தொடர்ந்து மழபாடியாரும் மணியனாரும் மூதாட்டியாரை நெருங்கி அவர் தாள் பணிந்தார்கள்.

"செல்வங்களே! நன்றாக இருங்கள். தேவி பகவதி உங்களுக்கு தீர்க்கமான ஆயுளையும் ஐசுவர்யங்களையும் வாரி வழங்கட்டும்" - அந்த மூதாட்டியார் இருவரின் உச்சந் தலையிலும் தன் கரங்களைப் பதித்து ஆசீர்வதித்தார். இளைஞர்களின் மனதில் அந்தக் கணத்தில் ஏதேதோ இரசாயன மாற்றங்கள் நிகழ்ந்தன. அந்த அம்மையாரின் அன்பு அவர்களை நெகிழ வைத்து விட்டது.

"அக்கா! காலம் கனிந்துவிட்டது என்று வெறும் வாய் வார்த்தைக்காகச் சொல்லவில்லை இவர்கள் யார் தெரியுமா? ஒருவர் தொண்டை மண்டலத்தின் சேனாணி நாயகர் கம்பன் மணியனார். மற்றவர்... மற்றவர்... சொன்னால் நம்ப மாட்டாயக்கா. குருகாடி செல்லக் கிழாரின் பெயரர். பரமன் மழபாடியார்!"

'குருகாடி செல்லக்கிழார்' என்னும் பெயர் அந்த அம்மையாரின் முகத்தில் குழப்பமான மாறுதல்களைத் தோற்றுவித்தன

"என்ன? என்ன? நிஜமாகவா..?? எங்கே.. உன்னி[169], அருகில் வா!" - நடுங்கத்துவங்கியிருந்த அவருடைய கரங்கள் மெல்லக் காற்றைத் துழாவவே அவருக்கு அதிகச் சிரமம் வைக்க விரும்பாமல் மழபாடியாரே மீண்டும் அருகில் சென்றார்.

"உன்னி! நீ... நீ... நிஜமாகவே செல்லக்கிழாரின் பேரனா?" - என்றபடி அந்த அம்மையார் நீட்டிய கரங்களை இறுக்கமாகப் பற்றினார். அம்மையின் கை நடுக்கம் இப்போது மழபாடியாரின் கரங்களிலும் பரவியது

"ஆ...ஆமாம் அம்மா" என்று மெல்லிய குரலில் பதிலிறுத்தார் மழபாடியார். முன்பே அவரது மனதில் தோன்றியிருந்த குழப்பங்களும் சந்தேகங்களும் உச்சக் கட்டத்தை எட்டியிருந்தன.

"உதயா! நீ சொன்னது உண்மைதான். காலம் ஒரு வழியாகக் கனிந்துதான் விட்டது. வேளை நெருங்கித்தான் விட்டது!" என்று அந்த சம்பாஷணையை முடித்தார் மாளிகைப்புரத்துத் தம்புராட்டியார்.

நிலைகுத்திய அவரது கண்களிலிருந்து மீண்டும் கண்ணீர் கரகரவென்று வடியத் துவங்கியிருந்தது.

* * * * * * * *

கன்னியாகுமரியில் 'மருந்துவாழ் மலை'[170] என்னும் பெயரில் சிறு குன்றொன்று அமைந்திருக்கிறது. மருத்துவ குணம் நிறைந்த மூலிகைகளும் பச்சிலைகளும் அபரிமிதமாகக் கிடைப்பதால் அம்மலை இப்படியொரு காரணப்பெயரைப் பெற்றதென்று உள்ளூர்வாசிகள் தெரிவிக்கிறார்கள். இதற்கு 'மருத்துவ மலை' என்னும் மற்றொரு பெயரும் உண்டு. அதெப்படி இந்த மலையில் மட்டும் அதிகப்படியான மூலிகைகளென்று வினவினால் அதற்கும் ஒரு காரணம் சொல்கிறார்கள்.

மலையாள மொழியில குழநதை.

குமரியிலிருநது ஏழு கல தொலைவில குமரி – நாகாகோயில நெடுஞசாலையில சுவாமிததோபபு என்னும் இடத்திறகருகே அமைநதுளளது.



மருந்துவாழ் மலையும் சுற்றுப்புறங்களும்.

இராமபிரானின் சோதரனான இலக்குவன் இந்... ஜித்தனின் பாணத்தினால் அடிபட்டு வீழ்ந்து கி... அவனைக் காக்கும் பொருட்டு இமாலயம் வரை பயணித்த வாயு புத்திரனான அனுமன் இராமநாமத்தை உச்சரித்த... சஞ்சீவினி மலையை ஒட்டுமொத்தமாகப் பெயர்த்து எடுத்துக் கொண்டு தெற்கே இலங்கைக்கு வந்தபோ... அம்மாமலையின் சிறு துகள் கழிக்குடியாகிய கன்... குமரியிலும் விழுந்து விட்டதாம். அதனால்தா... அந்நாளிலிருந்து இந்நாள்வரை அம்மலையில் அதி... படியான மூலிகைகள் கிடைக்கின்றனவாம். இச் சிறுகுன்றி... அருகில் தமிழ்ச் சித்த மருத்துவத்தின் மூலகர்த்தா... கருதப்படும் அகத்திய மாமுனி தங்கியிருந்தார்[171] என்... சொல்வாரும் உண்டு.

எது எப்படியோ, நம் கதை நடக்கும் காலத்தில் இந்... குன்றானது இன்று போலவே அன்றும் மூலி... களஞ்சியமாகவே விளங்கியது. மலைநாட்டின் ஆயுர்வே... வைத்தியர்களும் சித்த வைத்தியர்களும் அடிக்கடி ...

[171] தற்போதுகூட இக்குன்றில் ஆசிரமம் ஒன்று அமைந்திருக்கிறது. ... மலைக்கருகே அகத்தீசுவரம் எனும் பெயர்கொண்ட ஊர்... அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மலைக்கு விஜயம் செய்து தங்களுக்கு வேண்டிய பச்சிலைகளைப் பறித்துச் சென்றார்கள். தீராத நோய்களினால் அவதிப்படுபவர்கள்கூட இம்மலைக்கருகில் வசித்து மலையின் மூலிகைக் காற்றை அனுதினம் சுவாசித்தால் விரைவில் உடல்நிலை சீராகிவிடும் என்கிற நம்பிக்கையும் பரவலாக இருந்தது.

இந்த மலையையும் மலையைச் சார்ந்த அரிய நிலப் பகுதிகளையும் பொதுமக்கள் விவசாய நோக்கத்திற்காகவோ ...ற்ற காரணங்களுக்காகவோ அழித்துவிடக்... ...து மலைப் பகுதிகளுக்கு நிரந்தரப் பாதுகாவல் தேவை எனும் நோக்கில் பாண்டிய மன்னர் ஒரு ஏற்பாட்டைச் செய்தார். அதாவது ஆய்வேள் அரசரான ஸ்ரீவல்லபரின்[172] பெயரால் கழிக்குடியில் செயல்பட்டுக் கொண்டிருந்த 'ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை' எனும் களரிச் சாலையை மருந்துவாழ் மலைக்கருகே அமைந்திருந்த பூவந்தித்தோப்பு[173] என்னும் இடத்திற்கு இடம் பெயரச் சொல்லிவிட்டார். சாலையில் படிக்கும் மாணவர்களும் ஆசான்களும் மலைப் பகுதிகளுக்குப் பாதுகாவலர்களாக விளங்க வேண்டும் என்று ஆணையிட்டார். இதற்காக அவர்களுக்குப் பிரத்யேக நிவந்தங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

இந்த ஏற்பாடு பெருஞ்சாலை ஆசான்களுக்கும் பிடித்தமானதாகவே இருந்தது. பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளிலிருந்து தாங்கள் சற்று ஒதுங்கியிருந்தால் அனாவசிய வம்பு தும்புகளில் சாலையின் மாணவர்கள் அகப்பட்டுக்கொள்ள மாட்டார்கள். மேலும் தங்களின் களரிச்சில்[174] மருத்துவத்திற்குத் தேவைப்படும் பச்சிலைகளுக்கும் கஷாயங்களுக்கும் மூலிகை மலையின் அருகாமை சௌகரியமாகவே இருக்கும் என்று அவர்களுக்குத் தோன்றியது.

விவசாயம் தீவிரமாக நடைபெறாத மாரிக் காலங்களில் குறிப்பாகக் கார்த்திகை, மார்கழி முதலான பருவங்களில் சாலையின் மருத்துவ சிகிச்சைகளைத் தேடிப் பொதுமக்கள்

[172] ஆய்வேளரசர் கோக்கருந்தடக்கருக்கு ஸ்ரீவல்லபன் எனும் பெயர் ...ருந்தது.

[173] பூவந்தித்தோப்பு அந்நாளில் சாத்தன்குடைவிளை எனும் சிற்றூரைச் சேர்ந்ததாக அமைந்திருந்தது.

[174] களரிசிகிச்சை முறையில் இது பிரபலமானது.

பலரும் வருவதுண்டு[175]. அவ்வாறு வரும் வெளியூர் மக்களைத் தங்கவைக்கப் பழைய சாலையில் வசதிகள் அதிகமில்லாமல் இருந்தன. புதிய இடத்தில் அந்தக் குறையையும் நீக்கிவிடலாம் என்றெல்லாம் அவர்கள் கணித்தார்கள்.

இவ்வாறு இடம் பெயர்ந்து பாண்டியர் ஆட்சியின் கீழ் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்த ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை சோழராதிக்கம் தென்னாட்டில் தலையெடுத்த பிறகு படிப்படியாகச் க்ஷீணமடைந்து நமது கதை நடந்து கொண்டிருக்கும் பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் மிகப் பலகீனமாகவே செயல்பட்டு வந்தது. நிவந்தங்கள் ஏறக்குறைய நின்று போய்விட்டமையால் சாலையின் அன்றாடப் பராமரிப்பே கேள்விக்குறியாகி விட்டிருந்தது.

இத்தகைய பலகீனமான நிலையில்தான் மருந்துவாழ் மலைக்கு ஆயுர்வேத சிகிச்சை பெறுவதற்காக வந்த மாளிகைப்புரத்து வீட்டின் தம்புராட்டியார் சாலையின் நிலையைக் கண்டு வருந்தி அதன் அன்றாடச் செயல் பாட்டிற்கு ஓரளவிற்கு வழிவகை செய்து கொடுத்தார். வழிவழியாக அப்பெருஞ்சாலையில் பணிபுரிந்து வந்த ஆசான்கள் பிழைப்புத் தேடி வெளியூர்களுக்குச் சென்று விட்டமையால் சாலையில் பணிபுரிய உரிய ஆசான்கள் கிடைக்கவில்லை. அதனால் அந்தப் பணியையும் வேறு வழியில்லாமல் தம்புராட்டியாரே ஏற்றுக்கொண்டார்.

அக்காலத்தில் பெண்கள் குறிப்பாக உயர்குடியைச் சேர்ந்த தம்புராட்டிகள் இராஜாங்க விவகாரங்களில் தலையிடுவதும் வாளெடுத்துச் சுழற்றுவதும் வீட்டிற்கோ நாட்டிற்கோ ஆகாது என்னும் தவறான எண்ணம் பரவலாக வேரூன்றியிருந்தது. துரதிருஷ்டவசமாக அவ்வாறு வீரத்துடன் போரில் ஈடுபட்ட ஓரிரு மலைநாட்டு இராஜ குலப் பெண்களின் வாழ்க்கையும் பல காரணங்களினால் சிக்கல்களுக்கும் உள்ளாகிவிடவே "பார்த்தாயா? அப்போதே நான் சொல்லவில்லை? பெண்ணாக இலட்சணமாக அடுப்பங்கரைக்குள் அடைந்து கிடக்காமல் வீரம்

[175] ஆயிரமாண்டுகள் கழிந்துவிட்ட இன்றைய நிலையிலும் இம்முறை கேரளத்தின் களரிகளில் பின்பற்றப்பட்டு வருகிறது. கர்க்கடக மாதத்தில் உழிச்சில் மருத்துவம் பிரசித்தமானது.

பேசினாள். அதனால்தான் தெய்வத்திற்கே பொறுக்க வில்லை!" என்று கொக்கரித்தார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இவ்வாறு கேலி பேசியவர்களில் ஆண்களை விடப் பெண்களே அதிக அளவிலான எண்ணிக்கையில் இருந்தார்கள். தம்மைப் போன்ற ஒருத்தி ஆண்பிள்ளைகளுக்குச் சரிசமமாக வாள் சுழற்றுவதாவது? என்னும் அசூயை அவர்களை ஆட்டிப் படைத்தது போலும். இதனால் ஓரளவிற்கு மனதில் வீரம் கொண்ட பெண்களும் நாளடைவில் தங்கள் வாளைச் சுருட்டி வைத்துக் கொண்டார்கள்.

இத்தகைய சூழலில்தான் தம்புராட்டியார் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையைத் தத்தெடுத்திருந்தார்.

தங்கள் பகுதியில் ஒரு காலத்தில் புகழ் பெற்றிருந்த பண்டைய கல்விக்கூடம் மீண்டும் உயிர் பெறுவதை குறிக்குடிப் பொதுமக்கள் வரவேற்றாலும் நாளடைவில் தம்புராட்டியாரே அந்தச் சாலையின் பிரதான ஆசானாக ஆகிவிட்டதை அவர்களால் ஜீரணிக்கமுடியவில்லை. பரம்பரை பரம்பரையாகப் பண்டைய நாஞ்சில் நாட்டு ஆசான்களும் குருக்களும் அமர்ந்த பதவியில் ஒரு பெண்ணா? எனும் கேள்வி அவர்களின் மனதில் பலமாய் எழுந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தம்புராட்டியாரின் பூர்வீகத்தைப் பற்றியும் அவர் சாலாவித்தை கற்ற விதத்தைப் பற்றியும் பலவித வதந்திகள் அவ்வப்போது எழுந்த வண்ணம் இருந்தன. சமயத்தில் அவருடைய திருமணமும் மணவாழ்க்கையும் கூடக் கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாயிற்று. பல காலங்களுக்கு முன் காந்தளூர்ச் சாலையின் ஆசானையே தம்புராட்டியார் வளைத்துப் போட்டு வித்தை பெற்றுக் கொண்டதாகவும் விஷயம் தெரிந்தபின் சாலையிலிருந்தே விரட்டியடிக்கப்பட்டதாகவும் பொது மக்கள் பேசிக் கொண்டார்கள். தமது கட்டுப்பாட்டிற்குள் வரும் நாட்டுப் பகுதியில் இப்படியொரு நல்ல விஷயம் நடப்பதை ஊக்குவிக்க வேண்டிய புறத்தாய நாடுவாழியே அபவாதம்[176] பேசித் திரிந்தாரெனில் மற்றவர்களின் நிலைமையைக் கேட்பானேன்?

[176] அவதூறு.

இத்தகைய ஆரம்பகால நிகழ்வுகளினால் மனம் புண்பட்டாலும் எடுத்த கருமத்தைக் கைவிட்டு விடலாகாது என்பதில் தம்புராட்டியார் குறியாக இருந்தார். மேலும் மக்கள் பேசும் வம்பு தும்புகளுக்குக் குறிப்பிட்ட காலம் வரைதான் உயிர் உண்டு என்பதும் அவருக்குத் தெரியும். வேறு ஏதாவது புதிய வம்பு கிடைத்தால் தம்மைப் பற்றிய பேச்சுக்கள் குறைந்துவிடும் என்று நம்பினார்.

கடைசியில் அதுதான் நடந்தது! தஞ்சாவூரின் தாஸியொருத்தி ஏதோ குறிப்பிட்ட காரணங்களினால் கழிக்குடிக்குக் குடியேறவே மக்களின் முழுக்கவனமும் அவள் மீது திரும்பிவிட்டது. அவள் வீட்டிற்கு எந்தெந்த பெரிய மனிதர்கள் வருகிறார்கள் போகிறார்கள் என்பதிலேயே கழிக்குடி வம்பு மடங்களின் கவனம் திரும்பி விட்டதால் தம்புராட்டியாரைக் கவனிப்பாரில்லை.

இத்தகைய நிகழ்வுகளினால் நேர்ந்த ஒரே துர்பாக்கியம் என்னவெனில் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வீரம் மிகுந்த பிள்ளைகள் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையில் சேருவதற்குத் தயக்கம் காட்டினார்கள். அவர்களின் பெற்றோரும் மற்றோரும் அதனை விரும்பவில்லை.

"சேர்ந்தால் காந்தளூர்ப் பெருஞ்சாலையில் சேர வேண்டும். இல்லையேல் இருக்கவே இருக்கிறது பார்த்திவசேகரபுரத்தின் விஷ்ணு பட்டாரகர் சாலை. அதில் சேர்ந்து படித்துவிட்டுப் போயேன்? எதற்காக ஒன்றுக்கும் உதவாத இந்தப் உள்ளூர்ச் சாலையில் சேர்ந்து வாழ்க்கையை வீணடிக்க நினைக்கிறாய்? காந்தளூரில் படித்தவர்கள் வெவ்வேறு இராஜ்ஜியங்களில் பிரம்மாதிராஜர்களாகவும் சேனாபதிகளாகவும் தளபதிகளாகவும் பதவியில் அமர்கிறார்கள். இந்த ஓட்டைச் சாலையில் படித்தாயானால் நமது புறத்தாய நாடுவாழிகூடச் சேனையில் சேர்த்துக்கொள்ள மாட்டார். ஞாபகமிருக்கட்டும்!" என்று நயந்தும் பயந்தும் பேசித் தைரியமாகப் புறப்பட்ட ஓரிருவரையும் தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

காலப்போக்கில் தம்புராட்டியாரின் அகத்தூய்மையும் அன்பும் கழிக்குடியின் மக்களுக்கு மெல்ல மெல்லப் புரியலாயின. தூய்மையான வெண்பட்டாடை தரித்து அனுதினமும் காலை வேளையில் கன்னியா பகவதியாளை அவர் வந்து வணங்கும் பாங்கு அவர்களின் உள்ளத்தைத் தொட்டது. முன்பு அவரை வாய்கொள்ளாது இகழ்ந்த

வர்கள்கூட அவரைப்போல உண்டா? என்று புகழ்பாடத் துவங்கினார்கள். ஸ்ரீ வல்லபப் பெருஞ்சாலை நல்லதொரு நிலைமைக்கு வந்துவிடும் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்த நேரத்தில்தான் வேறொரு பெருஞ்சிக்கல் வந்து முளைத்தது.

உறுதி கொண்ட நெஞ்சினரான மாளிகைப்புரத்துத் தம்புராட்டியின் உள்ளத்தையே அது அசைத்துப் பார்த்து விட்டதெனில் மிகையில்லை.

49. பொறுமைக்கும் எல்லையுண்டு



அந்தச் சிவிகை மெல்ல மெல்லக் கழிக்குடியின் எல்லையோர கிராமங்களையும் வயல்வெளிகளையும் தோப்புகளையும் குளம் குட்டைகளையும் கடந்து மருந்துவாழ் மலையின் அடிவாரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பல்லக்கிற்கு மிக நெருக்கமாக பிஷு நடந்து வந்து கொண்டிருந்தார். அடிக்கடித் தமது சிவிகையின் திரையைத் திறந்து அக்காள் ஏதோ மெல்லிய குரலில் கேள்வி கேட்பதையும் தனையன் அதற்கு மறுமொழி புகல்வதையும் காணமுடிந்தது. இருப்பிடம் வரும்வரை காத்திருக்கும் பொறுமை தம்புராட்டியாருக்கு இல்லை போலும். மிக நீண்ட காலத்திற்குப் பிறகு நடக்கும் சந்திப்பல்லவா அது? பேசுவதற்கும் பகிர்ந்து கொள்வதற்கும் ஆயிரமாயிரம் விஷயங்கள் இருக்காதா என்ன?

நாஞ்சில் நாட்டின் அந்தப் பகுதிகளனைத்துமே இயற்கையன்னையின் பரிபூரணமான ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தன. அடர்ந்த கரும்பச்சை நிறத்து மரங்களிலும் இளம்பச்சை வயல்களிலும் வெளிர்ப்பச்சை மாந்தோப்புகளிலுமாக அன்னை தன் அத்தனை மேனியழகுகளையும் விதவிதமாய் வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள். அவ்வப்போது வீசிய இளந்தென்றலில் வாவியின் குளிர்ச்சி அமைதியாகப் பரிமளித்தது. ஆங்காங்கே தோன்றிய தென்னந்தோப்புக்களில் பறிப்பாறின்றிக் காய்த்துக் கிடந்த காய்களைத் தவிர மஞ்சள் நிறத் தென்னம்பூக்களும் கொத்துக் கொத்தாய்த் தொங்கிக்கொண்டிருந்தன. பாளைகளுக்கும் கமுகுகளுக்கும் மத்தியில் அடர்ந்த

தென்னை நார்களைக் கொண்டு பின்னபட்ட அழகான கூடுகளில் சிட்டுக்குருவிகள் தத்தம் குஞ்சுகளை பத்திரமாக இருக்கச் சொல்லிவிட்டு இரைதேடிப் பறந்தன.

தங்களின் வழக்கமான பரபரப்புக்களிலிருந்து விலகி நின்று நிதானமாக அந்தக் காலை நேரத்தின் இளமையை அனுபவித்தபடி அப்பெருவழியில் நடப்பதென்பது நண்பர்களுக்குச் சுகமான அனுபவமாகவே இருந்தது. கழிக்குடியின் கன்னியா படாரியார் கோயிலுக்கருகில் துவங்கும் அந்தப் பெருவழி பல காத தூரங்களைக் கடந்து அனந்தபுரத்திற்கருகில் சென்றுதான் முடியும். நல்லவேளை! அத்தனை தூரம் பயணப்பட வேண்டியதில்லை. இதோ.. ஏறக்குறைய இரண்டு காத தூரத்தில் மருந்துவாழ் மலையின் உச்சி இங்கிருந்தே தெரிய ஆரம்பித்துவிட்டது.

அக்காள் தம்பியின் பிரத்யேக உரையாடலில் குறுக்கிட விரும்பாத நண்பர்களிருவரும் திருக்கோயிலிலிருந்து கிளம்பிய சிறிது நேரத்திலேயே பிஷுவை விட்டு விலகிச் சிவிகையின் பின்புறம் நடக்கலானார்கள். இருவர் மனதிலுமே எண்ணற்ற கேள்விகள் முளைத்தபடி இருந்தன.

"மாளிகைப்புரத்து வீடு" எனும் குடும்பப் பெயர் இளையவருக்குக் கேள்விப்பட்ட பெயராகவும் தெரிந்தது, கேள்விப்படாத பெயராகவும் தெரிந்தது. பிஷுவின் இராஜகுடும்பத்துப் பூர்வீகம் அவர் எதிர்பாராத திருப்பம். மலைநாட்டின் பெருங்குடும்பத்தில் தம்புரானாகப் பிறந்து விட்டு எப்படி வெளிதேசத்தில் அதுவும் துறவியாக வாழ நேர்ந்ததோ தெரியவில்லை. "ஆனந்த தேரரின் திருமுகத்தில் காம்போஜ தேசத்தின் களை அப்படியே எழுதி ஒட்டியிருக்கிறது!" என்று தாம் நாகையில் குறிப்பிட்ட போது பேரரசர் குலுங்கிக் குலுங்கிச் சிரித்ததன் அர்த்தம் இப்போதல்லவா விளங்குகிறது?

அது சரி, அங்கு சுற்றி இங்கு சுற்றிக் கடைசியில் பிஷு தம் இருவரையும் சம்மந்தமேயில்லாமல் இந்தக் குமரியார் பெருந்துறைக்கு அழைத்துவரக் காரணமென்ன? இத்தனை காலம் கழித்துத் தமது அக்காளைச் சந்திக்க நினைப்பவர் தனியாகத்தானே வந்திருக்க வேண்டும்? பூஜை வேளையில் ஒரு கரடிக்கு இரு கரடிகளாகவல்லவா இழுத்துக் கொண்டு வந்திருக்கிறார்?

சரி, இதனைக்கூட ஒப்புக்கொண்டுவிடலாம். சோழப் பேரரசரின் இரண்டு அதி முக்கியமான அவசரமான

இராஜாங்க ஓலைகளைச் சுமந்து செல்லும் தூதர் இப்படிச் சொந்தக் காரியங்களின் பாற்பட்டுத் தன்னுடைய பணியைத் திசை திருப்புவது சரியல்லவே? நிஜ ஓலைகளை உருப்படியாக எங்களிடமே கொடுத்து வெளிப்படையாகப் பணி இன்னது என்று பேரரசர் தெரிவித்திருப்பாரேயானால் இத்தனை நேரம் பணியை முடித்துக் கொண்டு நாம் தஞ்சைக்கே திரும்பியிருக்கலாம். அதனை விட்டுவிட்டு பிஷுவை அனுப்பி அங்கும் இங்கும் நம்மைத் தேவையில்லாமல் அலையவைத்து—

சட்டென்று இளையவரின் அத்தனை கோபமும் பல்லவராயர் மீதே திரும்பியது. எல்லாம் அந்தக் கிழவரால் வந்த வினை! வீரர்கள், சேனை, கூடாரம், தண்டு, வாள், வேல், பயிற்சி என்று ஒழுங்காக உருப்படியாகத் தொண்டை மண்டலத்தில் சென்று கொண்டிருந்தது வாழ்க்கை. அதனை முற்றிலுமாகக் கெடுத்துத் தெருவில் போகிற ஓணானை மடியில் கட்டிவிட்ட கதையாக இந்த விசித்திர பிஷுவோடு எங்களை அனுப்பி, நாகை - தொண்டி - கொற்கை என்று பட்டினம் பட்டினமாக அலையவைத்து...

சீச்சீ! போதுமய்யா போதும் உங்கள் அரசாங்கமும் அரசியலும். இவற்றை நீங்களே கட்டிக்கொண்டு அழுங்கள். எனக்கு என் தொண்டை மண்டலமும் படைவீரர்களும் போதும். தோள்களில் வலிமை இருக்கிறது. நெஞ்சில் உரமிருக்கிறது. அதனை வைத்து என்னால் முடிந்தவரையில் நான் முன்னுக்கு வந்து கொள்கிறேன். உங்களுடைய அரசியலும் திறமையும் சாமர்த்தியமும் கடைசியில் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் விவகாரம்தான் போலிருக்கிறது. அந்தக் கசப்பான உண்மையைத் தெரிந்து கொள்வதற்காக அந்தப் பாழாய்ப்போன பணியை ஏற்றுக் கொண்டோம் என்று நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

நம்மோடு கூட நடந்து வரும் இந்த மகானுபாவர் இருக்கிறாரே... அவர் கழிக்குடியில் கால் வைத்த கணம் முதல் ஏதோ ஆகாசத்தில் மிதந்து கொண்டிருக்கிறார். படாரியார் கோயிலிலிருந்து நடக்கத் துவங்கி மூன்று நாழிகைகளுக்கும் மேலாகின்றன. இன்னமும் இவரிடமிருந்து ஒரு வார்த்தை கூட எழவில்லை. உடல் மட்டும்தான் இங்கிருக்கிறது. உள்ளம் எங்கிருக்கிறதோ? தெரியவில்லை. நம்மோடு பேசுவதை விடத் தன்னுடைய கற்பனையுலகில் தோன்றும் கதை மாந்தர்களுடன் பேச்சுக் கொடுப்பது மிக சுவாரஸ்யமாக உள்ளது போலும். அது சரி, நம்மைப்

போல் புலம்பிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக அப்படிக் கனவுலகத்தில் சஞ்சாரம் புரிவதுகூட நல்லதுதான்.

கோபத்துடன் இளையவர் தலை நிமிர்ந்து அவரை நோக்க, ஏறக்குறைய அதே கணத்தில் மழபாடியாரும் தம் கற்பனாவுலகிலிருந்து கழிக்குடிக்கு மீண்டவராக மெல்லச் சிரித்தார்.

"என்ன மழபாடியாரே! தென்னகத்தின் பெருந்துறையில் கால் வைத்த கணம் முதல் தாங்கள் ஏதோ வேறு உலகத்தில் மிதந்து கொண்டிருப்பதுபோல் காண்கிறது? என்ன விஷயம்?"

"அது... அதெல்லாம் ஒன்றுமில்லை! பயணக்களைப்பு சற்று அதிகமாக இருக்கிறது. அவ்வளவுதான்."

"கடைசியில் இந்தப் பிஷு அங்கு சுற்றி இங்கு சுற்றித் தமது சொந்த ஊருக்கே நம்மை அழைத்து வந்துவிட்டான் பார்த்தீர்களா? அரசாங்கமாவது ஓலையாவது தூதாவது மண்ணாங்கட்டியாவது! எல்லாம் வீண் சாகசம்..."

"நான் அப்படி நினைக்கவில்லை. ஏதோ ஒரு முக்கியக் காரியம் இங்கு நமக்கு உள்ளதென்று தோன்றுகிறது. பேரரசர் நம் இருவருக்காகவும் பெரும்பணியொன்றைப் பார்த்து வைத்திருப்பதாக பிஷு கொற்கையில் கூறியது தங்களுக்கு இன்னமும் நினைவிலிருக்குமென்று நம்புகிறேன்."

"ஹ! வெறும்பணிக்கே இங்கு வேலையைக் காணோம்! இதில் பெரும்பணி வேறா? மழபாடியாரே! பிஷுவின் பிதற்றல்களை நீங்கள் இன்னமும் நம்புகிறீர்களா?"

"நம்பித்தான் ஆகவேண்டும். பிஷுவை நம்புகிறோமோ இல்லையோ பேரரசர் அருள்மொழிவர்மரை நாம் உறுதியாகக் கண்டிப்பாக நம்பித்தானாக வேண்டும். ஏதோ முக்கியமான காரணங்களின் பாற்பட்டுத்தான் நாம் பிஷுவுடன் அனுப்பி வைக்கப்பட்டோம். பிஷுவின் கைகளில் சோழ இராஜாங்கத்தின் மிக அந்தரங்கமான ஓலைகள் தற்சமயம் இருக்கின்றன என்பதையும் மறவாதீர்கள்."

"அந்த ஓலைகளை நீங்கள் பார்த்தீர்களா?"

"இ...இல்லை!"

"முக்கியமான இராஜாங்க ஓலைகளைச் சுமந்து செல்லும் தூதர்கள் நேராக அந்த ஓலைகளை உரியவரிடம் சேர்க்கும் வழியைப் பார்ப்பார்களா? அல்லது சொந்தக் காரணங்களை முன்னிட்டு வேறு ஊர்களுக்குப் பயணம் செய்வார்களா?"

"நீங்கள் கூறவருவது என்னவென்று புரிகிறது. ஆனால் கழிக்குடிக்கு... பிஷு வந்த காரியம்...."

"வேறென்ன? பல காலமாகப் பிரிந்திருந்த தமது அக்காளைச் சந்தித்து அளவளாவ வேண்டுமென்பதுதான்."

"ஒரு வேளை அந்த ஓலைகள் மலைநாட்டின் நாடுவாழிகளுக்கோ மற்றவர்களுக்கோ எழுதப்பட்டிருக்கலாம். அவற்றை உரியவரிடம் கொடுக்கக் கழிக்குடி வரை வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கலாம். இத்தனை தூரம் வந்து விட்டு அக்காளைப் பார்க்காமல் போவானேன் என்று..."

"இராஜாங்க ஓலைகளும் இந்தப் பிஷுவும் எக்கேடோ கெட்டுவிட்டுப் போகட்டும். எனக்குக் கவலையில்லை. இந்த விவகாரங்களில் நாம் இருவரும் எதற்காகத் தேவையில்லாமல் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறோம்? நாகையிலிருந்து புறப்பட்டது முதல் இந்தக் கணம் வரை உருப்படியாக ஏதாவது ஒரு காரியமாவது செய்திருக்கிறோமா என்பதைக் கூறுங்கள்."

"எதிரிகளைத் திசைதிருப்பப் பயன்பட்டிருக்கிறோம்."

"அதனைக் குறிப்பிடாதீர்கள்! கோபம் கோபமாக வருகிறது. ஒரு பக்கம் இந்த பிஷுவும் மறு பக்கம் அந்தத் திருட்டுப் பண்டிதனும் நம்மைப் பைத்தியக்காரர்களாக்கி விட்டார்கள்! கழிக்குடியில் பாசுபதர் மடமென்று ஏதாவது உள்ளதாவென்பதை விசாரித்தறிய வேண்டும். அந்தப் பண்டிதன் மட்டும் தப்பித் தவறி என் கையில் அகப்பட்டால் அவன் மென்னியைத் திருகி..."

"பண்டிதர் கிடக்கட்டும். இந்த அம்மையாரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"அவர்... வந்து... மிகவும் அன்பானவராகத்தான் தெரிகிறார். அநேகமாக அவரது இராஜமாளிகைக்குத்தான் சென்று கொண்டிருக்கிறோமென்று நினைக்கிறேன். அங்கே யாராவது நல்லபடியாக மலைநாட்டுச் சமையல் செய்து

போட்டால் வயிறார உண்டுவிட்டு அக்கடாவென்று படுத்து விடலாமென்று நினைக்கிறேன். இனிமேலும் இந்தப் பயணம் உருப்படுமென்கிற நம்பிக்கை எனக்கில்லை."

மழபாடியார் சில கணங்களுக்கு மௌனமானார். கொற்கைக்கு அருகிலிருந்த கிராமத்தில் அவர்களிருவரும் சில நாட்களுக்குமுன் தங்க நேர்ந்தபோது இரவில் விரிந்த அந்த சம்பாஷணை அவருக்கு ஞாபகம் வந்தது. பேச்சோடு பேச்சாகக் கம்பன் மணியனார் காந்தளூர் பற்றியும் ஆதித்தர் கொலை விவகாரங்கள் பற்றியும் நடந்த விவாதங்களைச் சொல்லிக்கொண்டேபோக இடையில் நமக்குப் புலப்பட்ட அந்த மைய இழை... அருள்மொழிவர்மரின் நிஜ நோக்கம் நமது சந்தேகம் சரியானதுதானா? இந்த உள்நோக்கம் புரியாததால்தான் இளையவர் இத்தனை தூரம் குழம்புகிறாரா? அது சரி, நாம் நினைப்பவையும் உண்மையில் சரியானவைதானா என்பதை எப்படி அறிவது? பிஷுவிடம் நேரடியாகக் கேட்டால் அதற்கான பதில் கிடைக்குமா?

"மனதைத் தளரவிடாதீர்கள். எனக்கென்னவோ நமது பணி இங்கிருந்துதான் - கழிக்குடியிலிருந்துதான் - துவங்கப் போகிறது என்பதுபோல் தோன்றுகிறது. பிஷு இந்த அம்மையாரிடம் நம்மை அறிமுகப்படுத்தியதில் சொந்த நோக்கம் மட்டும் இருப்பதைப்போல் தெரியவில்லை. வேறு ஏதோ காரணங்கள் உள்ளன. இந்த அம்மையார் சம்மந்தமேயில்லாமல் என் பாட்டனாரின் பெயரை வேறு அடிக்கடிக் குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனித்தீர்களல்லவா?"

"அது ஏனென்பது எனக்கும் புரியவில்லைதான்."

"சிவிகை தூக்கியிடம் விசாரித்ததில் ஏதோ சாலைக்குச் சென்று கொண்டிருக்கிறோம் என்றான். நிச்சயம் அவன் குறிப்பிட்டது காந்தளூர்ச் சாலை அல்ல. அது அனந்தபுரத்திற்கு அருகிலல்லவா அமைந்திருக்கிறது? கழிக்குடியிலும் அதனைப் போல் ஏதாவது சாலை அமைந்துள்ளதோ என்னவோ? மணியனாரே! ஒன்று மட்டும் உறுதி. பேரரசரும் ஆனந்த தேரருமாகச் சேர்ந்து நாகையில் ஏதோ ஒரு வலுவான திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். அதில் உங்களுக்கும் எனக்கும் ஒரு மிக முக்கியமான பாத்திரம் இருக்கிறது. ஆனால் தங்களின் திட்டம் முழுவதையும் நம்மோடு பகிர்ந்துகொள்ளும் நிலையில்

அவர்கள் இல்லை. நம்மைச் சுற்றி நிலவும் அரசியல் சூழல் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது தாங்கள் நினைத்தபடி காரியங்கள் நடக்குமா என்பது அவர்களுக்கே தெரியாமல் இருக்கலாம். அதனால் படிப்படியாகத் தங்களின் திட்டம் தெரிய வரட்டும். அதனை முன்பே கூறி எதிர்பார்ப்புக்களைச் சிதைத்துவிட வேண்டாம் என்று எண்ணமிட்டிருக்கக் கூடும்..."

"அல்லது பணியை முன்பே கூறிவிட்டால் ஒருவேளை நாம் ஒப்புக்கொள்ளாமல் முரண்டு பிடிப்போமென்று நினைத்தார்களோ என்னவோ!"

"பேரரசரின் ஆணையை நாம் ஒரு போதும் மீற முடியாதே? அதனால் அந்தக் காரணத்தை முழுமையாக பற்றுக்கொள்ள முடியவில்லை. பிஷுவிற்கே இன்னமும் நாம் கழிக்குடி வரை வந்த காரியம் நிறைவேறுமா என்பது கேள்விக்குறியாகத்தான் உள்ளது. அவரது முகத்தில் இன்னமும் சந்தேகத்தின் கோடுகள் உறுதியாகப் படிந்துள்ளதைக் கவனித்தேன். வேறு வழியில்லை. என்னதான் நடக்கப் போகிறதென்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதுதான்."

அவர்களின் அத்தனை கேள்விகளுக்கும் உரிய பதிலைச் சுமந்து நின்ற ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை அவர்களின் வருகையை எதிர்நோக்கிப் பலநாழிகை நேரமாகக் காத்திருந்தது. நாழிகைகள் என்றா கூறினோம்? இல்லையில்லை. பல யுக யுகாந்திரங்களாகக் காத்துக் கொண்டிருந்தது என்றல்லவா கூற வேண்டும்?

50. ஸ்ரீ வல்லபப் பெருஞ்சாலை



"உன்னிகளே! இதுதான் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை. பரம்பரை பரம்பரையாகத் தென்னகத்தின் அரும்பெரும் கலைகளை மரபு வழி பேணி அடுத்த தலைமுறைக்கு பத்திரமாகக் கொண்டு சேர்த்த பழம் பெரும் ஆசான்கள் பலரின் பாதம் பட்ட மண்! மலைமண்டலத்தின் வடக்கன் சாலைகளுக்கு எதிராகத் தெற்கன் களரி முறையை வகுத்த மிக மூத்த ஆசான்கள் வாழ்ந்து மறைந்த இடம். அத்தகைய புனிதமான இடத்தில்

நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள்!" என்று முழங்கினார் தம்புராட்டியார்.

அவர் நின்றிருந்த இடத்திற்குப் பின்னால் இரண்டு பெரிய மரக்கட்டிடங்கள் விரிந்தன. அவற்றின் திண்ணைகளில் ஓரிரு மாணவர்கள் ஏட்டுச் சுவடிகளைப் புரட்டிக் கொண்டிருந்தார்கள். கட்டிடங்களுக்குத் தென்புறத்தே வரிசையாகத் தெரிந்த பல குடில்களும் மிகவும் பாழடைந்து போய்க் காணப்பட்டன. சாலை நன்றாக இயங்கிய சமயத்தில் சட்டர்கள் தங்கிப் படித்த பழைய விடுதிக் கட்டிடங்கள் போலும் அவை.

கட்டிடங்களுக்கு வடக்கே ஒரு பெரிய அளவிலான மைதானம் விரிந்தது. அந்த மைதானத்தைச் சுற்றி மாமரங்களும் வேப்ப மரங்களும் செழிப்பாக வளர்ந்திருந்தன. மைதானத்தின் முடிவில் ஒரு குளம் தெரிந்தது. குளத்திற்குப் பின் பூவந்தித்தோப்பின் கரும்பச்சை மரங்களும் செடிகொடிகளும் அவற்றுக்குப்பின் மருந்துவாழ் மலையும் புலனாயின.

கட்டிடங்களின் தென்கிழக்குப் பகுதியில் பழைய குடில்களையொட்டி அமைக்கப்பட்டிருந்த குடிசை நண்பர்களின் கவனத்தைக் கவர்ந்தது. வளாகத்தின் அக்னி மூலையில் அமைந்துள்ள இந்த இடமே சாலையின் புனிதமான இடமாகக் கருதப்படும் குழிக்களரி போலும். முன்பு காந்தளூரிலும் இதோ போன்றதொரு களரியை நாம் பார்த்திருக்கிறோமல்லவா?

அடடா.. காந்தளூர் என்றவுடன் அந்தப் பிரம்மாண்டமான சாலையில் சில காலத்திற்கு முன் நாம் கண்ட பல காட்சிகளும்கூட நினைவிற்கு வருகின்றனவே! அந்த வளாகம்தான் எத்தனை பெரியதாக இருந்தது? அதில் எத்தனையெத்தனை இளைஞர்களும் சிறுவர்களும் சுறுசுறுப்பாகப் பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள்! தேக்கு மரச் சட்டங்களினால் அமைக்கப்பட்டிருந்த விடுதிகள் எத்தனை புதியதாகத் தெரிந்தன! இங்கு நாம் காணும் காட்சிகள் அதற்கு நேர் மாறாகத் தெரிகின்றனவே?

இச்சாலை வளாகமும் மிகப் பெரியதுதான். ஆனால் பல காலமாகப் புரப்பார் எவருமின்றிப் பழுதடைந்து விட்டது. விடுதிக் கட்டிடங்களில் பல மர உத்திரங்களை இழந்து தூண்களையும் இழந்து பெயருக்கு நின்று கொண்டிருந்தன. அவை வசிப்பிடங்களாக இருக்கும்

சுகதியை என்றோ இழந்து விட்டன என்பது நிச்சயம். அதற்குச் சாட்சியாக ஒரு சில மரக்குடில்களுக்கிடையே கருவேல முட்கள்கூட முளைத்துள்ளனவே? வாயிலில் நிற்கும் இரு கட்டிடங்களில்தான் போக்குவரத்தும் புழக்கமும் நிலவுகிறது போலும். மாணவர்களும் அங்கொருவர் இங்கொருவராகத் தெரிகின்றனரே தவிர கூட்டமாக எவரையும் காணவில்லை. மிஞ்சிப் போனால் பத்துப் பதினைந்து பேர் தேறுவார்கள் அவ்வளவுதான். இத்தனை மனச்சோர்வளிக்கும் சூழலிலும் தம்புராட்டியாரால் எப்படி இத்தனை உற்சாகமாக வாழ்க்கையை நடத்த முடிகிறதோ! ஆச்சரியம்தான்.

தமது கண்களின் முன்னர் விரிந்த காட்சிகளால் செயலற்றுப் போயிருந்த பிஷுவும் நண்பர்களும் மெல்லத் தங்களை ஆசுவாசப்படுத்திக்கொண்டார்கள். ஏற்கனவே உற்சாகத்தைப் இழந்திருந்த இளையவரின் மனநிலை இன்னமும் மோசமாகிவிட்டது. எளிதில் தளர்ச்சியடையாத மழபாடியாரின் உள்ளம்கூடச் சிறிதளவு சோர்ந்துதான் போய்விட்டது என்றுதான் கூறவேண்டும்.

"என்ன உங்கள் ஒருவரிடமிருந்தும் பேச்சே எழவில்லை? உதயா! உன் மனதில் என்ன எண்ணம் ஓடுகிறது என்பது எனக்குத் தெரியும் இவ்வளவு தூரம் பாழடைந்து கிடக்கும் இந்தச் சாலையை இவள் இந்த வயதில் கட்டிக்கொண்டு அழத்தான் வேண்டுமா என்று தானே நினைக்கிறாய்?"

"அது...வந்து... அதெல்லாம் ஒன்றுமில்லையக்கா.."

"நீ அப்படி நினைக்கவில்லையென்றாலும் இந்த இளைஞர்கள் இருவரும் அவ்வாறு நினைக்கலாம். மன்னிகளே! பலர் சொல்லியும் கேட்காமல் நான் இந்த இடத்தைத் தொடர்ந்து மேம்படுத்த முயற்சிப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

இந்த மண் நாஞ்சில் நாட்டின் பண்டைய களரியாசான்கள் பலரும் வாழ்ந்து மறைந்த மண். மகா தபஸ்விகளும் மேதைகளுமான அந்தக் குருக்கள்[177] ஆராத்தின் ஜீவசக்தி இச்சாலையின் மண்ணிலும்

[177] களரியாசான்களை குருக்கள் என்றுதான் இப்போதும் அழைக்கிறார்கள்.

மரங்களிலும் வான்வெளிகளிலும் பாய்ந்து பரவிக் கிடக்கிறது. அதனை இங்கு கால் பதித்த முதல் நாளிலேயே நான் நன்றாக உணர்ந்துகொண்டு விட்டேன். அதனால்தான் இந்த மண்ணை விட்டுப் பிரிய மனமில்லாமல் இன்னமும் இங்கேயே பிச்சியாகச் சுற்றிக் கொண்டிருக்கிறேன் எப்படியாவது இந்தப் பண்டைய சாலைக்கு மீண்டும் உயிரூட்டிவிட மாட்டோமா? நான்கு மாணவர்களைச் சேர்த்து நல்ல சட்டர்களாக அவர்களைப் பயிற்றுவித்துவிட மாட்டோமா? என்று அன்றாடம் அலை பாய்ந்து கொண்டிருக்கிறேன். இந்தப் பணி முடிவதற்கு முன்னால் என்னைக் கொண்டு போய் விடாதே என்று தேவியிடம் அன்றாடம் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்."

ஆவேசத்துடன் பேசிக்கொண்டு சென்ற தம்புராட்டியாரை பிஷு மெல்ல நெருங்கி அணைத்துக் கொண்டார். "அக்கா! உனது புனிதமான நோக்கம் நிச்சயம் நிறைவேறும். புத்த பகவான் உனக்குத் துணையிருப்பார்" என்றார் மெல்ல. அவரது குரல் தழுதழுத்து விட்டது.

எப்போதும் நிதானம் தவறாத அமைதியோடும் புன்னகையோடும் காட்சியளிக்கும் பிஷு கழிக்குடியில் கால் வைத்த கணம் முதல் பெரிதும் உணர்ச்சிவசப்பட்டவராகக் காணப்பட்டது நண்பர்களுக்கு வியப்பையே அளித்தது இங்கு அவர் காம்போஜத்தின் ஆனந்த தேரராக வரவில்லை கழிக்குடியின் உதயமார்தாண்டத் தம்புரானாகவே வந்திருக்கிறார் போலும்.

"தம்பி! அரிது அரிது மானிடராதல் அரிது என்பது பண்டைய வாக்கு. அப்படி அமையப்பெற்ற மானுட வாழ்க்கை பயன்பெற வேண்டுமாயின் அதற்கு ஒரு நல்நோக்கம் குறிக்கோள் வேண்டும். நான் இந்தச் சாலையை நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதையே என் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுவிட்டேன். ஒரு வேளை இந்தப் பணி முடிவதற்கு முன் என் உயிர் பிரிந்துவிட்டாலும் என் ஆன்மா இந்தச் சாலை வளாகத்தில்தான் சுற்றிக் கொண்டிருக்கும். என்னைப் போலவே வேறு யாராவது இந்த நற்பணியை ஏற்றுச் செயல்படுத்தமாட்டார்களா? அவர்களுக்கு நாம் ஏதாவது உதவி புரிய மாட்டோமா? என்று ஏங்கிக் காத்திருக்கும்..."

மழபாடியாருக்கும் மணியனாருக்கும்கூடக் கண்கள் கலங்கி விட்டன. மெல்ல இருவரும் அந்த மூதாட்டியாரை நெருங்கினர்.

"அம்மா! உங்களின் நோக்கத்திற்கு நாங்களும் முடிந்தவரை உதவுகிறோம். நீங்கள் யார் என்பதையோ உங்களின் பின்புலம் என்ன என்பதையோ பிஷு எங்களிருவரையும் எதற்காக உங்களிடம் அழைத்து வந்திருக்கிறார் என்பதையோ உண்மையில் பேரரசர் எங்களுக்கிட்ட பணி என்ன என்பதையோ இன்னமும் அறிய முடியாதவர்களாக இருக்கிறோம். என்றாலும் உங்களின் உள்ள உறுதி எங்களை அசைத்துவிட்டது. உங்களுடைய நற்பணியில் எங்களையும் தயவு செய்து சேர்த்துக் கொள்ளுங்கள்."

"அக்கா! காலம் கனிந்து விட்டது என்று நான் முன்பே குறிப்பிட்டேனல்லவா? அந்தக் காலத்தின் முடிவுதான் இப்போது கம்பன் மணியனாரின் வாய் வழியே வார்த்தை வடிவம் பெற்று வெளிவந்திருக்கிறது..."

"என்ன உதயா இது? நீ என்னிடம் கடந்த சில நாழிகைகளில் பகிர்ந்து கொண்ட செய்திகளைக்கூட இவர்களிடம் இன்னமும் தெரிவிக்கவில்லை போலிருக்கிறதே? பாவம்! எதற்காக இத்தனை தூரம் பயணப்பட்டு வந்திருக்கிறோம் என்பது கூடத் தெரியாமலா குழந்தைகள் வந்திருக்கிறார்கள்?"

"ஆமாம் அக்கா. . சூழ்நிலை அவ்வாறு அமைந்து விட்டது..." என்றார் பிஷு மெல்ல. "அவர் அவ்வாறு ஆணையிட்டுவிட்டார். நானென்ன செய்வேன்?" என்று மிக மெல்லிய குரலில் அவர் முணுமுணுத்தது எவர் காதுகளிலும் விழவில்லை.

"அப்படியானால் முதலில் எல்லோரும் காலை உணவை உட்கொண்டுவிட்டுச் சாவகாசமாகப் பேசுவோம். வாருங்கள்."

* * * * * * * *

மூங்கில் தண்டுகளில் அரிசி மாவை அடைத்துச் செய்யப்பட்ட நீண்ட பணியாரங்களும் அதற்குத் தோதாகத் தொட்டுக்கொள்ள வைக்கப்பட்ட தேங்காய் மிளகுத்[178] துவையலும் தேங்காய்ப்பாலும் பசித்த வயிறுகளுக்குள் மளமளவென்று இறங்கின. தென்னை மரங்கள் அதிகம் விளையும் மலைநாட்டையொட்டி இருப்பதால் நாஞ்சில் நாட்டுப் பகுதிகளிலும் அந்தச் சமையலின் தாக்கம் தெரிந்தது. தேங்காய்ப் பால், தேங்காய் எண்ணை என்று எங்கும் எதிலும் தென்னையின் ஆதிக்கம்தான்.

பணியாரங்களுக்குத் தொட்டுக்கொள்ள வைக்கப்பட்ட தென்னை விழுதில் மலைநாட்டு மிளகு சற்று உரைப்பாகவே இருந்ததால் அனைவரும் அடிக்கடித் தண்ணீரை நாட வேண்டியிருந்தது. அவர்களைத் தமது கண்களால் காண முடியாவிட்டாலும் அடிக்கடி இளையவரும் மழபாடியாரும் "உஸ்.... உஸ்... " என்று சர்ப்பங்களைப்போல் சீறுவதிலிருந்தே சமையலில் காரம் அதிகம் என்பதை உணர்ந்து கொண்ட தம்புராட்டியார் தமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

"எத்தனை முறை படித்துப் படித்துக் கூறினாலும் மிளகை ஒரு பிடி அதிகமாகக் கொட்டிவிடுகிறாள் இந்தச் சம்பங்கி. எனக்கும் அவளது சமையல் நாளாவட்டத்தில் பழகிவிட்டதால் இந்தக் காரம் உரைப்பது தெரியவேயில்லை. பாவம்! குழந்தைகள் எத்தனை சிரமப்படுகிறார்கள்..."

"சமையல் காரமென்றாலும் சுவை மிக அதிகமம்மா. பசிக்கு அமிர்தமாக இருக்கிறது."

"இதெல்லாம் என்ன? ஒரு காலத்தில் மாளிகைப்புரத்து வீட்டில் என் பாட்டியாரின் கைமணத்தில் வீடே கம கமத்துப்போலும். பின்கட்டில் அமைந்திருக்கும் உக்கிராண அறையில் என்ன சமையல் நடந்து கொண்டிருக்கிறது என்பதை முன்கட்டு வாயிலில் நுழையும்போதே சொல்லி விடலாம். நானும் எத்தனையோ முறை முயன்று பார்த்து விட்டேன். அவருடைய கைப்பக்குவத்திற்கு முன் நானோ சம்பங்கியோ உறைபோடக் காணமாட்டோம். அடடா! இந்த மாதிரிப் பணியாரங்களுக்கு அவர் எப்போதும்

[178] அந்தக் காலத்தில் காரத்திற்கு மிளகு மட்டும்தான் உண்டு. மிளகாய் பின்னாளில்தான் கண்டறியப்பட்டது.

செய்வது வாழைக்காய்த் துவையல்தான். ம்... அந்த மணம் இன்னமும் என் நாசியிலேயே நிற்கிறது." என்று சிலாகித்தார் தம்புராட்டியார். சில கணங்களுக்கு அவரது நிலைத்த கண்கள் ஏதோ அந்தகாரத்தை வெறித்தன. இறந்த காலத்தை ஊடுருவி அந்தக் காட்சியை மீண்டும் தரிசித்தாற் போல் அவருடைய வதனத்தில் மெல்லிய புன்னகை எழுந்தது.

"அக்காவிற்குத் தன்னுடைய பாட்டியென்றால் உயிர். ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் பத்திருபது முறைகளாவது அவரது பெயரைக் குறிப்பிடாமல் இருக்கமாட்டார்கள். சொல்லப் போனால் அவருடைய பெயரான வேழமுகாம்தேவி என்பதைத்தான் அக்காவிற்கும் வைத்தார் எங்களின் தந்தையார். அழகிலும் சரி, குணத்திலும் சரி, அக்காவிற்கு இணையாக ஒருவரைச் சொல்ல முடியுமென்றால் அது பாட்டியார்தான்..." என்று மெல்ல நண்பர்களின் காதுகளில் கிசுகிசுத்தார் பிஷு.

"அடேய் உதயா! அழகில் பூலோக இரம்பையும் குணத்தில் தமயந்தியின் அவதாரமுமான சுந்தரியம்மை எங்கே? நான் எங்கே? அவரைப் போல் இன்னொருத்தி இது வரை பிறந்ததில்லை. இனிப் பிறக்கப் போவதுமில்லை..."

பார்வை குறைப்பட்டிருந்தாலும் தம்புராட்டியாரின் காதுகள் மிக மிகக் கூர்மையானவை என்பதில் சந்தேகமில்லை.

"பாட்டியார் சிறு வயதில் மிக அழகாக இருந்ததினால் அவரை யாரும் பெயர் சொல்லி அழைக்கவேயில்லையாம். சுந்தரி என்பதுதான் அவரது செல்லப்பெயர். நாங்களும் சுந்தரியம்மை என்றுதான் அவரை அழைப்போம். வயதான காலத்தில்கூட அவரது வதனம் எத்தனை களையாக விளங்கியது என்பதை நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது. மிக முதிர்ந்த வயதிலும் அவரது தலை அதிகம் நரைக்கவேயில்லை. தேங்காய் எண்ணை விட்டுக் குளித்துப் புகை போட்ட நறுங்கூந்தலை அனாயசமாகச் சீவிக் கொண்டையாக முடிந்து கொள்வார். அவ்வளவுதான் அவர் அலங்காரம். அந்தக் கொண்டை அத்தனை அழகாகப் பாந்தமாகத் தலையில் அமர்ந்துவிடும்..." என்றார் பிஷு அந்நாளைய ஞாபகங்களில் அமிழ்ந்தவராக.

"உன்னிகளா! என்ன, அக்காளும் தம்பியுமாக மாறி மாறிப் பாட்டியார் புராணம் படிக்க ஆரம்பித்து

விட்டார்களே என்று திகைக்கிறீர்களா? காரணம் இருக்கிறது.

அவருடைய வாழ்க்கைதான் மாளிகைப்புரத்து வீட்டின் சரித்திரத்தையே மாற்றியமைத்தது. அவருடைய தியாகம்தான் என்னுடைய வாழ்க்கையை... உதயனுடைய வாழ்க்கையை... ஏன், வேறு சில மிகப் பெரிய மனிதர்களின் வாழ்க்கையையும் கூடப் புரட்டிப் போட்டது. இப்போது உங்களுடைய வாழ்க்கையையும் அது தொட்டுவிட்டது போலிருக்கிறது. விதி வலியதா? அல்லது மனதில் வைப்பது வலியதா? என்பதை இனிக் காலம்தான் முடிவு செய்ய வேண்டும்."

தம்புராட்டியார் மொழிந்த வார்த்தைகளின் அர்த்தம் புரியாமல் இளையவர் பிஷ்ணுவை நோக்க...

"நண்பர்களே! குழப்பம் வேண்டாம். எல்லா விபரங்களையும் தம்புராட்டியாரே கூறுவார். ஒன்றை மட்டும் சொல்கிறேன். நான் கழிக்குடிக்குத் தனிப்பட்ட காரணங்களுக்காக வரவில்லை. சோழ நாட்டின் தூதுவனாக, அருள்மொழிவர்மரின் அரசாங்க ஓலையை உரியவரிடம் சேர்ப்பிப்பதற்காகத்தான் வந்திருக்கிறேன். பேரரசரின் முதல் ஓலை மாளிகைப்புரத்து வீட்டின் தற்போதைய தம்புராட்டியாரான அக்காளுக்குத்தான் எழுதப்பட்டிருக்கிறது!" என்றார் பிஷ்ணு.

51. விதி வலிது



சாலையின் வடகிழக்கு எல்லையில் பூவந்தித் தோப்பையொட்டி அமைந்திருந்த சிறிய குளத்தின் கரையில் அந்த நால்வரும் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். தம்புராட்டியாரின் நிலை குத்திய பார்வை கிழ்த்திசையில் எதையோ வெறித்து நின்றது. பலப்பல வருடங்களுக்கு முன்னால் நடைபெற்ற நிகழ்வுகளைத் தமது அகக்கண்களால் அவர் தரிசித்துக் கொண்டிருக்கிறாரோ? என ஐயுறும்படி அமைந்திருந்தது அவரது தோற்றம்.

வானத்தில் இரண்டு சிட்டுக்குருவிகள் "கீச்! கீச்!" சென்று கிறீச்சிட்டுக் கொண்டே அமைதியைக் கலைத்தபடி

தென்மேற்கு திசையில் பறந்தன. குளக்கரையில் நீண்டு வளர்ந்திருந்த இரு தென்னை மரங்கள், நீரில் பிரதிபலித்த தம்புராட்டியாரின் பிம்பத்தையே கண்ணிமைக்காமல் பார்த்தபடி அசைவற்று நின்றன.

* * * * * * * *

"எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து மறக்க முடியாமல் மனதில் பதிந்து நிற்கும் ஒரே முகம் என் பாட்டியாரான சுந்தரியம்மையின் முகம்தான். அவர் என் அன்னை வழிப் பாட்டியாராதலால் சிறு வயது முதல் அவருடன் வடக்கே மகோதயபுரத்திற்கருகில் அமைந்திருந்த மாளிகைப்புரத்து வீட்டில்தான் நான் வளர்ந்து வந்தேன். உதயன் மட்டும் என் பெற்றோருடன் தெற்கில் நாட்டில் அமைந்திருந்த கோட்டாற்று அரண்மனையில் வசித்து வந்தான்.

நான் பிறந்த மாளிகைப்புரத்து வம்சமானது மலைநாட்டின் பண்டைய நாடுவாழிக் குடும்பங்களில் ஒன்று. முந்நூறு நானூறு வருடப் பாரம்பரியம் கொண்டது. மலைநாட்டின் வடபகுதியில் இன்றும் புகழ் பெற்றிருக்கும் பூர்விக வம்சத்தின் ஒரு கிளைதான் இவ்வாறு பிரிந்து தனி வம்சமாகிவிட்டது எனச் சொல்வாருண்டு.

எது எப்படியோ, கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களுக்கு முன் எங்கள் வம்சத்தின் மூத்த தம்புரான் மலைநாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் கணிசமான நிலப் பகுதிகளை ஆண்டு வந்தார். அக்காலத்தில் மலைநாட்டை ஆண்டு வந்த ஸ்தாணு இரவிப் பெருமாளுக்கும் எங்களின் வீட்டாருக்கும் நிலவிய நெருக்கத்தைப் பார்த்துப் பல நாடுடையவர்கள் ஏக்கப் பெருமூச்சு விடுவார்களாம். ஒரு காலத்தில் ஒன்று குறை ஆயிரத்தவருக்குத் தலைமை தாங்கும் பொறுப்பே கூடத் தம்புரானுக்கு அளிக்கப் பட்டதாகத் தகவல்.

ஏறக்குறைய இதே காலகட்டத்தில் தமிழகத்தில் பண்டைய சோழ வம்சத்தைச் சேர்ந்த ஆதித்த சோழர் தமிழ்த் தேசத்தில் வலிமையான இராஜ்ஜியமொன்றினை நிறுவும் முயற்சியில் தன் தந்தையுடன் பலகாலமாக ஈடுபட்டு வந்தார். பல்லவர்களையும் பாண்டியர்களையும் குலப் பகைவர்களாகக் கொண்டுவிட்ட அவருக்கு எப்படியாவது மலைநாட்டுடன் நட்புறவு பூண்டுவிட வேண்டும் எனும்

ஆர்வம் இருந்தது. பெருமாளுக்கும் அப்போதைய அரசியல் நிலவரங்களால் இந்த நட்பு முக்கியமாகத் தெரிந்தது. தக்கவர்களைக் கொண்டு பேசி இரு சாராரும் நட்புப் பூண்டனர்.

இந்தப் புதிய சேர - சோழ உறவு தழைத்தோங்க வேண்டுமெனில் இரு அரசுக் குடும்பங்களுக்குமிடையே கொள்வினை கொடுப்பினை இருந்தால் நல்லது என்று பட்டதால் ஆதித்தரின் மூத்த மகனான பராந்தகருக்குப் பெருமாளின் பெயர்த்தியான கோக்கிழானடிகளை மணமுடிப்பது என்று முடிவாயிற்று. ஆதித்தருக்கு அடுத்த படியாகப் பட்டமேற்க வேண்டியவர் பராந்தகர்தான் என்பது முன்னரே முடிவாகி விட்டதாலும் பராந்தகர் இளவரசியாரைப் பட்டமகிஷியாகவே ஏற்பார் என்கிற உறுதிமொழியை ஆதித்தர் அளித்ததாலும் பெருமாள் இந்தத் திருமணத்திற்கு மகிழ்ச்சியோடு சம்மதித்தார். அவருடைய பெயர்த்தியின் வயிற்றில் வளரும் குழந்தைதான் நாளை சோழ இராஜாங்கத்தையே ஆளப்போகிறது அல்லவா?

இரு பக்கங்களும் பெறப்போகும் அரசியல் ஆதாயங்களை வைத்துப் பார்க்கும்போது இந்தத் திருமணம் புத்திசாலித்தனமானதாகத் தெரிந்தாலும் தனிப்பட்ட முறையில் பராந்தகருக்கு இந்த ஏற்பாடு சுத்தமாகப் பிடிக்கவில்லை. 'சோழ இராஜாங்கத்தின் மேன்மைக்காக இந்தத் தியாகத்தை நீ செய்துதான் தீர வேண்டும்!' என்று ஆதித்தர் உறுதியாகச் சொல்லிவிட்டதால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

திருமணம் நடைபெறுவதற்கு ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு முன்னரே மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரின் ஊருக்கு வந்து விடுவது வழக்கமாதலால் அவர்களைத் தங்க வைத்து உபசரிப்பதற்கு நல்லதொரு அரண்மனையைத் தேடிக்கொண்டிருந்தார் பெருமாள். தலைநகரிலிருந்து சற்று ஒதுக்குப்புறமாக அமைந்திருந்த எங்களின் விருந்தினர் மாளிகை அவருக்கு மிகவும் பிடித்துப் போகவே அங்கேயே தங்க வைப்பதென்று முடிவாயிற்று.

சோழ இராஜாங்கத்தாரை தகுந்த முறையில் வரவேற்று உபசரிப்பதற்கும் திருமண வேலைகளுக்கும் உதவியாக இருக்கட்டுமென்று எங்கள் வீட்டின் பெண்களையும் மாளிகைப்புரத்து அரண்மனையிலிருந்து மகோதயபுரத்திற்கு

முன்னரே அனுப்பி விட்டார் தம்புரான் இவ்வாறு வந்து சேர்ந்த பெண்களுள் சுந்தரியாரும் அடக்கம்

தன்னுடைய வயதையொத்த சுந்தரியாரின் அழகும் சுறுசுறுப்பும் அடக்கமும் இளவரசி கோக்கிழானடிகளுக்கு மிகவும் பிடித்துப் போகவே வந்து சேர்ந்த சில நாட்களிலேயே அவருடைய நம்பிக்கைக்குகந்த தோழியாக மாறிவிட்டார் பாட்டியார். இளவரசியாரைச் சொல்லிக் குற்றமில்லை. பாட்டியாரின் அதீதக் கவர்ச்சி அத்துணை சக்தி வாய்ந்தது. இளம்பெண்டுகள் இருவருமாகச் சேர்ந்து வரப்போகும் இளவரசரைப் பற்றியும் இல்வாழ்க்கை பற்றியும் மனம் விட்டு இரவு பகலாகப் பேசித் தீர்த்தார்கள்

ஒரு வழியாகத் திருமண நாளும் நெருங்கியது. வேண்டா வெறுப்பாகத் தனது தோழர்களுடனும் பரிவாரங்களுடனும் மகோதயபுரத்திற்கு வந்து சேர்ந்தார் இளவரசர் பராந்தகர். சில சூழ்நிலைகள் காரணமாக மன்னர் ஆதித்த சோழரால் அப்போது வர முடியவில்லை. திருமணத்திற்கு ஓரிரு நாட்களுக்கு முன்புதான் அவர் வந்து சேர்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

இளவரசரும் பரிவாரங்களும் வந்து சேர்ந்த நாளிலிருந்து மாளிகைப்புரத்து விருந்தினர் மாளிகை விருந்து, கேளிக்கை, கச்சேரிகள், நடனங்கள் என்று களை கட்டியது. பெருமாள் வீட்டுப் பெண்களோடு பெண்களாக நின்று எங்களின் வீட்டாரும் சோழ இராஜாங்கத்தாரை மிகச் சிறந்த முறையில் கவனித்துக் கொண்டார்கள்.

மகோதயபுரத்திற்கு வந்து சேர்ந்த சில நாட்களிலேயே பாட்டியார் மீது சோழ இளவரசர் பராந்தகரின் பார்வை எப்படியோ விழுந்து விட்டது. அதற்கேற்பச் சூழ்நிலைகளும் அவ்வாறு அமைந்து விட்டன. குறிப்பாக மாப்பிள்ளைக்கும் அவரது இரு தோழர்களுக்கும் வேண்டிய அத்தனை பிரத்யேக உபசாரங்களையும் சுந்தரியாரே முன்னின்று செய்துகொள்ள வேண்டியதாகிவிட்டது. ஏனெனில் வேறு ஒருவராலும் அவரளவிற்குக் குறிப்பறிந்து செயலாற்ற முடியவில்லை.



மாளிகைப்புரத்து வீட்டு இளவரசியார் சுந்தரியம்மை.

இதனைக் கேள்விப்பட்ட இளவரசியாரும் அதனை வெகுவாக ஊக்குவித்தார். ஏனெனில் திருமணத்திற்கு முன்னரே தனக்குக் கணவராக வரப்போகிறவரின் நடை உடை பாவனைகளையும் அவரது பழக்க வழக்கங்களையும் தம்மைப் பற்றி அவர் என்ன நினைக்கிறார் என்பதையும் தனது அணுக்கத் தோழியிடம் விபரமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று அவர் நினைத்துதான் அதற்குக் காரணம்.

இவ்வாறாக விதி அமைத்த அலங்கார மேடையில் தானும் ஒரு முக்கியப் பாத்திரம் என்பதையே அறியாதவராக தனது பாட்டியார் சந்தோஷமாக வலம் வந்தார். பகல் பொழுது முழுவதும் மாளிகையிலேயே இருந்து இளவரசரைக் கவனித்துக் கொள்வது, மாலை வேளைகளில் மகோதயபுரத்து அரண்மனைக்கு வந்து இளவரசியாரிடம் அன்று என்னவெல்லாம் நடந்தது, இளவரசர் என்ன உணவு உண்டார், என்னென்ன பேச்சுக்களெல்லாம் நிகழ்ந்தன என்று பாடம் படிக்க வேண்டியது என்று நாட்கள் நகர்ந்தன.

பராந்தகரின் மனமோ மெல்ல மெல்ல சுந்தரியாரின் அன்புக்கும் அழகிற்கும் அடிமைப்படலாயிற்று. இளவரசியாரைப் பற்றி விசாரிப்பதை விட சுந்தரியாரைப் பற்றித்தான் அவர் அதிகம் விசாரித்தார். பாட்டியாரும் இராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்தான் என்பதையறிந்ததும் அவர் வெகுவாக மகிழ்ந்து போனாராம். முதலில் இரகசியமாக முகிழ்த்த அன்பு ஒரு கட்டத்தில் பிரத்யேகமாகவே வெளிப்பட ஆரம்பித்தது. இடையில் ஓரிரு நாட்கள் சுந்தரியாரின் தலை தெரியவில்லையென்றால் அவரைத் தேடிக்கொண்டு மாப்பிள்ளையின் தோழர்கள் விருந்தினர் மாளிகை முழுவதும் தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இந்த நிகழ்வுகளெல்லாம் அரசல் புரசலாகப் பெருமாளின் காதுகளை எட்டின. வெகுண்டெழுந்தார் அவர். தனது பெயர்த்தியின் கைப்பிடிக்க வந்தவன் அவளது தோழியின் நிலையில் நிற்கும் பெண்ணிடம் மனதைக் கொடுப்பதாவது? என்று அங்காலயத்தது அவர் மனம். பின் மற்ற இராஜாங்கப் பெரியவர்களும் நாலுதளிக்காரர்களும் தலையிட்டு 'இப்போது சண்டை வேண்டாம். திருமணம் முடியட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று கூறி சமாதானம் செய்தார்கள்.

இந்தக் காலகட்டத்தில் பராந்தகருக்கு மிக ஆதரவாக நடந்து கொண்டவர்களுள் அவரது இரு அத்யந்த தோழர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களில் ஒருவர்தான் குருகாடி செல்லக்கிழார். உங்களைப் போன்ற இளவரசர்கள் ஓரிரு பெண்களைத் திருமணம் செய்து கொள்வது ஒன்றும் பெரிய விவகாரமல்ல. இந்தத் திருமணம் நல்லபடியாக நடந்து முடியட்டும் அந்தப் பெண்ணையும் உங்களுக்கு எப்பாடு பட்டாவது பிடித்துக் கொடுத்து விடுகிறோம் என்று அவர் உறுதியளித்ததனால்தான் தொடர்ந்து திருமணம் நடக்கவே பராந்தகர் ஒப்புக்கொண்டதாகத் தகவல்.

ஆதித்த சோழர் வந்து சேர்ந்ததும் பெருமாள் இந்த நிகழ்வுகளைக் குறிப்பிட்டு இளவரசரைக் கண்டிக்கச் சொன்னாராம். ஆனால் ஆதித்தரோ இதனை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. இதனாலும் பெருமாளுக்குப் பெருத்த வருத்தமேற்பட்டது.

இங்கு ஒரு கலாச்சார வேறுபாட்டைக் குறிப்பிட்டாக வேண்டும். அரசியல் காரணங்களுக்காகவும் தங்களின் பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகவும் தம் சிற்றரசர்களுடனும் அண்டை இராஜ்ஜியங்களுடனும் கொள்வினை கொடுப்பினையில் ஈடுபடுவது சோழர்களின் ஒப்புக் கொள்ளப்பட்ட பழக்கம். இதனால்தான் ஒவ்வொரு சோழ மன்னரும் பலதார மணத்தில் சர்வ சகஜமாக ஈடுபட்டனர். ஆனால் சேரர் பாரம்பரியம் அவ்வாறு அமைந்ததல்ல. பெரும்பாலான பெருமாள் அரசர்கள் ஏகபத்தினி விரதர்களாக வாழ்ந்தவர்கள். அதனால்தான் பெருமாளால் பராந்தகரின் நடத்தையை ஏற்க முடியவில்லை.

திருமணம் ஒரு வழியாக முடிந்து இளவரசியாருடன் தஞ்சைக்குக் கிளம்பிப் போய்விட்டார். சரி, எல்லாம் நல்லபடியாக முடிந்தது என்று நிம்மதிப் பெருமூச்சு கிளம்பியது. ஆனால் அனைவரும் எதிர்பார்த்ததைப் போல பராந்தகரால் சுந்தரியாரை மறக்கவே முடியவில்லை. பரஸ்பர நண்பர்களின் மூலம் மாளிகைப்புரத்து வீட்டாருக்கு இரகசியத் தூதுகள் வந்த மணியம் இருந்தன.

மாளிகைப்புரத்து வீட்டிற்கும் மகோதயபுரத்திற்கும் நிலவி வந்த நெருக்கத்தினால் மனம் புழுங்கிக் கொண்டிருந்த மற்ற நாடுவாழிகள் இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு பெருமாளின் மனதை

தம்புரானுக்கு எதிராகத் திருப்பி விட்டனர். அந்தக் குடும்பத்திற்கு ஆனாலும் நீங்கள் அதிக இடம் கொடுத்து விட்டீர்கள். அதனால் இன்று உங்கள் பெயர்த்தியின் வாழ்க்கையே கேள்விக்குறியாகி விட்டது! என்றெல்லாம் கோள் மூட்டினர்.

இதற்குத் தக்க பலன் கிடைத்தது. மெல்ல மெல்ல அவர்களின் வீட்டாரைச் சேரமான் பெருமாள் ஒதுக்கத் துவங்கினார். தம்புரானின் முக்கியப் பதவிகள் பறிக்கப்பட்டன. விசுவாசமாகக் காலகாலமாய் உழைத்ததற்குக் கிடைத்த பலன் இதுதானா? என்று மனம் வெதும்பிப்போனவர்களாக அவர்கள் வீட்டார் மகோதயபுரத்தின் பக்கம் வருவதையே நிறுத்தி விட்டனர். சுந்தரியாரையும் தெற்கே அமைந்திருந்த கோட்டாற்று மாளிகைக்கு அனுப்பி விட்டனர்.

பெருமாளுடன் பெருத்த கசப்புணர்வு உண்டான பிறகு ஏற்பட்ட கோபத்தின் எதிரொலியாகத் தம்புரான் 'திருமணத்திற்குச் சம்மதம்!' என்று சோழர்களுக்கு ஓலையனுப்பி விட்டார் ஆனால் ஆதித்தரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்ததால் பராந்தகரால் உடனடியாகத் திருமணத்தை மேற்கொள்ள முடியவில்லை. ஆதித்தர் இராஜ்ஜியபாரத்தைப் பராந்தகரிடம் ஒப்புவித்துவிட்டு அங்கே தொண்டைமான் ஆற்றூருக்குச்[179] சென்று விட்டார். பெருமாளுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி கோக்கிழானடிகளே பட்டத்தரசி ஆக்கப்பட்டார். அவருக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது.

தன் பெயர்த்தியின் வயிற்றில் சோழர் குலத்து இளவல் பிறந்த செய்தி பெருமாளின் வயிற்றில் பாலை வார்த்தது. என்றாலும் அந்தப் பெயரனுடன் கொஞ்சி விளையாட அவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை. ஒரு சில மாதங்களிலேயே அவரும் காலமானார். அவருக்குப் பின்னால் அவருடைய மருமகன்- அதாவது இளவரசியின் தந்தையாரான விஜயராகவர் சேரநாட்டின் மன்னரானார். இவர் பல காலமாகத் தளியதிகாரியாகப் பணியாற்றியவர் என்பதால் மன்னராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு எதற்கெடுத்தாலும் நாலுதளிக்காரர்களைக் கலந்தாலோசிப்பது எனும் பழக்கத்தை மேற்கொள்ள ஆரம்பித்தார்.

---

179 காளஹஸ்திக்கு அருகில் அமைந்துள்ளது.

இதற்கிடையே கோட்டாற்று மாளிகைக்குப் பல முறை பராந்தகர் இரகசியமாக விஜயம் செய்து பாட்டியாரைச் சந்தித்துக் கொண்டிருந்தார். பெருமாள் மறைந்த சில காலத்திற்குப் பிறகு பராந்தகருக்கும் பாட்டியாருக்கும் குமரியம்மன் முன்னிலையில் திருமணமும் நடந்து விட்டது சில மாதங்களிலேயே சுந்தரியார் கருவுற்றார்.

இந்தத் தகவல் தஞ்சையில் பட்டத்தரசி கோக்கிழானடிகளைப் பெரிதும் கலவரப்படுத்திற்று. எங்கே சோழ மகுடத்தைத் தன் மகன் தலையில் வைப்பதற்கு பதில் சுந்தரியாரின் வயிற்றில் வளரும் வாரிசின் தலையில் வைத்து விடுவாரோ என்று பயந்தார் அவர். விஷயம் விஜயராகவப் பெருமாளின் காதுகளை சென்றடைந்தது. அவரது கோபம் எல்லை மீறியது. 'மாளிகைப்புரத்து வீட்டாரை ஒழித்துக் கட்டுவோம்! சோழநாட்டில் இளவரசியாருக்கும் அவரது வாரிசிற்கும் ஆதரவாக இருக்கும்படி சேர நாட்டினர் பலரையும் குடியேற்றுவோம்!' என்று நாலுதளிக்காரர்களும் தங்களின் பங்கிற்கு விஷத்தைப் பாய்ச்சினார்கள். எங்களின் பரம்பரை நிலங்களும் அதிகாரங்களும் பறிக்கப்பட்டன. வேறு வழியின்றிக் குடும்பத்தாருடன் தெற்கே குடி பெயர்ந்தார் தம்புரான்.

சுந்தரியாருக்கு நல்லவேளையாகப் பெண் மகவு பிறந்ததால் வாரிசுப் பிரச்சனை முற்றுப்பெற்றது. தன்னாலும் தனது குடும்பம் பட்ட பாட்டைக் கண்டு மனமுடைந்த பாட்டியார் இனி ஒருபோதும் கருத்தரிப்பதில்லை என்று முடிவு செய்து கடைசிவரை அப்படியே நடந்து கொண்டார். அவருக்கும் பராந்தகருக்கும் பிறந்த ஒரே பெண்தான் எங்களின் அன்னையார்!"

அசையாமல் அனைத்தையும் கேட்டுக்கொண்டு இருந்த பரமன் மழபாடியாரின் மனதில் பளிச்சென்று திரை விலகியது. தஞ்சை செண்டு வாயில் சித்திரக்கூடத்தில் கண்ட அந்த மறக்க முடியாத திருமுகம்... பிஷு ஆனந்த தேரரின் முகத்தில் அப்படியே அச்சாகப் பதிந்திருக்கிறது! அதே முக ஜாடை...

தீட்சண்யம் மிகுந்த அந்த விழிகள் உதட்டோரத்தில் நிரந்தரமாகத் தங்கியிருக்கும் அந்தக் கடைவாய்ப் புன்னகை உறுதியான முகவாய். கூர்மையான நாசி

அந்த முகம்...

அந்த முகம்...

மதுரை கொண்ட கோப்பரகேசரி பராந்தக சோழ தேவரின் திருமுகமல்லவா?

52. பூர்வானுபவப் படி



"ஏறக்குறைய இந்தச் சமயத்தில்தான் மலை நாட்டின் பண்டைய கலமறுக்கும் போட்டிகளுக்கான நாள் அறிவிக்கப்பட்டது. நமது நாட்டிற்கு வந்து நம்மையே அவமானப் படுத்தி விட்டுச் சென்ற சோழர்களைப் பழிவாங்க இதுவே நல்ல தருணம்! என்று பெருமாளிடம் கறுவிய நாலுதளிக் காரர்கள், இக்கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொள்ளும்படி சோழர்களுக்கும் அழைப்பு விடுமாறு வற்புறுத்தினர்.

வழக்கமாக நான்கு சாலைகளின் மாணவர்கள் மட்டுமே பங்கு பெறும் இப்போட்டிகளில் சோழர்களையும் வரவழைத்து அவர்களை மலைநாட்டு மாணவர்கள் தோற்கடித்து விட்டால் சோழநாட்டின் வீரத்தை விட மலை நாட்டின் வீரமே தலை சிறந்தது என்றாகிவிடும். அதன் தொடர்ச்சியாகச் சாலையாசான்களையும் சட்டர்களையும் கூடச் சோழநாட்டில் குடியேற்றுவது எளிதாகிவிடும். அவர்களனைவரும் பட்டத்தரசியாருக்கும் புதிதாய்ப் பிறந்திருக்கும் இளவரசருக்கும் ஆதரவாக இருப்பார்கள். சோழ நாட்டின் மகுடத்தை சேர இளவரசருக்கு முறைப்படி உரிமையாக்குவார்கள் என்றெல்லாம் பலப்பல விபரீத யோசனைகள் தெரிவிக்கப் பட்டன.

பெருமாளின் மனமோ குழம்பிக் கிடந்தது. தன்னுடைய பெண்ணுக்கு இணையாக மாளிகைப்புரத்து வீட்டுப் பெண்ணையும் பராந்தகர் பிடிவாதமாக மணந்து கொண்டதை அவரால் மன்னிக்கவே முடியவில்லை. அதனால் நாலுதளிக்காரர்களின் யோசனைக்கு அவரும் அரைகுறையாகச் சம்மதம் தெரிவித்தார். கலமறுக்கும் போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்ளச் சோழநாட்டின் மிகச்சிறந்த வீரர்களை அனுப்புமாறு சோழ மண்டலத்திற்கு ஓலையனுப்பப்பட்டது.

வெளிப்பார்வைக்கு ஏதோ பெருமாள் குடும்பத்தின் மேல் அக்கறை கொண்டு செயல்படுபவர்களைப் போல் தெரிந்தாலும் உண்மையில் நாலுதளிக்காரர்களின் நோக்கம் முற்றிலும் வேறாக இருந்தது. அவர்களின் மிக முக்கியக் குறிக்கோள் மலைநாட்டின் நாலுதளியைப் போன்ற சக்தி வாய்ந்ததொரு அரசியல் அமைப்பைச் சோழநாட்டிலும் உருவாக்குவதுதான். இதனைப் பெருமாள் உணரத் தவறினார். சோழர்களின் மீதான கோபம் அவரது கண்களை மறைத்தது. எது சரி, எது தவறு, யார் நம்பிக்கைக் குரியவர்கள், யார் துரோகிகள் என்பதையெல்லாம் யோசிக்கும் நிலையில் அவர் இல்லை.

இந்த இடைப்பட்ட காலத்தில் தொண்டைமான் ஆற்றூருக்குச் சென்ற ஆதித்த சோழர் அங்கேயே சிவகதி அடைந்திருந்ததால்[180] நாட்டின் சக்ரவர்த்தியாகப் பராந்தகரே பொறுப்பேற்றிருந்தார். பெருமாளிடமிருந்து வந்திருந்த கலமறுக்கும் போட்டிக்கான அழைப்பிதழ் சோழநாட்டின் வீரத்தையே கேள்விக்குறியாக்கியிருந்தது. போட்டிகளில் கலந்து கொள்ளாமல் தவிர்த்தால் 'சோழர்கள் கோழைகள்' என்ற பட்டப்பெயர் ஏற்படும். ஒரு வேளை கலந்துகொண்டு தோற்று விட்டாலோ அவமானமாகிவிடும். இக்கட்டான நிலை.

தன்னுடைய இரு அந்தரங்க நண்பர்களுடனும் இந்தப் பிரச்சனையை விவாதித்தார் பராந்தகர். பல வாதப் பிரதிவாதங்களுக்குப் பின் சோணாட்டின் மிகச்சிறந்த வீரர்களான அந்த இரு நண்பர்களே இராஜாங்கத்தின் சார்பில் கலமறுக்கும் போட்டிகளில் கலந்து கொள்வது என்று முடிவானது.

நாலுதளிக்காரர்களின் சதித்திட்டங்களை எப்படியோ அறிந்து கொண்ட மாளிகைப்புரத்து வீட்டின் தம்புரான் போட்டிகளில் கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டாமென்றும் இந்த அழைப்பிதழுக்குப் பின் பல்வேறு சதித்திட்டங்கள் மறைந்திருக்கலாமென்றும் பராந்தகருக்கு ஓலையனுப்பினார். அதனால் பயனேதும் விளையவில்லை. மருகரின் பிடிவாதம்தான் உலகறிந்த விஷயமாயிற்றே?

---

[180] இவ்விடத்தில் தந்தையின நினைவாகப பராநதகா கடடிய பளளிபபடைக கோயில இனறும உளளது.

தம்புரான் தனக்கு நெருக்கமானவர்களுடன் இதனைப் பற்றிக் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். அதாவது போட்டி நடப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னரே சோழநாட்டின் வீரர்களிருவரும் கோட்டாற்று அரண்மனைக்கு வந்து விட வேண்டியது. கோட்டாற்றின் எல்லையோரக் காடுகளில் அவர்களுக்குச் சாலைகளின் பிரத்யேக தனுர்வேத வித்தைகளை முறைப்படி பயிற்றுவிக்க வேண்டியது. இதனால் சோழ வீரர்களுக்கு மலைநாட்டுக்கே உரிய பிரத்யேகப் போர்ப்பயிற்சி முறைகளில் பழக்கம் ஏற்படும். போட்டிகளில் வெல்லும் வாய்ப்பும் அதிகரிக்கும். இந்த நூதனமான யோசனைக்குப் பராந்தகரும் ஒப்புக் கொண்டு நண்பர்களிருவரையும் இரகசியமாகத் தெற்கே அனுப்பி வைத்தார்.

வீரர்களைப் பயிற்றுவிக்கத் தகுந்த ஆசான்களை எங்கே போய்த் தேடுவது? கேரளத்தின் ஆசான்கள் ஒருவரும் சோழ நாட்டாரை மாணவர்களாக ஒப்புக்கொள்ள மாட்டார்களே? என்று தவியாய்த் தவித்த தம்புரான், இறுதியில் இந்தச் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் பிரதான ஆசானிடம் சரணடைந்தார். அந்த ஆசான் மலைநாட்டைச் சேர்ந்தவரல்ல. இதே நாஞ்சில் நாட்டு மண்ணில் பிறந்து வளர்ந்தவர். அவரிடம் மலைநாட்டில் நாலுதளிக் காரர்களால் உருவாக்கப்பட்டிருக்கும் அரசியல் சிக்கல்களை விளக்கி, சோழ வீரர்களை அவர் எவ்வாறேனும் பயிற்றுவித்தே ஆகவேண்டுமென்றும் அதற்குப் பிரதி பலனாக மாளிகைப்புரத்து வம்சம் பெருஞ்சாலைக்கு என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருக்குமென்றும் பலவாறு எடுத்துச் சொல்லிப் பயிற்சிக்குச் சம்மதிக்கச் செய்தார் தம்புரான்.

சாலை கழிக்குடியில் அமைந்திருந்ததால் வீரர்களிருவரும் கோட்டாற்று அரண்மனையில் தங்க முடியவில்லை. பகவதியம்மன் கோயிலினருகே அமைந்திருந்த எளிய விருந்தினர் விடுதியில் பொதுமக்களில் ஒருவராகத்தான் அவர்களால் தங்க முடிந்தது.

இவ்வாறு கழிக்குடியில் வசித்தபடி குருகாடி செல்லக்கிழாரும் அவரது நண்பரும் நமது சாலையில் கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ளத் துவங்கினார்கள்....."

தம்புராட்டியார் பழங்கதைகளைச் சொல்லிக்கொண்டே போக, மழபாடியாரின் மனதை வார்த்தைகளில் விவரித்து விடமுடியாத பல எண்ணங்கள் மேகமாய்ச் சூழ்ந்து விட்டிருந்தன. கண்களில் நீர் நிரந்தரமாகக் கட்டிக் கொண்டிருந்தது. தன் புறக்கண்களால் காணக் கொடுத்து வைக்காத அந்த மகாவீரரை அகக்கண்களால் தரிசித்து வணங்கினார் அவர்.

ஆம். தன்னுடைய பாட்டனாரை மழபாடியார் கண்டதேயில்லை. அவருடைய தாய் கருவுற்றிருந்த காலத்தில் கிழாருக்கு திடீரென்று மிகவும் முடியாமல் போய் விட்டதாம். அந்த நிலையிலும் 'எனக்குப் பெயரன்தான் பிறப்பான். என்னினும் மேலான வீரனாய் வளர்வான்' என்று அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டிருப்பாராம் ஆசை ஆசையாய் அவர் எதிர்பார்த்திருந்த அந்தப் பெயரன் பிறப்பதற்குப் பத்து நாட்களுக்கு முன்னரே அவரது ஆவி பிரிந்துவிட்டது. தனது கடைசிக் கணங்களில்கூட 'என்னுடைய இந்த வாளை எப்படியாவது என் பெயரனின் கைகளில் சேர்த்து விடுங்கள்' என்று சொல்லிவிட்டுத்தான் கண்களை மூடினார் கிழார் என்று பெரியவர்கள் சொல்லிக் கொண்டார்கள். அதனால்தான் உரிய பிராயம் வந்தவுடன் முதல் காரியமாகப் பாட்டனாரின் ஈட்டியையும் வாளையும் தனதாக்கிக் கொண்டுவிட்டார் மழபாடியார்.

கடைசியில் அந்த வாளல்லவா பிஷு ஆனந்த தேரருக்கு அவரை இன்னாரென்று அடையாளம் காட்டியது! அதனால்தானே இந்தக் கழிக்குடிப் பயணமும் ஏற்பட்டது! இவற்றையெல்லாம் வெறும் தற்செயலாக நடந்தவை என்று ஒதுக்கிவிட முடியுமா? ஒரு மிகப் பெரிய காரண காரியச் சங்கிலியின் கண்ணிகளாகவல்லவா இந்த நிகழ்வுகள் தெரிகின்றன?

சிறிதளவு சுக்கு நீரைத் தொண்டைக்குள் புகட்டிக் கொண்ட தம்புராட்டியார் அந்தச் சரிதத்தை மேலும் தொடர்ந்தார்.

"சோழநாட்டு வீரர்கள் இருவருமே தலைசிறந்த வீரர்களாதலால் சாலையில் அளிக்கப்பட்ட பயிற்சிகளில் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள். ஆசான் மிகுந்த ஆர்வத்துடன் தனக்குத் தெரிந்த எல்லா வித்தைகளையும் அவர்களுக்குப் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார். அதிகாலையில் பகவதி தரிசனம். பின்

காலைப்பொழுது முழுவதும் உழிச்சல், மெய்ப்பயட்டு மற்றும் அங்க களரி மாலை வேளைகளில் ஆயுதக் களரி. முன்னிரவில் பண்டைய கிரந்தங்கள் மற்றும் பழைய ஓலைகளிலிருந்து புதிய வித்தைகளையும் வழக்கொழிந்த செயல்முறைகளையும் கண்டறிந்து ஆசானும் மாணவர்களுமாக விவாதிப்பது என்று நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

பாட்டி சுந்தரியம்மையின் மனோநிலையைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எப்படியாவது சோணாட்டு வீரர்களிருவரும் கலமறுக்கும் போட்டிகளில் ஜெயித்துவிட வேண்டுமென்று அவர் பகவதியிடம் அன்றாடம் நேர்ந்து கொண்டிருந்தார்.

இந்தக் கட்டத்தில் மலைநாட்டின் எல்லா முக்கியச் சாலைகளிலும் கடைபிடிக்கப்பட்டு வரும் ஒரு பரம்பரைப் பழக்கத்தைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஒரு சாலையின் மூத்த ஆசான்களா ஆச்சாரியர்களோ முப்பது வருடங்களைச் சாலை மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதில் கழித்து விட்டார்களெனில் அவர்கள் தங்கள் அனுபவங்களையும் பிரத்யேகத் தற்காப்பு இரகசியங்களையும் தனியாகப் பனை ஓலைகளில் எழுதி மற்ற ஆசான்களின் பார்வைக்கு அனுப்பி வைக்க வேண்டும். இவற்றுக்குப் 'பூர்வானுபவப்படி '(பூர்வ அனுபவப் படி) என்று பெயர். இந்த அனுபவப்படியின் ஓலைகள் சரிபார்க்கப் பட்டபின் அந்தச் சாலையைச் சேர்ந்த கோயிலின் சரஸ்வதி பண்டாரத்தில்[181] சேர்க்கப்படும்

குறிப்பிட்ட சாலையைச் சேர்ந்த சட்டர்களுக்கு மட்டும்தான் பண்டைய பூர்வானுபவப் படிகளைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கும். இதரச் சாலைகளின் மாணவர்களோ ஆசான்களோ மிகவும் தேவைப்பட்டாலொழிய அவற்றைக் காணமுடியாது இவ்வாறாகக் குறிப்பிட்ட சாலையின் பிரத்யேக சங்கிராம[182] இரகசியங்களெல்லாம் அந்தச் சாலையின் பின்னாள்

---

[181] நூலகம் (அ) ஆவணக் காப்பகம். அந்நாளில் இதுபோன்ற நூலகங்கள் பல்வேறு திருக்கோயில்களிலும் செயல்பட்டு வந்தமைக்குச் சான்றுகள் உள.

[182] சங்கிராம இலக்கணம் என்றால் போர்ப்பயிற்சி முறை என்று பொருள்.

மாணவர்களை மட்டும் பத்திரமாகச் சென்றடைந்தன என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையானது குஹநாதேஸ்வரம் திருக்கோயிலோடு[183] இணைந்த சாலையாகும்[184]. ஒரு காலத்தில் இந்தச் சாலையே அந்தக் கோயிலையொட்டிய பகுதியில்தான் செயல்பட்டு வந்தது. பின்னாளில் அந்தப் பகுதிகளில் போக்குவரத்து மிகவும் அதிகரித்து விட்டதாலும் மருந்துவாழ் மலையின் மூலிகைகள் உழிச்சில் மருத்துவத்திற்குத் தேவைப்பட்டன என்பதாலும்தான் நமது சாலை இங்கே குடிபெயர நேர்ந்தது. ஆக, முறைப்படி பார்த்தால் இந்தப் பெருஞ்சாலையின் பண்டைய பூர்வானுபவப்படிகள் அனைத்துமே குஹநாதேஸ்வரம் திருக்கோயிலின் சரஸ்வதி பண்டாரத்தில்தான் பாதுகாக்கப் பட்டிருக்கவேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக அந்த ஓலைகள் எப்படியோ காணாமற் போய்விட்டன.

சோழ வீரர்களைப் பயிற்றுவித்துக் கொண்டிருந்த நாஞ்சில் நாட்டு ஆசான், மறைந்துவிட்ட இந்தப் பண்டைய ஓலைகளை எப்படியாவது கண்டறிந்துவிடவேண்டும் என்று பெரிதும் முயன்றார். ஏனெனில் கலமறுக்கும் போட்டிகளின் போதுதான் ஒவ்வொரு சாலை மாணவரும் தத்தம் பிரத்யேகப் பயிற்சிகளை வெளிப்படுத்தி மற்றவர்களை வீழ்த்த முயற்சிப்பர். மற்ற பொழுதுகளில் வெளிப் படையாகப் பேசப்படாத பல நுண்ணிய செயல்முறைகளும் பிரயோகங்களும் போட்டிகளின் வாயிலாக வெளிப்படும். குறிப்பாகக் காந்தளூர்ச் சாலையின் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படும் பல பிரயோகங்கள் இரகசியமானவை. காலகாலமாக அவற்றைக் கவனித்து வரும் மற்ற சாலையின் ஆசான்கள் அந்தப் பிரயோகங்கள் வெளிப்படுத்தப்படும் விதத்தைப் பற்றியும் அவற்றின் திய... சுலோகங்களையும் அந்தத் தாக்குதல்களைச் சமாளிக்கும் மாற்றுப் பிரயோகங்களைப் பற்றியும் பூர்வானுபவப் படிகளில் எழுதி வைத்திருப்பார்கள். இந்தத் தகவல்களெல்லாம் புதிதாகப் போட்டிகளில் கலந்து

[183] குமரியம்மன் திருக்கோயிலுககுச் சற்று தள்ளி அமைந்துள்ள பண்டைய சிவாலயம்.

[184] எல்லா சாலைகளுமே ஏதோ ஒரு திருக்கோயிலுடன் தம்மை இணைததுக் கொண்டிருநதது கல்வெட்டுக்களால் புலனாகின்றது.

கொள்ள விழைவோருக்கு இன்றியமையாத பாடங்களாக அமையும்.

இத்தகைய காரணங்களை முன்னிட்டுத்தான் ஆசான் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் பூர்வானுபவப்படி ஓலைகளைத் தேடிக்கொண்டிருந்தார். சோழ வீரர்களும் அவருமாகச் சேர்ந்து பல்வேறு இடங்களில் அலைந்து திரிந்தும் அந்த ஓலைகள் அகப்படவேயில்லை. பாண்டியருக்கும் ஆய்வேள் அரசருக்கும் நிகழ்ந்த போரில் குஹநாதேஸ்வரத்தின் சரஸ்வதி பண்டாரம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு விட்டதென்று ஒரு சாராரும், ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையின் பண்டைய ஆசான் ஒருவரே அதனை எங்கோ மறைத்து வைத்து விட்டாரென்று வேறொரு சாராரும் தமக்கு மனதில் தோன்றிய கதைகளைக் கூறினர். கடைசிவரை அந்த ஓலைகள் கிடைக்காமலே போய் விட்டன. என்றாலும் ஆசானும் வீரர்களும் மனந்தளராமல் முடிந்தவரை தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டனர்.

போட்டிக்கான நாள் வேகவேகமாய் நெருங்கிக் கொண்டிருந்தது.

53. வலியசாலைக் குடும்பம்



"காந்தளூர்ச் சாலையில் கலமறுக்கும் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. நாஞ்சில் நாட்டு ஆசானிடம் சோழ வீரர்கள் பயிற்சி பெற்ற செய்தி எப்படியோ நாலு தளிக்காரர்களுக்குக் கசிந்து விட்டது. இதனைச் சோழ நாட்டிற்கும் மலை நாட்டிற்குமான தன்மானப் பிரச்சனையாகவே கண்ட அவர்கள் போட்டிகளில் வெற்றிபெற எதையும் செய்யச் சித்தமாகி விட்டார்கள். குறிப்பாகக் காந்தளூர்ச் சாலையின் பிரதம ஆசானான பத்மநாப நம்பூதிரி[185] இதில் அளவுக்கதிகமாகவே ஆர்வம் காட்டினார். இவர் அனந்தபுரத்தின் புகழ்பெற்ற

[185] பத்மநாபன எனும பெயா ஆணடாள காலததிலேயே தெனனகததிறகு வந்து விட்டது. "பாழியந்தோளுடை பற்பநாபன்" என்று திருப்பாவையில் மொழிகிறார் அவா.

வலியசாலைக்[186] குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்தக் குடும்பத்தைப் பற்றிய சில பின்னணித் தகவல்களைக் கூறுகிறேன்.

காந்தளூர்ச் சாலையின் ஆச்சாரியார்களைப் பல தலைமுறைகளாக உருவாக்கி வரும் குடும்பம்தான் இந்த வலியசாலைக் குடும்பம். பார்க்கவ இராமனின் கரங்களால் ஷத்திரிய தர்மத்தை நிலைநிறுத்தும் பொறுப்புடன் மூத்த வாள் பெற்ற[187] அந்தணர்கள் நால்வருள் ஒருவராக இக்குடும்பத்தின் மூதாதையரான திரிவிக்கிரம நம்பூதிரி அறியப்படுகிறார். இவர்தான் கேரளத்தின் முதல் தனுர்வேத சாலையான காந்தளூர்ச் சாலையை ஸ்தாபித்தார் என்று அக்குடும்பத்தினர் சொல்லிக் கொள்கிறார்கள். இதனால் இன்றுவரை காந்தளூர்ச் சாலைக்கு வழங்கப்பட்டு வரும் சாலாபோகத்தில் ஒரு பங்கு அவர்களின் குடும்பத்திற்கு நிவந்தமாக வழங்கப்படுகிறது.

வழிவழியாக அந்தக் குடும்பத்தின் பிள்ளைகள்தான் காந்தளூர்ச் சாலையின் பிரதான ஆச்சாரியார்களாக இருந்து வருகிறார்கள். அவர்களுக்குள் நிலவும் தாயாதி முறைகளுக்கு ஏற்ப வருடத்தில் ஒரு நாள் - அதாவது மகரசாந்தியன்று மகாதேவர் அம்பலத்தில் கூடி குடும்பத்தில் வளர்ந்துவரும் ஆண்மக்கள் யார் யார் என்பதையும் அவர்களில் அடுத்த ஆச்சாரியனாக அமரக் கூடிய தகுதி யார் யாருக்கெல்லாம் உள்ளது என்பதையும் விவாதித்து முடிவு செய்வார்கள். அப்போதெல்லாம் வருடாவருடம் கொடுங்கோளூர் பரணியையொட்டிக் கலமறுக்கும் திருவிழா நடைபெறுவதுண்டு. அப்போது நடைபெறும் போட்டிகளில் கலை நாயகங்களாக இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த சட்டர்கள் ஒருவராவது தேர்ச்சி பெற்று விடுவது வழக்கம். இக்குடும்பத்தின் பிள்ளைகளுக்கு மட்டுமே போதிக்கப்படும் ஒரு சில இரகசிய வர்மப் பிரயோகங்கள் அதற்குக் காரணமாகக் கூறப்பட்டன.

[186] இன்றும் திருவனந்தபுரத்தில் காந்தளூர் மகாதேவர் ஆலயம் அமைநதுள்ள பகுதி வலியசாலா எனறே குறிபபிடபபடுகிறது. பணடைய சாலைப் பாரம்பரியங்களெல்லாம் அறவே ஒழிநதுபோய் நகரின் நெரிசல மிகக பகுதியாக இனறு இவவிடம காடசியளிக்கிறது.

[187] மூதத வாள பெறற கைககோளா எனும தொடா கலவெடடுகளில காணபபடுகிறது.

வலியசாலைக் குடும்பத்தைச் சேர்ந்த பத்மநாப நம்பூதிரி காந்தளூரில் ஆச்சாரியாராக இருந்த அதே காலகட்டத்தில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த வேறொரு இளைஞர் வடக்கே மூழிக்குளம் பெருஞ்சாலையில் சட்டராகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார். இவர்தான் பின்னாளில் மிகவும் புகழ் பெற்ற ஆசானாகத் திகழ்ந்த இரவிநீலி பட்டதிரி.

அந்தக் குடும்பத்தில் ஒவ்வொரு தலைமுறையிலும் எவராவது ஒருவர் மிகவும் யோக்யதாம்சங்கள் நிறைந்தவர்களாகத் தப்பிப் பிறப்பார்கள். அப்படிப் பிறந்தவர்களில் ஒருவர்தான் இரவிநீலி மிகவும் புண்ணயமானவர். தனுர்வேத சாஸ்திரத்தை முறைப்படிப் பயின்றவர். சிற்சில இரகசியப் பிரயோகங்களைக் கையில் வைத்துக்கொண்டு ஒரு பண்டைய கல்வி நிறுவனத்தையே தமது குடும்பத்தார் கைக்குள் வைத்திருப்பதை அந்த இளைஞரால் ஏற்க முடியவில்லை. அனந்தபுரத்தின் சூழல் அவரது மனதிற்குப் பிடித்தவாறு அமையாததால் வெகு தூரத்தில் அமைந்திருந்த மூழிக்குளத்துச் சாலையில் தங்கிப் பயின்று கொண்டிருந்தார் அவர்.

கொடுங்கோளூர் பரணிக்கு ஓரிரு மாதங்களே இருக்கும் என்ற நிலையில் சோழ வீரர்களைப் போட்டிகளில் தோற்கடித்தேயாக வேண்டுமாயின் தமது குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் இரவிநீலியை மூழிக்குளத்திலிருந்து காந்தளூர்ச் சாலைக்கு வரவழைத்தே தீரவேண்டுமென்று சபையுளிக்காரர்களிடம் ஆச்சாரியர் பத்மநாப நம்புதிரி விடாப் பிடிவாதம் காட்ட ஆரம்பித்தார். இதற்குப் பின்னால் பல சொந்தக் காரணங்களும் குடும்பக் காரணங்களும் இருந்தன.

முதற் காரணம், முக்கியக் காரணம் தமது குடும்பத்தைச் சேர்ந்த திறமை வாய்ந்த ஒரு இளைஞன் வேறொரு சாலையில் சட்டனாகப் பயிற்சி பெறுவதை பத்மநாபரோ வலியசாலைக் குடும்பத்தாரோ சிறிதும் விரும்பவில்லை. இதனால் தங்களின் தனித்துவமும் கலாச்சாரமும் கெட்டுப் போய்விடுமென்றும் குடும்பத்தின் மற்ற இளைஞர்கள் பாதை மாறுவதற்கும் இது காரணியாகிவிடுமென்றும் அவர்கள் பயந்தார்கள். மேலும் மூழிக்குளத்து ஆச்சாரியருக்கும் பத்மநாபருக்கும் எப்போதும் ஏழாம் பொருத்தம்தான். அவருடைய கட்டளையை மீறித்தான் மூழிக்குளத்தார் இரவிநீலியைச் சேர்த்துக் கொண்டிருந்தார். தனக்கும் தம் குடும்பத்திற்கும் எதிராகத் தம் வீட்டு

இளைஞனின் மனதில் மூழிக்குளத்தார் நஞ்சை விதைத்துக் கொண்டிருக்கிறார் என்பது பத்மநாபரின் வாதம். அதனால் இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த இளைஞனை மீண்டும் தங்களின் பிடிக்குள்ளேயே கொண்டு வந்துவிட வேண்டுமென்று வலியசாலையினர் பெரிதும் விரும்பினர்.

இரண்டாவது காரணம், தமது குடும்பத்திற்கு மட்டுமே தெரிந்த வர்மப் பிரயோகங்களை சோழ வீரர்களுக்கு எதிராக உபயோகித்தால்தான் அவர்களை சர்வ நிச்சயமாகத் தோற்கடிக்க முடியுமென்று பத்மநாபர் கருதினார். இந்தப் பிரயோகங்களைத் தமது குடும்பத்தைச் சேர்ந்த சட்டர்களுக்குக் கற்றுக் கொடுத்து அவர்களைச் சோழர்களுக்கு எதிராக நிறுத்துவதுதான் அவரது திட்டம். துரதிருஷ்டவசமாக, அந்தக் காலகட்டத்தில் வலியசாலைக் குடும்பத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் பிராயத்தில் மிகவும் சிறியவர்களாக இருந்தார்கள். வயது வந்த ஒரு சிலருக்கும் வித்தை கற்கும் அக்கறை அவ்வளவாக இல்லை. இரகசியம் மிகுந்த பரம்பரை வர்மப் பிரயோகங்களை முறைப்படிப் பயின்று அவற்றை எதிராளிக்கு எதிராகப் பிரயோகிக்கும் தகுதியும் ஆற்றலும் படைத்த ஒரே இளைஞர் தமது குடும்பத்தில் இரவிநீலி ஒருவர்தான் என்று பத்மநாபர் தீவிரமாக நம்பினார்.

மூன்றாவது காரணம், காந்தளூரில் தமக்கெதிரான சக்திகள் அணிதிரண்டு கொண்டிருக்கின்றன என்று பத்மநாபர் பயந்தார். சற்று கவனக்குறைவாக இருந்தாலும் பின்னாளில் தமது ஆச்சாரியர் பதவிக்கே ஆபத்து வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்தச் சக்திகள் மேலும் வலிமை பெறுவதற்கு முன் தமது குடும்பத்தைச் சேர்ந்த அடுத்த தலைமுறை இளைஞரைக் கலநாயகமாகத் தேர்வு செய்து 'இவன்தான் எனக்குப்பின் ஆச்சாரியன் ஆகப் போகிறவன்' என்பதைப்போல் உலகிற்கு முன் நிறுத்தி விட்டால் நல்லது என்று அவர் அபிப்பிராயப்பட்டார்.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த நாலுதளிக் காரர்களுக்கோ பத்மநாபரின் பிடிவாதத்திற்குப் பணிவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. ஆச்சாரியாரின் இந்த வேண்டுகோளை ஏற்றால் சோழ வீரர்களை ஜெயித்தேயாக வேண்டும் என்கிற கட்டாயம் அவருக்கு ஏற்படும் என்று அவர்கள் கணக்கிட்டார்கள். மலைநாட்டின் நான்கு சாலைகளுமே நாலுதளிக்குக் கட்டுப்பட்டவையாதலால்

அவர்களின் முடிவுக்கு எதிராக மூழிக்குளத்தாரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இரவிநீலி வேண்டா வெறுப்பாகக் காந்தளூருக்கு வந்து சேர்ந்தார். அவருடைய கோபத்தைச் சரிக்கட்டும் விதமாகப் போட்டிகள் முடிந்தபின் அவர் மிகவும் விரும்பிய பெண்ணையே அவருக்கு மணமுடித்து வைப்பதாகக் குடும்பத்தினர் உறுதியளித்தார்கள்.

சாலையில் அவருக்குப் பயிற்சிகள் தடபுடலாக ஆரம்பமாயின. ஏற்கனவே மூழிக்குளத்தாரிடம் களரிக் கலையைத் தலைகீழாகப் பயின்றிருந்த அந்த இளைஞர், காந்தளூர்க் களரிக்கென்றே அமைந்த பிரத்யேக வீச்சுகளை ஆர்வத்துடன் கற்கலானார்.

மலைநாட்டின் களரிப் பயிற்சி முறைகள் வடக்கன் முறை - தெற்கன் முறை என்று இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். வடக்கன் முறையில் ஆயுதத்தின் பயன்பாடு அதிகம். குறிப்பாக வாள் பயட்டு என்று குறிப்பிடப்படும் வாட்சுழற்சி முறையும் உருமி சுழற்றுதலும் வடக்கன் முறையில் வெகு சிறப்பானவை இதற்கு மாறாகத் தெற்கன் முறையிலோ ஆயுதங்களுக்கு முக்கியத்துவம் தரப்படாமல் கரங்களை மட்டும் உபயோகப்படுத்தி எதிராளியைத் தாக்கும் அங்கைப்பயிற்சி முறைகளுக்கும் வர்மஸ்தானங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

பொதுவாக எல்லா மாணவர்களுக்கும் இரண்டு பயிற்சி முறைகளில் ஏதாவது ஒன்றை மட்டும் கற்பதற்குத்தான் வாய்ப்புக் கிடைக்கும். ஏனெனில் குறிப்பிட்ட சாலையில் ஒரு முறை சட்டதாகச் சேர்வோர் பெரும்பாலும் பயிற்சிக்காலம் முழுவதையும் அங்கேயே செலவழிக்க வேண்டியிருக்கும். இந்த வழக்கத்திற்கு மாறாக இரண்டு சாலைகளில் இரண்டு பிரிவுகளிலும் பயிற்சி பெறும் அபூர்வமான வாய்ப்பு இரவிநீலிக்குக் கிடைத்தது. அதனை அந்த இளைஞர் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். பின்னாளில் இந்த இரு பெரும் பிரிவுகளையும் ஒருங்கிணைத்து . மிகப் புதுமையான பிரயோகங்களை யெல்லாம் உருவாக்கினார் அவர்.

வெகு விரைவிலேயே ஆச்சாரியர் பத்மநாப நம்பூதிரியின் தலைமையில் இரவிநீலிக்குப் பிரத்யேகப் பயிற்சிகளும் ஆரம்பமாயின. தொடுவர்மம், படுவர்மம், தட்டு வர்மம், நோக்குவர்மம், நுனிவர்மம், மெய்தீண்டாக்

காலவர்மம் என்று நுட்பமான பல வர்மப் பிரயோகங்களை இந்தக் கால கட்டத்தில் கற்றுத் தேர்ந்தார் நம்பூதிரி.

காந்தளூரில் நடைபெற்றுக் கொண்டிருந்த இத்தனை விவகாரங்களையும் அறியாதவர்களாய் சோணாட்டு வீரர்கள் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையில் தங்களின் ஆசானுடன் இரவு பகலாகப் பயிற்சியில் மூழ்கி விட்டிருந்தனர். சாலையின் அனுபவப்படிகள் கிடைக்கப் போவதில்லை என்றானதும் பழைய தனுர்வேதக் கிரந்தங்களில் அவர்களது கவனம் முழுவதும் திரும்பி விட்டது. பழைய ஏடுகளைத் தலைகீழாகப் புரட்டி வழக்கொழிந்து போயிருந்த பற்பல பிரயோகங்களையும் அடிமுறைகளையும் மர்மஸ்தானங்களையும் கண்டறிந்து அவற்றில் தேவைக்கேற்ப மாறுதல்களைப் புகுத்திப் பிரயோகங்களைத் தம் வசமாக்கிக் கொள்வதில் மூவருக்கும் போட்டா போட்டியே இருந்தது. இதனால் அவர்களின் வித்தை நாளுக்கு நாள் மெருகேறி பன்மடங்கு விருத்தியடைந்து வருவதைப் பூரிப்புடன் கவனித்து வந்தார் பாட்டி சுந்தரியம்மை.

ஒரு வழியாக போட்டிக்கான நாளும் வந்தது. சோழ வீரர்களும் ஆசானும் போட்டிகளில் கலந்து கொள்ளப் போகும் இதர சாலைகளின் மாணவர்களும் காந்தளூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். முக்கியத்துவம் வாய்ந்த இந்த வைபவத்தைக் காணப் பெருமாளே தமது பரிவாரங்களுடன் நேரில் வந்திருந்தார். கலமறுக்கும் திருவிழா மகாதேவர் அம்பலத்தில் ஆரம்பமானது.

போட்டிகளில் முதலில் நடைபெறும் தகுதிச் சுற்றுக்களில் பங்குபெறும் மாணவர்கள் தனித்தனியாகப் பல்வேறு விதங்களிலும் சோதிக்கப்படுவார்கள். சுழற்சி முறையில் பற்பல சுற்றுக்கள் நடைபெற்று, இறுதிப் போட்டிகளுக்காகப் பத்து மாணவர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

சோழ வீரர்கள் இருவரையும் தகுதிச் சுற்றுக்களிலேயே கழித்துக் கட்டி வீட்டிற்கு அனுப்பி விடுவதுதான் பத்மநாபரின் திட்டம். அதற்காகவே பல கடுமையான சோதனைகளைத் தகுதிச் சுற்றுக்களில் அவர் சேர்த்திருந்தார். ஆனால் அதன் விளைவோ வேறு மாதிரியாக இருந்தது. சீரிய பயிற்சிகளில் பலகாலம் ஈடுபட்டுத் தங்களைச் சரியான முறையில் ஆயத்தப்படுத்திக்கொண்டு வந்திருந்த அந்த

இரண்டு சோழ வீரர்களையும் எந்தச் சோதனைகளிலும் வீழ்த்தவே முடியவில்லை. மாறாக, மற்ற சாலைகளிலிருந்து வந்திருந்த பற்பல தகுதி வாய்ந்த சட்டர்கள் முழுப் போட்டிகளிலும் பங்குகொள்ள முடியாமல் முதல் சுற்றுக்களிலேயே நடையைக் கட்டியதுதான் மிச்சம். குறிப்பாகக் காந்தளூரின் தலைசிறந்த மாணவர்கள் சிலர் தகுதிச் சுற்றுக்களில் தோற்றது ஆச்சாரியரின் தன்னம்பிக்கையை வெகுவாகக் குலைத்தது.

பெருமாளின் கோபம் உச்சக்கட்டத்திற்குச் சென்றது. இந்தப் போட்டிகளில் மட்டும் நாம் ஜெயிக்கா விட்டால் நாலுதளி என்ற அமைப்பே இருக்காது! என்று இறுதி எச்சரிக்கை விடுத்தார் அவர். நாற்தளியினரிடமிருந்து பத்மநாபருக்கும் இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டது. வேறு வழியின்றித் தன்னுடைய இறுதி பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகிக்க முடிவெடுத்தார் ஆச்சாரியர்."

தமது சுற்றுப்புறங்களில் நிலவும் சூழ்நிலைகளை முற்றிலுமாக மறந்து தம்புராட்டியார் விவரித்த அந்தப் பண்டைய நிகழ்வுகளைக் கண்கொட்டாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள் நமது வீரர்கள்.

தம்புராட்டியார் சிறிது நேரம் பேசுவதை நிறுத்திக் கொண்டு நிலைகுத்திய கண்களால் கீழ்வானத்தை நோக்கினார். வானில் ஈசான்ய மூலையில் கருமேகங்கள் சூழ்ந்து நின்றன. பூமியை அந்தகார இருளில் மூழ்கடிக்க முடிவு செய்து விட்டன போலும் அவை.

54. பிரம்மாஸ்திரம்



"முன்னிரவு நேரத்தில் சாலையின் விடுதிகளில் அனைவரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த சமயத்தில் இரவிநீலியை எழுப்பிய ஆச்சாரியர் பத்மநாபர், பெருமாளின் இறுதி எச்சரிக்கையையும் நாலுதளிக்காரர்கள் கொடுக்கும் நெருக்கடியையும் சுருக்கமாக எடுத்துரைத்தார். இரவிநீலிக்கு அவரது பேச்சுக்கள் எதுவும் பிடித்தமானதாக இல்லை. சோழ வீரர்கள் போட்டிகளில் நேர்மையான முறையில் வெற்றி பெற்றால் அவர்களது வீரத்தைக்

கொண்டாடிச் சிறந்த முறையில் கௌரவித்து அனுப்புவதே மலைநாட்டின் பண்பாட்டிற்கு உகந்ததாக இருக்கும் என்பதே அவரது வாதமாக இருந்தது. ஆச்சாரியாரால் அவரைத் தம் வழிக்குக் கொண்டு வரமுடியவில்லை. எனவே நாலுதளிக்காரர்களுள் மிக மூத்த தளிக்காரரை விட்டு அவரிடம் பேசச் சொன்னார் பத்மநாபர்.

அந்த வயதான சிங்கபுரத்துத் தளிக்காரரோ ஆச்சாரியாரைப் போல் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே விஷயத்திற்கு வந்துவிட்டார்.

'இரவிநீலி! இந்த வருடக் கலமறுக்கும் போட்டிகள் தெரிந்தோ தெரியாமலோ கடுமையான அரசியல் சாயத்தைப் பெற்றுவிட்டன. அதனை நீயும் நானும் இனிமேல் சரி செய்ய இயலாது. நாம் இந்தப் போட்டிகளில் ஜெயிக்கவில்லையென்றால் கேரளத்தின் பண்டைய சாலைகள் நான்கிற்குமே ஆபத்து ஏற்படுவது நிச்சயம். அதனை நாங்கள் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க முடியாது. ஆகவே இந்தப் போட்டிகளில் சாம பேத தான தண்டத்தை உபயோகித்தாவது நாம் ஜெயிக்க வேண்டியது அவசியமாகிறது.

அதனால் பத்மநாப நம்பூதிரி கூறப்போகும் வழிமுறைகளுக்கு ஒப்புக்கொண்டு அவற்றின் மூலம் நீ சோழ வீரர்களைத் தோற்கடித்து விட்டாயானால் விஷயம் அத்தோடு சுமுகமாக முடிவடைந்து விடும். ஒருவேளை இந்த ஏற்பாடுகளுக்கு நீ ஒப்புக்கொள்ளவில்லையென்றால் அவர்களின் உயிரை இரகசியமாகப் பறிப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. என்ன செய்வது என்பதை நீயே முடிவுசெய்துகொள்!'

விஷயம் மிகவும் விபரீதமாகிவிட்டதென்பதும் சோழ வீரர்கள் மலைநாட்டாரை நம்பி இந்தக் கலமறுக்கும் போட்டிகளில் கலந்துகொள்ள விழைந்ததே தவறு என்பதும் இரவிநீலிக்குப் புரிந்தது. அந்தச் சிக்கலான நிலைமையில் அவரால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு வேளை தாம் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்ளவில்லையென்றால் அந்த வீரர்களுக்குப் பிராணாபாயமே நேரலாம். அதன் விளைவாகச் சேரருக்கும் சோழருக்கும் போர் மூளும் அபாயமும் உண்டு. அதனால் இவர்கள் கூறும் வழிமுறைக்கு ஒப்புக்கொள்வதைத் தவிர தமக்கு வேறு வழியில்லை

என்பது அவருக்குப் புரிந்தது. வேண்டா வெறுப்பாகத் தமது ஒப்புதலைத் தெரிவித்தார் அந்த நேர்மை மிக்க இளைஞர்.

அகால நேரத்தில் ஆச்சாரியாரின் முன்னிலையில் வலியசாலைக் குடும்பத்தாருக்கு மட்டுமே தெரிந்த பிரத்யேகப் பிரயோகங்கள் அவருக்குக் கற்பிக்கப்பட்டன. குறிப்பாக அவற்றுள் நரசிம்மப் பிரயோகம் என்று குறிப்பிடப்படும் ஒரு வகையான வர்மத்தாக்குதல் மிக விஷேசமானது. பல சமயங்களில் உயிரையே பறிக்கக் கூடியது. தமக்கோ தமக்கு மிகவும் நெருங்கிய இரத்த சம்மந்தம் உடையவர்களுக்கோ பேராபத்து நேர்ந்தாலொழிய அதனை ஒரு போதும் பிரயோகிக்கவே கூடாது என்று கண்டிப்பான விதிமுறைகள் இருந்தன. சாதாரணமாக ஒரு ஆச்சாரியர் தமது மரணப் படுக்கையில் தனக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய மாணவர்களுக்கு மட்டும்தான் அதனைச் சொல்லிக் கொடுப்பார்கள் என்று இரவிநீலி கேள்விப் பட்டிருக்கிறார். மிக மிக இரகசியமான அந்தப் பிரயோகத்தை ஆச்சாரியார் அந்தப் பின்னிரவு நேரத்தில் தமக்குக் கற்பிக்க முனைவதைக் கண்டு குழப்பத்தில் ஆழ்ந்தார் அவர்.

'ஆச்சாரியரே! எதற்காக இதனை இந்தச் சமயத்தில் கற்றுக் கொடுக்கிறீர்கள்? பிராணாபாயத்தின்போது மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டிய பிரயோகமல்லவா இது? கலமறுக்கும் போட்டிகளிலெல்லாம் இதனைப் பயன்படுத்துவது தவறல்லவா?'

'வேறு வழியில்லை இரவி. மற்றப் பிரயோகங்களெல்லாம் பயனளிக்காமல் போய்விட்டால் இந்தப் பிரயோகத்தைப் பயன்படுத்துவதைத் தவிர உனக்கு வேறு வழியேயில்லை. அதனால்தான்—'

'ஐயோ, ஆச்சாரியரே! போட்டிகளின்போது இதனைப் பிரயோகித்தால் அதனால் நமக்கும் நமது குலத்துக்கும் பெரும் பாவமல்லவா வந்து சேரும்?'

'உண்மைதான். அதனால் முடிந்தவரையில் இதனைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துவிடு. ஒரு வேளை மற்ற வழிகள் அனைத்தும் அடைபட்டு வேறு வழியேயில்லை என்ற நிலை ஏற்பட்டால் மட்டும்—'

ஆச்சாரியார் நரசிம்மப் பிரயோகத்தைப் பற்றிய மிக மிக முக்கியமான தகவலொன்றை இரவிநீலியிடமிருந்து

அப்போது மறைத்து விட்டார். அது நீலிக்கே பலப்பல வருடங்கள் கழித்துத்தான் தெரிந்தது...”

தம்புராட்டியார் ஓரிரு கணங்களுக்கு தனது பேச்சை நிறுத்திக் கொள்ள, அந்தச் சிறிய இடைவெளியைத் தாங்க மாட்டாதவர்களாய் நண்பர்கள் இருவரும் “என்ன தகவல் அது?” என்று ஒரு சேர வினவினார்கள்.

“உன்னிகளா! நடந்த நிகழ்வுகளை நான் வரிசைக் கிரமமாகச் சொல்லிக்கொண்டு போவதால் அதனைப் பின்னால்தான் தெரிவிக்க வேண்டும். அதனால் தொடர்ந்து காந்தளூரில் நடந்ததைக் கேளுங்கள்.

முன்னிரவிலும் பின்னிரவிலுமாக நடந்த பலப்பல நாடகங்களை அறிந்திராத நாஞ்சில் நாட்டு ஆசானும் சோழ வீரர்களும் மறுநாள் உற்சாகமாக மைதானத்தை அடைந்தார்கள். முதல்நாள் நடைபெற்ற தகுதிச் சுற்றுக்களில் வென்ற பத்திருபது வீரர்களுக்கு இடையிலான கடுமையான போட்டிகள் துவங்கின. துவந்த யுத்தங்களும், வாள் பயட்டும்[188], மெய்ப்பயட்டும், உருமிப்பயட்டும் நடைபெற்றன. பெரும்பாலான போட்டிகளில் மற்ற சட்டர்களுடன் சோழ வீரர்களும் வெற்றி பெற்று வந்தது தளிக்காரர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தது. ஆனால் பார்வையாளர்களில் பலர் - குறிப்பாகக் காந்தளூரின் பண்டைய சட்டர்கள் முதலியவர்கள் - சோழர்களின் வீரத்தை மனமாற மெச்சிப் புகழ்ந்தார்கள்.

இறுதியாக நான்கு பேர் மட்டுமே போட்டிகளில் தேறினார்கள் அவர்களில் இருவர் சோழ வீரர்கள். மற்ற இருவரில் ஒருவர் இரவிநீலி. மற்றவர் பார்த்திவசேகரபுரத்துச் சட்டர். இப்போது இந்த நால்வரும் இரு அணிகளாகப் பிரிந்து ஒருவரோடொருவர் மோதியாக வேண்டும்.

இந்த நிலையில், இரண்டு சோழ வீரர்களையும் ஓரணியில் சேர்த்து அந்த அணி வெற்றிபெற்று விட்டால் மலைநாட்டிற்கே அவமானமாகிவிடும் என்று கருதிய தளிக்காரர்கள், இரு அணிகளிலும் சோழ வீரர் ஒருவரும் மலைநாட்டு வீரர் ஒருவருமாக இடம்பெறுமாறு பார்த்துக் கொண்டார்கள். அந்தி சாயும் நேரத்தில் மகாதேவர்

---

[188] பயற்று என்னும் தமிழ்ச்சொல்லே பயட்டு எனத் திரிந்து வழங்கப்பட்டது. இச்சொல் இன்றும் கேரளத்தில் வழக்கில் உள்ளது.

அம்பலத்தில் சாயரட்சை பூஜைக்கான மணியோசை கேட்குமுன் கலமறுக்கும் போட்டிகள் முடிவடைந்துவிட வேண்டுமாதலால் அப்போது நடைபெறப் போவதே இறுதிச்சுற்று என்றும் தெரிவிக்கப்பட்டது.

உக்கிரம் நிறைந்த அந்த இறுதிப் போட்டிகள் ஆரம்பமாயின. இரு அணிகளாகப் பிரிந்து நின்ற சோழ வீரர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளாமல் எதிரணியிலிருந்த மலைநாட்டு சட்டரைத் தாக்குவதில் முனைந்தனர். வெகு வேகமாகவும் வீரியமாகவும் நடைபெற்ற வீச்சுக்களில் இரண்டு அணிகளுமே தலா ஒரு வீரரை விரைவில் இழந்துவிட்டன. இறுதியாக மைதானத்தில் நின்றது குருகாடிக் கிழாரும் இரவிநீலியும் மட்டும்தான்.

இளைஞரான இரவிநீலிக்கோ களைப்பு மிக அதிகமாக இருந்தது. முதல் நாளிரவு கண்விழித்திருந்ததுதான் அதற்குக் காரணம் என்பது புரிந்தது. அவரது சக்தி வேகமாக விரயமாகிக் கொண்டிருந்தது. அவரை எதிர்த்து நின்ற குருகாடிக் கிழாரோ உற்சாகமாகவே காணப்பட்டார். வேறு வழியில்லை. விரைவில் மயக்கம் சூழ்ந்துவிடும் என்ற நிலைமையில் நரசிம்மப் பிரயோகத்திற்கான தியான சுலோகத்தை உச்சாடனம் செய்யத் துவங்கினார் இரவிநீலி. ஆனால் அந்த இக்கட்டான நிலைமையிலும் யுத்த தர்மத்தையும் குல தர்மத்தையும் அவர் சிறிதும் கைவிட நினைக்கவில்லை என்பதுதான் அவரின் சிறப்பு!

‘தெய்வமே! வேறு வழியில்லாமல் தவறான சூழலில் இந்தப் பிரயோகத்தைப் பயன்படுத்துகிறேன். இதனால் என் எதிரே நிற்கும் வீரருக்கு பாதிப்பு அதிகம் இல்லாமல் நீதான் காக்க வேண்டும்!’ என்று பிரார்த்தனை செய்தபடியே கிழாருக்கு எதிராக நரசிம்ம ஆகர்ஷணத்தைக் கணநேரம் பிரயோகித்தார் அவர்.

வழக்கமாக நரசிம்மப் பிரயோகத்தைப் பிரயோகிப்பவரால் கட்டுப்படுத்தவே முடியாது. அந்த மாபெரும் சக்தியை உருவாக்கிவிட்டால் பின் அதன் வேகத்தை மட்டுப்படுத்துவது கடினம். ஆனால் சர்வ வல்லமையும் ஈடுபாடும் கொண்ட அந்த இளைஞர் தெய்வ அனுக்கிரகத்தினால் அன்று அதன் வேகத்தைக் பெரிதும் மட்டுப்படுத்திப் பிரயோகித்தார். பின்னாளில் தன் அனுபவத்தை வைத்து அதே பிரயோகத்தை உத்தமம், மத்திமம், அதமம் என்று மூன்று கதிகளாக அவர் வகுத்தார்.

எதிர்பார்த்தபடியே குருகாடிக்கிழாரை அந்தப் பிரயோகம் கடுமையாகத் தாக்கிற்று. பிராணாபாயம் நேரவில்லையே தவிர அவரது நாடி நரம்புகளை அது மிகக் கடுமையாகப் பாதித்து விட்டது. ஒரு வகையில் உயிர் பிரிவதை விடக் கொடுமையான நிலை அது அனுபவித்தவருக்கு மட்டும்தான் அது புரியும்....”

தம்புராட்டியாரின் கண்களிலிருந்து ஏனோ தாரை தாரையாகக் கண்ணீர் பெருக ஆரம்பித்தது. அதிர்ச்சியுடன் நண்பர்களிருவரும் பிஷுவை நோக்கினார்கள்.

“அக்காவும் அதைப் போன்றே நரம்புகளைத் தாக்கும் ஒரு வகைப் பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்தான். அதனால்தான் அவர் தமது பார்வையையே இழக்க நேரிட்டது!” என்றார் பிஷு ஆனந்த தேரர் மிகவும் கம்மிய குரலில்.

நாற்புறங்களிலும் மிகவும் கனமான அமைதி கவிந்து நின்றது. ஈசான மூலையில் முன்பு ஒடுங்கிப் போய் நின்றிருந்த கருமேகங்கள் இப்போது தைரியமாய் வெளிவந்து சூரியனையே மறைத்துக் கொண்டு நின்றன. தூறல் மெல்லத் துவங்கி, விரைவில் பெருமழையாகி “சோ!” வென்று கொட்டத் துவங்கியது.

55. பொழுது விடிந்தது



பனி சூழ்ந்த இரவு நேரத்தில் இலக்கற்று ஓடிக்கொண்டிருக்கிறான் அவன். அந்தப் பிரம்ம இராட்சதமும் விடாமல் நீண்ட நேரமாக அவனைத் துரத்திக் கொண்டிருக்கிறது. சுற்றிலும் படர்ந்திருக்கும் இருட்டில் அதன் உருவத்தைக்கூட அவனால் சரிவர கவனிக்க முடியவில்லை. நீண்டு படர்ந்து தொங்கும் அதன் ஜடாபாரம் ஒரு கணம் காட்சிக்குப் புலனாகும். அடுத்த கணம் அதன் கைகளில் மின்னும் ஒளிச்சவுக்கு புலனாகும். சுளீர்! சுளீர்!

சவுக்கைச் சொடுக்கியபடி தன்னுடைய நீண்ட கால்களினால் அடி மேல் அடி வைத்து அது அவனைத் துரத்திக் கொண்டிருக்கிறது அவனுடைய கரங்களில் அந்த சமயம் பார்த்து ஆயுதங்கள் எதுவுமில்லை. அப்படியே

இருந்தாலும் ஏழு பனை உயரத்திற்குக் காட்சி தரும் அந்த இராட்சதத்தை எந்த ஆயுதத்தால் கொல்வது? ஆக ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஹூம்.. ஹூம்.. என்று மூச்சிறைக்க இன்னும் எத்தனை நேரம்தான் ஓடிக் கொண்டிருப்பது? என்று வியந்தபடியே ஒரு கணம் நிதானித்தான்.

‘சுளீர்!’

அந்தச் சவுக்கின் நுனி அவன் முதுகைக் கோரமாகக் கிழிக்க, மீண்டும் ஓட்டம். அப்போதுதான் அவனுக்கு ஒன்று புரிந்தது. அந்த இராட்சதத்தின் இலக்கு அவனை ஓட ஓட விரட்டுவதேயன்றிப் பிடிப்பதல்ல. தன்னைப் பார்த்து பயந்து ஓடுவதை அது ஏகத்துக்கு இரசிக்கிறது போலும். ஒரு கணம் நின்றாலும் சவுக்கால் விளாசல்.

தன் சக்தியையெல்லாம் ஒன்று திரட்டி ஓட்டத்தில் வேகம் பிடித்தான். கண்காணாத தூரத்திற்குச் சென்றுவிட வேண்டும். சிறிது தூரம் தள்ளிச்சென்று விட்டோமானால் சூழ்ந்திருக்கும் இந்த இராக்காலப் பனியில் அந்தக் கிழட்டு இராட்சதத்திற்குக் கண்ணும் தெரியாது, ஒரு மண்ணும் தெரியாது! விடு விடுவென்று ஓடியவன் ஒரு கட்டத்தில் தன் கண்முன்னர் விரிந்த பாதை முடிந்து போய்க் கிடு கிடு பள்ளம் விரிவதைக் கவனிக்காமல் காலை வைத்து....

ஐயோ!

வியர்வை சொட்டச் சொட்டப் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான் ஐங்கரன். உடல் இன்னமும் நடுநடுங்கிக் கொண்டிருந்தது. முதல் நாளிரவு புரவி இலாயத்தில் நடந்த சம்பவங்களனைத்தும் புகை மூட்டமாகக் கண்ணுக்குள் விரிந்தன. தலை கிறுகிறுவென்று சுற்றியது.

சற்றே தலையை உயர்த்தி அண்ணாந்து பார்த்தான். வீட்டின் மேல் சாளரத்தில் மிக மெல்லியதாக ஒளி பரவிக் கொண்டிருந்தது. விடியும் நேரம்தான். எழுந்து ஸ்நான பானங்களை முடித்துக்கொண்டு நேராக இராஜராஜ பிரம்மமாராயரைச் சந்தித்து நடந்த விஷயங்களனைத்தையும் சொல்லிவிட்டு....

பிரம்மமாராயர் தாம் சொல்லப்போவதைப் பொறுமையுடன் கேட்கப் போகிறாரா என்ன? ஒரு வரி சொல்லி முடிப்பதற்குள் ஓராயிரம் குறுக்குக் கேள்விகள் புறப்படும்

அந்த ஜடாமகுடன் எப்படி இலாயத்திற்குள் வந்தான்? ஏதோ மண்டபத்தின் மீதேறி வந்ததாகக் குறிப்பிட்டாயே? அந்த மண்டபம் எங்கு எந்த மாளிகையில் முடிகிறது? அங்கு யார் இருக்கிறார்கள்? இருக்கும் இடங்களை யெல்லாம் விட்டுவிட்டு அந்தப் புரவி இலாயத்தில் ஏன் அந்தச் சந்திப்பு நடைபெற வேண்டும்? அந்த இடத்தைச் சரிவரக் கண்காணித்தாயா? நேற்றிரவு மட்டும்தான் அந்தச் சந்திப்பு நடந்ததா? அல்லது அவ்வப்போது தொடர்ச்சியாகப் பல சந்திப்புக்கள் நிகழ்கின்றனவா? ஜடாமகுடன் எந்த இரகசிய வழியாகக் கோட்டைக்குள் வந்தான்? எப்படி வெளியேறுகிறான்? எத்தனை நாட்களுக்கு ஒரு முறை கோட்டைக்குள் வருகிறான்? இப்படி ஆயிரமாயிரம் கேள்விகள்..... அப்பப்பா!

ஒரு சில கேள்விகளுக்கு உடனடியாக பதில் சொல்ல முடியாதுதான். ஆனால் அந்த இடம்? அபிமான தொங்கல் திருவீதிக்கும் இராஜகம்பீரன் திருவீதிக்கும் இடைப்பட்ட அந்த இடம்? அதிகம் புழக்கத்திலில்லாத அன்பில் திருமாளிகை?? அதற்கும் வீரசோழன் திரு மாளிகையில் புரவி இலாயத்திற்கும் உள்ள நெருக்கம்???

மாராயரை சந்திக்கச் செல்லுமுன் ஒரு நடை அந்த இடத்திற்குச் சென்றுவிட்டு வந்தால் என்ன? இருட்டில் புலப்படாத பல விஷயங்கள் அதிகாலை வெளிச்சத்தில் புலப்படுமே? மெல்லத் தோன்றிய எண்ணம் சில கணங்களில் அவன் மனதை ஆக்கிரமித்துவிட்டது. யார் கண்டது? இந்த நேரத்தில் அங்கு சென்றால் ஒரு சில அரிய தடயங்களோ பாதச்சுவடுகளோ தென்படலாம். பின்னால் அவை நமக்கு உபயோகப்படலாம்.

"அத்தனை தூரம் அவர்களை நெருங்கிவிட்டு இப்படியா கோட்டை விடுவாய்?" என்கிற மாராயரின் உறுமல் அவன் காதுகளில் ஒலித்தது. நிச்சயம் கனவில் வந்த அந்த பிரம்ம இராட்சதம் அவராகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் அவருக்குத்தான் எந்நேரமும் அவனை விரட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்று தோன்றும். எந்நேரமும்!

திருவீதிகளில் மனிதர் நடமாட்டம் ஆரம்பிப்பதற்கு முன் அங்கு சென்றுவிட்டு வருவது நல்லது என்று முடிவெடுத்தவன் மளமளவென்று எழுந்தான். புழக்கடைக் கிணற்றில் நீர் சேந்தி உச்சந்தலையில் பளிச் பளிச்சென்று ஊற்றிக் கொண்டான். உடலில் பரபரவென்று சுறுசுறுப்பு

ஏறியது. விரைவில் உடைமாற்றிக்கொண்டு தன்னுடைய வெண்புரவியில் ஆரோகணித்தான்.

நடமாட்டங்களை இன்னமும் துவக்கிவிடாத தஞ்சைப் பெருநகரின் திருவீதிகளில் அனாயசமாகப் புரவியைச் செலுத்திக் கொண்டு போனான்.

* * * * * * * *

ஐங்கரனைப் போன்ற ஒற்றர்கள், வாழ்வில் பல சிறிய பெரிய தியாகங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. ஓரிடத்தில் நில்லாமல் அங்குமிங்கும் பயணப்பட்டுக் கொண்டிருப்பதால் எந்த இடத்திலும் நிம்மதியாகக் காலத்தைக் கழிக்க முடியாது. வாழ்வின் அழகான சந்தோஷங்கள் பலவற்றையும் அவர்கள் இழக்க நேரிடுகிறது.

ஐங்கரனுக்குத் தஞ்சையைப் பற்றியும் தன்னுடைய இளவயது நாட்களைப் பற்றியும் கவர்ச்சிகரமான நினைவுகள் பல மிச்சமிருந்தன. அவன் பிறந்து வளர்ந்த காலத்தில் காட்சியளித்த தஞ்சை நகரமே வேறு. இன்று இடம் பெருத்துப்போய் நெரிசல் மிக்க நகரமாக விளங்கும் இந்தப் பெருநகரே வேறு. நிதானம் மிகுந்த அந்த உலகிற்கும் பரபரப்புடன் இயங்கும் இந்த உலகிற்கும் ஆயிரம் வித்தியாசங்கள் உண்டு. உள்ளாலைக்குள் கூட்டம் மிகுதியாகிவிட்டதென்று புறம்படி உருவாக்கப்போய் இன்று புறம்படியிலும் நெரிசல் மிகுதியாகிவிட்டது. இனி வேறு எங்குதான் செல்வது?

அவனுடைய இளவயதுத் தோழர்கள் பலரும் தஞ்சையிலேயே உரிய பிராயத்தில் திருமணம் செய்து கொண்டு குழந்தை குட்டிகள் என்று ஓய்ந்திருந்தார்கள். ஒருவன் திருபுவனமாதேவிப் பேரங்காடியில் சங்கரப் பாடியாராக எண்ணை வியாபாரம் செய்து வருகிறான். இன்னொருவன் அரண்மனைக்கருகில் போர் வீரர்களுக்கான ஆயுதங்கள் விற்று வருகிறான். வேறு இருவர் கைக்கோளர்களாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். தஞ்சைக்கு வரும்போதெல்லாம் இவர்கள் அனைவரையும் சென்று சந்திப்பது வழக்கம்தான். ஆனால் கடந்த சில மாதங்களாக அதுவும் வழக்கொழிந்து போயிற்று ஏனெனில் எவரைச் சந்தித்தாலும் அவர்கள் முகத்தில் பெருந்துக்கத்தை வரவழைத்துக் கொண்டு "என்னடா! இன்னுமா நீ திருமணம் செய்துகொள்ள

வில்லை?" என்றுதான் பேச்சைத் துவங்குகிறார்கள். இந்த அவலமே வேண்டாமென்றுதான் அவர்களைப் பார்ப்பதையே சில காலமாகத் தவிர்த்து வருகிறான்.

திருமணமா? தனக்கா? அதுவும் இந்த ஜென்மத்திலா? நடந்தாற் போலத்தான். அவனுக்கும் ஒரு மாமன் மகள் இருக்கத்தான் செய்தாள். ஆனால் ஒரு மாதம் இவன் தலையைக் காட்டுவதும் அடுத்த பல மாதங்களுக்கு மாயமாய் மறைந்து விடுவதுமாகவும் இருந்ததால் நமக்கேன் வம்பு என்று உள்ளூரிலேயே விவசாயி ஒருவனின் கையைப் பிடித்து விட்டாள். இன்று பல சுற்றுக்கள் பெருத்து நான்கு குழந்தைகளுக்குத் தாயாகி நிற்கிறாள். என்றாவது ஒரு நாள் போய்ப் பார்க்க வேண்டும்.

மாராயர் சிறு வயதிலிருந்து தன்னை ஆதரவு கொடுத்து வளர்த்திருக்கவும் வேண்டாம். பின்னால் இப்படி நாய் அலைச்சல் அலைய வைத்திருக்கவும் வேண்டாம். சேச்சே. இதுவும் ஒரு பிழைப்பா? இப்படியும் ஒரு வாழ்க்கை தேவைதானா?

யோசித்துக்கொண்டே வந்ததில் அபிமானதொங்கல் திருவீதி வந்துவிட்டது. முந்தைய நாளிரவு வீதியில் கடை விரித்திருந்த சிறு கடைக்காரர்கள் பலரும் தத்தம் கடைகளிலேயே ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தார்கள். இரவு நீண்ட நேரம் வியாபாரம் நடத்திய களைப்புப் போலும். இப்படியே இரண்டு மூன்று நாட்கள் வியாபாரத்தில் ஈடுபட்டுவிட்டு ஊர்ப்பக்கம் போய்ச் சேர்ந்து விடுவார்கள். பிறகு அதே இடத்தில் வேறு ஊர்க்காரன் எவனாவது கடை விரிப்பான். அந்த வியாபாரத்திற்கும் இரண்டு மூன்று நாட்கள்தான் உயிர். பின்பு காவலர்கள் விரட்டி விடுவார்கள். இப்படித் தஞ்சையைச் சூழ்ந்துள்ள பல ஊர்களிலிருந்தும் கிளம்பி வரும் சிறு வியாபாரிகள் புழங்கும் ஒரே இடமாக அபிமானதொங்கல் திருவீதி துலங்கியது. வெவ்வேறு விதமான பொருட்களும் குறைந்த விலையில் விற்கப்பட்டதால் நகரின் பொது மக்களிடையிலும் அது மிகுந்த 'அபிமான'த்திற்குரிய திருவீதியாகவே விளங்கியது.

இப்படிப் பழைய ஞாபகங்களை அசை போட்டவாறு நாளங்காடிக் கடைகளையும் அல்லங்காடிக் கடைகளையும் கடந்தான் ஐங்கரன். முன்பு இந்தத் திருவீதியின் தென்முனையில் ஒரு ஆப்பக்காரக் கிழவியின் கடை

இருந்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. அங்குதான் நண்பர்களும் அவனுமாக மாலை வேளைகளில் கூடுவது பழக்கம் அதிகாலை துவங்கி நள்ளிரவு வரை கிழவியின் கடையில் வியாபாரம் சுறுசுறுப்பாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கும். வெளியூர்க்காரர்கள் பலரும் மொய்க்கும் அந்தக் கடையில் உள்ளூர் ஆட்களும் அவ்வப்போது வருகை தருவதுண்டு. சமயத்தில் வெளியுர்க்காரர்கள் தத்தம் பெண்டு பிள்ளைகளையும் தஞ்சை நகரைச் சுற்றிக் காண்பிக்கும் ஆசையில் கூட்டிக்கொண்டு வந்திருப்பார்கள். அந்தப் பிள்ளை மட்டும் சற்று கண்களுக்கு இலட்சணமாக அமைந்து விட்டால் போதும். அவ்வளவுதான். ஐங்கரனும் நண்பர்களும் தத்தம் பணிகளுக்கு அரை நாள் ஒரு நாள் என்று அவசரத்துக்குத் தக்கபடி விடுப்புக் கொடுத்துவிட்டுத் திருவீதியிலேயே சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

இவ்வாறு அவனது வாழ்க்கையில் ஒரு காலகட்டத்தில் முக்கிய இடத்தை வகித்த அந்த ஆப்பக்கடை இருக்குமிடத்தை அவன் கண்கள் தேடின.

நல்லவேளை. கடை பத்திரமாகத்தான் இருந்தது. ஆனால் கடையை நடத்திக் கொண்டிருந்த ஆள்தான் மாறி விட்டது. முன்பு கிழவியிருந்த இடத்தில் மத்திம வயதுடைய பெண்ணொருத்தி நின்று கொண்டு விறகுகளின் கரிக்கால்களை அடுப்பில் சொருகிக் கொண்டிருந்தாள். கிழவியின் பெண்ணாக இருக்கலாம். நெருப்பு வஞ்சனையில்லாமல் திகுதிகுவென்று கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

"வாருங்கள் ஐயா! இன்னும் இரண்டு நிமிடங்களில் ஆப்பங்கள் வெந்துவிடும். சூடாக இஞ்சிப் பானகம் உள்ளது. அருந்துகிறீர்களா?" - அதே பழைய பல்லவி. பழைய வரவேற்பு. சந்தேகமில்லை. இவள் கிழவியின் பெண்தான்.

"கொடுங்கள். ஆப்பங்களை வாழை இலையில் கட்டித் தந்து விடுங்கள். நின்று உணவருந்த நேரமில்லை" என்றான் புன்னகையுடன். அடுத்த சில நிமிடங்களில் காய்ந்த வாழையிலை மட்டைகளில் சூடான வெண்ணிற ஆப்பங்கள் அவனது கரங்களை வந்தடைந்தன. ஏதோ தோன்றவே மாடைகளுக்குப் பதிலாக ஒரு முழு பொற்கழஞ்சை அவள் கரங்களில் திணித்தான். திரும்பிப் பாராமல் வந்து புரவியில் ஏறி அதனைத் தட்டிவிட்டான்.

முதுகுக்குப் பின்னால் மெல்லிய அரவம் கேட்டது. இல்லையம்மா. எனக்கு மிச்சம் தேவையில்லை. வாழ்வில் செல்வம் கணிசமான அளவிற்குச் சேர்ந்து விட்டது ஆனால் சந்தோஷம்தான் பறிபோய்விட்டது. ஒரு கால கட்டத்தில் உன் கடை கொடுத்த சந்தோஷத்திற்கு இந்த ஒரு பொற்கழஞ்சு ஈடாகாது. அதனால் அதனை நீயே வைத்துக் கொள்!

புரவியைக் கால்களால் ஒரு அழுத்து அழுத்தியதில் அது படுவேகமாகப் பாய்ந்தோட, சில நிமிடங்களிலேயே அவன் நுழைய வேண்டிய சிறு சந்து வந்து விட்டது. இரண்டு பெருமாளிகைகளுக்கிடையே கிழக்கில் பிரியும் இருட்டு மிகுந்த சிறு வழி. இந்த வழியில் நடந்து சென்று தான் நேற்றிரவின் நாடகங்களை கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறிய.. இல்லையில்லை, ஒற்றறிய முடிந்தது

அந்தக் குறுகிய சந்தில் புரவியை விட்டுக் கொண்டு செல்வது சிலாக்கியமானதல்ல என்று தோன்றியதால் திருவீதியின் முனையில் தெரிந்த நுந்தா விளக்குக் கம்பமொன்றில் அதன் கடிவாள முனையைக் கட்டி முடிச்சிட்டான். "பிளீ.....ஹி..!" என்று எதையோ சொல்லி வாயெடுத்த புரவியைத் தட்டிக் கொடுத்து அமைதிப் படுத்தினான். குறுக்குப் பாதையில் நடக்கத் துவங்கினான்.

* * * * * * * *

முதல் நாளிரவு நடந்து வந்த பாதையை அனுமானிப்பதில் அதிகச் சிரமங்கள் ஏற்படவில்லை விரைவிலேயே வீரசோழன் திருமாளிகையின் புரவி இலாயம் வந்து விட்டது. அங்கே தான் ஒளிந்து கொண்டிருந்த மண்டபத்தையும் அதன் மேற்பகுதியையும் ஆராய வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. அதன் மேலிருந்தல்லவா அந்த ஜடாமகுடம் உள்ளே குதித்தது! அப்படியானால் அது எங்கிருந்து வந்திருக்கும்?

இலாயத்தின் மதிலில் ஆங்காங்கே நீட்டிக்கொண்டிருந்த பெருஞ்செங்கற்களில் கால் வைத்துத் தலையை நீட்டி நோக்கினான். உள்ளே நடமாட்டங்களெதுவும் தென்படவில்லை. கண்ணுக்குத் தென்பட்ட ஓரிரு புரவிகள் கூட முதல் நாளிரவு உறங்காமல் கொட்டமடித்துவிட்டு விடியல் நேரத்தில் தூங்கி வழிந்து கொண்டிருந்தன. அதோ! அவன் முதல் நாளிரவு ஒளிந்து கொண்டிருந்த நாற்ற

பிடித்த மண்டபம். அட! அந்த மண்டபத்தின் மேற்புறத்தில் பிரம்மாண்டமானதொரு விருட்சத்தின் கிளைகள் மிகத் தாழ்வாகப் படர்ந்திருக்கின்றனவே? முதல் நாள் இருள் அதிகமாக இருந்ததால் அந்தக் கிளைகள் கண்களுக்குப் படவில்லை. ஆக, அந்த மரத்தின் மீதேறிக் கிளைகள் வழியாகத்தான் ஜடாமகுடம் இலாயத்திற்குள் இறங்கியிருக்க வேண்டுமென்பது புலனாகிறது. அந்த விருட்சம் எங்கிருந்து புறப்படுகிறது என்பதைக் கண்டறிந்தாக வேண்டும்.

சற்று உள்ளடங்கியிருந்த கிளைகளை கவனித்துக் கொண்டே வந்ததில், அந்தப் பெரிய மருதமரம் அருகிலிருந்த அன்பில் திருமாளிகையின் பின்கட்டில் வளர்ந்து செழித்திருந்த மரங்களுள் ஒன்று என்பது தெரிந்தது. ஆகவே அன்பில் திருமாளிகையிலிருந்து புறப்பட்டுத்தான் அந்த உருவம் மரத்தின் மீதேறி புரவி இலாயத்திற்குள் இறங்கியிருக்க வேண்டும். அன்பில் திருமாளிகை. புழக்கம் அதிகமற்ற அன்பில் திருமாளிகை!

இராஜகம்பீரன் திருவீதியில் சென்று முடியும் அம்மாளிகையின் முன் பகுதிகள் அன்பில் ஆதுலர் சாலையாகச் செயல்பட்டு வந்ததை ஐங்கரன் அறிவான். ஆனால் இடிந்து விழுந்து கிடக்கும் அம்மாளிகையின் பின் பகுதிகள் அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதல் பாழடைந்துதான் கிடக்கின்றன. அப்படியெனில்? அந்தப் பாழடைந்த பகுதிகளைத்தான் ஜடாமகுடன் தனது இரகசியப் போக்குவரத்துக்கு உபயோகித்துக் கொள்கிறானா?

நெரிசல் மிகுந்த தஞ்சையில் பெருந்தரத்து அதிகாரிகள் வசிக்கும் பகுதியில் இப்படியொரு பாழிடம் அமைந்துள்ளது சதிகாரர்களுக்கு எத்தனை வசதியாகப் போய்விடுகிறது? நம்மைப் போன்ற சோழராஜாங்க ஒற்றர்கள் தஞ்சையில் இது போன்று எத்தனை இடங்கள் உள்ளன என்பதைக் கணக்கெடுத்து அப்பகுதிகளைத் தொடர்ந்து நோட்டமிட்டுக் கொண்டிருந்தாலே போதும் போலிருக்கிறதே?

மதிலிலிருந்து கீழிறங்கி அன்பில் திருமாளிகையை நோக்கி நடக்கத் துவங்கினான் ஐங்கரன். இந்தப் பகுதிகளை ஆராய்வதற்கு இதுவே சரியான தருணம். ஒரு முறை நந்தவனப் பகுதிகளைப் பார்வையிட்டு விட்டு வந்து விட்டோமானால் அங்கு ஏதாவது தொடர் போக்குவரத்து

நிலவுகிறதா இல்லையா என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு விடலாம்.

அன்பில் திருமாளிகையின் பெருமதில்கள் தம்முடைய பழைய நாட்களின் நினைவுகளை அசை போட்டபடி மெல்லச் சிதைந்து கொண்டிருந்தன. ஒரு சில இடங்களில் தகர்ந்தும் வேறு சில இடங்களில் செடி கொடிகளுக்கு வழிவிட்டும் காணப்பட்ட பழம்பெரும் மதிலின் வழியாகப் பின்கட்டுக்குள் நுழைவதில் அவனுக்குச் சிரமங்களேதுவும் ஏற்படவில்லை. ஆங்காங்கே காடாய் மண்டிக்கிடந்த முட்செடிகள் அவ்வப்போது அவனது கைகால்களில் இரத்தக் கீறல்களிட்டன. ஆனால் அவற்றால் அவனது மன உறுதியைக் குலைக்க முடியவில்லை. நேராக மருத மரத்தடியை நோக்கி நடந்தவன் அந்தப் பகுதிகளில் பாதச்சுவடுகள் ஏதேனும் தெரிகின்றனவா? பொருட்கள் ஏதாவது கீழே விழுந்து கிடக்கின்றனவா? என்றெல்லாம் ஆராயத் துவங்கினான். இன்னும் ஒரு நாழிகை அல்லது அதற்கும் குறைவான நேரம்தான் அவனுக்கு உண்டு. அதற்குப் பிறகு இங்கே நிற்பது சிலாக்கியமானதல்ல. வெளிச்சம் பரபரவென்று பரவிக்கொண்டிருக்கிறது.

துரதிருஷ்டவசமாக அவன் ஆராய்ந்த பகுதிகளில் எந்தச் சுவடுகளும் தென்படவில்லை. ஏனெனில் பூமியில் புல்லும் புதரும் மண்டிக் கிடந்தன. பொருட்கள் ஏதேனும் சிதறிக் கிடந்தால்கூட அவை கண்ணுக்குத் தெரியாத வண்ணம் செடிகொடிகள் மறைத்தன. இந்த நேரத்தில் ஒவ்வொரு புதராக ஆராய்வது மடத்தனம். மேலும் இப்பாழுமிடத்தில் பாம்புகள் ஏதாவது ஒளிந்திருந்து கையில் ஒரு போடு போட்டு விட்டால்? மாளிகையின் முன்கட்டிலிருக்கும் ஆதுலர் சாலைக்கு அவசரமாக ஓட வேண்டியிருக்கும். எதற்கு வீண் வம்பு?

நடந்து கொண்டே வந்தவனின் கண்களுக்கு ஒரு ஓரத்தே அமைந்திருந்த பெருமண்டபம் புலனானது. அங்கு சென்று தடயங்கள் ஏதாவது கிடைக்கின்றனவா என்று ஆராய்வோமா?

"ஐங்கரா! போதும் உன் ஆராய்ச்சி. இதுவரை கண்டு கேட்ட விஷயங்களை மாராயரின் காதில் போட்டுவிட்டு பேசாமல் நடையைக் கட்டு..!" என்றொரு எச்சரிக்கை மணி மனதில் அடிக்கத் துவங்கியது. என்றாலும் தவிர்க்க முடியாத

ஒரு குழந்தையின் ஆர்வத்துடன் அந்தப் பெருமண்டபத்தை நோக்கி முன்னேறத் துவங்கினான்.

அந்த மண்டபத்தின் கீழ் நிற்பதே ஆபத்தானது. ஏனெனில் இடத்தைக் கொடுத்தவன் மடத்தையே இழந்த கதையாக அதன் மேல் வளர்ந்திருந்த செடிகளும் கொடிகளும் அந்தக் கட்டுமானத்தைப் பெரிதும் சீர் குலைத்திருந்தன. பெருங் காற்றடித்தால்கூடப் போதும். மண்டபம் கீழே விழுந்துவிடும் என்கிற நிலைமையில் பயனற்ற இந்த ஆராய்ச்சியை இப்போது மேற் கொள்ளத்தான் வேண்டுமா இல்லையா என்பதை ஐங்கரா! நீயே முடிவு செய்துகொள்!

மண்டபத்தை நெருங்கியதும் அவனது கண்கள் பெரிதாக விரிந்தன. ஏனெனில் மண்டபத்தின் தரைப் புழுதியில், ஆங்காங்கே பெரிய பாதச் சுவடுகள். அளவை வைத்துப் பார்க்கும்போது அவை அந்த ஜடா முடனுக்குரியதாகவே தெரிந்தன. முட்டாளே! அந்தப் பாதச் சுவடுகள் உள்ளே செல்கின்றனவே தவிர வெளியே வரவில்லையென்பதைக் கவனி. அப்படியெனில்...???

அந்தச் செய்தி இன்னது என்பதை அவனது ஆறாவது அறிவு உணர்வதற்கும் மண்டபத்தின் பின்பக்கம் அமைந்திருந்த இருள் அறையின் கதவு கிரீச்! என்ற சத்தத்துடன் திறப்பதற்கும் சரியாக இருந்தது.

56. பேரங்காடியில் பைராகி



இக்கட்டான சமயங்களில் மனதை விட உடல் வேகமாகச் செயல்பட்டு விடும். அதுவும் ஐங்கரனைப் போன்று எந்த நேரமும் தலைக்கு மேல் கத்தி என்கிற நிலையிலேயே செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒற்றர்களின் உடல் எப்போதுமே ஒருவித ஆயத்த நிலையிலேயே இருக்கும். ஒரே ஒரு சிறு சலனம் அல்லது எச்சரிக்கை போதும் அவர்களுக்கு. உடல் அதிவிரைவாகச் செயல்பட்டுவிடும். அதுதான் அப்போதும் நடந்தது.

"உள்ளே செல்லும் பாதச்சுவடுகள் வெளியே வரவில்லை. அப்படியெனில் மண்டபத்தின் பின்புறம்

யாரோ இருக்கிறார்கள்" என்பதை உணர்ந்த அடுத்த நொடி அம்மண்டபத்தின் பின்புறக் கதவு திறக்கும் சப்தம் கேட்கவே, துள்ளிக் குதித்த அவனது உடல் ஒரே கணத்தில் அருகிலிருந்த பெரும்புதரின் பின்புறம் ஒடுங்கியது. பகல் நேரத்தில் ஒளிந்து கொள்வதற்கு அது ஏற்ற இடமல்ல என்பது உண்மைதான். கொஞ்சம் நெருங்கி வந்தாலும் சாயம் வெளுத்துவிடும். என்றாலும் வேறு வழியில்லை.

அந்தப் பாழடைந்த மண்டபத்தின் பின்புறம் அப்படியொரு இருட்டறை இருக்கிறது என்பதைக் கண்டறிவதே சிரமம். அப்படிப்பட்டதொரு இருட்டறையில் இந்த விடியல் நேரத்தில் மனித நடமாட்டமிருக்கும் என்பதை அனுமானிப்பது அதைவிடச் சிரமம். ஆனால் எல்லா ஆச்சரியங்களும் இதோ! நம் கண் முன்னால் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. கதவம் திறக்கப்பட்டு விட்டாலும் உள்ளிருக்கும் உருவம் வெளியே வந்ததைப் போலத் தெரியவில்லை. அறைக்குள்ளிருந்து வெளியே ஏதாவது ஆள் அரவம் தெரிகிறதா? என்று பார்க்கிறது போலும். நல்லவேளை! அந்த உருவம் மட்டும் மேலும் ஒரு கணங்கள் தாமதித்து வந்திருந்தால் மண்டபத்திற்கு நடுவே கையும் மெய்யுமாக மாட்டிக் கொண்டிருப்பேன். அப்படியே ஓரமாய் ஒதுங்கியிருந்தாலும் நமது பாதச் சுவடுகள் நம்மைக் காட்டிக் கொடுத்திருக்கும். ஏ மர்ம உருவமே! நீ தீர்க்காயுசாக இருக்க வேண்டும். நீ எதிரியாக இருந்தாலும் சரி. அந்த ஜடாமகுடனாகவே இருந்தாலும் கூடச் சரிதான். இந்த ஒரு முறை உன்னை மனதார மன்னித்தேன். பிழைத்துப் போ!

வெளியில் நடமாட்டங்களில்லை என்பதை அனுமானித்துக் கொண்டதும் அந்த உருவம் பாழடைந்த மண்டபத்தின் வழியாக வெளியில் வந்தது. ஐங்கரன் தலை முதல் ஆறடி உருவத்தை முடிந்த வரையில் புதருக்குள் ஒடுக்கிக் கொண்டான். எங்கே தன்னுடைய வாளின் முனையோ உடையின் நுனியோ புதருக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கப் போகிறது என்பது அவனது கவலையாக இருந்தது. சற்றே முகத்தை மெதுவாக வெளியில் நீட்டி அந்த உருவம் யாரென்பதைப் பார்க்க வேண்டும் எனும் தணியாத ஆவலும் அவனுள் எழுந்தது. ஆனால் மாட்டிக் கொள்ளும் ஆபத்து மிக அதிகம். வேண்டாம். இப்படியே இருப்போம்.

அந்த உருவம் முதலில் இவன் ஒளிந்திருந்த புதரை நோக்கி நடந்து வருவதைப்போல் தெரிந்தது. ஆனால்

அடுத்த கணமே சற்று விலகிப்போய் அந்தப் பின்கட்டின் மூலத்தில் அமைந்திருந்த கிணற்றடியை அடைந்தது.

ஐங்கரன் கணநேரம் மெல்லத் தலையின் ஒரு நுனியை மட்டும் உயர்த்தி எட்டிப் பார்த்தான்.

சற்று தூரத்தில் ஆறு அல்லது ஆறரை அடிவரை வளர்ந்திருந்த ஆஜானுபாகுவான ஜடாமகுடம் அந்தக் கிணற்றில் நீர்சேந்திக் கொண்டிருப்பது தெரிந்தது. நேற்றிரவு வீரசோழன் திருமாளிகைப் புரவி இலாயத்தில் ஊழியனைச் சந்தித்த அதே உருவம்தான் இது. அதில் சந்தேகமில்லை. அந்த இரகசிய சந்திப்பு முடிந்தபின் நள்ளிரவிற்கு மேல் அன்பில் திருமாளிகையில் வந்து தங்கிவிட்டது போலும்.

ஓரிரு நிமிடங்களில் நீர் இறைத்து முகத்தைச் சுத்தப்படுத்திக் கொண்ட அந்தக் காவியுடை உருவம் திரும்பிப் பாராமல் மளமளவென்று திருமாளிகையிலிருந்து இடிந்த மதில் வழியே வெளியேறி இராஜகம்பீரன் திருவீதியை நோக்கி நடக்கத் துவங்கியது.

ஐங்கரன் நிதானித்தான். தொடர்ந்து அந்த மர்ம மனிதனைப் பின்தொடர்வதா? அல்லது மாளிகையையே அலசி ஆராய்வதா? அல்லது இரண்டையும் விடுத்து வந்த வழியே திரும்பிச்சென்று மாராயரிடம் அனைத்தையும் சொல்வதா? எனும் சந்தேகங்களில் ஓரிரு கணங்கள் குழம்பினான். பின் நடப்பது நடக்கட்டும் எனும் உறுதியுடன் அந்த உருவத்தைப் பின்தொடர முடிவு செய்தான்.

* * * * * * * *

எந்தத் தயக்கமுமின்றி இராஜகம்பீரன் திருவீதியை அடைந்த ஜடாமகுடம், நேராகக் கோட்டையின் கிழக்குத் திட்டிவாசலை நோக்கி நடக்கத் துவங்கியது. இந்த ஓரிரு நாழிகைகள் இடைவேளையில் தஞ்சை நகரம் நன்றாக விழித்துக் கொண்டு விட்டது. வீதிகளில் ஒரே சந்தடி. காய்கள் கீரை விற்போர் ஒரு பக்கம், அதிகாலை அரண்மனைப் பணிக்குச் செல்வோர் மற்றொரு பக்கம் என்று அன்றைய போக்குவரத்து களைகட்டி விட்டது. ஏறக்குறைய அனைவருமே அரண்மனையே நோக்கி நடந்து கொண்டிருக்க, அதற்கு நேர் எதிர்த்திசையில் நடந்து கொண்டிருந்த ஜடாமகுடத்தை ஒருவரும் கண்டு கொள்ளவில்லை.

காவியுடை தரித்த சந்நியாசிகளும் சிவயோகிகளும் தபஸ்விக்களும் புத்த பிட்சுக்களும் ஜைன சமயத்துறவிகளும் சரளமாக நாடெங்கிலும் புழங்கிய காலகட்டம் அது. பல திருக்கோயில்களில் அவர்களுக்கான நிவந்தங்கள் பொது மக்களாலும் அரசாங்க அதிகாரிகளாலும் வழங்கப் பட்டிருப்பதைக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. ஆகவேதான் காவியுடை தரித்த ஜடாமகுட சந்நியாசி ஒருவர் கோட்டை வாயிலை நோக்கி நடப்பது ஒருவரது கவனத்தையும் கவரவில்லை. தப்பித்தவறி ஏறிட்டுப் பார்த்த ஓரிருவர் மட்டும் அந்த உருவத்தின் தோற்றத்தை மதித்து கரம் குவித்து வணங்கினார்கள் அப்படி வணங்கியவர்களை ஜடாமகுடம் தன் கரத்தை உயர்த்தி ஆசீர்வதித்தபடியே முன்னேறியது.

ஏன் முதல் நாளிரவே இந்த ஜடாமகுடம் கோட்டைக்குள்ளிருந்து வெளியேற முயற்சிக்கவில்லை என்று தனக்குத்தானே வினவிக் கொண்டான் ஐங்கரன். ஒரு வேளை களைப்பு அதிகமாக இருந்ததாலா? அல்லது இரவில் காவல் அதிகமாக இருக்கும் சமயத்தில் கோட்டை வாயிலைக் கடப்பதை விட, பகல் நேரத்தில் எவரது கவனத்தையும் கவராமல் எளிதாக வெளியே சென்று விடலாம் என்பதாலா? தெரியவில்லை. இப்போதைக்கு இந்த உருவத்தைப் பின்தொடர்ந்து செல்வதைத் தவிர வேறு மார்க்கங்களில்லை. ஆகவே முடிந்தவரை அதன் கவனத்தைக் கவராமல் பின்தொடர வேண்டியதுதான். அதிக இடைவெளி விடுவது ஆபத்து. அதே சமயம் மிக அதிகமாக நெருங்குவதும் ஆபத்து. ஆக இருபது அல்லது இருபத்தைந்து கோல் இடைவெளி விட்டுத் தொடர்வோம் என்று முடிவு செய்தவன், அதற்கு ஏற்றாற்போல் தனது நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டான்.

ஏறக்குறைய இரண்டு நாழிகைகளுக்கும் மேலாக இராஜகம்பீரன் திருவீதியில் எளிதாக அந்த உருவத்தைப் பின்தொடர முடிந்தவனுக்கு, திருவீதி முடிந்து திரு[illegible] மாதேவிப் பேரங்காடி துவங்கும் சந்திப்பில் எதிர்பாராத சிக்கலொன்று உருவாகியது. தஞ்சையில் அந்நாளில் அமைந்திருந்த புகழ்பெற்ற திருக்கோயிலான ஜெயா...தளியில்[189] அதிகாலை நடைபெறும் உஷத்கால பூஜையில்

[189] தஞைசைக் கல்வெட்டுக்களில் இடம்பெற்று திருக்கோயில்.

பங்கெடுத்துக் கொண்டு விட்டு கோட்டையை விட்டு வெளியேற முற்பட்ட வடநாட்டு பைராகிகள் கூட்டமொன்று சரியாக அந்தச் சமயம் பார்த்துப் பேரங்காடிச் சந்திப்பில் கலந்தது. ஜடாமுடி மற்றும் காவியுடைகளுடனும் “ஹரஹர மகாதேவ்!” எனும் பெருங்கோஷத்துடனும் அங்காடித் தெருவில் அந்தக் கூட்டம் கலந்த கணத்தில் அதுவரை கவனமாகப் பின் தொடர்ந்த உருவத்தைத் தவறவிட்டு விட்டான் ஐங்கரன். [illegible]னில் திடீரென்று முளைத்துவிட்ட பத்திருபது ஜடாமுடித் தலைகளில் அவன் பின்தொடர வேண்டிய தலை எது என்பதில் பெருங்குழப்பம் உண்டாகி விட்டது!

சமயம் தெரியாமல் உள்ளே புகுந்து கடுங் குழப்பத்தை உண்டாக்கி விட்ட பைராகியரின் மீது அவனது ஒட்டு மொத்தக் கோபமும் திரும்பியது. “இவர்களெல்லாம் வட நாட்டிலிருந்து தஞ்சை வரை வந்தாக வேண்டுமென்று யார் அழுகிறார்கள்?” என்று துவங்கி பலவித வார்த்தைகளாலும் அவர்களை வசை பாடினான். நடக்கும் குழப்பங்களெல்லாம் முன்னரே திட்டமிடப்பட்ட ஏற்பாடுகளாக இருக்குமோ? என்றுகூடச் சந்தேகம் முளைத்தது. சேச்சே! அதற்கு வாய்ப்பேயில்லை என்று கூடவே சமாதானமும் ஏற்பட்டது.

நடந்த குழப்பங்கள் தற்செயலானவையோ இல்லையோ, அவன் பின்தொடர்ந்து கொண்டிருந்த உருவமானது தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியானபடி பயன்படுத்திக்கொள்ளத் தவறவில்லை. நொடியில் அது பைராகிகள் கூட்டத்தாருடன் ஒன்று கலந்து நடக்க ஆரம்பித்து விட்டது!

எதிர்பாராமல் கிடைத்த அரியதொரு வாய்ப்பு கண்ணெதிரே கைநழுவிக் கொண்டிருப்பதை ஐங்கரனால் சகிக்க முடியவில்லை. எப்பாடு பட்டாகிலும் அந்த காவியுடைத் திருடனைப் பின் தொடர்ந்தே தீர வேண்டும் என்று ஒரு வெறி எழுந்தது. வேறு வழியேயில்லை. அவசர அவசரமாகக் கால்களை எட்டப்போட்டு நடந்தான் அவன்.

அதோ! பைராகியர் கூட்டம் பேரங்காடியின் வழியாகச் சென்று கொண்டிருக்கிறது. இன்னும் சில நிமிடங்களில் அங்காடி முடிந்து கோட்டை வாயில் வந்துவிடும். கோட்டை வாயிலில் காத்திருக்கும் கும்பலுக்குள் புகுந்து விட்டால் யானையைக் கூடக் கண்டுபிடிக்க முடியாது. நாசமாய்ப் போன மாதிரிதான்!

ஆஹா… இதென்ன? பைராகியர் கூட்டத்தில் ஒருவன் மட்டும் தனியே பிரிந்து… அடடா! பேரங்காடியின் [illegible] சந்து ஒன்றிலல்லவா நுழைகிறான்? ஆண்டவா! இதென்ன சோதனைக்கு மேல் சோதனை? அந்தச் சந்துகளின் இண்டு இடுக்குகளில் புகுந்து விட்டால் அவனைக் கண்டறிவது இயலாத காரியமாகிவிடுமே?

திருபுவனமாதேவிப் பேரங்காடியின் இரு மருங்கிலும் கிளைத்தெழும் ஆயிரக்கணக்கான சிறு தெருக்களுக்குள் பழக்கமில்லாத ஒரு மனிதன் உள்ளே புகுந்து உருப்படியாக வெளியே வருவதென்பது இயலாத காரியம். அத்தெருக்கள் எங்கே ஆரம்பிக்கின்றன, எங்கே சென்று முடிகின்றன என்பதே பெரியதொரு மர்மமாயிருக்கும். அருகிலிருக்கும் பல்வேறு சிற்றூர்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் அதிகாலை நேரங்களில் காய்கறி மூட்டைகளும் பல[illegible] மூட்டைகளும் வந்திறங்குவது அந்தச் சந்து பொந்துகளில் தான். நகரத்தின் சில்லறை வியாபாரிகள் அனைவரும் அங்குதான் கிராமத்து விவசாயிகளுடன் நேரடி பரிவர்த்தனைகளில் ஈடுபடுவார்கள்.

சந்தைக்கு வந்திறங்கும் மாட்டு வண்டிகள் ஒரு [illegible] தெருக்களை அடைத்துக் கொண்டு நிற்கும். வியாபாரத்தை முடித்துக் கொண்டு ஊருக்குப் புறப்படக் காத்[illegible] கொண்டிருக்கும் சாத்து வண்டிகள் மற்றொரு [illegible] இடித்துக் கொண்டு நிற்கும். வந்திறங்கும் பொருட்களுக்கு தக்கவாறு அச்சிறுதெருக்கள் ஒவ்வொன்றிலும் [illegible] வாசமோ சொல்லவொண்ணாத துர்நாற்றமோ எந்[illegible] வீசும். நாள் முழுவதும் இடைவிடாத பேச்சுக்குரல்[illegible] பல்வேறு தவறான காரியங்களுக்கும் களமாகத் [illegible] அந்தச் சந்து பொந்துகளில் விபரம் புரிந்தவர்கள் [illegible] உட்செல்ல முடியும். ஊருக்குப் புதியவர்கள் தப்பித்[illegible] உள்ளே நுழைந்துவிட்டால் அதோ கதிதான்!

இத்தகைய மகத்துவங்கள் நிறைந்த [illegible] தெருவொன்றில் ஜடாமகுடம் உள்ளே புகுந்ததைக் கண்ட ஐங்கரனுக்கு மிச்சமிருந்த கொஞ்ச நஞ்சப் பொறுமையும் பறந்தோட, நாலே பாய்ச்சலில் தெருமுனையை அடைந்தான். விறுவிறுவென்று தன்னுடைய வெள்ளை மெய்ப்பையைக் கழற்றித் தலைப்பாகையாகக் [illegible] கொண்டான். அரைக்கச்சை இடுப்பில் நன்றாக இ[illegible] கொண்டான். சுருங்கச் சொல்லின் சில கணங்களில்

[illegible]த்தெருக்களில் காணப்பட்ட நூற்றுக்கணக்கான [illegible]லியாட்களுள் அவனும் ஒருவனாக மாறிவிட்டான்

அவன் தெருமுனையை அடைவதற்கும் அந்தக் காவி [illegible]திரம் தெருக்களின் குறுக்கே ஓடிய குறுக்குச் [illegible]தொன்றில் மறைவதற்கும் சரியாக இருந்தது என்னிடமா [illegible]ண்ணாமூச்சி காட்டுகிறாய்? என்று கறுவியவன் எதிரே [illegible]ந்த ஆட்களை சகட்டு மேனிக்கு இடித்தவாறு [illegible]ன்னேறி அதே குறுக்குச் சந்துக்குள் புகுந்தான். அதோ! [illegible] தூரத்தில் போய்க் கொண்டிருக்கிறது அந்த ஜடா [illegible]ம் இன்னமும்கூட அது தனது காவியுடையைக் [illegible] முற்படவில்லை. என்ன தைரியம்?

மீண்டும் மற்றொரு குறுக்குச் சந்து மீண்டும் ஓட்டம். [illegible]ரங்காடியின் நெரிசல் இப்போது மிகவும் குறைந்து [illegible]த்தார் வசிக்கும் இல்லங்கள் ஆரம்பித்து விட்டன. [illegible]யிலில் கோலமிட வீட்டிற்கு வெளியே வந்து நிற்கும் [illegible] பெண்களின் சந்தேகப் பார்வை அவன் மீது விழத் [illegible]ங்கி விட்டது. அதிக நேரம் இப்படித் துரத்திக் [illegible]ண்டிருக்க முடியாது.

அதோ! அந்தப் பைராகி வெண்சுண்ணமிட்ட சிறிய [illegible]டின் வாயிலில் நின்று கதவைத் தட்டுகிறான் கவனம் [illegible] முற்றும் அவனது தலை சுழல்கிறது ஓரமாக நில் [illegible] கண்களில் பட்டுத் தொலைக்காதே வீட்டு வாயிலில் [illegible] சேடிப்பெண்ணின் உருவம் தெரிகிறது பைராகி ஏதோ [illegible]கிறான். பின் இருவரும் வீட்டினுள் நுழைந்து [illegible]ர்கள் வாயிற்கதவம் தாழிடப்பட்டுவிடும் என்பது [illegible]

ஏதோ ஒரு ஆவேசம் உந்தித் தள்ள நாலுகால் [illegible]லில் அந்த இல்லத்தை நெருங்கியவன், அதற்கு [illegible] வீடுகள் தள்ளி அமைந்திருந்த வீட்டின் [illegible]த்தைப் பிடித்து மேலேறிவிட்டான் அந்தத் தெருவின் [illegible]களெல்லாம் மிக மிக நெருக்கமாக ஒன்றையொன்று [illegible]க் கொண்டு நிற்பது போல் கட்டப்பட்டிருந்தன [illegible] இல்லங்களின் மேற்தளங்கள் வழியாக அடி மேல் [illegible] வைத்து நடந்து பைராகி நுழைந்த வீட்டின் [illegible]யை சடுதியில் வந்தடைந்து விட்டான்

[illegible]ரியான குறுகலான சந்துகளில் அமைக்கப்படும் [illegible]களில் வெளிச்சத்துக்காக ஒவ்வொரு அறையின் [illegible] சாளரங்கள் அமைக்கப்படுவது வழக்கம்

அப்படிப்பட்ட சாளரம் ஒன்றைப் பிடித்து அதனருகே காதை வைத்து ஒட்டுக் கேட்டு அதுவரையில் நமது நடமாட்டங்கள் கீழே வீட்டிலுள்ளவர்களின் கவனத்தைக் கவராமல் இருந்து...

அதுசரி, இந்த வீட்டில் மேல்தளத்தில் குறைந்தது நான்கு அல்லது ஐந்து அறைகள் தென்படுகின்றனவே! அவற்றில் எந்த அறையென்று தேடுவது?? சேச்சே! இருக்கும் அத்தனை பிழைப்புக்களிலும் மகா கேவலமான பிழைப்பு நம்முடையது. இப்படியொரு நாய் வாழ்க்கை தேவைதானா!

ஒவ்வொரு சாளரமாகக் பொறுமையாகக் காதை வைத்துக் கேட்டான். முதல் இரண்டில் சப்தங்களெதுவும் வரவில்லை. மூன்றாவதில் நிம்மதியான குறட்டைச் சப்தம் எழுந்து கொண்டிருந்தது. விடிந்த பின்பும் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த மகானுபாவர் யாரென்று தெரியவில்லை. நான்காவது சாளரத்தில்தான் நல்ல வேளையாக மிக மெல்லிய பேச்சுக்குரல்கள் கேட்கின்றன.

"தலைவர் என்னை மன்னிக்க வேண்டும். தெரியாமல் நடந்த தவறு அது!" - இது நேற்றிரவு புரவி இலாயத்தில் ஒலித்த ஜடாமகுட பைராகியின் குரல். நேற்று அவன் குரலில் தொனித்த அதிகாரமும் அகங்காரமும் காணாமல் போய் பெரியதொரு பணிவு தெரிக்கின்றதே? ஆச்சரியம்.

"இல்லை மலையனூராரே. தெரிந்தே நடந்த தவறுதான் அது!"

சற்றே கரகரப்புடன் மிக மெல்லியதாக - ஆனால் மிகக் கம்பீரமாக ஒலித்த அந்தக் குரல் ஐங்கரனின் உடலில் ரோமாஞ்சனத்தை உண்டாக்கியது. பயத்தில் அவனது நா உலர்ந்து விட்டது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன.

இது... இது...

இந்தக் குரல்...

"போனது போகட்டும். சோழர்களுக்கு உண்மையில் நீ யார் என்பது தெரியாது. அதனால்தான் உமது தலை இது வரை தப்பிப் பிழைத்திருக்கிறது. இனியாவது கவனத்துடன் செயல்படுங்கள். ஒரு அவசரமான அவசியமான காரியத்தின் பாற்பட்டுத்தான் நேற்றிரவே கோட்டையை விட்டுத் தெற்கே கிளம்பியிருக்க வேண்டிய உம்மைத் தடுத்து நிறுத்தினேன். நான் கொடுக்கப்போகும் மிக முக்கியமான பொருளை நீ

உமது கைகளாலேயே பாண்டிய இளவலிடம் இரகசியமாகச் சேர்ப்பித்துவிட வேண்டியது. வேறு ஒருவரிடமும் இதனைப் பற்றி மூச்சுக்கூட விடக்கூடாது. சரியா?"

ஐங்கரனைக் கலவரப்படுத்தியது அந்தக் குரலில் தெரிந்த கம்பீரம் மட்டுமல்ல. தோரணை மட்டுமல்ல அது பலப்பல ஆண்டுகளுக்கு முன் அவன் கேட்ட குரல் என்பது மட்டுமல்ல. அவனை பேரதிர்ச்சிக்குள்ளாக்கிய விஷயம் என்னவெனில்...

"என்ன பொருள் அது?"

"இதோ! இந்தச் சிறு பெட்டிதான்."

"பெட்டிக்குள் என்ன இருக்கிறது?"

"அவசியம் தெரிந்துகொள்ளத்தான் வேண்டுமென்றால் நீரே திறந்து பார்க்கலாம். உமக்கு அடுத்ததாக இதனைப் பார்க்கப்போவது பாண்டிய இளவலாகத்தான் இருக்க வேண்டும். இடையில் எவருக்காவது இந்த விவகாரம் சிறிதளவு கசிந்தாலும் அவரை உயிரோடு விட்டுவைக்கக் கூடாது. இது எனது கண்டிப்பான உத்தரவு!"

பெட்டி மெல்லத் திறக்கும் சப்தம். அதனைத் தொடர்ந்து...

"இது... இது... இதுவா?? இது... தங்களிடமா உள்ளது? இது... இலங்கையில்...." - மலையனூரான் என்றழைக்கப்பட்ட பைராகியின் குரலில் ஏராளமான பயமும் அதிர்ச்சியும் தெரிந்தன.

"ஆம். இத்தனை காலமும் இது என்னிடம்தான் இருந்தது. வேறு ஒருவருக்குமே தெரியாத பரம இரகசியம் இது. ஆனால் இனியும் இதனை வைத்துக் காப்பாற்ற முடியுமென்று தோன்றவில்லை. இளவலும் பிராயமெய்தி விட்டார். ஆகவே இனி இதனைக் காக்கும் பொறுப்பு அவருடையது."

தன்னை மறந்து மும்முரமாக ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்ததாலோ என்னவோ மச்சுப்படிகளின் வழியே எவரோ மேல்தளத்திற்கு ஏறி வரும் ஓசை கேட்பதைக்கூட ஐங்கரனின் செவிப்புலன்கள் உணரவில்லை.

57. துறைமுக விஜயம்



இக்கதையின் ஆரம்ப அத்தியாயங்களில் பல முறை இடம்பெற்று விட்ட நாகைத் துறைமுகத்திற்கு மீண்டும் ஒரு முறை விஜயம் செய்வதில் வாசகர்களுக்கு ஆட்சேபம் எதுவுமிருக்காது என்று நம்புகிறோம். நாகைக்கும் இந்தக் கதைக்கும் அப்படியொரு நெருக்கமான ஒட்டுறவு ஏற்பட்டுவிட்டது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் செழித்து வளரும் இந்த உறவை நாகையம்பதியில் குடி கொண்டிருக்கும் காரோணப் பெருமானே ஏற்படுத்தி இருக்கிறாரென்று தோன்றுகிறது இல்லையேல் இந்தச் சித்திரை மாதச் சதுர்தசியில் மாலை நேரத்தில் சோழ சாம்ராஜ்ஜியத்தின் பேரரசர் அருள்மொழிவர்மர் மலை போல் தஞ்சையில் குவிந்து கிடக்கும் அரசாங்கப் பணிகளையெல்லாம் புறந்தள்ளி வைத்துவிட்டு அமண்குடியாருடன் உப்பங்கழிகள் சூழ்ந்த நாகைக் கடற்கரையின் சுங்கச் சாலையில் நின்று முக்கிய விஷயங்களைப் பேசிக் கொண்டிருப்பாரா? அல்லது கதையின் மற்ற இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பலப்பல முக்கிய சம்பவங்களையும் விட்டுவிட்டு நாமும்தான் இவர்களைப் பின்தொடர்ந்து கொண்டிருப்போமா?

"தலைநகரில் உங்கள் கவனத்திற்காகக் காத்திருக்கும் எத்தனையோ முக்கியமான வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு இந்த நானாதேசி வணிகர்கள் கேட்டுக் கொண்டார்கள் என்கிற ஒரே காரணத்திற்காகத் தாங்களே நாகைத் துறைமுகத்திற்கு நேரில் வர முடிவெடுத்தது எனக்கு வியப்பையே அளிக்கிறது."

"அமண்குடியாரே! இன்றைக்கு நாம் காணும் சோழ சாம்ராஜ்ஜியம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக மெல்ல மெல்ல இது உருவாகி வந்திருக்கிறது அதன் உருவாக்கத்தில் ஆயிரமாயிரம் கரங்கள் பரம்பரை பரம்பரையாகப் பங்கெடுத்துக் கொண்டு வந்திருக்கின்றன. அந்தக் கரங்களுள் உழுகுடிக் கரங்கள் உண்டு கைக்கோளக் கரங்கள் உண்டு கம்மாளக் கரங்கள் உண்டு. தச்சுக் கரங்கள் உண்டு. வேளக்காரக் கரங்கள் உண்டு,

படைவீரக் கரங்கள் உண்டு. இன்னும் சிற்றரசுக் கரங்கள், அமைச்சுக் கரங்கள், சேனானிக் கரங்கள் என்று எத்தனையெத்தனையோ கரங்கள் உண்டு. அவற்றுள் வணிகக் கரங்களும் மிக முக்கியமானவை. சோழ மண்டலத்தின் பொருளாதாரத்திற்கே ஆதாரமாக விளங்குபவை. அவற்றின் பலத்தைப் பெருக்கத் தம்மால் இயன்றதைச் செய்ய வேண்டியது ஒவ்வொரு அரசனின் கடமையாகும்."

"புரிகிறது. அதற்காகத் தாங்களே நேரில் வர வேண்டுமென்பதில்லையே?"

"தலைநகரிலேயே ஒரு சில ஆணைகளைப் பிறப்பித்து விட்டு ஒதுங்கியிருக்கலாம்தான். உம்மையும் பல்லவ ராயரையும் மட்டும் இங்கே அனுப்பி வைத்து விட்டு அன்றாட அலுவல்களில் நான் மூழ்கியிருக்கலாம்தான். நீங்கள் குறிப்பிட்டதைப் போலத் தஞ்சையில் பல்வேறு பணிகளும் குவிந்துள்ளன என்பது உண்மையே. என் நிலையில் வேறு யாராக இருந்தாலும் நேரில் வந்திருக்க மாட்டார்கள்.

ஆனால்... அமண்குடியாரே! நான் ஒரு போதும் குறுகிய காலத் திட்டங்களை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு செயல்படுவதில்லை. அன்றாடப் பணிகள் முக்கியம்தான். ஆனால் அவை நமது நீண்ட கால நோக்கங்களை மறைத்து விடக்கூடாது. மிக முக்கியமான சில விஷயங்களைக் கருத்தில் கொண்டுதான் நானே நேரில் வருவதற்கு முடிவு செய்தேன்.

இதுவரை வேறு எந்தச் சோழப் பேரரசரும் வணிகர்களுக்காகத் துறைமுகம் வரை வந்ததில்லை. ஆனால் நான் வந்திருக்கிறேன். வணிகர்களிடையே இந்த வருகை பெருத்த உற்சாகத்தை ஏற்படுத்தும். அரசாங்கத்துடன் மேலும் நன்றாக ஒத்துழைக்க வேண்டும். நமக்கு இந்த அரசன் துணையாயிருப்பான் என்னும் பெருத்த நம்பிக்கையை இது ஏற்படுத்தும் அந்த நம்பிக்கை எனக்கு அவசியமாயிருக்கிறது. அவர்களுடைய அன்றாட வியாபார நோக்கங்களை மீறி வேறு பல விவகாரங்களிலும் அவர்களின் ஒத்துழைப்பை நாட எண்ணியிருக்கிறேன் ஆகவே இந்த நேர்முக விஜயம் என்னைப் பொறுத்த அளவில் மிக முக்கியமானது.

என்னுடைய அனுமானம் என்னவெனில் வணிகர்களின் பல்வேறு பலங்களையும் இதுவரை எந்தச் சோழ அரசரும்

ஏன், எந்தத் தென்னாட்டு வேந்தருமேகூட இதுவரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதே. சரியானபடி அவர்களுடன் ஒத்துழைத்தால் நாட்டின் பொருளாதாரத்தைத் தவிர வேறு சில முக்கிய விஷயங்களிலும்கூட அவர்களின் பலத்தை நாமும் நம்முடைய பலத்தை அவர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைக் கீழ்த்திசை நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டபோதுதான் நானே உணர்ந்தேன்.

சைலேந்திரர்களின் இராஜ்ஜியமான ஸ்ரீவிஜயத்திற்கும் சீனத்திற்கும் இளம் வயதில் நான் மேற்கொண்ட பயணங்கள் தாம் என் கண்களைத் திறந்தன. இப்படியும் ஒரு ஒட்டுறவு வணிகர்களுக்கும் அரசாங்கத்திற்கும் நிலவ முடியுமா? இப்படியெல்லாம் பரஸ்பரம் இருவரும் ஒத்துழைக்க முடியுமா? என்று அந்த அனுபவங்கள் என்னை வியப்பின் உச்சிக்கே கொண்டு சென்றன. அப்போதுதான் வெளி தேசத்திற்கும் வெளிநாட்டிற்கும் ஒருவன் பயணம் செய்ய வேண்டியது எத்தனை அவசியம் என்பது புரிந்தது. சோழர்களுள் ஈடு இணையற்ற வேந்தர்களாக விளங்கிய ஆதித்தரும் பராந்தகரும் கூடப் பார்க்கத் தவறிய சில விஷயங்களை அந்தக் கடற்பிரயாணங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்தன. என்னுடைய விசித்திரமான அனுபவங்களை யெல்லாம் என்னுடைய அருமை நண்பர் வல்லவரையர் வந்தியத்தேவரைத் தவிர வேறு யாருமே அறியார்கள். குறைந்தபட்சம் என்னுடைய குழந்தைகளிடமாவது என்றாவது ஒரு நாள் அந்த அனுபவங்களை மனம் விட்டுப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று எண்ணியிருக்கிறேன்..."

இராஜ்ஜியபாரம் ஏற்று ஓரிரு வருடங்களே ஆகியிருந்தாலும் மனதில் ஆயிரமாயிரம் கனவுகளுடனும் திட்டங்களுடனும்தான் அரியணை ஏறியிருக்கிறார் இந்த இளைஞர்! என்று நினைத்துக் கொண்டார் கிருஷ்ணன் இராமன். பிறந்தபோதே விஷ்ணுவின் அம்சமாகப் பிறந்தவர் என்று கொண்டாடப்பட்டாலும் இவர் தாண்டி வந்த தடைக்கற்கள்தான் எத்தனையெத்தனை! வேறொருவர் இவரது இடத்தில் இருந்திருந்தால் இந்தப் பதினெட்டு வருடங்களில் முழுவதுமாக நம்பிக்கையிழந்து முந்தைய அரசரான உத்தமச் சோழரின் அரசியல் அதிகாரிகளுள்

ஒருவராகக் காலத்தைக் கழித்திருப்பார்கள்[190]. ஆனால் பிடிவாதமாக எனக்கு ஒரே ஒரு பதவி மட்டும்தான் தேவை. அதனைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை எனும் முனைப்புடன் ஒவ்வொரு நாளையும், கடந்து செல்லும் ஒவ்வொரு ஆண்டையும் தனக்குப் பயனுள்ளதாக, பலம் பொருந்தியதாக ஆக்கிக்கொண்டு[191] மெல்ல மெல்ல வளர்ந்து ஒரு கட்டத்தில் தவிர்க்க முடியாமல் அரியணை ஏறி ஒவ்வொரு காயையும் யோசித்து யோசித்து நகர்த்தும் இவரைச் சிதம்பரத்து மூவாயிரவர்கள் "அரசர்களின் அரசன்" எனும் பொருள்படும் "இராஜராஜன்" என்று அழைத்ததுதான் எத்தனை பொருத்தமானது! இவர் வளர்ச்சியடைந்து வரும் இந்த முக்கியமான காலகட்டத்தில் இவருடன் பணிபுரிய நமக்குத்தான் எத்தனை கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

"நாள்தோறும் எத்தனையோ வணிகக் குழுக்களின் கலங்கள் நாகைக்கு வந்து போகின்றன அவற்றுள் குறிப்பாக நானாதேசிகளின் கலன்களுக்குத் தாங்கள் அதிகப்படியான முக்கியத்துவம் கொடுப்பதற்கான காரணமென்னவோ?"

"புத்திசாலித்தனமான கேள்விகளாக அடுக்குகிறீர். காசிப் பண்டிதனுடன் வாதிக்காதே எனும் பழமொழி சரியாகத்தான் இருக்கிறது!" என்று கூறி நகைத்தார் பேரரசர்.

"நீர் குறிப்பிட்டது போல பல வணிகக் குழுக்கள் தென்னகத்தில் இயங்கிக் கொண்டிருந்தாலும் அவர்களுள் திசையாயிரத்து ஐந்நூற்றுவரும் நானாதேசிகளும் அஞ்சு வண்ணத்தார்களும்தான் மிக முக்கியமானவர்கள் கடல் கடந்து வெளிதேச வாணிபத்தில் மும்முரமாக ஈடுபடும் குழுக்கள் இவர்களே. மற்றபடி பதினெண் பூமி நாட்டார், சுந்தரச் சோழ நாட்டார் முதலியவர்கள் உள்ளூர் வாணிபத்தில்தான் பெரிதும் கவனம் செலுத்துகிறார்கள்

---

[190] அருள்மொழிவர்மர் உத்தமச் சோழரின் காலத்தில் நன்கு வளர்ந்த இளைஞராக இருந்தாலும் எந்தப் பதவியையும் வகித்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

[191] பின்னாளில் உருவாக்கப்பட்ட இராஜராஜரின் மெய்க்கீர்த்தி இதனைச் சூசகமாக "ஏழிலவளர் ஊழியுள் எல்லா யாண்டும் தொழுதக விளங்கும் யாண்டே" என்று தெரிவிக்கிறது.

இம்மூன்று குழுக்களுள் ஐந்நூற்றுவர்தான் அளவில் பெரியவர்கள். தென்னகம் முழுவதும் பரவியிருப்பவர்கள். ஆனால் அவர்களது ஆணிவேர்களோ சளுக்க தேசத்தில் மிக ஆழமாக வேரூன்றியுள்ளன. அதனால்தான் ஆண்டுகள் பல கழிந்தும் இன்றுவரை ஐயப்பொழில் பரமேஸ்வரி[192] அவர்களின் குலதெய்வமாக விளங்குகிறாள். நமது விரோதிகளான மேலைச் சளுக்கர்களுக்கும் ஐந்நூற்றுவரின் மூலக்குழுவினருக்கும் நெருக்கம் அதிகம். அதனால் அவர்களை அதிகம் நம்புவதற்கில்லை. பகைத்துக் கொள்வதற்குமில்லை.

அஞ்சுவண்ணத்தார் இஸ்லாமிய வணிகர்கள். அரேபியம், கிரேக்கம், பாரசீகம் முதலான மேல்திசை வாணிபத்தில் கவனம் செலுத்துபவர்கள். அவர்களில் பாதிப் பேர் வெளிநாட்டவர். மீதமிருப்பவர்கள் சேர தேசத்தினர். அவர்களுக்கு என்னைவிடச் சேரமான் பெருமாள் முக்கியமானவர். நாகைத் துறைமுகத்தைவிட கேரளத்தின் முசிறி, விழிஞம் மற்றும் மகோதயபுரம் முக்கியமானவை. ஆகவே இவர்களும் நமது பிற்கால நோக்கங்களுக்குப் பயன்பட மாட்டார்கள்.

மிச்சமிருப்பவர்கள் நானாதேசிகள். கீழ்த்திசை வாணிபத்திலும் சீன வணிகத்திலும் முக்கியப் பங்கு வகிப்பவர்கள். குறிப்பாக சைலேந்திரர்களின் ஸ்ரீவிஜய சாம்ராஜ்ஜியத்துடன் நெருக்கமான உறவு பூண்டவர்கள். இக்குழுவினருள் பல தேசத்தவர் இருந்தாலும் சோழ நாட்டவரும் பாண்டி நாட்டவரும் சற்று அதிகம். இவர்கள் நம்முடன் ஒத்துழைக்கும் வாய்ப்பு மிகுதி...”

“குறிப்பாக நானாதேசிகளுக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் ஐந்நூற்றுவர் மற்றும் பிற குழுக்களின் அதிருப்தியை நாம் சம்பாதித்துக்கொள்ள மாட்டோமா?”

“சர்வ நிச்சயமாகச் சம்பாதித்துக் கொள்வோம். இந்த ஒரு தயக்கம்தான் என் தந்தையாரான சுந்தரச் சோழரையும் அதற்கு முந்தைய அரசர்களையும் நடுநிலை வகிக்க

---

[192] இன்றைய ஐஹொளே, கர்நாடகத்தில் அமைந்துள்ளது. ஐந்நூற்றுவரின் குலதெய்வமாகக் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் பரமேஸ்வரி திருக்கோயில் இன்றும் உள்ளது.

வைத்தது. எங்கே ஒரு சாராருக்கு முக்கியத்துவம் கொடுத்தால் மற்றவர்களின் ஆதரவை சோழதேசம் இழந்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சினார்கள். எனக்கு அந்தத் தயக்கங்களெல்லாம் இல்லை. ஐந்நூற்றுவரின் மூலக் குழுவினரைச் சளுக்கன் பகிரங்கமாக அணைக்க முற்படும் போது... அஞ்சுவண்ணத்தாரை சேரமான் பெருமாள் பிரத்யேகக் கேளிக்கை விருந்துகளுக்கு அழைக்கும்போது... நான் மட்டும் எதற்காகத் தயங்க வேண்டும்?

இதனால் அவர்கள் அதிருப்தி அடையலாமே தவிர ஒரு போதும் நமது தேசத்துடனான வாணிபத்தை நிறுத்திவிட மாட்டார்கள். அவர்களுக்கு சேர, சோழ, சளுக்க அரசாங்கங்களைவிடத் தத்தம் கருவூலப் பெட்டிகள் முக்கியமானவை. அதனால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வாணிபத்திற்குப் பெரிதாக ஒன்றும் பாதிப்பு நேர்ந்துவிடாது என்பது என் எண்ணம். நாளையே நாம் தென்னகத்தில் மற்றவர்களை விடப் பலமான சக்தியாக வளர்ந்து விட்டால் தங்களின் பிரத்யேக ஆதரவைக்கூட நமக்குத் தெரிவிக்க அவர்கள் தயங்க மாட்டார்கள்...”

தென்னகத்தின் அரசியல் சதுரங்கத்தில் தன்னையும் ஒரு காயாக ஒரு திங்களுக்கு முன் நுழைத்துக்கொண்டிருந்த இளைஞரான அமண்குடி கிருஷ்ணன் இராமன் தீவிரமான யோசனையில் ஆழ்ந்தார். பேரரசர் பூடகமாகப் பேசிக் கொண்டே செல்வதன் மேம்போக்கான பொருள் அவருக்குத் தெளிவாகப் புரிந்தாலும் அந்தரங்க நோக்கங்கள் தெளிவாகவில்லை. குறிப்பாக ‘நானாதேசிகளின் அன்றாட வியாபார நோக்கங்களை மீறி வேறு பல விவகாரங்களிலும் அவர்களின் ஒத்துழைப்பை நாட எண்ணியிருக்கிறேன்’ எனும் வாசகத்தில் ஏதோ பொருள் பொதிந்திருப்பதாக அவருக்குத் தோன்றியது. ஏற்கனவே கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டிருந்து விட்டோம். அவரும் நம்மை மதித்துப். பதில் புகன்றார். இனி மேற்கொண்டு கேள்விகள் கேட்பதைத் தவிர்த்து என்னதான் நடக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இராமா! அரசியலில் மிகுந்த அனுபவம் வாய்ந்த பேரரசர் - மாராயர் - பல்லவராயர் எனும் முப்பெரும் விருட்சங்களுக்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய். இவர்களை மீறிக்கொண்டு உன்னுடைய பார்வையை இப்போதைக்குப் படரவிட முடியாது. இது கற்கும் தருணம். கால் மடக்கிக் கரம் கட்டி இவர்கள் மூவரிடமும் கற்க

வேண்டிய அத்தனை விஷயங்களையும் கற்றுக்கொள். முந்திரிக்கொட்டைக் கணக்காகக் கேள்விகளை அடுக்கிக் கொண்டு போய் இருக்கும் பெயரையும் கெடுத்துக் கொண்டு விடாதே. உன்னுடைய அடிப்படைக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் பேரரசருக்கில்லை.

நானாதேசி வணிகர்களிடம் தனியே பேசு. அவர்களின் பிரச்சனைகளை உணர்ந்து கொள். அவர்களின் நம்பிக்கைக் குரியவனாக உண்மையானவனாக நடந்து கொள். பேரரசருடன் அவர்களால் பேச முடியாத விவகாரங்களை அவர்கள் உன்னுடன் மனம் திறந்து பேச வேண்டும். அதுதான் உன்னுடைய பணியில் நீ பெறப்போகும் வெற்றி.

இது ஒரு முக்கியமான காலகட்டம். சரித்திரத்தின் தலைவிதியை மாற்றி எழுதப் போகும் மாமனிதர் ஒருவர் தகுந்த பதவிக்கு வந்திருக்கிறார். அவரது ஆட்சியில் நீயும் ஒரு முக்கியத் தூணாக விளங்க வேண்டுமானால் மிகக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். பல இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும். பல்வேறு சாராரின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் பெறவேண்டியிருக்கும். தளிக்குளநாதர் உன் முயற்சிகளுக்குத் துணை நிற்பாராக. நமச்சிவாயம்.

சற்று தூரத்தில் வணிகர்கள் கூட்டமாகப் பேரரசரை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தார்கள். அவர்களது கண்களில் ஏராளமான மிரட்சி தெரிந்தது.

58. சீனத்து ஆணவம்



வணிகர்களின் கண்களில் தெரிந்த கலவரமும் மிரட்சியும் கிருஷ்ணனை இராமனைத் துணுக்குறச் செய்தன என்றாலும் தனக்கருகில் நின்று கொண்டிருந்த பேரரசரின் முகத்தில் அதே பழைய சாந்தமும் புன்னகையும் மாறாமல் இருப்பதைக் கண்டு அமைதியுற்றார் அவர்.

"பேரரசர் எங்களை மதித்து நாகைக் கடற்கரை வரை விஜயம் செய்தது எங்கள் பாக்கியம். எமது குழுவினரின் வணக்கங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்!"

கலவர முகங்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டுவிட்டு முன்வந்த நானாதேசி வணிகர்களின் குழுத் தலைவர் இரு கரம் கூப்பி வணங்கினார். பேரரசரும் கிருஷ்ணன் இராமனும் பதில் வணக்கம் செய்தனர்.

"இவர்களது முகங்களைப் பார்த்தால் எனது வருகையால் அத்தனை மகிழ்ச்சியடைந்தவர்கள் போலத் தெரியவில்லையே? சோழ சாம்ராஜ்ஜியத்தின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தும் பெருந்தூண்களில் ஒன்றான நானாதேசிகளின் அதிருப்தியை அதற்குள் சம்பாதித்துக் கொண்டு விட்டேனா என்ன?"

முறுவல் மாறாமல் கலவரப்படாமல் மிக மிக அமைதியாகப் பேரரசர் புகன்ற வார்த்தைகள் குழுவினரை சாந்தி கொள்ளச் செய்ததை இராமன் ஆச்சரியத்துடன் கவனித்தார். 'புகழுரைகளுக்கும் பாராட்டுக்களுக்கும் சிறிதளவாவது மயங்காத மனிதர் இந்த உலகிலேயே கிடையாது!' என்று அவருக்குத் தத்துவம் போதித்த காசிப்பண்டிதர் அடிக்கடி கூறுவது வழக்கம் அந்த உண்மை எத்தனை நிதர்சனமானது என்பதைக் கண் முன்னால் நடந்து கொண்டிருக்கும் அனுபவம் உணர்த்தியது. அவர்களைப் புகழும் அதே சமயத்தில் 'தூண்களுள் ஒன்று' என்று பன்மையில் எச்சரிக்கையுடன் பேரரசர் குறிப்பிட்டதையும் அவரது கூரிய மனம் கவனிக்கத் தவறவில்லை.

"சக்ரவர்த்திகள் கோபித்துக் கொள்ளக்கூடாது. தாங்கள் கடற் பயணங்கள் தொடர்பாக எனக்குத் தெரிவித்த ஒரு சில புதிய ஏற்பாடுகளை இவர்களுடன் சிறிது நேரத்திற்கு முன் பகிர்ந்து கொண்டேன். தாங்களே நேரில் வருகை தந்திருப்பதால் இது சம்மந்தமான அவர்களின் சந்தேகங்களைத் தங்களோடு நேரில் உரையாடி நிவர்த்தி செய்து கொண்டு விடலாம் எனும் எண்ணத்தோடுதான் அவ்வாறு செய்தேன் இவர்கள் அனைவருமே கீழ்த்திசை வாணிபத்தில் ஈடுபட்டுள்ள வணிகர்கள்." - குரலில் பணிவு மாறாமல் பேசினார் வணிகர்களின் தலைவர்.

"ஓ! நல்லதாய்ப் போயிற்று. வாருங்கள், சுங்கச் சாலையின் உள்மண்டபத்தில் அமர்ந்து பேசுவோம். யாரங்கே! அனைவருக்கும் சூடாக இஞ்சிப் பானகம் வினியோகியுங்கள்."

உள்மண்டபத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த இராமனுக்கு மெல்ல விஷயங்கள் தெளிவாக ஆரம்பித்தன. பேரரசர் இவர்களது கடற்பயணங்களை ஏதோ ஒரு வகையில் மாற்றியமைக்க எண்ணுகிறார். அது தொடர்பாக அடிமட்டத்து வணிகர்களின் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துவிட வேண்டுமென்றுதான் இத்தனை தூரம் வந்திருக்கிறார். இவர் வராவிட்டாலும் வேலைகள் நடைபெற்றிருக்கும்தான். ஆனால் அந்தக் கடைக்கோடி வணிகனின் மனதில் சந்தேகங்கள் புகைந்து கொண்டுதான் இருந்திருக்கும். இவரது ஏற்பாடுகளுக்கு அவன் தக்கமுறையில் ஒத்துழைத்திருக்க மாட்டான். "அரசன் என்கிற திமிருடன் நடந்து கொண்டு விட்டான்" என்கிற எண்ணம்தான் அவன் மனதில் இருந்திருக்கும். ஆனால் இப்போது? என்ன நடக்கப்போகிறதென்று பார்ப்போம்.

பேரரசர் உள்மண்டபத்தில் அமர்ந்தவுடன் அவர்களது தனிப்பட்ட ஷேம இலாபங்களைப் பற்றிச் சிறிது நேரம் உரையாடினார். முன் வரிசையில் அமர்ந்திருந்த வணிகர்களின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையைப் பற்றி அக்கறையோடு விசாரித்தார். இந்த அறிமுக உரையாடல்கள் முடிந்தபின்...

"நான் தெரிவித்த சில புதிய திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் சம்மந்தமாக உங்களுக்குச் சில சந்தேகங்கள் உள்ளன என்று குழுத் தலைவர் தெரிவித்தார். உங்களின் எண்ணங்களைத் தெரிவிக்கலாம். உங்களுக்கு விருப்பமில்லாத விஷயத்தை வலுக்கட்டாயமாகத் திணிப்பதில் எனக்கு உடன்பாடில்லை."

கூட்டத்தாரில் சற்றே முதியவராகக் காணப்பட்ட வணிகர் எழுந்தார். "மிக்க நன்றி பேரரசே! தாங்கள் தெரிவித்த திட்டங்களின் மிக முக்கியக் கூறு கீழ்த்திசை வாணிபக் கடற்பயணங்களின் போது எங்களின் வணிகக் கலங்களைப் பாதுகாக்க வழக்கமான காவற்படையை உபயோகிக்காமல் சோழ இராஜாங்கத்தின் படை வீரர்களையே உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பது தான்.

எங்களின் மீது இவ்வளவு அக்கறை கொண்டு வாணிபக் கலங்களைக் காக்க உரியபடி படை வீரர்களை அனுப்ப வேண்டும் என்கிற தங்களின் நல்லெண்ணத்தை நாங்கள் மிகவும் மதிக்கிறோம். ஆனால் அதே சமயத்தில்

அரசாங்கத்தின் பிரத்யேக உதவி எதையும் எதிர்பாராமல் செயல்பட வேண்டும் என்பது எங்களின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று. அதனால்தான் பல்வேறு சிரமங்களுக்கிடையிலும் எங்களுக்கென்று தனிக் காவற் படையை வைத்துக் கொண்டிருக்கிறோம். கடல் வாணிபமானாலும் சரி. உள்ளூர் வாணிபமானாலும் சரி. அக்காவற்படை வீரர்களை மட்டுமே காவலுக்கு உபயோகிக்கிறோம். தங்களின் புதிய ஏற்பாடு அந்தப் பழக்கத்திற்கு முரணானதாக உள்ளது. அதனால்தான்..."

"புரிந்து கொண்டோம். வணிகர்களே! உரிய முறையில் பல தகவல்களையும் ஆராய்ந்து விட்டுத்தான் நான் இந்தத் திட்டத்தையே தெரிவித்தேன். கீழ்த்திசை வாணிபக் கலங்களில் பயணம் செய்த அனுபவமும் எனக்கு உண்டு. ஆதலில் நான் சொல்லப் போவதைக் கவனமாகச் செவிமடுப்பீர்களாக.

கீழ்த்திசை வாணிபம் முன்னெப்போதும் இருந்திராத அளவிற்குக் கடந்த பத்திருபது ஆண்டுகளில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. உள்நாட்டு வாணிபத்தில் மட்டும் ஈடுபட்டிருந்த உங்களைக் கடல் வாணிபத்திற்கு இழுத்தது இந்தப் பெருவளர்ச்சிதான். இந்த வளர்ச்சிக்கான மிக முக்கியக் காரணம் ஸ்ரீவிஜய சாம்ராஜ்ஜியத்தின் வலிமையும் சைலேந்திரர்களின் அரசாங்கமும்தான் என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள். இந்த வளர்ச்சியானது கீழ்த்திசை நாடுகளுக்குக் கிழக்கே அமைந்துள்ள வலிமையான சீன சாம்ராஜ்ஜியத்தின் கண்களைப் பெரிதும் உறுத்துகிறது. ஒட்டுமொத்தக் கீழ்த்திசை வாணிபமும் தங்களுக்குக் கீழ் தங்களுக்கு அடங்கியே நடைபெற வேண்டும் என்று நினைக்கிறது சீனம்.

இந்த ஆதிக்க மனோபாவத்திற்குக் குறுக்கே நிற்பது தட்ஷிண தேசத்தின் வாணிபம்தான் நமது தேசத்திற்கும் ஸ்ரீவிஜயத்திற்கும் இருக்கும் வாணிப உறவைப் பலகீனமாக்கி விட்டால் தங்களின் கால்களில் விழுவதைத் தவிரச் சைலேந்தரர்களுக்கு வேறு வழி கிடையாது என்று சீனர்கள் நினைக்கின்றனர் இந்தக் கடல்வழி ஆதிக்கம் மட்டும் நிலை

பெற்றால் அதன் பலன் ஆயிரமாயிரம் சீனக் கனகங்கள்[193] என்பதால் இதில் வெற்றியடையப் பல்வேறு நீசத்தனமான காரியங்களிலும் ஈடுபட முனைத்து விட்டனர்.

இக்காரியங்களுள் முக்கியமானது கீழ்த்திசைக் கடற் கொள்ளையருடன் அவர்கள் சமீப காலங்களில் வளர்த்துக் கொண்டுள்ள உறவு. இந்த உறவின் முக்கிய நோக்கம் என்னவெனில் தட்ஷிண தேசத்திலிருந்து வரும் கலங்களைக் கைப்பற்றி அதிலுள்ள வணிகர்களையும் சாத்துக்களையும் அழித்தொழிப்பதேயாகும். நான்கு அல்லது ஐந்து முறை இத்தகைய பெருந்தாக்குதல்கள் நடத்தி விட்டால் இங்குள்ளோர் நெஞ்சில் பலமானதொரு பயத்தை ஊன்றி விட முடியுமென்றும் அதன் பலனாக வாணிபத்தின் அளவு மெல்ல மெல்லக் குறையுமென்றும் சீனம் நினைக்கிறது. அதன் நினைப்புக்குத் தக்கவாறுதான் இங்கும் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தட்ஷிண தேசத்தில் பல்லவர்களுக்குப் பிறகு நிலையான வலிமையான சாம்ராஜ்ஜியம் உருவாகவேயில்லை. என்னுடைய மூதாதையர்களான ஆதித்தரும் பராந்தகரும் அதற்காக அரும்பாடுபட்டு முயன்றும் பாண்டியர்களின் தொந்தரவால் அது நடைபெறவேயில்லை. இதனால் உங்களைப் போன்ற வணிகர்கள் தமக்கென்று தனிக்காவற் படையை வைத்துக் கொள்வதுதான் சிறந்தது என்கிற முடிவுக்கு வந்து விட்டீர்கள். தனிக்காவற்படையென்பது உள்ளூர் வாணிபத்திற்கு ஏற்றது என்றாலும் கடல்வழி வாணிபத்திற்கு அத்தனை உகந்ததல்ல. குறிப்பாகக் கடற் கொள்ளையர்க்குச் சீனத்தைப் போன்ற பெரியதொரு சாம்ராஜ்ஜியமே மறைமுகமாக ஆதரவு தரும்போது அக்கொள்ளையரைத் தடுத்து நிறுத்தும் வலிமையோ பயிற்சியோ உங்களின் காவற்படைக்கு இல்லை என்பதுதான் என் அனுமானம்.

இந்தச் சூழலில்தான் இரண்டு திங்களுக்கு முன் உங்களின் தலைவர் என்னைத் தஞ்சையில் சந்தித்தார் கீழ்த்திசை வாணிபத்தில் உள்நாட்டு வாணிபத்தைவிட இரண்டு மடங்கு இலாபம் ஈட்ட முடியுமென்பதால்

[193] சீனக்கனகம் என்பதற்குச் சீனத் தங்க நாணயம் என்று பொருள். நாகப்பட்டினம் காரோணா திருக்கோயிலில் அமைந்துள்ள முதலாம் இராஜேந்திரரின் கல்வெட்டில் இககனகம் குறிப்பிடப்படுகிறது.

உங்களில் பலரும் அதில் ஆர்வமாக இருக்கிறீர்களென்றும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இந்த வருடம் இருபத்தைந்து வங்கங்களில் சரக்குகளை ஏற்றிச் செல்லப் போகிறீர்களென்றும் தெரிவித்தார். சீனத்தின் திட்டங்களைப் பற்றியும் கடற் கொள்ளையரின் தாக்குதல்கள் பற்றியும் அப்போது எனக்குத் திட்டவட்டமாக தகவல்கள் தெரியாததால் கலங்களின் பாதுகாப்பைப் பற்றி மட்டுமே பேசினோம். ஆனால் அதற்கு அடுத்த சில வாரங்களில் மிக உறுதியான தகவல்கள் எனக்குக் கிடைத்தன. ஆகக் கடற் கொள்ளையரின் தாக்குதல் நடைபெறப்போவது நிச்சயம். உரிய காவற் படையின்றிக் கடலில் கால் பதித்தீர்களானால் நக்காவரத்தைக்[194] கடப்பதே அரிது.

இப்போது சொல்லுங்கள். முறையான பயிற்சி பெறாத உங்களின் காவற்படையோடு இந்த முக்கியப் பயணத்தைத் துவக்கப் போகிறீர்களா? அல்லது முறையான பயிற்சியில் தேர்ந்து விளங்கும் சோழர்படை வீரர்களுடன் செல்லப் போகிறீர்களா? அல்லது ஒட்டுமொத்தக் கீழ்த்திசை வாணிபத்தையும் மறந்துவிடப் போகிறீர்களா?"

வணிகர்களின் முகத்தில் ஈயாடவில்லை. கீழ்த்திசை வாணிபத்தில் சீனம் செலுத்த விரும்பும் ஆதிக்கம் அவர்கள் அனைவருமே அறிந்ததுதான். இந்தக் காரணத்தினாலேயே பல முறை சீனத்து வணிகர்களிடம் ஸ்ரீவிஜயத்தில் பிணக்குகள் நேர்ந்து பெரியவர்கள் தலையிட்டுச் சமாதானப்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் கடற் கொள்ளையர்? அவர்களை ஒடுக்குவது சைலேந்திரர்களின் கடமை என்றல்லவா நினைத்திருந்தோம்?

அவர்களின் கடற்காவற்படைகள் கடலில் உலவிக் கொண்டிருக்கின்றனதான். என்றாலும் ஸ்ரீவிஜத்திலிருந்து ஒரு சில கடற்காத தூரங்கள் வரைதானே அவர்களின் பாதுகாவலை நீடிக்க முடியும்? நாகைக்கும் ஸ்ரீவிஜயத்திற்கும் இடையே பலப்பல கடற்காதங்கள் பாதுகாவலின்றித்தானே இருக்கின்றன? திசையாயிரத்து ஐந்நூற்றுவர் சமீப காலங்களில் தங்களின் காவலை ஏகத்துக்கு பலப்படுத்திக் கொண்டதன் காரணமும் இதுதானோ? அவர்களின் அளவிற்கு நமக்குக் கடல்வழி வாணிப அனுபவம் இல்லாததினால்தான் இந்தத் தகவல்களெல்லாம் கிட்ட

[194] நிக்கோபார் தீவுகள்.

வில்லையோ? ஏராளமான பொன் புழங்கும் கீழ்த்திசை வாணிபத்தை மறப்பதாவது? அது நடக்காத காரியமல்லவா?

"பேரரசே! தாங்கள் விளக்கிய பிறகுதான் எங்களுக்குக் கீழ்த்திசை வாணிபச் சூழலின் முழுத்தாக்கமும் புரிந்தது. சீனம் இத்தனை ஈனத்தனமாகச் செயலாற்றும் என்று நாங்கள் எண்ணவில்லை. இந்தச் சூழ்நிலையில் சோழப் படைகளின் பாதுகாவலை ஏற்பதே சிறந்ததென்று எனக்குத் தோன்றுகிறது" என்றார் முன்பு பேசிய முதிய வணிகர்.

"ஆம். அதுதான் சரியான முடிவு!" என்று பலரும் முன் மொழிந்தார்கள். என்றாலும் ஒரு சில வணிகர்களின் முகத்தில் சந்தேகங்கள் இன்னும் மிச்சமிருந்ததை பேரரசர் கவனித்துக் கொண்டார்.

"வேறு கேள்விகள் ஏதேனுமிருந்தால் கேட்கலாம்..."

"ஒன்றுமில்லை. எங்களின் காவற்படையெனில் எங்கள் கலத்திலேயே தங்கி எங்களுடனேயே இருப்பார்கள். சோழர் படை வீரர்களெனில்...."

பேரரசருக்கு அவர் சொல்ல வந்தது புரிந்தது. அவர்களுடைய காவற்படையெனில் அவர்களுக்கு அடங்கி நடந்தாக வேண்டிய கட்டாயம் உண்டு. ஆனால் சோழர் படைகள் தத்தம் சேனானி நாயங்கங்களுத்தான் கட்டுப்படும்.

"சோழர் படைவீரர்கள் தமக்குரிய தனிக்கலங்களில் உங்களுடன் பயணம் செய்வார்கள். அவர்களுக்கான உணவு மற்றும் சாமக்கிரியைகளையும் நாமே திரட்டித் தந்து விடுகிறோம்..."

நானாதேசிகளின் தலைவர் முன்வந்தார்.

"சக்ரவர்த்திகளே! இத்தனை உதவிகள் எங்களுக்குச் செய்கிறீர்களே.. இதற்குக் கைம்மாறாக நாங்கள் புரியக்கூடிய உதவி ஏதேனுமுண்டா?"

அருள்மொழிவர்மரின் முகத்தில் மெல்லிய முறுவல் விரிந்தது. "வணிகரல்லவா? அதனால்தான் பளிச்சென்று கேட்டு விட்டீர். உண்டு. ஓரிரு உதவிகள் தேவைப்படுகின்றன நீங்கள் பயணத்தை எப்போது துவக்குவதாக இருக்கிறீர்கள்?"

"வாணிபச் சரக்குகள் இன்னமும் முழுமையாக வந்து சேரவில்லை. இப்போது சித்திரையல்லவா? வைகாசி முதல்

இரண்டு வாரங்களுக்குள் சரக்குகள் வந்துவிடும். ஆனால் காற்று தற்போது மேற்கே வீசிக்கொண்டிருக்கிறது ஆனியில்தான் அது திசை மாற ஆரம்பிக்கும். ஆனிமாத இறுதியில் கிளம்பினால் ஆடிக்காற்று எங்களுக்குச் சாதகமாக இருக்கும். ஆவணியும் அத்தனை பாதகமில்லை. ஐப்பசிக்குள் ஸ்ரீவிஜயத்தை அடைந்துவிட்டால் நல்லது."

"நீங்கள் கிளம்ப நினைக்கும் திங்களிலிருந்து ஒரு சில வாரங்களுக்கு முன்னரே கிளம்ப வேண்டியிருக்கும். இன்னொரு விஷயம் சோழ வீரர்களை நாகைக்குத் தருவிக்க முடியாது கடற்பயணங்களுக்குச் செல்லுமுன் கடல் கடந்து ஜெயித்த வீரனான அயோத்தியாழ்வாரைத்[195] துதித்துவிட்டுக் கிளம்பும் மரபு அவர்களிடையே உள்ளது. அதனால் அநேகமாக இராமேஸ்வரத்திற்கு அருகில்தான் அவர்கள் சேர்ந்து கொள்வார்கள்."

"அப்படியே ஆகட்டும்!"

நானாதேசிகளின் தலைவரும் அருள்மொழிவர்மருமாகச் சேர்ந்து நடத்திய நாடகமா இந்தச் சந்திப்பு? என்று கிருஷ்ணன் இராமன் நினைத்து வியக்கும்படி அமைந்து விட்டது அந்த நாகைச் சந்திப்பு. வணிகர்களின் முகத்தில் நிலவிய திருப்தி அப்பட்டமாகத் தெரிந்தது. பேரரசரே நேரில் வந்திராவிட்டால் இவர்களைச் சமாளிப்பது கடினமான பணியாக இருந்திருக்கும்.

"தேசி வணிகர்களே! உம் கூட்டத்தாரை நாம் நமது அணுக்கர்களுள் ஒருவராக நினைப்பதால்தான் மிகச் சிலருக்கே தெரிந்த இராஜாங்க இரகசியங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டோம். இந்தத் தகவல்களெல்லாம் மிக மிக அந்தரங்கமானவை. இரகசியமானவை. தவறியும் இதனை வெளியில் பிரஸ்தாபிக்க வேண்டாம். இரவு போஜனத்திற்கு ஏற்பாடாகியிருக்கிறது. எம்முடன் உணவு உட்கொண்டு விட்டுத் தாம்பூலம் தரித்தபிறகே கிளம்ப வேண்டும்" என்றார் பேரரசர்.

வணிகர்களின் முகத்தில் எல்லையில்லாத மகிழ்ச்சி தாண்டவமாடியது. சோழமண்டலத்தின் சக்ரவர்த்தியானவர் தம்முடன் உணவு உட்கொண்டு தாம்பூலம் தரிக்க ஒருவரை அழைப்பதென்பது அக்காலத்தில் மிகப் பெரிய மரியாதை

---

[195] இராமபிரான்.

அரசரின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பூரணமாகப் பாத்திரமானவர்களுக்குத்தான் அந்த மரியாதை வழங்கப் படும். அத்தனை பெரிய மரியாதையைத் தங்களுக்கு வழங்க முன்வந்ததை அந்த வணிகர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். சொல்லப் போனால் அவர்களை இத்தனை தூரம் மதித்துத் தாம்பூல மரியாதையையும் தந்த முதல் சோழமண்டலப் பேரரசர் அருள்மொழிவர்மராகத்தான் இருப்பார். "என்ன நடந்தாலும் சரி. சளுக்கனும் பெருமாளும் என்ன நினைத்துக் கொண்டாலும் சரி. இவரின் பின் மலைபோல் நிற்போம்!" என்னும் உறுதி அவர்களின் மனதில் அன்று ஆழமாக விழுந்து விட்டது.

சிரித்த முகத்துடன் அவர்களை உணவுச் சாலைக்கு அழைத்துச் செல்லும் பேரரசரை இராமன் வியப்புடன் நோக்கி நின்றார். இந்தத் தாம்பூல ஏற்பாடு அவரே அறியாத ஒன்று. காலையிலிருந்து தன்னுடன்தானே இருந்தார்? பின் இத்தனை வணிகர்களுக்கு உணவு வழங்கும் ஏற்பாடு எப்போது, எங்கே, யாரால் செய்யப்பட்டது? என்று அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. இத்தனை நேரம் இந்தச் சந்திப்புக்களையும் உரையாடல்களையும் உன்னிப்பாகக் கவனித்த பின்பும் தன்னால் பேரரசரின் உண்மையான நோக்கங்களை எள்ளளவும் அறிய முடியவில்லையே? என்பது அதைவிட ஆச்சரியமாக இருந்தது.

59. குரு தாரை



கழிக்குடிப் பகுதிகளில் நாள் முழுவதும் விடாமல் பெய்து கொண்டிருந்த பெரு மழையானது ஒரு வழியாக மாலை நேரம் நெருங்கியதும் போனால் போகிறது எனும் நினைப்புடன் தன்னுடைய அட்டகாசத்தை நிறுத்திக் கொண்டது. மழை நின்று விட்ட போதிலும் வானத்தில் மேகக் கூட்டங்கள் 'மீண்டும் திரும்பி வந்தாலும் வருவோம்!' என்று எச்சரிப்பதைப்போல் அடர்த்தியாகக் கூடி நின்றன. அதனால் இரவு துவங்க இன்னமும் சிறிது நேரம் மிச்சமிருக்கும் முன்னரே இருட்டு ஆங்காங்கே கவியத் தொடங்கிவிட்டது.

இவ்வாறு இருள் படிந்திருக்கும் மாலை நேரத்தில் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை என்றழைக்கப்படும் பழஞ் சாலையை அடைகிறோம். சாலையின் பல பகுதிகளில் தண்ணீர் ஆங்காங்கே தேங்கி நிற்பதால் அந்தச் சிறு குட்டைகளைத் தாண்டித் தாண்டித்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படித் தாண்டுகையில் பூமியைச் சற்று எச்சரிக்கையுடனே நோக்குகிறோம்- ஏனெனில் மழை அதிகமாகப் பெய்யும் நாட்களில் இந்தப் பகுதிகளில் பாம்புகள் வெளியே வந்து உலாவத் தொடங்கிவிடும். அவற்றில் பல ஆபத்தற்ற தண்ணீர்ப் பாம்புகளாகவே இருந்தாலும் அரைகுறை இருட்டில் வளைந்து நெளிந்து சென்று கொண்டிருக்கும் அந்த ஜந்துக்களின் மீது தேவையில்லாமல் காலை வைத்துவிட்டுக் கடிபடுவதற்கு நமது மனம் ஒப்பவில்லை.

பெருஞ்சாலையின் இரு கட்டிடங்களிலும் ஆங்காங்கே நெய் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்ததால் அவற்றிலிருந்து கமகமக்கும் பசு நெய்யின் மணம் கற்பூர வாசத்துடன் எழுந்து கொண்டிருந்தது. சம்மந்தமில்லாமல் கற்பூர வாசம் எதற்காக என்று கேட்கிறீர்களா? அந்தக் காலத்தில் விளக்கேற்றுவதற்காக உபயோகிக்கப்படும் நெய்யுடன் கற்பூரத்தைக் கலந்து விடுவார்கள். விளக்குகளுக்காக வைக்கப்பட்டிருக்கும் நெய்யைத் தவறுதலாகவோ வேண்டுமென்றோ ஒருவரும் சமையலுக்கு உபயோகப் படுத்திக்கொண்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் அந்த ஏற்பாடு.

கட்டிடங்களைக் கடந்து தென்கிழக்கே அக்னி மூலையில் அமைந்துள்ள குழிக்களரியை அடைகிறோம். நாம் அங்கு சென்று சேரும் நேரத்தில் நமது நண்பர்கள் பிஷு"வுடன் அந்த இடத்தை நெருங்கிக் கொண்டிருப்பதால் நமது பிரத்யேக உரையாடல்களை நிறுத்திக் கொண்டு உடனடியாகக் கதைக்குள் புகுவோம்.

* * * * * * * *

பகல் முழுவதும் உண்டு உறங்கி ஓய்வெடுத்திருந்ததால் மழபாடியாரின் உள்ளம் உற்சாகமாகவே இருந்தது. மாலை நேரத்தில் சம்பங்கியிடம் வெந்நீர் போடச் சொல்லி நல்லதொரு ஸ்நானத்தையும் முடித்துக் கொண்டிருந்தார் அவர். அந்த மாலைக்குளியலின் புத்துணர்ச்சி அவரது

முகத்தில் தெளிவாகப் பொலிந்தது. அவரையொட்டிக் காணப்பட்ட இளையவர் கம்பன் மணியனாரின் முகத்திலும் அதே உற்சாகம் சிறு முறுவலாக விரிந்திருந்தது.

இவர்கள் இருவரையும் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த பிஷு ஆனந்த தோரின் முகத்தில்தான் எல்லையில்லாத யோசனைகள் படிந்திருந்தன. கைகளைப் பின்புறம் கட்டிக் கொண்டு முடிந்தவரை நிதானமாக நடக்க முயன்றாலும் அவரது மன அழுத்தம் காரணமாக உடலெங்கும் ஒரு இறுக்கம் படிந்திருந்தது அவரது அசைவுகளில் தெளிவாகவே தெரிந்தது. கழிக்குடியில் கால்பட்ட கணத்திலிருந்தே தொலைந்து போய்விட்ட அவரது வதனத்தின் எல்லையில்லாத அமைதியையும் சாந்தியையும் மீண்டும் எப்போதுதான் காணப் போகிறோமோ! என்றொரு ஏக்கம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

மூவரும் களரியின் வாயிலை அடைந்தார்கள். பூமியின் மட்டத்திலிருத்து நான்கு அடிகளுக்குக் கீழே அமைக்கப் பட்டிருந்த குழிக்களரியின் வாயிலில் படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டுச் சிறியதொரு மூங்கில் தட்டியால் மூடப்பட்டிருந்தன. பிஷு சிறிது முன்வந்து அத்தட்டியை அகற்றி வைத்தார்.

"நண்பர்களே! ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையில் மிக முக்கியமான இடமாகக் கருதப்படும் குழிக்களரி இது. இந்தக் களரியானது உங்களின் வாழ்வில் புதியதொரு அத்தியாயத்தைத் தோற்றுவிக்கும் என்று நம்புகிறேன். மனதில் பயபக்தியுடன் வலது காலை முன்வைத்து உள்ளே இறங்குங்கள். அக்கன் நமக்காக அங்கே காத்துக் கொண்டிருக்கிறார்..."

மெல்ல அளந்து வார்த்தைகளைப் புகன்ற பிஷுவின் முகத்தில் காணப்பட்ட தீவிரம் இப்போது நண்பர்களின் முகத்திலும் படிந்தது. ஒருவருக்குப் பின் ஒருவராக வலது காலை முன்வைத்துக் களரியை அடைந்தார்கள்.

நாள் முழுவதும் மழை பெய்திருந்தபோதிலும் களரிக்குள் தண்ணீர் தேங்கியதற்கான அறிகுறியே தென்பட வில்லை என்பது வியப்பளித்தது. அதற்கு மிக முக்கியக் காரணம், களரியின்மேல் அமைக்கப்பட்டிருந்த கூரையானது களரியைச் சுற்றி நாற்புறங்களிலும் எழும் சுவர்களிலிருந்து

நன்கு வெளித்தள்ளி அமைந்திருந்ததுதான் போலும். என்ன அற்புதமானதொரு அமைப்பு!

களரியின் நாற்புறங்களிலும் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. குறிப்பாகக் குழியின் தென்மேற்கே ஈசான்ய மூலையில் பல்வேறு அடுக்குகளாக அமைக்கப் பட்டிருந்த "பூத்தாரை" என்றழைக்கப்படும் புனித மேடையில் ஒவ்வொரு அடுக்கிலும் மூன்று சிறு தீபங்கள் அழகுற ஏற்றப்பட்டிருந்தன. அத்தீபங்களுக்கு நடுவே மலர் அலங்காரங்களும் செய்யப்பட்டிருந்தன.

களரியில் பயிலும் வீரர்களாலும் ஆசான்களாலும் அன்றாடம் வழிபடப்படும் முக்கியக் குலதெய்வம் குடி கொண்டிருந்த அம்மேடையினருகே மிகப்பெரிய குத்து விளக்கொன்று தன்னுடைய ஐந்து முகங்களிலும் அழகிய தீச்சுடர்களை ஏந்தி நின்றது. மலைநாட்டிற்கே உரிய பிரத்யேக வடிவத்தைப் பெற்றிருந்த அப்பெருவிளக்கின் செம்மஞ்சள் ஒளி அந்த வளாகமெங்கிலும் பரவி நின்றது.

மேடையின் ஒரு பக்கத்தில் ஈட்டி, வாள், வேல், கேடயம், உருமி, சரீரவடி என்றழைக்கப்பட்ட பெரும் பிரம்பு, செறுவடி என்றழைக்கப்பட்ட குறுந்தடி, கதை, கட்டாரி, குந்தம் முதலான பல்வேறு ஆயுதங்களும் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எண்ணை பூசப்பட்டுப் புத்தம் புதியதாகத் திகழ்ந்த அவ்வாயுதங்கள் தீப ஒளி பட்டு மேலும் பளபளவென்று பிரகாசித்தன.

பூத்தாரையின் எதிரே நின்றிருந்த தம்புராட்டியார் வெண்பட்டுத் தரித்துக் கம்பீரமாகக் காணப்பட்டார். அப்பட்டாடையானது மிகவும் வித்தியாசமான முறையில் அவரது மேனியைச் சுற்றி இறுக்கமாகப் புனையப் பட்டிருந்தது. காலையில் நாம் சந்தித்தபொழுது கொண்டையும் சந்தனக் கீற்றும் கமழ மலைநாட்டுத் திருமகளாகவே காட்சியளித்த அவர், இப்பொழுது கத்தியும் கேடயமும் சுழற்றுவதற்குத் தயாராக நிற்கும் வீராங்கனை போலக் காணப்பட்டார். அவரது கரங்கள் இடுப்புக்குக் கீழே பிணைந்திருந்தன. கண்கள் மூடியிருக்க, வாய் மட்டும் ஏதோ சில சொற்களை மெல்ல முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அவரது வீரத்தோற்றத்தைக் கண்ணுற்ற நண்பர்களிருவரும் மிகுந்த மரியாதையுடன் களரிக் குழியின் நடுப்பகுதிக்கு வந்து நின்றார்கள்.

தம்புராட்டியார் மெல்லத் திரும்பினார். கண்களால் காண முடியாவிட்டாலும் உணர்வுகளையும் சப்தங்களையும் கொண்டே அவர்கள் களரிக்குள் நுழைந்ததை அவர் கணித்து விட்டார்.

"உன்னிகளா! நீங்கள் நிற்கும் இந்தக் குழியானது ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையிலேயே மிகவும் புனிதமான இடமாகக் கருதப்படும் குழிக்களரியாகும். களரி என்பது களம் எனும் சொல்லிலிருந்து பிறக்கிறது. களரி என்பதனைப் பயிலும் இடம் என்று குறிக்கலாம். நீங்கள் நிற்கும் இந்த இடத்தில்தான் இச்சாலையின் பண்டைய ஆசான்களும் மாணவர்களும் பயின்றார்கள். பற்பல அற்புதமான சங்கிராம இலக்கணங்கள் இங்குதான் வகுக்கப்பட்டன. நாஞ்சில் நாட்டின் புகழ் மிக்கத் தெற்கத்தி ஆசான்கள் புழங்கிப் பெருமைப்படுத்திய மண் இது அவர்களின் ஆன்மாக்கள் இங்குதான் ஆவிர்பவித்திருக்கின்றன. அல்லும் பகலும் அவர்கள் சிந்தித்த பற்பல வித்தைகளும் பிரயோகங்களும் காற்றில் எண்ணங்களாக உணர்வுகளாக காலத்தால் அழியாமல் இங்கே படிந்திருக்கின்றன. இந்த வித்தைக்குள் ஆழமாக இறங்க இறங்க அவர்களின் எண்ணங்கள் உங்களையும் தாக்கும். அலைக்கழிக்கும். கற்றுக் கொடுக்கும். ஏன் இது? எதனால் இப்படி? என்றெல்லாம் கேள்விகள் எழும்.

இந்தக் களரி கொடுக்கும் சூழலை சரிவர உள்வாங்கிக் கொள்ள உங்கள் மனதை நீங்கள் திறந்து வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதன் பேச்சு புரியத் துவங்கும். இந்த மண்ணை உங்களின் வலது கரத்தினாலும் பின் நெற்றியினாலும் ஸ்பரிசியுங்கள்[196]. அப்படி ஸ்பரிசிக்கையில் இந்த மண்ணின் மகத்துவத்தை வியந்து போற்றுங்கள். அதன் ஜீவசக்தியை உணர்ந்து தலைப்படுங்கள்!"

மகிஷனை துவம்சம் செய்து வதைத்த கச்சிப்பட்டின் ஐஞ்சந்தி துர்க்காதேவியே தம் முன் மானுட வடிவெடுத்து நிகரற்ற வீராங்கனையாக நிற்பது போல் மழபாடியாருக்குத் தோன்றியது. மிகுந்த உணர்ச்சி வேகத்துடன் அந்த மண்ணை ஸ்பரிசித்தார் அவர். நெற்றியால் அம்மண்ணைத் தொடும்போது சிலீரென்று ஒரு உணர்வு தேகமெங்கும்

[196] இம்மரபு இன்றுவரை தொடாகிறது.

பரவி மெல்லிய நடுக்கத்தைத் தோற்றுவித்தது. புருவத்திற்கு மத்தியில் இரண்டு பாதங்கள் கணநேரம் தோன்றி மறைந்தன. இரண்டு மிக உறுதியான ஆண் பாதங்கள்.

"இதோ! இந்த ஏழடுக்கு மேடைதான் பூத்தாரை. இந்த ஏழு அடுக்குகளும் நம்முள் நிலைபெற வேண்டிய ஏழு குணங்களையும் அதற்குரிய அதிதேவதைகளையும் குறிக்கின்றன. முதல் அடுக்கான விக்னேஸம் பலத்தையும் சக்தியின் துவக்கத்தையும் குறிக்கும். இது கணபதிக்குரியது. அடுத்த அடுக்கான சண்டிகம் பொறுமை மற்றும் விடாமுயற்சியைக் குறிப்பிடும். இது தேவிக்குரியது. இதற்கடுத்து வரும் ஆக்ஞாசக்தியைக் கொடுப்பவர் விஷ்ணு ஆவார் இது தலைமையேற்கும் துணிவைக் குறிப்பிடும். இதற்கும் மேலாக வரும் அடுக்கு ஆயுதப் பிரபாசக்தியைக் குறிக்கும். இது வடுகீசம் என்று பெயர் பெறும். ஐந்தாவது அடுக்கானது குருயோகத்தையும் குருசக்தியையும் குறிக்கும். ஆறாவது அடுக்கில் நிலை பெற்றிருப்பவள் தேவியின் உக்கிர அம்சமான காளியாவாள். ஏழாவது அடுக்கில் உங்களின் குரலுக்குரியவரான வாகீசபுருஷர் எழுந்தருளியிருக்கிறார் பூத்தாரையின் தெய்வங்களை மலரிட்டு வணங்குங்கள்...."

இருட்டில் விளக்கொளிகளால் பளபளத்துக் கொண்டிருந்த பூத்தாரை அவர்களைப் பார்த்துச் சிரித்தது. நண்பர்கள் அதனை நெருங்கிப் பூக்களால் வழிபட்டு வீழ்ந்து வணங்கினார்கள். கண்ணுக்குத் தெரியாமல் வானத்திலிருந்து ஆசிகள் பொழிந்தன.

"மூன்றாவதும் மிக முக்கியமானதுமான குருதாரை எனப்படும் இடம் இதுதான். இந்த இடத்தில் பண்டைய களரி ஆசான்களின் நினைவாக ஒரு நந்தா விளக்கு எந்நேரமும் எரிந்துகொண்டிருக்கும். உன்னிகளா! சாலைப் பாரம்பரியத்தைப் பொறுத்தவரையில் கடவுள் கூட அத்தனை முக்கியமல்ல. ஆசான்தான் மிக முக்கியம். ஆசான்தான் எல்லாமே. ஆசார்ய தேவோ பவ. தன்னுடைய ஆசிரியர் மீது முழுமையான நம்பிக்கையையும் பக்தியையும் பூண்டாலன்றி ஒரு மாணவனால் இந்த வித்தையில் ஒரு படிகூட முன்னேற முடியாது. ஆகையால்தான் பண்டைய ஆசான்களின் வித்யா மகிமையையும் தியாகத்தையும் இங்கு நாம் அன்றாடம் போற்றுகிறோம்.

இந்தக் கலை திடீரென்று ஒரே நாளில் தோன்றிவிடவில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக மெல்ல மெல்ல

உருவாக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டு இன்று ஒரு வித இலக்கணத்துடன் திகழ்கிறது. இக்கலையைப் பயின்ற பயிற்றுவித்த ஒவ்வொரு ஆசானும் ஏதோ ஒரு வகையில் இந்த வித்தையை உயர்த்தியிருக்கிறார். புதிய பிரயோகத்தை புதிய மர்மஸ்தானத்தைக் கண்டுபிடித்துக் கலையின் நுண்ணிய உயரங்களைத் தொட்டிருக்கிறார். அதனை அவர் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்ததனால்தான் வாழையடி வாழையாக அது பயிற்றுவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு நாளும் குருதாரையை வணங்கி ஆசான்களை நினைக்க நினைக்க அவர்களுக்கும் உங்களுக்கும் ஒரு தொடர்பு உண்டாகும். அது உடல் ரீதியாக ஏற்படும் தொடர்பல்ல. மனரீதியாகக் கால வர்த்தமானங்களைக் கடந்து ஏற்படும் தொடர்பு. அதனை வெறும் வார்த்தைகளால் விளக்குவது கடினம். நாட்கள் செல்லச் செல்ல நீங்களே அதனை உணர்வீர்கள்."

குருதாரையை நெருங்கினார் மழபாடியார். ஏதோ ஒரு உந்துதலில் அந்த இடத்தைத் தொட்டு ஸ்பரிசிக்க வேண்டுமென்று ஒரு உந்துதல் உண்டாயிற்று. அவரது கரங்கள் குருதாரையை நோக்கி நீண்டன. சிலீர்! நெற்றிப் பொட்டில் மீண்டும் அதே பாதங்கள். பின் இடுப்பு. மிக உறுதியான உடல்கட்டு. வயிரம் பாய்ந்த தோள்கள். கையில் மிக நீண்ட வாள். அட, நமது வாளைப் போலவே இருக்கிறதே அது?

அவ்வளவுதான். கணநேரத்தில் தோன்றி மறைந்து விட்டது அந்தக் காட்சி.

மழபாடியரைப் பின்தொடர்ந்த கம்பன் மணியனாருக்கோ நடந்து கொண்டிருப்பவற்றை சரிவர உணர முடியவில்லை. சரி ஏதோ நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு நிதானமாகப் பழங்கதைகள் பேசி ஓய்வெடுப்போம். பிறகு மற்ற வேலைகளைக் கவனித்துக் கொள்ளலாம் என்று பார்த்தால் முதல் நாளில் அதுவும் மாலை நேரத்தில் களரிப் பயிற்சியைத் துவங்கி விட்டாரே தம்புராட்டியார்? காலையில் பார்க்கும்போது மிக சாந்தமானவராக அன்பானவராகத் தெரிந்தார். ஆனால் இப்போதோ உருவத்திலும் குரலிலும் கடுமை ஏறிக் கிடக்கிறதே? இவரது மாணவராகச் சமாளிப்பதென்பது எளிதான காரியம் இல்லை போலிருக்கிறதே? உங்களுக்காகப் பெரும்பணியொன்று காத்திருக்கிறது என்று சொல்லிச்

சொல்லிக் கடைசியில் இங்கு கொண்டுவந்து விட்டு விட்டாரே இந்தக் கள்ள பிஷு? கெட்டது குடி!

மணியனார் வீரர்தான். போர்க்களத்தில் வீராவேசமாக வாள்சுழற்றி எதிரிகளைப் பந்தாடக் கூடியவர்தான் ஆனால் தம்புராட்டியார் காலையில் புகன்ற நிகழ்வுகளும் அந்தக் களரியின் சூழலும் அவருள் இனம் புரியாத பயத்தைத் தோற்றுவித்திருந்தன. இதில் ஜெயிப்பதற்கு வெறும் வாள் பயிற்சியும் வேல் பயிற்சியும் மட்டும் போதா. இது வேறு வகையான விளையாட்டு. இதன் இலக்கணங்கள் வேறு. விதிமுறைகள் வேறு. இதில் உடல் மட்டுமல்ல மனமும் பெருமளவில் சம்மந்தப்படுத்தப்படுகிறது. இது நாம் இதுவரை அறிந்திராத விவகாரம் நிறைந்த வித்தை என்று பற்பல எண்ணங்களும் அவருள் தோன்றி மறைந்தன.

அவருடைய எண்ணங்களைப் படித்தறிந்தவர் போலும் தம்புராட்டியார் கீழ்க்கண்ட வாசகங்களைப் புகன்றார் :

"உன்னிகளா! நீண்ட தூரம் பிரயாணம் மேற்கொண்டு இங்கே வந்திருக்கிறீர்கள் என்பதை அறிவேன். என்றாலும் இன்றே இப்பொழுதே உங்களின் பயிற்சியைத் துவங்கியாக வேண்டிய கட்டாயத்திலிருக்கிறேன். இன்று பௌர்ணமி. திசையும் இருப்பும் மங்கலமாக இருக்கின்றன. அதனால் முதல் பாடமான மெய்ப்பயட்டை இன்றே துவங்கி விடுவோம்.

அருள்மொழி இந்தக் கலையின் சகலவித நுணுக்கங்களையும் உங்களுக்குப் போதிக்கும்படி எழுதியிருக்கிறான். ஒரு மாணவர் தன்னுடைய ஏழாவது பிராயத்திருந்து வித்தை கற்கத் துவங்கினாலொழிய இதனை சரிவரக் கற்க முடியாது. அப்படி இருக்கும்போது ஒரு சில திங்களில் இக்கலையின் நுட்பங்களனைத்தையும் உங்களுக்கு போதிக்க வேண்டுமானால் அதற்கு நீங்களும் நானும் எத்தனை தூரம் உழைத்தாக வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்."

"ஒரு சில திங்களிலா? என்ன சொல்கிறீர்கள்?"

"ஆம். இருபது வருடங்கள் கழித்து இந்த விரோதி வருடத்தில் இன்னும் சில திங்களில் நடைபெறப் போகும் காந்தளூர்க் கலமறுக்கும் போட்டிகளில் சோழநாட்டின் வீரர்களாக நீங்களிருவரும் பங்கேற்கப் போகிறீர்கள். தீர்க்கப் பட வேண்டிய பழைய கணக்கை நீங்களிருவருமாகத் தீர்த்து

வைக்கப் போகிறீர்கள். அப்படித்தான் எழுதியிருக்கிறான் அருள்மொழி!"

மணியனாருக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிச் சுழன்றது. ஆச்சரியத்துடன் தங்களின் பின் நிற்கும் ஆனந்த தேரரை நோக்கினார்.

"ஆம். இதுதான் பேரரசர் உங்களுக்கிட்டுள்ள பெரும்பணி!" என்று சொல்லாமல் சொல்வது போலும் பிஷுவின் கண்கள் தாழப்படிந்தன.

60. உள்விழிப் பார்வை



"உன்னிகளா! நீங்கள் கடகங்களில் பயின்ற சங்கிராமப் பயிற்சிகளுக்கும் இங்கே பயிலப் போகும் களரிப் பயிற்சிக்குமான வேறுபாடுகள் மலைக்கும் மடுவுக்கு மானவை. ஆதலின் அதனைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறலாமென்று கருதுகிறேன்

கடகப் பயிற்சிகளின் முக்கிய நோக்கம் உங்களைப் போருக்காகத் தயாரிப்பது மட்டுமே. குறிப்பிட்ட ஆயுதங்களைக் குறிப்பிட்ட வகையில் பிரயோகித்து எதிரியை வீழ்த்துவதே அதன் முடிவான செயல்பாடு. எதிரிகளும் அவர்தம் ஆயுதங்களு மின்றி அங்கே உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஆயுதத்தோடு உங்களை ஒருவன் தாக்க வருகிறானெனில் அவனை எதிர்கொள்ள உங்கள் கைகளிலும் தகுந்த ஆயுதம் இருந்தேயாக வேண்டும். சுருங்கச் சொன்னால் சங்கிராமப் பயிற்சிகளைப் பொறுத்தவரை ஆயுதங்களே பிரதான மானவை. எதிரியே இலக்கு.

ஆனால் சாலைப் பாரம்பரியத்தைப் பொறுத்தவரை இங்கு அளிக்கப்படும் பயிற்சிகளின் நோக்கமே வேறு. இங்கு எதிரி என்று யாருமில்லை. நம்மை எதிர்த்துச் சண்டையிடு பவர்களை நாம் எதிரியாகக் கருதுவதில்லை. நண்பராகவே கருதுகிறோம். ஏனெனில் நம்முள் இருக்கும் பல்வேறு ஆற்றல்களையும் உணர அவர் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறார்.

இங்கே அளிக்கப்படும் பயிற்சிகளில் ஆயுதங்களை உபயோகப்படுத்துகிறோம் என்பது உண்மைதான். ஆனால்

அவற்றை மட்டுமே நம்பிச் செயல்படுவதில்லை. ஆயுதம் கையில் தரித்திருப்பவனே வெற்றி பெறுவான் என்றும் சொல்வதற்கில்லை. பயிற்சியடைந்த ஒரு மாணவர் எந்த ஆயுதமேந்திய எதிரியையும் நிராயுதபாணியாய்ச் சமாளிக்கும் திறன் பெற்று விடுவார் இங்கே உடலுக்கும் மனதிற்கும் அதனைத் தாண்டி நிற்கும் எல்லையற்ற ஆத்மனுக்கும்தான் முக்கியத்துவம் அளிக்கிறோம். இது மிக முக்கியமான அம்சம்.

சாலைப்பயிற்சிகளின் இலக்கு நம்மை நாமே வெல்வதே யொழிய எதிரிகளை வெல்வதல்ல. ஒரு வகையில் இதுவும் ஒரு தவம். யோகம். தமக்கோ தம்மைச் சேர்ந்தவர்களுக்கோ தீமை விளையும்போது மட்டுமே நாம் இப்பயிற்சிகளை பிறருக்கு எதிராகப் பயன்படுத்துகிறோம். மற்றபடி இந்த வித்தைகளைப் போரிலோ பிற சந்தர்ப்பங்களிலோ உபயோகப்படுத்தக் கூடாது என்பது கண்டிப்பான விதி. இதனால்தான் பல காலமாகச் சாலைகளில் இந்த வித்தை கற்பிக்கப்பட்டும் அவற்றை ஒரு போதும் படை வீரர்களுக்குக் கற்பிக்கக்கூடாது என்றொரு விதி கடைபிடிக்கப்பட்டு வந்தது. தற்போது அரசியல் காரணங்களால் இந்த விதி மீறப்பட்டுக் கொண்டிருப்பது வேறு விஷயம்.

ஆகவே நான் உங்களுக்குக் கற்பிக்கப்போகும் வித்தைகளை நீங்கள் போர்க்களங்களில் ஒரு போதும் உபயோகப்படுத்தவே கூடாது என்பதைக் கண்டிப்பாகத் தெரிவித்து விடுகிறேன். இப்பயிற்சிகளின் மூலம் கிடைக்கும் மன ஒருமைப்பாடும் உடல் ஒழுக்கமும் உங்களுக்குப் போர் புரியும் நேரத்தில் பேருதவியாக இருக்கும் என்பது உண்மைதான். ஆனால் இங்கு நான் கற்பிக்கப் போகும் பிரயோகங்களையும் வீச்சுக்களையும் ஒருபோதும் போர்க்களங்களில் உபயோகப்படுத்த மாட்டோமென்று நீங்களிருவரும் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள வேண்டும். நான் சொல்லிக்கொண்டே போகும் விஷயங்கள் புரிகின்றனவா? சந்தேகங்கள் ஏதேனும் உண்டா?"

"புரிகின்றன" என்றார்கள் இருவரும். என்றாலும் கம்பன் மணியனாரின் குரலில் சந்தேகத்தின் சாயல்கள் தொக்கி நின்றன. கண்களால் ஒன்றையும் காணமுடியாத இவரா நமக்குக் களரிப் பயிற்சியளிக்கப் போகிறார்? என்று மலைத்தது அவரது மனம். தம்புராட்டியாரின் ஆற்றலில் அவருக்குச் சந்தேகமில்லை என்றாலும் பார்வையற்ற

ஒருவரால் தன்னைத் தாக்க வரும் எதிரியைச் சமாளிப்பதே இயலாத காரியமாயிற்றே? அப்படிப்பட்ட ஒருவரால் எப்படி அடுத்தவர்களுக்குச் சரிவரப் பயிற்சியளிக்க முடியும்? எவ்விதம் காந்தளூர்ச் சாலையின் வீரர்களுக்கு எதிராக நம்மை நிறுத்த முடியும்? ஒரு வேளை இவருக்குப் பார்வை பறிபோய்விட்ட விஷயத்தைப் பேரரசர் அறிந்துகொள்ளாமல்.. அடடா! என்னே துரதிருஷ்டம்?

"உன்னிகளா! உங்களின் சந்தேகம் எனக்குப் புரிகிறது பார்வையற்ற ஆதரவற்ற இந்த வயதான பெண்மணியா நம்மைக் கலமறுக்கும் போட்டிகளுக்காகத் தயார் செய்யப் போகிறார் என்றுதானே மலைக்கிறீர்கள்?"

"அடடா.. அதெல்லாம் ஒன்றுமில்லை!" என்றார் மணியனார் முன்வந்து. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது.

"உன்னி! களரி மண்ணில் நிற்கும்போது ஆசிரியருக்கும் மாணவருக்குமான உறவு தெளிந்த நீரோடை போன்று இருக்க வேண்டும். அதில் கலங்கலே இருக்கக் கூடாது ஆகையால் உனக்குச் சந்தேகங்கள் ஏதேனும் தோன்றினால் அதனை தைரியமாக என்னுடன் பகிர்ந்து கொள்ளலாம்."

"உங்களின் ஆற்றலிலோ வித்தையிலோ எங்களுக்குக் கடுகளவு சந்தேகமும் ஏற்படவில்லை. ஆனால் பார்வையற்ற ஒருவரால் எப்படி இந்த வித்தையை அடுத்தவருக்குக் கற்றுக் கொடுக்க முடியும்? என்கிற கேள்வி மனதில் ஏனோ முளைத்து விட்டது. எங்களின் அனுபவமின்மை அதற்கான காரணமாக இருக்கலாம். இது சந்தேகமல்ல. ஒரு கேள்வி மட்டுமே.."

"கேள்வியோ, சந்தேகமோ முதலில் அதனைத் தீர்த்துக் கொண்டு விடுவது நல்லதல்லவா? அதற்கு ஒரே வழிதான் உள்ளது" என்றார் தம்புராட்டியார். மெல்ல அவரது முகத்தில் ஒரு முறுவல் விரிந்தது.

பிஷுவின் முகத்தில் ஏனோ கலவர இரேகைகள் வந்து படிந்தன. "இப்போதே வேண்டாமக்கா.." என்றார் அவர் மெல்லிய குரலில்.

"அடேய் உதயா! ஏனிப்படி பயந்து நடுங்குகிறாய்? நான் உன் நண்பர்களை ஒன்றும் செய்துவிட மாட்டேன்" என்றார் தம்புராட்டியார். பிஷு ஒரு யோசனையுடன் தலையைக் குனிந்து கொண்டார்.

மழபாடியாருக்கு இந்த சம்பாஷணைகள் ஒன்றும் விளங்கவில்லை. நாகையின் அக்கசாலைப் பெரும்பள்ளியில் வானிலிருந்து பாய்ந்த கத்தியை அனாயசமாகப் பிடித்து நிறுத்திய பிஷுவா இத்தனை தயங்குகிறார்? என்று அவருக்கு மலைப்பேற்பட்டது.

"உன்னிகளா! நான் கற்ற வித்தையை சிறிதளவு உங்களிருவருக்கும் செய்து காண்பிக்கலாம் என்றிருக்கிறேன். உங்களில் யார் என்னுடன் முதலில் மோதப் போகிறீர்கள்?"

தம்புராட்டியாரின் கேள்விக்கு பதிலே எழவில்லை. களரி முழுவதும் சங்கடமானதொரு அமைதி பரவி நின்றது. களரிக்கு வெளியே "கிர்ர்ர்ர்ரிக்.. கிர்ர்ர்ர்ரிக்.." என்று தமது இரவுக்கச்சேரியை மாலையிலேயே துவங்கி விட்ட சில்வண்டுகளின் கூக்குரலைத் தவிர வேறு சப்தங்களே எழவில்லை.

"உன்னிகளா! இருவரில் எவராவது ஒருவர் தைரியமாக முன்னே வாருங்கள்.." என்றார் தம்புராட்டியார் மீண்டும். மணியனார் முன் செல்வார் என்று மழபாடியாரும் மழபாடியார் முன் செல்வார் என்று மணியனாரும் ஒருவரையொருவர் நோக்கியபடி தயங்கித் தயங்கி நின்றார்கள்.

சட்டென்று எவரும் எதிர்பாராத கணத்தில் தன் அருகிலிருந்த செறுவடியொன்றினைத் தூக்கி அவர்கள் இருக்கும் திசையில் எறிந்தார் தம்புராட்டியார். தங்களைத் தாக்கவரும் குறுந்தடியைத் தன்னிச்சையாக மழபாடியாரின் கரங்கள் காற்றில் எம்பிக் குதித்துப் பிடித்தன.

"பிடித்தது யார்? பரமன் போலிருக்கிறது? சரிதான். குருகாடிக் கிழாரின் பெயரனே.. வா என்னுடன் மோதுவதற்கு!" - தன்னுடைய ஆடையை ஒரு முறை இழுத்து வரிந்து கட்டிக் கொண்டார் தம்புராட்டியார்.

"அக்காவுடன் மோதுவதற்குமுன் மெய்ப்பையை அவிழ்த்து விடுங்கள். முன்னமே கூறியிருக்க வேண்டும். மறந்து விட்டேன்" என்றார் பிஷு. அவருடைய குரலில் உற்சாகம் சிறிதுமில்லை. தன்னுடைய மெய்ப்பையைக் கழற்றி வைத்துவிட்டு இடுப்புத் துணியை இறுக்கிக் கொண்டார் மழபாடியார்.

"என்ன, மோதலாமா?"

"மோதலாம்!"

அவ்வளவுதான். அடுத்த ஓரிரு கணங்களில் தன் உடலை ஒரு வகையாக வினோதமாக மடக்கி எழுந்து ஒரு உறுமலுடன் முன் நின்றார் தம்புராட்டியார். அவரது கரங்களிலும் ஒரு குறுந்தடி பளபளத்தது. ஒரு பாதம் முன் வந்து நிற்க, மற்றது சற்றே பின்னோக்கித் திரும்பி நின்றது உடல் முன்வளைந்திருந்தது. கண்கள் நிலைகுத்தி ஒரே பார்வை பார்த்தன. அவர் நிற்பது எதிரியின் தாக்குதலை எந்தக் கணத்திலும் எந்தத் திசையிலும் சமாளிக்க உதவும் சிம்ஹவடிவு நிலை என்பதைப் பாவம், நண்பர்கள் அறியவில்லை.

மழபாடியாரும் தன் பங்கிற்கு மெல்லத் தனது குறுந்தடியைச் சுழற்ற ஆரம்பித்தார். பெருந்தடியான சிலம் பாட்டத்தில் அவருக்குச் சிறிதளவு பயிற்சி உண்டென்றாலும் அது எத்தனை தூரத்திற்குத் தற்போது உதவும் என்பதை அனுமானிக்க முடியவில்லை. முதல் தாக்குதலைத் தம்புராட்டியாரே துவங்கட்டும். நாம் நம்மைத் தற்காத்துக் கொண்டால் மட்டும் போதுமானது என்று அவருக்குத் தோன்றியது.

அவரது குறுந்தடிச் சுழற்றல் சப்தங்கள் தம்புராட்டியாரால் கூர்மையாகக் கவனிக்கப்பட்டன. ஒரு கட்டத்தில் அவரும் மெல்லத் தடியைச் சுழற்றியபடி மழபாடியாரை நெருங்கினார். நெருங்க நெருங்கச் சுழற்சியின் வேகம் படிப்படியாக அதிகரித்தது போல் காணப்பட்டது.

இந்த சலசலப்புக்கெல்லாம் அஞ்சி விடுவேனா என்ன' என்பதைப்போல் மழபாடியாரும் அந்தச் சுழற்சிக்கு இணையாகத் தன்னுடைய சுழற்சியின் வேகத்தை அதிகப்படுத்திக் கொண்டார். ஒரு கட்டத்தில் "விர் விர்ர்..!"ரென்று வேகம் வெகுவாக அதிகரிக்க, நெருக்கம் அதிகமாகி விட்டதால் மழபாடியார் தம்மைத் தற்காத்துக் கொள்ளும் பொருட்டு அந்தத் தடியைத் தனது குறுந்தடியினால் தடுத்து நிறுத்தினார்.

"படீர்.. படீர்!" என்று பயங்கரச் சப்தங்கள் எழுந்து அந்தச் சூழலின் அமைதியைக் குலைத்தன. படு பயங்கரமான தொரு குறுந்தடித் தாக்குதல் தங்களின் கண்ணெதிரே நடைபெற்றுக் கொண்டிருப்பதை மணியனாரும் பிஷ்ணுவும் கண்கொட்டாமல் கவனித்தார்கள்.

தாக்குதல் துவங்கிய சில நொடிகளிலேயே தாம் யார், எங்கே இருக்கிறோம், என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதையெல்லாம் மழபாடியார் மறந்தார். அவரது உடலும் மனமும் நடைபெற்றுக் கொண்டிருந்த தாக்குதலில் முழுமையாக நிலைத்து விட்டன தம்புராட்டியார் அவரை வெவ்வேறு கோணங்களில் விதவிதமாய்த் தாக்கிக் கொண்டிருக்க. மிகுந்த முனைப்புடன் தன்னை அவர் தற்காத்துக் கொள்ள வேண்டியிருந்தது கணநேரம் அசந்தாலும் எதிரில் சுழன்று கொண்டிருக்கும் குறுந்தடி அவரது மேனியைப் பதம் பார்த்துவிடும் என்கிற நிலை.

ஓரிரு நிமிடங்கள் இவ்வாறு கழிந்த பின்னர் சுழற்சியின் வேகம் மட்டுப்படாதது மட்டுமன்றி தாக்குதலின் உக்கிரமும் அதிகரிப்பதை மழபாடியார் உணர்ந்தார் தம்புராட்டியாரின் தடியடியைச் சமாளிக்கத் தற்போது அதிக முயற்சி தேவைப்பட்டது. அவர் கொடுக்கும் வேகத்தில் பாதியையாவது பதிலுக்குக் கொடுத்தால்தான் தாக்குதலைத் தடுத்து நிறுத்தலாம் எனும் நிலை ஏற்பட்டது.

மெல்ல மெல்லத் தனது சக்தி விரயமாகி வருவதை மழபாடியார் கண்டார். அவரது மேனி வியர்வைக் குளியலில் மூங்கிக் கொண்டிருந்தது. உள்ளங்கைகளில் வியர்வை படிந்ததால் தடி கரங்களில் நிற்க மறுத்து வழுக்கியது. உடனடியாக ஏதாவது செய்தேயாக வேண்டும் என்று அவர் முடிவு செய்த அந்தக் கணத்தில்....

தம்புராட்டியார் ஒரு ஹுங்காரத்துடன் வானில் ஒரு முறை குதித்துப் பறந்தபடி காலை முன் நீட்டிக் கீழே இறங்கினார். சரியாக அவரது பாதங்கள் மழபாடியாரின் வலது மணிக்கட்டைத் தாக்கின. "அம்மா!"வென்ற சப்தத்துடன் மழபாடியாரின் குறுந்தடி வானில் பறந்தது. அவரால் தனது விரல்களை ஓரிரு நொடிகள் மடக்கக் கூட முடியவில்லை!

"ஐயோ! அக்கா.. என்ன செய்து விட்டாய்?" என்று பதட்டத்துடன் முன்வந்தார் பிஷ்ணு.

"ஒன்றுமில்லையடா! பதறாதே. மணிக்கட்டினுள் ஓடும் மத்திய நரம்பிற்கருகில்[197] ஒரு மர்மஸ்தானம் உள்ளது

---

[197] Median Nerve என்று இந்நரம்பை ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள்

அதனை லேசாகத் தாக்கினேன். எத்தனை தாக்கியும் தடியை விடாமல் சுழற்றிக் கொண்டேயிருந்தான். அதனால்தான்..."

"அவரால் தனது விரல்களை மடக்கவே முடியவில்லை!"

"ஓ! கொஞ்சம் தவறிப் போய்ப் பட்டுவிட்டது போலும். இரு..." என்றவர் பூத்தாரைக்கருகில் சென்று சிறிய வெண்கலப் பாத்திரத்தை எடுத்து வந்தார். அதிலிருந்த எண்ணை மழபாடியாரின் வியர்வை பொங்கிய கரங்களில் படிந்தது. முழங்கையிலிருந்து விரல் நுனிவரை தம்புராட்டியார் நீவி விட, சுரீரென்று ஒரு வலி முழங்கை வரை பரவியது.

"ஐயோ! அம்மா.. வலிக்கிறதே...." என்று துடியாய்த் துடித்தார் மழபாடியார்.

"வலி கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும். ஹும்... உனது உயரத்தை நான் சரியாகக் கணிக்கவில்லை. அதனால் நேர்ந்த விபரீதம் இது. அடுத்த முறை சரியாகத் தாக்குகிறேன்..." என்றார் தம்புராட்டியார் சிரித்தபடி.

"என்ன அக்கா இது? இவரோ வலியால் துடித்துக் கொண்டிருக்கிறார். நீயோ வேடிக்கை செய்து கொண்டிருக்கிறாயே?" என்று கடிந்து கொண்டார் பிஷு.

"வலி வரத்தான் செய்யும். இது போன்று இன்னும் பல தாக்குதல்களையும் வலிகளையும் இவர்கள் சமாளித்துத்தான் ஆகவேண்டும். வேறு வழியேயில்லை. இந்த முறை அடி வாங்கி விட்டானல்லவா? அடுத்த முறை தாக்குதலை இதனினும் கவனமாக எதிர்கொள்வான். உன்னி! நன்றாகவே கம்பு சுழற்றுகிறாய். பாட்டனின் வீர உதிரம் உன்னுடைய உடம்பிலும் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. அது சரி, எங்கே அந்த சந்தேகப் பிராணி? அவனது கேள்விக்கு பதில் சொல்லப்போய்ப் பாவம் பரமன் என்னிடம் மாட்டிக் கொண்டான்..."

"இதோ! இங்குதான் இருக்கிறேன்..."

"என்ன நடந்ததென்பதைக் கவனித்தாயா?"

"ஆஹா! நானும் பிஷுவும் புல்லரித்துப் போயல்லவா பார்த்துக் கொண்டிருந்தோம்?"

"புல்லரிப்பெல்லாம் ஒரு பக்கம் கிடக்கட்டும். நான் என்ன செய்தேன் எதற்காகச் செய்தேன் என்பதையெல்லாம் சொல் பார்ப்போம்?"

"அது... வந்து... உங்களின் இருவரின் பேரிலும் மாறி மாறிக் கவனம் சென்றதால்... நீங்கள் குறிப்பாக என்ன விதமாகச் சண்டையிட்டீர்கள் என்பதைக் கவனிக்க இயலவில்லை."

"இவ்வாறு நீ கூறுவது இதுவே முதலும் கடைசியுமாக இருக்கட்டும். உன்னி! களரிச்சாலையில் நான் மிகக் கடுமையான ஆசானாக நடந்து கொள்வேன். இதன் காரணமாகவே இந்தச் சாலையில் வந்து சேர்ந்த பல மாணவர்கள் விட்டால் போதுமென்று ஓடிவிட்டார்கள். நான் என் மாணவர்களிடம் முழுக்கவனத்தையும் மன ஒருமைப்பாட்டையும் ஈடுபாட்டையும் எதிர்பார்க்கிறேன். நானும் அதே அளவிற்கு ஈடுபாட்டுடன் அவர்களுக்கு இக்கலையைக் கற்பிப்பதுதான் அதற்குக் காரணம். ஆகவே அடுத்த முறை உன் கவனத்தை அங்குமிங்கும் சிதறவிடாமல் என்னுடைய பிரயோகங்களை முழுவதுமாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். தெரிந்ததா?

இப்போது நான் கூறப்போகும் செய்திகளைக் கவனமாகக் கேளுங்கள். எனக்குக் கண்பார்வை முதலில் பறிபோனபோது அது ஒரு பெருங்குறையாகத்தான் இருந்தது. பயிற்சிகளை சரிவர மேற்கொள்ள முடியவில்லை. மனம் சோர்ந்து போய்ப் பல நாட்கள் தனிமையில் அழுதிருக்கிறேன். பின் மெல்ல மெல்ல யோசித்து எனக்குரிய வகையில் புது வகையான பிரயோகங்களையும் வீச்சுக்களையும் நானே கற்றறிவது என்று முடிவு செய்தேன் இது எனக்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட பாடங்களிலிருந்து மாறுபட்டது. சற்றே கடினமானது. என்றாலும் எனக்கு வேறு வழியில்லை. ஆதலால் முழு ஈடுபாட்டுடன் என்னுடைய பழைய பிரயோகங்களை மாற்றி அமைத்தேன்.

சாபமாக எனக்குக் கிடைத்த பார்வைக் குறைபாடு உண்மையில் ஒரு வரம் என்பது நாட்கள் செல்லச் செல்லத்தான் புரிந்தது. வெறும் பார்வையால் பார்ப்பது மட்டும் பார்வையன்று. உடலின் ஒவ்வொரு அங்கத்தாலும் வெவ்வேறு விதங்களின் பார்க்க முடியும் என்கிற உண்மை புலனானது. இதனை உணர்வு ரீதியான பார்வை என்று வர்ணிக்கலாம். இந்த உள்விழிப்பார்வை கிடைத்த பிறகு

புறப்பார்வை தேவையேயில்லை என்பதை உணர்ந்தேன். மெய்யே கண்ணாகுக[198] எனும் பண்டைய களரிமொழி எத்தனை ஆழமானது அழகானது என்பதை என்னுடைய சொந்த அனுபவங்கள் மெய்ப்பித்தன.

இந்தக் கணத்தில் என் கண்கள் காணவில்லையே தவிரப் புலன்கள் மிகுந்த கூர்மையுடனும் விழிப்புணர்வுடனும் இருக்கின்றன. உதாரணமாக உங்களின் மூச்சுக்குழல் சப்தத்தை வைத்து நீங்கள் ஏறக்குறைய மூன்று அடிகளுக்கு முன்னால் நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. என்னுடைய அனுமானத்தை உங்களின் பேச்சுக்குரல் அவ்வப்போது உறுதி செய்கிறது.

உங்கள் மீது நான் குறுந்தடியை விட்டெறிந்தது நீங்கள் என்னிடமிருந்து எத்தனை தூரத்திலிருக்கிறீர்கள் ஏறக்குறைய எத்தனை உயரத்திலிருந்து தடியைப் பிடிக்கிறீர்கள் என்றெல்லாம் அனுமானிக்கத்தான். பரமன் அந்தத் தடியை சற்றே எம்பிக் குதித்துப் பிடித்தான் போலிருக்கிறது. அதனால்தான் அவனுடைய உயரத்தைத் தவறாக மதிப்பிட்டு விட்டேன்.

தடியை நான் சுழற்றத் துவங்கியதும் அவனும் சுழற்றத் துவங்கினான். அவனுடைய சுழற்சி முறையை வேகத்தைக் கணக்கிட்டுக் கொண்டேன். அவன் என்னுடைய தடியைத் தடுத்து நிறுத்திய வேகத்தையும் வீச்சையும் கணித்தேன். சிறிது நேரத்திலேயே அவன் என்ன விதமாகத் தடி வீசுகிறான் என்பது எனக்குப் புரிந்துவிட்டது. என்றாலும் க்ஷண நேர அவகாசம் கொடுத்தால் நான் எதிர்பாராத திசையில் அவன் என்னைத் தாக்கக்கூடும் என்பதால் வெகு வேகமாகத் தடி சுழற்றி அவனைத் தற்காத்துக்கொள்ளும் நிலையிலேயே வைத்தேன். நேரம் செல்லச் செல்ல அவன் மெல்லக் களைப்படைவது தெரிந்ததும் எனது சக்தியை மேலும் கூட்டினேன். ஒரு கட்டத்தில் அவன் தளர்ச்சி யடைந்து தடியைத் தவறவிடும் நிலை வந்ததும்...."

"மணிக்கட்டில் உன்னுடைய வர்மத் தாக்குதலைக் காண்பித்து விட்டாய். அல்லவா?"

---

[198] இன்றும்கூடப் பல களரியாசான்கள் இப்பழமொழியைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

"அவனுடைய உயரம் பற்றிய என்னுடைய அனுமானம் மட்டும் சரியாக இருந்திருந்தால் அவனுடைய முழங்கையில் தான் அடிபட்டிருக்கும். குறுந்தடி மட்டும் கை நழுவியிருக்கும் ஆனால் அந்த அனுமானம் தவறாகிப் போனதால் அடி பிழறி உயர்ந்திருந்த அவனது மணிக் கட்டைத் தவறுதலாகத் தாக்கிவிட்டேன். உன்னி! இன்னுமா வலித்துக் கொண்டிருக்கிறது?"

"இல்லை. மந்திரம் போட்டதுபோல் வலி பெரிதும் குறைந்து விட்டது" என்றார் மழபாடியார். அவரது முகத்தில் முன்னெப்போதும் கண்டிராத தெளிவு ஏற்பட்டிருந்தது.

61. மெய்ப்பயற்று



அமைதியாகக் களரியின் வடகிழக்கு மூலையில் நின்று கொண்டிருந்த மணியனாரின் எண்ணங்கள் பல்வேறு திசைகளிலும் அலைக் கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அந்த எண்ணங்களுள் பிரதானமானது ஒன்றுதான்: "நன்றாக இந்தத் தம்புராட்டியாரிடம் மாட்டிக் கொண்டு விட்டோம். கள்ள பிக்ஷுவும் பேரரசருமாகச் சேர்ந்து இந்தச் சிக்கலுக்குள் நம்மைக் கேட்காமலே தள்ளிவிட்டு விட்டார்கள்..."

சில வாரங்களுக்கு முன், ஒரு பின்மாலை நேரத்தில் பதரிட்ட விஹாரையின் மேல்தளத்தில் நின்று கண்களில் ஒளி பொங்க அவ்விஹாரையின் தலைமை பிக்ஷுவான மஹாகாசியப தேரர் புகன்ற வாக்கியங்கள் அவருடைய காதுகளில் மீண்டும் ஒரு முறை ஒலித்து ஓய்ந்தன.

"அருள்மொழி! இந்தச் சிக்கலான பிரச்சனையில் உனக்கு உதவக்கூடிய ஒருவர் இன்று காலை காம்போஜத்திலிருந்து வந்திருக்கும் ஸ்ரீசைலேந்திர விஜயம் என்னும் பெருங்கலத்தில் வந்து இறங்கியிருக்கிறார் உனக்கு மிகவும் நெருக்கமாகத் தெரிந்த நண்பர்தான்...."

ஆக, நமது சிக்கல்கள் அனைத்திற்கும் காரணம் இந்த "நெருக்கமாத் தெரிந்த நண்பரான" மாளிகைப்புறத்து வீட்டின் உதயமார்த்தாண்டத் தம்புரான் என்கிற பிக்ஷு

ஆனந்த தேரர்தான். கொற்கையிலோ தொண்டியிலோ இவரைச் சரியான தருணம் பார்த்துக் கடலில் தள்ளி விட்டிருந்தோமானால் கதை முடிந்து போயிருக்கும். நாமும் இந்நேரம் நிம்மதியாகத் தொண்டை மண்டலத்திற்குத் திரும்பியிருக்கலாம். நல்லதொரு சந்தர்ப்பத்தைக் கைநழுவ விட்டுவிட்டோம்.

நாகையில் பல்வேறு பேச்சுக்கள் நடைபெற்ற போதிலும் அவற்றில் காந்தளூர்ப் போட்டிகள் குறித்து விவாதிக்கப் பட்ட போதிலும் ஒரு முறை கூடப் பேரரசரோ மஹா காசியப தேரரோ ஏன், பல்லவராயர் கூட இந்த ஏற்பாடுகள் குறித்துத் தம்மிடம் தெரிவிக்கவில்லை என்பது அவருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

ஒரு வேளை நாம் வயதில் மிகவும் சிறிய பிராயத்தினர் அனுபவமற்றவர் என்பதுதான் அதற்குக் காரணமா? அல்லது ஆனந்த தேரர் இவர்களுடன் சேர்ந்து கொண்ட பிறகுதான் இந்தத் திட்டமே முழுமையாக உருப்பெற்றிருக்குமா? இரகசியம் மிகுந்த அரசாங்கப் பணிகளெல்லாம் இப்படித்தான் சொல்லாமல் கொள்ளாமல் காதும் காதும் வைத்தாற்போல நடைபெற்று முடியும் போலிருக்கிறது. நமக்கு இது போன்ற பணிகளில் ஈடுபடுவது புதிய அனுபவம் என்பதால்தான் வித்தியாசமாகத் தோன்றுகிறது போலும்

ஒன்று மட்டும் நிச்சயம். இந்தக் கள்ள பிஷுவை மட்டுமல்ல, இவரது நெருங்கிய நண்பரான அருள்மொழி வர்மரையும் இனி நம்புவதற்கில்லை. இவர்களின் செயல்களுக்குப் பின் பல்லாயிரக்கணக்கான காரண காரியங்கள் மறைந்திருக்கலாம் அவற்றை நம்மோடு பகிர்ந்து கொள்வார்களென்று எதிர்பார்க்க முடியாது. அப்படி எதிர்பார்த்தோமேயானால் தொடர்ந்து இது போன்ற பணிகளில் மனமொற்றி ஈடுபட முடியாது. குதி என்று கூறினால் கேள்வி கேட்காமல் குதித்துவிட வேண்டும் குதித்தபின் ஒருவேளை எதற்காகக் குதித்தோம் என்பது புரியலாம். அல்லது புரியாமலே போகலாம்!

உதாரணமாக, ஏறக்குறையத் தொண்ணூறு ஆண்டு காலப் பழமை வாய்ந்த காந்தளூர்ப் பகை விவகாரத்தில் திடீரென்று நாம் எதற்காக முளைத்தோம் என்பது விளங்கவில்லையே? மழபாடியாருக்காவது அவரது பாட்டனாரின் பின்புலத்தை வைத்து ஏதோ ஒரு

சம்மந்தமிருக்கிறது. ஆனால் நமக்கு? எந்தவிதமான சம்மந்தமும் இல்லையே? பின் எதற்காக நாம் இதில் வலுக் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டிருக்கிறோம்? ஒரு வேளை நமது பாட்டனாரும்கூட இதில் ஏதோ ஒரு இடத்தில் சம்மந்தப்பட்டு-

சேச்சே! திருப்பழனத்தில் விவசாயத்தில் ஈடுபட்டு அமைதியாக வாழ்ந்து மடிந்த விக்கிரமசிங்க வேளாருக்கு இதிலென்ன தொடர்பு இருந்துவிட முடியும்? அடடா! அவருக்குத்தான் தம்மீது எத்தனை அன்பு? எத்தனை பிரியம்? அவரது அந்திமக் காலத்திலல்லவா இராஜராஜப் பல்லவராயரின் பார்வை தம்மீது பட்டது? எத்தனை அன்புடனும் நம்பிக்கையுடனும் பயிற்சிக்காகக் காஞ்சிக் கடகத்திற்குத் தம்மை அனுப்பி வைத்தார்?

ஒரு நாள் கடகத்தில் விறுவிறுப்பான வாள் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் போதுதான் அந்தச் செய்தி இடி போன்று வந்து விழுந்தது. விக்கிரமசிங்க வேளார் காலமாகி விட்டாராம். மணியனாரின் கால்களுக்குக் கீழே இருந்த பூமி அன்று பிளவுண்டது. வயதான தனது பாட்டனாரைக் கடைசிக் காலத்தில் தன்னுடன் வைத்துச் சீராட்ட வேண்டுமென்கிற மணியனாரின் கனவு அன்றோடு தகர்ந்தது.

இவ்வாறு பாட்டனாரைப் பற்றிய எண்ணங்களில் ஓரிரு கணங்கள் ஆழ்ந்திருந்தவரை “உன்னி!” என்ற அதட்டல் குரல் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலைக்கு இழுத்துக்கொண்டு வந்து சேர்த்தது.

“உன்னி! என்ன எதையெதையோ யோசித்துக் கொண்டு நிற்கிறாய்? இப்படி வா. வந்து பரமனின் அருகில் சென்று நில்!” என்று அழைத்தார் தம்புராட்டியார்.

இருவரின் கரங்கள், முழங்கைகள், மார்புகள், கழுத்து, முழங்கால்கள் மற்றும் அவற்றின் அசைவுகள் முதலியன தம்புராட்டியாரால் நீண்ட நேரம் சோதித்தறியப்பட்டன. “ம்... இருவருமே உடற்பயிற்சிகளை ஒழுங்காகச் செய்து உடலைக் கட்டோடு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் அங்கங்களும் அசைவுகளும் மிகவும் இறுகிக் கிடக்கின்றன. கடகப் பயிற்சிகளுடன் ஹத யோகப் பயிற்சிகளையும் நீங்கள் மேற்கொண்டிருந்தீர்களானால்

உடலில் ஒரு இளக்கமான தன்மை[199] உண்டாகியிருக்கும். வளைவுகளும் நெளிவுகளும் சாத்தியப்பட்டிருக்கும் தற்போது அதற்கான வாய்ப்புக்கள் அடைக்கப்பட்டுள்ளன.

ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள். உடலும் அங்கங்களும் உறுதியாக இருப்பது எத்தனை அவசியமோ அதே அளவிற்கு அவை இளக்கமாகவும் வளையும் தன்மையுடனும் ஒரு விதமான ஒய்வில்[200] இருப்பதும் அவசியம் இல்லையேல் சக்தி மிக விரைவில் விரயமாகிக் களைப்பு உண்டாகிவிடும். நீண்ட நேரம் களத்தில் தாக்குப் பிடிக்க முடியாது. வயதாக ஆக இந்த அங்கங்கள் மேலும் இறுகிவிடும் என்பதால் மிகவும் சிரமப்படுவீர்கள் உலோகங்களைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? மிக அதிக அளவில் உறுதி படைத்ததாக இருக்கும் இரும்பானது வளையவே வளையாது எளிதில் உடைந்துவிடும்[201] உபயோகப்படாது[202]. ஆனால் உறுதியுடன் சிறிதளவு இளகிய தன்மையும் கிடைத்தால் அதனைப் பல்வேறு விதங்களிலும் பயன்படுத்தலாம். நமது உடலுக்கும் அந்தத் தத்துவம் பொருந்தும்

ஆகவே என்னுடைய பயிற்சியின் முதற் குறிக்கோள் அந்த இயல்பான இளக்கமான தன்மையை மீண்டும் உங்களின் உடலுக்குள் கொண்டு வருவதுதான். சாலையில் இந்த முயற்சிகளைச் சிறு பிராயத்திலேயே துவக்கி விடுவார்கள். இருபது இருபத்தியொரு பிராயத்தில் உடல் நன்கு வளையும் தன்மையைப் பெற்றுவிடும் ஆனால் உங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை அதனால் உடல் துவக்கத்தில் சற்று சிரமப்படும்.

இந்தப் பயிற்சிகளை இரண்டு கட்டங்களில் செய்வார்கள் முதல் கட்ட முறைக்கு உழிச்சில் அல்லது மெய் உழிச்சில் என்று பெயர். இதில் பிரத்யேகமான முறையில் மூலிகைகளுடன் தயாரிக்கப்பட்ட தைலத்தை

---

[199] Suppleness.
[200] Relaxed என்று ஆங்கிலத்தில குறிப்பிடலாம்.
[201] Brittle.
[202] இரும்பின் பயன்பாடும் இரசாயனமும் பண்டைய இந்தியாவில் மிக உயரிய முறையில் [illegible] வித்தது. புதுதில்லி குதுப்மினாரில் உள்ள ஒரு [illegible] காலத்து [illegible] தூண் இன்றுவரை துளியும் துருப்பிடிக்காமல [illegible] இருக்கும் விந்தையைப் புரிந்துகொள்ள இயலவில்லை.

மாணவரின் உடல் முழுவதும் தடவி விட்டுவிட்டு அவர்களின் உடலை ஆசான் குறிப்பிட்ட முறையில் நீவி விடுவார் முதலில் வலி எடுத்தாலும் நாளாவட்டத்தில் அது பழகிவிடும். இதனைத் தவிர தினமும் ஒரு வகைக் கஷாயத்தையும் காலையிலும் மாலையிலும் குடித்து வர வேண்டும் என்ன உணவு உண்ணலாம் என்பதிலும் ஒரு சில கட்டுப்பாடுகள் உண்டு

மருந்துவாழ் மலையின் அபூர்வமான மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்படும் ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலையில் உழிச்சில் தைலம் மலைமண்டலம் முழுவதும் பிரபலமானது. சாலை புரப்பார் யாருமின்றித் தவித்தபோது இந்தத் தைல வியாபாரம்தான் கைகொடுத்தது. இதற்காகவே தனியாக ஒரு அறை பின்புறம் இருக்கிறது. நாளை காலை அந்தப் பக்கமாகச் சென்றீர்களானால் ஒரு அபூர்வமான மணம் காற்றில் படர்ந்திருப்பதைக் காணலாம்."

"நாளை காலையிலா?"

"ஆமாம் உங்கள் இருவருக்குமே நாளை மெய் உழிச்சில் ஆரம்பமாகிறது. அடுத்த இருபத்தியொரு நாட்களுக்குப் பத்தியச் சாப்பாடுதான்!"

மணியனாரின் முகத்தில் ஈயாடவில்லை. கடைசியில் உணவுத் தட்டிலும் கையை வைத்துவிட்டார்களே பாவிகள்?

"இரண்டாவது கட்டப் பயிற்சிக்கு மெய்ப்பயற்று அல்லது மெய்ப்பயட்டு என்று பெயர் இதனை வார்த்தைகளில் சரிவர விளக்க முடியாது செய்தே காட்டுகிறேன்."

தன் கையிலிருந்த செறுவடியை ஒரு மூலைக்குச் சென்று வைத்து வணங்கிவிட்டுத் திரும்பி வந்த தம்புராட்டியார், நேராக சமபாதத்தில் நின்று கொண்டார் பின் அவரது வலக் கரம் பக்கவாட்டில் நீண்டு வளைந்தது அதற்கேற்ப உடலும் திரும்பியது பின் அதே போல் இடப்பக்கம் அந்த அசைவுகள் நிகழ்ந்தன பின் முன்புறம் பின்புறம் என்று புறக்குறைய ஒரு நடனமிடும் பெண்டு தன் [illegible] உடலைப் பல்வேறு விதங்களிலும் வளைந்து நெளிந்து அசைப்பது போல் தம்புராட்டியாரின் உடல் [illegible] வளைந்தது அந்த அசைவுகள் [illegible] [illegible] நிகழ்த்தப்படுவதை [illegible] தம்புராட்டியார் பார்வைக்குத் [illegible]

இத்தனை விஷயங்கள் கற்று வைத்திருக்கிறாரே? எத்தனை வருடங்களாக இவற்றைப் பயின்று வந்திருக்கவேண்டும்? என்று நண்பர்கள் கண்களால் தமது வியப்பைப் பகிர்ந்து கொண்டார்கள்.

மேலும் ஒரு சில வளைவுகள் செய்து காட்டியபின் அந்த அசைவுகள் நிறுத்தப் பெற்றன.

"எத்தனை இயல்பாக இந்த இயக்கம் நிகழ்ந்தது என்பதைக் கவனித்தீர்களல்லவா? இந்த இயக்கங்களின் நோக்கம் உங்கள் அசைவுகளில் நிதானத்தையும் அங்கங்களில் இளக்கத்தையும் வரவழைப்பதுதான். எங்கே, இவற்றில் சில எளிய வளைவுகளை உங்களால் செய்ய முடிகிறதா பார்ப்போம்? இதோ, இவ்வாறு உடலை வளைத்துக் கைகளைப் பின் திருப்பி..."

திருப்பவே முடியவில்லை. முதுகு வளைந்தால் கரங்கள் வளைய மறுத்தன. கரங்கள் வளைந்தபின் உடலை வளைத்தால் பேரவஸ்தை உண்டானது. என்றாலும் இரண்டு நாழிகைகளுக்கும் மேலாக இந்தப் பயிற்சிகள்.. முயற்சிகள் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.. தொடர்ந்தன. அவ்வளவுதான். மேலும் இனி ஒரு கணம் கூடத் தாக்குப்பிடிக்க முடியாது எனும் நிலை ஏற்பட்ட பிறகுதான் மெய்ப்பயற்று என்றழைக்கப்பட்ட அந்தச் சித்திரவதை ஒரு முடிவுக்கு வந்தது.

"உன்னிகளா, இன்றைய பயிற்சிகள் இத்துடன் முடிந்தன. களரி வந்தனத்தைச்[203] செலுத்திவிட்டு வெளியேறுங்கள்..." என்றார் தம்புராட்டியார். வந்தனத்தைச் செலுத்த வேண்டிய விதத்தையும் அவரே செய்து காண்பித்தார். விட்டால் போதுமென்கிற நினைப்புடன் நண்பர்களிருவரும் களரியிலிருந்து தப்பித்து வெளியேறினார்கள்.

தம்புராட்டியார் அவர்களுடன் உடனடியாக வெளியேறவில்லை. ஒவ்வொரு நாளின் முடிவிலும் களரி தேவதைகளுக்குச் செலுத்த வேண்டிய பிரத்யேக மரியாதைகளைச் செய்துவிட்டு, ஆயுதங்களையும்

[203] களிவந்தனம் களரிக்குள் நுழையும்போதும் வெளியேறும்போதும் செய்யப்பட வேண்டும். வந்தன முறை ஒவ்வொரு களரிக்கும் வேறுபடும்.

அவைகளிடம் ஒப்படைக்க வேண்டிய கடமை அவருக்கிருந்தது.

* * * * * * * *

தண்மை மிகுந்த பௌர்ணமி நிலவின் கிரணங்கள் பூமியெங்கிலும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அந்தக் கிரணங்கள் பட்டுப் பெருஞ்சாலையின் கட்டிடங்களும் ஒரு பிரத்யேக ஒளியுடன் பளபளத்துக் கொண்டிருந்தன.

சாலையின் திறந்தவெளி மேல் மாடத்தில் நமது கதை மாந்தர்கள் நால்வரும் இரவு உணவை முடித்துக்கொண்டு ஆயசத்துடன் வீற்றிருந்தார்கள் மழபாடியாருக்குக் கண்கள் ஏறக்குறைய சொருகிய நிலையில் இருந்தன விட்டால் அந்த மாடத்திலேயே தலையணை எதுவுமின்றிப் படுத்துறங்கத் தயாராகவே இருந்தது அவரது உடல் மணியனாருக்கும் உடல் களைப்பு அதிகமாக இருந்தாலும் ஒரு வேளை தம்புராட்டியார் மிச்சமிருக்கும் பூர்வகதையை சொல்லத் துவங்கி விட்டால் அதனைக் கட்டாயம் கேட்டேயாக வேண்டும் என்கிற முனைப்புடன் அமர்ந்திருந்தார்.

"என்ன உன்னிகளா? முதல் நாள் களரி அனுபவம் எவ்வாறு இருந்தது?" என்று வினவினார் தம்புராட்டியார். பழையபடி அவரது குரல் கனிந்திருந்தது.

"மிகவும் களைப்பாக இருக்கிறது.." என்றார் மழபாடியார் நாக்குழறியபடி.

"நமது உடலுக்குத் தேவையான வலுவை அளிப்பது பிராணன். பிராண சக்தி அச்சக்தி அதிகம் விரயமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் பயிற்சிகளின்போது நீங்களிருவரும் நாகப் பாம்புகள்போல் புஸ்...புஸ்.ஸென்று அளவுக்கதிகமாக மூச்சுவிட்டுக் கொண்டிருந்தீர்கள். அதனால் சக்திவிரயம் அதிகமாகி விட்டது நாளை முதல் பிராணாயாமப் பயிற்சிகளையும் துவக்கியாக வேண்டும் போலிருக்கிறது."

"இன்னும் இதுபோல் எத்தனையெத்தனை பயிற்சிகள் உள்ளன?" என்றார் மணியனார் அலுப்புடன்.

"கலமறுக்கும் போட்டிகளில் நீங்கள் [illegible] தேறுவதற்கு எத்தனை பயிற்சிகள் தேவையென்று [illegible] நினைக்கிறேனோ அத்தனை பயிற்சிகளும் [illegible]

உன்னிகளா! நான் இன்னும் அதிக காலத்திற்கு உயிரோடு இருக்க மாட்டேன். அதற்குள் எனக்குத் தெரிந்த அத்தனை வித்தைகளையும் உங்களுக்குக் கற்றுத் தந்து விட்டேனானால் நிம்மதியாகப் போய்ச் சேர்வேன்."

"ஐயோ, ஏன் இப்படித் தகாத வார்த்தைகளெல்லாம் உங்கள் திருவாயிலிருந்து வருகின்றன?"

"அப்படியில்லை உன்னி. கடுமையான பயிற்சிகளுக்கு ஆட்படுத்தும்போது மனதில் அலுப்பும் கசப்புணர்வும் தோன்றுவது இயல்பு. இன்னும் எத்தனையெத்தனை பயிற்சிகள் உள்ளன? என்று நீ இப்போதே கேட்க ஆரம்பித்து விட்டாய். நாட்கள் செல்லச் செல்ல இந்தத் தம்புராட்டியாருக்கு வேறு வேலையேயில்லயா? எதற்காகப் பயிற்சி பயிற்சி என்று உயிரையெடுக்கிறார்கள்? என்று தோன்றும். கலமறுக்கும் போட்டியாவது, மண்ணாவது! எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஊருக்குப் போய்ச் சேரலாம் என்றுகூடத் தோன்றலாம். அவ்வாறான எண்ணங்கள் மனதில் எழும்போது நான் முன்பு சொன்ன வார்த்தைகளை நீங்கள் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். இப்போதே இவளிடம் எல்லா வித்தைகளையும் கற்றுக்கொண்டால்தான் உண்டு. பின்னாளில் இந்தக் கிழவி இருப்பாளோ மாட்டாளோ? எனவே.."

"நீங்கள் சொல்ல வந்தது புரிந்ததம்மா" என்றார் மழபாடியார் குறுக்கிட்டு. மேலும் அந்தப் பேச்சை அவர் வளர்க்க விரும்பவில்லையென்பது புரிந்தது.

"ம்.. சரி. இன்று காலை நான் கூறிக்கொண்டிருந்த பழைய புராணத்தின் மிச்சப் பகுதிகளைக் கூறி முடித்து விடலாம் என்றுதான் உங்களை இங்கே அழைத்து வந்தேன். ஆனால் உங்கள் குரலில் மிகுந்த அலுப்பு தெரிகிறதே? விட்டால் பரமன் இங்கேயே.. என் மடியிலேயே உறங்கி விடுவான் போலிருக்கிறதே?"

அவ்வளவுதான். தம்புராட்டியார் இந்த வார்த்தைகளைப் புகன்ற மாத்திரத்தில் மழபாடியார் யோசிக்காமல் அவரது மடியில் தலையைச் சாய்த்து வைத்துப் படுத்துவிட்டார். உறக்கத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்த அவரது கண்கள் சில கணங்களில் இழுத்துக் கொண்டன. சுகமாக வீசிக் கொண்டிருந்த பௌர்ணமித் தென்றல் அவரை ஏதோ சொப்பனலோகத்திற்கே கொண்டு சென்றது. ஓரிரு

நிமிடங்களில் நித்திராதேவியின் பரிபூரண அணைப்பில் ஆழ்ந்துவிட்டார் அவர்.

தம்புராட்டியாரின் முகத்தில் பெரியதொரு முறுவல் விரிந்தது. "உங்களிருவரின் கதி என்ன? நீங்களும் மஞ்சத்தில் சாய்ந்து விடத் தயாராகத்தான் இருக்கிறீர்களா?"

"இல்லையம்மா. தொடர்ந்து உங்களது பூர்வகதையைக் கூறிச் செல்லுங்கள். கேட்கத் தயாராகவே இருக்கிறோம்." என்றார் மணியர். அவரது உடற்களைப்பை கதை கேட்கும் ஆர்வம் போக்கிவிட்டது.

"அப்போது பரமன்?"

"நீங்கள் கூறும் தகவல்களை ஒன்றுவிடாமல் நாளையே நான் அவருடன் பகிர்ந்துகொள்கிறேன். கவலைவேண்டாம்."

"சரி. அப்போது மீண்டும் காந்தளூரின் களரிப் போட்டிகளுக்கே திரும்புவோம். போட்டிகளுக்கு முதல் நாளிரவு நரசம்மப் பிரயோகத்தைக் கற்றுக்கொடுத்த பத்மநாபர் ஒரு முக்கியத் தகவலை இரவிநீலியிடமிருந்து மறைத்து விட்டார் என்று கூறினேனே. ஞாபகமிருக்கிறதா?"

"நன்றாக ஞாபகமிருக்கிறது. எப்படி மறக்கும்?"

"அந்தத் தகவல் மிக முக்கியமானது. இரவிநீலி ஆச்சாரியாரின் வாழ்க்கையையே ஒரு விதத்தில் அது மாற்றியமைத்தது என்றுகூடக் கூறலாம்" என்றபடி தம்புராட்டியார் பழைய ஏடுகள் சிலவற்றை மீண்டும் புரட்டத் துவங்கினார்.

62. சுந்தரபாண்டியபுரம்



தென்பாண்டி நாட்டின் பல பகுதிகளை நீர் வளப்படுத்தும் நதிகளுள் தாமிரவருணி முக்கியமானது. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பல்வேறு இடங்களில் கிளைத்தெழுந்து, பலப்பல சிற்றூர்களிலும் கிராமங்களிலும் பிரிந்தோடிப் பாண்டி தேசத்தின் தாகத்தைத் தணித்துவி[illegible] "மூல சமுத்திரத்தை அடைவதே [illegible] இறுதிக் குறிக்கோள்" எனும் [illegible] முனைப்புடன் ஒன்றாகித் திரண்டு [illegible]

பேரலையுடன் வங்காள விரிகுடாக் கடலில் சங்கமித்து அமைதியடையும் அம்மாநதியின் தீரங்களில் தொல்பழங் காலந்தொட்டே மனித நாகரீகம் செழித்து வளர்ந்து வந்ததற்கான வலுவான சான்றுகள் கிடைத்துள்ளன.

இன்றைய தேதியில் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களை ஊடறுத்துச் செல்லும் தாமிரவருணியின் நீர்வரத்தைக் காண்பவர்கள் அது மனித உடலெங்கிலும் ஓடும் முக்கிய நரம்புகளைப்போல நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாய்ந்து பரவிப் பின்னர் ஓய்வு கொண்டு ஒருமையில் சங்கமித்துக் கடலை அடைகிறது எனும் உண்மையை உணர்வார்கள். தாமிரவருணி கொடுக்கும் நீர் வளத்தால் பசுமை கொஞ்சும் அம்மாவட்டத்தின் பல பகுதிகள் சுற்றுலாத் தலங்களாகவும் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களாகத் திகழ்கின்றன.

பன்னெடுங்காலமாகவே பாண்டியர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இப்பகுதியில் அமைந்துள்ள பல ஊர்களின் பெயர்களில் இன்றும் ஏதோ ஒரு பாண்டிய நறுமணம் ஒட்டிக் கொண்டிருப்பதில் வியப்பில்லையல்லவா?

அத்தகைய ஊர்களுள் ஒன்றான சுந்தரபாண்டியபுரம் எனும் நல்லூருக்குத்தான் தற்போது விஜயம் செய்ய விருக்கிறோம். தாமிரவருணியின் கிளைநதி ஒன்றின் தென்கரையில் அமைந்துள்ள இவ்வூரானது சோழன் தலை கொண்ட வீரபாண்டியரின் அண்ணனாக அறியப்படும் சுந்தர பாண்டியரின்[204] பெயரால் அமைந்ததாகும்.

* * * * * * * *

அழகிய கடல்நீல வண்ணத்தில் திகழ்ந்த அந்த மீன் கொத்திப் பறவை, வானத்திலிருந்து சரேலென்று நதியின் மட்டத்திற்குத் தாழப் பறந்து வந்தது. நீண்ட நேரமாகத் தனக்குப் பாய்ச்சல் காட்டிக் கொண்டிருக்கும் பெருமீனை எப்படியும் கபளீகரம் செய்துவிட வேண்டும் என்கிற முனைப்பு அதன் கண்களில் தெரிந்தது. ஆனால்

---

[204] பாண்டிய குலத்தில் பல சுந்தரபாண்டியர் தோன்றியிருப்பினும் அவர்களுள் காலத்தால் மூத்தவர் வீரபாண்டியரின் அண்ணனாக அறியப்படும் சுந்தர பாண்டியரே. இவரது பெயரில் இராமநாதபுரத்தில் ஒரு பள்ளிப்படை அமைந்துள்ளதை முன்பே கண்டோம்.

பாண்டிநாட்டு மீன் என்றால் சாதாரணப்பட்டதா என்ன? எப்படியோ தன் தலைக்கு மேல் ஆபத்து என்பதை அது உள்ளுணர்வால் அறிந்து கொண்டு விட்டது. அதனால் நீரின் மேற்பரப்புக்கு வராமல் அடிப்பகுதிகளிலேயே வேக வேகமாய் வளைந்து நெளிந்து நீந்திச் சென்று கொண்டிருந்தது.

மீன்கொத்தி முட்டாளல்ல. தன்னுடைய முன்னாள் அனுபவங்களின் காரணமாக மீன்களின் தந்திரங்களை அது அறிந்தேதானிருந்தது. அப்பெருமீன் மட்டும் திசைமாறாமல் கிழக்கே நீந்திக் கொண்டிருந்தால் விரைவில் ஒரு சில அடிகளுக்குச் சற்று மேடான பகுதிக்கு வரும். அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே அதன் திட்டம்.

அம்மாலை வேளையில் நதிக்கரையில் அமர்ந்து கீழ் வானத்தை வெறித்துக் கொண்டிருந்த மானாபரணரின் கண்களில் இக்காட்சிகள் பதிந்தனவா இல்லையா என்பதை நம்மால் உறுதியாக் கூறமுடியவில்லை. அவருடைய முகபாவங்கள் தீவிரமான சிந்தனையைக் காட்டி நின்றன. ஒருமுகப்படுத்தப்பட்ட அவருடைய எண்ணங்களினூடே குறுக்கிடுவதற்கு அஞ்சி பார்வையை வேறு புறம் திருப்பிக் கொள்கிறோம்.

அரையனார் அமர்ந்திருந்த இடத்திற்குத் தென்கிழக்கே சில கோல் தூரத்தில் பாண்டி நாட்டு வீரர்கள் கூடாரங்களிட்டுத் தண்டூன்றியிருந்தார்கள். அந்தக் கூடாரங்களின் நடுவே விடப்பட்டிருந்த வட்ட வடிவ இடைவெளியில் சிலர் விறகுகளால் தீமூட்டி நதியில் பிடிக்கப்பட்ட மீன்களைச் சுட்டு அவித்துக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு அவிக்கப்பட்ட மீன்களின் மீது உப்பும் காரமும் வேறு சில பொருட்களும் கலந்த கலவை தடவப்பட்டுக் கொண்டிருந்தது. தூய்மையான நதி நீரில் நீந்தி விளையாடி மகிழ்ந்த ஆரோக்கியமான சதைப் பற்று மிகுந்த பெருமீன்களாதலின் கவித்த நாற்றம் காற்றில் தூக்கலாகவே இருந்தது.

வீரர்களின் கூடாரங்கள் அமைந்திருந்த திசைக்குத் தென்மேற்கே "டாங்" "டாங்" எனும் சப்தங்கள் தொடர்ந்து எழுந்த வண்ணம் இருந்தன சற்றே நெருங்கிப் பார்க்கையில் மரங்கள் அடர்ந்திருந்த அவ்விடத்தில் ஒரு சில குடி[illegible]கள் இடப்பட்டு அங்கே கம்மாளர்கள் விறுவிறுப்பான பட்[illegible]

வேலைகளின் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். அவர்களது மேனியெங்கும் நதிக்கு இணையாக வழிந்தோடும் வியர்வையிலிருந்து அவர்கள் ஈடுபட்டுள்ள பணியானது தொடர்ந்து பல மணி நேரங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை அறியலாம்.

அவர்களில் மூத்த கம்மாளர்கள் சிலர் நீண்ட வாட்களை நெருப்பில் தகதகக்கச் செய்து அவற்றின் கூர் முனையைத் தட்டித்தட்டி வடிவமைத்துக் கொண்டிருந்தார்கள். முழுவதுமாகச் செய்து முடிக்கப்பட்ட வாட்கள் குளிர்நீரில் மூழ்கடிக்கப்பட, அவற்றிலிருந்து புஸ்... புஸ்... ஸென்று பெருஞ்சீற்றம் எழுந்தது. சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த அவர்களது உதவியாளர்களோ உருகிய இரும்புக் குழம்பை வார்ப்படங்களில் ஊற்றி ஆயுதங்களாகச் சமைத்துக் கொண்டிருந்தார்கள்.

பிறிதோரிடத்தில் ஈட்டி மற்றும் அம்புகளுக்குத் தேவையான மரவேலைகள் செவ்வனே நடைபெற்றுக் கொண்டிருந்தன. நீண்ட கழிகளின் ஓரங்களில் இரும்பு முனைகள் கெட்டியாகப் பொருத்தப்பட்டு ஈட்டிகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவ்வாறு தயாரான ஈட்டிகளை அனுபவம் நிறைந்த வீரர்கள் பரிசோதித்து உபயோகிக்கத் தகுதியானவற்றை ஒரு பக்கமாகவும் தகுதியில்லாமல் சரிசெய்ய வேண்டியவற்றை மற்றொரு பக்கமாகவும் பகுத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். "ம்... நன்றாக இருக்கிறது" என்றும் "ம்ஹூம். அத்தனை சுகமில்லை. ஈட்டி முனை சரிசெய்யப்பட வேண்டும்" என்றும் குரல்கள் எழுந்தவண்ணம் இருந்தன. அம்புகள் தயாரிக்கும் பணியும் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அம்புகளின் ஒரு முனையில் கூரிய இரும்பு முனைகள் பொருத்தப்பட, மறுமுனையில் இறகுகள் இறுக்கமாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

சுருங்கச் சொன்னால் அதிக கவனத்தை ஈர்க்காத அந்த நதிக்கரைப் பகுதியில் பெரியதொரு ஆயுதப் பட்டறையே செயல்பட்டுக் கொண்டிருந்தது. பட்டறையின் ஒரு ஓரத்தில் அதுவரை தயாரிக்கப்பட்டிருந்த வாட்களும் வேல்களும் கேடயங்களும் ஈட்டிகளும் மலை போல் குவித்து வைக்கப்பட்டிருப்பதைக் காணும்போது தொடர்ந்து பல நாட்களாக இந்தப் பணி நடைபெற்று வந்துள்ளதென்பதை அறியலாம்.

பட்டறையின் பல்வேறு இடங்களையும் பார்வையிட்டுக் கொண்டிருந்த பாண்டிய இளவல் சடையமாறர் அவ்வப்போது கம்மாளர்களுடனும் வீரர்களுடனும் பேசி அவர்கள் பணியில் சோர்வடையாமலிருக்கும் பொருட்டு உற்சாகமூட்டி வந்தார். பட்டறைக்கு வெளியே கம்மென்று எழுந்து கொண்டிருந்த கவித்த மீன் வாசம் அவரை ஒரு பக்கம் சுண்டியிழுத்துக் கொண்டுதான் இருந்தது. என்றாலும் பணியில் தொய்வு வந்துவிடக் கூடாது எனும் முனைப்புடன் சுற்றிச் சுற்றிப் பட்டறையின் பல்வேறு பகுதிகளையும் வலம் வந்து கொண்டிருந்தார். மிகுந்த சிரமத்தின் பேரில்தான் ஐம்பது அறுபது அனுபவம் வாய்ந்த கம்மாளர்களைப் பாண்டிநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் திரட்டிப் பணிக்காக இங்கே தருவிக்க முடிந்தது. திறமை வாய்ந்த பணிமக்களாதலால் அவர்களது தினக்கூலியும் சற்று அதிகம். என்றாலும் வேறு வழியில்லை. இத்தனை ஆயுதங்களையும் மளமளவென்று வடித்து முடிக்க இது ஒன்றுதான் வழி.

புறப்பார்வைக்கு அமைதியாகத் தெரிந்தாலும் இளவலின் ஆழ்மனம் பல்வேறு எண்ணங்களால் அலைக் கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. எங்கோ எப்படியோ தோன்றி எப்படியெப்படியெல்லாமோ வளர்ந்து ஒரு மிக ஆழமான கசப்புணர்வு எனும் நிலையை எய்திவிட்ட சோழ பாண்டிய தேசங்களின் பகையை உணர்ச்சிவயப்படாமல் புரிந்து கொள்ள முயன்றார் அவர்.

தேசத்தின் கணிசமான பகுதியில் ஆதிக்கம் செலுத்த நினைக்கும் இரு முரண்பட்ட அரசியல் சக்திகளின் நீண்ட காலப் போராட்டம் அது. இருவரும் அமைதியாக அவரவர் பகுதிகளில் ஆட்சி செலுத்துவோம் என்கிற பேச்சுக்கே அங்கு இடமில்லை. எப்போதும் நீயா? நானா? எனும் இடைவிடாத துவந்த யுத்தம்தான். குறிப்பாக முதலாம் பராந்தகர் சோழப்பேரரசராகப் பதவியேற்றது முதல் இந்தப் போராட்டம் மிகுந்த தீவிரத்தை அடைந்து விட்டது. தான் நினைக்குமளவிற்குச் சோழ இராஜ்ஜியத்தை விஸ்தரிக்க வேண்டுமானால் அதற்குப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றியேயாக வேண்டும் எனும் தீவிரமான முனைப்புடன் செயல்பட்டு வந்தார் பராந்தகர்.

சோழர்களின் இத்தகைய போர்த்தீவிரத்திற்குப் பின் பன்னெடுங் காலம் மிகக் குறுகிய பெயர் தெரியாத சிற்றரசர்களாகக் காலம் கழித்ததன் கோபமும் ஆவேசமும் மிச்சமிருந்தன. சங்க காலத்திற்குப் பின் ஏழெட்டு

நூற்றாண்டுகளுக்கு அவர்கள் ஏறக்குறையக் காணாமலே போய்விட்டார்கள். களப்பிரர் காலத்திலும் சரி, அதற்குப் பின் வந்த பல்லவர் காலத்திலும் சரி - அவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பகுதிகள் என்று பழையாறையை ஒட்டிய ஒரு சில ஊர்கள் மட்டுமே குறிப்பிடலாம். இடையில் கோச்செங்கட்சோழர் மட்டும் ஓரளவிற்கு வெற்றி பெற்ற பேரரசராகத் திகழ்ந்தார். மற்றபடி "வீர சோழப் பரம்பரை" எனும் பழம்பெருமையைத் தவிர வேறு ஒன்றுமில்லாமல் அடக்கி வைக்கப்பட்டிருந்தார்கள் அவர்கள்.

இந்நிலையில்தான் விஜயாலயர் மற்றும் ஆதித்த சோழரின் பெருமுயற்சியினால் இடைக்காலச் சோழ சாம்ராஜ்ஜியம் மீண்டும் தட்ஷிண தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்குப் பின் கைப்பற்றப்பட்ட அரசியல் ஆதிக்கமென்பதால் அதன் வேகமும் முனைப்பும் கணிசமானதாக இருந்தன. பராந்தகர் காலத்தில் இந்த முனைப்பு கண்மூடித்தனமான வேகத்தை யடைந்து இறுதியில் இராஷ்டிரகூடப் படையெடுப்பின் காரணமாகப் பலமிழந்தது.

பராந்தகர் தன்னுடைய இறுதிக் காலங்களை குழந்தையான அருள்மொழிவர்மனுடன் கழித்ததாகக் கூறுவார்கள். தன்னுடைய கனவுகளையெல்லாம் முப்பாட்டனார் அந்தச் சிறுவனுக்குப் புரிகிறதோ இல்லையோ - கொட்டித் தீர்ப்பாராம். அவனால்தான் சோழ இராஜ்ஜியம் மேன்மையடையப்போகிறது என்று அவருக்கு ஏதோ ஒரு எண்ணம் தோன்றிவிட்டதாம். பராந்தகர் இவ்வாறு இளம் வயதில் விதைத்த எண்ணங்கள்தாம் அருள்மொழிவர்மனின் இராஜ்ஜிய விஸ்தரிப்பு ஆசைக்கு முக்கியக் காரணிகளாக விளங்குகின்றனவாம்.

ஆனால் பாண்டியர்களின் கதையே வேறு. சங்ககாலத்திற்குப்பின் சில நூற்றாண்டுகள் களப்பிரர் கைகளில் அகப்பட்டிருந்தாலும் மிக விரைவிலேயே மகாவீரரான கடுங்கோன் பாண்டியர் இராஜ்ஜியத்தை மீட்டெடுத்து விட்டார். அதற்குப்பின் வம்சாவளியாகப் பரம்பரை பரம்பரையாகப் பாண்டியராட்சி தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. அவ்வப்போது பாண்டி நாட்டுப் பகுதிகளைப் பிற தேசத்தவர் கைப்பற்றிக்கொண்டாலும் மிக விரைவிலேயே அதனைத் தக்கவைத்துக் கொள்ள முடியாமல் விட்டு விட்டு ஓடிவிடுவது வழக்கம். பாண்டி

தேசத்து மக்கள் தமது பண்டைய இராஜகுலத்தாரிடம் கொண்டிருந்த கட்டுக்கடங்காத பக்திதான் அதற்குக் காரணம். குடிகளின் ஒத்துழைப்பின்றி, பிற தேசத்தவர் அங்கு ஆட்சி செலுத்துவதென்பது இயலாத காரியமல்லவா?

மேலும் பாண்டிய இராஜ்ஜியமென்பது சோழர்களைப் போல் ஒரேயொரு மனிதரை மட்டும் சுற்றிச்சுற்றி இயங்குகிற அரசாங்கமல்ல. எல்லாக் காலகட்டங்களிலுமே ஏறக்குறைய ஐவர் சமகாலத்தில் பாண்டிய நாட்டில் ஆட்சி செலுத்துவது வழக்கம்[205]. இது மஹாபாரத காலகட்டத்திலிருந்து ஏற்பட்ட பழக்கமென்று சொல்கிறார்கள்.

விராட பருவத்தின்போது தெற்கே பாண்டிநாடு வரை வந்த அர்ஜுனன் மதுராபுரிப் பாண்டியரின் மகள் சித்திராங்கதையை மணந்து கொண்டு அங்கே சிலகாலம் தங்கினாராம். அப்படித் தங்கும் காலத்தில் நீண்டு பரந்து விரிந்திருந்த பாண்டிநாட்டை ஒரே ஒரு அரசர் கட்டிக் காப்பதற்கு பதில் உங்கள் தம்பியர்க்கும் அரசாங்கத்தில் பங்கு கொடுக்கலாமே? இதனால் உங்கள் நிர்வாகச் சுமை குறையுமே? என்று யோசனை தெரிவித்தாராம். அவரது யோசனை உடனடியாக ஏற்கப்பட்டது. மதுராபுரிப் பாண்டியர் தமது நான்கு தம்பியர்க்கும் இராஜ்ஜியத்தின் பல்வேறு பகுதிகளையும் பிரித்துக் கொடுத்தாராம். அவ்வாறு உரிமை பிரிக்கப்பட்டு மகுடாபிஷேகம் செய்யப்பட்ட நாளில் ஒரு நிமித்தகன் அரசவைக்கு வந்து என்றாவது ஒரு நாள் பாண்டிய வம்சம் உரிமைப் பிரச்சனையால் அழிந்தொழியும்! என்று நிமித்தம் சொன்னானாம்[206]. அதனைக் கேட்ட தம்பியர் நால்வரும் மிகவும் மனம் வருந்தி 'மதுரையிலிருந்து ஆட்சி புரியும் உமக்கும் உமது சந்ததியர்க்கும் நாங்கள் என்றென்றும் அடங்கி நடப்போம். ஒரு போதும் எமது சந்ததியர் உமக்கெதிராக நடந்துகொள்ள மாட்டார்கள். அந்த அவலநிலை என்றாவது ஒருநாள் ஏற்பட்டால் அன்றோடு பாண்டியகுலம் நசித்துப் போகட்டும்!' என்று அக்னி சாட்சியாக அர்ஜுனன் முன்னிலையில் சூளுரைத்தார்களாம். இதனைக் கேட்டு மகிழ்ந்த அர்ஜுனன் என்னே உமது

---

[205] இதனால்தான் பாண்டியரைக் குறிப்பிடும்போது மட்டும [illegible] பனமையில் குறிககிறது முதலாம இராஜராஜரின் மெயக[illegible].

[206] இநத நிமிததம நமது கதை நடககும [illegible] நூறறாண்டுகள கழிதது நிஜமாகவே பலிததது.

ஒற்றுமை! இனி நீங்களும் உமது வம்சத்தவரும் பஞ்ச பாண்டவர்களான எம்மைப் போலவே "பஞ்சவன்" எனும் பட்டம் பெற்று நீண்ட காலம் வாழ்வீர்களாக! என்று கூறி ஆசீர்வதித்தாராம்.

அந்த மூத்தோரின் சூளுரையும் அர்ஜுனனின் ஆசிகளும்தான் தம்மை இத்தனை காலமாகக் காத்து வருகின்றன என்று பாண்டிய அரசர்கள் உறுதியாக நம்பினார்கள். அதற்கேற்றாற்போல் தமது உரிமைகளைத் திறம்படப் பிரித்துக் கொண்டார்கள்.

மதுரையில் அரசாளும் பாண்டியரின் ஆதிக்கத்திற்கு மற்ற நால்வரும் கட்டுப்பட்டவர்கள்தான். என்றாலும் அவர்களுக்கென்று தனிப்பட்ட அதிகாரங்கள் பலவும் இருந்தன. படை பலங்களும் ஆள் அம்பு சேனைகளும் பிரத்யேகமாக வைத்துக் கொண்டிருந்ததால் தமது ஆட்சிக் குட்பட்ட பகுதிகளைத் தாங்களே செம்மையாக நிர்வகித்துக் கொள்ள அவர்களால் முடிந்தது. போர்க்காலங்களில் ஒருவருக்கொருவர் தத்தம் படைகளை அனுப்பி வைத்து உதவி புரிந்து கொண்டார்கள். இவரில் எவராவது இறந்து விட்டால் அவரது வம்சத்தைச் சேர்ந்தவர் வயதுக்கு வரும்வரை பிறர் பத்திரமாக இராஜ்ஜியத்தைப் பாதுகாத்து உரிமையுடையவர்களிடம் அதனை ஒப்படைத்தார்கள்.

வீரபாண்டியர் சேவூர்ப் போர்க்களத்தில் இறந்து விட்டபோது இளவலான சடைய மாறற் பால்மணம் மாறாப் பாலகராகவே இருந்தார். காடுகளிலும் மேடுகளிலும் அவரை ஒளித்து ஒளித்து வளர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்தச் சிரமமான காலகட்டங்களில் பாண்டிய இராஜகுலத்தின் முக்கியப் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் இருவர். ஒருவர் பாண்டியர் அமரபுஜங்கன் நெடுஞ்செழியர். மற்றவர் தென்னவன் மந்திரியாரான அரையன் மானாபரணர். இவ்விருவரும்தான் சடைய மாறரைச் சிறுவயது முதல் கண்ணுக்குக் கண்ணாகப் பேணி வளர்த்து வந்தார்கள்.

நெடுஞ்செழியர் உறவு முறையில் இளவலுக்கு ஒன்று விட்ட சிறிய தந்தை முறை ஆகவேண்டும். ஆனால் ஏறக்குறையத் தன்னுடைய சொந்த மகனைப் போலத்தான் அவரை நடத்திக் கொண்டு வந்திருக்கிறார். வீரத்திலும் சரி, விவேகத்திலும் சரி - சிறிய தந்தையாருக்கு இணையான வேறொருவரைக் காணமுடியாது. அவரும் அரையன்

மானாபரணருமாகச் சேர்ந்துதான் இடைவிடாத சோழ நாட்டுப் போர்களால் நைந்து நாராகிக் கிடந்த பாண்டிய இராஜ்ஜியத்தை மெல்ல மெல்லத் தூக்கி நிறுத்தினார்கள். அதற்குள் இருபது ஆண்டுகள் பறந்தோடி விட்டன. இக்காலகட்டத்தில் இளவலும் ஓரளவிற்கு வயதுக்கு வந்துவிடவே அவரும் இவ்விருவரின் அரசியல் பணிகளில் சேர்ந்து கொண்டார்.

அரையன் மானாபரணரும் சடையமாறருமாக நாட்டின் பல பாகங்களுக்கும் பயணித்தார்கள். நெடுஞ்செழியர் அவர்களுடன் சேர்ந்து கொள்ள மறுத்துவிட்டார். மூவரும் ஒன்றாகச் சேர்ந்து சுற்றித் திரிவது தகாது என்பது அவரது வாதம். சொல்லப் போனால் பாண்டிய இளவலே தன்னந்தனியாகத் தேசத்தைச் சுற்றி வருவதுதான் நல்லது எனும் அபிப்பிராயம் கொண்டிருந்தார் அவர். ஆனால் அரையனார் அதற்கு ஒப்பவில்லை.

இந்தப் பயணங்கள்தாம் மெல்ல மெல்ல வாழ்க்கையை - அரசியலை - மக்களை - மண்ணை - இளவலுக்குப் புரிய வைத்தன. குறுகிய காலத்தில் அனைத்து சாராரிடமும் நல்ல பெயரெடுத்து விட்டார் சடையமாறர். சரி, இன்னும் சிறிது காலத்தில் மதுரையில் பட்டாபிஷேக வைபவத்தை நடத்தி வைத்து விடுவோம் என்று நினைக்கும்போதுதான் சோழ நாட்டில் சில அரசியல் நாடகங்கள் நிறைவேறத் துவங்கின. அதன் முடிவில் உத்தமச் சோழதேவர் வகித்து வந்த இராஜ்ஜியபாரத்தை அருள்மொழிவர்மர் ஏற்றார்.

அருள்மொழி சோழ அரசராகப் பதவியேற்ற நாளிலிருந்தே பாண்டி நாட்டுக்குக் கண்டம் உருவாகி விட்டது என்றுதான் கூறவேண்டும். இரண்டு பக்கங்களிலும் நூறாண்டுகாலப் பகை நெருப்பு கனன்று கனன்று எரிய, மதுரையின் மீது ஒரு படையெடுப்பும் நடந்து முடிந்தது.

அருள்மொழியின் உண்மையான இலக்கு தென்மலை நாடும் காந்தளூர்ச் சாலையும்தான் என்பதைப் பாண்டிய இளவல் நன்றாகவே அறிந்திருந்தார். ஆனால் தென்மலை நாட்டு அரசர்களான ஆய்வேளிரும் பாண்டியர்களும் பரம்பரை பரம்பரையாகக் கொண்டிருந்த கொள்வினை - கொடுப்பினை உறவின் காரணமாகப் பாண்டியர்களால் இந்தப் படையெடுப்பை எட்ட நின்று வேடிக்கை பார்க்க முடியவில்லை. ஆக, இரு பக்கங்களிலும் அரசியல் அணிகள் சேரத் துவங்கிவிட்டன. சோழரின் பக்கம் கொடும்பாளூர்

இருக்குவேளிர்கள், மலையமான்கள், கொங்குதேச இராஜர்கள், பழுவேட்டரையர்கள் முதலான சிற்றரசர்கள் அணிவகுத்து நின்றார்கள். பாண்டியர் பக்கம் தென்மலைநாட்டு நாடுவாழிகளும் காந்தளூர்ச் சட்டப் பெருமக்களும் நின்றார்கள். பெருமாக்கோதை அரசரான சேரமான் பெருமாள் இப்பக்கம் சாய்வதா? அப்பக்கம் சாய்வதா? என்ற குழப்பத்திலிருந்தார். ஏனெனில் அவருடைய உறவுகள் இரண்டு அரசியல் அணிகளிலுமே நீண்டிருந்தன.

இந்த மலைநாட்டுப் போர் இனி வரப்போகும் பல மோதல்களுக்கான ஒரு முன்னோடி மட்டுமே. மதுரையை முழுமையாக மீட்டெடுக்கும்வரை பாண்டியர் ஓயப் போவதில்லை. அது நமது வாழ்நாளில் நடந்தாலும் சரி. அல்லது யுக யுகாந்திரங்களைக் கடந்து நடந்தாலும் சரி. போராட்டத்திற்கு ஓய்வில்லை. இதோ! இங்கே குவித்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்கள் எத்தனையெத்தனை வீரர்களின் உயிரைப் பறிக்கப் போகின்றனவோ! இந்த அம்புகளும் ஈட்டிகளும் எத்தனை பேர் மார்பில் பாயப் போகின்றனவோ! இந்தப் போராட்டம் நாம் துவங்கியதல்ல. இது நம் வாழ்நாளில் முடியக் கூடியதும் அல்ல. அதனால் இதில் நமது பங்களிப்பை சரிவரச் செய்வது மட்டுமே நம்மால் முடிந்த காரியம். மதுரையம்பதியில் குடியிருக்கும் அங்கையற்கண்ணியும் சொக்கேசரும் நமது முயற்சிகளுக்குத் துணை நிற்பார்களாக.

இவ்வாறான சிந்தனைகளில் ஈடுபட்டிருந்த இளவலின் எண்ணங்களை வீரர் கூடாரங்களிலிருந்து எழுந்த சில திடீர்க் கூச்சல்கள் கலைத்தன. சற்றே காதுகொடுத்து உற்றுக் கேட்டதில் "பாண்டியர் அமரபுஜங்க நெடுஞ்செழியர் வாழ்க!" எனும் உற்சாகக் கூக்குரல்கள் அவை என்பது புரிந்தது.

சிறிய தந்தையாரா வந்திருக்கிறார்? என்று ஆர்வத்துடன் நதி தீரத்திற்கு விரைந்தார் சடையமாறர்.

63. வழுதிகுல வாழ்த்து



இருள் ஒரு அடர்ந்த கரும்போர்வையாகப் பூமியெங்கிலும் படியத் துவங்கியிருந்த முன்னிரவுப் பொழுதில் பாண்டி நாட்டுப் வீரர்கள் தண்டூன்றியிருந்த கூடாரங்களுக்கு மத்தியில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது ஒரு செந்தீப் பிழம்பு. தனக்கு இரையாகக் கொடுக்கப்பட்ட காய்ந்த விறகுகள், சருகுகள் மற்றும் சுள்ளிகளை அதி வேகமாகக் கபளீகரம் செய்துவிட்டு இன்னும் இரை வேண்டும்! இன்னும் இரை வேண்டும்! என்னும் முனைப்புடன் தனது சிவந்த நாவுகளை நாலாபுறங்களிலும் விட்டுத் துழாவிய அப்பெருநெருப்பின் அகோரப்பசியைத் தணிக்க முடியாமல் திணறிய பாண்டி நாட்டு வீரர் இருவர், தணலின் வீரியத்தைக் கட்டுப் படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

நெருப்புக் குண்டத்தைச் சுற்றிலும் பாண்டி நாட்டு வீரர்கள் பலர் வட்ட வடிவமாக அமர்ந்திருந்தார்கள். தென்பாண்டி நாட்டிற்கேயுரிய கொண்டல் வண்ண மேனியர்களாய்க் காட்சியளித்த அவர்களில் சிலர் நெருப்பிலிட்டுச் சுடப்பட்ட வாளை மீன் துண்டுகளை முட்கள் நீக்கிக் கடித்துச் சுவைத்துக் கொண்டிருந்தார்கள். வேறு சிலர் கேழ்வரகுக் கஞ்சிக் கலயங்களைக் கரங்களில் ஏந்திக்கொண்டு மெல்ல மெல்ல அதனைப் பருகிக் கொண்டிருந்தார்கள்.

கண்கள் சொருக அரை மயக்கத்தில் சில வீரர்கள் பிதற்றிக் கொண்டிருக்கும் காட்சிகளும் அங்கே காணக் கிடைத்தன. எல்லாம் பாண்டி நாட்டுத் தென்னம்பிழியின் உபயம் போலும். போதை தலைக்கேறி விட்டிருந்ததால் அவர்கள் அவ்வப்போது அருகில் அமர்ந்திருந்த நண்பர்களின் தோள்களில் மயங்கிச் சாய, அந்த நண்பர்கள் ஒரு புன்னகையுடன் அவர்களை விலக்கி உட்கார வைக்க முயன்றார்கள். ஒரு சிலர் மெல்லிய குரலில் "அடேய், பாண்டியர் நமது கூடாரத்திற்கு விஜயம் செய்துள்ள இந்த நேரத்தில் இப்படியா முட்ட முட்டப் பிழியருந்துவாய்? இன்னும் சிறிது நேரமாவது தாக்குப்பிடித்து முழித்திரு

தேவர் ஏதேனும் புதிய செய்திகளைக் கூறினாலும் கூறுவார்!" என்று உரிமையுடன் கடிந்து கொண்டார்கள்.

எரிந்து கொண்டிருந்த நெருப்புக்கு மிக அருகில் அமர்ந்திருந்த வீரனொருவன், தன்னுடைய இடுப்பிலிருந்த உடுக்கையை எடுத்து அதன் இரு முகங்களுக்கும் சூடேற்றித் தட்டிப் பார்த்தான். டொக் டொக்கென்று ஒரு சப்தம் எழும்பியது. ம்ஹூம். இறுக்கம் போதாது. மீண்டும் சிறிது நேரம் சூடேற்றிவிட்டு உடுக்கையின் இடுப்பில் கட்டப்பட்டிருந்த தோல் வாரைச் இழுத்துப் பிடித்து மீண்டும் தட்டிப்பார்க்க, இந்த முறை 'டுமுக் டுமுக்'கென்று ஆழமானதொரு சப்தம் எழுந்தது. அவன் முகம் மலர்ந்தது.

வலக்கரத்தினால் மெல்ல உடுக்கையைத் தட்டியபடி சற்றே நடுங்கும் குரலில் அந்த வீரன் வழுதி குலத்தின் பழம் பெருமைகளைப் பாடத் துவங்கினான். சந்திர குலத்தில் மலையத்துவஜ பாண்டியனின் மகள் மீனாட்சியம்மையாக உமாதேவியே பிறந்ததைப் பாடினான். தேவியை மணமுடிக்க நினைத்த சிவபெருமான், சொக்கநாதப் பாண்டியராகத் தோன்றி மதுரையம்பதியில் அவள் கைப்பிடித்த பெருமையைப் பாடினான். இவ்வாறு ஈசனாராலேயே தோற்றுவிக்கப்பட்ட பாண்டிய குலத்தில் வீரமும் கீர்த்தியும் நிரம்பிய வடிம்பலம் நின்ற பாண்டியன் என்றழைக்கப்பட்ட நிலந்தரு திருவிற்பாண்டியன் தோன்றியதையும் அவன் அரசவையில் தொல்காப்பியர் காலத்தால் அழியாத இலக்கண நூலான தொல்காப்பியத்தைப் பாடியதையும் அப்பாண்டியன் பஃறுளி ஆற்றை அகழ்வித்துக் கடற் தெய்வத்துக்கு விழாவெடுத்துச் சிறப்பித்ததையும் பாடினான். அம்மன்னனைத் தொடர்ந்து பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் பிற வழுதிகுல மாமன்னர்களும் பாடலில் தோன்றினார்கள்.

எளிமையான பழந்தமிழில் எவ்விதமான இலக்கண அலங்காரங்களும் ஜோடனைகளுமின்றி எழுந்த அந்த வீரனின் நாட்டுப்புறப் பாடல், வழுதி குலத்தின் வரலாற்றையும் மாண்பையும் மிக அழகாகப் பிரதிபலித்தது. ஒற்றை உடுக்கையின் ஒலியை மட்டும் துணையாகக் கொண்டு காரிருளின் அந்தகாரத்தைக் கிழித்துக்கொண்டு எழுந்த அந்த கீதமானது இனம்புரியாத சோக உணர்வுகளை மனதில் தோற்றுவித்தது. எப்படியெல்லாம் இருந்த வழுதி குலம் இன்று எப்படிப்பட்ட தாழ் நிலையை எய்திவிட்டது!

என்கிற எண்ணம் அங்கிருந்த அனைவருக்குமே தவிர்க்க முடியாமல் எழுந்தது.

இவ்வாறு குல முன்னோரையும் மூத்தோரையும் பாடிய பின்னர் அக்குலத்தின் பழைய வீரச்செயல்கள் சிலவற்றையும் அந்த வீரன் பாடலுற்றான். இமயம் வரை சென்று கயல் சின்னத்தைப் பொறித்துவிட்டு வந்த பெருமையைப் பாடினான். இந்திரனுக்கே படைபலம் கொடுத்துதவி அதன் பலனாக இந்திரமுடியையும் சுந்தர ஹாரத்தையும் பெற்றுவந்த பிரதாபத்தை எடுத்துரைத்தான். பாண்டியர் பெருமையைக் கேள்வியுற்றுத் தெற்கே வந்த அருச்சுனன் இளவரசி சித்திராங்கதையின் அழகில் மயங்கி அவளை மணந்து கொண்ட வரலாற்றைப் பெருமையுடன் குறிப்பிட்டான். தேவலோக அப்ஸர ஸ்த்ரீகளான ஊர்வசியையும் இரம்பையையும் தன் காலடியில் விழ வைத்த பேரழகனான அருச்சுனனே எங்கள் இளவரசியின் கைப்பிடிக்கத் தவங் கிடந்தானென்றால் பாண்டி நாட்டு மங்கையரின் பேரழகை எவ்வாறு வர்ணிப்பது? என்று அந்த வீரன் வியந்ததைக் குழுமியிருந்த வீரர்கள் பலரும் ஆஹாகாரம் செய்து இரசித்தார்கள்.

மேற்கொண்டு அந்தப் பாடலில் கவனம் செலுத்தாமல் வீரர்கள் குழுமியிருக்கும் இடத்திற்குத் தென்கிழக்கே சற்று தொலைவில் ஒரு அடர்ந்த மரத்தின் நிழலில் அமர்ந்திருக்கும் பெரிய மனிதர்களை அணுகி அவர்களது பேச்சைச் செவிமடுப்போம்.

"பாண்டியரை நீண்ட நாட்கள் கழித்துச் சந்தித்ததில் வீரர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி! நீண்ட நாட்களுக்குப் பிறகு இன்றுதான் வழுதிகுல வாழ்த்து பாடப்படுகிறது. சொல்லப் போனால் சுந்தரபாண்டியபுரத்திற்கு வந்த பிறகு முதல் முறையாக அவர்களது முகத்தில் உற்சாகம் பொங்குவதைக் காண்கிறேன்" என்றார் அரையன் மானாபரணர்.

"ஆமாம் சிற்றப்பா. எனக்கே அவ்வாறுதான் தோன்றுகிறது. உங்களின் அருகாமை புதியதொரு பலத்தையும் வீரியத்தையும் அளிக்கிறது. உலகத்தையே வென்று விடலாம் என்பதுபோல் உற்சாகம் பிறக்கிறது. எது நடந்தாலும் மலைபோல அதனை நீங்கள் எதிர்கொண்டு எங்களை வழிநடத்துவீர்கள் எனும் திண்மை தோன்றுகிறது நீங்கள் அப்பால் அகன்று போய்விட்டாலோ பழையபடி

பல்வேறு எதிர்மறைச் சிந்தனைகள் மனதை மீண்டும் ஆக்கிரமிக்கத் துவங்கி விடுகின்றன..."

சிற்றப்பா என்று சடையமாறரால் உரிமையுடன் அழைக்கப் பெற்ற பாண்டியர் அமரபுஜங்க நெடுஞ்செழியரின் நீண்ட கரங்கள் மிகுந்த சிநேகத்துடன் இளவலின் தலையைக் கோதுவதை அந்த இருட்டிலும் உணரமுடிந்தது. "சடையா.." என்று தழுதழுத்த அவரது குரலை முதன்முறையாகக் கேட்கும் நமக்குத் தூக்கிவாரிப் போடுகிறது! நெடுஞ்செழியரை நாம் சந்திப்பது இதுதான் முதன்முறை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவருடைய குரல் ஏன் நமக்கு இத்தனை பரிச்சயப்பட்டதாகத் தோன்றுகிறது? ம்.. இது.. இந்தக் குரல்.. நமது நண்பர்களைச் சில நாட்களுக்கு முன் சந்தித்த தேவநாக பண்டிதரின் குரலைப் போலில்லை? ஒத்த உருவ ஒற்றுமையுடையவர்கள் ஏழு பேர் உலகத்தில் இருப்பதாகக் கூறுகிறார்களே? அதைப் போலவே ஒத்த குரலுடையவர்களும் கூட இருக்கிறார்களா என்ன? படபடக்கும் நமது சிந்தனைகளைச் சிறிது நேரம் விலக்கி வைத்துவிட்டு மேற்கொண்டு அவருடைய பேச்சில் கவனம் செலுத்துவோம். குரல் ஆராய்ச்சியையெல்லாம் பின்னர் வைத்துக் கொள்ளலாம்.

"சடையா.. உனக்கு இன்று நான் எப்படித் தோன்றுகிறேனோ அப்படித்தான் எனக்கும் ஒரு காலத்தில் உன்னுடைய பெரிய தந்தையாரான சுந்தரபாண்டியத்தேவர் அன்னையாகவும் தந்தையாகவும் ஆசானாகவும் ஏன் தெய்வமாகவும் கூடத் திகழ்ந்தார். அவருடைய அன்பாகிய நிழலில்தான் நான் என் இளமைக்காலத்தைக் கழித்தேன். சொல்லப் போனால் மிகவும் சிரமமான காலகட்டம் அது. என்றாலும் அதனைச் சுவைபொருந்தியதாக ஆக்கியது அவரது அண்மையும் அன்பும்தான். அவர் ஒரு நாள் என்னிடம் தனிமையில் கூறிய வார்த்தைகளை நான் இப்போது உனக்குக் கூறுகிறேன்.

'நெடுஞ்செழியா! எப்பேர்ப்பட்ட மனவுறுதி படைத்த மனிதர்களுக்குக்கூட கஷ்டமான காலம் என்று ஒன்று வருவதுண்டு. அதிலும் உன்னைப்போல் அரச குடும்பத்துப் பிள்ளைகளுக்குச் சிரமமான தசைகள் அடிக்கடித் தோன்றும். அப்படி மனம் துவண்டு கிடக்கும் நேரங்களில் தனியாக எங்காவது சென்று வானத்தில் நிலைத்து நிற்கும் தாரகைகளுடன் பேசிப்பார்.

அவை வெறும் நட்சத்திரங்களல்ல. வீரத்திலும் விவேகத்திலும் சிறந்து விளங்கிய நமது முன்னோரைத்தான் சொக்கநாதன் வானில் துலங்கும் நட்சத்திரங்களாக்கி விட்டான். நாமெல்லோரும் சந்திர வம்சத்தவரல்லவா? அதனால்தான் இந்தத் தனிச்சிறப்பு. அவற்றில் எது கடுங்கோன் பாண்டியர், எது ஸ்ரீமாற ஸ்ரீவல்லபர், எது மாறவர்மர் அவனிசூளாமணி என்பது உனக்கு மெல்ல மெல்லப் புரியும். அவர்களிடம் உனது பிரச்சனைகளை மனம் விட்டுப் பேசு. எது நல்லது எது கெட்டது என்பதை அறியாமல் நிற்கிறேன். எனக்கு உதவுவீர்களா? என்று கைகூப்பி இறைஞ்சி நில். நிச்சயம் உனக்குத் தெளிவு பிறக்கும்!'

அவருடைய சொல்லையே வேதவாக்காக நானும் இன்று வரை கடைபிடித்து வருகிறேன். மனக்குழப்பங்கள் அதிகமாக இருக்கும் பல சமயங்களில் இவ்வாறு தாரகைகள் வடிவில் நிற்கும் நமது முன்னோரிடம் பலமுறை பேசித் தெளிவு பெற்றிருக்கிறேன். ஆக, என்னுடைய அண்மையை விட என்னினும் சிறந்த மூத்தோரின் அண்மை உனக்கு ஒவ்வொரு இரவிலும் கிடைக்கிறதென்பதை மறவாதே. ஒரு நாள் நானும் இந்த பூமியிலிருந்து மறைந்து அந்தக் கூட்டத்தில் சேர்ந்து கொள்வேன். சடையன் என்னுடன் பேச மாட்டானா? என்று ஒவ்வொரு நாளும் காத்துக் கொண்டிருப்பேன்..."

கம்பீரமாகப் பேசத் துவங்கிய அமர புஜங்கரின் குரல் இப்போது பெரிதும் இளகித் தழுதழுத்தது. பாண்டிய குலத்தின் இளவலான சடையமாறரிடம் உண்மையான அன்பையும் நேசத்தையும் வைத்திருந்த ஒரு இதயத்தின் அடியாழத்திலிருந்து வெளிப்பட்ட குரல் அது.

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் சிற்றப்பா. உங்களிடம் நான் இன்னும் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்குள் அவசரப்பட்டுக் கிளம்பி விடாதீர்கள்!" என்று கைகூப்பி இறைஞ்சினார் சடையர். இருவரும் ஒருவரையொருவர் கட்டியணைத்து மௌனமாகக் கண்ணீர் உகுத்தார்கள். எதற்கும் கலங்காத திடசித்தம் படைத்தவரான அரையன் மானாபரணரையே இந்தக் காட்சி உலுக்கி விட்டது. முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டார் அவர்.

"மானாபரணரே! தானைத்தலைவருக்கு அடுத்தபடியாக உங்களுக்குத்தான் பாண்டியகுலம் பெரிதும் கடமைப்

பட்டுள்ளது. பருவமடையாத பாலகனாக உங்களிடம் வந்து சேர்ந்த இளவல், இன்று வீரமும் விவேகமும் மிகுந்த இளைஞனாக வளர்ந்திருக்கிறாரென்றால் அதில் தங்களின் பங்குதான் எத்தனை கணிசமானது? தங்களது குடும்பத்தையும் சுற்றத்தையும் துறந்து வருடக்கணக்காக இவரைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றி வந்திருக்கிறீர்கள். இதற்கெல்லாம் எவ்விதத்தில் கைம்மாறு செய்யப்போகிறேன் நான்?"

"அரசே! பரம்பரை பரம்பரையாகப் பாண்டிய குலத்துடன் தம்மை இறுக்கமாகப் பிணைத்துக்கொண்ட குடும்பம் எங்களுடையது. என்னுடைய மூத்தோரில் எத்தனையோ பேர் இந்த நாட்டிற்காகத் தங்களது இன்னுயிரை ஈந்துள்ளார்கள். வீழ்வது உறுதி என்று தெரிந்த பிறகும் தைரியமாகப் போர்க்களத்தில் எதிரிகளைச் சந்திக்கப் புறப்பட்ட எனது பாட்டனார், விபரம் புரியாத பாலகனான என்னிடம் ஒரு வாக்குறுதியை வாங்கிக் கொண்டார். அந்த வாக்குறுதியைத்தான் நான் காப்பாற்றி வந்திருக்கிறேனேயொழிய வேறெதையும் பெரியதாகச் செய்து விடவில்லை. கைம்மாறு என்றெல்லாம் பேசி மனதைப் புண்படுத்த வேண்டாம்."

"உம்மைப் போன்ற குலவீரர்கள் பாண்டி நாட்டில் தொடர்ந்து தோன்றிக்கொண்டே இருப்பதினால்தான் எத்தனையோ முறை தோல்விகளைச் சந்தித்த பின்னரும் இன்னமும் பாண்டிய குலம் அழியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறது. மானாபரணரே! பாண்டி குலத்தின் சரித்திரம் உங்களின் பங்களிப்பையும் என்றாவது ஒரு நாள் மறக்காமல் பதிவு செய்யும். கிடக்கட்டும்.

நடக்கவிருக்கும் போர் சம்மந்தமாக மலை போலக் குவிந்து கிடக்கும் பல வேலைகளை விட்டுவிட்டு நான் சுந்தரபாண்டியபுரத்திற்கு இப்போது வந்ததற்கான காரணங்கள் இரண்டு. இங்கே கூடியிருக்கும் நமது வீரர்களைச் சந்தித்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்பது ஒரு காரணம். உங்களிருவரையும் பிரத்யேகமாகச் சந்தித்து வேறு எவருக்கும் இதுவரை தெரியாத முக்கியத் தகவல்கள் சிலவற்றைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது இரண்டாவது காரணம். இந்த பின்னணித் தகவல்களைப் புரிந்துகொள்ளாமல் உங்களால் போரில் தீவிரமாக ஈடுபடவே முடியாது. ஆக நான் சொல்லப்போகும் தகவல்களைக் கவனமாகக் கேளுங்கள்.

சோழர்களைப் பொருத்தவரை இந்தப் போர் தெளிவானது. நேரடியானது. இதற்கான முகாந்திரங்கள் பலப்பல ஆண்டுகளுக்கு முன்னர் ஆதித்த கரிகாலர் கொலையுண்டபோதே முடிவாகி விட்டன. அந்தக் கொலையில் காந்தளூர்ச் சாலையின் முக்கியஸ்தர்களும் தென்மலைநாட்டு நாடுவாழிகளும் சம்மந்தபட்டிருந்தது நிஜம்தான். அப்போதைய அரசியல் சூழ்நிலைகள் அவ்வாறாக அமைந்திருந்தன. அந்தக் கொலையில் நேரடிக் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு தண்டிக்கப்பெற்ற இரவிதாஸனும் சோமனும் காந்தளூர்ச்சாலையை நிர்வகித்து வரும் வலியசாலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சாலையின் புகழ் பெற்ற ஆசானாக விளங்கிய இரவிநீலி பட்டதிரியின் புதல்வர்கள். அவ்விருவரைத் தவிர சாலையின் தற்போதைய ஆச்சாரியராக விளங்கும் திருநாராயண பட்டதிரிக்குக்கும் இப்படுகொலையில் ஏதோ மர்மமான சம்மந்தம் உள்ளதென்றுதான் தெரிகிறது.

ஆகவேதான் அருள்மொழிவர்மன் சாலைக் கூட்டத்தாரையும் அந்நிறுவனத்தின் அரசியல் பாதுகாவலர்களாக விளங்கும் தென்மலைநாட்டு நாடுவாழிகளையும் அழித்தொழிக்க நினைக்கிறான். பழிக்குப் பழிவாங்கும் வீரியத்துடன் தஞ்சையிலிருந்து கிளம்பப் போகும் அவனுடன் சோழர்படை வீரர்கள் பத்தாயிரம்பேர் வரை புறப்பட்டு வருவார்களென்று எதிர்பார்க்கலாம். இவர்களைத்தவிர மதுராபுரியின் புறம்படியருகே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள எல்லைக் காவற்படையும் சேர்ந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது. உச்சபட்சமாக அவர்களின் பலம் பதினைந்தாயிரம் வீரர்களுக்குமேல் செல்லாது என்பதுதான் என் கணிப்பு.

இவர்களை வீரியத்துடன் எதிர்கொள்ள வேண்டுமானால் நமது பாண்டிப்படைகளும் தென்மலை நாட்டுப் படைகளும் ஓரணியாகத் திரண்டு நின்று எதிர்க்க வேண்டும். நமது படைகளைப் பொறுத்தவரை படைத் தலைமை என்பது ஒரு பிரச்சனையாக இல்லை. நானும் சடையனும் முன்னின்றால் ஒவ்வொரு பாண்டி நாட்டு வீரனுக்கும் ஆயிரம் யானை பலம் வந்து சேர்ந்துவிடும்.

ஆனால் தென்மலைநாட்டைப் பொறுத்தவரை அதுவே மிகப் பெரிய பிரச்சனையாகத் தெரிகிறது. அங்கு வலிமையான தலைமை என்பது கிடையாது. ஒரு காலத்தில் அந்தப் படைகளெல்லாம் ஆய்வேளரசருக்குக் கட்டுப்பட்டுத்

திகழ்ந்தன. அக்குலம் வலிமைகுன்றி அழிந்தொழிந்தபின் அவர்கள் சேரமான் பெருமாளுக்கு மட்டுமே கட்டுப்படுவேன் என்கிறார்கள். பெருமாளை இப்போரில் இழுப்பது நடக்காத காரியம். அவருக்கு ஏற்கனவே மாகோதையில் ஆயிரம் பிரச்சனைகள். ஆகவே, தென்மலை நாட்டு நாடுவாழிகளின் படைகளைக் கட்டுப்படுத்த மிக வலிமையான தலைமை இருந்தாலொழிய இப்போரில் நாம் வெற்றி பெறுவது இயலாத காரியம்!"

"என்ன சிற்றப்பா இது? போருக்கு இன்னும் ஓரிரு திங்களே மீதமுள்ளன. இந்த நிலைமையில் தலைமை ஒரு பிரச்சனையாக உருவெடுப்பதாவது? வள்ளுவனாரல்லவா இந்தச் சிக்கலைத் தீர்க்க வேண்டியவர்?"

"இந்தச் சிக்கலுக்கான முக்கியக் காரணமே அவர்தான். மாறிக் கொண்டிருக்கும் அரசியல் சூழலில் ஆய்வேளிர் விட்டுச் சென்றிருக்கும் தலைமைப் பொறுப்பை எப்படியாவது தாம் கைப்பற்றிவிட வேண்டுமென்கிற முனைப்பில் அவர் செயல்பட்டுக் கொண்டிருப்பதுதான் நமக்குப் பேரிழப்பு. அனைவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய தலைமையொன்று கிடைத்தால் மேலும் பலப்பல நாடுவாழிப் படைகள் நமது அணியில் சேர்ந்து கொள்ளும் வாய்ப்புள்ளது. இதற்கு முட்டுக்கட்டையாக நிற்பதே வள்ளுவ நாடுவாழியார்தான்!"

"அரசியிலில் பழுத்த அனுபவமுள்ள தாங்கள் இச்சிக்கலை என்றோ கணித்திருப்பீர்களே?"

"நான் மட்டுமல்ல. வேறு சிலரும்கூட இதனை எப்போதா கணித்து விட்டோம். ஆனால் வள்ளுவனாரை எதிர்த்துக் கொண்டு வேறொரு தலைமையை வலுக் கட்டாயமாகத் திணிக்க நாம் விரும்பவில்லை. ஏனெனில் அவரது கட்டுப்பாட்டில்தான் ஆரைவாய்மொழிக் கணவாயும் கோட்டைக்கரையும் பிற முக்கிய நாட்டுப்பகுதிகளும் அமைந்துள்ளன. அவரே தமது அதிகாரம் வள்ளுவநாட்டின் எல்லைகளுக்கு உட்பட்டது தான் என்பதை உணர்ந்து வேறொரு தலைமையை ஏற்கச் சம்மதிக்க வேண்டுமென்று நினைத்தோம். அதற்காகத்தான் இத்தனை காலம் பொறுத்திருந்தோம். ஆனால் இனியும் பொறுப்பதற்கில்லை."

"தென்மலைநாட்டுப் படைகளில் தலைமைப் பொறுப்பையும் தாங்களே ஏற்கப் போகிறீர்களா என்ன?"

"ம்ஹூம். அது நடவாது. அவர்களது மண்ணில் பிறந்த மரபு வழி அரச குலத் தலைமையைத்தான் அவர்களால் எந்தத் தயக்கமுமின்றி முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியும். அப்படிப்பட்டதொரு அழுத்தமான அதிகாரமும் உரிமையும் மலைநாட்டின் இரண்டு பண்டைய அரச பரம்பரைகளுக்கு மட்டும்தான் உண்டு. ஒன்று ஆய்வேளிர். மற்றவர் சேரமான்கள்..."

"சேரமான் பெருமாளுக்குத்தான் போரில் ஈடுபடச் சித்தமில்லை என்றீர்கள். ஆய்வேளிர் குலமோ அழிந் தொழிந்து விட்டது..."

"இல்லை! முழுமையாக அழிந்தொழிந்து விடவில்லை!"

"என்ன? என்ன சொல்கிறீர்கள்?" - அதுவரை உரையாடலில் பங்கெடுத்துக் கொள்ளாத அரையன் மானாபரணரின் குரலில் ஏராளமான அதிர்ச்சி தொக்கி நின்றது.

"ஆய்வேளிர் குலம் முழுமையாக அழிந்து விடவில்லை என்கிறேன். அக்குலத்தின் கொழுந்தொன்று பன்னெடுங் காலத்திற்கு முன் நமது தானைத்தலைவரின் கரங்களுக்கு அகப்பட்டது. பத்திரமானதொரு இடத்தில் அவர் அதனை வளர்த்து ஆளாக்கினார். ஆய்வேளிர் குலம் இன்னும் பிழைத்திருக்கிறது என்னும் உண்மை வெளியில் தெரிந்தால் அது அந்தக் கொழுந்தின் உயிரையே பறித்துவிடும் என்பதால் அது பரம இரகசியமாக இதுவரை காக்கப் பட்டது. குறிப்பிட்ட சிலருக்கே அந்த உண்மை தெரியும். அப்படிப்பட்ட குலப்பெருமை கொண்ட ஒருவரைத் தென்மலைநாட்டுப் படைகளுக்கு முன் நிறுத்தினால் அவர்கள் எத்தகைய உற்சாகத்தை அடைவார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்!"

"ஆஹா! எப்படிப்பட்டதொரு தீர்க்க தரிசனம் நமது தலைவருக்கு? ஆய்வேளிர் அரசகுலத்தில் உதித்த அந்த வீரர் இப்போது எங்கே - எப்படி இருக்கிறார்?"

"அவர் உங்கள் எல்லோருக்கும் நன்கு தெரிந்தவர்தான். என்ன, அவர் பண்டைய ஆய்வேள் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது மட்டும் இரகசியமாக இருந்தது இப்போது அதுவும் பகிரங்கமாகப் போகிறது. அவரே தென்மலைநாட்டின் பேரரசர் என்பதை அறிவிக்கும் பொருட்டு ஒரு பட்டாபிஷேக வைபவத்திற்குத் தானைத்

தலைவர் நாள் குறித்துள்ளார். அந்நன்னாளில் அவர் யார் என்பதை உலகமே அறிந்து ஆச்சரியப்படும். சோழனுக்கு மட்டுமல்ல. நம்மோடு இதுவரை சரிவர ஒத்துழைக்காத சேரமான் பெருமாளுக்கும் அச்செய்தி வயிற்றில் புளியைக் கரைக்கும். இதில் நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான அம்சம் என்னவெனில் இந்தப் புதிய ஆய்வேளரசர் நமது தானைத்தலைவரிடம் பெருமதிப்புக் கொண்டவராகையால் ஒரு போதும் நமக்கெதிராகத் திரும்ப மாட்டார் என்பதுதான். ஆகவே வலிமையானதொரு தலைமையுடன் திகழும் மலைநாட்டுப் படைகளும் பாண்டிப் படைகளும் ஒருமுகமாகச் சோழனை எதிர்க்கும். இதில் நமது வெற்றியைத் தடுத்து நிறுத்த எவராலும் முடியாது!" - வீரத்துடன் முழங்கியது பாண்டியரின் குரல்.

"அற்புதம்! அற்புதம்! அந்தப் புதிய ஆய்வேளரசர் யார் என்பதை இப்போதாவது நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?"

"நிச்சயமாக. சொல்லப் போனால் இத்தனை காலம் அந்த இரகசியத்தைத் தாங்களுடன் பகிர்ந்து கொள்ளாததே எனக்குத் தவறாகப் படுகிறது. ஆனால் தலைவரின் ஆணையை மீற முடியவில்லை. அவர் யாரெனில்....."

வழுதிகுல வாழ்த்துப் பாடல் முடிந்து விட்டதால் வீரர்கள் மத்தியிலிருந்து பெரியதொரு ஆஹாகாரம் எழுந்தது. அதனைத் தொடர்ந்து "பாண்டிய குலம் வாழ்க! பாண்டிப் படைகள் வெல்க! அமரபுஜங்க நெடுஞ்செழியர் வாழ்க!" என்றெல்லாம் வாழ்த்தொலிகள் எழுந்தன. எதிர்பாராது எழுந்த இந்த திடீர் இரைச்சலில் நம்மால் நெடுஞ்செழியர் பகிர்ந்து கொண்ட முக்கியமான இரகசியத்தைக் கேட்க முடியாமல் போய்விட்ட துரதிருஷ்டத்தை என்னவென்று சொல்வது?

"அவரா? அவரா ஆய்வேள் குலத்தில் உதித்தவர்? ஆஹா! இப்போதுதான் ஒரு சில விஷயங்கள் புரியத் துவங்குகின்றன.."

"நம்பவே முடியவில்லையே சிற்றப்பா?"

"ஆம். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆனால் அதுதான் உண்மை. ஆய்வேள் பரம்பரையின் கடைசி அரசராக விளங்கிய விக்கிரமாதித்ய வரகுணருக்கு இரண்டு நாடுவாழிக் குடும்பங்களுடன் கொள்வினை கொடுப்பினை

இருந்தது. வரகுணருக்குப் பின் பதவியில் அமரப்போவது நீயா? நானா? என்ற குடும்பச் சண்டையில்தான் அந்தக் குலமே அழிந்தது. அதில் எப்படியோ தப்பிப் பிழைத்த இந்தக் குழந்தை நமது தலைவரின் கரங்களுக்கு வந்து சேர்ந்ததே தனிக்கதை அது உயிரோடிருப்பது வெளியில் தெரிந்தால் அதன் உயிருக்கே ஆபத்து என்பதால்தான் சம்மந்தமில்லாமல் சோழநாட்டில் வளர ஏற்பாடு செய்யப்பட்டது. அது நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது என்பதை நீங்களே காண்கிறீர்கள். இதுவரை சோழநாட்டில் சுற்றிக் கொண்டிருந்த ஆய்வேள் குலத்து இளவல் இப்போது தென்மலை நாட்டிற்குப் புறப்பட்டு விட்டாரென்று செய்தி வந்துள்ளது. அடுத்த ஒரு பட்சத்தில் நல்லதொரு முகூர்த்தத்தில் அவருக்குப் பட்டாபிஷேகம் செய்யப்படும் 'இரண்டாம் விக்கிரமாதித்ய வரகுணர்' எனும் பெயருடன் அவர் நூற்றிப் பதினெட்டாவது ஆய்வேளாகப் பொறுப்பேற்பார். அந்த வைபவத்தில் நாமெல்லோருமே கலந்து கொள்கிறோம். சரியா? வாழ்த்துப் பாடல் முடிந்து விட்டது போல் தோன்றுகிறது நான் வீரர்களிடம் சென்று நான்கு வார்த்தைகள் பேசிவிட்டு வருகிறேன்" என்றபடி எழுந்தார் அமரபுஜங்க நெடுஞ்செழியப் பாண்டிதேவர்.

அவர் பகிர்ந்துகொண்ட செய்திகள் தென்னகத்தின் அரசியலில் ஒரு புதிய சூறாவளியையே கிளப்பிவிட வல்லது என்பதை உணர்ந்த இளவலும் அரையனாரும் அதிர்ச்சியில் உறைந்து போய்ச் சிலையாகி நின்றனர்.

64. கள்வன்! பிடியுங்கள்...



தஞ்சையில் திருபுவனமாதேவிப் பேரங்காடியின் சந்து பொந்துகளுக்கு அப்பால் அமைந்திருந்த வெண்சுண்ணக் கட்டிடத்தின் மேற்தளத்தில் அமைந்திருந்த சாளரத்தில் காதைப் பதித்து உள்ளே நடந்து கொண்டிருந்த உரையாடல்களைத் தன்னை மறந்து ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த ஐங்கரனுக்கு மேலாங்கி நின்றது ஒரே ஒரு எண்ணம்தான். தனக்கும் தன்னைப் போன்ற நூற்றுக்கணக்கான ஒற்றர்களுக்கும் பல வருடங்களாகப் போக்குக் காட்டிக்கொண்டிருந்த அந்தத் 'தலைவர்' கைக்கெட்டும் தூரத்தில் மலையமான்

என்றழைக்கப்படும் ஜடாமகுட பைராகியுடன் பேசிக் கொண்டிருக்கிறார். அது மட்டுமா? இன்னும் சிறிது நேரத்தில் ஏதோ ஒரு மிக முக்கியமான பொருளுடன் பைராகி தஞ்சையை விட்டே கிளம்பப் போகிறான். அவனைப் பின்தொடர்ந்து செல்வதா? அல்லது இந்தத் தலைவர் ஒளிந்து கொண்டிருக்கும் இரகசிய இடத்தைப் பற்றி மாராயருக்குத் தகவல் சொல்வதா?

மர்மம் மிகுந்த இந்தத் தலைவரைத் தேடிப் பல ஒற்றர்கள் பாண்டி நாட்டிலும் மலைநாட்டிலும் வெவ்வேறு இடங்களில் திரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஐங்கரன் அறிவான். ஆனால் இதுவரை ஒருவராலும் அவரது அடையாளத்தையோ இருப்பிடத்தையோ அல்லது அவர் சம்மந்தமான வேறு உருப்படியான தகவல்களையோ இம்மியளவும் கண்டறிய முடியவில்லை. ஆனால் வலிமை வாய்ந்த அந்தத் தலைவரின் அதிகாரத்தையும் கண்ணுக்குத் தெரியாத அவரது அரசியல் ஆதிக்கத்தையும் மட்டும் அவர்களால் தெளிவாக உணர முடிந்தது. இவரைச் சரிவர அடையாளம் காண முடியாத கடுப்பில் "தலைவர் என்று ஒருவனும் கிடையவே கிடையாது. நமது ஒற்றர்களைக் குழப்புவதற்காகப் பாண்டியர் செய்யும் சதி இது!" என்று கூட மாராயர் ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறார். அது உண்மையல்ல என்பது நிரூபணமாகிவிட்டது.

கடைசியில் ஒருவரும் எதிர்பாராத வகையில் சோழதேசத்தின் தலைநகரிலேயே அமைந்திருக்கிறது இந்த இரகசியத் தலைவரின் இருப்பிடம். இதுதான் இவரது நிரந்தர இல்லமா? அல்லது தஞ்சைக்கு வரும்போது மட்டும் இங்கே தங்குகிறாரா? தெரியவில்லை. நூலிழையளவும் அடையாளம் காணப்படாத இந்த மர்மத் தலைவரைப் பற்றிய படு பயங்கரமானதொரு உண்மையை இன்று நாம் கண்டறிந்திருக்கிறோம். கரகரப்பும் கம்பீரமும் நிறைந்த இவரது குரல்?? ஆஹா! நாம் நினைப்பது மட்டும் உண்மையாக இருந்தால்......

தன்னுடைய சுற்றுப்புறத்தையும் சூழலையும் நன்கு உள்வாங்கிக் கொண்டு கவனம் சிதறாமல் எந்நேரமும் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படும் அனுபவம் வாய்ந்த சோழ ஒற்றனான ஐங்கரனையே அந்தச் சில நிமிட நேரச் சம்பாஷணைகள் உலுக்கியெடுத்து விட்டன. பல்வேறு எண்ணங்களும் அவன் மனதில் அலைமோதத் துவங்கி

விட்டதால் மச்சுப்படிகளில் எவரோ ஏறி வரும் சப்தம் கேட்டும் அவனது செவிப்புலன்கள் அதனை உணரவில்லை.

"மலையனூரரே! வருடக்கணக்காக நாம் காத்திருந்தது வீண்போகவில்லை. காலம் கனிந்துவிட்டது. தங்களின் வருகையை எதிர்பார்த்துத் தெற்கே தங்களது தாய்மண் பல காலமாகக் காத்திருக்கிறது. செல்லுங்கள்! உங்களின் உரிமையை நிலைநாட்டி வெல்லுங்கள். வெற்றி நமதே! இனி என்னால் தாங்களை உரிமையுடன் பெயர் சொல்லி அழைக்கக்கூட முடியாது. தங்களின் அபிஷேக நாமம்..."

படிக்கட்டுகளின் வழியே மேற்தளத்திற்கு ஏறிவந்த அந்த சேடிப்பெண், புதியவனொருவனைக் கண்ட அதிர்ச்சியில் வாய்குவித்து "ஓ!" என்று அலற, திடுக்கிட்டுப் போனான் ஐங்கரன். அடடா. வெண்ணை திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்த கதையாகவல்லவா ஆகிவிட்டது? கணத்தில் தன்னுடைய ஆபத்தான நிலைமையை உணர்ந்தவன், அடுத்த நொடியே மேற்தளத்தின் வழியாக ஓட்டமெடுக்க ஆரம்பித்தான். அந்தப் பெண்ணின் கூக்குரலைக் கேட்டு ஓடிவந்த அடியாட்கள் அவனைத் துரத்தத் தொடங்கினார்கள்.

தலைநகரின் மிக முக்கியப் பகுதிகளுள் ஒன்றான திருபுவனமாதேவிப் பேரங்காடியையொட்டிய இடமாதலால் அப்பகுதியில் வீடுகள் ஒன்றையொன்று இடித்துக்கொண்டு நிற்பதுபோல் அதிக இடைவெளியின்றி நெருக்கமாகக் கட்டப்பட்டிருந்தன என்பதைக் கண்டோம். அந்த அமைப்பு தான் இக்கட்டான அந்த நிலைமையில் ஐங்கரனுக்குக் கை கொடுத்தது. ஒரு வீட்டின் மேற்தளத்திலிருந்து மறு வீட்டின் மேற்தளத்திற்கு எளிதாக அவனால் தாவியோட முடிந்தது. சற்றே முகத்தைத் திரும்பி எத்தனை பேர் தன்னைத் துரத்திக் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் சோழ நாட்டார்களா அல்லது பாண்டி நாட்டாரா? என்றெல்லாம் கண்டறியும் ஆர்வம் அடக்க முடியாமல் எழுந்தாலும் அவ்வாறு திரும்புவது தனது உயிருக்கே ஆபத்தாக முடியலாம் என்பதால் ஓட்டத்திலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி முன்னேறினான்.

நான்கைந்து வீடுகள் இவ்வாறு தாண்டியதும் மச்சு வீடுகள் முடிந்து ஓட்டு வீடுகள் தென்பட ஆரம்பித்து விட்டன. கெட்டது குடி! சுட்ட மண் ஓடுகளில் காலை வைத்து நடப்பதே பெரிய காரியமெனில் ஓடுவது எவ்வாறு?

போதாக்குறைக்கு முதல் நாளிரவு பெய்திருந்த தூவான மழையில் ஓடுகள் நனைந்திருந்தன. பாசம் பிடித்துக் கிடந்த சில பழைய ஓடுகளில் காலை வைத்தால் அது ஓரிடத்தில் நில்லாமல் வழுக்கிக் கொண்டு சென்றது. என்றாலும் தட்டுத் தடுமாறியபடி முன்னேறி ஓடிக் கொண்டிருந்தவன், ஒரு திருப்பத்தில் கண நேரம் திரும்பிப் பார்க்க - அவனைத் துரத்தி வந்தவர்களில் ஒருவன் ஓட்டத்தை நிறுத்திக் கொண்டு தன்மீது சிற்றம்பு எய்வதற்காகக் குறிபார்ப்பதைக் கண்டு திடுக்கிட்டான். சண்டாளர்கள்! இத்தனை அவசரமாகத் தன்னைத் துரத்த முற்படும் போதும் வில் அம்புகளோடு வந்திருக்கிறார்களே? நாம் நினைப்பது போல் இவர்கள் வெறும் அடியாட்களல்ல. வீரர்கள்? அல்ல, அல்ல.. மெய்க்காவலர்கள்! தானைத்தலைவரின் மெய்க் காவலர்கள்! சோழ நாட்டில் சோழ மண்ணில் சோழ ஒற்றனைத் தைரியமாகத் தாக்குவதற்கு எத்தனை துணிச்சல்....

"சரக்"கென்று ஒரு அம்பு அவனது வலது கரத்திற்கு மிக அருகில் காற்றைக் கிழித்துக் கொண்டு படு வேகமாகச் சென்றது. அது மட்டும் அவனது உடலில் பாய்ந்திருந்தால் உடனடியாக மரணம் சம்பவித்திருக்கும். அம்பு வரும் வேகத்தைப் பார்த்தால் இவர்கள் சாதாரண வீரர்களாகக் கூடத் தெரியவில்லை. ஒரு வேளை.. ஆஹா! இவர்கள் தென்னவன் ஆபத்துதவிப் படைகளைச் சேர்ந்தவர்களா என்ன? அவர்களிடம் அகப்பட்டுக் கொண்ட எந்த ஒற்றனும் இதுவரை உயிர் தப்பியதில்லை என்பதை ஐங்கரன் அறிவான். மேற்கொண்டு அவசரமாக ஏதாவது செய்து...

அடுத்த அம்பு அவனது காதுகளை உரசிக்கொண்டு செல்ல.. அவன் அதிலிருந்து விலக முற்பட்டு ஆபத்தான ஓடொன்றில் காலை வைக்க, அது பிசகி... நேராக அந்த வீட்டின் ஓடுகளில் வழுக்கிச் சென்று முற்றத்திற்கு மத்தியில் அமைந்திருந்த கிணற்றின் அருகே சென்று விழுந்தான்.

அடுத்த கணம் "கள்வன்! கள்வன் ஓடுகிறான்! பிடியுங்கள்!" என்று மச்சிலிருந்து பெருங்கூச்சல் எழுந்தது. நயவஞ்சகர்கள். அவர்களின் சிற்றம்புகளிடமிருந்து தப்பித்து விட்டதால் நம்மைத் திருடனாக்க முயல்கிறார்களா என்ன? ஐயோ.. இதென்ன? நிற்கவே முடியாமல் கால் நரம்பு பிசகிக் கொண்டு விட்டது போலிருக்கிறதே?

அவன் சுதாரித்துக்கொண்டு எழுந்து நிற்பதற்குள் தலையிலும் உடலிலும் சரமாரியாக அடிகள் விழுந்தன.

குறிப்பாகப் பின்மண்டையில் பலத்த அடி! இரத்தம் கொட்டத் துவங்கி விட்டது.

மயங்கிச் சாய்வதற்குள்... எ.. ப்.. ப.. டி... யா.... வ.... து.....

* * * * * * * *

ஆதவன் அவிந்து அடங்கிவிட்டாலும் தஞ்சைப் பெருவீதிகளில் வெளிச்சம் சற்று மிச்சமிருந்தது. இன்னும் ஒரு நாழிகையோ இரண்டு நாழிகைகளோதான். பின் சொல்லி வைத்தாற்போல் நகரமெங்கிலும் ஒரே சமயத்தில் இருள் படியத் துவங்கிவிடும். அவ்வாறு இருள் கப்புவதற்குமுன் தமது வேலைகளை முடித்துக் கொள்ள வேண்டும் என்கிற முனைப்புடன் அபிமானதொங்கன் திருவீதியின் வணிகர்கள் தத்தம் கடை கண்ணிகளை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள். குறிப்பாகத் திருவிளக்கிடுவார் தமது நந்தா விளக்கிடும் பணியைத் தொடங்குவதற்கு முன் நாளங்காடிக்காரர்கள் கடைகளைக் கலைத்துவிட வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவு இருந்தது. விளக்கிடுவார் வந்து சென்றபின் அதே இடத்தில் அதாவது திருவிளக்குக் கம்பங்களின் கீழ் இரவு நேர வியாபாரிகளான அல்லங்காடிக்காரர்கள் கடை விரிப்பார்கள்.

இவ்வாறு வியாபாரத்தை முடித்துக் கொண்டு கடையைக் கட்டும் அவசரத்திலிருந்த வணிகர்கள், வீதியின் பல்வேறு போக்குவரத்து சப்தங்களையும் மீறி எழுந்த "லொள்! லொள்!" எனும் உறுமல் ஒலிகளைக் கேட்டுக் கவனம் கலைந்தார்கள். அந்தச் சப்தங்களைத் தொடர்ந்து இரண்டு பெரிய வேட்டை நாய்கள் அப்பெருவீதியின் வழியே அரசாங்கப் படைவீரர்களால் செலுத்தப்பட்டு வந்து கொண்டிருந்தன. அவ்வப்போது அந்த நாய்கள் ஓட்டத்தை நிறுத்திக்கொண்டு அங்குமிங்கும் மோப்பம் பிடிப்பதையும் அதனைத் தொடர்ந்து ஏதோ ஒரு திசையைக் குறி வைத்து ஓடத்துவங்குவதையும் கண்டு அந்த நெரிசல் மிக்கக் கடைவீதி ஏகக் குழப்பத்திற்கு உள்ளானது.

பாய்ந்தோடும் நாய்கள் தங்களைத்தான் கடிக்க வருகின்றனவோ? என்று வீதியின் இருமருங்கிலும் திரண்டிருந்த பொதுமக்கள் பீதிக்கு ஆளானார்கள். நன்கு வளர்ந்திருந்த ஜாதி நாய்களாதலின் அவற்றின் பிடியில் அகப்பட்டுக் கொண்டு கணிசமான சதையைப் பறி

கொடுப்பதை எவரும் விரும்பவில்லை. ஆனால் அந்த நாய்களோ நடமாடிக் கொண்டிருந்த மனிதர்களை அதிகம் கவனிக்காமல் தமது மோப்பத்தைப் பிடிப்பதிலேயே குறியாய் இருந்தன. அனல் கக்கும் விழிகளுடன் நாவைத் தொங்கவிட்டபடி முனைப்புடன் முன்னேறும் அந்த இராட்சத ஜீவன்களை மாலை நேரத்து மங்கிய இருளில் காண்போரின் நெஞ்சு கலங்கியது.

மளமளவென்று எதற்கும் அஞ்சாமல் அந்தத் தெருவீதியில் முன்னேறிய நாய்கள் மிக விரைவிலேயே அன்பில் திருமாளிகைக்காகப் பிரியும் சந்தில் காலை வைத்தன. அவை திருவீதியிலிருந்து மறைந்ததும் பொது மக்களும் வியாபாரிகளும் "அப்பாடா!" என்று ஒருங்கே நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

"மக்களைக் கண் போலக் காக்க வேண்டிய அரசாங்கமே வீரர்களின் இத்தகைய அடாத செயலைக் கண்டும் காணாமலிருப்பதா? இத்தனை நெரிசல் மிகுந்த மாலை வேளையில் இப்படியா முரட்டு நாய்களைத் தெருவீதிகளில் துரத்தி விடுவது?"

"அரசரை அடுத்த முறை சந்திக்கும் போது இதனைத் தெரிவிக்க வேண்டும். கோட்டைக்காவல் வீரர்களின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது."

"அவர்கள் கோட்டைக்காவலர்கள் போலத் தெரிய வில்லையே? அரசருடன் வேட்டைக்குச் செல்லும் வேட்டைப்படை வீரர்கள் போலல்லவா தோன்றியது?"

"வேட்டைப்படையாவது மண்ணாவது? உத்தமச் சோழர் காலத்திலேயே அந்தப் படை கலைக்கப்பட்டு விட்டது. இவர்கள் யாரென்று தெரியவில்லை..." என்றெல்லாம் பல்வேறு அதிருப்திக் குரல்கள் வீதியெங்கிலும் எழுந்து அடங்கின.

திருவீதியிலிருந்து மேற்கே பிரிந்த அந்தக் குறுகிய சந்தில் நாய்கள் பாய்ந்தோடின.

"என்ன வலம்புரி? நாம் தேடிக்கொண்டிருக்கும் ஒற்றன் சாதாரணமானவனல்ல போலிருக்கிறதே? நமக்கே தெரியாத சந்து பொந்துகளிலெல்லாம் புகுந்து வந்திருக்கிறானே?"

"சந்து பொந்துகளில் செல்வதெல்லாம் ஒரு பிரச்சனையே அல்ல. நெரிசல் மிகுந்த இந்த மாலை நேரத்தில் நகரின் பிரதான திருவீதிகளில் மீண்டும் நுழைந்து இவை குழப்பம் விளைவிக்காமலிருந்தால் சரி. அதென்ன? வீரசோழன் புரவி இலாயம் தானே?"

"அதேதான்."

ஆனால் நாய்கள் இலாயத்திற்குள் நுழையாமல் பாழடைந்து கிடக்கும் அன்பில் திருமாளிகையின் பின்கட்டுக்குள் புகுந்தன. மாலை நேரத்தின் மங்கிய வெளிச்சத்தில் புதர்கள் மண்டிக் கிடந்த அந்த மாளிகை காண்பவர்களை அச்சுறுத்தத்தான் செய்தது.

"வலம்புரி! இன்று நமக்கு நேரம் சரியில்லை போலிருக்கிறதே?"

"உஸ்... இரு. இந்த விஷயம் இப்போதுதான் சற்று சுவாரஸ்யம் தட்டத் துவங்கியிருக்கிறது."

அந்த மாளிகையின் பின்கட்டில் ஏதாவது ஒரு இரகசிய அறைக்குள் புகுந்து ஒற்றனை நாய்கள் கண்டறிந்துவிடும் என்று வீரர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. சில கணங்கள் அங்குமிங்கும் பின்கட்டில் சுற்றிய நாய்கள், மீண்டும் வெளியில் வந்து குறுகிய சந்தின் மறுகோடியான இராஜகம்பீரன் திருவீதியை நோக்கி ஓட ஆரம்பித்தன.

"நாசமாய்ப் போயிற்று! இராஜகம்பீரன் திருவிதியை நோக்கியல்லவா செல்கின்றன?" என்று அலுத்துக்கொண்ட அந்த வீரர்கள் வேறு வழியின்றி அவற்றைப் பின் தொடர்ந்தார்கள்.

கம்பீரன் திருவீதியில் நுழைந்ததும் நிலைமை இன்னும் மோசமடைந்து விட்டது சோழரின் பிரதான அரண்மனையி லிருந்து நேராகக் தெற்குத் திட்டிவாசலுக்குச் செல்லும் திருவிதி அது என்பதால் கூட்டமும் நெரிசலும் மிகக் கடுமையாக இருந்தன. அத்தகைய கூட்டத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அந்த வேட்டை நாய்கள் குரைத்தபடி முன் பாய்வதையும் அடிக்கடி நின்று [illegible] மோப்பத்தை மீண்டும் பிடிக்க முயல்வதையும் வீரர்கள் சங்கடத்துடன் கவனித்துக் கொண்டார்கள். [illegible] அதிகம் உள்ள வீதியாதலால் பல்வேறு விதமான

வாசங்களும் எழுந்து நாய்களின் மோப்பத்திறனைக் குறைக்கின்றன என்பது அவர்களுக்குப் புரிந்தது.

கம்பீரன் திருவீதி முடிந்து திருபுவனமாதேவிப் பேரங்காடி துவங்கும் சந்திப்பில் நாய்கள் பெரிதும் குழம்பின. நாலாபுறங்களிலும் பாய்ந்து பாய்ந்து மீண்டும் கிளம்பிய இடத்திற்கே வந்து சேர்ந்தன. என்றாலும் அவை தம்முடைய முயற்சியைக் கைவிடாதது வீரர்களுக்கு வியப்பளித்தது. இறுதியில் ஒரு வழியாகப் பேரங்காடியின் குறுக்குச் சந்தில் புகுந்து புறப்பட்ட அந்த ஜீவன்கள், மேற்கொண்டு முன்னேற முடியாமல் தம்முடைய தேடலை நிறுத்திக் கொண்டன.

"வலம்புரி! இந்த இடத்திலிருந்துதான் நமது தேடலைத் துவங்க வேண்டும். நான் உடனடியாக மாராயருக்குச் செய்தி சொல்லிவிட்டு வருகிறேன்."

அந்த வீரன் மாராயரைச் சந்தித்து நடந்த நிகழ்ச்சிகளை விளக்கிக் கொண்டிருக்கும்போது கோட்டைக் காவல் தலைவரிடமிருந்து ஒரு முறி அவருக்கு வந்து சேர்ந்தது. பேரங்காடிக்கருகில் அமைந்திருந்த வீட்டில் திருடிவிட்டுத் தப்ப முயன்ற கள்வனொருவன் கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டானாம். வீட்டார் அவனை அடித்து நொறுக்கிப் பிடித்து வைத்திருக்கிறார்களாம்.

இரண்டு விஷயங்களையும் சேர்த்து யோசித்தார் மாராயர். அகப்பட்டுக்கொண்ட கள்வன் ஐங்கரனாகக்கூட இருக்கலாம். அவனை அடையாளம் காண்பதற்கு வேறொருவரையும் அனுப்ப முடியாதாகையால் தாமே நேரில் சென்று வருவதுதான் நல்லது என்று அவருக்குத் தோன்றியது. "நீ இங்கேயே காத்திரு. நானும் உன்னுடன் கிளம்பி வருகிறேன். மீண்டும் பேரங்காடி வரை செல்ல வேண்டியிருக்கிறது" என்று அந்த வீரனுக்கு உத்தரவிட்டு விட்டு உள்ளே சென்றார் அவர்.

பேரங்காடியில் கள்வன் அகப்பட்டுக்கொண்ட வீட்டில் அவர் முற்றிலும் எதிர்பாராததொரு அதிர்ச்சி அவருக்குக் காத்திருந்தது.

65.உத்தியான வனம்



இரு தளங்களுடன் வான் நோக்கி மேலெழுந்த மாளிகைகளுக்கிடையே விடப்பட்டிருந்த இடைவெளியில் அமைந்திருந்தது அந்த அடர்ந்த அழகிய உத்தியான வனம். அதன் நான்கு புறங்களிலும் மல்லி, சம்பகம், இருவாட்சி, கருடார்த்தம், செம்பருத்தி, ஜாதி, முல்லை முதலான பூச்செடிகள் நிறைந்து வளர்ந்திருந்தன. ஆங்காங்கே வெற்றிலைக் கொடிகளும் புடலை, பூசனி மற்றும் பரங்கிக் கொடிகளும் கூடக் காணப்பட்டன. பரங்கிக் கொடிகளினூடே பெரும் காய்களும் அழகான மஞ்சள் நிறப் பூக்களும் செழித்து வளர்த்திருந்தன.

அளவோடு பாத்தி கட்டி எச்சரிக்கையாகப் பாதையின் இருமருங்கிலும் இடம்விட்டு வளர்ந்திருந்த அந்தச் செடிகொடிகளைக் காணும்போது அது இயற்கையாகத் தோன்றிய பூவனமல்ல என்பது தெளிவாகும் நெரிசல் மிகுந்த தஞ்சை நகரின் மையப் பகுதியில் இத்தனை பெரிய பூவனம் அமைக்கப்பட்டிருக்கிறதென்றால். ஒரு வேளை இது சோழ அந்தப்புரத்தைச் சேர்ந்த நந்தவனமாக இருக்கலாமோ என்று ஐயுறுகிறோம். நமது கருத்தை மெய்ப்பிப்பதுபோல் அந்த வனத்தின் மத்தியில் அமைந்திருந்த வட்டவடிவ மண்டபத்தில் அரசகுலத்து மாதரசியர்களைப்போல் தோற்றம் கொண்ட இருவர் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

இரு கால்களையும் பக்கவாட்டில் மடித்து இடக் கரத்தை நிலத்தில் ஊன்றி வலக்காத்தைத் தொடையில் இருத்தி ஒயிலுடன் அமர்ந்திருக்கும் முதல் பெண்மணியைப் பார்த்தவுடன் உள்ளத்தில் ஒரு மரியாதை பிறக்கிறது அவரது திருமுகத்தில் இராஜகுலத்திற்கேயுரிய எல்லையில்லாத கம்பீரமும் கருணையும் கலந்து பொலிந்தன. தந்த நிறத்தில் காணப்பட்ட அவரது பால் வண்ண மேனியில் மாலைச் சூரியனின் செந்நிற ஒளி பட்டுத் தெறித்து அவரது சௌந்தர்யத்தைக் கூட்டிக் காண்பித்தது. நெற்றி யெங்கும் திருநீறு பூசி அருள் பொங்கும் விழிகளுடன் சிறு முறுவலை

வதனத்தில் தேக்கியபடி காட்சியளிக்கும் இந்தப் பெண்ணரசி யாராக இருக்கக்கூடும்?

அவருக்கடுத்ததாக மிகுந்த தோழமையுடன் அமர்ந்திருக்கும் இரண்டாவது பெண்மணியின் மீது நமது பார்வை படர்கிறது. என்ன வேடிக்கை? அந்தக் காலத்துப் பெண்களைப்போல ஒரு காலை மடித்து மறு காலை குத்திட்டு அமராமல் ஆண்களைப்போல் சப்பணமிட்டு அமர்ந்திருக்கிறாரே இவர்? அது மட்டுமல்ல. கைகளைக் கம்பீரமாக நீட்டி மடக்கி இவர் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் வேறு எவரையோ போன்று நடித்துக் கொண்டிருப்பது போலல்லவா தெரிகிறது?

மாநிற மேனியுடன் திகழும் இந்த இளம் பெண்மணியின் முகத்தில்தான் எத்தனை பொலிவு? படபடவென்று வண்ணத்திப் பூச்சியைப்போல் சிறகடித்துக் கொள்ளும் இமைகளின் கீழ் விரிந்து பரவும் விழிகளில்தான் எத்தனை குறும்பு? குவிந்து பருத்து மாதுளைப் பழங்களைப் போலத் திகழும் அதரங்களும் நீண்ட நாசிகளும் சரேலென்று நீர்வீழ்ச்சியாய்க் கீழிறங்கித் தோளில் படிந்து அடங்கும் கருங்குழலும் பல வண்ண மலர்களை அதில் பாங்காகச் சொருகப்பட்டிருக்கும் நேர்த்தியும்....

அடக்கடவுளே! அந்தப்புரத்திற்குள் அத்துமீறி நுழைந்தது மட்டுமல்லாமல் இந்த அரசகுலப் பெண்மணிகளின் அழகை இத்தனை விரிவாக வர்ணிக்க வேறு செய்யவேண்டுமா என்ன?

அருகருகே அமர்ந்திருக்கும் அந்த இரண்டு பெண்மணிகளும் ஏறக்குறைய ஒரே விதமான ஆடை அணிகலன்களுடன் காணப்பட்டாலும் வெவ்வேறு விதமான எண்ணங்களை நமக்குள் எழுப்புவதை மறுப்பதற்கில்லை. முதலாவது பெண்மணியைப் பார்க்கும் போது நம்மையுமறியாமல் எழுந்து நின்று கைகுவித்து வணங்கத் தோன்றுகிறது. பண்டைய அரசகுலங்களில் உதித்த பதிவிரதைகளுக்கேயுரிய பக்தி கலந்த கம்பீரம் அவருடையது. ஆனால் இரண்டாமவரைப் பார்த்தாலோ உரிமையுடன் அவரது அருகில் அமர்ந்து நமது அந்தரங்கங் களையெல்லாம் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது. நட்பும் தோழமையும்தான் இந்தக் கொண்டல் வண்ண மாதரசியின் பெரும் பலங்கள் போலும்.

இந்த இருவரின் தோற்றத்தையும் வைத்துப் பார்க்கும் போது முதலாமவர் இராஷ்டிரகூடக் குலத்தில் உதித்த சோழப் பட்டத்தரசியாரான தந்திசக்தி விடங்கியாராகவே இருக்கக்கூடும் என்பதாகத் தோன்றுகிறது. இரண்டாமவர்? ம்.... பழுவூர் இராஜ்ஜியத்தில் பிறந்து வளர்ந்த நக்கன் பஞ்சவன் மாதேவியாராக இருக்கக்கூடுமா என்ன?

"தந்தி! அடடா.. இந்த மாலை நேரத்தின் மஞ்சள் நிற சூரிய வெளிச்சம் உன் மேனியில் என்னமாய்ச் ஜொலிக்கிறது? அப்படியே உன்னைக் கட்டியணைத்து..." - ஏறக்குறையப் பேரரசரையொத்த கரகரப்பான செயற்கைக் குரலில் பேசிக்கொண்டே கட்டியணைக்க வருபவரை அவசர அவசரமாக மறித்தார் முதலாவது பெண்மணி.

"உஸ்.. மாதேவி! உனக்கு ஆனாலும் குறும்பு அதிகம். அவர் வந்துவிடப் போகிறார்.." - மத்திய வயதை நெருங்கி விட்டாலும் அந்த மாதரசியின் முகத்தில்தான் எத்தனை நாணம்?

"வந்தால் வரட்டுமே? அவர் வந்தபின் செய்யப்போகும் வேலையை நான் முன்பே துவங்கிவிட்டதாக எண்ணிக் கொள்வார்."

"அதெல்லாம் ஒன்றும் கிடையாது. இராஜ்ஜியபாரம் ஏற்றதிலிருந்து அவருக்கு நமது நினைப்பே ஏறக்குறைய அற்றுப் போய்விட்டது என்றுதான் நினைக்கிறேன். குழந்தைகளால்கூட முன்புபோல் அவரைச் சந்தித்து அளவளாவ முடியவில்லை."

"ஆண்கள் எல்லோருமே அப்படித்தானக்கா. பெரும் பொறுப்பு தமது தலையில் சுமத்தப்பட்டால், அந்தப் பொறுப்பிலேயே ஒட்டுமொத்தமாக மூழ்கிவிடுவார்கள். அவர்களை மீட்டெடுத்து உங்களுக்கும் குடும்பம் என்று ஒன்றும் உண்டு என்று நினைப்பூட்ட வேண்டியது நாம்தான்."

"பாவம்! அவர்தான் என்ன செய்வார்? நாலா பக்கங்களிலும் எத்தனையோ பிரச்சனைகள்.. "

"அதுதானே பார்த்தேன்? அவரை ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் தங்களுக்கு மனது தாங்காதே? பேரரசியார் நாட்டிற்கு மட்டும் அரசியல்ல. அரசரின் இதயமாகிய இராஜ்ஜியத்திலும் கோலோச்சும்...."

“போதும் வேடிக்கை. அவர் வரப்போகிறார். நீ வசமாக மாட்டிக் கொள்ளப் போகிறாய்!”

“வரட்டுமே? வந்தால் என்ன சொல்லப்போகிறார்? (குரலை மாற்றிக்கொண்டு) மாதரசிகளே! நீங்கள் தாண்டக வேந்தரான அப்பர் பெருமானின் திருநெடுந்தாண்டகங்களைக் கேட்டிருக்கிறீர்களோ? சந்தத்துடன் கூடிய இசை கலந்து பிடாரர் அதனை விண்ணப்பிப்பதைக் கேட்டு நேற்று மனம் உருகிவிட்டது என்று துவங்கி தாண்டகம் என்றால் என்ன? அது அப்பர் பெருமானால் எந்தெந்தத் திருத்தலங்களில் பாடப்பட்டது? அதில் அமைந்துள்ள நுட்பங்கள் என்ன? என்பதைப் பற்றியெல்லாம் குறைந்தது ஒரு நாழிகை நேரத்திற்கும் குறையாமல் விளக்கிக் கொண்டிருப்பார். இடையில் நம்பியாரூரைப் பற்றிய பேச்சுக்கள் தவறாமல் இடம்பெறும். அவருக்கும் சங்கிலியாருக்கும் இடையில் நிகழ்ந்த கூடல்கள் ஊடல்கள்...”

அவர் வாக்கியத்தை முடிக்கும்வரை காத்திராமல் கலகல வென்று அடக்க முடியாமல் பேரரசியார் சிரிக்க, அந்தச் சிரிப்பில் திடீரென்று “ஹா-ஹா...”வென்று வேறொரு ஆண் சிரிப்பும் கலந்து எழுந்தது. தேவியர் இருவரும் துணுக்குற்றுப் போனார்கள். அதுவரை வேடிக்கையும் விளையாட்டுமாய்த் திகழ்ந்த பஞ்சவன் மாதேவியார் பயத்தில் பளிச்சென்று எழுந்து நின்றே விட்டார். அவரது தலை வெட்கத்திலும் அவமானத்திலும் குனிந்து நின்றது. பேரரசியார் அத்தனை அவசரமாக எழுந்திராமல் மெல்ல மரியாதையுடன் எழுந்தார்.

“நான் இல்லாத வேளைகளில் நீங்கள் இருவரும் அப்படி என்னதான் செய்கிறீர்கள் என்று நான் பலமுறை வியந்ததுண்டு. கடைசியில் இன்றுதான் அது புரிந்தது...” என்றபடி அந்தச் சிறிய மண்டபத்திற்குள் நுழைந்தார் அருள்மொழிவர்மர். இரு பெண்மணிகளும் மிகுந்த மரியாதையுடன் அவரது அடிதொழ முயல, இடையிலேயே அவர்களைப் பிடித்து நிறுத்தித் தடுத்துத்தாட்கொண்டார். அவரது இரு கரங்களும் தேவியரின் மென் கழுத்தை உரசித் தோள்களில் இயல்பாகப் படிந்தன.

“தாங்கள் எப்போது தோட்டத்திற்குள் நுழைந்தீர்கள்? சிறு சப்தம்கூட எழவில்லையே?”

“வேண்டுமென்றுதான் சப்தம் செய்யாமல் உள்ளே நுழைந்தேன். நாம் இல்லாத நேரத்தில் இந்த இரண்டு பெண்களும் நம்மைப் பற்றி அப்படி என்னதான் பேசிக் கொண்டிருப்பார்கள் என்று அறிந்து கொள்ளும் ஆர்வம் என்னைப் பிடுக்கித் தின்றது...”

பேரரசரின் இந்த பதிலைக் கேட்ட மறுகணமே வெட்கத்துடன் சட்டென்று முகத்தை மூடிக் கொண்டார் பஞ்சவன் மாதேவியார். அடடா. எவரை மட்டு மரியாதையின்றி கேலி பேசிக் கொண்டிருந்தோமோ அவரே நமது பேச்சுக்களை ஒட்டுக் கேட்டுவிட்டாரா என்ன? எனும் எண்ணம் அவரை வாட்டி வதைத்தது.

மருதோன்றி இலைகளின் செம்மை அளவாகப் படிந்திருந்த தேவியாரின் பஞ்சு விரல்களைப் பிடித்து மெல்லக் கிள்ளினார் பேரரசர். “அவ்வளவு தைரியமாக என்னைக் கேலி பேசிவிட்டு இப்பொழுது என்ன வெட்கம் வேண்டிக் கிடக்கிறது?”

“கொஞ்சம் பொறுங்கள். நீங்கள் உத்தியான வனத்திற்குள் நுழைந்துவிட்டுச் சப்தம் செய்யாமல் நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டீர்களா? நம்பவே முடியவில்லையே? நினைத்தாலும் அவ்வாறெல்லாம் உங்களால் செய்ய முடியாதே? நேரடியாக என்ன கேலி பேசினோம் என்றாவது கேட்பீர்களே தவிர இப்படி மறைந்திருந்தெல்லாம் கேட்க மாட்டீர்களே?” என்று வியந்தார் தந்தி.

“பெண்டுகளா! நாட்டு நிலைமை நாளுக்குநாள் மாறிக் கொண்டிருக்கிறது. அதற்குத் தக்கபடி நானும் என்னை மாற்றிக் கொண்டு வருகிறேன். பற்பல சூதுவாதுகளைக் கற்றறிந்து வருகிறேன். குறிப்பாக அந்தப்புரத்தில் அமர்ந்தபடி நாட்டையே அடக்கியாள நினைக்கும் இராஜகுலப் பெண்மணிகளை எப்படிச் சமாளிப்பது என்பது தனி வகுப்பாகவே நடத்தப்படுகிறது. என்னுடைய பழைய நண்பரான அமண்குடியார்தான் இதையெல்லாம் கற்றுத் தருகிறார்.”

“ம்ஹூம். இன்னமும் எனக்கு நம்பிக்கையில்லை. எங்கே? நாங்கள் கடைசியாக என்ன சொல்லிக் கொண்டிருந்தோம் என்பதைக் கூறுங்கள் பார்ப்போம்?”

பேரரசரின் விழிகள் திருதிருவென்று அங்குமிங்கும் சுழன்றன. என்ன சொல்வது என்று யோசித்தார் போலும். பின் நொடியில் தம்மைச் சமாளித்துக்கொண்டு "என்ன, நான் முன்புபோல் உங்களுடன் நேரம் செலவழிப்பதில்லை. குழந்தைகளின் முகத்தை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்கிற வழக்கமான புராணம்தான்."

இதனைக் கேட்ட பஞ்சவன் மாதேவியாரின் முகம் ஆச்சரியத்திலும் மகிழ்ச்சியிலும் மலர்ந்தது. பேரரசர் உண்மையில் நாம் பேசியதை ஒட்டுக் கேட்கவில்லை. அப்படிக் கேட்டதுபோல் நடிக்க முயன்றிருக்கிறார் என்பது மகிழ்ச்சி அளித்தது. அதை விட, அருள்மொழிவர்மரின் நேரடியான நடத்தையை எத்தனை துல்லியமாக அளந்து வைத்திருக்கிறார் பேரரசியார் என்பது ஆச்சரியமளித்தது.

"இப்படியா ஏமாற்றுவீர்கள்? நான்கூட நீங்கள் கூறியதை அப்படியே நம்பிவிட்டேன். அக்காவின் புத்தி கூர்மையே கூர்மை!"

"தேவியர்களே! ஒட்டுக் கேட்பது என்பது அரும்பெரும் கலை. அந்த வித்தையில் மாராயரின் ஒற்றுப்படை வீரர்கள் கைதேர்ந்த வித்தகர்கள். அப்படிப்பட்ட வித்தகர்களாலேயே சமயத்தில் இரகசியமாக ஒட்டுக் கேட்க முடிவதில்லை. மாட்டிக்கொண்டு விடுகிறார்கள். எனில் நான் அந்தக் கலையை எப்போது கற்று எவ்வாறு உங்களிடம் பிரயோகிப்பது?"

"என்ன சொல்ல வருகிறீர்கள்? மாராயரின் ஒற்றனுக்கு ஆபத்தா என்ன?"

"சாதாரண ஆபத்தல்ல. பிராணாபாயமே நேர்த்திருக்கக் கூடுமென்று மாராயர் கருதுகிறார். சில நாட்களுக்கு முன் ஐங்கரன் என்றொரு மூத்த ஒற்றன் நம்மைச் சந்தித்தான் என்று கூறினேனல்லவா? அவனிடம் முக்கியமானதொரு காரியத்தை ஒப்புவித்தேன். ஆள் நேற்றிரவுடன் மாயமாக மறைந்து விட்டான். வேடிக்கை என்னவென்றால் அவன் காணாமற்போனது சோழரின் தலைநகரில். அதிலும் முக்கிய வியாபார கேந்திரமாக விளங்கும் அபிமான தொங்கன் திருவீதியில்! எதிரிகள் மிக அருகிலேயே இருந்தும் நம்மால் அவர்களை அடையாளம் காண முடியவில்லை என்று தோன்றுகிறது. ஹூம்... நாம் எட்டடி பாய்ந்தால் எதிரிகள் பதினாறடி பாய்வார்கள் போலிருக்கிறது."

"தேடுவதற்கு ஆள் அனுப்பியிருக்கிறீர்களா?"

"நிலைமையின் அவசரம் கருதி நமது இரகசியப் படையின் மோப்ப சக்தி மிகுந்த வேட்டை நாய்களையே அனுப்பியிருக்கிறோம். ஏதாவது செய்தி இந்த இரவுக்குள் நமக்குக் கிடைத்தாக வேண்டும்..."

எளிதில் சித்தம் கலங்காதவரான அருள்மொழி வர்மரின் வார்த்தைகளில் கவலை பரிபூரணமாகத் தோய்ந்துள்ளதைப் பெண்டுகள் கவனித்தார்கள்.

"கவலைப்படாதீர்கள். தளிக்குள நாதரின் அருளால் ஐங்கரனுக்கு ஒன்றும் நேராது."

"அவ்விதம்தான் நானும் எண்ணுகிறேன். ஐங்கரன் புத்திசாலி. எப்படியும் உயிர் தப்பிவிடுவான். ஆனால் என்னுடைய மனக்குடைச்சலுக்கான காரணம் வேறு. தலைநகரிலேயே முகாமிடுவதில் ஆபத்துக்கள் அதிகம் என்று தெரிந்தும் எதிரிகள் ஏன் தஞ்சையில் இருந்திருக்கிறார்கள்? அதிலும் போர் மேகங்கள் பலமாகச் சூழ்ந்திருக்கும் இந்தப் பொழுதில்? எப்படியெல்லாமோ யோசித்தும் அதற்கான பதிலை என்னால் கண்டறிய முடியவில்லை. உங்களுக்கு ஏதாவது தோன்றுகிறதா?"

"நிச்சயம் மிக முக்கியமான காரணம் ஏதோ இருந்திருக்க வேண்டும். இல்லையேல் இங்கு தங்குவதன் ஆபத்து அவர்களுக்குத் தெரியாதா என்ன?"

"எதிரிகள் எதிரிகள் என்கிறீர்களே.. அவர்களை இன்னார் என்று அடையாளம் கண்டறிய முடிந்ததா?" என்று அப்பாவியாக வினவிய பஞ்சவன் மாதேவியாரை வியப்புடன் நோக்கினார் பேரரசர். ஒரு கருத்தைச் சொல்லு முன் நூறாயிரம் கேள்வி கேட்பது தேவியாரின் வழக்கம். மற்ற நேரங்களில் விளையாட்டுத்தனமாகக் காணப் பட்டாலும் அரசியல் என்று வந்து விட்டால் அவரைப் போல யோசனை சொல்வதற்கு ஒருவராலும் முடியாது. அரசியல் அனுபவத்தில் பழுத்த அனுபவம் வாய்ந்த பல்லவராயருக்குத் தோன்றாத விஷயங்கள்கூட சில சமயங்களில் இவருக்குத் தோன்றிவிடும். அதனால் இவரிடம் யோசனைகள் கேட்பதில் பேரரசர் என்றுமே தயக்கம் காட்டியதில்லை.

"இன்னும் கண்டறியமுடியவில்லை மாதேவி. அதுதான் பெருங்கவலையாயிருக்கிறது" என்றார் பேரரசர்

இவ்வாறு அருள்மொழியும் தேவியரும் பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில் அந்த எதிரிகளை இன்னார் என அடையாளம் காட்டும் மிக முக்கியமான தடயத்திற்கு முன் மண்டை குழம்பி அமர்ந்திருந்தார் ஒற்றர் படைத் தலைவரான இராஜராஜ மாராயர்.

66.கோட்டை வாயில்



கோட்டை வாயில் தலைவரிடமிருந்து வந்திருந்த செய்தியால் கவலையடைந் திருந்த மாராயர் தாமே நேரில் சென்று விசாரணை நடத்துவதென்று முடிவு செய்தார் என்று முன்னர் குறிப்பிட்டோ மல்லவா? அவரைப் பின் தொடர்ந்து சென்று பேரங்காடியில் என்னதான் நடந்த தென்பதை அறிந்து கொள்வோம்.

மாராயர் தமது வீரனுடன் புரவியில் ஏறி வாயுவேக மனோ வேகமாகப் பயணித்தும் திருபுவனமாதேவிப் பேரங்காடித் தெருவை அடையும்போது இருட்டுக் கட்டத் துவங்கி விட்டது. திருவிளக்கிடுவார் நாலாபக்கங்களிலும் நந்தா விளக்குகளை ஏற்றத் துவங்கியிருந்தனர்.

அதிகாலைப் பொழுதுகளில் காய்கறிகள், பழங்கள் மற்றும் புஷ்ப வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெறும் அந்தப் பகுதியில் மாலை நேரப் போக்குவரத்து சற்று மந்தமாகத்தான் தெரிந்தது. கடை கண்ணிகளில் அதுவரை நடந்து கொண்டிருந்த வியாபாரமும் சுருங்கி விடவே, நாள் முழுதும் வாணிபத்தில் ஈடுபட்டிருந்த பெருவணிகர்கள் தத்தம் உதவியாளர்களிடம் கடையடைக்கும் பணியை ஒப்புவித்து விட்டு இல்லத்திற்குக் கிளம்பத் தலைப்பட லானார்கள். அவர்களில் ஒரு சில பக்திமான்கள் நேராக இல்லிற்குத் திரும்பாமல் பேரங்காடிக்கு அருகாமையில் அமைந்திருந்த ஜெயபீமதளியை நோக்கிச் செல்வதையும் காணமுடிந்தது. தினமும் காலையிலும் மாலையிலும் பெம்மானைத் தரிசியாமல் உணவு உட்கொள்ள மாட்டார்கள் போலும் அவர்கள்.

அங்காடியில் விரிந்த இந்தக் காட்சிகளில் அதிகக் கவனம் செலுத்தாத மாராயர், நேராகக் கோட்டை வாயிலுக்குச் சென்று வாயிற்தலைவனை முதலில் சந்திக்க

விரும்பினார். அங்காடிக்கருகில் அமைந்துள்ள வீட்டில் திருட முயன்று அகப்பட்டுக்கொண்ட கள்வன் ஐங்கரனாகவே இருந்துவிட்டால் மிகவும் நல்லது. இல்லையேல் ஜனசந்தடி மிகுந்த தலைநகரின் இந்தப் பகுதியில் வீடுவிடாகப் புகுந்து சோதனை நடத்துவதற்குள் உன்பாடு என்பாடு என்றாகிவிடும்.

ஒருவேளை எதிரிகளைப் பின்தொடர்ந்து சென்றவன் நேராகக் கோட்டை வாயிலின் வழியாகப் புறம்படிக்கு வெளியே சென்று விட்டானா என்ன? நாய்களால் அவனது மோப்பத்தை ஒரு கட்டத்திற்குமேல் பிடிக்க முடிய வில்லையோ என்னவோ? அப்படி நடந்திருந்தால் அவனிடமிருந்து செய்தி வரும்வரை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. மிக முக்கியமான ஆதாரம் ஏதோ கிடைத்திருக்க வேண்டும். இல்லையேல் நம்மிடம் சொல்லாமல் கொள்ளாமல் இத்தனை தூரம் போகக் கூடியவனில்லை அவன்.

இருள் அடர்ந்த முன்னிரவின் பின்னணியில் கிழக்குக் கோட்டை வாயில் பிரம்மாண்டமாக அவரது கண்களுக்கு முன் விரிந்தது. இரவு நேரமாதலால் கோட்டையின் பெருங்கதவங்களில் அமைந்திருந்த திட்டிவாயில்கள்கூட மூடப்பட்டு விட்டன. இன்னும் சிறிது நேரத்தில் அகழிப் பாலமும் உயர்த்தப்பட்டுவிடும். அதற்குப் பின் ஒருவராலும் உள்ளாலைக்குள் வரமுடியாது தப்பித்தவறிக் கோட்டைக்கு வெளியே அகப்பட்டுக்கொண்டு விட்டோமானால் விடியும் வரை அகழியைத் தாண்டி அமைந்துள்ள தஞ்சைப் புறம்படியின் சத்திரம் சாவடிகளில் தங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

அவர் கோட்டை வாயிலின் ஓரத்தில் அமைந்திருந்த வளைந்த படிக்கட்டுகள் வழியாக உச்சிக்குச் செல்லும் முன்னரே அவருடன் வந்த வீரன் மேலே சென்று மாராயர் வந்து கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்து விட்டான். அதனால் கோட்டை வாயிலின் இரவுக் காவற்பணியை மேற்கொண்டிருந்த தலைவர் அவரை வழியிலேயே எதிர் கொண்டழைத்துத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார்.

“வாருங்கள் வாருங்கள்! இந்த ஆசனத்தில் அமருங்கள். என்ன இத்தனை தூரம் தாங்களே கிளம்பி

வந்திருக்கிறீர்கள்? ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்து சந்தித்திருப்பேனே?

"பேரங்காடிக்கு அருகிலுள்ள வீடொன்றில் கள்ளன் ஒருவன் அகப்பட்டுக் கொண்டதாகச் செய்தி அனுப்பியிருந்தீர்களே? அவனை நான் உடனடியாகச் சந்தித்தாக வேண்டும். விஷயம் மிகவும் அவசரமானது மற்றும் அந்தரங்கமானது.." என்று நேரடியாக விஷயத்திற்கு வந்தார் மாராயர்.

"மாராயரே! அந்தச் செய்தியை அனுப்பியிருந்தது நானல்ல. பகல் நேரக் காவற்பணித் தலைவர். அவர் இப்போதுதான் பணி முடிந்து வீட்டிற்குச் செல்கிறார். என்றாலும் கிளம்பிச் செல்லுமுன் விஷயத்தைச் சுருக்கமாக என்னிடம் தெரிவித்தார்.

இன்று காலை நேரத்தில் அங்காடித் தெருவிற்கு மேற்கே அமைந்துள்ள சந்து பொந்துகளுக்குள் புகுந்து திருட முயன்றிருக்கிறான் ஒரு கள்வன். இரவு நேரத்தில் பல இல்லங்களில் திருடிவிட்டு விடிந்ததும் விடியாததுமாகக் கிளம்பிச் செல்ல முயன்றிருப்பான் போலிருக்கிறது. அவன் திருடிக்கொண்டு செல்வதை அங்காடித் தெருவில் வியாபாரத்திற்காக வந்த இரு வல்லத்து முதியவர்கள் கவனித்துக் கூச்சலிட்டிருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து நமது காவல் வீரர்களும் அவனைப் பிடிக்க முயன்றிருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் வீட்டுக் கூரைகளின் மீதும் ஓடுகளின் மீதும் ஏறி அங்காடித் தெருவைக் கடக்க முயல, கால் வழுக்கி ஒரு இல்லத்திற்குள் விழுந்து விட்டான். விழுந்தவன் பேசாமல் இருந்திருக்கலாமல்லவா? தனது கத்தியைக் காட்டி வீட்டாரை மிரட்டியிருக்கிறான். அவர்கள் கைக்கு அகப்பட்ட ஆயுதங்களால் அவனைச் சரமாரியாகத் தாக்கி வீழ்த்தி விட்டார்கள். ஆள் ஏறக்குறைய மயங்கி விழுந்துவிட்டான். கோட்டைவாயில் தலைவருக்குச் செய்தி வந்திருக்கிறது. காவலுக்காக இரண்டு ஆட்களை அனுப்பி அந்த வீட்டிலேயே அவனைச் சிறை வைத்து விட்டார். நாளை விடிந்ததும் அரண்மனைக் காராக் கிருகத்துக்கு அவனைக் கொண்டு செல்லலாமென்று திட்டம்.

ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. அகப்பட்டுக் கொண்ட கள்வனின் பின்தலையிலும் கழுத்துப் பகுதியிலும் பலமான அடிபட்டு விட்டது போலும். அதனால் பிற்பகல்

வரையிலும்கூட அவனது மயக்கம் தெளியவேயில்லை இல்லத்திலேயே வைத்திருந்தால் ஒருவேளை உயிர் போனாலும் போய்விடும் என்று காவலிருந்த ஆட்களுக்குச் சந்தேகம் தோன்றிவிட்டதால் தலைவரின் அனுமதிபெற்று மாலை நேரத்தில் அவனைச் சுந்தரச் சோழர் ஆதுலர் சாலைக்கு இடமாற்றம் செய்திருக்கிறார்கள். ஆள் உயிர் பிழைப்பது துர்லபம்தான் என்று வைத்தியர் தெரிவித்தாராம். அது சரி, அந்தக் கள்வனுக்காகவா தாங்கள் இத்தனை தூரம்..."

"கெட்டது குடி!" என்று முணுமுணுத்தார் மாராயர். அடுத்ததாக ஆதூலர் சாலைக்குக் கிளம்பச் சென்றாக வேண்டுமா? இன்றைய இரவும் இன்னொரு சிவராத்திரிப் பொழுதுதானா?

மாராயரின் முகத்தில் தோன்றி மறைந்த உணர்ச்சிகள் கோட்டைக்காவற் தலைவரைத் துணுக்குறச் செய்தன. "என்ன, அதற்குள்ளாகவா கிளம்பிவிட்டீர்கள்? மன்னிக்கவும். இந்த விவகாரம் இத்தனை முக்கியமானது என்று இதுவரை நாங்கள் நினைக்கவில்லை. வேண்டுமானால் நமது வீரர்களை ஆதூலர் சாலைக்குச் சென்று விசாரித்து விட்டு வரச் சொல்லவா?"

"இல்லை. நானே நேரில் செல்கிறேன். இந்த விவகாரம் இத்தனை சிக்கலடையுமென்று நானே எதிர்பார்க்கவில்லை."

"ஓ.. மறந்துவிட்டேன். மேலும் ஒரு சிறு தகவல். சிறை வைக்கப்பட்டிருந்த அறையிலிருந்து கள்ளனை ஆதூலர் சாலைக்குக் கொண்டு செல்லுமுன் ஓரிரு கணங்கள் அவனுக்கு மயக்கம் தெளிந்ததாம். தரையில் சிந்தியிருந்த உதிரத்தில் எதையோ அவன் எழுத முயன்றானாம்?"

"என்ன... என்ன...?"

"அது... ஆதூலர் சாலைக்குக் கொண்டு செல்வதற்காகக் கள்ளனை நீர் தெளித்து எழுப்பியபோது ஓரிரு கணங்கள் அவனுக்கு மயக்கம் தெளிந்ததாம். அருகில் சிந்தியிருந்த உதிரத்தில் ஏதோ எழுதிக்காட்ட முயன்றானாம்....என்ன நேர்ந்துவிட்டது மாராயரே? ஏன் இத்தனை பதட்டம்??" - மாராயர் பளிச்சென்று ஆசனத்திலிருந்து எழுந்திருப்பதைக் கவனித்த காவற்தலைவரும் எழுந்துவிட்டார்.

"விஷயங்களை விளக்கிக்கொண்டிருக்க நேரமில்லை. உடனடியாக அந்த எழுத்துக்களைப் பார்வையிட்டாக வேண்டும். கிளம்புங்கள்!"

பதிலுக்குக்கூடக் காத்திராமல் மளமளவென்று மாராயர் படிகளில் இறங்கிச் சென்றுவிடவே, அவசர அவசரமாகக் காவற்பணியைத் தனக்கு அடுத்த நிலையில் இருந்த வீரனிடம் ஒப்படைத்துவிட்டுக் கிளம்பினார் கோட்டைக் காவற் தலைவர்.

* * * * * * * *

உத்தியான வனத்தில் இன்னமும் தம்மை மறந்து அந்தரங்கப் பேச்சில் ஈடுபட்டிருந்த அந்த மூவரைச் சுற்றியும் மெல்லிய இருள் ஒரு நிழல் போர்வையாகப் படிந்து விட்டிருந்தது. மண்டபத்தின் மத்தியில் ஏற்றப்பட்டிருந்த நந்தாவிளக்கு முணுக் முணுக்கென்று மெல்லியதாக எரிந்து தன்னால் முடிந்தவரை வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருக்க, அந்தக் குறைவான வெளிச்சத்தையும் பொருட்படுத்தாமல் தேவியர் இருவரும் பேரரசருடன் தம்மை மறந்த பேச்சில் இலயித்திருந்தனர். ஒரு சில நாட்கள் மாலையில் தொடங்கும் உரையாடல் இரவு முழுவதும்கூட நீள்வதுண்டு. மறுநாள் சிவந்த விழிகளோடு காட்சியளிக்கும் மூவரும் ஒருவரையொருவர் கேலி செய்து மகிழ்வார்கள்.

தமது அந்தரங்கத்தில் முடங்கிக் கிடக்கும் ஆசைகளையும் அபிலாஷைகளையும் செயல்பாடுகளையும் திட்டங்களையும் அக்கனுக்கு அடுத்தபடியாக அந்தத் தேவியர் இருவரிடம் மட்டும்தான் பேரரசரால் பகிர்ந்து கொள்ள முடிந்தது. அம்மூவருக்குமிடையே கணவன்-மனைவியர் என்கிற வழக்கமான பந்தத்தைத் தாண்டி வேறொரு மட்டத்தில் ஆரோக்கிய மானதொரு நட்பெனும் உறவு செழித்திருந்தது. பேரரசரும் சரி, அந்தப் பெண்களும் சரி. தனிமையில் உரையாடிக் கொண்டிருக்கும்போது தத்தம் முகமூடிகளைக் கழற்றி வைத்து விட்டு மனம் திறந்து பேசுவது வழக்கம். இவ்வகையான உரையாடல்கள் மூவரையுமே ஏதோ ஒரு வகையில் செழுமைப்படுத்தின, வளப்படுத்தின எனலாம்.

இத்தனைக்கும் பேரரசருக்கு அனைத்து விஷயங்களிலும் ஏற்ற ஆலோசனைகள் சொல்வதற்கு அனுபவஸ்தர்கள் பலர் அரசவையில் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் அவர்கள்

அனைவருமே ஏறக்குறைய ஒரே மாதிரியான அரசியல் அனுபவம் கொண்டவர்கள். அனைவரும் ஆண்கள். மத்திம வயதைக் கடந்து முதுமையை நெருங்கி விட்டவர்கள். அல்லது நெருங்கிக் கொண்டிருப்பவர்கள். வழிவழியாக சோழ சாம்ராஜ்ஜியத்திற்கான சேவையில் தங்கள் உடல் பொருள் ஆவியை அர்ப்பணித்தவர்கள். அதற்காகப் பெருமை கொள்பவர்கள். விசுவாசிகள். பேரரசருக்காகத் தயங்காமல் உயிரையும் கொடுக்கக் கூடியவர்கள்.

இப்படி ஒரே மாதிரியான பின்புலத்தைக் கொண்டிருந்ததனாலோ என்னவோ அவர்களின் சிந்தனைகளும் செயல்பாடுகளும்கூட ஏறக்குறைய ஒரே பாணியிலேயே அமைந்திருந்தன. அவ்வப்போது தோன்றும் சிறு வேறுபாடுகளை நீக்கிவிட்டுப் பார்த்தோமேயானால் அவர்கள் காட்டும் உலகம் ஏறக்குறைய ஒரே மாதிரியானது தான். அதில் வித்தியாசமான சிந்தனைகள் கிடையாது. விபரீதமான யோசனைகள் கிடையாது. கற்பனைகளுக்கும் கனவுகளுக்கும் அவர்களின் அகராதியில் இடமில்லை. உலகம் இன்னவாறுதான் இயங்க வேண்டும் அரசன் இன்னவிதமாகத்தான் செயல்பட வேண்டும். அரசாங்கமும் அதிகாரிகளும் இன்ன வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும் என்று காலப்போக்கில் அவர்களது எண்ணங்கள் நிலைபெற்று உறைந்து விட்டிருந்தன. அவர்களின் பணி ஒப்புயர்வற்றது தான். முக்கியமானதுதான். ஆனால் அவை மட்டும் போதாது.

பேரரசருக்குள் அருள்மொழி எனும் மகாவீரன் ஒளிந்து கொண்டிருந்தான். தகுந்த சமயத்தில் வெளிப்படத் தருணம் பார்த்திருந்தான். மனதின் அடியாழத்தில் மாபெரும் சாம்ராஜ்ஜியக் கனவு கண்டு கொண்டிருந்தான். நிறைய சிந்திக்க வேண்டும். சாதிக்க வேண்டும். தமது குலத்தில் உதித்த மாபெரும் வீரர்களையும் பக்தி மான்களையும் விஞ்சும் வண்ணம் செயற்கரிய பல செயல்களைச் செய்து முடிக்க வேண்டுமென்று சதா அரற்றிக் கொண்டிருந்தான்.

சிறு வயதிலேயே அந்த இளைஞனின் ஆர்வத்தை நெறிப்படுத்திச் செயல் வடிவம் பெற வைத்ததில் பெரும் பங்கு அவனது அக்கனான ஆழ்வார் குந்தவைப் பிராட்டிக்கு இருந்தது. ஆனால் ஒரு கட்டத்திற்கு மேல் அவரும் திருமணம் செய்து கொண்டு திருநல்லத்தில் வல்லவரையர் வந்தியத்தேவருடன் குடும்ப வாழ்வில் ஈடுபட நேர்ந்து விட்டதால் பழையபடி தஞ்சையிலும் பழையாறையிலும்

தங்கித் தம்பியுடன் மணிக்கணக்கில் உரையாட முடியவில்லை.

இந்தக் கட்டத்தில்தான் பஞ்சவன் மாதேவியாரின் நட்பு அருள்மொழிக்கு ஒரு வரப்பிரசாதமாகக் கிடைத்தது. அவரது கூரிய அறிவாற்றலும் அரசியல் ஞானமும் அந்த இளைஞனைப் புரட்டிப் போட்டன. ஒரு கட்டத்தில் தவிர்க்கவே முடியாமல் அந்த உறவு திருமணமாகக் கனிந்தது. மற்ற பெண்டுகளைப் போல இந்த புத்திசாலிப் பெண்ணும் அரண்மனையின் சுகபோகங்களிலும் படாடோபங்களிலும் தன்னை இழக்காமலிருக்க வேண்டுமே என்று பெரிதும் கவலைப்பட்டான் அருள்மொழி.

நல்லவேளை. அந்த விபத்து நேரவில்லை. அந்த புத்திசாலி மீன் விரைவிலேயே அரண்மனை வாழ்வெனும் கடலில் நீந்தக் கற்றுக்கொண்டு விட்டது. அது மட்டுமல்ல. தான் மட்டும் அருள்மொழியுடன் அந்தரங்கமாகச் சுற்றித் திரிந்தால் மற்ற அனைவரின் பொறாமையும் தன் மீது படியும். அதனால் பல விரும்பத்தகாத அனர்த்தங்கள் விளையும் என்பதையும் அது உணர்ந்தது. அதற்காக ஒரு உபாயத்தையும் கண்டுபிடித்தது.

அனைவரின் அன்புக்கும் பாத்திரமாகியிருந்த பட்டத்தரசியாரின் மனதில் பலவாறு முயன்று அதுவும் ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டது. எப்போது அருள்மொழியுடன் அந்தரங்கமாகப் பேச நேர்ந்தாலும் பக்கத்தில் பட்டத்தரசியாரையும் அது இருத்திக் கொண்டது. அருள்மொழிக்கு முதலில் இந்த ஏற்பாடு பிடிக்கவில்லை. அவளுடன் தனிமையில் உரையாடுவதையே அவன் விரும்பினான் அவன். என்றாலும் அந்தப்புர அரசியலின் தாக்கம் அவனுக்கும் புரிந்தது. தான் மாதேவியுடன் கொள்ளும் பிரத்யேக நட்பு மற்ற பெண்டுகளுடன் அவளைத் தனிமைப்படுத்திவிடக் கூடும். ஆகவே அவனும் தந்தியின் வருகையை ஏற்றுக் கொண்டான்.

மிகச் சிறுவயதிலேயே திருமணமாகிக் குழந்தை குட்டிகளையும் பெற்றுக் கொண்டு விட்டதால் இராஷ்டிர கூடத்து இளவரசியான தந்திக்கு.. பாவம்! அரசியல் ஞானமோ விவேகமோ அவ்வளவாக வாய்க்கவில்லை. என்றாலும் மற்ற இருவரின் பேச்சுக்களைச் சமன்படுத்தவும் அவ்வப்போது நேரிடும் வாய்ச்சண்டைகளைச் சமாதானப்படுத்தவும் அவள் பேருதவியாக இருந்தாள்.

காலம் செல்லச் செல்ல அவளுக்கும் நிலைமை புரிய ஆரம்பித்தது. அரண்மனைக்குள் அடைந்து கிடக்காமல் மாதேவியுடன் தேசமெங்கும் சுற்றினாள் பலதரப்பட்ட மக்களையும் சந்தித்தாள். அவளது உலகம் மெல்ல விரிந்தது. காலப்போக்கில் அந்த இருவருக்கும் இணையாக அவளாலும் அரசியலும் ஆன்மிகமும் பேச முடிந்தது.

அரண்மனை மாதர்கள் இந்த விநோதமான நண்பர்களை நாளடைவில் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் மூவரும் தனிமையில் அமர்ந்து இன்பம் துய்க்க வில்லை. முக்கியமான அரசியல் ஆலோசனைகளையே நடத்துகிறார்கள் எனும் எண்ணம் மற்ற அரசியர்களின் மனதைச் சாந்திப்படுத்தியது எனலாம். மேற்கொண்டு நடைபெறப்போகும் உத்தியானவனத்து உரையாடல்களைப் பின்தொடர இந்தப் பின்புலம் உதவியாக இருக்கும் என்பதால்தான் இந்த மூவருக்கிடையில் நிலவிய உறவை இத்தனை விளக்கமாக எழுதினோம்.

"ஆக, நீங்கள் கூறுவதை வைத்துப் பார்த்தால் ஏறக்குறைய ஒரு திங்களில் படையெடுப்பைத் துவக்கி விடுவீர்கள் போலிருக்கிறதே?"

"ஆம். நிச்சயம் துவக்கித்தான் ஆகவேண்டும். தேவி! சோழநாட்டு வீரர்களின் வாள்களும் வேல்களும் துருப் பிடித்துக் கிடக்கின்றன. பல காலமாகப் போரில் ஈடுபடாததினால் ஏற்பட்டுள்ள மனத்தளர்ச்சி அவர்களைப் பீடித்துள்ளது. மதுரைப்போர் தினவெடுத்த அவர்களின் தோள்களுக்குத் தகுந்த களமாக அமையவில்லை. பலகாலமாகத் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் அவர்களின் சக்தியை விரைவில் ஒருமுகப்படுத்தி நெறிப்படுத்திக் களத்தில் பாய்ச்சியாக வேண்டிய கடமை எனக்கிருக்கிறது.

மேலும், நாம் தாமசிக்கும் ஒவ்வொரு நாளையும் எதிரிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக் கின்றனர். அனேகமாகத் தென்பாண்டி நாட்டில் எங்கோ ஒரு மறைவிடத்தில் ஆயிரக்கணக்கான ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டிருக்கும் என்பது உறுதி. இன்னும் சிறிது காலத்தில் படைகள் மீண்டும் கூட்டப்பட்டுவிடும். ஒரு கட்டத்திற்குமேல் அவர்களால் பொறுமையாக இருக்க முடியாது. நேராக நம்மை நோக்கித்தான் வருவார்கள் அதற்கு இடங்கொடாமல் அவர்களை நாம் முந்திக் கொண்டாக வேண்டும்."

"தென்பாண்டி நாட்டுப் படைகளுக்குத் தலைமை ஏற்கப் போவது யார்?"

"பாண்டிப் படைகளை அமரபுஜங்கரும் சடைய மாறரும்தான் முன்னின்று நடத்துவார்கள். ஆனால் தென்மலைநாட்டுப் படைகளுக்குத் தலைமை ஏற்கப்போவது யார் என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது."

"வள்ளுவ நாடுவாழியாரின் தலைமை அங்கே எடுபடாதா என்ன?"

"அவரது அதிகாரம் வள்ளுவ நாட்டிற்கு மட்டுமே உட்பட்டது. அவரது தலைமையை பிற நாஞ்சில் நாட்டு நாடுவாழிப் படைகள் ஏற்பது சிரமம். அதனால் பலம் வாய்ந்த வேறொரு தலைமையை முன்னிறுத்துவதுதான் புத்திசாலித்தனமாக இருக்கும்."

"பெருமாளே நேரில் வந்து நம்மை எதிர்ப்பார் என்கிறீர்களா?"

"ம்ஹூம். அதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகத்தான் தெரிகின்றன. என்றாலும் என்னுடைய கடமையை மனதில் நிறுத்தி பிஷூவின் மூலம் அவருக்கு ஒரு தூது ஓலை அனுப்பியிருக்கிறேன். கூட்டிக் கழித்துப் பார்த்தால் நாடுவாழிகள் தமது படைகளுக்கு வேறொரு வலுவான தலைமையை தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய அனுமானம்."

"திடீரென்று எவரோ ஒருவரைப் படைத்தளபதியாக முன்னிறுத்திவிட முடியாது அல்லவா? அப்படி நிறுத்தினாலும் படைகள் அவருக்குக் கட்டுப்பட்டாக வேண்டுமே?"

"அதென்னவோ உண்மைதான். ஆனாலும் ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். நாடுவாழிகளுக்குத் தேவை அனைவரும் ஏற்கக்கூடிய ஒரு தலைவர் மட்டும்தான். மற்றபடி அவர்களால் தத்தம் படைகளைத் திறமையாக நிர்வகித்துச் செலுத்திக் கொண்டு போக முடியும்."

"ஆரைவாய்மொழிக் கணவாயை ஊடுருவது துர்லபம். இயலாத காரியம். அந்தக் கோட்டையைக் கடக்க முயன்றால் பெருத்த சேதம் ஏற்படும் என்று முன்பொரு முறை குறிப்பிட்டீர்களே?"

"ஆம் பலமும் காவலும் மிகுந்த அந்தக் கணவாயின் வழியே சோழப்படைகளைச் செலுத்திக் கொண்டு போனால், பாதிப் படைகளை அங்கேயே நாம் இழக்க வேண்டி வரும்."

"கணவாய்க்கருகில் படைகளைத் தண்டுூன்றி மெல்ல மெல்லக் கோட்டையின் மீதேறி வள்ளுவநாட்டைப் பிடிக்க முயன்றால்?"

"அதற்குரிய அவகாசம் நமக்கு அளிக்கப்படமாட்டாது. நாம் தண்டூன்றும் நேரத்தில் எதிர்த்திசையிலிருந்து பாண்டிப் படைகள் நம்மைத் தாக்கும் இரு மத்தகங்களுமிடையில் அகப்பட்டுக்கொண்ட கதையாகச் சோழப்படையின் கதி அதோகதி ஆகிவிடும்!"

"பின் என்னதான் செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள்?"

"என்ன செய்யலாம் என்று அதிபுத்திசாலிகளான என் தேவியர் இருவரிடம் யோசனை கேட்க உத்தேசித் திருக்கிறேன்" என்று கூறி மெல்லிய புன்னகையை முகமெங்கிலும் படரவிட்டார் அருள்மொழிவர்மர்

67.மாராயர் குழப்பம்



மாராயரும் காவற் தலைவரும் கள்ளன் அகப்பட்டுக் கொண்ட வீட்டை அந்த முன்னிரவு நேரத்தில் கண்டு பிடிப்பதற்கே நிறைய நேரத்தைச் செலவழிக்க வேண்டியிருந்தது. ஏனெனில் அந்த வீட்டைக் குறிப்பாக அடையாளம் காட்டக்கூடிய காவல் வீரர்கள் இருவருமே பணி முடிந்து தத்தம் வீடுகளுக்குத் திரும்பியிருந்தார்கள். அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளில் விசாரித்தால் தலைக்குத் தலை மனம் போன போக்கில் கதை கட்டலானார்கள் ஒருவராவது உறுதியாக இந்தத் தெருவில் அமைந்துள்ள இன்ன வீட்டில்தான் கள்ளன் அகப்பட்டுக் கொண்டான் என்று சொல்லவில்லை. இறுதியில் இரண்டு நாழிகைகளுக்கும் மேலாக அந்தச் சந்து பொந்துகளில் பொறுமையாக விசாரித்த பின்னர்தான் அவர்கள் தேடிக் கொண்டிருந்த வீட்டையே கண்டுபிடிக்க முடிந்தது. அவசர அவசரமாக இருவரும் அந்த வீட்டிற்குள் நுழைந்தார்கள்

"யாரய்யா அது? இந்த அகால நேரத்தில்?"

"நான் கிழக்குக் கோட்டைக் காவற்தலைவன். என்னுடன் வந்திருப்பவர் சோழ சாம்ராஜ்ஜியத்தின் சேனாபதி இராஜராஜ மாராயர்!"

சேனாபதி என்றதும் அந்த வீட்டுக்காரர் சற்று துணுக்குறுவதை அறிய முடிந்தது. "வாருங்கள். என்ன விஷயம்? நாங்கள் எந்தத் தவறான காரியமும்..."

"உஸ். பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. அந்தக் கள்ளனை அடைத்து வைத்திருந்த அறையை இவருக்குக் காண்பியுங்கள்."

"அ-அந்த அறையையா? அங்கு ஒரே இரத்தமாக இருந்தது. அதனால் என் மனையாட்டி அதனைச் சுத்தம் செய்து சாணமிட்டு மொழுகி..."

"அடி முட்டாள்களே! அத்தனை அவசரமாக அந்த அறையைச் சுத்தம் செய்தாக வேண்டுமா என்ன? அறையில் சிந்தியிருந்த உதிரத்தில் கள்ளன் ஏதோ எழுதிக் காட்டினான் என்று சொன்னார்களே... அதனையும் துடைத்தெறிந்து விட்டீர்களா?"

"ஏ-ஏதோ புரியாத விஷயத்தை அவன் எழுதிக் காட்டியதாகத்தானே வீரர் சொன்னார்? அது அத்தனை முக்கியமான விஷயமென்று சொல்லவேயில்லையே?" என்றார் வீட்டுக்காரர் பரிதாபமாக. ஏதேது? இவர்கள் விசாரிக்கும் தோரணையைப் பார்த்தால் கள்ளனைப் பிடித்த குற்றத்திற்காக நம்மையே சிறை செய்து காராக்கிருகத்தில் அடைத்து விடுவார்கள் போலிருக்கிறதே? நாட்டு நிலைமை எப்படியெல்லாம் ஆகிவிட்டது? என்றெல்லாம் யோசிக்கத் துவங்கி விட்டார் அவர்.

"தலையெழுத்து! எல்லாம் என் தலையெழுத்து. எங்கே, அந்த அறையைக் காட்டுங்கள்? யாரது? தீப்பந்தத்தை அறைக்குள் முதலில் கொண்டு செல். ஏதாவது மிச்சமிருக்கிறதா அல்லது எல்லாவற்றையுமே இந்த அடி முட்டாள்கள் துடைத்தெறிந்து விட்டார்களா என்று பார்க்க வேண்டும்..."

மாராயர் போட்ட சப்தத்தைக் கேட்டு அந்த வீட்டுப் பெண்கள் அனைவருமே உள்ளிருந்து வெளியே வந்து விட்டார்கள். அதில் ஒரு மத்திய வயதுப் பெண்மணி

காலையிலிருந்து என்ன நடந்தது என்பதைக் காது மூக்கெல்லாம் வைத்து அவர்களுக்கு விளக்கத் தலைப்பட்டாள். சராசரியான வாழ்வில் ஏதாவது ஒரு சுவாரஸ்யமான விஷயம் அகப்பட்டுவிட்டால் அதனை நூறாயிரம் முறைகூட அடுத்தவர்களுக்குப் பொறுமையாக எடுத்துச் சொல்வதில் பெண்களுக்கு ஏற்படும் ருசியே தனியானதுதான். அவளது கதைகளை அலட்சியப்படுத்தி விட்டு வீட்டுக்காரர் அடையாளம் காட்டிய மிகக் குறுகலான அறையை மூவரும் அடைந்தார்கள்.

"பந்தத்தை சற்று உயரத்தில் பிடி!"

"உயரத்தில் தூக்கினால் உத்திரத்தில் கரி படிந்துவிடும் ஐயா."

"படியட்டும். சுண்ணமிடுவதற்கு நான் பொறுப்பு. இப்போது சொன்னதைச் செய்!" என்று கர்ஜித்தார் மாராயர். அந்த வீரன் சப்த நாடிகளும் ஒடுங்கிப் போக, பந்தத்தைச் சற்று மேலே உயர்த்தினான். நல்ல வேளை அந்த உதிரத் திட்டுகள் இன்னமும் ஆங்காங்கே மிச்சமிருந்தன. அறை முழுவதுமாகச் சாணமிடப்படவில்லை. நாளை காலை வெளிச்சம் நன்றாகப் பரவியபின் சுத்தம் செய்து கொள்ளலாம் என்று விட்டிருப்பார்கள் போலும். அது சரி, எங்கே அந்த எழுத்துக்கள்?

"அடேய்! இந்த இடத்தில் பந்தத்தை சற்று தாழப்பிடி."

அடர் மஞ்சள் நிறத்தில் சாணத்தரையில் படிந்திருந்த உதிரத்தில் அந்த எழுத்துக்கள் மாராயருக்கு மிக மெல்லியதாகப் புலப்படத் துவங்கின. தனக்கு மட்டும் கேட்டும் குரலில் அதனைப் படிக்க முயன்றார் அவர்.

"த...தனத்...தலவர்.(தானைத் தலைவர்?)......ஒர..(ஒரு?)........"

ம்ஹூம். அதற்கு மேல் எழுதப்பட்டிருந்தது ஒரே ஒரு எழுத்து மட்டும்தான். அதனை இன்னதென்று அவரால் அடையாளம் காண முடியவில்லை. நிச்சயம் அகப்பட்டுக் கொண்ட கள்ளன் ஐங்கரன்தான். அதில் சந்தேகமே வேண்டாம். தானைத் தலைவரைப் பற்றிய மிக முக்கியச் செய்தி எதனையோ கண்டறிந்திருக்கிறான். அதனை நமக்குத் தெரிவிப்பதற்குள் விஷயம் விபரீதமாகி... அவனுடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்து... அடடா! நமக்குத்தான் எத்தனை துரதிருஷ்டம்?

உடனடியாக அவனது உடல்நிலை பற்றிய கவலை மாராயரைப் பீடித்தது. முடிந்தால் இன்றிரவே உய்யக் கொண்டான் அரண்மனைக்கு அவனை இடமாற்றம் செய்து அரண்மனை வைத்தியரின் பிரத்யேகக் கண்காணிப்பில் அவனை உயிர் பிழைக்க வைத்தாக வேண்டும்.

"இதோ பாருங்கள். நாளை நான் வரும் வரை இந்த அறைக்குள் ஒருவரும் உள்ளே போகக்கூடாது. தெரிந்ததா? உங்கள் வீட்டுப் பெண்களிடம் சொல்லி வையுங்கள்!" என்று உறுமிவிட்டு வெளியில் வந்தவர், நேராகப் புரவியில் ஆரோகணித்துச் சுந்தரச் சோழர் ஆதூலர் சாலையை நோக்கிக் கிளம்பினார்.

* * * * * * * *

பல்லவராயர் தமது குடும்பத்துடன் வசித்து வந்த குவளாலபுர அரண்மனையில் நடுநிசிப் பொழுதையும் பொருட்படுத்தாமல் கூட்டப்பட்டிருந்தது ஒரு இரகசியக் கூட்டம். அக்கூட்டத்தில் நமக்கு நன்கு பழக்கப்பட்ட நான்கு பெரிய மனிதர்களும் ஒரு குத்து விளக்கைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். தென்னம்பிழியின் மணம் மெல்லியதாகக் காற்றில் கலந்திருந்தது.

"ஐங்கரன் வாயைத் திறந்து பேச குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு வாரங்களாவது ஆகுமென்று ஆதூலர் சாலை வைத்தியர் புகன்றுவிட்டார். பின் தலையில் மிக மோசமாக அடிபட்டிருக்கிறதாம். உயிர் பிழைத்திருப்பதே ஆச்சரியம்தானாம்."

"ஐங்கரனுக்கு ஆயுள் மிக அதிகம். பேராபத்திலிருந்தல்லவா தப்பித்து மீண்டிருக்கிறான்?"

"கள்ளர்கள் விஷயத்தில் நமது ஆட்கள் எப்போதும் பொறுப்பற்றுத்தான் நடந்துகொள்கிறார்கள். அதற்குப் பழிவாங்கும் விதமாகக் கள்ளர்களும் தம்மிடம் அகப்பட்டுக் கொண்டோரைக் குற்றுயிரும் குலையுயிருமாய் ஆக்கி விட்டுத்தான் அனுப்புகிறார்கள். இன்றைய சம்பவங்கள் மிகவும் துரதிருஷ்டமானவை என்று சொல்வதைத்தவிர வேறென்றும் கூறுவதற்கில்லை" என்றார் பல்லவராயர். அவரது குரல் மிகவும் சோர்ந்திருந்தது. அந்த மர்மத் தலைவரை அடையாளம் காண முயற்சிக்கும் ஒவ்வொரு

முறையும் ஏதோ ஒரு தடை ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறதே? என்று துவண்டது அவர் மனம்.

"தனக்கு உணர்வு வந்த ஓரிரு கணங்களில்கூட அந்தத் தானைத் தலைவரை அடையாளம் காட்ட முயற்சித்த ஐங்கரனின் கடமையுணர்வு போற்றுதற்குரியது. மாராயரே! உடல்நிலை தேறியபின் அவரை நம்மிடம் அழைத்துவாரும். அவருக்கு இராஜராஜப் பெருநாடன் எனும் பட்டமளித்துக் கௌரவிக்க உத்தேசித்துள்ளோம்..."

"தங்கள் வாக்கு பலிதமாகட்டும். அவன் விரைவில் உடல் நலம் தேறி வரட்டும். மகிழ்ச்சியோடு அழைத்து வருகிறேன்!"

"அப்படி என்னதான் எழுத முயன்றிருப்பான் ஐங்கரன்? தானைத் தலைவர் ஒரு... ஒரு..."

"பாண்டி நாட்டான்? அல்லது சேரன்?"

"ம்ஹூம். அதற்கு ஒரு எனும் சொல் தேவைப்படாது அமண்குடியாரே. மேலும் அது அத்தனை முக்கியமான விஷயமுமில்லை. அந்தத் தலைவர் பாண்டியர்களுடனும் சேரருடனும் நெருங்கிய உறவு பூண்டவரென்பதுதான் நம் எல்லோருக்குமே தெரியுமே?"

"தானைத்தலைவர் ஒரு...என்பதற்குப் பின் தெரிந்த அந்த ஒற்றை எழுத்து என்ன மாராயரே? அதனை வைத்துக் கொண்டல்லவா நாம் மேற்கொண்டு யூகிக்க இயலும்?"

"அதுதான் சிதைந்து விட்டது என்கிறேனே?" என்றார் மாராயர் சற்று எரிச்சலுடன். பேரங்காடி வீட்டின் பெண்கள் - குறிப்பாக அந்த மத்திய வயதுப் பெண்டு - அறையை சாணத்தால் மெழுகிக் காரியத்தைக் கெடுத்தவள் - அவரது மனதில் வந்து போனாள். தமக்குத் தெரிந்த அத்தனை வசவு வார்த்தைகளாலும் அவளை மனதிற்குள் அர்ச்சனை செய்தார் மாராயர்.

"எதைச் சொல்வது? எதை விடுவது? எல்லாம் போதாத காலம்தான். ஹூம்..." - நீண்ட பெருமூச்சு பல்லவ ராயரிடமிருந்து கிளம்பியது.

"உண்மை. ஐங்கரன் மட்டும் இன்று எதிரிகளிடம் அகப்பட்டுக் கொள்ளாமலிருந்திருந்தால் பல விஷயங்களில் நமக்குத் தெளிவு பிறந்திருக்கும்."

தம் இருவரின் சம்பாஷணைகளிலும் யூகங்களிலும் கலந்து கொள்ளாமல் மௌனமாக அறையின் மேல் சாளரத்தை இலக்கின்றிப் பார்த்துக் கொண்டிருந்த அருள்மொழிவர்மரின் வதனத்தில் மிக மெல்லிய முறுவல் படர்ந்தது மாராயருக்கு வியப்பளித்தது.

"பேரரசரின் மனதில் ஏதாவது எண்ணங்கள் தோன்றுகின்றனவா? அவற்றை நாங்கள் அறிந்து கொள்ளலாமா?"

"ம்..ஒன்றுமில்லை. மனதின் ஒரு ஓரத்தில் அழிக்க முடியாமல் பதிந்து போயிருக்கும் ஒரு முகம் வந்து போனது. அந்த முகத்துக்குரியவரை நான் சந்தித்து யுக யுகாந்திரங்கள் ஆகிவிட்டதைப் போலொரு பிரமையுண்டாகின்றது. அவரை உங்களில் எவருக்கும் தெரியாது. கிடக்கட்டும். ஐங்கரன் அந்த முக்கியமான தருணத்தில் தானைத் தலைவரை நமக்குச் சரியான வகையில் அடையாளம் காட்ட முயற்சித்திருப்பார் என்பதுதான் என் யூகம். அந்தத் தலைவரைப் பற்றிய மிக மிக இரகசியமானதொரு தகவலை அவர் தெரிவிக்க முயன்றிருக்கக்கூடும். இதனை நீங்கள் தனியே யோசித்துப் பயனில்லை. இதனுடன் தொடர்புடைய வேறு பல தகவல்களையும் இணைத்துப் பார்த்தாக வேண்டும்..."

"வேறு பல தகவல்களெனில்?"

"தானைத் தலைவருடன் தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடிய அத்தனை விஷயங்களையும் குறிப்பிடுகிறேன். உதாரணமாகச் சென்ற இரண்டு மூன்று வருடங்களில் பலப்பல வழிவகைகளில் முயன்றும் அவரை நீங்கள் அடையாளம் காண முடியாமை. நான் சோழ சாம்ராஜ்ஜியத்தின் செங்கோலைப் பிடித்த பிறகே அவரது செயல்பாடுகள் அதிகரித்தமை. பாண்டியரிடம் மட்டுமின்றிச் சேரநாட்டிலும் பரவியிருக்கும் அவரது செல்வாக்கு. கண்ணுக்குத் தெரியாமல் நமது எதிரிகள் அனைவரிடமும் பரவியிருக்கும் அவரது அதிகாரம். எல்லாவற்றுக்கும் மேலாக அமண்குடியார் வீரநாராயணபுரத்திலிருந்து கொண்டு வந்த தொடர்பற்ற சில முக்கியத் தகவல்கள்..."

பேரரசர் பேசிக்கொண்டே செல்லச் செல்ல, அமண்குடியார் பெரிதும் குழம்பித்தான் போனார்.

"இரவிநீலி குடும்பத்தாருக்குச் சேர நாட்டு அரசியலில் இன்றும் இருக்கும் செல்வாக்கு.. தெற்கிலிருந்து வரும் காளாமுக சந்நியாசிகள் கூட்டம்..."

"மன்னிக்க வேண்டும். இவற்றுக்கும் ஐங்கரன் தெரிவிக்க முயன்ற செய்திக்கும்.."

"தொடர்பிருக்கிறது. இருந்தேயாக வேண்டும். அது மட்டுமல்ல. அவருக்கும் சொந்தத் தந்தையாரின் திதியில் பங்கெடுத்துக் கொள்ளாத மலையனூரானுக்கும் கூடத் தொடர்பு இருக்க வேண்டும்!"

"எ..என்ன சொல்ல வருகிறீர்கள் பேரரசே?"

"ஐங்கரன் எழுதிக் காட்ட முயன்ற ஒற்றை வாக்கியத்தில் தென்னாட்டின் மூன்று இராஜ்ஜியங்களும் சம்மந்தப்படும் மிகப் பெரிய சரித்திரமே ஒளிந்திருக்கிறது என்கிறேன்!" என்றபடி மிகத் தீவிரமான யோசனையில் ஆழ்ந்தார் பேரரசர்.

(சேரா் கோட்டை முதல் பாகம் முற்றும்)

படித்து விட்டீர்களா?



இராஜகேசரி

சோழப் பேரரசர் முதலாம் இராஜராஜருக்கு எதிராகத் தீட்டப்படும் பயங்கர அரசியல் சதியில் ஒய்வு பெற்றுவிட்ட முன்னாள் படைவீரர் அம்பல வாணரும் படைத்தளபதி பரமன் மழபாடியாரும் தலையிட்டு கண்ணுக்குத் தெரியாத எதிரிகளுடன் முட்டி மோதும் மறக்க முடியாத சரித்திரப் புதினம். பலரது பாராட்டையும் பெற்ற கதாசிரியரின் முதல் சரித்திரப் புதினம். 360 பக்கங்கள். பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு.



பைசாசம்

அமைதியான பாண்டிநாட்டுக் கிராமமொன்றில் கிளம்பும் பிசாசு விவகாரம் அந்தக் கிராமத்தை ஆட்டிப் படைப்பதையும் அந்தப் பேயைப் பற்றிய உண்மைகளைக் கண்டறிய முடியும் பாடிக்காவலன் திருவரங்கன் சந்திக்கும் மயிர்கூச்செறியும் அனுபவங்களையும் சுற்றிப் பின்னப்பட்ட சரித்திரத் திகில் கதை. 380 பக்கங்கள். பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு.



மதுரகவி

தமிழ்நாட்டின் திருக்கோயில்களில் படியெடுக்கப் பட்டிருக்கும் பல்வேறு கல்வெட்டுக்களின் பின்னணியில் முத்தான பதிமூன்று சிறுகதைகள். கல்வெட்டுக்கள் நிரந்தரப்படுத்தியிருக்கும் நிஜ மனிதர்கள் உயிர் பெற்று உடல் பெற்று வாசகர்களுடன் உரையாடும் விருது பெற்ற சிறுகதைத் தொகுப்பு. 250 பக்கங்கள். பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு.



சேரர் கோட்டை (2 பாகங்கள்)

முதலாம் இராஜராஜரின் முதற்போரான சேரநாட்டுக் காந்தளூர்ச் சாலை கலமறுத்த சம்பவத்தின் பின்னணியில் ஒரு வித்தியாசமான விறுவிறுப்பான சரித்திரப் புதினம். கேரளத்தின் பண்டைய களரிக்கலையையும் பண்பாட்டையும் வலியுறுத்திப் பல நுண்ணிய தகவல்களுடன் உருவாக்கப்பட்ட ஒரு பெரும் படைப்பு. 1150 பக்கங்களை உள்ளடக்கிய இரண்டு பாகங்கள். கமலம் புக்ஸ் வெளியீடு.

கி.பி. 988...

சோழப் பெருவேந்தராக முதலாம் இராஜராஜ சோழர் முடிசூடி மூன்றாண்டுகளே முடிவடைந்துள்ள நிலை. அதற்குள் சில அரசியல் சக்திகள் அணிதிரண்டு அவரை எதிர்க்க ஆயத்தமாகி வருகின்றன.

அந்தச் சக்திகளின் ஆணிவேர்.. காந்தளூர்ச்சாலை எனும் கல்வி நிறுவனம். சாத்திரங்கள் நுண்கலைகள் தவிரத் தற்காப்புப் பயிற்சி முறைகளையும் பயிற்றுவித்த பண்டைய பல்கலைக்கழகம்.

சோழநாட்டு வேந்தருக்கும் சேரநாட்டில் எங்கோ ஒரு மூலையில் அமைந்துள்ள காந்தளூருக்கும் என்ன தொடர்பு? சாலையின் ஆச்சாரியாருக்கு இராஜராஜர் மேல் அப்படியென்ன பகை? இந்த இருவரின் விரோதத்தையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் அரசியல் சக்திகள் யார் யார்?

எண்ணற்ற கேள்விகளை எழுப்பும் சரித்திரக் களத்தின் வழி நம்மைக் கைப்பிடித்து ஒரு வசீகர உலகிற்குள் அழைத்துச் செல்கிறார் கதாசிரியர். சோழர்கள், பாண்டியர்கள், வேளிர், சேரமான்கள், கேரளத்து நாடுவாழிகள் என்று அந்நாளைய அரசியல் சக்திகள் அனைவரும் முட்டி மோதும் இந்த விறுவிறுப்பான புதினத்தில் இதுவரை கண்டிராத வகையில் சேரதேசத்தின் பண்டைய களரிக் கலையும் பண்பாட்டுக் கூறுகளும் பாங்குற வெளிப்படுகின்றன.

பல்வேறு சரித்திரக் குறிப்புகள், கல்வெட்டுச் சான்றுகள், விளக்கப் படங்கள் மற்றும் வரைபடங்கள் இப்படைப்பை வேறொரு தளத்தில் நிறுத்துகின்றன. இளமை துள்ளும் நடையில் கற்பனைச் செறிவுடன் படைக்கப்பட்டுள்ள இப்புதினம் தமிழுலகம் தவறவிட்டுவிட முடியாத தரமான ஆக்கம்.



கோகுல் சேஷாத்ரி [http://www.gokulseshadri.in]

பொறியியல் மற்றும் மேலாண்மையில் பட்டம் பெற்றுக் கணினி மென்பொருள் துறையில் பணியாற்றி வரும் இந்த இளைஞர், வரலாற்றில் ஆர்வம் கொண்டு முதுகலை மற்றும் முதுமுனைவர் பட்டப் படிப்பை முடித்துள்ளவர். இரண்டு வரலாற்றுப் புதினங்கள் (இராஜகேசரி, பைசாசம்), ஒரு பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பு (மதுரகவி), எண்ணற்ற கட்டுரைகள் என்று பரந்து விரியும் இவரது படைப்புலகம் பரவலானதோர் வாசிப்புத் தளத்தை உருவாக்கித் தந்துள்ளது.

கி.பி. 988...

சோழப் பெருவேந்தராக முதலாம் இராஜராஜ சோழர் முடிசூடி மூன்றாண்டுகளே முடிவடைந்துள்ள நிலை. அதற்குள் சில அரசியல் சக்திகள் அணிதிரண்டு அவரை எதிர்க்க ஆயத்தமாகி வருகின்றன.

அந்தச் சக்திகளின் ஆணிவேர்.. காந்தளூர்ச்சாலை எனும் கல்வி நிறுவனம். சாத்திரங்கள் நுண்கலைகள் தவிரத் தற்காப்புப் பயிற்சி முறைகளையும் பயிற்றுவித்த பண்டைய பல்கலைக்கழகம்.

சோழநாட்டு வேந்தருக்கும் சேரநாட்டில் எங்கோ ஒரு மூலையில் அமைந்துள்ள காந்தளூருக்கும் என்ன தொடர்பு? சாலையின் ஆச்சாரியாருக்கு இராஜராஜர் மேல் அப்படியென்ன பகை? இந்த இருவரின் விரோதத்தையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் அரசியல் சக்திகள் யார் யார்?

எண்ணற்ற கேள்விகளை எழுப்பும் சரித்திரக் களத்தின் வழி நம்மைக் கைப்பிடித்து ஒரு வசீகர உலகிற்குள் அழைத்துச் செல்கிறார் கதாசிரியர். சோழர்கள், பாண்டியர்கள், வேளிர், சேரமான்கள், கேரளத்து நாடுவாழிகள் என்று அந்நாளைய அரசியல் சக்திகள் அனைவரும் முட்டி மோதும் இந்த விறுவிறுப்பான புதினத்தில் இதுவரை கண்டிராத வகையில் சேரதேசத்தின் பண்டைய வரிக் கலையும் பண்பாட்டுக் கூறுகளும் பாங்குற வெளிப்படுகின்றன.

பல்வேறு சரித்திரக் குறிப்புகள், கல்வெட்டுச் சான்றுகள், விளக்கப் படங்கள் மற்றும் வரைபடங்கள் இப்படைப்பை வேறொரு தளத்தில் நிறுத்துகின்றன. இளமை துள்ளும் நடையில் கற்பனைச் செறிவுடன் படைக்கப்பட்டுள்ள இப்புதினம் தமிழுலகம் தவறவிடக் கூடாத ஒரு தரமான ஆக்கம்.



கோகுல் சேஷாத்ரி [http://www.gokulseshadri.in]

பொறியியல் மற்றும் மேலாண்மையில் பட்டம் பெற்றுக் கணினி மென்பொருள் துறையில் பணியாற்றி வரும் இந்த இளைஞர், வரலாற்றில் ஆர்வம் கொண்டு முதுகலை மற்றும் முதுமுனைவர் பட்டப் படிப்பை முடித்துள்ளவர். இரண்டு வரலாற்றுப் புதினங்கள் (இராஜகேசரி, பைசாசம்), ஒரு பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பு (மதுரகவி), எண்ணற்ற கட்டுரைகள் என்று பரந்து விரியும் இவரது படைப்புலகம் பரவலானதோர் வாசிப்புத் தளத்தை உருவாக்கித் தந்துள்ளது.

சேரர் கோட்டை • பாகம்-1 • கோகுல் சேஷாத்ரி • வானதி



சேரர் கோட்டை

பாகம்-1

கோகுல் சேஷாத்ரி